தமிழ் நாடு சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1972 மார்ச் 14.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்விக்குறியிட்ட வினாக்கள்.

Drinking Water-Supply Schemes

* 473 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the work in connection with the scheme for the implementation of drinking water-supply for Krishnagiri in Dharmapuri district has been taken up; and

(*b*) the stage at which the matter stands at present?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) பல்வேறு நிலைகளில் பணிகள் நடந்தேறி வருகின்றன. குடிநீர் வழங்கு திட்டத்தின் தொடக்க நிலைப் பணிகள் நடைபெறும் இடத்திலும் குடிநீர் வழங்கு நீர்த்தேக்கம் கட்டும் இடத்திலும் நடைபெறும் பணிகளைத் தவிர, பிற பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளன. சோதனை அடிப்படையில் குடிநீர் வழங்கு திட்டத்திற்கான விசையேற்றப்பெருங்குழாய் தயாராக உள்ளது.

தாழ்ந்த மட்டத்தில் உள்ள பகுதியில் நீர்வழங்கு பெருங்குழாய்களை அமைக்கும் பணி 91 சத விதம் முடிவு பெற்றுள்ளது. அது போல உயர்ந்த மட்டத்திலுள்ள பகுதியில் குடிநீர் வழங்கு பெருங்குழாய்கள் அமைக்கும் பணி 63 சத விதம் முடிவு பெற்றுள்ளது. இவ்விரு பகுதிகளிலும் குடி நீர் வழங்கு நீர்த்தேக்கங்களைக் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தக் கட்டத்தைச் சேர்ந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கிடையே, நகருக்கு திட்டத்தின்கீழ் சோதனை அடிப்படையில் நகருக்குக் குடிநீர் வழங்கலை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : உப தலைவர் அவர்களே, இந்தக் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு உபயோகப்படுத்தக்கூடிய குழாய்கள் பாலிதீன் பைப் களாக இருக்க வேண்டும் என்று கூறியிருப்பதாக அறிகிறேன். பாலிதீன் பைப் எத்தனை காலம் பயன்படும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறதா ? அவற்றை உபயோகப்படுத்துவது சரியென்று அரசாங்கம் கருதுகிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்தப் பைப்புகளைப்பற்றித் தனிக் கேள்வி போட்டால் அதுபற்றிய விவரங்கள் அளிக்க முடியும்.

THIRU B. VENKATASWAMY : Is it not a fact that this scheme has been delayed? May I know from the Hon. Minister the reasons for the same and May I also know when the scheme will be completed?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்தத் திட்டம் ஆறு மாத காலத் திற்குள்ளாக முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இடையில் தேசிய நெடுஞ்சாலையின் குறுக்கே குழாய் போட்டுத் தண்ணீர் எடுத்துவர மத்திய அரசாங்கத்தினிடமிருந்து நாம் அனுமதி பெற வேண்டியவர்களாக இருக்கிறோம். தாமதத்திற்கு அதுவும் ஒரு காரணம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister the total amount of money sanctioned for the scheme?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தக் குடிநீர் வழங்குத் திட்டத்திற் கான மதிப்பீட்டுச் செலவு 28 லட்ச ரூபாய்.

திரு. எஸ். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரிக்குக் குடி நீர் வழங்கு திட்டத்திற்கு மொத்த மதிப்பீடுத் தொகை எவ்வளவு ? மேலும், மத்திய அரசாங்கத்திடமிருந்து, தேசிய நெடுஞ்சாலை கடந்து தண்ணீர் கொண்டு செல்ல அனுமதி பெற வேண்டும் என்று சொன்னார்கள். அது எவ்வளவு கால மாகத் தடையாக இருக்கிறது என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இது நீண்ட காலமாகத் தடையாக இருக்கிறது. இன்னும் அனுமதி வரவில்லை.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, முதல்வரவர்கள் பதில் கூறும் போது, மத்திய அரசாங்கத்திடமிருந்து இன்னும் அனுமதி கிடைக்கவில்லை என்று குறிப்பிட்டார்கள். குடிநீர் வழங்கல் போன்ற மிக அத்தியாவசியமான

தேவைகளுக்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து அனுமதி வருவதற்குள்ளாக, அதை எதிர்பார்த்தே அந்த நெடுஞ்சாலையை வெட்டி, பைப்புகள் போட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதுவும் ஆராயப்பட வேண்டிய ஒரு நல்ல யோசனை.

திரு. என். மருதாசலம்: குடி நீர்த் திட்டத்தில் கோவை சிறுவாணித் திட்டம் குறித்துப் பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது என்று, கேட்ட போதெல்லாம் அமைச்சரவர்கள் கூறுகிறார்கள். எப்பொழுது பேச்சுவார்த்தை முடியும். எப்பொழுது அது நடைபெறும் என்று முதலமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கேரளாவைப்பற்றி அடிக்கடி இந்த மன்றத்தில் பேசுகிற மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கட்சியினரே சேர்ந்து இதற்கான முயற்சிகளை மேற்கொண்டால் நலமாக இருக்கும்.

THIRU B. VENKATASWAMY : Water is most important for everybody's day-to-day life. May I know from the Hon. Minister why the Central Government is delaying on such a vital matter like protected water-supply?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அந்தக் கேள்வியைத்தான் நாங்களும் எங்களுக்குள்ளாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

* 474. வினா—**திரு. கே. ஏ. வகாப்:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராணிப்பேட்டை நகரின் குடிநீர் திட்டத்தை விஸ்தரிக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. ஏ. வாகாப்: இராணிப்பேட்டை நகராட்சியிலிருந்து எல்.ஐ.சி. மூலமாகவோ அல்லது அரசாங்கத்திலிருந்தோ இந்த விஸ்தரிப்புத் திட்டத்திற்காக ஒரு லட்ச ரூபாய் கடனைக் கேட்டு மனுச் செய்திருக்கிறார்கள். அதை அரசு பரிசிலனை செய்து சாங்ஷன் செய்யுமா ?

[1972 மார்ச் 14

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இராணிப்பேட்டை நகராட்சியில் விட்டுவிடப்பட்ட சில தெருக்களில் ஒரு லட்ச ரூபாய் செலவில் பங்கீட்டு மூலக் குழாய் அமைத்து நீர்ப் பங்கீட்டு அமைப்பை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு, தமிழ்நாடு குடி நீர் வாரியத்தின் தலைமைப் பொறியாளருடைய பரிசீலனையில் உள்ளது. இவைகளெல்லாம் ஆய்வு செய்யப்பட்ட பிறகுதான் கேட்டிருக்கிற தொகையைப்பற்றி ஒரு முடிவுக்கு வர முடியும்.

திரு. நா. வீராசாமி: இராணிப்பேட்டை, ஆர்க்காடு ஆகிய இரண்டு நகரங்களும் இணைந்த குடிநீர்த் திட்டத்தின் கீழ் வருவதால், இராணிப்பேட்டை கீழ்ப் பகுதியாகவும், ஆர்க்காடு மேல் பகுதியாகவும் இருப்பதன் காரணமாக ஆற்காட்டில் தண்ணீரே வருவதில்லை. இதை உத்தேசித்துத்தான் இராணிப்பேட்டைக்குத் தனித் திட்டமும், ஆர்க்காட்டுக்குத் தனித் திட்டமும் உருவாக்கி, ஆர்க்காடு நகர மன்றத்தைப் பணம் கட்ட வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது. அதை உடனடியாக அமல் நடத்த அரசாங்கம் முற்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஆர்க்காடு நகராட்சிக் கென்று குடிநீர் வழங்கு திட்டமொன்றைத் தனிப்பட்ட ஆய்வுப்பணிகள் எல்லாம் நடத்துவதற்கு 3—2—1971-இல் அரசு அனுமதி வழங்கியுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல், இந்தத் திட்டம் நிறைவேற்றப் பட்டால் ஆர்க்காடு, இராணிப்பேட்டை ஆகிய இரு நகரங்களின் தண்ணீர்த் தட்டுப்பாட்டைத் தீர்க்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கேற்ற, படிப்படியான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

* 475 வினா—திரு. க. சுப்பு: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விருதுநகரில் தண்ணீர்த் தட்டுப்பாட்டை நீக்க அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: விருதுநகருக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் ஒன்றுக்கு 1959-ஆம் ஆண்டில் அரசு ஒப்பளிப்பு வழங்கியது. இது ஒரு மேம்பாட்டுத் திட்டமாகும். 1991-ஆம் ஆண்டில் மொத்தம் 80,000 மக்களுக்கு நபர் ஒன்றுக்கு 15 காலன் குடிநீர் வழங்குவதற்கு ஏற்றவாறு இத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது இன்னும் நிறைவேற்றப்பட்டு வருகிறது. எனினும், இத் திட்டத்தில் இதுவரை முடிவடைந்துள்ள பணிகளைக் கொண்டு நகருக்குக் குறிப்பிட்ட அளவு நீர் வழங்கப்பட்டுள்ளது. விருதுநகரின் குடிநீர்ப்பற்றாக் குறை கடுமையாக இருப்பது அரசின் நாட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டதை முன்னிட்டு ரூ. 1.80 லட்சம் செலவு மதிப்பீட்டில் சங்காலிங்கபுரம் அருகே கற்கள் வெட்டி எடுக்கப்படும் இடத்திலிருந்து தற்காலிகமாக நீர் எடுக்கும்

1972 மார்ச் 14]

திட்டம் ஒன்றுக்கு அண்மையில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தை உடனடியாக மேற்கொள்ளுமாறு தலைமைப் பொறியாளர் கேட்கப் பட்டுள்ளார்.

திரு. கே. டி. கே. தங்கமணி : விருதுநகர் குடிநீர்த் திட்டம் சம்பந்தமாக நகரசபைத் தலைவராக திரு. ராமசாமி அவர்கள் இருந்த காலத்திலும், அவரைத் தொடர்ந்து திரு ராஜா அவர்கள் இருந்த காலத்திலும் இதற்கு முயற்சி எடுக்கப்பட்டது. 1959-ம் ஆண்டுத் திட்டத்தின் அடிப்படையில் 1981-ம் ஆண்டு வரை காத்திருப்பதற்குப் பதில், சங்கரலிங்கபுரம் திட்டத்திற்குத் தொகையைச் சற்று அதிகமாக ஒதுக்கவும், ஏற்கெனவே கிணறுகள் தோண்டி அவற்றிலே தண்ணீர் வராமல் இருப்பதைத் திறப்பதற்கு அதிகமாகப் பணம் செலவழிக்கக் கூடிய ஏற்பாட்டை இந்த ஆண்டிலேயே அரசு கவனிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்த ஏற்பாடுகளெல்லாம் மும்முரமாகக் கவனிக்கப்பட வேண்டும் என்றுதான் அரசாங்கம் விரும்புகிறது. ஆனால், இடையில் இதிலே பல சிக்கல்கள் ஏற்பட்டுவிட்டன. முதலில் எங்கிருந்து தண்ணீர் எடுக்கலாம் என்று ஆரம்பித்த முயற்சிகளெல்லாம் உரிய பலன் அளிக்காமல் போய்விட்டன. மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப்போன்று தண்ணீர் வழங்கு திட்டத்திற்கு அரசு மேலும் முயற்சிகளைத் தீவிரமாக எடுக்கும்.

திரு. எஸ். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் 1959-இல் ஆரம்பிக்கப்பட்டு இவ்வளவு காலம் கடந்துவிட்டது. இனிமேலாவது நம்முடைய அரசு உடனடியாகக் கவனம் செலுத்தி இந்த ஆண்டுக்குள் முடிப்பதற்கும் முயற்சிக்குமா ? மேலும் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் விருதுநகர்க் குடிநீர்ப் பிரச்சினை தீர்ந்துவிடுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுது இருக்கின்ற நிலையில் விருதுநகர்க் குடிநீர்ப் பிரச்சினை முழுதுமாகத் தீர்கிற அளவுக்குத் தண்ணீர் கிடைக்குமா என்கிற சூழ்நிலைகளெல்லாம் ஆராயப்பட்டு, படிப்படியாகப் பல கட்டங்களில் இந்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. 1959-ம் ஆண்டில் 31 லட்ச ரூபாய் செலவில் ஒரு மேம்பாட்டுத் திட்டத்தை நிறைவேற்ற அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. பின்னர் மதிப்பீடு 53 லட்சமாகத் திருத்தப்பட்டது. இறுதியாக அத் திட்டம் 72 லட்சமாகத் திருத்தப்பட்டு வேலை எடுத்துக் கொள்பட்டது. முதல் நிலையாக பகிர்வுக் குழாய் அமைப்பு குடி நீர்த்தேக்கம்— வேலையும், இரண்டாம் நிலையாக கோடை காலத்தில் நீர் தேக்கி வைக்கப்படும் ஏரி அமைத்தலும், மூன்றும் நிலையாக வடிமுனை ஏற்பாடும், நான்காம் நிலையாகநீர் ஏற்றுப் பெருங்குழாய் அமைத்தலும், ஐந்தாம் நிலையாக ஈர்ப்புப் பெருங்குழாய் அமைத்தலும் ஆகும். 1, 4, 5 ஆகிய நிலை வேலைகள் முடிந்து

விட்டன. இரண்டாம் நிலை வேலையும் நீர் தேக்கிவைக்கும் ரிசர்வாயர் வேலையும் முடிவுறும் நிலையில் உள்ளன. ஆகவே இந்த வேலைகள் தொடர்ந்து நடைபெற அரசு ஆவன செய்யும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்தத் திட்டத்திற்காக அதிகமான பணம் செலவழிக்கப்பட்டாலும் பல குறைபாடுகள் இடையிலே வந்தன என்று பல குழுக்கள் சுட்டிக் காட்டியிருக்கின்றன. அந்தக் குறைபாடுகள் இல்லாமல் இந்த ஆண்டு பார்த்துக் கொள்ள ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதைத்தான் முன்பு சொன்னேன்.

* 476. **வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் குடிதண்ணீர் வழங்கும் திட்டத்திற்கு இதுவரை செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: 1971-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் வரை மாயூரம் குடிநீர் வழங்கு திட்டத்திற்காக 20.13 லட்ச ரூபாய் செலவிடப் பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே மாயூரம் நகரத்தில் குடி நீர் வழங்கும் திட்டத்தில் முதல் கட்ட வேலை பூர்த்தியாகியுள்ளது. அதில் முக்கிய மாக நகரிலுள்ள மாப்படுகை, திரு இந்தளூர், சேந்தன்குடி பகுதிகளுக்கு இத் திட்டத்தில் இடம் இல்லை என்ற காரணத்தினால் அவைகளையும் சேர்த்துக் கொள்ளக் கோரி அரசுக்கு மாயூரம் நகராட்சி தீர்மானம் போட்டுக் கேட்டுக் கொண்டுள்ளது. அதை அரசு பரிசீலனை செய்ய முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பரிசீலனை செய்து நீர்நிலைக்கு ஏற்ற வாறு முடிவு எடுக்கும்.

அரசு மருத்துவ மனைகள்

* 477 **வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) குளித்தலையிலுள்ள அரசினர் மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

1972 மார்ச் 14]

(இ) தேவையான நிலங்களைக் கையகப்படுத்த வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தற்போது இந்த மருத்துவமனை இருக்கிற இடம் நகரத்தின் நடுப் பகுதியிலும், இடவசதியில்லாமலும், சுகாதார வசதியற்ற சூழ்நிலையிலும் இருக்கிற காரணத்தினுல் கையகப்படுத்துகிற நிலத்தை விரைவாகவும் கட்டடம் எழுப்பும் பணியை இன்னும் சற்று துரிதமாகவும் செய்து முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அப்படிப்பட்ட நிலை அங்கு இருப்பதினுல் தான் நாலே முக்கால் ஏக்கர் அளவிற்கு நிலம் வைகைநல்லூர் என்ற குளித்தலையை யொட்டியிருக்கும் கிராமத்தில் எடுத்துக் கொள்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது. ரூ. 58,596 நிலத்திற்கு விலை வழங்கவும் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அந்த நடவடிக்கைகள் முடிந்த பிறகு மருத்துவமனை அங்கு கட்டுவதுபற்றிய பிற நடவடிக்கைகள் தொடரும்.

* 478 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், பஞ்சப்பட்டியில் உள்ள மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) விரிவு செய்ய அரசின் ஒப்புதல் அளிக்கப்பட்டது. கூடிய சீக்கிரம் வேலை ஆரம்பிக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த மருத்துவமனையை விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் எவ்வளவு நிதி ஒதுக்கியிருக்கிறது ? எவ்வளவு படுக்கை வசதிகள் இருக்கும் என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பஞ்சப்பட்டியில் பத்து படுக்கைகள் அமைக்க ஒரு லட்சம் ரூபாய் கட்டடத்திற்காகவும் பிற ஏற்பாடுகளுக்காகவும் வழங்கப்பட்டிருக்கிறது.

Eye disease

* 479 *Q.*—THIRU A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether the Government have cautioned the District Hospitals about the spread of eye disease in epidemic form during May, 1971?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆம்.

திரு. எஸ். ஆறுமுகம் : இப்போது அரசாங்க தலைமை மருத்துவமனைகளில் கண் வைத்தியம் செய்துகொள்வதற்கு வாய்ப்பாக மருத்துவர்கள் அரசாங்கச் சார்பில் நியமிக்கப்படுவதில்லை. தனிப்பட்டவர்கள் ஓய்வு நேரங்களில் வந்து கவனித்துக் கொள்கிறார்கள். ஆகவே எல்லாத் தலைமை மருத்துவ மனைகளிலும் இந்தக் கண் நோய்களைப் பாதுகாப்பதற்கு தனி மருத்துவர்களை அரசாங்கம் நியமிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கண் நோய்களைப் பாதுகாப்பதற்கு அரசிடம் திட்டம் இல்லை. கண் நோய்களை அழிக்கவும், சிகிச்சை அளிக்கவும் ஒவ்வொரு மாவட்ட மருத்துவ மனைகளிலும் படிப்படியாக இந்தக் கண் நோய் மருத்துவப் பகுதி விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. அதற்குத் தேவையான ஏற்பாடுகளைத் தொடர்ந்து அரசாங்கம் செய்யும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : 1971-ம் ஆண்டு இந்தக் கண் நோய் எந்தெந்த நகரங்களில் பரவியது? அதற்குரிய காரணம் என்ன என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கேள்வி சற்று விரிவான கேள்வி. சென்னை நகரத்திலும் இன்னும் இரண்டொரு நகரங்களிலும் இந்த நோய் பரவியதாக செய்தி கிடைத்தது. ஆனால் எல்லா மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கும், மாவட்ட சுகாதாரத் துறை அலுவலர்களுக்கும் இந்த நோய் பரவி வருகிற செய்தி அறிவிக்கப்பட்டு அதைத் தடுப்பதற்கு என்னென்ன மருந்துகளைப் பயன்படுத்த வேண்டும், என்ன சிகிச்சை செய்ய வேண்டும் என்பது பற்றி விளக்கமான அறிவிப்புத் தரப்பட்டது. அந்த வகையில் இந்த நோயின் வேகம் தணிக்கப்பட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த நோயை, பத்திரிகைகளில், பம்பாய் கண் என்று சொன்னார்கள். மறுபடியும் அது பம்பாயிலிருந்து வரக்கூடிய ஆபத்து இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அது காற்றின் மூலம் பரவுகிறது என்றும், ஒருவரையொருவர் தொடுகிறபோது பரவுகிறது என்று தெரிந்த காரணத்தினால் அந்த நோய் எங்கேயாவது காணப்படுமானால் அந்த வட்டார மக்கள் தங்களைப்

1972 மார்ச் 14]

பாதுகாத்துக்கொள்ள அந்த நோய் உள்ளவர்களிடம் நெருங்கிப் பழகாமல் இருக்க வேண்டும் என்று ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது. பம்பாய்க்குப் போய் வாங்கிக் கொண்டு வருகிறவர்களை நாம் தடுக்க முடியாது.

திரு. நா. வீராசாமி : இந்த நோய் காற்றின் மூலம் பரவுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இந்த நோய் வருவதற்கு அடிப்படைக் காரணம் என்ன என்று கண்டு பிடித்தார்களா? மின்சார விளக்கு, பாதரசத்தின் மின் ஒளி டூம் உடைந்துவிட்டால் அந்த விளக்கைப் பார்த்துக் கொண்டிருந்தால் இந்த நோய் வந்து விடுகிறது என்று சொல்கிறார்கள். அது பற்றி அரசுக்கு ஏதாவது தகவல் தெரியுமா? அப்படிப் பாதிக்கப்பட்டவர்களில் நானும், துணைச் சபாநாயகர் அவர்களும் ஒருவர் என்பதையும் நான் இங்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அடிக்கடி மின்சார வெளிச்சத்தை பார்ப்பது கண்களுக்கு நல்லதல்ல. ஆகவே அப்படி மின்சார வெளிச்சத்தை அதிகமாகப் பார்க்கும் இடங்களில் கூட அந்த வெளிச்சத்திலிருந்து பணியாற்றுகிறவர்கள் அந்த வெளிச்சத்தை நேராகப் பார்க்காமல் பழகிக் கொள்வது நல்லது. இந்த நோய் வரக் காரணமாக இருக்கிற வைரஸ் ஒன்று இந்த நோய்க்குக் காரணமாக இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதை நீக்குவதற்கான நடவடிக்கைகள், எந்த வகையான சிகிச்சை அளித்தால் நீங்குமோ அது அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. எம். சுரேந்திரன் : மின்சார வெளிச்சத்திலிருந்து பணி செய்பவர்களுக்கு இந்த நோய் உண்டாகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க தகுந்த கண்ணாடிகள் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்த நோய் வருகிறது என்று நான் சொல்லவில்லை. " It is a virus infection " என்று தெளிவாகத்தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மின்சார வெளிச்சம் அதிகமாக இருக்கிற இடத்தில் அதை நேராகப் பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு—வெளிச்சத்தில் உள்ளவர்களுக்கு அல்ல—அதை நேராகக் கண்ணால் பார்ப்பவர்களுக்கு கண்களில் சில ஊறுகள் ஏற்படக்கூடும். அதைப் பற்றித்தான் தெரிவித்தேனே தவிர இந்த நோய் பற்றி

" It was the usual bacterial conjunctivitis and probably it was a virus infection " என்ற கருத்துத்தான் தரப்பட்டிருக்கிறது.

திரு. ந. தருமலிங்கம் : சட்ட பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கண் நோய் கிராமப்புறங்களில்தான் அதிகமாகப் பரவுகிறது. ஆகவே இந்தக் கண்

நோயை நீக்க கிராமப் புறங்களில் கண் நோய் மருத்துவ மனைகள் கட்டும் திட்டம் பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : எதெது அரசாங்கத்தால் முடியுமோ அதைத்தான் அரசாங்கம் செய்ய முயற்சிக்க முடியும். கிராமப்புறங்கள் என்று சொன்னால் பல ஆயிரக்கணக்கான கிராமங்கள் இருக்கின்றன. எனவே இடையி லுள்ள மாவட்ட மருத்துவ மனைகளிலும், தலைமை மருத்துவ மனைகளிலும், எங்கேயாவது இந்த நோய் பரவியிருக்குமானால் அந்தப் பகுதிகளுக்கு சிகிச்சை அளிக்கத்தான் அரசாங்கம் உறுதுணையாகச் செயல்பட முடியும்.

*** 480. வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் 1971-ம் ஆண்டு, மே மாதம் திடீரெனப் பரவிய கண் நோய்க்கு எத்தனை பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சென்னை நகரில் 1971-ஆம் ஆண்டு மே மாதம் திடீரெனப் பரவிய கண் நோய்க்கு மொத்தம் 10,974 பேருக்கு சென்னை அரசாங்கக் கண் வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

திரு. என். கிட்டப்பா : இந்தக் கண் நோய்க்கு சித்த மருத்துவத்தில் சிறந்த மருந்துகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. அத்தகைய சித்த மருந்துகளைப் பயன்படுத்துவதுபற்றி அரசாங்கம் ஆலோசிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சித்த வைத்தியத்தில் சிறந்த மருந்துகள் இருக்கின்றன. இந்தக் கண் நோய்க்கு சித்த வைத்தியத்தில் மருந்து இருக் கிறது என்று இதுவரை தெரிவிக்கவில்லை. அப்படித் தெரிவிக்கப்படுமானால் பயன்படுத்த வழிவகை செய்யப்படும்.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இப்போது சென்னையில் மட்டும் பரவ லாக அதிகமாக வைத்தியம் செய்வதாகச் சொன்னார்கள். ஆனால் கிராமப்புறங் களில் இது அதிகமாகப் பரவி, அதிகமாக மக்கள் பாதிக்கப்பட்டார்கள். ஆகவே, இது போன்ற அவசர நேரங்களில் மொபைல் மருத்துவ மனை போன்றவற்றை வைத்து, நல்ல கண் எக்ஸ்பர்ட்டுகளை அதிலே அனுப்பி, கிராமப்புறத்தில் பரவி வரும் இந்தத் திட்டத்தை இப்படிப்பட்ட நேரங்களில் செய்ய அரசு ஆலோ சிக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அரசாங்கத்திற்கு கிடைத்த விவரப்படி சென்னையில் அதிகமான எண்ணுடையவர்கள் பாதிக்கப் பட்டனர். மற்ற இடங்களில், மாவட்ட தலைநகரில் இருக்கக்கூடியவர்கள், அந்தந்த மாவட்ட, வட்ட மருத்துவ மனைகளில் சிகிச்சை அளிக்கப்பட்டார்கள்.

1972 மார்ச் 14]

கண் மருத்துவ மனைக்குப் புதிய கட்டடம்

*** 481 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கண் மருத்துவ மனைக்குப் புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதற்கான செலவு எவ்வளவு?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) சென்னை அரசினர் கண் மருத்துவ மனைக்கு கீழ்க்கண்ட கட்டடங்கள் கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

1. பரிசோதனைக் கூடத்துடன் கூடிய புற நோயாளி பிரிவு ரூ. 14.00 லட்சம்.

2. அறுவை சிகிச்சை அரங்குடன் கூடிய 200 படுக்கைகள் கொண்ட ஒரு மாடி (100 படுக்கை கொண்ட பொதுப்பகுதியும், 100 படுக்கைகள் கொண்ட சிறப்புப்பகுதியும் ரூ. 8.75 லட்சம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த சித்த மருத்துவ மனை ஆசியா விலேயே சிறந்த கண் மருத்துவ மனைகளில் ஒன்றாகக் கருதப்படுவதாலும், இந்தியாவின் பல பாகத்திலிருந்து சிகிச்சைக்கு வர வாய்ப்பு இருப்பதாகக் கருதப்படுவதாலும்; மத்திய அரசின் சிறப்பு மானியம் அதற்கு வழங்கப்பட்டிருக்கிறதா? ஐ.நா. நிறுவனத்தின் உதவி கிடைத்து இருக்கிறதா? அத்தகைய உதவி கேட்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கண் மருத்துவ மனையா? சித்த மருத்துவ மனையா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இது கண் மருத்துவ மனையைப் பற்றிய கேள்வி. சித்த மருத்துவ மனைக்கு வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

திருப்பூர் நகரில் ஊட்டச் சத்துணவு

*** 482. வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில் ஊட்டச் சத்துணவுத் திட்டம் எந்த தேதியில் இருந்து அமுலுக்கு வருகிறது?

(இ) அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) சிறப்புச் சத்துணவுத் திட்டம், 27—7—1971 லிருந்து திருப்பூரில் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

(இ) திருப்பூர் நகரத்தில் உள்ள 6 மாதம்—3 ஆண்டு வயதுத் தொகுதியைச் சேர்ந்த 1,313 ஏழைச் சிறுர்கள் இத் திட்டத்தினுல் பயனடைகிறுர்கள். ஒவ்வொரு குழந்தைக்கும் ஓர் ஆண்டில் 250 நாட்களுக்கு நாள் ஒன்றுக்கு 75 கிராம் எடையுள்ள 'சிறப்பு' பால் ரொட்டி வழங்கப்படுகின்றது.

திரு. சு. துரைசாமி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்னும் ஏராளமான குழந்தைகள் இந்தச் சத்துணவுத் திட்டத்தில் வராமல் இருக்கிறுர்கள். அந்த எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கம் உண்டா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: மத்திய அரசாங்கத்திலிருந்து நமக்கு அவர்கள் ஒதுக்கியிருக்கிற ரூபாயும், எந்த அளவுக்கு எத்தனை பேருக்கு அளிக்க வேண்டுமென்ற குறிப்பில் உள்ளபடி (பழங்குடி) ஷெடியூல்ட் டிரைப்ஸ் சினருக்கு 3,000 குழந்தைகளுக்கும், நகர்ப்புற சேரிக் குழந்தைகளுக்காக 1,56,000-க்கும் கொடுக்கப்படுகிறது. ஆக மொத்தம் 1,59,000 குழந்தைகளுக்கு தரப்பட வேண்டுமென்று இருக்கிறது. அதை இப்போது 1,53,350 குழந்தைகளுக்குத் தந்து கொண்டு இருக்கிறோம். அதுவும், அந்தப் பழங்குடி குழந்தைகள் 1,300 பேருக்குத் தருகிறோம். அதையும் கூட சேர்த்து 1 லட்சம் மக்கள் மேற்பட்டு வாழ்கிற பகுதியில் இருக்கிற குழந்தைகளுக்கு நீடித்துக் கொடுப்பதற்கும் இப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். இன்னும் கர்பிணியாக இருப்பவர்களுக்கும், ஆறு வயது வரையில் இருப்பவர்களுக்கும் தரப்பட வேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, திருப்பூர் நகரத்தில் இப்போது ஊட்டச் சத்துணவுத் திட்டத்தின் கீழ் என்னென்ன உணவு வகைகள் வழங்கப்படுகிறது.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: நான் அப்போதே விவரம் சொன்னேன். 75 கிராம் எடையுள்ள 3 ஸ்லைஸ் சிறப்புப் பால் ரொட்டிகள் ஒவ்வொரு குழந்தைக்கும் ஓர் ஆண்டில் 250 நாட்களுக்குத் தரப்படுகிறது. அந்த வகையில் 1,313 திருப்பூரில் இருக்கும் குழந்தைகளுக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் அரிசனங்களுக்கு விசை ஏற்றங்கள் விநியோகம்

*483. வினு—திரு. எம். முத்தையா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

அரிசனக் குடியிருப்புக்களுக்காக தனியாக ஒதுக்கப்பட்ட மானியத்திலிருந்து 1970-71-ம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் எத்தனை பேருக்கு பம்பு செட்டுகள் வழங்கப்பட்டுள்ளன?

1972 மார்ச் 14]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: யாருக்கும் பம்புசெட்டுகள் வழங்கப்படவில்லை.

திரு. எம். முத்தையா: தலைவரவர்களே, ஹரிஜன் காலனியில் உள்ள ஹரிஜனங்களுக்கு பம்புசெட்டுகள் கொடுக்காவிட்டாலும், எத்தனைக் காலனிகளில் உள்ள தெருக்களுக்கு விளக்கு வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: கேட்கப்பட்டிருக்கிற கேள்வி பம்பு செட்டுகளைப்பற்றித்தான். தெருவிளக்கு பற்றித் தனியாக கேள்வி போட்டால் விவரம் சேகரித்துக் கொடுக்கப்படும்.

கோவை மாவட்டத்தில் ஏழைகளுக்கு நிலம்

*484. வினா—**திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தில் 1970—71-ம் ஆண்டில் நிலமில்லாத ஏழைகட்கு வழங்கப்பட்ட மொத்த நிலம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: 15,927.86 ஏக்கர்.

திரு. சு. துரைசாமி: தலைவரவர்களே, அந்த நிலத்திற்கான மதிப்பு எவ்வளவு? மேற்கொண்டும் அங்கே இன்னும் அதிகமான நிலத்தைக் கேட்க அரசாங்கம் திட்டம் வைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நிலத்திற்கான மதிப்பு எவ்வளவு என்பது பற்றிய குறிப்பு என்னிடத்தில் இல்லை. மேற்கொண்டும் அரசாங்கத்திற்கு புறம்போக்கு நிலம் தேவையில்லை என்று சொன்னால், அதையும் பட்டா செய்து கொடுக்க ஆட்சேபணை இல்லை. அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, இந்த 15,000 ஏக்கர் நிலத்தில் ஏற்கெனவே விவசாயம் செய்தவர்கள் எவ்வளவு பேர், புதிதாக நிலம் அளிக்கப் பட்டவர்கள் எவ்வளவு பேர் என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தனிக் கேள்வி வேண்டும். அந்த விவரம் இல்லை.

திரு. நா. வெ. குருசாமி: அந்த நிலத்தில், ஒவ்வொரு ஆளுக்கும் எவ்வளவு நிலம் அளிக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : புஞ்சையாக இருந்தால் 3 ஏக்கர், நஞ்சைக்காக இருந்தால் 1½ ஏக்கர் வீதம் கொடுக்கிறோம்.

கிராம அதிகாரிகள்

* 485. வினா—**திரு. எம். முத்தயா :** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கிராம அதிகாரிகளாக பணிபுரியும் கர்ணம், கிராம முன்சீப்புகள் 1970-71-ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் வரை யாரேனும் சஸ்பெண்ட் அல்லது டிஸ்மிஸ் செய்யப்பட்டுள்ளனரா ?

(இ) ஆம் எனில், எத்தனை பேர் ? அதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) ஒரு விவர அறிக்கை @ பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. தி. பொன்னுமலை : தலைவரவர்களே, சேலம் மாவட்டத்தில் அதிகமாக கிராம அதிகாரிகள் சஸ்பெண்டு செய்யப்பட்டார்கள் என்று பேசப்படுகிறதே, அப்படி சஸ்பெண்ட் செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர், அபராதம் கட்டியிருப்பவர்கள் எத்தனை பேர் என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தனிப்பட்ட ஒரு மாவட்டத்தை ஏதோ தண்டித்ததாக அங்கத்தினர் அவர்கள் பேசுகிறார்கள். அந்த விவரம் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் விவரம் சேகரித்துக் கொடுக்கலாம்.

Distribution of pongal packets to prisoners

* 439 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any pongal packets were distributed to the prisoners of the Madras Central Jail under the auspices of a local organisation;

(*b*) if so, the details thereof; and

(*c*) the reason as to how this local organisation was permitted to distribute the packets to the prisoners?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) **ஆம்.**

@ 317–320ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

1972 மார்ச் 14]

(இ) போகி பண்டிகை நாள் 14—1—1972 அன்று சென்னை மயிலை அக்காடமியினரும் செல்வி நிர்மலாவும் சென்னை மத்திய சிறைச்சாலையிலுள்ள கைதிகளுக்கு பொங்கல் பொட்டலங்கள் வழங்கினர்.

(உ) வழக்கமாக பொங்கல் போன்ற பண்டிகை நாட்களில் உள்ளூரிலுள்ள மயிலை அக்காடமி, முன்னாள் கைதிகள் உதவிச் சங்கம் சமய அல்லது அறவழி போன்ற அமைப்புகள் அல்லது தனி நபர்கள், சிறை கண்காணிப்பாளர், சிறைத் துறைத் தலைவர் ஆகியோரின் முன்அனுமதி பெற்று சிறையிலுள்ள கைதிகளுக்கு இனிப்பு பொட்டலங்கள் வழங்குவதுண்டு. இது தமிழ்நாடு சிறைகள் சீர்திருத்த நடைமுறைக் கையேடு, 2-ம் பகுதியில் உள்ள விதி எண் 283 (4)-ன் படி அனுமதிக்கப்படுகின்றது.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, மாநிலத்தில் வேறு சிறைச்சாலையில் இவ்வாறு வழங்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சிறைச்சாலை உள்ள அந்தந்த நகரங்களில் உள்ள தனிப்பட்ட நபர்கள் சிறைக் கைதிகளுக்கு இப்படிப்பட்ட மனிதாபிமானத் தொண்டுகளைச் செய்து வருகிறார்கள்.

Rubber Factory for Kanyakumari district

*440 *Q.*—THIRU J. JAMES: Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal before the Government either in public sector or in private sector to start a rubber factory either in Kanyakumari district or in Ramanathapuram district?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஆண்டு ஒன்றுக்கு 3 லட்சம் டயர்களையும் டியூப்புகளையும் தயாரிப்பதற்காக இராமநாதபுரம் மாவட்டத்தில் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கு 1970, டிசம்பரில் இந்திய அரசு அனுமதிக் கடிதம் ஒன்றை வழங்கியுள்ளது. இத் திட்டம் கூட்டுத் துறையில் இருக்கும். இதற்காக அமைக்கப்பட்ட தமிழ்நாடு ரப்பர் லிமிடெட் என்ற புதிய கம்பெனி ஒன்று, இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் டயர் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்குவதன் சாத்தியக் கூறுகள் குறித்து ஆய்வு செய்யுமாறு தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே. ரப்பர் உற்பத்தி முழுவதும் நமது மாநிலத்தைப் பொறுத்த வரையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் ரப்பரே உற்பத்தியில்லை. நிலைமை இவ்வாறு

இருக்க, இந்தத் தொழிற்சாலை கன்னியாகுமரியில் தொடங்காமல் இராமநாத புரத்தில் தொடங்க விசேஷ காரணம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: குமரி மாவட்டத்திற்கு தேவை என்றால் நன்றாக இருக்கும். இன்னொரு மாவட்டத்திற்கு தேவையில்லை என்று சொல்வது பொருத்தம் இல்லை. இதைப்பற்றி முன்கூட்டியே சட்டமன்றத்தில் விளக்கம் கொடுத்துயிருக்கிறோம். தனிப்பட்ட நபர் வெளிநாட்டுச் செலாவணி ரூ. 75,000 அளவில் கொண்டு வந்து தொடங்குவதாலும், அவர்களுடைய ரப்பர் தோட்டத்திலிருந்து ரப்பர் கொண்டு வரலாம் என்று அனுமதி தரப்பட்ட காரணத்தாலும், அவர்கள் தேர்ந்தெடுத்த இடத்திலேயே தொழிற்சாலை ஆரம்பிக்க மத்திய அரசு அனுமதி கொடுத்திருப்பதாலும், அந்த இடத்தில் அந்தத் தொழிற்சாலை தொடங்கப்படுகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, ரப்பர் பிராசஸ் செய்வதற்கு அங்கேயுள்ள அரசாங்க ரப்பர் தோட்டத்திலே துவக்குவது என்று ஒரு திட்டம் இருந்ததே, அந்தத் திட்டமாவது முதற்படியாக துவக்க அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் இந்தக் கேள்வியை முன்கூட்டியே கேட்ட காரணத்தாலே சொல்கிறேன். அதைப்பற்றி நம்முடைய தொழில் வளர்ச்சிக் கழகம் பரிசிக்க வேண்டுமென்று நம்முடைய அரசு உத்தரவிட்டு இருக்கிறது.

திரு. ஏ. எம். இராஜா: தலைவர் அவர்களே, ராமநாதபுரம் மாவட்டத்தில் அமைக்க இருக்கும் ரப்பர் தொழிற்சாலையை கூட்டுறவுத் துறையில் அமைக்க இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதற்கு அரசாங்கம் கொடுக்கிற பணம் எவ்வளவு, தனியார் கொடுக்கிற பணம் எவ்வளவு என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா? இந்த ஆலை எப்பொழுது ரப்பர் உற்பத்தித் தொழிலைத் தொடங்கும் என்பதையும் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஈகுவிடி காபிடல் ரூ 2. கோடி, ரூ. 75 லட்சம் தனி நபர் கொடுக்கிறார். நம்முடைய தமிழ் நாட்டுத் தொழில் வளர்ச்சிக் கழகத்தில் ரூ. 25 லட்சம் கொடுக்கிறோம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் கூறும் பொழுது அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது, தனியார் சொந்த ரப்பரை வெளி நாட்டிலிருந்து இங்கே கொண்டுவர இருக்கிறார்கள், அதற்கும் அனுமதி வழங்கப் பட்டிருக்கிறது என்று கூறினார்கள். வெளிநாட்டிலிருந்து அவரவர்களுடைய சொந்த ரப்பரைக் கொண்டுவந்து இங்கே தொழிலைத் தொடங்குவது, நமது

1972 மார்ச் 14]

மாநிலத்தில் உற்பத்தியாகும் ரப்பருக்குச் செலவில்லாமல் போகும், அதனால் ரப்பர் உற்பத்தித் தொழில் பாதிக்கப்படும் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வெளி நாட்டிலிருந்து ரப்பர் கொண்டுவர எப்பொழுது அனுமதிக்கப்படுகிறது என்பதெல்லாம் மத்திய அரசாங்கம் முடிவு செய்கிறது. நம்முடைய இந்திய நாட்டிற்கு மேலும் ரப்பர் தேவை என்றால் அப்பொழுது அவர்கள் அனுமதிப்பார்கள். இல்லாவிட்டால், அவர்கள் தருகின்ற வெளிநாட்டுச் செலாவணியைக் கொண்டு நாம் இந்தத் தொழிலை வெளிநாட்டு உதவியோடு தொடங்குவதற்கு ஏற்பாடு செய்து வருகிறோம்.

திரு. எம். சுரேந்திரன் : இந்தத் தொழிற்சாலையில் அரசாங்கம் ரூ. 25 லட்சம் போடுகிறது என்று சொன்னார்கள். தொழிலை ஆரம்பிக்க மூலதனத்தை ஈடுபடுத்தியவர்கள் தங்களுக்கு எவ்வளவு அதிகமாக லாபம் கிடைக்கும் என்பதைத் தான் குறிக்கோளாக வைத்துத் தொழிலை ஆரம்பிக்கிறார்கள். அப்படி லாபம் கிடைப்பதற்கு இந்த அரசாங்கம் போடுகின்ற பணத்தையும் சேர்த்து அவர்களுக்கு உதவியாக இருக்கும் அல்லவா ? இம்மாதிரி முறையை ஏன் இந்த அரசாங்கம் கையாள வேண்டும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது விசித்திரமான வாதமாக இருக்கிறது. நாம் முதல் போட்டு உதவியுள்ளதற்கு லாபம் நமக்குத்தான் கிடைக்கும். கூட்டுறவுத் துறையில் இதுவரையில் முன்னால் இருந்த அரசாங்கம் பின்பற்றி வந்த முறைப்படி அவர்களுக்குக் கடன் கொடுத்து, கடன் பணத்தைக் கொண்டு தனியார் தொழில் நடத்துவதற்கு ஒரு வாய்ப்பு உள்ளது. உதாரணமாக மாஸ்கோ ஒரு கோடி ரூபாயும், சேஷசாயி கம்பெனிக்கு ஒரு கோடி ரூபாயும் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாம் கொடுக்கிற பணத்தை ஈகுவிடி பங்கு என்று கொடுத்து, நமக்கே நிர்வாகத்தில் ஓரளவுக்கு பங்கு இருக்கிற ஒரு முறையில் ஏற்படுத்தி, மத்திய அரசாங்கம் கொடுக்கக்கூடிய, மாநில அரசாங்கம் கொடுக்கக்கூடிய பணத்தை, இரண்டையும் சேர்த்து நாம் மெஜாரிடி என்ற அளவிலே அவர்களே தொழிலை நடத்திக் கொண்டு வருவதும், அப்படி நடத்தமுடியாத சூழ்நிலை ஏற்பட்டால் நாமே எடுத்து நீடித்து நடத்தக்கூடிய வாய்ப்பு உண்டாகும் என்பதுதான் புதிய தொழில் கொள்கை, கூட்டுறவு கொள்கை, ஜாயிண்டு செக்டார்.

திரு. ஜே. ஜேம்ஸ் : ரப்பர் தொழிற்சாலைக்கு நமது மாநிலத்தில் உற்பத்தியாகும் ரப்பர் போதுமானது கிடைக்குமென்றால் அதை முதன்முதலில் வாங்கிக் கொண்டு, மேற்கொண்டு பற்றுக்குறை ஏற்பட்டால் மட்டும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யவேண்டும் என்பதை இந்த அரசாங்கம் வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இனிமேல் புதியதாக வற்புறுத்தவேண்டாம் அது தான் மத்திய அரசாங்கத்தின் கொள்கை.

திரு. நா. வீராசாமி : ராமநாதபுரத்தில் தொடங்க இருக்கிற ரப்பர் தொழிற்சாலையில் என்னென்ன பொருள்கள் தயாரிக்க இருக்கிறார்கள்? லாரி, பஸ், கார் டயர் ட்யூப்கள், மற்றும் சைகிள் டயர், ட்யூப்கள் அல்லது வேறு என்னென்ன பொருள்கள் தயாரிக்கிறார்கள் என்ற விவரம் அறியலாமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முதல் கட்டமாக அவர்கள் சொன்னது தான், அதாவது லாரி, பஸ் டயர், ட்யூப்ஸ். இரண்டாவது கட்டமாக சைகிள் டயர், ட்யூப்ஸ் செய்யவேண்டும் என்று அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

Encroachment of Government lands in Gudalur taluk

* 486 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Hon. Minister for the Kerala Government met the Hon Minister for Public Works about 27th August 1971 in connection with Gudalur evictions; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டம் பந்தலூர் பிர்க்காவிலுள்ள அரசு நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்துள்ளவர்களின் பிரச்சினைகளைத் தமிழ்நாடு அரசு அனுதாபத்துடன் கவனிக்கும்படி கேரள மாநில வருவாய்த் துறை அமைச்சர் வேண்டிக் கொண்டார்.

THIRU N. DENNIS : May I know from the Hon. Minister whether any concrete steps have been formulated to avoid such conflicts in future?

THE HON. THIRU S. J. SADIQ PASHA' So far as I know, there are no conflicts.

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, கூடலூர் நிலமற்ற விவசாயிகளுக்கு 3 ஏக்கரா வரை நிலம் கொடுப்பதாக அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது. இதுவரையில் எத்தனை பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தக் கேள்வியை வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்குப் போடவேண்டும்.

1972 மார்ச் 14]

திரு. கு. அ. பொம்மன் : தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்புச் செய்தவர்களுக்கு 3 ஏக்கரா கொடுப்பதற்கு அரசாங்க ஆணையிருந்தும் இப்பொழுதும் 2 சென்டு, 3 சென்டு நிலங்கள் ஒதுக்குவதாக புகார்கள் வந்திருப்பது தெரியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அப்படி புகார் இருப்பதாகத் தெரியவில்லை. குறிப்பிட்ட புகார் இருக்குமாயின் வருவாய்த் துறை அமைச்சருக்கு எழுதி அனுப்பினுல், நடவடிக்கை எடுக்கப்படும்.

Inspection Bungalow for Pallipet

* 487 *Q.*—THIRU E. S. THYAGARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have sanctioned the construction of Inspection Bungalow at Pallipet in Chingleput district; and

(*b*) if so, when the work will be started?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) செங்கற்பட்டு மாவட்டத்தில் திருத்தணி வட்டத்தில் உள்ள பள்ளிப்பேட்டையில் ஒரு ஆய்வாளர் மாளிகையைக் கட்டும் செயற்குறிப்புக்கு அரசு கொள்கையளவில் ஒப்புதல் அளித்துள்ளது.

திரு. ஈ. எஸ். தியாகராஜன் : அது எப்பொழுது துவங்கப்படும் என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பள்ளிப்பட்டு கிராமத்தில் சர்வே நம்பர் 125- இந்தக் கட்டம் கட்ட வேண்டும் என்று செயற்கிறிப்பு இருந்தது. ஆனல், கிராம மக்கள் ஆட்சேபணை செய்து வேறு இடம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தை ஆர்ஜிதம் செய்வதற்கு கலெக்டர் அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிருர்கள். ஆர்ஜித நடவடிக்கை பூர்த்தியான பிறகு கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, இப்படி பயணிகள் மாளிகை எந்தெந்த மாவட்டத்தில் கட்ட அரசு உத்தேசித்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

°விடை இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1972 மார்ச் 14

பொதுப் பணித் துறையிலுள்ள ஸ்பெஷல் மேஸ்திரிகள்

*488. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொதுப்பணித் துறையில் பணியாற்றும் ஸ்பெஷல் மேஸ்திரிகள் சுமார் 5,000 பேர்கள் வேலை நிதியிலிருந்து work charged ஊதியம் பெற்றவர்களாக இருந்தவர்களை அரசு ஊழியர்களாக 24—11—1970 முதல் ஆக்கியும், இவர்களுக்கு இரண்டாவது ஊதியக் குழு சிபாரிசு ஏதும் செய்ய வில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) வேலை நிதி யிலிருந்து ஊதியம் பெற்று அரசு ஊழியர்களாக 24—11—1970 முதல் ஆக்கப் பட்டவர்களுக்கு இரண்டாவது தமிழ்நாடு ஊதியக் குழுவின் சிபார்சுபடி கீழ்க் கண்ட அரசாணைகளில் ஊதியமாற்றம் அளிக்கப்பட்டுள்ளது.

1. அரசாணை எண் 222, நிதித் துறை, தேதி 8—2—1971.

2. அரசாணை எண் 651, நிதித் துறை, தேதி 4—5—1971.

3. அரசாணை எண் 873, நிதித் துறை, தேதி 16—6—1971.

மேற்கண்ட ஆணைகளில் சேர்க்கப்படாத வேறு சில பதவிகளைக் குறித்து ஊதிய மாற்றம் செய்யும் கோரிக்கை அரசின் பரிசீலனையிலுள்ளது.

பாலாற்றிலிருந்து நீர் பெறும் ஏரிகள்

* 489. வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டத்தில் எத்தனை ஏரிகளுக்கு மழை காலத்தில் பாலாற்றிலிருந்து நீர் வருகின்றது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வட ஆற்காடு மாவட்டத்தில் 289 ஏரிகளுக்கு மழை காலத்தில் பாலாற்றிலிருந்து தண்ணீர் வருகிறது.

திரு. தொ. ப. சீனிவாசன் : வட ஆற்காடு மாவட்டத்தில் பாலாற்று நீர்ப் பாசனம் சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் செய்யாற்றுக்கு வருகிற தண்ணீரை எல்லா ஏரிகளுக்கும் பயன் படுத்துவதற்குரிய சிறப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்குமா?

1972 மார்ச் 14]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சிறப்பு நடவடிக்கைகள் எடுப்பதற்குத் தனியாகக் கேள்வி போடவேண்டும்.

திரு. நா. வீராசாமி : பாலாற்றிலிருந்து வருகிற தண்ணீர் 289 ஏரிகளுக்கும் பாய்வதாகச் சொன்னார்கள். ஆனால், அந்தப் பாலாற்றில் மணல் ஒரு பக்கம் போய், அந்தப் பக்கம் மேடாகவும் இன்னொரு பக்கம் பள்ளமாகவும் இருப்பதனால், தண்ணீர் சில ஏரிகளுக்குத் தான் போகிறது. மணல் மேடாகிவிட்ட பகுதிகளுக்கு தண்ணீர் போவதில்லை. கலவை ஏரிக்கு தண்ணீர் வருவதில்லை. பள்ளம், மேடு இல்லாமல் மணலை சரிப்படுத்தி, எல்லா ஏரிகளுக்கும் சமமாகத் தண்ணீர் வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது போன்று ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. 289 ஏரிகளுக்கு இப்பொழுது தண்ணீர் வந்ததாகத் தெரிகிறது. மொத்தம் 71,680 ஏகரா பாசனம் செய்யப்படுகிறது. குறிப்பிட்ட குறைபாடுகள் இருக்குமானால் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுகிறேன்.

திரு. கே. எ. வகாப் : பாலாற்றிக்குக் குறுக்கே வாலாஜா அருகில் ஒரு அணை கட்டப்பட்டிருக்கிறது. பழைய காலத்தில் கட்டப்பட்ட அணையாக இருக்கிற காரணத்தினால் பழுதடைந்திருக்கிறது. அதைப் பழுது பார்த்தால் இன்னும் நூற்றுக்கணக்கான ஏரிகளுக்கு அதிகப்படியான தண்ணீர் அனுப்புவதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, அந்த அணையை உயர்த்துவதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வாலாஜா அணையைப்பற்றி என்னிடம் குறிப்பு இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் அதைப்பற்றிச் சொல்லலாம்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தாலுகாவில் பாக்கம் ஏரிக்கு வருகிற தண்ணீர் கால்வாயை தனிப்பட்டவர்கள் ஆழப்படுத்தியுள்ளார்கள். அது மாத்திரமல்ல. அந்த ஏரிகளைப் பல பேர் விவசாய நிலமாக பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுத்து, கால்வாயில் சரியாக தண்ணீர் வருவதற்கு ஏற்றவகையில் அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று உத்தாவிடுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான ஏரிகளின் ரிவர் பெட் அண்டு டாங் பெட் இவைகளை என்குரோச்மெண்டு செய்யக் கூடாது என்று அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. கால்வாயை ஆக்கிரமித்து விவசாயம் செய்பவர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

[1972 மார்ச் 14

மாநில பனேவெல்ல கூட்டுறவுச் சம்மேளனம்

*490. வின—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

மதுவிலக்கு நமது மாநிலத்தில் ஒத்திவைக்கப்பட்ட பிறகு பதநீர் இறக்கும் தொழிலைக் கொண்டிருக்கின்ற "மாநில பனை வெல்ல கூட்டுறவுச் சம்மேளனத்தை" கலைக்க அரசு முடிவெடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, நமது மாநிலத்தில் மதுவிலக்கு எடுக்கப்பட்டதன் காரணமாக பதநீர் இறக்கும் தொழில் பாதிக்கப்பட்டதாக அரசுக்குத் தகவல் வந்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவரவர்களே, இந்தத் தொழிலில் பாதிப்பு ஏற்பட்டதாகத் தகவல் எதுவும் வரவில்லை. முன்னாள் பனை வெல்ல கூட்டுறவுச் சம்மேளனத்தின் மூலம் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு கடன் கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக கடன் உதவி செய்யப்பட்டு வருகிறது.

கூட்டுறவு முறையில் காய்கறிகள் விற்பனை

*491. வின—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு முறையில் காய்கறிகள் விற்பதற்கான ஏற்பாடுகள் செய்வதற்கு திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: இல்லை.

கதர்-கிராமத் தொழில் வாரியம்

*492. வின—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

கதர்-கிராமத் தொழில் வாரியத்திலிருக்கின்ற உயர்மட்ட அதிகாரிகளின் எண்ணிக்கையை சிக்கனத்தை முன்னிட்டு குறைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: இல்லை.

ஸ்சி1972 மார்ச் 14]

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த கதர் கிராமத் தொழில் வாரியத்தில் உயர்மட்ட அதிகாரிகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் அதிகமான செலவு ஏற்பட்டு, அதனால் நஷ்டம் ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. அதனால் அதிகாரிகளின் எண்ணிக்கையைக் குறைக்கும் உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, அதிகாரிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதை விட அந்த வாரியத்தில் தொழில் வருவாயைப் பெருக்கி அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் வேலை வாய்ப்பை அளிப்பதுதான் நல்லது என்று நான் கருதுகிறேன்.

திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவரவர்களே, கதர் விற்பனை இப்போது மிகவும் குறைந்துவிட்டது. ஆங்காங்கு இருக்கின்ற விற்பனை நிலையங்களில் மானேஜர்களும், மற்ற சிப்பந்திகளும் விற்பனைக்கு ஏற்றவாறு குறைக்கப் படாமல் இருப்பதால், அவர்களுக்கு கொடுக்கக்கூடிய சம்பளத்திற்கே கூட விற்பனை இருக்கிறதா என்பதே சந்தேகமாக இருக்கிறது. எனவே, பணியாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் எண்ணம் அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, விற்பனைக் கூடங்கள் ஏராளமாக இருக்கின்றன. அதனால் சிப்பந்திகளும் அதிகமாக இருக்கின்றார்கள். சிப்பந்திகளைக் குறைத்து, வேலையில்லாத் திண்டாட்டத்தை உண்டு பண்ண அரசு விரும்பவில்லை. ஆகவே, அந்தந்த விற்பனைக் கூடங்களில் அதிகமான விற்பனைப் பொருட்களை உற்பத்தி செய்து, அதன்மூலம் வருவாயைப் பெருக்குவது நமது எண்ணம்.

திரு கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும் போது, உற்பத்தியைப் பெருக்கி, விற்பனையை அதிகப்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். இந்த வாரியத்தில் எல்லாத் தொழிலும் நட்டத்தில் இயங்கவில்லை. சோப்பு போன்ற பொருட்கள் விற்பனையில் நல்ல இலாபம் வருவதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, அப்படி இலாபம் வருகின்ற பொருள்கள் உற்பத்தியைப் பெருக்க மேலும் சிறு சிறு தொழில்களைத் துவங்க அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, சோப் யூனிட்டில் நல்ல லாபம் கிடைக்கிறது. சுமார் 1½ லட்சம் ரூபாய் லாபம் வந்திருக்கிறது. சோப்புத் தொழிலை விரிவுபடுத்த, அதற்குத் தேவைப்படுகின்ற மூலப்பொருளாகிய எண்ணெய் உற்பத்தியை முதலில் பெருக்க வேண்டும். அதைப் பெருக்கியப் பின்பு, சோப்பு உற்பத்தியை அதிகரிக்கலாம்.

Thiru B. VENKATASWAMY : Sir, may I know from the Hon. Minister which kind of oil is essential for the manufacture of soap and is it not possible to produce that kind of oil in our State?

The Hon. Thiru Si. Pa. ADITANAR : Sir, soap can be produced practically from any kind of oil; but it is not desirable to use edible oils for the purpose of soap-making. We look forward to increased use of non-edible oils, like neem oil, bran oil, etc. Such oils can be produced in larger quantities and used for soap-production.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்தக் கதர் கிராமத் தொழில் வாரியம் தற்போது லாபத்தில் இயங்குகிறதா அல்லது நஷ்டத்தில் இயங்கு கிறதா? மேலும் லாபகரமாக்குவதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : தலைவரவர்களே, இந்த கதர் கிராமத் தொழிலைப் பொறுத்த வரையில் இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. கதர் தொழிலைப் பொறுத்தவரையில் ஏறக்குறைய 70 லட்சம் ரூபாய் மத்திய சர்க்கார் மானியமாகக் கொடுத்திருக்கிறுர்கள். அதனுல் அது ஓடிக் கொண்டிருக் கிறது. கைத்தொழிலைப் பொறுத்த வரையில், சென்ற ஆண்டு 15 லட்சம் ரூபாய் நஷ்டம். அதாவது Net deficit இந்த ஆண்டு 23 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்படும் என்று தெரிகிறது.

திரு. எம். முத்தையா : தலைவரவர்களே, சில கதர் கிராமத் தொழில் விற்பனைக் கூடங்களில் விற்பனை மிகவும் குறைவாக இருக்கிறது. ஆனுல் சிப்பந்திகள் அதிகமாக இருக்கிறுர்கள். அதனுல் நஷ்டம் ஏற்படுகிறது. விற்பனைக்குத் தக்கபடி சிப்பந்திகளை நியமித்து, லாபகரமாக்குவது பற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன பதிலை மாண்புமிகு உறுப்பினர் கவனிக்கவில்லை என்று கருதுகிறேன். சிப்பந்திகளைக் குறைத்து, அதனுல் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஏற்படுத்த அரசாங்கத்திற்கு எண்ணமில்லை. அவர்களுக்கு போதிய வேலை கொடுப்பதற்கு, விற்பனையைப் பெருக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு விரும்புகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, கழிந்த வருடம் 15 லட்சம் ரூபாய் நஷ்டம், இந்த வருஷம் அதைவிட கூடுதலாக வரும் என்று அமைச்சா

1972 மார்ச் 14]

வர்கள் சொன்னார்கள். இப்போது நஷ்டத்தைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, கூடுதல் நஷ்டம் ஏற்படுவதற்கு காரணம், இரண்டாவது பே கமிஷன் சிபாரிசுபடி சிப்பந்திகளுக்கு கூடுதல் சம்பளம் கொடுக்கப்பட்டதுதான். அதற்காக சிப்பந்திகளைக் குறைப்பது என்பது நாம் ஏற்றுக்கொள்ளாத ஒன்று. அதற்குப் பதிலாக வேறு பல திட்டங்களை வைத்து, உற்பத்தியைப் பெருக்கி, சோப்பு போன்ற லாபம் வரக்கூடிய பொருள்களின் உற்பத்தியைப் பெருக்கி, அதற்கு வேண்டிய மூலப் பொருளாகிய எண்ணெய் உற்பத்தியையும் பெருக்கி, லாபகரமாக நடத்த அரசாங்கம் எண்ணியுள்ளது.

திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, இந்தக் கதர் கிராம கைத்தொழில் வாரியத்தில் படிப்படியாக நஷ்டம் வருகிறது. அந்த நஷ்டத்திற்காக தொழிலாளர்களைக் குறைக்கும் எண்ணம் இல்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அது மிகவும் நல்லதுதான். ஆனால் அமைச்சர் இரண்டு, மூன்று கேள்விகளுக்குப் பதில் சொல்லும்போது, நஷ்டத்தை ஈடுகட்டுவதற்கு என்ன செய்யப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் கேள்வியைக் கேளுங்கள். ஒரு ஸ்டேட்மென்ட் கொடுத்துத்தான் கேள்வி கேட்க வேண்டுமென்று இல்லை. நேரடியாகவே கேள்வியைக் கேளுங்கள்.

திரு. எம். சுரேந்திரன் : ஆகவே, இந்தக் கதர் கிராமக் கைத்தொழில் வாரியத்தில் உற்பத்திக் குன்றியதால், நஷ்டம் வருகிறது என்று சொன்னால் உற்பத்தியைப் பெருக்க . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் கேள்வியைக் கேளுங்கள். ஒரு கேள்வி கேட்பதற்காக பத்து வாக்கியங்களைச் சொல்லிவிட்டு, ஒரு விளக்கத்தைச் சொல்லிவிட்டு, கேள்வி கேட்க வேண்டும் என்றல்ல. கேள்வி கேட்பதென்றால் நேரடியாகவே கேள்வி போடவேண்டும்.

திரு. எம். சுரேந்திரன் : கதர் தொழில் ஒரு ஜீவாந்தரமான தொழில் என்று கருதப்படுவதால், அந்த முறையில் இந்தப் பிரச்சனையை அரசாங்கம் பரிசீலித்து, அதன் வளர்ச்சிக்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இதைப்பற்றி 21-ந் தேதி அன்று விவாதம் இருக்கிறது. அன்றைக்கு இதே கருத்தை கனம் உறுப்பினர் சொல்வார்களானால். அதுபற்றி விரிவான பதில் சொல்ல முடியும். மத்திய

அரசாங்கம் கதர் தொழிலுக்காகக் கொடுக்கின்ற மானியத்தைப் பற்றியும், இந்தப் பிரச்சனையை பரிசீலிப்பதற்கு குழு அமைப்பது பற்றியும், மற்றும் பல விஷயங்களைப் பற்றியும் 21-ந் தேதி விரிவாக விவாதிக்கலாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : துணைத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது, கதர் தொழில் வாரியத்தில் சென்ற ஆண்டு 15 லட்சம் ரூபாய் நஷ்டம் என்றும், இந்த ஆண்டு 23 லட்சம் ரூபாய் நஷ்டம் வரும் என்றும் எதிர்ப் பார்ப்பதாகச் சொன்னார்கள். எனவே சென்ற ஆண்டைவிட 8 லட்சம் கூடுதல் நஷ்டம் ஏற்படுவதாகத் தெரிகிறது. சிப்பந்திகளுக்குக் கொடுக்கப்படுகின்ற அதிகச் சம்பளத்தினால்தான் கூடுதல் நஷ்டம் ஏற்படுவதாகவும் சொன்னார்கள். இது ரெக்கரிங் எக்ஸ்பென்டிச்சராக இருப்பதால், அதை ஈடுகட்டும் வகையில் வேறு வழிகளை மேற்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, நஷ்டம் ஏற்படுகிறது என்பதற்காக சிப்பந்திகளை நீக்கும் எண்ணம் இல்லை. அதனால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும். அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. இந்த வாரியத்தில் ஏற்படும் நஷ்டத்தை அதாவது Net deficit -ஐ, ஈடுகட்ட, ஈட்டுத் தொகையாக அரசாங்கம் கொடுத்துவிடலாமே என்று சொல்லி

திருமதி ஜோதி வெங்கடாசலம் : நான் அப்படிச் சொல்லவே இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது விவாதம் இல்லை. அங்கத்தினர்கள் கேள்வி கேட்பது, அமைச்சர்கள் பதிலளிப்பது என்றுதான் இருக்க வேண்டும். ஆனால் இங்கே இருவரும் விவாதத்தில் ஈடுபட்டிருக்கிறீர்கள்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : சிப்பந்திகளுக்காக ஆகும் செலவு ரெக்கரிங் எக்ஸ்பென்டிச்சராக இருக்கிறது. சிப்பந்திகளுக்கு அதிக சம்பளம் கொடுக்கப்படுவதால், சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு 8 லட்சம் அதிக நஷ்டம் வரும் என்று சொல்லப்பட்டது. அதனால் இந்த ரெக்கரிங் எக்ஸ்பென்டிச்சரையும் ஈடுகட்டக்கூடிய வகையில், உற்பத்தியைப் பெருக்கி விற்பனையை அதிகப்படுத்தியோ அல்லது வேறு முறைகளையோ அரசாங்கம் கையாளுமா ?
products? they going to market the இதுதான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நஷ்ட ஈடு என்ற பிரச்சனை இங்கே எப்படி வருகிறது ? சென்ற ஆண்டு 15 லட்சம் ரூபாய் நஷ்டம் அதாவது Net defi ஏற்பட்டது. சிப்பந்திகளுக்கு சம்பளம் உயர்த்தப்பட்டிருப்பதால் இந்த ஆண்டு கிட்டத்தட்ட 23 லட்சம் ரூபாய் நஷ்டம் அதாவது, Net deficit ஏற்படலாம் என்று தெரிகிறது இதில் நஷ்ட ஈடு என்று எதுவும் இல்லையே.

1972 மார்ச் 14]

*493. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

"கதர் கிராமத் தொழில் வாரியம்" என்பதை கிராமத் தொழில் வாரியம் என்று மாற்றியமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, கதர்த் தொழில் லாபகரமாக இல்லை, நஷ்டத்தில் இயங்குகிறது என்று அமைச்சர் அவர்கள் தம் பதிலில் சொன்னார்கள். அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற அரசு ஊழியர்களுக்கு மாற்று வேலை கொடுத்து விட்டு படிப்படியாக கதர் உற்பத்தியை அரசு கைவிட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, இந்தத் தொழிலைக் கைவிடுவதாக எண்ணம் இல்லை. இப்போது இருக்கிறவர்களை வைத்துக் கொண்டே அந்தத் துறையில் ஏற்படுகிற நஷ்டத்தைக் குறைக்கிற அளவில் பல புதிய தொழில்களை ஆரம்பிக்கிற திட்டங்கள் அமலாகிக் கொண்டிருக்கிறது.

திரு. எம். தேவராசன் : முன்பு அமரர் அண்ணா அவர்கள் . Khadi is a political fad, but an economic impossibility' என்பதாகச் சொல்லியிருக்கிறார்களே அது அரசுக்குத் தெரியுமா? அந்த கதர் வாரியத்தையே எடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அண்ணா அவர்கள் 'Khadi is a political fad, but an economic impossibility' என்று குறிப்பிட்டார்கள் என்றால் அந்த இரண்டுமே ஒப்புக்கொள்ளக்கூடியதுதான். அவர்கள் கிஸ்லான் கதரைப் பற்றியே சொன்னார்கள். அவர் கைப்படவே 12 கதிர்கள் உள்ள ராட்டை உடனடியாகப் புகுத்தப்பட வேண்டுமென்று எழுதியிருக்கிறார்கள். அப்போது economic impossibility என்கிற நிலை நிச்சயமாக இருக்காது.

திரு. நா. வீராசாமி : கதர் வில்லேஜ் இண்டஸ்ட்ரீஸ் போர்டு என்று இருப்பதற்குப் பதிலாக கதருக்கு என்று தனியாக ஒரு வாரியமும், கைத்தொழில்களுக்கு என்று தனியாக ஒரு வாரியமும் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா? இன்றைக்கு இவை இரண்டும் ஒரே வாரியமாக இருப்பதனால் பல கைத் தொழில்கள் முன்னேற முடியாமல் இருக்கின்றன. தோல் பதனிடுதல்,

எண்ணெய் தயாரித்தல் போன்ற பல கைத்தொழில்கள் வளர்ச்சி அடைய உதவியாக கைத் தொழில்களுக்கு என்று தனியாகவே ஒரு வாரியம் அமைப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : கதர் என்பதே கைத்தொழில்தான். அதை இரண்டாகப் பிரிக்க வேண்டிய தேவையில்லை. ஆயினும் இப்போது அந்த வாரியத்தில் கதர் சம்பந்தப்பட்ட கணக்கு தனியாகவும், கைத்தொழில்கள் சம்பந்தப்பட்ட கணக்கு தனியாகவும் தான் வைக்கப்பட்டு வருகின்றன.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : கதர் உற்பத்தியில் பல்லாயிரக்கணக்கான ஏழைகள், பெண்கள் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களுக்கு வேறு தொழில் கிடையாது. இந்தத் தொழிலைக் கைவிடும் திட்டம் ஏதாவது இருக்கிறதா? அப்படி இருந்தால் அந்தத் தொழிலில் பாதிப்பு பெரும் அளவில் ஏற்படாதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : இந்தத் தொழிலைக் கைவிடுவதாக எண்ணம் இல்லை. ஆனால் இப்போது கதர் உற்பத்தியில் ஈடுபடுகிற பெண்கள் காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை இடது கையாலும் வலது கையாலும் மாற்றி மாற்றிச் சுற்றி கை ஓய்ந்த நிலையில் அவர்கள் ஒரு நாளைக்குச் சம்பாதிப்பது ஒண்ணேமுக்கால் ரூபாய்தான். இந்த நிலைமையை மாற்றி அவர்களுடைய உடல் உழைப்பு குறைவதற்கும், ஊதியம் 2½ ரூபாய் அளவுக்காவது அதிகம் வருவதற்கும் 12 கதிர்களைக் கொண்டு விசையினால் ஓடக்கூடிய தறிகளைப் புகுத்தி வருகிறோம்.

திரு. எம். சுரேந்திரன் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது 12 ஸ்பிண்டில் போட்டு மின்சாரத்தில் இயக்க இருப்பதாக ஏற்கெனவே சொன்னார்கள். கிராமத்தில் உள்ளவர்களுக்கு வருமானம் கொஞ்சமாவது கிடைக்க வேண்டும் என்கிற அடிப்படையில்தான் ராட்டைகளே கொண்டு வரப்பட்டன. இயந்திரத்தால்—விசையால் இயக்கச் செய்யும் நிலையை ஏற்படுத்திவிட்டால் ஸ்பின்னிங் மில்களுக்கும் இதற்கும் என்ன மாறுபாடு, வித்யாசம் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : திரு. சுரேந்திரன் அவர்களுக்கு ஸ்பின்னிங் மில்களைப் பற்றி நன்கு தெரியும். ஒரு மில் என்றால் பன்னிரண்டாயிரம் கதிர்கள் இருக்கும். பன்னிரண்டு வேறு—பன்னிரண்டாயிரம் வேறு. இப்போது அவர்களுக்கு இருக்கிற அதிகமான உடல் உழைப்பைக் குறைக்கவும் குறைவாகக் கிடைக்கிற ஊதியத்தை அதிகப்படுத்தவுமே 12 கதிர்கள் புகுத்தப்படுகின்றன.

திரு. கே. எ. வகாப் : காதியில் உள்ள இந்தக் குடிசைத் தொழில்களை தொழில் கூட்டுறவு சங்கங்கள் நடத்துகின்றன. அந்தக் கூட்டுறவு சங்கங் களோடு குடிசைத் தொழில் சங்கங்களையும் சேர்த்துவிட்டால் திறமையாக நடைபெற வாய்ப்பு இருக்காதா? அதை அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : கதர் கைத்தொழில் வாரியத்தில் எல்லாத் தொழில்களுமே கூட்டுறவுத் துறையில் நடக்க வேண்டுமென்றுதான் 11-வது செக்ஷனில் இருக்கிறது. கூட்டுறவுத் துறையில்தான் பெருவாரியாக நடந்து கொண்டு வருகிறது.

Tourist Bungalow for Honaguruki.

* 494 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether there is any proposal to construct a tourist bungalow near the Great Banian tree at Honaguruki in Kelamangalam block, Dharmapuri district; and

(b) if so, when it will be constructed?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

THIRU B. VENKATASWAMY : Sir, the banian tree at Honaguruki is an historical tree and previously, the Britishers used to hold Jamabandis there; there is a temple and a Kalyana Mantapam also and marriages are performed there. At the time of the visit of our Governor, he promised to recommend to this Government to construct a tourist bungalow for tourists. May I request the Hon. Minister to consider the recommendation sympathetically?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, சுற்றுலாத்துறை யின் மூலமாக சுற்றுலா விடுதிகள் கட்டுவதுபற்றி திரு. வெங்கடசாமி அவர்கள் இங்கே கேட்டார்கள். கெலமங்களம் வட்டத்தில் ஹோனகுருக்கியில் இருக்கிற ஆலமரம் சிறப்பானது. அதை நானும் பார்த்திருக்கிறேன். ஆனால் அதிகமான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கத்தக்க சிறப்புடையது அல்ல. அதிகமாக வருவார் கள் என்று விடுதி கட்ட முடியாது. அல்லது விடுதி கட்டி அந்த ஆலமரத்தைக் காட்டி பயணிகளை ஏமாற்றவும் அரசு தயாராயில்லை. ஆகவே தற்போதுள்ள நிதி நிலைமையில் அங்கே விடுதி கட்டுவது என்பது இப்போது இயலாத காரியம்.

1972 மார்ச் 14]

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, Jekkeri Banian tree, is one of the oldest banian trees in our State with great antiquity and it is very close to Kelamangalam Railway Station in the Bangalore-Salem Railway line. But it is in a ruined condition. May I know whether it will be possible to hand it over that to the Highways Department to maintain and protect and will Government sanction a small amount to construct a Mantapam there as assured by His Excellency the Governor?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, அந்த மரம் பழமையானது என்பதை நான் அறிவேன். அந்த மரத்தைப் பாதுகாக்க வேண்டுமானால் ஏற்பாடு செய்யலாம். சுற்றுலா விடுதி கட்டுவது என்பது க்ஷேத்திரங்கள், கோடைவாசஸ்தலங்கள் போன்ற இடங்களாகும். இந்தத் திட்டம் இதைவிட முக்கியமான மற்ற இடங்களில் எல்லாம் பூர்த்தியான பிறகு வேண்டுமானால் இங்கேயும் கட்டலாம். அதுவரை பொறுத்திருக்கும்படி திரு. கோதண்டராமையா அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆர். சின்னசாமி: தலைவர் அவர்களே, இயற்கை எழில் கொஞ்சும் தருமபுரி மாவட்டத்தில் பயணிகளைக் கவரும் வகையில் ஏதாவது செயல் திட்டம் அரசிடம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, தற்போது தருமபுரி மாவட்டத்தில் நீர்வீழ்ச்சி அமைந்துள்ள ஒகனேக்கல்லில் ஒரு சுற்றுலா மாளிகை கட்டப்பட்டு வருகிறது.

கல்யாண சோழபுரம் அறக்கட்டளை.

*495. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தாலூகா கல்யாண சோழபுரம் அறக்கட்டளைக்குச் சொந்தமான சொத்துக்களின் மதிப்புக்கள் யாவை?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: சுமாராக ரூ. 3,25,800 சொத்தின் மதிப்பாகும்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, மாயூரம் தாலூகா கல்யாண சோழபுரம் அறக்கட்டளைக்குச் சொந்தமான சொத்துக்கள் சரியான முறையில், ஒழுங்காக நிர்வகிக்கப்படுகிறதா என்பதைப் பரிசீலிக்க அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, சொத்துக்களின் மதிப்பு பற்றித்தான் இங்கே கேட்கப்பட்டிருக்கிறது. அவற்றிற்குச் சொந்த மானவை நஞ்சை 135 ஏக்கர்கள், புஞ்சை 62 ஏக்கர்கள் ஆகும். நிர்வாகம் பற்றிய தகவல்கள் இப்போது என்னிடத்தில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் * வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

சுதேசமித்திரன் நாளிதழ் மீண்டும் வெளியிடப்பட வேண்டுமெனக் கோரி அந்நாளிதழின் ஊழியர்கள் உண்ணாவிரதம் குறித்து.

MR. SPEAKER : Thiru K. T. K. Thangamani has given notice under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules to move for adjourning the business of the House to discuss the following urgent matter of public importance :—

"hunger strike by employees of the Swadesamitran daily from 9th March 1972 for re-opening the 93 years old unit which is closed since 9th November 1971 affecting 150 workers". Thiru James and Thirumathi Anandanayaki have also given similar motions.

Dr. H. V. Hande has given notice of another adjournment motion slightly differing from it, to discuss the following matter of urgent public importance :—

"Swadesamitran, a 90 years old daily has suspended publication since November 10 last. Working journalists and previous employees of the paper are on hunger strike for the past five days. The Central Bank of India and Syndicate Bank have agreed to give credit facilities to the extent of resumption of the paper. Tamil Nadu Government has been approached to give third-party guarantee of loan. Government is requested to exploit . . ."

DR H. V. HANDE : I think it should be 'expedite'. You have written it as 'exploit'.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Government have exploited the situation.

DR. H. V. HANDE: It should be ' expedite '.

MR. SPEAKER: Let me continue.

"Government is requested to expedite the issue of guarantee."

DR. H. V. HANDE: My motion has been read out by the Hon. Speaker. Only one point I would like to highlight. The paper has been working at loss. Certain banks have come forward to give loan but the only question is whether it is possible for the Government of Tamil Nadu to stand guarantee for that. There is a provision that the Government have to stand guarantee. That particular provision should be ' exploited ' by Government. That is what I want. It should be made use of by Government so that workers can get some relief.

For the past several months the paper is practically closed. No attempt has been coming forth to revive it. I would be very happy if the Hon. Chief Minister or the particular Minister concerned would examine the reasons for the closure, whether it is because of economic difficulty or whether it is because of other problems. The whole matter may be examined by calling trade-union leaders and if necessary, some party leaders. We can discuss how this daily could be started. It is one of the oldest dailies and many of the employees want to work and complete the centenary, which is going to come within the next seven years. It was started during the freedom movement and it was one of the dailies which was bold enough to write against the Government in those days, when it was difficult to do so. It was foremost and was on the vanguard of freedom movement and I would be very happy if the Government could consider the matter sympathetically and take steps to re-start the paper.

I would be very happy if we are given the assurance that the particular amount, which the bank is willing to lend, would be guaranteed. I do not think there is any risk involved. Once the paper starts publication, I think in course of time the loan would be repaid. Then Government would be completely exonerated from guarantee. With these words, I wind up.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, என்னுடைய ஒற்றி வைப்புத் தீர்மானத்தில் விவரங்கள் விரிவாகக் கொடுத்திருக்கிறேன். சுதேச மித்திரன் பத்திரிகையைப் பொறுத்தவரையில் அது, தமிழ்நாட்டில் ஆரம்பித்த முதல் தமிழ் தினசரிப் பத்திரிகை என்பதும், தமிழ் நாட்டில் தேசிய இயக்கம் வளருவதற்கு அது பேருதவியாக இருந்த பத்திரிகை என்பதும், தேசியத் தலைவர்களான பாரதியார் போன்றவர்கள் அந்தப் பத்திரிகையோடு உறவு கொண்டிருந்தார்கள் என்பதும் நாடும், நாட்டு மக்களும் அறிவார்கள். இன்னும் ஏழு ஆண்டுக் காலத்தில் அந்தப் பத்திரிகை தன்னுடைய நூற்றாண்டு விழாவை நடத்தக்கூடிய சமயத்தில் நிர்வாகக் குறைபாட்டின் காரணத்தால் சென்ற நவம்பர் 9-ம் தேதியிலிருந்து சுதேசமித்திரன் பத்திரிகை நிறுத்தப்பட்டு, நீண்ட நெடுங்காலமாக பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டிருந்த சிறந்த பத்திரிகை ஆசிரியர்கள் சிறந்த பத்திரிகை செய்தியாளர்கள் மற்றும் ஊழியர்கள் அனைவரும் வேலையிழந்திருக்கிறார்கள். ஏற்கெனவேயே பல தொழிலாளர்களை யெல்லாம் ஆட்குறைப்புச் செய்திருக்கிறார்கள். அந்த ஸ்தாபனத்திலிருந்த ரோடரி மெஷின்களை யெல்லாம் வெளியேற்றக்கூடிய காலத்தில் தடுத்திருக்க வேண்டும். காரியங்கள் முற்றிவிட்டன. சுதேசமித்திரன் பிரச்சினையைத் தீர்த்து, வேலை கொடுக்க வேண்டுமென்று தொழிலாளர்கள் முயற்சிக்கிறார்கள்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டுள்ளதுபோல், இரண்டு பாங்கு களிலே 22 லட்சம் ரூபாய் வரையிலே கடன் கொடுக்க இருப்பதாக நான் அறிகிறேன். அப்படிக் கடன் கொடுப்பதற்கு அரசு கியாரண்டி கொடுத்தால், அந்தப் பத்திரிகை மீண்டும் நடைபெறவும், தொழிலாளர்கள் வேலைவாய்ப்புப் பெறவும் உதவியாக இருக்கும். மேலும் சர்க்கார் யாராவது ஒருவரை அந்த ஸ்தாபனத்தில் பொறுப்பாக போட வேண்டும். அதே மாதிரி தொழிலாளர்கள் சார்பில் பொறுப்பாக ஒருவரைப் போட வேண்டும்.

அந்தத் தொழில் ஸ்தாபனத்தை ஆரம்பிக்கிற காலத்திலேயே இவ்வளவு நிபந்தனைகளைப் போடுகிறாரே என்று நீங்கள் கேட்கலாம். இம்மாதிரி தொழில் ஸ்தாபனங்களைத் திறக்கும்போது, நாம் கொடுக்கின்ற பணம் சரியான முறை யில் செலவிடப்பட்டுகிறதா? முறையாக பத்திரிகைத் தொழில் நடைபெறு கிறதா என்பதைக் கண்காணிக்க வேண்டும். நாம் கொடுக்கின்ற பணத்துக்கும் உத்தரவாதம் வேண்டும். இந்த விஷயத்தில் எல்லா முதலாளிகளும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறார்கள். தேசிய தமிழ் தினசரிப் பத்திரிகை தொடர்ந்து நடக்க வேண்டும். சிறப்பாக தேசபக்தி கொண்ட பத்திரிகையின் ஊழியர்கள், ஆசிரியர்கள், செய்தியாளர்கள் எல்லோருக்கும் வேலைக்கு பாதுகாப்புத் தர வேண்டும். இன்னும் 7 ஆண்டுக் காலம் இந்தப் பத்திரிகையை

நடத்திவிட்டால், நாமே இப் பத்திரிகையின் நூற்றாண்டு விழாவை நடத்த வேண்டும் என்று அவர்கள் சந்தோஷமாக இருந்த நேரத்தில்தான் இப்படி பத்திரிகை நிறுத்தப்பட்டு விட்டது. மீண்டும் இந்தப் பத்திரிகையைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்பதற்காகத் தொழிலாளர்கள் எல்லோருடைய ஆதரவையும் திரட்டுவதற்காக கடந்த நான்கைந்து நாட்களாக உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாக அரசு இதைத் தீர்ப்பதற்கான நல்ல ஏற்பாடுகளைச் செய்வதோடு, சில உத்தரவாதங்களையும் அந்த ஸ்தாபன முதலாளியிடம் வாங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த விஷயம் இந்தச் சபைக்குப் பூராவும் தெரியக்கூடிய நிலை ஏற்பட்டால் நல்லதாக இருக்கும். ஆகவே, இந்தப் பிரச்சினையை விவாதிக்க பேரவையின் மற்ற அலுவல்களை ஒற்றிவைக்க வேண்டுமென்று கூறி, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவர் அவர்களே, இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தின் மீது எனக்கு முன் இரு அங்கத்தினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். ஒரு சில கருத்துக்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இதே சபையிலே இதேமாதிரி தீர்மானம் ஒன்று கொஞ்ச நாட்களுக்கு முன் வந்திருந்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், "இந்தப் பிரச்சினை ஒருசில நாட்களில் தீர்த்துவிடும்" என்று கூறினார்கள். நாட்கள் உருண்டோடி விட்டன. இன்னமும் எந்தவிதமான தீர்வும் அந்தப் பிரச்சினைக்குக் காணப் படவில்லை. ஒவ்வொரு முறையும் உண்ணாவிரதம் இருந்தும், பட்டினி கிடந்தும், ஊர்வலம் வந்தும் இப்படி பல்வேறு வகைகளிலே அரசாங்கத்தின் கவனத்தை ஈர்த்தும்கூட பிரச்சினைக்குத் தீர்வு காணவில்லை என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

சுதேசமித்திரன் பத்திரிகை தேசிய பாரம்பரியத்தைச் சேர்ந்ததாய், தேச விடுதலைக்காக சிறந்த சேவை செய்திருக்கிறது. அந்த ஸ்தாபனத்தை தொடர்ந்து நடத்திட பாங்குகள் கடன் கொடுப்பதற்கு முன் வந்திருக்கின்றன. கடனுக்கான உத்தரவாதத்தை அரசாங்கத்தின் சார்பில் கொடுத்தால் பத்திரிகை சீக்கிரம் வெளிவரும், தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும்.

இந்தப் பிரச்சினையில் அரசாங்கம் சற்று மெத்தனமாக இல்லாமல், தக்க ஏற்பாடுகளைச் செய்து, சிறந்த சேவை செய்த பத்திரிகையாசிரியர்கள், தொழிலாளர்கள் பட்டினி கிடந்து அல்லல்படுவதை நீக்க வழிவகை செய்ய

வேண்டும். முன்னர் கொடுத்த உத்தரவாதம் மாதிரி இல்லாமல், தொழிலாளர்கள், பத்திரிகையாசிரியர்கள், செய்தியாளர்கள் ஆகிய அனைவருக்கும் வேலை வாய்ப்புக் கிடைக்கக்கூடிய வகையில், கட்டாயமாக இந்தப் பத்திரிகை ஸ்தாபனத்தைத் திறக்கும் வகையில் ஏற்பாடுகளைச் செய்வதற்கு என்னென்ன ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமோ, அவற்றை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சுதேசமித்திரன் பத்திரிகையினுடைய சிறப்பையெல்லாம் தெரிவித்தார்கள். அவர்கள் எந்த அளவுக்கு உணர்ந்து இருக்கிறார்களோ அதேபோலவே இந்த இதழினுடைய சென்ற கால சேவையை நன்றாக நாங்களும் உணர்ந்திருக்கிறோம்.

ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்த மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு கருத்தைப் பற்றிக் கேள்விப்படுகிறோம் கேள்விப்படுகிறோம் என்று தான் சொன்னார்களே தவிர, திட்டவட்டமாகச் சொல்லவில்லை. வங்கியிலிருந்து அரசாங்கத்திற்குக் கடிதம் வந்து விட்டது. இங்கிருந்து கியாரண்டிதான் வரவில்லை என்று சொன்னார்கள். வங்கியிலிருந்து அரசாங்கத்திற்குக் கடிதம் எதுவும் வரவில்லை. இன்னும் சொல்லப் போனால் பத்து நிமிடங்களுக்கு முன்னாலே கூட வங்கியிலிருந்து கடிதம் வந்திருக்கிறதா என்று பத்திரிக்கை நிர்வாகிகளைக் கேட்டபொழுது கடிதம் எதுவும் வரவில்லை என்ற தகவல்தான் கிடைத்திருக்கிறது. எனவே, கேள்விப் படுகிறோம் என்று சொல்லி அரசு தாமதம் செய்வதாகக் கூறுவது முறை அல்ல. எனவே. வங்கியிலிருந்து கடிதம் எப்பொழுது கிடைக்கிறதோ அப்பொழுது அது கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜனவரி மாதம் சம்பளத்தில் ஒரு பகுதியைத் தொழிலாளர்களுக்குத் தந்து இருக்கிறார்கள். ஒர்க்கிங் ஜர்னலிஸ்ட்ஸ்க்கு அதுவும் தரவில்லை. நிர்வாகஸ்தர்களைக் கலந்து பேசி ஜனவரி மாதச் சம்பளத்தின் மற்றொரு பகுதியைத் தொழிலாளர்களுக்கு தரவேண்டுமென்றும் உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கும் முழு சம்பளத்தையும் தர வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. வங்கியிலிருந்து கடன் வருகிறதோ இல்லையோ, சுதேசமித்திரன் அலுவலகம் திறப்பதற்கு உடனடி முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் இல்லாவிட்டால் அரசாங்கம் தீவிரமான அடிப்படையில் ஆலோசிக்க வேண்டியிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

1971-ம் ஆண்டு நவம்பர் மாதம் சுதேசமித்திரன் நிர்வாகத்தினர் பல நெருக்கடியால் தங்கள் தொழிலாளருக்கு உரிய காலத்தில் ஊதியம் கொடுக்க இயல

வில்லை என்றும் தங்களுக்கு அவசியமான மானோ டைப் மிஷின் வாங்க முடிய வில்லை என்றும் வங்கியிலிருந்து தங்களுக்குக் கடன் வசதி கிடைக்கும் வரை நிறுவன வேலையைத் தற்காலிகமாக நிறுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக் கிறதென்று தொழிலாளர் நல ஆணையருக்கு முறையீடு செய்தனர். அதன் பேரில் 17-11-1971 அன்று ஆணையர் முன்னிலையில் நிர்வாகத்தினரும் சுதேச மித்திரன் தொழிலாளர் சங்கமும் சென்னை பத்திரிகையாளர் சங்கமும் பேச்சு வார்த்தை நடத்தி கீழ்க்கண்டவாறு ஓர் உடன்பாடு ஏற்பட்டது.

1. அக்டோபர் மாத ஊதியம் 23—11—1971க்குள் கொடுத்து விட வேண்டும்.

2. பத்திரிக்கையை 18—11—1971 முதல் 22—12—1971 வரை நிறுத்தி வைக்க இரு தரப்பினரும் இசைந்தனர்.

3. 1—11—1971 முதல் 17—11—1971 வரை முழுச் சம்பளமும் 18—11—1971 முதல் 22—12—1972 வரை 75 சத விகிதம் சம்பளமும் கடன் கிடைத்த ஒரு வாரத்தில் கொடுக்கப்படும். மீதமான 25 சத விகிதம் ஜுன் 1972-க்குள் கொடுக்கப்படும்.

4. இடைக் காலத்தில் காமிராவைத் தவிர வேறு சொத்துக்களை விற்கக் கூடாது.

5. கடன் கிடைக்காமல் நிறுவனத்தை மூடிவிடும் நிலைமை ஏற்பட்டால் சட்டப்படி நோட்டீஸ் சம்பளமும் நஷ்ட ஈடும், கிராஜுவிட்டித் தொகையும் 15 நாட்களுக்குள் கொடுக்கப்படும்.

6. இந்தக் கம்பெனியோ அல்லது இத்துடன் இணையும் வேறு கம்பனியோ பத்திரிகை ஆரம்பித்தால் இன்றுள்ள தொழிலாளர் சம்பளத்திற்குக் குறையாமல் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

22-12-1971-க்குள் வங்கியிலிருந்து கடன் கிடைத்து வேலை ஆரம்பிக்கப்படு மென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் பத்திரிகையை அன்று வரை மீண்டும் பிரசுரிக்காததால் 24-12-1971 அன்று நான் பத்திரிகை நிர்வாகத்தின ரிடமும் தொழிலாளர்களுடைய பிரதிநிதிகளிடமும் பேச்சு வார்த்தை நடத் தினேன். அதன் விளைவாக நிர்வாகம் பத்திரிகையை ஜனவரி மாதம் 20-ம் தேதிக்குள் வெளியிட முயற்சி செய்வதாகவும் நவம்பர் மாதச் சம்பளத்தை உடனடியாகக் கொடுப்பதாகவும் ஒப்புக் கொண்டார்கள். ஆனால் இதுவரை அவ்வாறு பத்திரிகை வெளிவரவில்லை. தொழிலாளர்களுக்கு, ஜனவரி மாதச் சம்பளத்தின் ஒரு பகுதியை நான் ஆரம்பத்திலே சொன்னது போல் கொடுக்கப் கப்பட்டது. மற்றொரு பகுதியைத் தரவில்லை. பத்திரிகை அலுவலகம் திறக்

கப்படவில்லை. வங்கியிலிருந்து கடன் விரைவில் கிடைக்கும் என்று பத்திரிகை நிர்வாகிகள் இப்பொழுது கூறுகின்றனர். இதுதான் இன்றுள்ள நிலவரம். இந்த நிலையிலே தொழிலாளத் தோழர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவர்கள்காட்டி வரும் பொறுமையை அரசாங்கமும் மற்றவர்களும் பாராட்டத் தான் வேண்டும். இனியாவது நிர்வாகம் தீவிரமாக கவனம் செலுத்து மென்றும் நடவடிக்கைகள் உடனடியாக எடுத்துக்கொள்ளும் என்றும் எதிர் பார்க்கிறோம். எனவே இந்நிலையில் மேலும் இது விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற என் கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : அம்மாதிரிக் கடன் வங்கியிலிருந்து கொடுக்கத் தயாராக இருந்தால் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வங்கித் தலைவர்களோடு பேச்சு வார்த்தை நடத்தினோம். அரசாங்கத்தின் தரப்பிலே எந்தவிதமான தயக்கமும் கிடையாது. வங்கித் தலைவர்கள் பணம் கொடுத்தால் திரும்பி வருமா, எப்படி இருக்கும் என்று எல்லாம் அவர்கள் பரிசிலித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர் கள் ஒத்துக் கொண்டால், எந்தவித கியாரண்டி வேண்டுமென்று கேட்டிருக் கிறோம். அதுபற்றி வந்தவுடன் பரிசிலிக்கப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து தொழில்களை ஊக்குவிப்பதற்குக் கடன் கொடுப்பதில் தாராளமாக இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். எப்படிக் கொடுப்பார்களோ என்று நாம் நினைத்துக் கொண்டு பேசாமல் இருந்துவிடக் கூடாது, குறிப்பிட்ட ஒரு கால வரையறை வைத்து அரசாங்கம் அவர்களோடு ஒத்துழைத்து விரைவிலே ஒரு முடிவு எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படித்தான் எதிர்பார்க்கிறோம். அப்படி நடக்கிறதா என்பது வேறு. போட்ட பணம் திரும்பி வருமா என்று பரிசிலிக்காமலேகூட அவர்கள் கடன் கொடுக்க வேண்டுமென்று சொல்வது சரியல்ல. மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களை ஏற்றுக்கொண்டுதான் அந்தப் பத்திரிகைக்கு உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் ஏற்கனவே ஒரு தடவை இப்படி உதவி செய்திருக்கிறோம்—தான் அரசாங்கம் உதவி செய்ய வேண்டுமென்று நினைக்கிறது. ஆனால் கடன் கொடுப்பதுபற்றிய முடிவு களை அவர்கள்தான் செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு அவசியமில்லை என்று கருதி இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

(3) கவன ஈர்ப்பு.

தீவுத் திடலில் கட்டடம் கட்டுவதற்கு மத்திய அரசு பாதுகாப்புத் துறை மேற்கொண்டுள்ள நடவடிக்கை குறித்து.

திரு. இராம. அரங்கண்ணல்: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை 41-வது விதியின்கீழ் "சென்னை" மாநகரின் மையத்திலுள்ள தீவுத் திடலில் கட்டடம் கட்டுவதற்கு இந்திய அரசின் பாதுகாப்புத் துறை மேற்கொண்டுள்ள நடவடிக்கை குறித்தும், பொதுச் சுகாதாரத்திற்காகவும் மாநகரின் எழில் பாதுகாக்கவும் வேண்டிய அந்த இடத்தைத் திறந்த வெளியாக வைத்திருக்க வேண்டியதன் அவசியம் பற்றிய அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கடந்த சில ஆண்டுகளாக பாதுகாப்புத்துறைப் பணியாளர்களுக்கான இட வசதித் தேவைகள் அதிகரித்துள்ளதாலும், பாதுகாப்புப் படையினருக்கு இதற்காகச் சென்னையில் தகுந்த நிலம் கிடைக்கவில்லை என்பதாலும், தீவுத் திடலில் ஒரு பகுதியில் கட்டிடங்கள் கட்டுவது தவிர்க்க முடியாத அளவுக்கு அவசியமாகி விட்டது என்று மத்தியப் பாதுகாப்பு அமைச்சர் கூறியுள்ளார். தீவுத் திடல் முழுவதையும் திடலாகவே பேணி வர வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி மத்தியப் பாதுகாப்பு அமைச்சருக்கு நாம் எழுதியுள்ளோம். பாதுகாப்புத் துறையினரின் இட வசதித் தேவைகளை நிறைவு செய்வதற்காக வேறிடத்தில் நிலம் வழங்குவதாகவும் நாம் ஒப்புக் கொண்டுள்ளோம். இது தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சரின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில், தீவுத் திடலில் கட்டிடப் பணிகள் தொடங்கி விட்டதால், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த 17 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய பிரதிநிதிகள் குழு ஒன்று அண்மையில் தலைமையமைச்சர் அவர்களைச் சந்தித்து, தீவுத் திடலில் கட்டிடங்கள் கட்டுவதை நிறுத்த வேண்டுமென்று பாதுகாப்பு அமைச்சகத்துக்கு உத்தரவிட வேண்டுமென்று முறையீடு செய்து கொண்டது. நகராட்சி மன்ற உறுப்பினர் திரு. டி. சாரங்கன் இப்போது சென்னை உயர்நீதி மன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். தீவுத்

திடலில் பாதுகாப்புத் துறை உத்தேசித்துள்ளபடி கட்டிடங்கள் கட்டும் பணி தொடர்ந்து நிறைவேற்றப்படாமல் இந்திய அரசு இரு வாரங்களுக்கு நிறுத்தி வைக்க வேண்டுமென்று இடைக்காலத் தடை ஆணை ஒன்றை உயர்நீதி மன்றம் பிறப்பித்தது. இது தற்போது நீதி மன்ற விசாரணையிலுள்ளது.

(4) அரசினர் தீர்மானங்கள்.

(அ) மதிப்பீட்டுக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, "தமிழ்நாடு சட்டப் பேரவையின் 164-வது விதியின்கீழ் 1972-73-ஆம் ஆண்டுக்குரிய மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப் பேரவை தேர்ந்தெடுக்கும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

(5) அறிவிப்புகள்.

(அ) மதிப்பீட்டுக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்குப் பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், மதிப்பீட்டுக் குழுவிற்கு Estimate Committee பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 22-3-1972, புதன்கிழமை, முற்பகல் 11-00 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 23—3—1972, வியாழக்கிழமை, முற்பகல் 11.00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 24-3-1972, வெள்ளிக்கிழமை முற்பகல் 11-00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது, பதினாறுக்கு மேற்படுமாயின் 27—3—1972, திங்கட்கிழமை முற்பகல் 9-00 மணிக்கும் பிற்பகல் 1-00 மணிக்கும் இடையே உறுப்பினர்கள் ஓய்வறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

(4) அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) பொதுக் கணக்காய்வுக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, "தமிழ்நாடு சட்டப்பேரவையின் 173-வது விதியின் கீழ் 1972-73-ம் ஆண்டுக்குரிய பொதுக் கணக்காய்வுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப் பேரவை தேர்ந்தெடுக்கும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

(5) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) பொதுக் கணக்காய்வுக் குழுவிற்குத் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு (Committee on Public Accounts) பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு, வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 22—3—1972, புதன்கிழமை, முற்பகல் 11-00 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 23—3—1972, வியாழக்கிழமை, முற்பகல் 11.00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 24—3—1972, வெள்ளிக்கிழமை முற்பகல் 11-00 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதினாறுக்கு மேற்படுமாயின் 27-3-1972, திங்கட்கிழமை, முற்பகல் 9-00 மணிக்கும் பிற்பகல் 1-00 மணிக்கும் இடையே உறுப்பினர்கள் ஓய்வறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

(இ) தமிழ் நாடு 1972-ம் ஆண்டு பந்தய வரி (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ் நாடு 1972-ம் ஆண்டு, பந்தய வரி (திருத்த) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(6) அரசினர் சட்ட முன்வடிவு.

தமிழ் நாடு 1972-ம் ஆண்டு பந்தய வரி (திருத்த) சட்டமுன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, தமிழ் நாடு 1972-ம ஆண்டு பந்தய வரி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பந்தய வரி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

(7) 1972-73-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

(அ) நிதிக் கோரிக்கை எண் 20—தொழில்கள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"நிதிக் கோரிக்கை எண் 20—தொழில்கள் * என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,90,87,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, I move—

'That the allotment of Rs. 3,90,87,600 made under Demand No. 20—Industries, be reduced by Rs. 100'.

DR. H. V. HANDE: Sir, I move the following cut motion to discuss about the present industrial stagnation in the State—

'That the allotment of Rs. 3,90,87,600 made under Demand No 20—Industries, be reduced by Rs. 100'.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, I move the following cut motion to discuss the steps taken by the Government to open the closed textile mills at Coimbatore—

'That the allotment of Rs. 3,90,87,600 made under Demand No 20—Industries, be reduced by Rs. 100'.

* 327-490-ம் பக்கங்களில் இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது இணைப்புகளாக அச்சிடப்பட்டுள்ளன.

திரு. என். மருதாசலம் : தலைவர் அவர்களே, தேயிலைத் தோட்டங்கள் தேசிய மயமாக்குவதன் அவசியம் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 20—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் படுகின்ற ரூ. 3,90,87,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(ஆ) நிதிக் கோரிக்கை எண் 40—தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண். 40—தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 15,02,78,700க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங் கப்படவேண்டும்".

THIRU J. JAMES : Sir, I move the following cut motion to discuss about a clear-cut industrial policy resolution to be moved in the House with a view to avoid any confusion in the field of Industrial Development—

'That the allotment of Rs. 15,02,78,700 made under Demand No. 40—Capital Outlay on Industrial Development, be reduced by Rs. 100'.

(இ) நிதிக் கோரிக்கை எண் 10—நீதி நிர்வாகம்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 10—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,07,45,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

DR. H. V. HANDE : Sir, I move the following cut motion to discuss policy—

'That the allotment of Rs. 3,07,45,100 made under Demand No. 10—Administration of Justice, be reduced by Rs. 100.'

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, நீதி நிர்வாகம் சுதந்திரமாக செயல் பட வேண்டியதன் அவசியம் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 10—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,07,45,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

1972 மார்ச் 14]

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, முன்சீப் கோர்ட், சப்-கோர்ட் எல்லைகள், புதிதாக அமைப்பது பற்றி ஒரு ஆண்டுக்கு முன் அமைக்கப்பட்ட வரதராசன் கமிட்டி பரிந்துரைகளை மூன்று மாதத்திற்குள் வெளியிட வேண்டும் என்பதைப்பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 10—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,07,45,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(ஈ) நிதிக் கோரிக்கை எண் 11—சிறைச்சாலைகள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 11—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ரூ 2,60,82,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

DR. H. V. HANDE : Sir, I move the following cut motion to discuss policy—

'That the allotment of Rs. 2,60,82,700 made under Demand No. 11—Jails, be reduced by Rs. 100'.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, மாணவர், விவசாயிகள், தொழிலாளர் இயக்கங்களில் கைது செய்யப்படுபவர்களை அரசியல் கைதிகளாக நடத்த வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 11—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,60,82,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, சிறைத் தண்டனையை அனுபவித்து விட்டு வெளிவந்தவர்களின் வாழ்க்கைக்கு வழி செய்யும் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 11—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,60,80,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

திரு. எம். சுரேந்திரன்: சபாநாயகரவர்களே, இந்தச் சபையின் முன்னால் வைக்கப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கைகளின் மீது பேசுவதற்கு முதலிலேயே வாய்ப்பு தந்தமைக்காக சபாநாயகரவர்களுக்கு முதலிலே நன்றி கூறுகிறேன். தொழில்கள் சம்பந்தமாக நம்முடைய மாநிலத்திலே தொழில்கள் பரவலாக, விரிவாக வளர வேண்டுமென்பதிலே அவ்வளவு பெரும் அக்கறை கொண்டிருக்கிறார்கள். ஆனால் தொழில்களை ஆரம்பிக்கும் பொழுது இப்பொழுது இருக்கின்ற தேவைகளை கருத்தில் கொண்டு தொழில்களைத் துவக்கினால் நல்லது என்ற ஒரு பணிவான கருத்தை இந்தச் சபையின் முன்னால் வைக்க விரும்புகிறேன். தொழில்கள் நிறைய இருக்கின்றன, எண்ணிக்கையில் அதிகமாக இருக்கின்றன என்பதைவிட ஒரு தொழில் ஆரம்பித்தால் இன்றைய தேவை, வேலையில்லாதவர்களை எவ்வளவு தூரத்திற்கு வேலையுள்ளவர்களாக ஆக்குவதற்கு அது பயன்படும் என்பதை முதலிலே யோசிக்க வேண்டுமென்று நான் கூற விரும்புகிறேன்.

இரண்டாவதாக, ஒரு தொழிலை ஆரம்பித்தால் அந்தத் தொழிலின் மூலம் உண்டாகும் உற்பத்தி இந்த மாநிலத்திலே இருக்கும் மக்களுக்கு எவ்வளவு பயன்படக்கூடியதாக இருக்கிறது என்பதை இரண்டாவதாக ஆலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மூன்றாவதாக, ஒரு தொழிலை ஆரம்பிக்கும்போது ஏற்கனவே இருக்கின்ற தொழில்கள் குவிந்திருக்கின்ற இடத்திலே ஆரம்பிக்காமல் பரவலாகத் தொழில்கள் அமைய வேண்டும், கிராமங்களிலேயும், பிற்பட்ட இடங்களிலேயும் தொழில்கள் அமைய வேண்டுமென்ற முறையிலே தொழில்களை ஆரம்பிப்பது நல்லது என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தொழில்களை ஆரம்பிக்கும்பொழுது அந்தத் தொழிலிலே மூலதனம் போட யார் யார் முன்வருகிறார்களோ அந்த மூலதனம் போடுகிறவர்களெல்லாம் ஒரே குறிக்கோளைக் கொண்டவர்கள் என்பதை மறந்துவிடக் கூடாது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். மூலதனக்காரர்கள் அவ்வளவுபெரும் லாபத்தை குறிக்கோளாகக் கொண்டுதான் ஆரம்பிக்கிறார்களே தவிர ஏதோ நாட்டின் நலன்களுக்காகவும், தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பிற்காகவும் என்பதெல்லாம் இரண்டாவது மூன்றாவதாக, தங்கள் நலன்களை மறைத்துக்கொள்ளப் பேசப்படும் விதமே தவிர உண்மையல்ல. ஆகவே, மூலதனம் போடுபவர்களுக்கு வேறு என்னென்ன வசதிகளைச் செய்துதர வேண்டுமோ அதை இந்த அரசு செய்து தருவதிலே ஆட்சேபணை இல்லை. ஆனால் இன்றைய நிலையிலே இருக்கும் தொழில்களை தேசியமயமாக்க வேண்டும், அதுதான் சரி என்று எண்ணுகின்ற காலகட்டத்தில் வாழும் நாம் அரசாங்கத்தின் பணத்தை அளித்து அதன் நிர்வாகத்தை முதலாளிகளிடத்திலே வழங்கி

நீங்கள் தொழிலே நடத்துங்கள் என்று சொல்வது அவர்கள் லாபத்தை அதிகப் படுத்த மக்களின் பணம் பயன்படுகிறது என்பதுதானே தவிர வேறு வழியில் அமையும் என்பதாகத் தெரியவில்லை.

குறிப்பாக, இங்கே கேள்வி நேரத்தின்போது மேட்டூரில் இருக்கும் மெட்ரூஸ் அலுமினியம் தொழிற்சாலைக்கு ஒரு கோடி ரூபாய் இந்த அரசு கடன் வழங்கி இருக்கிறது என்று சொன்னுர்கள். ஒரு கோடி ரூபாய் கடன் வழங்கி இருப்பது மட்டுமல்ல; மின்சாரத்திற்கான கட்டணத்தையும் மிகக் குறைவான அளவிலே வழங்கி அதிலே ஏற்படுகின்ற நஷ்டத்தையும் அரசாங்கம் ஈடுகட்டும் முறையில் அந்தத் தொழிற்சாலைக்கு உதவுகின்றுர்கள். இப்படி உதவி பெறுகின்ற அந்தத் தொழிற்சாலை நிர்வாகம் நம்முடைய அரசாங்கத்தின் பொறுப்பில் இருக்கும் நிர்வாகம் அல்ல. தனிப்பட்டவர்கள் நிர்வாகத்தில் அந்தத் தொழிற்சாலை நடந்து கொண்டிருக்கிறது. அந்தத் தொழிற்சாலையில் போடப்பட்டிருக்கும் மூலதனத்தின் அளவைப் பார்த்தால் குறைந்தது ஐயாயிரம் தொழிலாளர்களாவது வேலை செய்வார்கள், அப்படி இருந்தால்தான் பயனுள்ளதாக இருக்கும், உபயோகமுள்ளதாக இருக்கும், நல்லமுறையில் இருக்கும். ஆனல் அங்கிருக்கும் கணக்கைப் பார்த்தால் நானூற்றுச் சில்லரை தொழிலாளர்கள்தான் நிரந்தரமாக வேலை பார்ப்பதாகக் கணக்கு காட்டியிருக்கிறுர்கள். பலகோடி ரூபாய் மூலதனம் போட்டு, அரசாங்கப் பணத்தையும் போட்டு, மின்சாரக் கட்டணத்தையும் குறைத்துக் கொடுத்து இவ்வளவும் செய்த பிறகு தொழிலாளர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குகின்ற அளவுக்கு நிலைமை இருக்கிறதா என்றுல் இல்லை.

அந்தத் தொழிற்சாலைக்கு அரசாங்கத்தின் உதவி அதிகமாக இருக்கிறது என்ற காரணத்தால் அந்த நிர்வாகமானது தொழிலாளர்களுடைய மிக அத்தியாவசியமான தேவைகளைக்கூட நிறைவேற்றுவதற்கு முன்வராமல், சாதாரண கிளர்ச்சிகளைச் செய்தால்கூட, அதைக் கூடப் பொறுத்துக் கொள்ளாமல் அரசாங்கத்தின் உதவி இருக்கிறது என்ற முறையில் அவர்களுடைய நடவடிக்கைகள் இருந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

சமீபத்தில் பஞ்சாலைத் தொழிலில் வேலை நிறுத்தம் நடந்தது. அது சம்பந்தமாக விவாதம் நடந்தபோது முதலமைச்சர் அவர்கள் கூட இந்தத் தொழிலைத் தேசியமயமாக்கிவிடுவேன் என்று கூறினுர்கள். அந்தத் தொழிற்சாலையில் வேலை செய்கிற எட்டாயிரத்துக்கான தொழிலாளர்கள் தங்களுடைய குறைகளை நியாயமாக நிர்வாகத்திற்கு எடுத்துச் சொல்லியும் கேட்காத காரணத்தால் முதலமைச்சர் அவர்கள் அந்த வார்த்தையை உபயோகப்படுத்திஞர்கள்.

இன்றைக்கு பஞ்சாலைத் தொழில் வளர்ச்சி பெற்ற நம் நாட்டில தொழில் வளரும் ஒரு கட்டத்தில் முதலாளிகள் இதில் கவனம் செலுத்த மாட்டார்கள். ஏனெனில் இலாபவிகிதம் குறையக் குறைய அந்தத் தொழிலை நடத்துவதிலே முதலாளிகளின் அக்கறை போய் விடுகிறது. வேறு தொழிலிலே மூலதனம் செல்கிறது. அரசாங்கத்தின் உதவியைப் பெற்று லாபம் மேலும் சம் பாதிக்க முயற்சிக்கிருர்கள். அதனுல் இப்படிப்பட்ட தொழில்களை தேசியமய மாக்குவதுதான் சரியானது. இதேபோல கனரகத் தொழில்களையும் தேசியமய மாக்க வேண்டும். இந்தா ரகத்திலேதான் மதராஸ் அலுமினியம் தொழிற்சாலை வருகிறது. இதையும் தேசியமயமாக்க வேண்டும். சாதாரண மக்கள் வரிப் பணத்தில் இருந்து பெறுகின்ற வருமானத்திலிருந்து பணத்தை இவர்களுக்குக் கொடுத்து அவர்கள் லாபம் அடைய வழிவகுப்பது சரியானது அல்ல. இது அவர்கள் சுரண்டுவதற்கு வாய்ப்பளித்து எக்ஸ்ப்ளாய்டேஷனுக்கு உதவி செய்கிருேம் என்று பொருளே தவிர வேறு அல்ல.

(திரு. எஸ். முருகையன் தலைமை)

இந்த அரசாங்கம் இப்போது பல தொழில்களை கூட்டு முயற்சியில் நடத்து வது என்று முடிவு எடுத்துக்கொண்டு அந்தத் தொழில்களுக்கெல்லாம் தன்னுடைய பங்கையும் கொடுத்து தொழில்கள் வளர வேண்டுமென்ற எண்ணத்தை தொழிலமைச்சர் அவர்களும், அமைச்சரவையும் கொண்டு காரியங்களைச் செய்து வருகிறது. இது இந்தக் கால கட்டத்திற்குப் பொருந் துமா என்ருல் பொருந்தாது என்றுதான் கூறுவேன். இன்று தொழில்களைத் தேசியமயமாக்க வேண்டுமென்று சொல்லுகின்ற காலகட்டத்தில் இருந்து கொண்டிருக்கின்ற நிலையில் முதலாளிகளோடு அரசாங்கமும் சேர்ந்து கொண்டு தொழில்களை நடத்த ஏற்பாடு செய்வது பொருத்தமாக இல்லை; அது சோஷலிசத் திற்குப் பொருத்திய வாதமல்ல. இந்தப் பிரச்சினையைச் சரியாகக் கவனத்தில் எடுத்துக்கொண்டு கணக்கிட்டுப் பார்த்தால் அதனுடைய விளைவு என்ன ஏற்பட் டிருக்கிறது என்று பார்க்க வேண்டும்.

தேசியமயமாக்கப்பட்ட தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்கள் நலன்கள், தேவைகள் முழுமையாக நிறைவேற்றப்பட்ட பிறகு அந்தத் தொழி லாளர்களைப் பார்த்து தனிப்பட்டவர்களுடைய தொழிற்சாலைகளில் இருக்கும் தொழிலாளர்கள் எங்களுக்கும் அதுபோன்ற தேவைகளை நிறைவேற்றித்தர வேண்டுமென்று தொழிலாளர்கள் கிளர்ச்சி செய்து அதன் மூலம் அரசாங்கத் திடத்தில் அந்தத் தொழிற்சாலையை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று முதலாளிகள் சொல்லுகின்ற நிலை உருவாகி அவைகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ள முன் வரவேண்டும். தேசியமயமாக்கப்பட்ட தொழிற்சாலைகளில்

லாபம் வந்தால் சமுதாயத்திற்குப் பயன்படுகிறது; லாபம் வராவிட்டால் வேலை செய்கிற தொழிலாளர் நலன்கள், சுபிட்சமாக, சந்தோஷமாக வாழ்கின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, எல்லாத் தொழில்களையும் தேசியமயமாக்க வேண்டுமென்ற காலக்கட்டத்தில் இருந்து கொண்டிருக்கின்ற நிலையில் இம்மாதிரி கூட்டுத் தொழில் முயற்சியைக் கைவிடுவது நல்லது, அது பற்றிப் பரிசிலனை செய்வது வருங்காலத்திற்கு நல்லது என்று கூற விரும்புகிறேன்.

மால்கோ தொழிற்சாலையில் சமீப காலமாக சில நிகழ்ச்சிகள் நடக்கின்றன. அதிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கைகளை வைத்தால் நிர்வாகம் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. தொழிற் சங்கத்தோடு பேசக்கூட அவர்கள் தயாராக இல்லையென்று கூறுகிறார்கள். பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கத்தை எந்த நிர்வாகமாவது ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கூடக் கூறியிருக்கிறார்கள். அங்கு அந்த நிர்வாகம் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. அங்குள்ள தொழிலாளர் சங்கத்திற்கு முரசுதவேல் என்பவரை காரியதரிசியாக தேர்ந்தெடுத்த பிறகு காரியதரிசியாக அவரை நியமிக்கக்கூடாது என்று கூறி அந்தக் காரியதரிசியை தேர்ந்தெடுக்க வேண்டுமென்று பிரேரணை பண்ணிய சேஷாத்திரி என்ற தொழிலாளியை சஸ்பெண்ட் செய்து மீண்டும் அவரைக் கூப்பிட்டு மிரட்டி 'இங்கே இருந்து கருணாநிதி அவர்களுக்கு ஃபோன் செய்து கண்ணை மூடிக் கொள்ளும்படி சொல்லிவிட்டு அதற்குப் பின்னால் அங்கிருந்து போலீசாரை வரவழைத்து நடவடிக்கை எடுப்பேன். பத்தாயிரம் ரூபாய் நோட்டை கொடுத்து என்ன வேண்டுமானாலும் செய்யச் சொல்லுவேன்' என்று பகிரங்கமாகக் கூறினார். இதைப் பற்றி நான் மாவட்ட கலெக்டரிடத்திலும், ஆர். டி. ஓ. விடத்திலும் கூறினேன். ஒரு நிர்வாகம் தொழிலாளர் நலனுக்கு விரோதமாக, கோரிக்கைக்கு விரோதமாக, அரசாங்கத்தையும், அரசாங்கத்தின் நடைமுறையையும் கேவலப்படுத்தும் முறையில் பேசியும் நடந்தும் வருவதற்கு நாமே உடந்தையாக இருக்கிறோம் என்ற முறையில் நம்முடைய பணம் பயன்படுகிறது என்று கூறிக் கொள்ளுகிறேன். இந்தப் பிரச்சினைகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு தொழிலில் இருக்கும் தன்மைகளை மாற்றியமைக்க வழி காணவேண்டும்.

தொழிற்சாலைகளுக்கு நாம் எதற்காக நிலங்களை அளிக்கிறோம் என்பதைப் பற்றி வரையறுக்கப்பட்ட விதிகள் இருக்கின்றன. அந்த விதிகளின்படி அவர்கள் அதைப் பயன்படுத்துகிறார்களா என்றால் இல்லை. மேட்டூர் அலுமினியம் தொழிற்சாலை 600 ஏக்கர் நிலத்தை தன்னுடைய கையில் வைத்துக் கொண்டிருக்கிறது. அதிலே 390 ஏக்கர் நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நிலம் என்று சமீபத்தில் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும் போது அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி ஆக்கிரமிக்கப்பட்ட

நிலத்தில் ஏற்கனவே நிலம் இல்லாத விவசாயிகள் விவசாயம் செய்து கொண்டிருந்தார்கள். அந்தத் தொழிற்சாலே நிர்வாகம் அந்த நிலத்திலே விவசாயம் செய்கிறது, மாடுகளை வளர்க்கிறார்கள், மரம், செடி, தென்னை ஆகியவற்றை வைத்துக் கொண்டிருக்கிறார்களே தவிர தொழிலுக்கோ, தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பது போன்ற காரியங்களுக்கோ பயன்படுத்த வில்லை. ஆகவே, அரசாங்கம் இம்மாதிரி தொழிற்சாலே நிர்வாகம் ஆக்கிரமித்து வைத்துக் கொண்டிருக்கின்ற நிலங்களில் இருந்து அவர்களை வெளியேற்ற வேண்டும். அவ்வாறு வெளியேற்றுவதற்கோ அல்லது அதற்காக அவர்களுக்கு தண்டனை அளிப்பதற்கோ அதிகாரிகள் யாரும் முன்வருவது இல்லை. சாதாரண தொழிலாளி எங்காவது ஒரு சிறு அளவு நிலத்தை ஆக்கிரமித்து ஒரு குடிசை போட்டுக் கொண்டால் உடனே விரட்டி அடிக்கிறார்கள்; கோர்ட்டில் கொண்டு போய் நிறுத்தி தண்டனை வாங்கிக் கொடுக்கிறார்கள். இதுமாதிரி பல இடங்களில் அதிகாரிகள் இந்த தொழிற்சாலே நிர்வாகத்திற்குப் பயந்து போகிற நிலைமை இருக்கிறது. இம்மாதிரி பயந்து கொண்டிருக்கும் நிலையை மாற்றவும், அவர்களுக்குப் பலவித உதவிகளை நடைமுறையில் கொடுப்பதை நிறுத்தவும், மாற்றியமைக்கவும் வருங்காலத்தில் இந்த அரசாங்கம் உறுதியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அதே நேரத்தில் அலுமினியம் தொழிற்சாலையை, பல கோடி ரூபாய் போட்டு நடத்தக்கூடிய அந்தத் தொழிசாலையை தேசியமயமாக்கவேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசுக்குக் கூறவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

டாக்டர் இரா. நைனுமலை : தலைவர் அவர்களே, 1972-73-ம் ஆண்டு தொழில் மானியக் கோரிக்கை மீது எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழகத்தில் கைத்தறித் தொழிலானது மிக்க தொன்மைவாய்ந்ததும், பெரிய குடிசைத் தொழிலுமாகும். சுமார் 5½ லட்சம் தறிகளை நம்பி 20 லட்சம் நெசவாளர் பெருங்குடி மக்கள் இன்று தமிழ்நாட்டில் வாழ்கிறார்கள். இது தமிழகத்தில் கிட்டத்தட்ட பதினறில் ஒரு பங்காகும். ஆக, இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய மக்களின் எண்ணிக்கையைப் பார்க்கிறபோது பொருளாதார ரீதியில் இது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த தொழில் என்பது புலனாகும். எனது தொகுதியாகிய ராசிபுரத்தில் கூட சுமார் 30,000 மக்கள் கிட்டத்தட்ட அங்குள்ள மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் நெசவாளப் பெருங்குடி மக்கள். அவர்கள் தொழிலானது தமிழ்நாட்டில் அடிக்கடி செத்துச் செத்துப் பிழைத்துக்கொண்டிருக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு சுமார் 48 கோடி ரூபாய் பெறுமானமுள்ள துணியை இந்தக் கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்கிறார்கள். அவர்களது தொழிலுக்கு வேண்டிய

1972 மார்ச் 14] [டாக்டர் இரா. நைனுமலை]

மூலப்பொருள்களும், நிதிவசதிகளும் சிக்கலாக இருக்கிற காரணத்தினுல், பஞ்சாலைத் தொழிலோடு அவர்கள் போட்டியிட வேண்டியிருப்பதாலும் அவர்கள் இக்கட்டான நிலைகளுக்கு ஆளாகிருர்கள். இந்த நிலையில் நமது அரசு அந்தத் தொழிலை மிக மிக அனுதாபத்தோடு அணுகி அதற்கு வேறு எந்தத் தொழிலுக்கும் கிடைக்காத அளவிற்கு என்னென்ன வகையில் அந்தத் தொழிலுக்கு உதவி செய்ய முடியுமோ, என்னென்ன வகைகளில் அந்தத் தொழிலைக் காப்பாற்ற முடியுமோ, அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக என்னென்ன வகைகளில் முயற்சிகளை மேற்கொள்ள முடியுமோ அத்தனை வழிகளிலும் நமது அரசு திட்டங்கள் பலவற்றைத் தீட்டி அவற்றைச் செயலாக்கிக் கொண்டிருப்பதால் இன்று நெசவாளர் பெருங்குடி மக்கள் ஓரளவிற்கு நிம்மதியாக வாழ்கிருர்கள் என்று சொன்னுல் அது மிகையாகாது. ஆகவே, இந்த தமிழ்நாடு அரசுக்கு இந்த நெசவாளர் பெருங்குடி மக்கள் பெரிதும் கடமைப்பட்டிருக்கிருர்கள். 67-68-ம் ஆண்டு இந்தத் தொழிலுக்காக ஒதுக்கப்பட்ட மூலதனம் ரூ. 1.18 கோடியாக இருந்தது. இப்போது 72-72-ம் ஆண்டுக்கு அது ரூ. 2.34 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்காக ரூ. 10.60 கோடி ஒதுக்க அரசு திட்டமிட்டிருப்பது வரவேற்கத்தக்க ஒன்ருகும். நடப்பாண்டில் திட்ட நிதி ஒதுக்கீட்டில் சேராத பல நிதி உதவிகளையும் நமது அரசு கடன் கொடுப்பதன் மூலமாகவும், ஷேர் காப்பிடலை உயர்த்துவதன் மூலமாகவும் அவர்களுக்கு ரூ. 136 கோடி வழங்குவதற்கு திட்டமிட்டிருக்கிறது. பல்வேறு கைத்தறி வளர்ச்சித் திட்டங்களை நமது அரசு மேற்கொண்டு அவை களைச் செயல்படுத்தி வருகிறது. ஆண்டுதோறும் புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதும், புதிய சொஸைட்டிகளை உருவாக்குவதும், சரியாக செயல்பட முடியாத, நிதி வசதி இல்லாத சொஸைட்டிகளை மாற்றியமைப்பதுமான பல திட்டங்களில் நமது அரசு கவனம் செலுத்திவருகிறது.

கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைமுறை மூலத்தனச் செலவிற்காக ரிசர்வ் வங்கியில் இருந்து அதன் வட்டி விகிதத்தில் 1½ சத விகிதம் குறைவான வட்டியில் அவர்களுக்கு கடன் கொடுப்பதற்காக ஏற்பாடு செய்வதோடு கூட்டுறவு வங்கிகளில் அத்தகைய கடன்கள் வழங்குவதற்கு 3 சத விகிதம் உதவித் தொகையும் வழங்க ஏற்பாடு செய்திருக்கிறது. ரிசர்வ் வங்கிக் கடனுக்கு 10 சத விகிதம் ஈடு கட்ட இயலாத சங்கங்களுக்கு உதவுவதற்காக அப்படிப்பட்ட தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பங்கு மூலத்தனத்தி லிருந்து முதலீடு செய்வதன் மூலம் அரசாங்க நிதிவாயில்களை வலுப்படுத்தி புள்ளது. தொழில் அமைச்சர் அவர்கள் 26 தலைப்புகளின்கீழ் நெசவாளர் களுக்கு நல்லபல திட்டங்களைத் தீட்டி அவர்களுக்கு உதவியளிக்கிற வகையில் இந்த அரசு செயல்பட்டு வருகிறது. இவைகளை எல்லாம் பார்க்கிறபோது

தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய நெசவாளர் பெருங்குடி மக்கள் ஓரளவிற்கு நிம்மதியோடு இருக்கிறார்கள். என்றாலும், இந்த உதவிகளெல்லாம் பெருமளவிற்கு கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாகக் கொடுக்கப்படுகிற காரணத்தினால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வெளியே இருக்கக் கூடிய கைத்தறி நெசவாளர்கள், மாஸ்டர் வீவர்களை நம்பியிருக்கும் கைத்தறி நெசவாளர்கள் இதன் பலன்களை அனுபவிப்பது இல்லை. மாஸ்டர் வீவர்களிடமிருந்து அவர்களுக்கு, தற்போது கூட கட்டு ஒன்றுக்கு 15 ரூபாயிலிருந்து ரூ. 20 என்றளவிற்கு உயர்ந்து விடுகிறது. அவர்கள் நேரடியாக மில்லுக்குச் சென்று கொள்முதல் செய்ய முடிவதில்லை. அவர்கள் கைக்கு நூல் வந்து சேருவதற்குள்ளாக இரண்டு மூன்று கைகள் மாறி மாறி கமிஷன் ஏஜென்ட் மூலம் வருவதால் விலை, மார்க்கட்டில் கட்டுப்படுத்த முடியாத ஒரு நிலை இருக்கிறது. அப்படி உயர்ந்த விலையில் நூல் வாங்கி அவர்கள் தறியாளர்களுக்குக் கொடுக்கும்போது தொழிலாளர்களுக்கு போதிய ஊதியம் அவர்களால் கொடுக்கமுடியவில்லை. ஆகவே பல நெசவாளர் குடும்பங்கள், இந்த மாஸ்டர் வீவர்களை நம்பியிருப்பவர்கள் குறைந்த கூலிக்கு வேலை செய்யக்கூடிய ஒரு நிர்பந்தம் ஏற்படுகிறது. சில சமயங்களில் நூல் இல்லாததால் வேலையில்லாமல் போகிற ஒரு சூழ்நிலையும் ஏற்படுகிறது. ஆகவே கூட்டுறவுச் சங்கங்களுக்கு எப்படி அரசு நூல் கொள்முதல் செய்து கொடுக்கிறதோ அதேமாதிரி மாவட்ட அளவில் ஒரு அமைப்பை ஏற்படுத்தி அதில் இந்த மாஸ்டர் வீவர்களுக்கும் நூல் கொடுப்பதற்கு வழிவகை செய்ய இந்த அரசு ஆவன செய்யவேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கைத்தறித் தொழிலானது அரசின் இத்தனை ஆதரவோடு செயல்பட்டாலும் கூட மில்களோடு போட்டிபோட்டு வளர முடியவில்லை. எனவே இப்படிப்பட்ட பரிகாரங்கள் எல்லாம் ஒரு இடைக்கால நிவாரணமாக அமையுமே தவிர நிரந்தரமான பரிகாரமாக ஆக முடியாது. ஆகவே அரசு ஒரு பதினைந்து அல்லது இருபது ஆண்டு என்று ஒரு காலவரையறை ஏற்படுத்தி அந்த காலவரையறைக்குள் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய இருபது லட்சம் மக்களில் குறைந்தபட்சம் பதினைந்து லட்சம் மக்களையாவது வேறு தொழிலுக்கு மாற்றவேண்டும். இவர்களுக்கு வேறு மாற்றுத்தொழில் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மீதியிருக்கக்கூடிய 5 லட்சம் பேரும் அவர்களுடைய தொழிற்சாலையை விஞ்ஞான ரீதிப்படி அவைகளை விசைத்தறியாக மாற்றி, அந்த விசைத்தறி மூலம் அப்படி எஞ்சி இருக்கக்கூடிய மக்கள் பிழைத்துக்கொள்வார்கள். இந்த 20 ஆண்டுகாலத்தில் இந்த நாட்டிலே இந்த நெசவாளர் பிரச்னைக்கு நிரந்தரமான தீர்வு காண முன்வரவில்லை. இந்த அரசானது அதற்கு ஒரு தீர்வு காண முன்வரவேண்டும்.

அரசால் தொடங்கப்படுகிற பல பொதுத்துறை ஆலைகளிலே இந்த நெசவாளர் பெருங்குடி மக்களின் குழந்தைகளுக்கு, நெசவாளர் மாணவர் களுக்கு முதல் சலுகையாக இட வசதி கொடுத்து, அங்கேயே அவர்களுக்கு வேலைக்கு சலுகையும் தரவேண்டும். அப்படித் தருவதன் மூலம் அவர்களை மற்ற வேலைகளில் மாற்றுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று நான் கருது கிறேன்.

அடுத்தபடியாக, சர்க்கரைத் துறையைப் பற்றி ஒரு சில கருத்துக்களைச் சொல்ல நினைக்கிறேன். நமது தமிழகத்திலே 20 சர்க்கரை ஆலைகள் இருக் கின்றன. அதிலே 10 சர்க்கரை ஆலைகள் கூட்டுறவுத்துறையிலே இயங்கு கின்றன. மீதி இருக்கும் 10 சர்க்கரை ஆலைகளை தனியார் நடத்தி வருகின்றனர். கூட்டுறவுத் துறையில் இருக்கக்கூடிய 10 சர்க்கரை ஆலைகளில் 7 சர்க்கரை ஆலைகள் இப்போது அறவை செய்து கொண்டு இருக்கின்றன. மீதி இருக்கும் 3 சர்க்கரை ஆலைகள் இன்னும் ஆரம்ப நிலையில் இருக்கின்றன. இந்த சர்க்கரை ஆலைகளானது கிட்டத்தட்ட ஆண்டு ஒன்றுக்கு 1½ லட்சம் டன் கழிவுப்பாகை (மோலாசஸ்) உற்பத்தி செய்கிறது. அந்தக் கழிவுப்பாகைக் கொண்டு, ஏற்கெனவே தனியார் துறையில் திருச்சியிலும், நெல்லிக்குப்பத் திலும் 2 வடித் தொழிற்சாலைகள் (டிஸ்டிலரிஸ்) இருக்கின்றன. அது தவிர இப்போது நமது அரசாங்கத்தினாலே உரிமம் வழங்கப்பட்டு தொடங்க இருக்கிற தனியார் தொழிற்சாலையில் சக்தி சுகர்ஸுக்கும், அருணா சுகர்ஸ் சுக்கும் 2 டிஸ்லரிஸ் புதிதாக வர இருக்கிறது. இப்போது உற்பத்தியாகிற 1½ லட்சம் டன் மெலாஸஸில் கிட்டத்தட்ட 3-ல் பங்கு 50000 டன் மொலாசஸ் நம்முடைய கூட்டுறவு சர்க்கரை ஆலையில் உற்பத்தி செய்யப்படுகிறது. இன்னும் 3 சர்க்கரை ஆலைகள் அறவையைத் தொடங்கினால் இது கிட்டத்தட்ட பாதிக்கு வந்து விடும். ஆக, மொத்தக்கழிவுப்பாகிலே பாதி அளவுக்கு நாம் கூட்டுறவுத்துறையில் உற்பத்திச் செய்கிறோம். ஆனால் நமது கூட்டுறவுத் துறைக்கு ஒரு வடி தொழிற்சாலை (டிஸ்டிலரி) இல்லை. நீண்ட நெடுங்கால மாகவே கூட்டுறவுத்துறையில் ஒரு வடித் தொழிற்சாலை ஏற்படுத்தவேண்டு மென்று யோசித்து, அப்போது மத்திய அரசாங்கத்திலே லைசென்சு முறை இருந்த நேரத்திலே, 1965-ம் ஆண்டு தமிழ்நாட்டிலே ஒரு கூட்டுறவு வடி தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு உரிமம் வழங்கியிருக்கிறார்கள். அப்படி இருந்த நிலையிலே ஆய்வு செய்ததன் காரணமாக அத்தகைய கூட்டுறவு வடி தொழிற்சாலையை மோகனூர் சர்க்கரை ஆலையில் ஏற்படுத்துவது என்று முடிவு செய்து இருந்தார்கள். ஆனால் நாளாவட்டத்திலே அந்த கூட்டுறவுத்துறை யிலே ஏற்பட இருந்த அந்த வடிதொழிற்சாலை என்ன காரணத்தாலோ அரசாங்கத்தின் கவனத்திலிருந்து விலகிக்கொண்டே வந்து இருக்கிறது. நாங்கள் இன்னமும் நம்புகிறோம். கூட்டுறவுத்துறையிலே பாதிக்கும் அதிகமாக

உற்பத்தி செய்யப்படுகின்ற கழிவுப்பாகைக்கொண்டு கூட்டுறவுத்துறையிலேயே ஒரு வடிதொழிற்சாலை அமைக்க அரசு உரிமம் வழங்கும். அத்தகைய வடி தொழிற்சாலை அமைக்க சிறந்த இடம் மோகனூர். ஏற்கெனவே எக்ஸ்பர்ட் கமிட்டி தேர்ந்தெடுத்த மோகனூர்தான் சிறந்த இடம் என்ற எண்ணத்தை உண்டாக்கியிருக்கிறார்கள். ஆகவே, அந்த வடிதொழிற்சாலையை விரைவில் அரசாங்கம் தொடங்க ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப் பத்தில் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ. 5 வீதம் கேன் செஸ் வாங்குகிறார்கள். இந்த கேன் செஸ் வாங்குவதன் நோக்கமே அந்த மில் பகுதிகளில் ரோடுகள், கால்வாய்கள் போன்றவற்றை சீரமைப்பதற்கும், தூர் எடுப்பதற்கும், புதிய ரோடுகள் போடுவதற்காகவும் தான். பழைய ரோடுகளைச் செப்பனிட பெருமளவுக்கு செலவு செய்யவேண்டுமென்ற அடிப்படையில்தான் கேன் செஸ் போட்டு, வசூலித்து, அந்தப் பணத்தை மில்களுக்கு பகிர்ந்து அளிக்கிறார்கள். இது சீரான முறையில் ஒவ்வொரு மில்லுக்கும் அவர்கள் கேட்கிற அளவுக்குப் தேவையான அளவுக்கு கொடுக்கவேண்டும். இப்படி அந்தப் பணத்தை தரு வதன் மூலம் அந்த ரோடுகளை அகலப்படுத்தி செப்பனிட முடியும். இப்படிச் செய்தால் மிக நல்ல முறையில் கரும்பு வளர்ச்சித் திட்டமானது செயல் படும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சேலம் மாவட்டத்திலே மரவள்ளிக்கிழங்கு நிறைய பயிராகிக் கொண்டு இருந்தும், அந்த மரவள்ளிக்கிழங்கிலிருந்து மாவு செய்வதற்கு கிட்டத்தட்ட 600-க்கு மேற்பட்ட ஸ்டார்சு வியாபாரிகள் சேலம் மாவட்டத்திலே இயங்கி வருகின்றனர். இந்த மாவுப்பொருள்கள் குறிப்பாக வடநாட்டிலே உள்ள வங்காளத்திற்கும் பம்பாய்க்கும் ஏற்றுமதியாகிறது. சில சமயங்களில் வாகனங்கள் கிடைக்காத காரணத்தாலோ அல்லது வேண்டுமென்றே அவர்கள் அதிலே ஈடுபட்டு இருக்கக்கூடிய வியாபாரிகளின் மார்க்கெட்டை கீழே கொண்டு வரவேண்டுமென்பதற்காகவோ, அவர்களுடைய மார்க்கெட்டானது மிகவும் தேங்கிவிடுகிறது. சில சமயங்களில் 40 ரூ. விற்கக்கூடிய ஸ்டார்சு மூட்டை ரூ. 150 கூட விற்கிறது. இப்படி ஏற்றத்தாழ்வு இருக்கிற காரணத்தாலே விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, இந்த ஸ்டார்சைக் கொண்டு ஒரு குளோகோஸ் தொழிற்சாலை சேலம் மாவட்டத்தில் காவிரி யாற்றின் ஓரத்தில் ஏற்படுத்தினால் வெளிநாட்டு செலாவணி உற்பத்திக்கும் வசதியாக இருக்கும் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தில் கனவெடிக்கு (டைனமைட்) . . . (மணியடிக்கப் பட்டு அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்.)

திரு. என். மருதாசலம்: தலைவரவர்களே, இன்று இந்த மன்றத்திலே 4 மானியக் கோரிக்கைகள் வந்திருக்கின்றன. இந்த மானியக் கோரிக்கைகளிலே நான் ஜெயில் மானியக்கோரிக்கை மீது சில விவரங்களைக் கூற விரும்புகிறேன். ஜெயிலானது அன்று வெள்ளைக்காரன் இருந்த காலத்தில் நடைமுறையும், செயல்முறையும் எப்படி இருந்ததோ அப்படியேதான் காங்கிரஸ்காரர்கள் ஆண்டுவந்த காலத்திலும் இருந்து வந்தது. இப்போது அந்த நடைமுறைத் திட்டம் மாறவில்லை. அதே முறையில் அனுஷ்டித்து வருவதாலே அதன் பேரில் ஒரு சில விவரங்களைக் கூற விரும்புகிறேன்.

ஒரு குற்றவாளியை ஜெயிலிலே அடைக்க வேண்டுமானால் 4 பேர், 5 பேர்களை ஒரு கூண்டில் அடைத்து விடுகிறார்கள். வெள்ளைக்காரர் காலத்தில் கூட இப்படித் தான் அடைத்தார்கள். காங்கிரஸ்காரன் காலத்திலும் இப்படித்தான் அடைத் தார்கள். இப்போதும் அப்படித்தான் செய்கிறார்கள். அடியோடு அந்த முறை மாறவேண்டும்.

ஜெயிலிலே நாம் ஒரு குற்றவாளியை அடைப்பதற்குக் காரணம், அவன் குற்றம் திருந்தி வெளியே வந்தால் அவன் வாழ்க்கையை நல்லவிதமாக நடத்த வேண்டுமென்பதற்காகத்தான். அவர்கள் திருந்தி வெளியே வந்தால் அவர்கள் வாழ்க்கைக்கு என்ன உத்தரவாதம் தரப்பட்டிருக்கிறது; ஆகவே, அவன் பழைய குற்றத்தையே செய்வதற்கு முற்படுகிறான். குற்றம் செய்துவிட்டு திருந்தி வெளியே வந்தால் அவனுக்கு வேலை வேண்டும். வேலை தந்தால் வேறு குற்றம் செய்ய மாட்டார்கள். அந்த முறையில் ஜெயில் கைதிகள் தண்டனை காலம் முடிந்து வெளியே வந்தால் அவர்களுக்கு வேலை உத்தரவாதம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜெயில்களில் ஆஸ்பத்திரி இருக்கிறது. ஆஸ்பத்திரி இருக்கிற இடங்களில் தான் டாக்டர்கள் இருப்பார்களே தவிர, ஜெயிலுக்குள் வரமாட்டார்கள். ஜெயிலுக்குள் வருவதென்றால் வாரத்திற்கு ஒரு முறை வருவதாக ஒரு பாணி இருக்கிறது. அந்தப் பாணியில் அந்த நாளில் சூப்பிரண்டெண்டு, ஜெயில் வார்டர்கள் எல்லோரும் டாக்டருடன் ஒரு படை பண்டாரத்தோடு ஊர்வல மாக வருவார்கள், பார்த்து விட்டு போய்விடுவார்கள். ஜெயிலில் இருக்கும் கைதி 8 மணிக்கு வேலைக்குப் போவதற்கு முன்னால் ஒவ்வொரு பிளாக்காக டாக்டர் போய் பார்க்கவேண்டும். அவர்களை சோதனை செய்யவேண்டும். அப் படிப் போய் பார்த்து சோதனை செய்தால்தான் நோய்களை உடனடியாகக் கண்டு பிடிக்க முடியும்.

உதாரணமாக திருமலைசாமி அவர்கள் அரெஸ்டு செய்யப்பட்டு ஜெயிலில் இருந்தார். அவர்களுக்கு ஆஸ்த்மா கம்ப்ளைண்டு. அவர் அரெஸ்டு செய்யப்

பட்டவுடன் உடனடியாக ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டிருக்கவேண்டும். ஆனால் அப்படி அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படவில்லை. கொட்டாரையில் நான்கு பேர்களோடு அடைக்கப்பட்டிருந்தார். ஆஸ்த்மா அதிகமாகி விட்டது. உள்ளே இருந்து சத்தம் போட்டார். இன்ஜெக்ஷன் கொடுத்து விட்டு மறுபடியும் கொட்டாரையில் போட்டுவிட்டார்கள். விடியற்காலையில் மறுபடியும் ஆஸ்த்மா அதிகமாகி, அவர் சத்தம் போட்டார். மறுபடியும் இன்ஜெக்ஷன் செய்துவிட்டு, விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். அப்படிப் பட்ட நோயாளியை உடனடியாக ஆஸ்பத்திரியில் அனுமதித்திருந்தால் நல்ல விதமாக இருந்திருக்கும். அந்த முறையில் செய்யவில்லை. ஜெயில் ஆஸ்பத்திரியில் கவனக் குறைவு அதிகமாக இருக்கிறது என்று நான் கூற விரும்புகிறேன். அம்மாதிரி இருப்பது சரியல்ல.

மேலும், ஆயுள் தண்டனைக் கைதிகள் ஆயுசு பூராவும் ஜெயிலில் இருக்க வேண்டியதாக இருக்கிறது. அதற்கு வரையறை கிடையாது. ஜென்ம தண்டனைக் கைதிகள் இவ்வளவு வருஷம் தண்டனை அனுபவித்துவிட்டால் போதுமானது என்று ஒரு வரையறை இருக்கவேண்டும். அப்படி ஒரு வரையறை இருந்தால் தான் அவர்களுக்கு நலமாக இருக்கும். அந்த முறை இப்பொழுது இல்லை. ஜென்ம தண்டனைக் கைதிகள் ஆத்திரத்தில் அல்லது வேறு ஒரு சூழ்நிலையில் ஒரு கொலை செய்துவிட்டார்கள் என்றால், அவர்கள் ஆயுள் தண்டனை அனுபவித்தால், 10, 12 வருஷம் தண்டனையை அனுபவித்து அவர்கள் திருந்திவிட்டால், அவர்களை உடனடியாக விடுதலை செய்யவேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட வேண்டும். அவர்கள் திருந்திவிட்டார்கள், அவர்களை வெளியே விட்டால் அவர்கள் குற்றம் எதுவும் செய்யமாட்டார்கள் என்ற எண்ணம் ஏற்பட்டு விட்டால், அவர்களை வெளியே விடுவதினால் எந்தவிதமான பாதகமும் இல்லை. அந்த முறையை அரசாங்கம் கையாளவேண்டும்.

இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் சேலம் ஜெயிலில் வார்டர்கள் 8 மணி நேரம் வேலை செய்கிறார்கள். மற்ற ஜெயில்களில் இரண்டு மணி நேரத்திற்கு ஒரு முறை வார்டர்கள் மாற்றப்படுகிறார்கள். ஆகவே, அந்த வார்டர்கள் வீட்டு வேலையையும் செய்ய முடியாது, சொந்த வேலையையும் செய்ய முடியாது. ஆகவே, எல்லா ஜெயில்களிலும் வார்டர்களுக்கு 8 மணி நேர வேலை என்ற முறையை அமுலுக்கு கொண்டு வரவேண்டும். அது மாத்திரமல்ல. அவர்களுக்கு சம்பளம் ரொம்பக் குறைவு. அதன் காரணமாக அவர்கள் ஜெயில்களிலிருந்து சில சாதனங்களையே கொண்டு போய்விடுகிறார்கள். அவர்களுக்கு இருக்கிற தரித்திரம், சம்பளக் குறைவு இவைகளையெல்லாம் பரிசிலனை செய்து சம்பளத்தை உயர்த்தவேண்டும், எல்லா வார்டர்களுக்கும் 8 மணி நேர வேலை என்ற முறையில் மாற்றப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், விவசாயிகள் போராட்டங்கள்; தொழிலாளர்கள் போராட்டங்கள் மாணவர்கள் போராட்டங்கள் போன்ற போராட்டங்களில் கலந்துகொண்டு ஜெயிலுக்குப் போகிறவர்களை ஜென்ம தண்டனைக் கைதிகளோடு, திருட்டுக் குற்றம் முதலிய குற்றம் செய்த கைதிகளோடு சேர்த்து ஒரே பிளாக்கில் அடைத்து வைப்பது சரியல்ல. அவர்களை அரசியல் கைதிகளாக அரசாங்கம் பாவிக்கவேண்டும். அவர்கள் அரசியல் கைதிகளாக பாவிக்கப்பட்டு, அந்த முறையில் நடத்தப்படவேண்டுமே தவிர, அவர்களை சாதாரண கைதிகள் போல் நடத்துவது சரியல்ல என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அதுமாத்திரமல்ல. சிறையிலுள்ள கைதிகளின் சில கஷ்டநஷ்டங்களைப் பற்றி சொல்லாமல் இருக்க முடியாது. எல்லா சிறைகளிலும் தொழில்கள் இருக்கின்றன. கோவைச் சிறையில் நெசவுத் தொழில் இருக்கிறது. சேலம் ஜெயிலில் சாமான்கள் செய்து விற்கிறார்கள். இன்னொரு ஜெயிலில் பூட்ஸ் தைக்கிறார்கள். மற்றொரு ஜெயிலில் தையல் வேலை செய்கிறார்கள். எல்லா சிறைச்சாலைகளிலும் இப்படி ஏதாவது ஒரு தொழிலை கைதிகள் செய்து கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு வேலைக்குத் தகுந்த கூலி கொடுத்து, அப்படி அவர்கள் சம்பாதிக்கின்ற பணத்தை அவர்களுடைய குடும்பத்திற்கு அனுப்புவதுதான் மிகவும் உசிதமாக இருக்கும். அப்பொழுது தான் அவர்களுடைய குடும்பத்தினர் அரை வயிற்றுக் கஞ்சியாவது குடிப்பதற்கு வழியிருக்கும். அந்த முறையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். அவர்கள் ஜெயிலிலிருந்து வெளியே வரும்பொழுது பணத்தைப் பூராவும் கொடுப்பதில்லை. கொடுத்த பணத்தையும் வெளியிலே வரும்பொழுது பிடுங்கிக் கொள்கிறார்கள். வெளியே வரும்பொழுது சும்மா வருகிறார்கள். அந்த முறையில்லாமல் கொடுக்கிற பணத்தை ஒழுங்காகக் கொடுத்து அனுப்பி வைப்பதற்கு ஏற்ற வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ளைக்காரர்கள் காலத்தில் இருந்த அதே நிலைமை ஜெயில்களில் இப்பொழுதும் இருக்கக்கூடாது. வெள்ளைக்காரர்கள் காலத்தில் ராகிக் கஞ்சி கொடுத்தார்கள். காங்கிரஸ் சர்க்கார் சோளக்கஞ்சி கொடுத்தார்கள். இப்பொழுதும் அதே சோளக் கஞ்சிதான். இதை மாற்றவேண்டும். அரசாங்கம் மாறிவிட்டது. ஜெயிலில் நடக்கக்கூடிய குறும்சங்கள் மாற வேண்டும். அப்பொழுதுதான் அரசாங்கம் மாறியதைப் புரிந்துகொள்ள முடியும். அரசாங்கம் மாறியும் அங்கே உள்ள நடைமுறைகள் மாறவில்லை. இப்பொழுது இருக்கக்கூடிய சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு அந்த நடைமுறைகளை மாற்றி அமைக்கவேண்டும் என்று மிக தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஜெயில் கைதிகளுக்கு நல்ல அறிவு புகட்டுவதற்காக நல்ல பாடப்புத்தகங்களை வைத்து ஒவ்வொரு பிளாக்கிலும் பள்ளிகள் ஏற்படுத்த வேண்டும். அப்படி பள்ளிகள் ஏற்படுத்தி, நல்ல முறையில் பாடம் சொல்லிக் கொடுத்து, அவர்கள் வெளியே வரும்பொழுது நல்ல அறிவோடு, மக்களோடு ஒன்றுபட்டு வாழும்படியான நிலையில் வெளிவரும்படி செய்யவேண்டும். அவர்களுக்கு ஜெயில்களில் நல்ல முறையில் பாடம் சொல்லிக்கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

இந்த ஜெயில்களைப் பராமரிப்பதற்கு ஒவ்வொரு ஜெயிலுக்கும் ஒரு கமிட்டி உண்டு. அந்த ஜெயில் கமிட்டிகளில் சகல கட்சி அங்கத்தினர்களும் இடம் பெறவேண்டும். அது ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களை மட்டுமே கொண்ட கமிட்டியாக இருக்கக்கூடாது. சகலகட்சியினரைக் கொண்ட கமிட்டிகளை அமைத்தால் ஜெயிலுக்குப் போய் விசாரித்து, என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன என்பதைக் கண்டறிந்து அரசாங்கத்திற்கு ரிபோர்ட்டு பண்ணுவதற்கு உதவியாக இருக்கும். ஆகவே, அந்த முறையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே சமயத்தில் வேலைக்கு வருகிற கைதிகளுக்கு சாதாரண வேலைகள் கொடுக்கப்படுகின்றன. வேலைக்கு தகுந்த சம்பளம் கொடுப்பது, வேலைகள் எப்படிச் செய்வது ,யார் செய்வது, எந்த வேலைக்கு என்ன சம்பளம் கொடுப்பது, செய்த வேலைக்கு சம்பளம் கிடைக்குமா, கிடைக்காதா என்பதற்கெல்லாம் உத்தரவாதம் கிடையாது. ஜெயில்களில் நெசவுத் தொழில் நடக்கிறது, கோவை ஜெயிலில் அருமையான துணி நெய்கிறார்கள். அந்தத் துணிகளில் தான் போலீஸ்காரர்களுக்கும், மற்றவர்களுக்கும் ட்ரெஸ் தைத்துக் கொடுக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட துணியை வெளியே கொண்டு போய் மற்றவர்கள் விற்க ஆரம்பிக்கிறார்கள். அதிலே நல்ல லாபம் உண்டு அரசாங்கத்திற்கு. இப்படி துணி நெய்கிறார்கள், தையல் வேலை செய்கிறார்கள், பூட்ஸ் தைக்கிறார்கள், ஈயப் பாத்திரங்களை செய்து விற்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட வேலைகளைச் செய்யும் கைதிகளுக்கு வேலைக்கேற்ற கூலி கொடுத்து, உற்சாகப்படுத்தி, அவர்கள் வெளியே வரும்பொழுது அவர்கள் அந்தத் தொழிலை செய்வதற்கு அரசாங்கம் அனுமதி அளித்து, வேண்டிய உதவியையும் செய்யவேண்டும். அப்படி அனுமதி அளித்தால் அவர்கள் ஜெயிலுக்குள்ளே செய்த வேலையை வெளியிலும் செய்ய முடியும், அவர்கள் நல்ல முறையில் வெளியிலே வாழ்க்கையை நடத்துவதற்கு உதவிகரமாக இருக்கும். ஆகவே, அந்த முறையை அரசு கையாளவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

[1972 மார்ச் 14]

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, தமிழ் நாட்டில் 1967-க்குப் பின்னால் அமைந்திருக்கிற இந்த அரசானது தொழில் துறையில் தமிழ் நாடு முன்னேறுவதற்கு எடுத்துக் கொண்ட பல்வேறு முயற்சிகளைப்பற்றி இங்கே பல்வேறு அறிக்கை வாயிலாக மிகத் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. தமிழ் நாடு எந்தத் தொழிலில் முன்னேறவேண்டும், எந்தத் தொழிலில் தமிழ் நாடு முன்னேறு வதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்பதைப்பற்றி குறிப்பேடுகள் இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதிலும் மிகச் சிறந்த முறையில் தமிழ் நாடு அரசாங்கம் எடுத்துக்கொண்ட பெரு முயற்சி காரணமாக, தமிழ் நாட்டு மக்கள் நீண்ட காலமாக எதிர்பார்த்திருந்த சேலம் இரும்பு ஆலை வருகிறது. இதற்காக இந்த அரசாங்கம் எடுத்துக்கொண்ட பெரு முயற்சிகளை இந்த சந்தர்ப்பத்தில் வரவேற்று, பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ் நாடு அரசாங்கம் தொழில்கள் தொடங்குவதற்கு எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சிகளை, ஏனைய மாநிலங்களில் தொழில்கள் தொடங்குவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சிகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் தான், தமிழ் நாடு எந்த அளவுக்கு புதிய தொழில்களைத் துவங்குவதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறது, உற்பத்தியை அதிகரிப்பதற்கு ஆக்கப் பணியில் தமிழ் நாடு அரசாங்கம் தன்னை எப்படி ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறது என்பதை நம்மால் உணர்ந்துகொள்ள முடியும். அப்படிப்பட்ட முறையில் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற புள்ளிவிவரங்கள் அமைந்திருக்கின்றன. தொழில்களைத் துவங்குவதற்கு அரசாங்கம் எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில் இன்றைக்கு இருக்கின்ற தொழில்களில், சிறந்த தொழிலாக, பலருக்கு வேலைவாய்ப்பு கொடுக்கின்ற தொழிலாக இருப்பது பஞ்சாலைத் தொழிலாகும். இந்தப் பஞ்சாலைத் தொழிலைப்பொறுத்த வரையில் கடந்த 1967-68-ம் ஆண்டில் ஏற்பட்ட இடர்பாடுகளின் பயனாகத் தமிழ்நாட்டிலே இந்தத் தொழிலை மூட வேண்டிய அவசியம் ஏற்பட்டதை யாரும் மறந்து விட முடியாது. அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டதற்குக் காரணம் மத்திய சர்க்கார் அன்றைக்கு விதித்த வரிகள் தான். அதனால் தான் இப்படிப்பட்ட நெருக்கடி ஏற்பட்டது என்பதை யாரும் மறந்து விட முடியாது. என்றாலும் தமிழ் நாட்டில் இந்தத் தொழிலை தொடர்ந்து நடத்துவதற்கு தமிழ்நாடு அரசாங்கம் எடுத்துக் கொண்ட பெரு முயற்சி காரணமாக, ஏறத் தாழ ஒரு கோடி ரூபாய்க்கு மேல் பணம் கொடுக்கிற நிலை ஏற்பட்டு, நிதி உதவியின் காரணமாக

இன்றையதினம் தமிழ்நாட்டில் ஐந்து பஞ்சாலைகளைத் திறப்பதற்கு முடிந்தது. இந்த அரசாங்கத்தின் பெரு முயற்சி காரணமாகத்தான் இன்றைக்கு இது சாத்தியமாகி இருக்கிறது. இந்தியத் துணைக் கண்டத்தின் பல்வேறு மாநிலங்களில் ஏராளமான பஞ்சாலைகள் மூடப்பட்டுக் கிடப்பதைப் பார்க்கிறோம். இந்தியாவிலே மற்ற மாநிலங்களிலே வேறு எங்கும் காட்டப்படாத ஆர்வம் தமிழ்நாடு அரசாங்கத்தால் காட்டப்பட்டதன் காரணமாக தான் ஐந்து மில்களைத் திறந்து அதிலே பணியாற்றுகிற ஏறத்தாழ 3,500 தொழிலாளர்களுக்கு இன்றைக்கு வேலைவாய்ப்பு கிடைத்து இருப்பதைப் பார்க்கிறோம்.

பஞ்சாலைகளைச் சீர்படுத்துவதற்கு தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் மூலம் 49 சதவிகிதம், இந்தியப் பஞ்சாலைக் கழகத்தின் மூலம் 51 சதவிகிதம் பங்கு போட வேண்டுமென்ற தன்மை இருப்பதைப் பார்க்கிறோம். இப்படிப்பட்ட தன்மை இருந்தாலும் இன்றைக்கு திறந்து இருக்கக்கூடிய பஞ்சாலைகளுக்கு தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் போட்டு இருக்கிற பங்கீடு 90.4 லட்சம். இந்த 5 பஞ்சாலைகளுக்கும் பணம் கொடுத்து இருப்பது தேசிய பஞ்சாலைக் கழகம் 29.36 லட்சம். அவர்கள் இந்த அளவிற்குத் தான் முதலீடு செய்திருக்கிறார்கள். நியாயமாகத் தேசிய பஞ்சாலைக் கழகம் 51 சதவிகிதம் பங்கு கொடுக்க வேண்டும். ஆனால் தமிழ்நாடு அரசாங்கம் அதிகமான பங்கை இந்தப் பஞ்சாலைகளைத் திறப்பதற்குப் போட்டிருக்கிறது. இந்த அரசாங்கம் எடுத்துக் கொண்ட பெரு முயற்சியின் காரணமாகத் தான் இந்தப் பஞ்சாலைகள் இன்றைக்குத் திறந்து நடத்தப்படுகின்றன. எனவே தமிழ் நாடு அரசாங்கம் எடுத்துக் கொண்ட முயற்சிக்காக அதனைப் பாராட்டுகிறேன். அதனுடைய முயற்சி பாராட்டத் தக்க விதத்திலே அமைந்திருப்பதைப் பார்க்கிறோம். அது மட்டுமல்ல; இன்றைக்கு அந்தப் பஞ்சாலைகள் முன்னேற்றகரமாக நடைபெற வேண்டுமென்றால் அவைகள் நவீனப்படுத்தப்பட்டாக வேண்டும். இப்படி நவீனப்படுத்துவதற்கு ஏறத்தாழ 147.86 லட்சம் ரூபாய்க்கு ஒரு திட்டம் தயாரித்து நடைமுறை ஆண்டிலே பெரும் அளவிற்கு அதிலே பணம் முதலீடு செய்வதற்கு தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் முன் வந்திருப்பதைப் பார்க்கிறோம். அதே சந்தர்ப்பத்தில் இந்த அரசாங்கம் எடுத்துக் கொண்ட பெரு முயற்சிகளின் காரணமாக இன்றைக்குப் பல பேருக்கு வேலை வாய்ப்பு தருவதற்கு இது உதவியாக இருந்தது.

இந்த மன்றத்திலே கூட கடந்த ஆண்டும், அதற்கு முந்திய பல ஆண்டுகளிலும் பேசப்பட்ட பேச்சுக்களின்போது பலர் குறைப்பட்டுக்கொண்டு பேசியிருக்கிறார்கள். இந்த மில்களைத் தமிழ்நாடு அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். இன்றைக்கு இந்தப் பஞ்சாலைகள் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தால் ஏற்று நடத்தப்படுவதால் அங்கே பணிபுரிகிற

தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளம் கிடைக்கிறது. இதற்கு முன்பு குறைந்த சம்பளமே கொடுக்கப்பட்டு வந்தது. இப்படிப்பட்ட குறைபாடு நீக்கப்பட வேண்டுமென்று இந்த மன்றத்திலே பல்வேறு தரப்புகளிலே இருந்து எடுத்துச் சொல்லப் பட்டது.

இன்றைக்கு அரசாங்கம் எடுத்துக் கொண்ட பெரு முயற்சிகளின் காரண மாக இந்த பஞ்சாலைகளில் பணிபுரிகிற எல்லாத் தொழிலாளர்களுக்கும் மற்ற பஞ்சாலைகளில் பணிபுரிகிற தொழிலாளர்களுக்கு என்ன சம்பளம் கிடைக் கிறதோ, அதே அளவிற்குக் கிடைக்கின்றது. பஞ்சாலைக் கார்ப்பரேஷன் இந்த பஞ்சாலைகளை எடுத்துக் கொண்ட பிறகு இந்த மில்களிலும் நல்ல நிலை எற்பட் டிருக்கிறது. அதைச் சொல்கிற அதே சந்தர்ப்பத்தில் பொதுவாகத் தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் இந்தப் பஞ்சாலைகளுக்குப் பஞ்சு கிடைப் பதிலே சிரமங்கள், சங்கடங்கள் இருந்து கொண்டு இருக்கின்றன. தமிழ் நாட்டிற்குத் தேவைப்படுகிற பஞ்சிலே 25 சதவிகிதம் தான் தமிழ் நாட்டிலே உற்பத்தியாகிறது. மீதம் உள்ள பஞ்சு வட மாநிலங்களிலிருந்து வர வேண்டும். அல்லது வேறு நாடுகளிலேயிருந்து இறக்குமதி செய்யப்பட வேண்டும். இப்படி வடக்கே இருந்து பஞ்சை வாங்கி, அது நூலாக நூற்கப்பட்டு மீண்டும் வட மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டு அங்கு ஆடைகளாக நெய்யப்பட்டு இங்கே வருகின்றன. தமிழ்நாட்டில் உள்ள பஞ்சாலைகளில் ஏறக்குறைய 120 பஞ்சாலைகளில் 15, 20 பஞ்சாலைகளில் தான் தறிகள் போடப்பட்டு துணிகள் நெய்வதற்கு வசதிகள் இருக்கின்றன. பல பஞ்சாலைகளில் இந்த வசதியில்லை. அதனால் இங்கே பஞ்சிலிருந்து நூல் நூற்கப்பட்டு வட மாநிலங்களுக்கு அனுப்பப்படுகின்றன. தமிழ்நாட்டில் நூற்கப்படும் நூலில் பெரும் பகுதி வட மாநிலங்களுக்கு அனுப்பப்படுகின்றன. அங்கே துணியாக நெய்யப்பட்டு, அங்கே பிரிண்ட் அடிக்கப்பட்டு மீண்டும் நம்முடைய மார்க்கெட்டிற்கு வரக் கூடிய தன்மையிலே இருப்பதைப் பார்க்கிறோம். இப்படிப்பட்ட நிலையை மாற்றக் கூடிய முறையில் அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொண்டு, இங்கே இருக்கக்கூடிய பஞ்சாலைகளில் புதிய தறிகளைப் போடுகிற வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர வேண்டும்.

இந்தப் பஞ்சாலைத் தொழில் நொடியாமல் இருக்க வேண்டுமென்றால் இப்படி தறிகளை இங்கே அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும் அல்லது விசைத் தறிகளை ஏராளமாக இங்கே கொண்டு வந்து ஆக வேண்டும். விசைத் தறிகளைப் பொறுத்த வரையில் 70—71-ல் தனியாருக்கு 500-ம், கூட்டுறவுக்கு 500-ம், ஆயிரம் தறிகள் போடப்பட்டன. 71-72-ம் ஆண்டு தனியார் துறைக்கு 3,000-ம், கூட்டுறவுத் துறைக்கு 1,000 தறிகள் கொடுக்கப்பட்டன. நாலாயிரத்து முன்னூற்று பதினான்கு தறிகள் கொடுக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம்.

ஆனல் தமிழ்நாட்டிலே உற்பத்தியாகும் முழு நூலையும் பயன் படுத்துகிற அளவிற்கு அதிகமான தறிகள் கொண்டு வருவதற்கு இந்த அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொண்டால் தான், இங்கே எந்த அளவிற்கு நூல் உற்பத்தியாகிறதோ, அவ்வளவு நூலையும், வட மாநிலங்களுக்கு அனுப்பி அங்கு துணிகளாக நெய்யப் பட்டு, பிரிண்ட் போடப்பட்டு, இங்கே இருக்கிற மார்க்கெட்டிற்கு அவைகள் மீண்டும் வராமல் தடுக்க முடியும். அப்படிப்பட்ட நிலை தமிழ்நாட்டில் உருவாக்கப்பட வேண்டும். இங்கே தயாராகிற நூலைக் கொண்டு இங்கேயே துணியாக நெய்து, இங்கேயே பிரிண்ட் போடுகிற நிலை வரவேண்டும். இதற்கு வேண்டிய முயற்சிகளை தொழில் துறை மூலம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு விசைத் தறிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவை மட்டும் போதாது. கோவை, ராமநாதபுரம், நெல்லை மாவட்டங்களில் 250 தறிகள் ஒதுக்கியிருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். இந்த மாநிலத்திற்கு 1,000 தறிகளாவது வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருந்தாலும் அது போதுமான தாக இருக்காது. இந்தத் தறிகள் மட்டும் பஞ்சாலைத் தொழிலுக்குப் பயன் படாது. இன்னும் ஏராளமாக, 5,000, 10,000 தறிகளாவது நடைமுறை ஆண்டிலே கிடைப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். நான் இதைச் சொல்வதற்குக் காரணம் எந்த அளவிற்கு நூல் உற்பத்தியாகிறதோ அந்த அளவிற்கு நூலைத் துணியாக நெய்து, துணிகளாக பிரிண்ட் அடித்து நம்முடைய மார்க்கெட்டிற்கு அனுப்பப்பட வேண்டும். இதற்குப் பெரு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன். 1970—71-ம் ஆண்டில் 41.04 லட்சம் விசைத் தறிகளுக்கு என்று ஒதுக்கப்பட்டது. இந்தத் தொழிலை இன்னும் விரிவு படுத்த முயற்சியை மேற் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல இன்றைக்குக் கூட்டுறவுத் துறை மூலம், அரசாங்கத்தின் மூலம் இல்லாவிட்டாலும் கூட, தமிழ்நாடு கூட்டுறவு நிதி உதவிக் கழகத்தின் மூலம், விசைத் தறிகளுக்காகக் கடன் கொடுக்கப்பட்டாலும் இந்த நிதி போதுமானதாக இல்லை. 1970—71-ம் ஆண்டில் 5 லட்சம் ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கப்பட்டு இருந்தாலும், கடன் வேண்டி வந்த விண்ணப்பங்கள் ஏராளம். அவ்வளவு பேருக்கும் கடன் கிடைக்கவில்லை. இன்னும் அதிகம் பேருக்கு கடன் கிடைப்பதற்கு வழி செய்ய வேண்டும்.

கோயம்புத்தூர் தொழிற்பேட்டையைப் பொறுத்த வரையில் 3½ லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டது. அங்கே 96 தொழில் அமைப்புகளுக்கு வாய்ப்புகள் இருந்தாலும், 42 தொழில் நிறுவனங்கள்தான் பங்கு கொண்டன. அவற்றிற்கு 32 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டது. இன்னும் அதிகமான அளவிற்குத் தொழிற்

1972 மார்ச் 14] [திரு. சு. துரைசாமி]

சாலைகளை உருவாக்குவதற்கு இந்த அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய அரசாங்கத்தின் சார்பாக, சிறு தொழில் கழகத்தின் சார்பாக, தொழில் வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக தொழில் வளர்ச்சிக்குப் பெரு முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது. ஆனால் சிறு தொழில் கழகம் பனியன் தொழிலுக்குக் கடன் கொடுப்பதில்லை. இதற்கு வழியில்லை என்று அதிகாரிகள் சொன்னதாகச் சொல்கிறார்கள். இந்தத் தொழில் பல நெருக்கடிகளுக்கு ஆளாகிக் கொண்டு வருகிறது. இதற்குப் பெரு முயற்சி எடுத்து இந்தத் தொழிலுக்கு வேண்டிய மூலதனம் கிடைப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அமெரிக்காவில் கூட இந்தத் தொழிலை அதிகமாகச் செய்வதற்கு உதவி செய்கிறார்கள்.

இப்போது அமெரிக்காவை எடுத்துக்கொண்டால், பனியன் துணி உற்பத்திக்குத்தான் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்; பனியன் உற்பத்தி ஆலைகளைப் பெருக்கி வருகிறார்கள். மக்கள் அந்தத் துணியைத்தான் இப்போது அதிகமாக உபயோகப்படுத்துகின்றார்கள். நம் நாட்டிலும் இப்போது பனியன் துணிகளுக்கு அதிகமாகத் தேவை இருக்கிறது; பனியன் உற்பத்தியும் பெருகி வருகிறது. மக்களின் தேவைக்கேற்ற முறையில் அதன் உற்பத்தியைப் பெருக்க, கைத்தறித் துணி உற்பத்திக்கு கடன் அளிக்கப்படுவது போன்று, பனியன் உற்பத்திக்கும் கொடுக்கப்பட வேண்டும். எனவே, திருப்பூர் பனியன் உற்பத்தி ஆலைக்கும் கடன் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கை தொழில் துறையைப் பற்றியதாக இருந்தாலும், நீதி மன்றமும் வருவதால், கனம் தொழில் அமைச்சர் அவர்களுக்கு, மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக ஒரு வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன்.

இன்றைக்கு உடுமலைப்பேட்டையில் நம்முடைய அமைச்சரவர்கள் ஒரு சப்-கோர்ட்டை அமைத்திருக்கின்றார்கள். அதைப்போன்று திருப்பூர் நகரிலும் ஒரு சப்-கோர்ட்டை அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருப்பூரில் சப்-கோர்ட் அமைவதாக இருந்தால், உடுமலைப்பேட்டையில் வருகின்ற வழக்குகளை விட அதிகமாக வருகின்ற ஒரு தன்மை இருக்கிறது. எனவே, திருப்பூர் நகரில் ஒரு சப்-கோர்ட் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

THIRU K. M. SUBRAMANIAM : Hon'ble Chairman, Sir, I am confining my speech today to textiles, particularly handloom industry and mill industry. This small pamphlet gives an

idea that we are having 20 lakhs of people depending on them and 25 per cent of Indian handlooms are working in Tamil Nadu. Sir, according to the latest figures available the total production in mill cloth is 4,000 million yards or metres and total production of handloom is 2,300 million metres and total production in powerlooms is 800 million metres. Out of 2,400 million metres, Tamil Nadu is producing 30 to 32 million metres. Thirty-two million out of 2,000 million is not 25 per cent production at all. It is not even 12 or 13 per cent. It was so once upon a time during 1947 when total Indian production of handlooms was 700 million yards; then Madras was leading and then combined Madras was leading and producing nearly 25 per cent of total production. But things have advanced so much nowadays. Madras is lagging behind; at best you can say it is maintaining *status quo*. It is not improving nor has it increased production. That is what I want to say.

We have got sufficient cotton mills. Many cotton mills are getting closed. If handloom is prosperous, then yarn produced from cotton mills must be purchased by handloom industry. But there is glut in yarn availability. That shows that there is something tragically wrong somewhere which this Government has not been able to analyse. We are not able to compete with other handlooms in India. Of course it is very costly to establish a modern textile mill. You have to invest Rs. 1 crore and you can give work only to 1,000 people. If that one crore of rupees is invested in handloom industry, you can give work to 10,000 people. It is not as if textile mill production is lower than handloom industry cost. If it is correctly analysed I am sure that textiles produced by handlooms will be definitely cheaper than textile production of present-day mills, because the cost of present-day mills had gone very high. So, proper dynamic assistance should be given to the handloom industry. I do not want to go on repeating. Opening few shops in Calcutta, Bombay or Delhi is not going to improve matters. Calcutta people may buy. But what about the entire country?

Today actually there is more glut in cloth for windows and doors than cloth for human beings. There is more curtain cloth in the country. There is the availability in plenty of man-made fibres like terrycot and terelyne. There is such a demand for it. I find in Delhi many handloom industries have started producing' furnishing fabrics'. This Government should seriously con-

sider this. Cost of yarn has gone up. True. With yarn cost, handloom production cost also has gone up. But wage has not gone up. As I have said previously, the family wage of handloom sector was Rs. 48 in 1957 and today it is only Rs. 96. But in textile industry from Rs. 28 in 1947 it has increased to Rs. 300 per head in 1972. So it is not wage alone.

There is a curious phenomenon in handloom industry. How is it that master weavers are so rich but other weavers are becoming poorer and poorer in handloom sector? How is it that master weavers' houses in Kodumudi and Kumarapalayam have been recently raided? How they are so rich and how is it other weavers are so poor? There is something wrong and Government should find it out. If you purchase a saree, handloom saree, in Delhi it cost Rs. 75 or Rs. 80. Previously Madras was famous for two things, viz. iddli and handloom cloth. But now we have lost the place for handloom cloth. Our handloom production may have increased but population also has increased and mill production has increased to 4000 million metres. Unless you give something to handloom sector, there will be unemployment, actue unemployment among handloom weavers. I would request Government to consider this. Give four looms per head. Give electricity connection to those four looms. Make them powerlooms. In Germany there are not big mills producing 6000 to 7000 looms. They have mills with 60 looms. That means there is diversification and decentralisation of production. Let us also have that pattern. That will solve unemployment among handloom weavers. Assistance given to handloom industry is not properly utilised. During Deepavali season, what happens is, cloth given to primary societies is sold by the Director of the society to his next-door neighbour, a dealer at a higher price.

After Diwali, there is no demand and the price of cotton textiles falls down. There is plenty of cloth in the market. So many things are manipulated in these societies. I am sure that this good Government, this benign Government, this Government which is interested in handloom weavers-20 lakhs of people are employed in the industry-will go into the question and find out the reason for the poor working of the handloom industry today. Honestly, it should be the most profitable industry, if it is well-worked.

Now, coming to the Mill Industry, we are getting population increases every year, but the mills are being closed, for there is

no sales or for some other reason. What is the reason? Now, as soon as the mill is closed, the Government comes to its rescue. Why is the mill closed? Is it because of mismangement? Is it because of labour trouble? The easiest explanation given is that cotton prices are high. The second explanation is that labour is trouble some, labour is going slow. Is the management purchasing cotton correctly? Machinery is the management working correctly? Is the management purchasing spare parts correctly? Is the management above suspicion and corruption? This is what I want to know. I have been working in a mill for over 37 years. We cannot put the entire blame on labour or on cotton prices If we take the cotton price in 1938, when I joined the Mill, I was selling then at seven annas per yard. Now that is the same thing that is sold for Rs. 3.50. How is this increase has come about? What is the reason.

Now the Coimbatore Mills are closed. Why should Coimbatore mills management have a rest house at Coonoor at Adyar and at Bombay and at Coimbatore? Why four Guest Houses? Has the Government any machinery to find out why these mills are spending so much money on these Guest Houses? Who are the guests that are coming there? And then, what is the salary of the directors? I now an instance of course; now it is pegged by the Central Government and nobody can draw above Rs. 5,000 Even the most senior Secretary to Government in our Government draws only Rs. 3,000 and I think at the Centre, he will draw Rs. 4,000. I know a case where one of the Directors draws a sum of Rs. 12,000 per month, plus all amenities. What is the wonderful work he is doing? There should be some check.

Then take the interest charges. Every mill is borrowing at 10 per cent, 12 per cent, or even 15 per cent, How can any industry run at this rate of interest? Government has said that hereafter interest charge will be discretionary. I know one milll paying 5 per cent of its total sales as interest charges. How can the industry survive? So far as Government inspection is concerned. I know the department is doing very good work. But have they a techincal Assistant? A technical man to find out what is happening in these mills is not there. How is it one fine day one mill incurs a loss of Rs. 100 lakhs; next year it is 90 lakhs and the

third year it closes down. So, Sir, this textile industry needs very very careful handling. Once it is done, Tamil Nadu can beat anybody. The Tamil labourers are working in Ahamedabad, Kanpur etc. As a matter of fact, one of the mills here wanted very good workers. They went to Ahmedabad and recruited Tamil workers and brought them here. That is the type of Tamil workers. They are excellent in every way.

Last, but not the least, this Government is not aware that once upon a time the biggest tailoring industry was in Tamil Nadu. We produced the entire trousers needed and it was the best; more than 6000 or 7000 families were living on it. Today, we get all the trousers from Bombay and Calcutta and our tailoring business is sleeping. Once Madurai was leading in tailoring business; there were the Truthful Manufacturing Co. etc.

Our Government has blindly made superficial repetition of what was written last year, with slight alterations of figures. Is this a Report? This is not a report. A report should be truly dealing with what is happening today. This Government should devote much more attention and see that our tailors are once again put to their job. I can say from my experience that our tailors are the best and Bombay is taking away our tailors for manufacturing shirtings.

So, I think the Government will devote careful attention to see that Mills are not closed, that the handloom industry is run with profit. I hope the Government will consider my suggestions in this case. Thank you.

திரு. ஏ. கே. துரைசாமி: சட்டப் பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, தொழில் அமைச்சர் அவர்களால் கோரப்பட்டிருக்கிற தொழில் மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருததுக்கள் சிலவற்றைச் சொல்வதற்கு வாய்ப்பளித்ததற்கு நன்றியைத் தெரிவித்து, இந்த மானியத்தின் கீழ் கைத்தறித் தொழிலின் நிலையைப் பற்றி எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு கைத்தறி நெசவாளர்கள்பால் மிகுந்த அக்கறை கொண்ட அரசு என்பதை, இன்றல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்தையே தோற்றுவித்த பெருமகனார்—மதிப்பிற்குரிய முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள், எங்கள் இதய தெய்வம்—பல லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புடைய கைத்தறித்துணிகள் தேங்கி, மேற்கொண்டு நெசவாளர்களுக்கு வேலை கிடைக்காதிருந்த அந்த நாளில் கைத்தறித் துணிகளை தாமே

சுமந்து விற்றதை நாம் அறிவோம். இன்றைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும், அமைச்சரவையில் இருக்கிற மிகப் பெரும்பாலோர்களும் அன்றைக்கு அண்ணா தலைமையில் கைத்தறித் துணிகளை எல்லாம் சுமந்து விற்றதை இந்த நாடு நன்கு அறியும். நெசவாளர் சமுதாயம் அதற்கு என்றென்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது.

1966-67-ம் ஆண்டில் கைத்தறி நெசவாளர்களுடைய நலனுக்காக அந்த அரசு ரூ. 1.82 கோடி ஒதுக்கிற்று என்றால் இன்றைக்கு 1972-73-ம் ஆண்டில் நமது முதல் அமைச்சர் அவர்கள் 2.34 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதற்கு மகிழ்கிறோம். உள்ளபடியே அந்தச் சமுதாயத்தின் பேரில் இந்த அரசுக்கு இருக்கிற அக்கறையை இது எடுத்துக்காட்டுவதாக இருக்கிறது. நெசவாளர்களுக்கு இன்றைய தினம் கிடைத்து வருகிற கூலிகள் அவர்களிடையே நிம்மதியற்ற நிலையை உண்டாக்குகிறது என்பதை உணர்ந்து ஓரளவு அவர்களுக்கு குறைந்த பட்ச கூலியை நிர்ணயிக்க வேண்டும் என்கிற அடிப்படையில் குறைந்த பட்ச ஊதியக் குழுவை நிர்ணயித்திருப்பதும், அதன் சிபார்சு அடிப்படையில் அந்தச் சமுதாயத்திற்கு பல நல்ல திட்டங்களை ஏற்படுத்தவும் அரசு முன் வந்திருப்பது மிகப் பெரிதும் பாராட்டுதற்குரியதாகும். "செய்யும் தொழில் எல்லாம் நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை" என்று மதிக்கப்பட்ட நெசவுத் தொழில் இன்று நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக நசித்து வருகிறது என்பதை சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை. இன்றைக்கு கைநெசவுத் தொழிலாளர்களுக்கு மாதம் 75 ரூபாயில் இருந்து 100 ரூபாய்க்கு மேல் வருமானம் வரவில்லை. எனவே, தங்களோடு இந்நிலை போகட்டும் தங்கள் குழந்தைகள் இந்தத் தொழிலுக்கு வரவேண்டாம் என்றே பலரும் நினைக்கிறார்கள். இன்றைக்கு அரசாங்கம் கைத்தறி நெசவாளர்களைக் காக்க வேண்டும் என்கிற அடிப்படையில்—கூட்டுறவு சங்கங்களை அமைத்து பல லட்சக்கணக்கான ரூபாய்களை வழங்கி ஆண்டுதோறும் உற்பத்தி செய்யப் படுகிற துணிகளுக்கு தீபாவளி பொங்கல் போன்ற பண்டிகையையொட்டி ரிபேட் ஆண்டுக்கு 85 நாட்களுக்குக் கொடுத்தும் வருகிறார்கள் என்றாலும் இன்றைய தினம் 20 லட்சம் கைத்தறி நெசவாளர்கள் இந்தியாவில் இருக்கிறார்கள் என்றால் அவற்றில் 5½ லட்சம் தறிகள் தமிழ்நாட்டில் உள்ளன. அதில் 1.60 லட்சம் நெசவாளர்கள்தான் கூட்டுறவுத் துறையில் வருகிறார்கள் என்பதை காணும்போது மற்றவர்கள் நிலை என்ன?

எனவேதான் இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கின்ற மொத்த நெசவாளர்களோடு, நமது மாநிலத்தில் இருக்கிற நெசவாளர்களை ஒப்பிடுகிறபோது, 100-க்கு 75 சதவீதம் தமிழகத்தில்தான் இருக்கிறார்கள் என்பது தெளிவாக தெரிகிறது. அரசாங்கம் போடுகிற நல்ல திட்டங்கள் எல்லாம் பெரும்

பான்மையான அளவில் இருக்கின்ற இந்த மக்களுக்கு நன்மைகள் அளிப்பதற்கான சரியான நிலையை அரசு உருவாக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நெசவாளர்களுக்கெல்லாம் நீண்ட கால—அதாவது 20 ஆண்டுக்கால—அடிப்படையில் தவணை அடிப்படையில் திருப்பிச் செலுத்துகின்ற முறையில் தறி ஒன்றுக்கு 250 ரூபாய் வீதம் குறைந்த பட்ச வட்டிக்குப் பணம் கொடுத்து உதவினால், மாஸ்டர் வீவர்களிடம் சிக்கிக்கொண்டிருப்பவர்கள் அவர்களிடமிருந்து விடுபட வழி பிறக்கும். அவர்களை எல்லாம் கூட்டுறவுச் சங்கத்தில் இணைப்பதன் மூலமாக அவர்களுக்குக் குறைந்த பட்ச கூலி இவ்வளவு என்று வரையறுக்கப்படுகின்ற நிலையை ஏற்படுத்த முயற்சி செய்யவேண்டும். இதனை பரீட்சார்த்த திட்டமாக எடுத்துக்கொண்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு இடத்தில் இந்த மாதிரி கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்தி, இந்தத் திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய தினம் நெசவாளர்களுக்கு, திரு. சு. துரைசாமி அவர்கள் குறிப்பிட்டதுபோல், விசைத் தறிகளை மிகப் பெரிய அளவுக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். இங்கே உற்பத்தி செய்யப்படுகிற நூல் வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு துணியாக நெய்யப்படுகிறது. உற்பத்தி செய்யப்படுகிற நூலை வெளிமாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்வதைத் தவிர்த்து, இங்கேயே விசைத்தறிகளின்மூலமாக துணியாக நெய்யலாம். இப்போது கைத்தறியினால் நெய்யப்படும்போது கிடைக்கக்கூடிய வருமானத்தை விட இரண்டு மடங்கு, மூன்று மடங்கு வருவாயைத் தேடக்கூடிய வகையில் விசைத் தறிகளைக் கொண்டு வரவேண்டும். வட ஆர்க்காடு மாவட்டம் லட்சக்கணக்கான நெசவாளர்களைக் கொண்ட பகுதியாக இருக்கிறது என்றாலும் அங்கே பவர் லூம்ஸ் அதிகமாக இடம் பெறவில்லை. இதைக் கருத்திற்கொண்டு, இது வரை பவர் லூம்ஸ் பயன்படுத்தப்படாத வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு ஒரு தனிச்சலுகை வழங்கி, விசைத்தறிகளைத் தருவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குக் கைத்தறியை ஏற்றுமதி செய்யப்படுவதில் பல ரகங்களை ஏற்றுமதி செய்கிறோம். சில ஆண்டுகளுக்கு முன்னால் வண்ணம் மாறும் துணி என்று சொல்லக்கூடிய "பிளீடிங் மெட்ராஸ்" என்ற ரகத் துணியை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்வதை அரசாங்கம் அறியும், நாம் அனைவரும் அறிவோம். தமிழ்நாட்டில் 40, 50 ஏற்றுமதியாளர்கள்தான் வெளிநாடுகளுக்கு கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்ததன் வாயிலாக அவர்கள் அதிக அளவில் வருமானம் பெறுவதற்கு வாய்ப்பாக இருந்ததே தவிர, துணியை உற்பத்தி செய்யக் காரணமாக இருந்தவர்கள் எல்லாம் பல்வேறு நிலைகளில், பல்வேறு

விதமான தொல்லைகளுக்கு ஆளானார்கள் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்டுகிறேன். நெசவாளர்கள் உற்பத்தி செய்கிற துணிகளுக்கு நல்ல மார்க்கெட்டுகளைத் தமிழ்நாடு தற்போது இழந்திருக்கிறது.

இந்தியத் துணைக் கண்டத்தோடு இணைந்திருந்த பர்மா, இலங்கை ஆகியவை பிரிந்து தனி நாடுகளான பின்னர், அந்த நாடுகளிலுள்ள மார்க்கெட்டை கைத்தறியாளர்கள் இழந்திருக்கிறார்கள். 1947-ம் ஆண்டு வரை இந்தியத் துணைக் கண்டத்தோடு இணைந்திருந்த பாகிஸ்தானின் பத்து கோடி மக்கள் கொண்ட மார்க்கெட்டை நாம் இப்போது இழந்திருக்கிறோம். இப்படி மார்க்கெட்டுகளை இழந்திருக்கும் நேரத்தில் எல்லாம் நெசவாளர்களுக்குச் சொல்லொணாக் கொடுமைகள் ஏற்பட்டன. பல்வேறு துன்பங்களுக்கு நெசவாளர்கள் ஆளானார்கள். இன்றைய தினம் புதிதாக உதயமாகியிருக்கிற 7 கோடி மக்களைக் கொண்டிருக்கிற, இந்திய அரசோடு நல்லெண்ணத்தின் அடிப்படையில் இருந்து வருகிற வங்க தேசம் நமக்கு ஆதரவு தரும் என்று எதிர்பார்க்கிறோம். குறிப்பாக வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் தயாரிக்கப்படுகின்ற லுங்கிகள் பெரும்பாலும் வங்க தேச மக்களால் பெரிதும் விரும்பி வாங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் ஏராளமாக உற்பத்தியாகின்ற கைத்தறித் துணிகளுக்கு வங்க தேசத்தில் எதிர்காலத்தில் நல்ல மார்க்கெட் கிடைக்க இருக்கிறது. குறிப்பாக நமது அரசு, 'மத்திய அரசாங்கத்தின் பொறுப்பில் அது இருக்கிறது' என்று சொன்னாலும், நெசவாளர் பிரச்சினையைத் தீர்க்க நல்ல வழிமுறைகளைக் கையாள வேண்டும். இந்தத் துணிகளை உற்பத்தி செய்கின்ற மாஸ்டர் வீவர்களெல்லாம் ஒருங்கிணைந்த முறையில் ஒரு கூட்டு முயற்சியாக, கார்ப்பொரேஷன் ஒன்றை அமைத்து அதன் மூலம் ஏற்றுமதிக்கான வழிவகைகளைக் காண வேண்டும். வங்க தேசத்திற்கு அதிகமான அளவில் ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர வேண்டும். குறிப்பாக, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களும், கைத்தறி நெசவாளர்களின் வாழ்விலே நல்ல வளம் ஏற்படுத்துவார்கள் என்று நம்பிக் கொண்டிருக்கிறார்கள், நாடும் நம்பிக்கை கொண்டிருக்கிறது. கைத்தறி நெசவாளர்களுக்கான நல்ல காரியங்களை உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

1972 மார்ச் 14] [திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்]

இந்தப் பேரவையில் பேசிய பெருமைக்குரிய அங்கத்தினர்கள் தொழில் வளர்ச்சியைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். ஒரு நாடு தொழில் துறையில் வளர வில்லை யென்றால், அந்த நாடு முன்னேறிற்று என்று சொல்ல இயலாது. நம்முடைய நாட்டினுடைய நிலைமை தொழில் இல்லாமைதான். தொழில் இல்லாமைதான் அதிகத் தவறுகளுக்குக் காரணமாக இருக்கிறது என்று கூற வேண்டும். இன்றைய தினம் நாம் பார்த்தால், ஜெயிலுக்குப் போயிருக்கிறவர்கள், நம்மிலிருந்து பிரித்து வைக்கப்பட்டிருப்பவர்கள் எல்லாம் சந்தர்ப்பச் சூழ்நிலையினால்தான் பல குற்றங்களை இழைத்திருக்கிறார்கள். பெரும்பகுதியானவர்கள் திருட்டுக் குற்றங்களைச் செய்தவர்களாக இருக்கிறார்கள். திருட்டுக் குற்றங்களைச் செய்தவர்களைத் தனியாகச் சந்தித்து, தனியாக அணுகி, அல்லது தண்டனை பெற்று திரும்பி வந்த பிறகு அவர்களைக் கேட்டால், வறுமையின் காரணமாக, தொழில் இல்லாத காரணமாக, குடும்பம் பட்டினி கிடப்பதால தான் இந்தக் குற்றத்தைச் செய்தேன் என்று ஒவ்வொருவரும் சொல்வதைக் கேட்பீர்கள். இம்மாதிரியான சூழ்நிலை வளருவதற்குத் தொழில் இல்லாமைதான் காரணம். இதை வளர்க்க சர்க்கார் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பெருமைக்குரியவை, பாராட்டுதற்குரியவை என்றாலும், இன்னும் அதிகமான முன்னேற்றத்தைச் செய்ய வேண்டும்.

நண்பர் துரைசாமி அவர்கள், "நூல் இங்கே தயாராகிறது, துணி எங்கேயோ தயாராகிறது, சாயம் எங்கோ போடப்படுகிறது, மார்க்கெட் எங்கோ இருக்கிறது" என்று குறிப்பிட்டார்கள். இந்த நிலைமையினால் நம் மாநிலத்தின் தொழில் வளம் நசுக்கப்படுகிறது. நூல் இங்கே தயாரிக்கப்படுகிறபோது, அதை இங்கேயே துணியாக நெய்து, இங்கேயே அச்சிட்டு விற்பனை செய்வதற்குரிய மார்க்கெட்டுகளை நாம் உண்டாக்கினால் தொழில் வளரும் என்பதை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இன்னொன்றைப் பற்றிச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்மால் ஒதுக்கப்பட்ட ஒரு கூட்டத்தைப்பற்றி நாம் சிந்திப்பதே இல்லை. குற்றவாளிகள், ஜெயிலில் இருப்பவர்களைப்பற்றி நாம் சிந்திப்பதில்லை. குற்றம் செய்ததால் தான் அவர்கள் ஜெயிலுக்குப் போகிறார்கள். குற்றம் பல காரணங்களால் செய்யப்படுகிறது. இந்தப் பேரவையில்கூட ஜெயிலுக்குப் போனவர்கள் பல பேர் இருக்கலாம்; இன்னும் போக வேண்டியும் இருக்கலாம். நானும்கூட ஜெயிலுக்குப் போயிருக்கிறேன். சந்தர்ப்பச் சூழ்நிலைதான் ஒரு மனிதனை ஜெயிலுக்கு அனுப்புகிறது.

திரு. கே. எம். சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே கனம் அங்கத்தினர் அவர்கள் பொலிடிகல் விஷயங்கள் பற்றிப் பேசுகிறார்களா, நிதிக் கோரிக்கையின்மீது பேசுகிறார்களா, அல்லது வேறு விஷயத்தைப்பற்றிப் பேசுகிறார்களா?

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்: நான் மானப் பிரச்சினையைப்பற்றிப் பேசுகிறேன். மானப் பிர்ச்சனை பாதிக்கப்படுகிறபோது, மனிதன் சில தவறுகளைச் செய்து விடுகிறான். மானம் வரும்போது மனிதன் தன் நிலையிலிருந்து மாறிவிடுவதால் குற்றம் இழைக்கும்படியாகி விடுகிறது. அரசியல் காரணங்களாலும், தொழில் காரணங்களாலும் தவறுகள் ஏற்படுகின்றன. அதன் காரணமாக அந்தச் சமூகம் அழிவு பெற்று வருகிறது.

ஜெயிலில் இருக்கும் சமூகத்தைக் காப்பாற்ற வேண்டுமானால், அதற்குரிய வழிவகைகளை வெளியே இருப்பவர்கள் செய்ய வேண்டும். அவர்களை இரு வகையாகப் பிரிக்கலாம். திட்டப்பட்டு குற்றம் செய்தவர், பரம்பரையாகக் குற்றம் செய்தவர் என்று பிரிக்கலாம். திடீர் என்று செய்யப்படும் குற்றங்கள்தாம் அதிகமாக இருக்கின்றன. அதனால்தான் அவர்கள் சிறையில் போயிருக்கிறார்கள். அவர்களைச் சட்டத்தின் துணைக்கொண்டு சிறையில் வைத்திருக்கிறோம். அங்கேயே ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தி, அவர்களை ஏதாவது ஒரு தொழிலில் ஈடுபடுத்த வேண்டும். அவர்கள் தண்டனைக் காலம் முடிந்து வெளியே வருகிறபோது, தொழிலில் முன்னேற்றம் அடைந்தவர்களாக நல்ல ஒழுக்கம் பெற்றவர்களாக வெளியே வர வேண்டும்.

இந்தப் பேரவையிலே உள்ள உறுப்பினர்கள் ஜெயிலுக்குள்ளே செல்ல அனுமதிக்கப்பட வேண்டும். ஜெயிலுக்குள்ளே இருப்பவர்களுக்கு நல்ல போதனை செய்ய வேண்டும், குற்றங்கள் செய்த காரணங்களைக் கேட்டறிய வேண்டும், எந்த அடிப்படையிலே அவர்கள் குற்றங்கள் செய்தார்கள் என்பதை புரிந்துகொள்ள வேண்டும், குற்றங்கள் செய்தால் என்ன என்ன தண்டனைகள் அளிக்கப்படும் என்பதை அவர்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டும். கொலைக் குற்றவாளிகளைச் சந்திக்க சர்க்கார் என்னை அனுமதிக்குமானால், ஏன் குற்றங்களைச் செய்தார்கள், என்ன என்ன காரணங்களினால் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை அறிந்து அவர்களுக்கு நல்ல பாடத்தைப் போதித்து நல்லுபதேசத்தைச் செய்ய வேண்டுமென்று கருதுகிறேன்.

திருட்டுக் குற்றங்கள் செய்தவர்கள் இருக்கிறார்கள், அவர்கள் என்ன என்ன காரணங்களினால் குற்றங்களைச் செய்தார்கள் என்ற அடிப்படையை அறிந்து கொண்டு உள்ளே அல்ல, வெளியே மறுபடியும் குற்றங்கள் நிகழாதபடி இனியும் ஜெயிலுக்குப் போகாதபடி அவர்களை நல்லவர்களாக்கக்கூடிய வகையில் தொழில்களை அமைத்துக் கொடுக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

நான் ஒன்று கேள்விப்பட்டேன், எவ்வளவு உண்மையானது அது என்பது எனக்குத் தெரியாது. வசதியுள்ளவர்கள் ஜெயிலுக்குப் போனால் அங்கே வசதியாக இருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். நான் ஜெயிலுக்குப் போனேன், எனக்கு அப்படி வசதியில்லை. மற்றவர்களுக்கு அப்படிப்பட்ட

வசதிகள் இல்லை, சாதாரணமானவன் போக நேரிட்டால் அவன் துண்டுபீடி பொறுக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இது மிகவும் பரிதாபத்திற்குரிய நிலைமை. அப்படிப்பட்ட நிலைமைகளை மாற்ற வேண்டும். அவர்கள் வெளியே வரும் பொழுது சமுதாயத்திலிருந்து பிரித்து வைக்கக்கூடிய நிலைமை இல்லாமல், அவர்களுக்குத் தொழிற்சாலைகள் அமைத்துக் கொடுத்து அவர்கள் எந்த எந்தத் துறைகளிலே பாண்டித்யம் பெற்றவர்களாக இருக்கிறார்களோ எந்த எந்தத் துறைகளிலே அனுபவம் உள்ளவர்களாக இருக்கிறார்களோ அந்த அந்தத் துறைகளிலே வாய்ப்பு அளிக்கவேண்டும். ஜெயிலுக்கு உள்ளே இருக்கிற வேலைகள் மட்டுமல்ல, ஒருவன் கணக்குப் பிள்ளை என்றால் அவன் ஏதாவது குற்றம் செய்துவிட்டால் அவன் மண் சுமக்க வேண்டியதில்லை, கணக்குப்பிள்ளை வேலையே கொடுக்கலாம். தொழில் செய்கிறவனாக இருந்தால் தொழில் செய்ய வேண்டும், பீடித் தொழில் செய்கிறவனாக இருந்தால் உள்ளேயும் பீடித் தொழில் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இப்படிப்பட்ட தொழில் களைக் கொடுத்து அவர்கள் வெளியே வரும்பொழுது தொழில்களையும் கற்றுக் கொண்டு வருவாயிலே ஒரு பங்கும் கொடுத்து வெளியே புத்தியுள்ளவனாக, அறிவு உள்ளவனாக, சமுதாயத்திலே புறக்கணிக்கப்படாதவனாக, சமுதாயம் ஏற்றுக்கொள்ளக்கூடியவனாக வரக்கூடிய முறையிலே ஜெயிலுக்குள்ளே பாடங் கள் போதித்து பள்ளிக்கூடங்கள் நடத்தி, தொழில்கள் நடத்தி வெளியே வந்த வுடன் வேலைகள் பார்க்கக்கூடிய நிலைமையை உண்டாக்க வேண்டும்.

ஜெயிலுக்குள்ளே நடத்தப்படுகிற கொடுமைகள், நான் பார்த்திருக்கிறேன், மனிதாபிமானத்தோடு நடத்தப்படவில்லை. மிகக் கொடூரமாக நடத்தப்படு கிறார்கள். எதற்காக அவர்கள் அப்படி நடத்தப்படுகிறார்களோ தெரிய வில்லை. என்னுடைய நண்பர் ஒருவர் அரசியல் கைதியாக இருக்கும்பொழுது இரவிலே அவருக்கு மூத்திர அடைப்பு நோய் வந்து விட்டது. அவரை யாரும் கவனிக்காத நிலையிலே ஒரு நாள் பூராவும் அவர் கஷ்டப்பட்டிருக்கிறார். அவரை நமக்குத் தெரியும், மடாதிபதி போன்று துண்டு போட்டுக் கொண்டு வருவார். திரு. பீர்முஹம்மது அவர்கள், இரவு முழுவதும் இறைவனே, இறை வனே, இறைவனே, இறைவனே, ஆண்டவனே, ஆண்டவனே, ஆண்டவனே, ஆண்டவனே என்று கத்திக் கொண்டிருந்திருக்கிறார்கள். காலை வரையிலும் கேட் பாரற்று இருந்திருக்கிறார். ஜெயிலின் பயங்கரமான கதவுகள் சாத்தப்பட்டு விட்டால், விடியும் வரையில் என்ன நிலைமை என்று கேட்கப்படுவதில்லை. நான் தெரிவித்துக் கொள்வது என்னவென்றால் ஒரு டாக்டர் அங்கே இருக்கக்கூடிய நிலைமையும், ஜெயில் வார்டர்கள் அங்கே இரவு பூராவும் சுற்றிப் பார்க்கக்கூடிய நிலைமையும் கொண்டுவர வேண்டும். ஒருவர் எந்தக் கஷ்டத்தினால் துன்புற்றுக் கொண்டிருக்கிறார் என்று அறிவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். எப்பொழுது என்று அமைச்சர் அவர்கள் கேட்கிறார்கள். அது பாகிஸ்தான்

போர் நடந்தபோது, சமீபத்திலே நடந்த போர் அல்ல, முன்னாலே—அமைச்சர் அவர்கள் கேட்கிற காரணத்தை நான் புரிந்து கொண்டேன்—அம்மாதிரி ஒருவரை வைத்திருந்தார்கள். அப்படிப்பட்ட நிலைமை மறுபடியும் நிகழாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

ஜெயிலுக்கு என்னை அனுப்புங்கள், குற்றவாளியாக அல்ல, அவர்களுக்கு அறிவுரைகள் கூறுவதற்காக, ஒரு முறை கொலைக் குற்றம் செய்தவர்கள், ஒரு முறை திருட்டுக் குற்றம் செய்தவர்கள், ஒரு முறை சில்லரைக் குற்றங்கள் செய்தவர்களைச் சந்திப்பதற்கும் உரையாடுவதற்கும் பேசுவதற்கும் அவர்கள் என்ன என்ன காரணங்களினால் சென்றார்கள், குற்றம் செய்தார்கள் என்று அறிவதற்கும் அவர்களைத் திருத்துவதற்கும் பொதுமக்களுக்கு எடுத்துச் சொல்வதற்கும் சமூகத்திலே அவர்கள்பால் என்ன கருணை காட்ட வேண்டுமென்று சொல்வதற்கும் சர்க்கார் என்னை அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நான் சிறைச்சாலைகள் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பிறகு எல்லா சட்ட மன்ற அங்கத்தினர்களும் முன்னறிவிப்புக் கொடுத்துவிட்டுச் செல்லலாம் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்: நான் கேட்பது அதுவல்ல. நீங்கள் போகலாம் என்று ஸ்பெஷல் அதிகாரம் கொடுக்கலாம். முன்னாலேயே கேட்டுக் கொண்டு . . .

மாண்புமிகு திரு. செ. மாதவன்: யாரையும் கேட்கவேண்டாம். தாங்கள் எம்.எல்.ஏ. என்று எழுதிவிட்டுச் சென்றாலே அவர்கள் அனுமதிப்பார்கள்.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்: சமுதாயத்திலே அவர்கள் மேலும் வளராதபடி ஒரு சூழ்நிலையை ஜெயிலிலே உண்டாக்க வேண்டும். ஜெயிலை ஒரு தொழிற்சாலையாக்க வேண்டும், ஜெயிலை ஒரு பள்ளிக்கூடமாக ஆக்க வேண்டும். ஜெயிலை ஒரு நேர்மையான பாடத்திட்டம் கொடுக்கும் இடமாக மாற்ற வேண்டும்.

அங்கே சோளக் கஞ்சி கொடுக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். வாஸ்தவமாகவே வாழ்க்கையிலே ஒரு தடவைகூட சோளக்கஞ்சி குடிக்காதவர்கள் எல்லாம் குடிக்கக்கூடிய நிலைமை. உடம்புக்கு நல்லது என்று ஹெல்த் மினிஸ்டர் அவர்கள் சொல்கிறார்கள். ராகிகூட உடம்புக்கு நல்லதுதான். என் தலையில்

இருக்கிறது, நான் ராகி சாப்பிடுகிறேன். ஆனால் உண்ணும்பொழுது நான் படுகிற பாடு எனக்கல்லவா தெரியும், பாயாசமல்ல, பாஷாணத்தை முழுங்குவதுபோல் இருக்கிறது. அதையும் மனிதாபிமானத்தோடு மாற்றி அரிசிக் கஞ்சி கொடுக்கலாம் . . .

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, நாட்டிலே மக்கள் வெறும் அரிசிக் கஞ்சி சாப்பிடுவதாலே பல்வேறு நோய்களுக்கு ஆளாகிறார்கள். எனவே கலப்பு உணவும் சீருணவும் உண்ண வேண்டுமென்று பிரச்சாரம் செய்யப்படுகிறது. சிறைச்சாலையிலும் ஒருவேளை அரிசி உணவு கொடுக்கிறார்கள், மற்ற நேரங்களிலே வேறு உணவு கொடுக்கிறார்கள். அந்த முறை மிகச் சிறந்த சத்துள்ள உணவு என்ற அடிப்படையிலேதான் வழங்கப்படுகிறது.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் : மிக்க நன்றி. அவர்களுக்கு சத்துள்ள உணவு என்ற அடிப்படையிலே அப்படிக் கொடுப்பார்களானால் அதை நான் வரவேற்கிறேன்.

நான் பேச்சை முடிக்கலாம் என்று கருதுகிறேன். ஒன்றை மட்டும் சொல்ல நினைக்கிறேன். ஜெயில் ஒரு தொழிற்சாலையாக வேண்டும், ஒரு பல்கலைக் கழகமாக வேண்டும்—பல்கலைக் கழகம் என்றால்—பல துறைகளிலும் பாடம் பெறுகின்ற இடம். அவர்களிடையே அறிவு வளரக்கூடிய முறையிலே, நேர்மை வளரக்கூடிய முறையிலே, சத்தியம் வளரக்கூடிய முறையிலே, நியாயம் வளரக் கூடிய முறையிலே, உண்மை வளரக்கூடிய முறையிலே, புனிதமான எண்ணங்கள் வளரக்கூடிய முறையிலே திட்டங்களை வகுக்கச் சர்க்கார் முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி : தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்புக் கிடைத்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலாவதாக கைத்தறித் தொழில் பற்றிச் சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இப்பொழுது சுமார் 12,500 பவர் லூம்ஸ், விசைத்தறிகள் நம்முடைய தமிழகத்திற்கு ஒதுக்கி இருக்கிறார்கள். கொஞ்சம் கொஞ்சமாகத் தமிழகத்திலே இருக்கக்கூடிய எல்லாக் கைத்தறியாளர்களுக்கும் விநியோகம் செய்வதற்கு சர்க்கார் ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள்.

அதிலே நான் ஒரு கருத்தை வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன். கைத்தறித் தொழிலாளர்களைப்பற்றி எனக்கு முன்னால் பேசியவர்களில் பலர் குறிப்பிட்டார்கள். மிகவும் ஏழ்மையாக, அதுவும் நம்முடைய தமிழகத்திலேயிருக்

கும் எல்லாத் தொழிலாளிகளுக்கும் இருக்கும் வருவாயைவிடக் குறைந்த வருவாயைப் பெறக் கூடியவர்கள் நம் கைத்தறித் தொழிலாளர்கள். அத்தகைய தொழிலாளிகள் 4.000 ரூபாய் அல்லது 5,000 ரூபாய் முதலீடு செய்து ஒரு விசைத்தறியை தன் குடும்பத்திற்கு வாங்கிப் பயன்படுத்துவது என்பது மிகவும் முடியாத காரியம். நானே பார்த்திருக்கிறேன். இப்பொழுது சுமார் 3,800 விசைத்தறிகள் நம்முடைய தமிழகத்திலே தனிப்பட்டவர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது. அதில் உண்மையாகவே கைத்தறித் தொழிலாளர் களுக்கு எத்தனை தறிகள் போய் இருக்கிறது என்று பார்த்தால் ஒரு தறிகூடப் போய்ச் சேர்ந்திருக்காது என்று கருதுகிறேன். ஏனென்றால் கைத்தறித் தொழிலாளர்கள் 4,000, 5,000 என்று முதலீடு செய்ய முடியாது, ஏனென்றால் 100 ரூபாய்கூட மீதம் பார்க்க முடியாத கைத்தறித் தொழிலாளர்கள் தமிழகத் திலே எங்கும் இருக்கிறார்கள். இந்த நிலையில் இந்த விசைத்தறிகளை அவர்கள் வாங்க முடியுமா என்பதைத்தான் நான் இந்த நேரத்தில் கேட்க ஆசைப்படு கிறேன். அதற்காகத்தான், இவ்வளவு ஏழ்மையாக இருக்கும் கைத்தறித் தொழிலாளர்களுக்கு விசைத்தறி பயன்பட வேண்டுமென்பதற்காக, இதை ஒரு மாற்றுத் தொழிலாக அங்கீகரித்து அவர்களுக்கு அதிக வருவாய், ஊதியம் கிடைக்கும் முறையில் இதைப் பயன்படுத்த வேண்டுமென்று நினைக்கும் பொழுது நாம் அதை மாஸ்டர் வீவர்ஸ், பணக்காரர்கள் அல்லது இதையே தொழிலாக நடத்தும் பணக்காரர்களுக்குத்தான் அந்தக் கருவிகள் போய்ச் சேருகின்றனவே தவிர, சாதாரண ஏழைத் தொழிலாளர்களுக்குக் கிடைப்ப தில்லை. ஆகவே நான் சர்க்காருக்கு ஒரு யோசனையைக் கூறி அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதாவது இப்பொழுது இன்டஸ்ட்ரியல் விவர்ஸ் கோவாப்பரேட்டிவ் சொசைட்டிஸ் பலயிடங்களில் இருக்கின்றன. அருப்புக்கோட்டையில்கூட ஒன்று இருக்கிறது. அதன்மூலம் நெசவு செய்யும் வேஷ்டிகள், இன்னும் மற்றவைகள் மிகவும் தரமாக இருக்கின்றன.

(திரு. செ. கந்தப்பன்—தலைமை)

அதற்கு எப்பொழுதும் நல்ல மார்க்கெட் இருக்கிறது. கிடைக்கும் வருவாயும் தாராளமாக நல்ல முறையில் இருக்கிறது. அதைப்போல விசைத்தறிகளைப் பொறுத்த வரையிலும் பவர்லூம் இண்டஸ்ட்ரியல் வீவர்ஸ் கோவாப்பரேட்டிவ் சொசைடிஸ் என்று ஏற்படுத்தினால் அதன்மூலம் அந்தப் பிரயோசனம் உண்மையாகவே சாதாரண நெசவாளர்களுக்குப் போகும். இல்லையென்றால் இப்படிப்பட்ட நெசவாளர்களுக்கு இந்தப் பயன் கிடைக்காது. ஆகவே, இத்தகைய பவர்லூம் இண்டஸ்ட்ரியல் வீவர்ஸ் கோவாப்பரேட்டிவ் சொசைட்டி களை இந்தத் தொழிலையே முக்கியமாக நம்பியிருக்கும் மக்கள் எந்த ஊரில் அதிகமாக இருக்கிறார்களோ அங்கே யெல்லாம் இத்தகைய சொசைட்டிகளை ஏற்படுத்த அரசாங்கம் முனைந்து செயல்படுத்த வேண்டுமென்ற என்னுடைய

கருத்தை வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன். இல்லை யென்றால் நாம் இந்தக் கொள்கையின் மூலமாக விசைத்தறிகளைப் புகுத்தி அதன் மூலம் கைத்தறி நெசவாளர்களுக்கு அதிகப் பயனைக் கொடுக்க வேண்டுமென்ற நம்முடைய கொள்கை நிச்சயமாக நிறைவேறாமல் போகும். இப்பொழுதுதான் இதை ஆலோசனைக்கு எடுத்துக் கொண்டு புகுத்தும் நேரத்தில், 3,800 விசைத்தறிகள் தான் நாம் இப்பொழுது கொடுத்திருக்கிறோம். இன்னும் பாக்கியிருக்கும் தறிகள் எவ்வளவோ இருக்கின்றன. இவைகளிலே கோவாப்பரேட்டிவ் சொசைடிகளுக்குக் கொடுக்கும் தறிகள் போக மற்றவற்றை யெல்லாம் அந்தந்த நகரங்களிலே பவர்லூம் இண்டஸ்ட்ரியல் வீவர்ஸ் கோவாப்பரேட்டிவ் சொசைட்டிகளை ஏற்படுத்தி இந்த விநியோகத்தை அந்த முறையில் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கைத்தறியைப் பொறுத்தவரையில் எனக்கு முன்னால் பேசிய பலரும் தங்கள் கருத்துக்களைச் சொன்னார்கள். ஒரு அங்கத்தினர் அவர்கள் இந்த விலையேற்றத்தின் காரணமாக கைத்தறித் தொழில் பாதிக்கப்படுகிறது என்று கூறப்படுவதை ஒத்துக்கொள்ள முடியாது என்று சொன்னார்கள். நான் ஆரம்பத்தில், பட்ஜெட் விவாதத்தில் பேசியபொழுது ஒரு கருத்தைக் கூறினேன். இந்தத் தொழிலுக்கு வேண்டிய 'ரா மெட்டிரியல்ஸ்', யார்ன், எந்த நூலாக இருந்தாலும், பருத்தி நூலாகயிருந்தாலும் சரி, பட்டு நூலாகயிருந்தாலும் சரி, சிந்தடிக் ஃபைபர், ஸ்டேபிள் ஃபைபர் எதுவாகயிருந்தாலும் சரி, இந்த ரா-மெட்டிரியல்ஸ், கெமிகல்ஸ் போன்றவைகள் எப்பொழுதுமே நிச்சயிக்கப்பட்ட விலைக்கு ஃபேர் பிரைசில், ஸடெபிலைஸ்ட் பிரைசில் இதுவரைக்கும் நீண்ட காலந் தொட்டு அவர்களுக்குக் கிடைப்பதேயில்லை. அத்தியாவசியமான உணவுப் பொருள்கள் நம்முடைய மக்களுக்கு நியாயமான விலையில் கிடைக்க நாம் ஆங்காங்கே நியாய விலைக் கடைகளை ஏற்படுத்தியிருக்கிறோம். வேண்டிய நேரத்தில் அதிகப்படியான உணவுப் பொருள்களை வாங்கி வைத்துக் கொண்டு விலையேற்றம் ஏற்பட்டால் நாம் நியாயமான விலைக்குக் கொடுக்கிறோம்.

ஆகவே, கைத்தறித் தொழிலாளர்களுக்கு நாம் எந்த உதவியைச் செய்தாலும், செய்யாவிட்டாலும் முக்கியமாக இதை ஒன்றை மட்டும் செய்ய வேண்டுமென்பதற்காகவே நான் இதையே மீண்டும் வற்புறுத்த ஆசைப்படுகிறேன். அதாவது, இந்தத் தொழிலுக்கு வேண்டிய ரா மெட்டிரியல்ஸ் நியாயமான விலையில் கிடைக்கின்ற ஏற்பாட்டைச் செய்ய அரசாங்கம் முன் வரவேண்டும். அதற்காக ஒரு யோசனையைக் குறிப்பிட்டேன். எப்படி சிவில் சப்ளைஸ் கார்ப்பொரேஷன் மூலம் உணவுப் பொருள்களைச் சேமித்து, விலை உயரும் காலத்தில் நியாயமான விலைக்குக் கொடுக்க ஏற்படுத்தி இருக்கிறோமோ அதைப் போல் இதற்கும் ஒரு கார்ப்பரேஷன் ஏற்படுத்த வேண்டும். அதன் முக்கிய

பணியாக நூல்களையும், கெமிக்கல்ஸ்சையும், கைத்தறிக்கு வேண்டிய ரா மெட்டிரியல்ஸ் போன்றவைகளையும் வைத்துக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்து விலையேறுகின்ற காலத்தில் நாம் அவைகளை மார்க்கெட்டிற்குக் கொண்டு வந்து எப்பொழுதுமே நிச்சயமாக இந்த விலைக்கு மேல் போகாது என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் கைத்தறித் தொழிலாளர்களும், கோவாப்பரேட்டிவ் சொசைட்டிகளும், தாங்கள் தயாரிக்கும் ஒரு சேலையின் அடக்கம் இவ்வளவுதான் இருக்க முடியும் என்பதற்கு ஒரு நிர்ணயம் வைத்துக் கொள்ள முடியும். அதற்குமேல் லாபம் இவ்வளவு இருக்க வேண்டுமென்று நிர்ணயம் செய்து கொண்டு, தொழிலாளர்களுக்கு கொடுக்க வேண்டிய கூலியை நிச்சயம் செய்துகொண்டு அதிலே அபிவிருத்தி செய்ய வழியேற்படும். இல்லாவிட்டால் எந்தக் காலத்திலும் இந்தக் கைத்தறி முன்னேறும் வாய்ப்பிருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் இந்தக் கைத்தறித் தொழிலையே அவர்கள் எப்பொழுதுமே நம்பியிருக்க வேண்டாமென்று சொல்லலாம். இருந்தாலும் இப்பொழுது நம்முடைய நாட்டிலேயிருக்கும் சுமார் 20 லட்சம் பேர்கள் இந்தத் தொழிலையே நம்பியிருக்கிறார்கள் என்ற நிலையிருக்கிறது. இவர்கள் எல்லோருக்கும் உடனடியாக வேறு தொழில் கொடுக்க முடியாது. இவர்களுக் கெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக வேறு தொழிலைக் கொடுப்பதன் மூலம்தான் செய்ய முடியும். ஆனால் அது வரையில், அவர்களுக்கு வேறு தொழில் கொடுக்கும் வரையில், நாம் அவர்களுக்கு இப்பொழுது இருக்கும் தொழிலுக்கு எந்த அளவிற்கு உதவி செய்ய முடியும் என்று பார்க்கும்பொழுது இந்த ஒருமுறையை நாம் நிச்சயமாகச் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் இந்தக் கைத்தறித் தொழிலுக்கு நாம் ஒரு நல்ல நன்மையைச் செய்ததாக எடுத்துக் கொள்ள முடியாது. எனவே, சர்க்கார் இந்த ஒரு திட்டத்தைச் சீக்கிரமாகப் பரிசீலிக்க வேண்டும். பரிசீலித்து அவர்களுக்கு நியாயமான விலையில் ரா மெட்டிரியல்ஸ் கிடைக்கும் மார்க்கத்தைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல கைத்தறித் தொழிலில் ஏற்றுமதியாளர்களைப்பற்றி எனக்கு முன்னால் பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். அதில் இன்னொரு கருத்தை நான் சொல்ல ஆசைப்படுகிறேன். நம்முடைய துணி ஏற்றுமதியாக வேண்டுமென்றால் பம்பாய்க்குப் போய் அங்கிருந்துதான் மேல் நாடுகளுக்கு ஏற்றுமதியாக வேண்டும். கோடவுன்கள் பம்பாய் வியாபாரிகளின் கையில்தான் இருக்கின்றன. அதற்குப் பதிலாக நாம் சென்னையில் துறைமுகத்தை கைத்தறித் துணி ஏற்றுமதிக்குத் தேவையான அளவிற்கு விஸ்தரித்து அந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தால் ஏற்றுமதியாகி வெளிநாடுகளுக்குப் போகும். நம்முடைய துணிகளின் விலை நமக்கு நிச்சயமாக குறையும். அதன் மூலம்

ஹெல்த்தி காம்படிஷனை வெளிநாட்டு மார்கெட்டில் ஏற்படுத்த முடியும். இப்பொழுது எனக்கு முன்பு பேசிய ஒருவர் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். பிளீடிங் மெட்ரூஸ் துணிக்கு முன்பு ஒரு நல்ல நிலைமை இருந்தது. ஆனால் இப்பொழுது போய்விட்டது என்ற கருத்தைக் குறிப்பிட்டார்கள். அது உண்மைதான். அதற்குக் காரணம் ஏற்றுமதியாகக்கூடிய துணிகளின் மூலம் கொள்ளை லாபம் அடிக்கச் சிலர் கருதினார்கள். அதன்மூலம் நாம் மார்கெட்டை இழக்க வேண்டியதாயிற்று. அதற்காக கைத்தறித் துணிகளுக்கு உலக அரங்கிலே மார்க்கெட் இல்லை என்று அர்த்தமில்லை. கைத்தறித் துணிக்கு மார்கெட் இருக்கும், எக்ஸ்போர்ட்ஸ் இருக்கிறது. நம்மிடமிருந்து ஏற்றுமதியாகும் துணிகள் நல்ல ரகமாகவும், கெட்டியாகவும், உறுதியாகவும் நம்பிக்கை நாணயமாகவும் இருக்கும் முறையில் இருந்தால், அதை ஏற்றுமதி செய்தால் நல்ல வாய்ப்பிருக்கிறது. ஆகவே இங்கே நம்முடைய கைத்தறித் தொழில் நசித்துப் போகும் என்ற கவலை தேவையில்லை. இதற்கிடையில் கைத்தறித் தொழிலுக்குத் தேவையான ரா-மெட்டிரியல்ஸ் நியாயமான விலையில் கிடைக்கச் செய்தால் நல்ல எக்ஸ்போர்ட் இருக்கும், கைத்தறித் தொழிலும் நல்ல முறையில் முன்னேறும் என்ற என்னுடைய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

கடைசியாக இன்னும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தொழில் வளர்ச்சிகளைப் பொறுத்த வரையில் நம்முடைய தொழில்கள் சென்ட்ரலைஸ் இன்டஸ்டிரிசாக இருக்கின்றன. அவைகளை டீ சென்ட்ரலைஸ் செய்ய வேண்டும். அதன் மூலம் நாம் தொழில் வாய்ப்புகளைப் பரவலாகச் செய்ய முடியும். இப்பொழுது இன்டஸ்டிரீஸ் சென்ட்ரலைசாக இருப்பதால் பல கிராமங்களில் இருப்பவர்கள் நகரங்களுக்கு வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இதனால் இங்கே இருப்பவர்களுக்கும் கஷ்டம், அரசாங்கத்திற்கும் கஷ்டம். இவைகளைப் போக்க இனிமேல் எந்தத் தொழிலைப் புதிதாகத் துவக்கினாலும் சரி அல்லது இருக்கும் தொழிலை சின்னச் சின்ன முறையில் டீ சென்ட்ரலைஸ் செய்து கிராமங்களிலே சிறு தொழில்களை ஏற்படுத்தி, பிறகு ஒட்டுமொத்தமாகச் செய்யும் நிலையை ஏற்படுத்திக் கொண்டால் மிகவும் நலமாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, அருப்புக்கோட்டையில் முன்சீப் கோர்ட்டோ அல்லது சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டோ ஏற்படுத்த வேண்டியது அவசியம் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதற்காக முன்பு ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டிருந்தது. அந்தக் கமிட்டி தன்னுடைய விசாரணையை நடத்திய நேரத்தில் பொதுமக்கள் இதைப் பற்றி வற்புறுத்திக் கூறியிருக்கிறார்கள். இதற்கு முன்பு சிறு ஊராக இருந்த அந்த ஊர், பஞ்சாயத்தாக இருந்த அந்த ஊர் இப்போது

முனிசிபாலிடியாக இருக்கிறது. அருப்புக்கோட்டை தாலுகாவானது சென்ட்ரலேஸ் போஸ்ட் ஆக இருந்து கொண்டிருக்கிறது. அந்த இடத்தில் ஒரு கோர்ட்டை ஏற்படுத்த வேண்டுமென்பதில் அரசாங்கம் நல்ல எண்ணம் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்களால் இந்த மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கை களுக்கு எனது ஆதரவைத் தெரிவித்து, தொழில், தொழில் வளர்ச்சி ஆகியவற் றின்மீது ஓரிரு கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழகத்தில் தொழில் வளம் 1967-க்கு முன்பு இருந்ததை விட எந்த விதத் திலும் குறையாது நாளடைவில் வளர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இங்கே நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அறிக்கைகளில் இந்தத் தொழில் வளம் தமிழகத்தில் எந்த அளவுக்குப் பெருகி இருக்கிறது என்பது தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஓரிரு காரணங்களை எடுத்துச் சொல்லும் முறையில் 'இன்டெக்ஸ் ஆஃப் இன்டஸ்ட்ரியல் புரொடக்ஷன்' என்று சொல்லு கிறார்கள். உற்பத்திப் புள்ளிவிவரங்கள் அங்கே சொல்லப்பட்டிருக்கிறது. 1967-க்கு முன்பு இருந்ததைவிட அந்த வளர்ச்சியை இந்தியா முழுவதும் எடுத்துப் பார்த்தால் அந்த வளர்ச்சி 1971-72 வரை இருந்து கொண்டுதான் வந்திருக்கிறது. இந்த நாட்டிலுள்ள சிறு தொழில்களின் எண்ணிக்கையைப் பார்த்தால் 1967-ல் 1,382 ஆக இருந்தது 1971 கடைசியில் 3,012 என்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறது. தொழில் வளர்ச்சிக்காக எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கை காரணமாக இந்த நாட்டில் தொழில் வளம் பெருக உதவி இருக் கிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

இருந்தாலும் கூட, இங்கே பேசுகின்ற சில அங்கத்தினர்கள் 1967-க்குப் பிறகு தொழில் தேக்கம் அடைந்துவிட்டது, தொழில்களில் அமைதியின்மை நிலவுகிறது என்றெல்லாம் சொல்லி வருகிறார்கள். உண்மையிலேயே, தொழி லிலே தேக்கம் ஏற்பட்டுவிட்டது, அமைதியின்மை ஏற்பட்டுவிட்டது என்று சொல்லுவதை விட, திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்க்கின்ற அரசியல் கட்சிகளுக்கு ஜனநாயகப் பண்புகளில், மரபுகளில் இருக்கக்கூடிய நம்பிக்கை இன்மையைத்தான் அது எடுத்துக் காட்டுகிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

உண்மையிலேயே, ஜனநாயகப் பண்புகளில், மரபுகளில் நம்பிக்கை கொண் டவர்கள், ஒரு கட்சித் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்துவிட்டால் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகளுக்கு அவர்களுடைய ஆட்சியைப் பொறுத் துக் கொள்ள வேண்டும், சகித்துக் கொள்ள வேண்டும் என்ற சகிப்புத் தன்மை

1972 மார்ச் 14] [திரு. கே. பி. கந்தசாமி]

இருக்குமானால் இப்படிப்பட்ட சாதாரண பிரச்சினைகளை, ஆங்காங்கு தொழிற் துறையில் ஏற்படுகின்ற சிறு சிறு பிரச்சினைகளை, பெரிதாக்கி பிறகு கிளர்ச்சிகளை உருவாக்கும் அளவுக்குப் போகமாட்டார்கள். ஆகவே, தொழிலில் அமைதி யின்மை என்று எடுத்துச் சொன்னால் அது ஆங்காங்கு இருக்கும் சிறு சிறு பிரச்சினைகளை மிகைப்படுத்தி எடுத்துச் சொல்லும் நிலைதானே தவிர வேறல்ல.

இந்த நாட்டிலே தொழில்கள் எப்படிப்பட்ட அமைப்பில் இருக்க வேண்டு மென்பதிலே தலைவர்களுக்குள்ளே கருத்து வேறுபாடே கிடையாது என்பது ஒப்புக் கொள்ளப்பட்ட விஷயம். மிக்சட் எகானமி என்ற வகையில் இருக்க வேண்டும்; தனியார் துறையும் இருக்க வேண்டும்; பொதுத் துறையும் இருக்க வேண்டும்; கூட்டுத் துறையும் இருக்க வேண்டும்; கூட்டுறவுத் துறையும் இருக்க வேண்டும் என்று சொல்கின்ற நேரத்திலே எந்தத் தொழிலாக இருந்தாலும் தேசிய மயமாக்கப்பட வேண்டுமென்று எடுத்துச் சொல்லுவது பொருத்தமாக இருக்காது என்று நினைக்கிறேன்.

நமது நாட்டில் பொதுத் துறை இருக்கிறது, கூட்டுத் துறை இருக்கிறது, கூட்டுறவுத் துறை இருக்கிறது, தனியார் துறையும் இருக்கிறது. பொதுத் துறையைப் பொறுத்தவரையில் தமிழகத்தில் எவ்வளவோ பெரும் பெரும் தொழில்கள் இயங்கி வருகின்றன. அதிலே நல்ல வளர்ச்சியைக் காணுகிறோம். தனியார் துறையைப் பொறுத்தமட்டில் பெரிய பெரிய தொழில்கள், நடுத்தரத் தொழில்கள் எவ்வளவோ துவக்கப் பட்டு நல்ல முறையில் நடந்து வருகின்றன. 1967-க்கு முன்பு இருந்ததை விட தனியார் துறை தொழிலதிபர்கள் தொழில் உதவிக் கழகத்திடம் இருந்து எந்த அளவுக்குக் கடன்களைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை அறிக்கையிலே பார்க்கிறோம். மகாராஷ்டிரத்திற்கு அடுத்தபடியாக இண்டஸ்ட்ரியல் பினான்ஸ் கார்ப்பரேஷன், இண்டஸ்ட்ரியல் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் அதிக அளவுக்கு உதவிகளைப் பெறுமளவுக்கு வழி செய்திருப்ப திலே நாம் மகாராஷ்டிரத்திற்கு அடுத்தபடியாக இருக்கிறோம் என்பதை இந்த அறிக்கையிலே பார்க்கின்றபோது ஏன் மகாராஷ்டிரத்தைவிட முந்திப் போக முடியாது என்ற கேள்வி எழுகிறது. தமிழகத்திலுள்ள தொழிலதிபர்கள் எந்த அளவுக்கு இந்தக் கழகங்களுடைய உதவியை, கடனை அதிக அளவில் பெற்று தொழில்களைத் துவக்க முடியும் என்பதை எல்லோருக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும்.

அடுத்து, கூட்டுறவுத் துறையிலும் இங்கு பல தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டு கூட்டுறவுத் தொழில் வங்கிகள் மூலமாக உதவி செய்யப்பட்டு எவ்வளவோ தொழில்கள் இயங்கி வருகின்றன. எனது தொகுதியைப் பொறுத்தமட்டில் குலசேகரப்பட்டினம் என்ற ஊர் இருக்கிறது. அந்தக் காலத்தில் அது நல்ல துறைமுகமாக இருந்தது. அங்கு சர்க்கரை ஆலை கூட இருந்தது. நாளடைவில்

சர்க்கரை ஆலை மறைந்துவிட்டது. அந்தச் சிறிய துறைமுகம் மங்கிவிட்டது. அந்த இடத்தில் கூட்டுறவுத் துறையில் ஏதேனும் ஒரு தொழிலை ஆரம்பித்துக் கொடுக்க வேண்டுமென்று கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தூத்துக்குடிக்குக் கப்பலில் வரும் கோதுமையை மதுரைக்குக் கொண்டு சென்று மாவு மில்லில் அரைக்கின்ற நிலைமை இருப்பதாகத் தெரிகிறது. அந்தக் கோதுமையைத் தூத்துக்குடியில் இருந்து சிறிய படகுகள் மூலம் குலசேகரப் பட்டினத்திற்கு எடுத்துச் செல்லும் வகையில் அந்தத் துறைமுகத்தைச் சற்று விரிவாக்கி அந்தப் பகுதியில் ஒரு மாவு அரைக்கும் ஆலையையும் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நாடு முழுவதும், தமிழகம் முழுவதும் எவ்வளவோ சிறு சிறு தொழில் கள் ஏற்படுத்தப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கி வேலைவாய்ப்புக் கொடுக்க இந்த நிதிநிலை அறிக்கையில் ஒன்றுமே இல்லையென்று சொன்னார்கள். நாம் இப்போது 116 கோடி ரூபாய் அளவுக்குத் திட்டங்களில் செலவு செய்கிறோம் என்றால் அது எந்த அளவுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் என்பதை அங்கத்தினர்கள் சற்று மறந்து விட்டார்கள் என்றுதான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அந்த 116 கோடியில் இந்த ஆண்டில் மட்டும் தொழிற்துறையில் ஏறத்தாழ 10 கோடி ரூபாய் அளவிற்குச் செலவு செய்யக்கூடிய திட்டத்தைப் பார்க்கிறோம். குறிப்பாக, அதிலே பாதிக்கு மேல் இந்த நாட்டிலுள்ள சிறு தொழில்களுக்கு, கிராமங்களில் இருக்கக்கூடிய சிறு தொழில்களுக்கு அவற்றை முன்னுக்குக் கொண்டு வரக்கூடிய அளவுக்குச் செலவு செய்வதற்காக நிதி ஒதுக்கியிருப் பதைப் பார்க்கிறோம்.

குறிப்பாக, 1962-ம் ஆண்டு கிராமப் புற தொழில் பேட்டை என்ற திட்டத்தை இந்திய அரசு அனுமதியோடு ஆரம்பித்து இன்று மூன்று மாவட்டங் களிலே நடைபெற்று வருகிறது. நெல்லை மாவட்டத்தில் நாங்குநேரி என்ற இடத்தில் 1962-ல் தொழில் பேட்டை துவக்கப்பட்டது. அந்தத் தொழில் பேட்டையின் பகுதியை மாவட்டம் முழுவதற்கும் விரிவுபடுத்த வேண்டு மென்று இந்திய அரசைக் கேட்டுக் கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. தொழில் துறையில் நெல்லை மாவட்டத்தை முழுமைப் படுத்துவதற்கு இப்படிப் பட்ட தொழில் பேட்டைகளை நெல்லை மாவட்டம் முழுவதும் ஆரம்பிக்க வேண் டும், தொழில் அதிபர்கள் தொழில் கழகங்கள் அளிக்கும் உதவிகளைப் பெற்றுக்

கொள்ள வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த மானியக் கோரிக்கைகளை ஆதரித்து, பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி அமருகிறேன். வணக்கம்.

திரு. எஸ். வடிவேல் : தலைவர் அவர்களே, இன்று நம் சபை முன்பு வைக்கப் பட்டிருக்கிற தொழில், சிறை, நீதி நிர்வாகம் பற்றி ஒரு சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன்.

குறிப்பாக தொழில் மூலதனத்தைப் போடுகிறவர்கள் லாபத்தைக் குறிக் கோளாக வைத்துப் போடுகிறார்களே தவிர, தேச வளர்ச்சிக்கு உதவி புரியக் கூடிய வகையில் இன்று நிலைமை இல்லை. தொழில் வளர்ச்சிக்குத் தொழில் அமைதி தேவை. தொழில் அமைதி தானாக ஏற்படுவதில்லை. தொழிலுக்கு பணம் போடுவது மட்டும் மூலதனமாகாது.

தொழிலாளர்களின் உழைப்பை மூலதனமாகக் கொண்டதுதான் ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும். தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை முன்கூட்டியே தெரிந்துகொண்டு அவற்றை தீர்த்து வைப்பதுதான் சாலச் சிறந்தது. காலம் தாழ்த்தி அரசாங்கம் நடவடிக்கைகள் எடுப்பதன் காரணமாக தொழிலாளர்கள் பிரச்னையில் இன்று பல்வேறு மனக் கசப்புகள் ஏற்பட்டு பல கஷ்டங்களை அனுபவித்து வருகிறார்கள். இந்த ஆட்சி கூடத் தொழிலாளர்களை அடக்கு முறைக்கு ஆளாக்கியிருக்கிறார்களே தவிர, தொழிலாளர்கள் அமைதியான நிலையில் இருக்கக்கூடிய நிலை இல்லை என்பது நாடறிந்த உண்மை.

முதலாளிகள் லாபம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு அரசை ஏமாற்றி வருவதும், தொழிலாளர்களை ஏமாற்றுவதும், கள்ளப் பணம் உண்டாக் குவதும் சில முதலாளிகளின் குறிக்கோளாக இருந்து வருகிறது. அத்தகைய குற்றங்கள் செய்பவர்களை அரசாங்கம் காலத்தோடு கைது செய்வதற்கு நட வடிக்கைகள் எடுத்தால்தான் தொழிலில் ஒரு வளர்ச்சியைக் காண முடியும், நாடும் முன்னேற்றகரமான பாதையில் செல்ல முடியும்.

தஞ்சையில் இதுவரையிலும் எந்தத் தொழிற்சாலையும் ஏற்படவில்லை. அங்கு ஒரு தொழிற்சாலை அமைப்பது சாலச்சிறந்தது. தஞ்சை மாவட்டம் உணவு உற்பத்தி செய்யக்கூடிய இடம். அங்குள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு ஆண்டுக்கு ஆறு மாதங்கள் வேலை வாய்ப்பில்லை. ஆகவே அங்குள்ள அவர்களது வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு அங்கு ஒருதொழிற்சாலை அமைப்பது அவசியமாகிறது. அடுத்தபடியாக இப்போது பத்து சர்க்கரை ஆலைகள் கூட்டுறவுத்துறையில் இருக்கின்றன. ஆறு ஆலைகள் தனியார் துறையில்,

அதுவும் ஏகபோக முதலாளிகளின் கைகளில் இருக்கின்றன. பாரி, கொத்தாரி, மஹாலிங்கம், ஆரூரான் போன்றவர்களின் கைகளில் இருக்கின்றன. மதுவிலக்கு ரத்து செய்யப்பட்ட பின்னர் பாரி கம்பனிக்கு சாராயம் காய்ச்சுவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. மே மாதம் கொடுக்கப்போகும் ' ஆரூரான், மஹாலிங்கம் போன்ற பெரும் முதலாளிகளுக்குச் சாராயம் காய்ச்சுவதற்கு அனுமதி வழங்குவதை, அவர்களுக்கு அந்த ஆலைகளை அதற்காக விடாமல் அரசாங்கமே மேற்கொண்டு நடத்துவது நல்லது.

சாராயம் காய்ச்சுவதற்குக் கூட்டுறவு ஆலைகளுக்குக் கொடுப்பதுதான் சரி, அருணா சுகர்ஸ் என்ற கூட்டுறவு ஆலைக்குச் சாராயம் காய்ச்சும் லைசென்ஸ் கொடுத்தது சரி. ஆனால் மகாலிங்கத்துக்குக் கொடுத்தது, சக்தி சர்க்கரை ஆலைக்கு லைசென்ஸ் கொடுத்தது தப்பு. அடுத்து, பஞ்சாலை கார்ப்பரேஷன். ஏற்கனவே ஐந்து ஆலைகள் கார்ப்பரேஷன் நடத்துகிறது. கோவையில் மூடியுள்ள ஆறு ஆலைகளையும், மதுரையில் உள்ள ராஜா மில்ஸ் உட்பட மூன்று ஆலைகளையும், செங்கோட்டையில் உள்ள பலராமவர்மா மில்லையும், செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள சீதை மில்லையும் கார்ப்பரேஷனே நடத்த வேண்டும்.

கார்ப்பரேஷன் மூலதனத்தையும் அதிகப்படுத்த வேண்டும். கேரளாவில் உள்ளதுபோல் பஞ்சாலைகளைக் கண்காணிப்பதற்கு உள்ள அதிகாரத்தை கார்ப்பரேஷனுக்குக் கொடுக்க வேண்டும். அடுத்தபடியாக, தேயிலைத் தோட்டம். வால்பாறையிலும், நீலகிரியிலும் உள்ள தேயிலைத் தோட்டங்கள் பல வெள்ளையர்களுக்குச் சொந்தமானவை. அவைகளை உடனடியாக நாட்டுடைமையாக்க வேண்டும். ஒரு லட்சம் தொழிலாளர்களின் கோரிக்கைகளைக் கவனிக்க அது உதவியாக இருக்கும்.

அடுத்தபடியாக, கைத்தறி சம்பந்தமாக குறிப்புகள் கொடுத்திருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் அவை மகிழ்ச்சி தருவதாக இல்லை. 2 கோடி 33 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது போதாது. ஐந்து கோடி ரூபாயாவது ஒதுக்க வேண்டும். நெசவாளர்கள் சைதாப்பேட்டையிலும், சக்கம்பட்டியிலும் வேலை பூர்ணமாகக் கிடைக்க வேண்டுமென்று போராட்டம் நடத்தி வருகிறார்கள். குறைந்த விலையில் நூல் கிடைக்க உத்திரவாதம் வேண்டும். துணிகள் தேங்காமல் விற்பதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். அடுத்தபடியாக, அரசு பெரு முதலாளிகளுடன் தொழிற்சாலை அமைப்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. தூத்துக்குடியில் ஒரு உரத் தொழிற்சாலை ஒரு ஏக போக முதலாளியுடன் கூட்டாக அமைப்பது சரியில்லை. மேட்டூர் அலுமினியம் தொழிற்சாலையும், வண்டலூர் மோட்டார் தொழிற்சாலையையும் தேசியமயமாக்க வேண்டும். அடுத்தபடியாக, கூட்டுறவு நூற்பாலைகள் எல்லாம் திறமையாக நடப்பதற்கு தொழி

[திரு. எஸ. வடிவேல்]

லாளர்கள் உள்ளிட்ட கூட்டுக் கமிட்டி அமைக்க வேண்டும். கைத்தறியாளர்களுக்கும் பங்கு வேண்டும். சிறு தொழில் நடத்துபவர்களுக்கு மூலப்பொருள் கிடைக்க ஏற்பாடு செய்வதோடு இன்சினியரிங் பயிற்சி பெற்று வேலையில்லாமல் இருப்பவர்களைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகளை அரசு நிறுவ வேண்டும்.

அடுத்தபடியாக, மாவட்ட கோர்ட்கள், சப்-கோர்ட்கள் அமைக்கப்பட வேண்டுமென்று இச்சபையில் பல கேள்விகள் கேட்கப்பட்டிருக்கின்றன. இது சம்பந்தமாக ஒரு ஆண்டுக்கு முன்பு ஜில்லா ஜட்ஜ் வரதராஜன் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அதனுடைய தீர்ப்பு மூன்று மாதத்திற்குள் வெளி வரவேண்டுமென்று நாங்கள் வெட்டுப் பிரேரணை கொடுத்திருக்கிறோம். அதை இன்னும் தாமதப்படுத்துவது சரியில்லை. நியாயமில்லை. இந்தக் கோர்ட்டுகளின் தீர்ப்புகள் எல்லாம் ஆங்கிலத்தில் வருவதோடு தமிழிலும் வெளிவர வேண்டும். இராமநாதபுரத்தின் தலைமைக் கோர்ட்டுகள் எல்லாம் இராமநாதபுரம் மாவட்டத்திற்குள் அமைய வேண்டும். இன்னும் ஜில்லா கோர்ட்டும் சப் கோர்ட்டும் மதுரையில் இருப்பது சரியல்ல. மதுரையில் ஹைகோர்ட்டின் கிளை கண்டிப்பாகத் திறக்கப்பட வேண்டும். இதில் காலதாமதம் கூடாது.

அடுத்தபடியாக, சிறைச்சாலைகளில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமென்று நாங்கள் பல ஆண்டுகளாகக் கூறி வருகிறோம். தேச முன்னேற்றம் கருதி போராட்டங்கள் நடக்கும்போது அது தொழிலாளர்கள் போராட்டமானலும் சரி, மாணவர்களின் போராட்டமானலும் சரி, அவர்கள் சிறைக்குச் செல்கிறார்கள். இந்தமாதிரி போராட்டங்களில் கலந்துகொண்டு சிறை செல்பவர்கள் அவர்கள் மாணவர்களாக இருந்தாலும் சரி, தொழிலாளர்களாக இருந்தாலும் சரி, விவசாயிகளாக இருந்தாலும் சரி, அவர்கள் அரசியல் கைதிகளாக நடத்தப்பட வேண்டும். ஆனல் இன்று அவர்கள் அப்படி அரசியல் கைதிகளாக நடத்தப்படுவதில்லை. சாதாரண கைதிகளோடு அவர்கள் ஒன்றாக நடத்தப்பட்டு வரும் நிலை மாற்றியமைக்கப்படுவதற்கு அரசு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

குறிப்பாக இன்றைக்கு சிறைச்சாலைகளுக்குச் செல்கிறார்கள் என்று சொன்னல், கம்யூனிஸ்ட் கட்சி எத்தனையோ போராட்டங்களை நடத்தியிருக்கிறது. மாணவர்கள் போராட்டம், தொழிலாளர்கள் போராட்டம் என்று எத்தனையோ போராட்டங்களை எங்கள் கம்யூனிஸ்ட் கட்சி தலைமை தாங்கி நடத்தியிருக்கிறது.

புரட்சிகரமான வகையில் நாங்கள் பல போராட்டங்களைத் தாங்கி நடத்தியதன் காரணமாகத்தான் இன்று திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிக்கு

வந்திருக்கிறது என்பதை அவர்கள் ஒத்துக்கொள்ள வேண்டும். அவர்கள் ஒப்புக்கொள்ளவிட்டால் நாடு ஒப்புக்கொள்ளும். கம்யூனிஸ்ட் கட்சியின் போராட்டங்கள் காங்கிரஸ் பேயாட்சிக்கு முடிவு கட்டியதோடு அல்லாமல் முன்னேற்ற கழக அரசு நடுநிலைமையுடன் ஆட்சி நடத்துவார்கள் என்று நாட்டு மக்கள் அனுப்பி வைத்திருக்கிறார்கள். அந்த நல்ல தீர்ப்பை பயன்படுத்தி நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. கோ. சிவபெருமாள்: மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, அரியலூர் தாலுகாவிலும், பெரம்பலூர் தாலுகாவிலும் மிளகாய் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. அங்கு உற்பத்தியாகக் கூடிய மிளகாயை வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யும் ஒரு நிலை இருக்கிறது. தமிழ்நாட்டில் மதுரை மாவட்டத்திலுள்ள தேனி, திருச்சி மாவட்டத்தில் உள்ள அரியலூர் போன்ற பகுதிகளில்தான் இந்தியாவிலேயே அதிகமாக மிளகாய் பயிர் செய்யப் படுகிறது. சிறு சிறு ஏரிகளின் பாசனத்தின் மூலமாக உற்பத்தியாகும் பகுதி களும் உள்ளன. கிணற்று நீர் மூலம் மிளகாய் உற்பத்தி செய்யக்கூடிய பகுதி களும் உள்ளன.

நம் மாநிலத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் மிளகாய் பயிர் உற்பத்தி செய்யப்பட்டு வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. நம் மாநிலத்தில் மிளகாய் வற்றல் அதிகமாகப் பயிர் செய்யப்படுவதால் இங்கு மிள காய் வற்றலை பவுடர் செய்தோ அல்லது அந்த மிளகாய் வற்றலைப் பயன்படுத்திக் கொண்டு வேறு பொருளைத் தயாரிக்க ஒரு தொழிற்சாலையை அமைத்தால் அரசுக்கும் நல்ல வருவாய் கிடைக்கும். அதோடு அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கும் வேலைவாய்ப்புக் கிடைக்கும். இப்போது ஒரு கிலோ மிளகாய் வற்றல் ரூ. 3-ல் இருந்து ரூ. 3.60 வரையில் விற்கப்படுகிறது. குறைந்த விலைக்கு இப்போது மிளகாய் வற்றல் விற்கப்படுகிறது. மிளகாய் உற்பத்தி செய்யக் கூடிய விவசாயிகளுக்குப் போதுமான விலை கிடைக்கிறதா என்பதையும் பார்க்க வேண்டும். எதிர்க் கட்சி உறுப்பினர்கள் விலைகள் இன்னும் இறங்க வேண்டும், இறங்க வேண்டும் என்று சொல்கிறார்கள்.

உற்பத்தி செய்யக்கூடிய விவசாயி இன்றையதினம் பயிர் செய்வதற்காக ஒரு ஏக்கருக்கு அதற்கு வேண்டிய உரம், சல்பேட் ஆகியவற்றின் விலையும் அதிக மாக இருக்கிறது. அவர்களுக்கு அதனால் கிடைக்கும் வருமானம் குறைவாக இருக்கிறது. விலைவாசி குறைய வேண்டுமென்று சொல்கிற சின்டிகேடர்கள் ஆட்சியில் மிளகாய் வத்தல் விலை ஒரு கிலோ ரூ. 12 விற்றது, ரூ. 10 விற்றது ஒரு கிலோ, ரூ. 9 விற்றது, ஆனால் இன்றைய தினம் ரூ. 3 லிருந்து

ரூ. 3.60 வரைதான் விற்கிறது. இந்தியாவிலேயே திருச்சி மாட்டத்திலே தான் அதிகமாக மிளகாய் வத்தல் பயிராகிறது. அதிலும் குறிப்பாக அரியலூர் வட்டத்தில், அதன் சுற்றுப்புறங்களில் தான் அதிகமாக உற்பத்தியாகிறது. ஆகவே, அந்த அடிப்படையில் ஒரு தொழிற்சாலை அவசியம் தேவை என்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

வேப்பமர நிழல் உடலுக்கு நல்லது என்று சொல்லுவார்கள். வேப்ப மரத்திலிருந்து கிடைக்கும் வேப்ப பழம் உற்பத்தி அரியலூர், பெரம்பலூர், ஜெயம் கொண்டான், லால்குடி ஆகிய நான்கு வட்டாரங்களில் அதிகமாக இருக்கிறது. வேப்பம் கொட்டையிலிருந்து வேப்ப எண்ணெ தயார் செய்யப்படுகிறது. அந்த வேப்ப எண்ணெ விலையுயர்ந்தது. வேப்ப எண்ணெ, வேப்பம் புண்ணாக்கு விவசாயிகளுக்கு மிகவும் தேவைப்படுகிறது. வேப்ப எண்ணெ கொஞ்சம் கசப்பாக இருக்கும். அந்த வேப்ப எண்ணெயை, தமிழ்நாட்டில் குறிப்பாக அரியலூர் பகுதியில் தயார் செய்து எங்கே அனுப்புகிறார்கள் என்றால், வட நாட்டில் இருக்கும் அகமதாபாத், டெல்லி போன்ற ஊர்களுக்கு அனுப்புகிறார்கள். அங்கே உள்ளவர்கள் இந்த எண்ணெயைக் கொண்டு முகத்திற்குப்போடும் பவுடர், சோப் முதலியவற்றைத் தயார் செய்கிறார்கள். இங்கே தயாரிக்கப்பட்ட வேப்ப எண்ணெயைக் கொண்டு அங்கே தயாரிக்கப்பட்ட சோப் முதலியன இங்கே மறுபடியும் வருகின்றன. கெமிக்கல்ஸ் போன்றவற்றிற்கும் இந்த வேப்ப எண்ணெ பயன்படுகிறது. அந்த அளவு விலை மிகுந்த எண்ணெயை அரியலூர் பகுதியில் தயாரிக்கப்படுகிற காரணத்தால், அரியலூர் பகுதியில் ஒரு சோப்பு தொழிற்சாலை ஏற்படுத்தினால், பலபேருக்கு வேலை கிடைக்கும் நிலைமை ஏற்படும், அரசுக்கும் ஆதாயம் வரும்.

எங்கள் பகுதியில் அரியலூருக்கு 9 மைல் தொலைவில் விளாங்குடி என்ற இடத்தில் வெள்ளைக்களிமண் கிடைக்கிறது. இந்த வெள்ளைக்களிமண்பக்தர்கள் நாமம் போட்டுக்கொள்ள பயன்படுகிறது. அந்த வெள்ளைக்களிமண் நாமம் போட்டுக் கொள்ள பயன்படக்கூடிய வகையில் வெள்ளையாகவும் வாசனை உடையதாகவும் இருப்பதால், ஸ்ரீரங்கம், பழனி பக்தர்கள் அதைப்பயன்படுத்தி வருகிறார்கள். இந்த வெள்ளைக்களிமண்ணை உபயோகித்து நாமக்கட்டி தயார் செய்ய சிறிய சிறிய தொழிற்சாலைகளை ஏற்படுத்தலாம். சிறிய கோவில், பெரிய கோவில் என்று மதிப்பிற்குரிய அனந்தநாயகி அம்மையார் குறிப்பிட்டார்கள். சின்ன கோவில்களில் உள்ள சாமி சொத்துக்களை எடுத்துக்கொள்ளாதீர்கள், பெரிய சாமி கோவில்களில் உள்ளவற்றை எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். சின்ன கோவிலுக்கு போகிறவர்கள் வெறும் சாம்பலை எடுத்துப் பூசிக்கொண்டு போய் விடுகிறார்கள். பெரிய கோவில்கள், ஸ்ரீரங்கம், பழநி போன்ற கோவில்களுக்குப் போகிறவர்கள் நாமம் போட்டுக்கொண்டு போகிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அந்த ஏழை சாமிக்கும் பணக்கார சாமிக்கும் உள்ள வித்தியாசத்தை சமதர்மம் பேசும் அங்கத்தினர் அவர்கள் நீக்குவதற்கு ஏதாவது யோசனை சொல்வாரா? நாமக்கட்டிக்கு விலை பேச பக்கத்தில் அறநிலைய அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அவரிடத்தில் அதற்கு விலை பேசினால் நல்லதாக இருக்கும். அதைச் செய்வாரா?

திரு. கோ. சிவபெருமாள்: அவர்களுக்கும் தான் சொல்வேன். என் பகுதியில் நாமக்கட்டி தயார் செய்யும் அளவுக்கு வெள்ளைக்களிமண் கிடைக்கிறது. அதை வைத்து சிறிய தொழிற்சாலை ஏற்படுத்தினால் தமிழ் நாட்டிற்கு மட்டுமல்ல, இந்தியாவிற்கே பயன்படக்கூடிய நிலைமையேற்படும் என்று நான் கருதுகிறேன்.

இவைகளில் சம்பந்தமில்லாத விஷயத்தைப் பற்றி பேசக் கூடாது என்பதால் பேசாமல் இருந்தேன். சம்பந்தப்படுத்தி பேசிவிட்டதால் நானும் பேசத்தயாராக இருக்கிறேன். ஏழை பணக்கார சாமி என்று குறிப்பிட்டார்கள். காளியம்மன், மாரியம்மன் பற்றிக் குறிப்பிட்டார்கள். காளியம்மன், மாரியம்மன் சின்னச்சின்ன சாமி. பணக்காரச் சாமி அல்ல. ஒரு சமயம் அம்மையார் அவர்கள் தாய் இனத்தைச் சார்ந்த காரணத்தால், காளியம்மன், மாரியம்மன் ஆகிய கோவில்களுக்கு, பெண்களுக்கு முதலிடம் கொடுக்கும் தமிழ் நாட்டில், பெண் சாமிக்கும் அந்த உரிமை கொடுக்க வேண்டுமென்று சொன்னார்களோ என்னவோ தெரியவில்லை. பெரிய பெரிய ஆண்டவன் கோவில்கள் எல்லாம் இருக்கின்றன. பெரிய பெரிய கோவில்களில் எல்லாம் பிரசாதம் தயாராகிறது என்று சொல்கிறார்கள். எங்கள் ஊரில் இருக்கும் சின்ன சாமிக்கெல்லாம் தேங்காய் உடைத்து, அந்தத் தண்ணீரை கீழே விடாமல் பாத்திரத்தில் பிடித்துக் கொண்டு விடுகிறார்கள். ஸ்ரீரங்கம், பழநி போன்ற பெரிய கோவில்களில் சாமிக்கு பஞ்சாமிர்தம், போன்றவை தயார் செய்து வைக்கிறார்கள். இதனால் பணக்காரச்சாமி ஏழை சாமி என்று சொல்லக்கூடிய அளவில் இருக்கிறது. எப்படி பணக்காரர்கள் ஏழைகள் என்று மக்களிடத்தில் இருக்கிறதோ அதேபோல் ஆண்டவனிடத்திலும் இருக்கிறது. பெரிய பெரிய கோவில்களில் (ஸ்ரீரங்கம், பழநி) பூஜைக்கு வைக்கக்கூடிய பிரசாதங்கள் பொங்கல், பஞ்சாமிர்தம் போன்றவற்றைப் படைக்கிறார்கள். ஆண்டவன் அவற்றைச் சாப்பிட்டால் தானே? அங்கே இருக்கும் ஆட்கள் அதைச் சாப்பிடுகிறார்கள். உண்மையிலேயே விலையுயர்ந்த பஞ்சாமிர்தம் பொங்கல் போன்றவற்றை யெல்லாம் அங்கே யுள்ளவர்கள் பக்தர்களுக்கு சாப்பிடுவதற்காக விற்றுவிடுகிறார்கள். (மணி யடிக்கப்பட்டது) வெள்ளைக்களிமண்ணிலிருந்து நாமக்கட்டி தயாரிக்கும் தொழிற்சாலையை அரியலூர் பகுதியில் கொண்டுவர வேண்டும்.

என்னுடைய பகுதியில் முந்திரிப் பயிர்கள் அதிகமாக விளைகிறது. மற்ற பயிர்கள் செய்ய முடியாத இடத்தில் தான் முந்திரி பயிராகும் நிலைமை இருக்கிறது. ஒரு ஏக்கர் முந்திரியில் ஒரு ஆண்டுக்குக் கிடைக்கும் வருமானம் ரூ. 125 தான். எந்த அளவுக்கு வறண்ட பகுதியாக இருந்தால் இந்த ரூ. 125 வரும் என்பதை அரசு பரிசீலித்து, அந்த முந்திரி பயிர் செய்யக்கூடிய விவசாயிகளுக்கு என்னென்ன சலுகைகளைக் கொடுக்க முடியுமோ அந்தச் சலுகைகளைக் கொடுத்து, அந்த முந்திரி உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த முந்திரி உற்பத்தி அதிகரிப்பதன் மூலமாக, அதைச் சார்ந்த தொழிற்சாலையை அங்கே ஆரம்பிக்க வேண்டும் அதனால் அங்குள்ள மக்களுக்கு வேலைவாய்ப்புப் பெருகும். அரசுக்கும் ஆதாயம் வரும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

ஆகவே, தமிழ் நாட்டில் தொழில் வளர்ச்சியை அதிகரிக்க இப்படி சிறு சிறு தொழில்களை ஆங்காங்கு ஆரம்பித்து நல்ல முறையில் ஆயிரக்கணக்கான மக்கள் பயன்பெறத்தக்க வகையில் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய பகுதியில் டால்மியா சிமெண்ட் தொழிற்சாலை இருக்கிறது. சிமெண்ட் செய்வதற்கு வேண்டிய சுக்கான்கள் கிடைக்கும் நிலங்கள் அதிகமாக அந்தப் பகுதியில் இருக்கின்றன. அந்த இடங்களில் சர்க்கார் புறம்போக்கு நிலங்களும் இருக்கின்றன. இவற்றை அரசாங்கம் எடுத்துக் கொண்டு ஒரு தொழிற்சாலை ஆரம்பித்தால் ஆயிரக்கணக்கான மக்கள் வேலை வாய்ப்பு பெறுவார்கள்.

ஜிப்சம்மார்டர் அரியலூர் பகுதியில் கிடைக்கிறது. இதை உப்பு நார்க்கல் என்று சொல்லுவார்கள். அதை வெளி இடங்களுக்கு அனுப்புகிறார்கள். ஆகவே, ஒரு தொழிற்சாலையை ஜிப்சத்தை பயன்படுத்தி கெமிகல்ஸ் தயாரிக்க அரியலூர், பெரம்பலூர் தாலுக்காவில் ஏற்படுத்தலாம். அந்தப் பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. இதை தனியார் ஒரு சிலர் எடுத்து பயன்படுத்தி லட்சக்கணக்கான ரூபாய்க்கு முதலாளியாக ஆகக்கூடிய நிலைமை யேற்பட்டு இருக்கிறது. அதிலே ஆரம்பத்திலே மேஸ்திரியாக இருந்தவர்கள் இன்று லட்சாதிபதியாக இருக்கிறார்கள்.

கேரளாவிற்குச் சென்று அங்கு இந்தக் கல் அரைக்கப்பட்டு பாடம் பண்ணி, கடலைப் பிண்ணாக்கு இவைகளைக் கூடச் சேர்த்து அரைத்து பிற கலப்பு உரமாகத் திரும்ப எங்கள் பிரதேசத்திற்கே வருகிறது. அதை நாங்கள் வாங்குகிற நிலை இருக்கிறது. எனவே இதைப் பயன்படுத்துவதற்கு எங்கள் பகுதியிலேயே ஒரு உரத் தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கல் இப்பொழுது உபயோகப் படுத்தப்படாததால் எங்கள் பகுதியிலிருந்து ஒரு ரூபாய்க்கு வாங்கிக் கொண்டு செல்கிற கல்லை நாங்கள் 1½ ரூபாய், இரண்டு

ரூபாய் கொடுத்து வாங்குகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் எங்கள் பகுதி வறட்சியான பகுதியாகும். இந்த வறட்சியான பகுதியில் பல தொழிற்சாலைகளை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக முதலமைச்சர், மாண்புமிகு கலைஞர் ஆட்சியில் கண்டிப்பாக நல்ல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு தமிழகம் நல்ல முறையிலே வளரும் என்று சொல்லிக் கொள்கிறேன். பல நல்ல திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக கலைஞர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன். மறைந்த அறிஞர் அண்ணா அவர்கள் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்பேன் என்றார். அந்த முறையிலே கலைஞர் அவர்கள் ஆட்சியிலே ஏழை எளிய மக்களுக்கு, ஆயிரக் கணக்கானவர்களுக்கு, வீடு இல்லாதவர்களுக்கு வீடு, நிலம் இலாதவர்களுக்கு நிலம், இல்லை என்று எவருமே இல்லாத நிலையை உருவாக்குவதற்காக பாடு பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஒன்று கூற மறந்து விட்டேன். எங்கள் பகுதியிலே கிடைக்கிற முந்திரிப் பழம் சரியான முறையிலே பயன்படுத்தப்படவில்லை. இந்த முந்திரிப் பழத்தைச் சேமித்து நல்ல முறையிலே பயன்படுத்துவதற்கு ஒரு திட்டம் வகுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மன்றத்திலே சொன்னார்கள் தென்னாற்காடு மாவட்டத்தில் இருக்கக் கூடிய சாராயத்தில் வாடை இருக்கிறது. திருச்சி மாவட்டத்தில் இருக்கக்கூடிய சாராயத்தில் வாடை இல்லை, ஒரே காரமாக இருக்கிறது என்று. இந்த முந்திரிப பழத்தைப் பயன்படுத்தி திருச்சி மாவட்டத்திலே ஒரு தொழிற்சாலை ஆரம்பித்தால் அது நல்ல பலனைத் தருமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது பேரறிஞர் அண்ணா அவர்கள் ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்பேன் என்று சொன்னார். ஆனால் காமராஜ் அவர்கள் இன்றைய தினம் இந்த அரசைக் கவிழ்ப்பதற்கு இந்த அரசைப் பற்றி இல்லாதது பொல்லாததுகளை யெல்லாம் கூறி வருகிறார்கள். இந்த அரசு மக்களிடத்திலே செல்வாக்குப் பெற்று இருக்கிறது. முக்கியமாக கிராமப்புரங்களில் உள்ள ஏழை எளிய மக்களிடத்திலே செல்வாக்குப் பெற்று வருகிறது. இந்த அரசு ஏழைகளால் அமைக்கப்பட்ட அரசு. ஏழை எளியவர்களுக்காகப் பாடுபட்டுக் கொண்டு வருகிற அரசு. இதை அறிந்து தான் இங்கே இருக்கக் கூடிய மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் சிறந்த முறையிலே ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கிற பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியபடி செயல்பட்டுக் கொண்டு வருகிறார்கள். மாற்றுக் கட்சித் தோழர்கள் பொறாமைப்படக் கூடிய அளவிற்கு நல்ல முறையிலே செயல்பட்டுக் கொண்டு வருகிறார்கள். இன்றையதினம் கிராமங்கள் மறுமலர்ச்சி அடைந்து கொண்டு வருகின்றன. கிராம மக்கள் தமிழக அரசை ஆதரிக்கிறார்கள்.

1972 மார்ச் 14]

டாக்டர், கலைஞர் அவர்களின் மதிப்பு உயர்ந்து கொண்டு வருவதைப் பார்க்கிறார்கள். அதனால் பொறாமை எண்ணத்தில் இன்றையதினம் பிள்ளையையும் கிள்ளி விட்டுத் தொட்டிலையும் ஆட்டுவது போல, மாண்புமிகு உறுப்பினர் அனந்தநாயகி அவர்கள் தாய்க்குலத்தைச் சேர்ந்தவர்கள் ஆதலால் பிள்ளையையும் கிள்ளி விட்டு, தொட்டிலையும் ஆட்டுவது போல இந்த மன்றத்திலே சிலவற்றைப் பேசுவார்கள், அப்படிப் பேசி விட்டு திரும்ப வேறு ஒன்றைச் சொல்வார்கள். அவர்கள் தாய்க்குலத்தைச் சேர்ந்தவர்கள் ஆதலால் இப்படிச் சாமர்த்தியமாக பேசுகின்ற நிலைமையைப் பார்க்கிறோம். நமது டாக்டர் கலைஞர் அவர்கள் சிறைக்குச் சென்று சிறைக் கொடுமைகளை எல்லாம் அனுபவித்தவர். இந்தத் தமிழகம் மறுமலர்ச்சி அடைவதற்கு நல்ல பல திட்டங்களைத் தீட்டி அவற்றைச் சிறந்த முறையிலே செயல்படுத்துவார் என்று கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் தலைவர் அவர்களே, இப்போது எனக்குப் பேசுவதற்கே பயமாக இருக்கிறது. கொஞ்ச நேரத்திற்கு முன்னால் தான் அந்தக் கட்சியைச் சேர்ந்த கனம் அங்கத்தினர் பேசும்போது குறிப்பாக இவர்கள் பிள்ளையையும் கிள்ளி விட்டுத் தொட்டிலையும் ஆட்டுகிறார்கள் என்று சொன்னார்கள். அது தான் எங்கள் வேலை. அது மாத்திரமல்ல. இன்றைக்கு எதிர்க் கட்சிக்காரர்கள் சொல்கிற யோசனைகளையெல்லாம் ஏதோ எதிர்க்கட்சிக் காரர்கள் பொறாமை எண்ணத்திலே சொல்கிறார்கள் என்று எண்ணாமல் அவர்களுடைய முயற்சிகளுக்கு ஊக்கம் கொடுக்கிற முறையிலே நடக்கின்ற தவறுகளை உரிமையோடு கண்டிக்கிறார்கள் என்று ஏற்றுக் கொள்ள வேண்டும். யோசனை சொல்கிற உரிமை தவறுகளைக் கண்டிக்கிற உரிமை எதிர்க் கட்சிகளுக்கு உண்டு. ஏதோ அவசரத்தில், ஆத்திரத்தில் கண்டிக்கிறார்கள் என்று தவறாகக் கருதி விடக் கூடாது. உங்கள் தவறுகளைச் சுட்டிக்காட்டிக் கண்டிப்பதற்குத் தான் நாங்கள் இருக்கிறோம். உங்களைத் தோத்திரம் செய்வதற்கு உங்கள் பக்கத்தில் ஆட்கள் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட உங்களைத் தோத்திரம் செய்து பேசினார்.

திரு. தோப்பூர் திருவேங்கடம்: தலைவரவர்களே, அம்மையார் அவர்கள் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பேசியதைத் தோத்திரம் செய்தார் என்று கூறினார்கள். அது தவறு என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அவர் பேசினார் என்று நீங்கள் சொல்லலாம். ஆனால் என்னைப் பொறுத்த வரையில் அவர் தோத்திரம் செய்தார் என்று தான் நான் கருதுகிறேன்.

இன்றைக்கு இந்தத் தொழில் மானியக் கோரிக்கையிலே பல கருத்துக்களை அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக தொழில் வளர்ச்சி தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் மிக மிகப் பின் தங்கிய நிலையில் இருக்கிறது என்பதை அழுத்தந் திருத்தமாகக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இன்றைக்குத் தொழில் நிலைமைகளைப் பார்க்கும்போது பல தொழில்கள் தோல்வி அடைந்து கொண்டு வருகின்றது. புதிய தொழில்களை ஆரம்பிக்கின்ற சூழ்நிலைகள் எதுவும் இப்போது உருவாக்கப்படவில்லை. இருக்கின்ற தொழில்கள் சரியாக இயங்காத நிலை இருந்து வருகின்றன. இவ்வளவுக்கும் மேலாக அரசாங்கம் தயாரிக்கும் எந்த பொருளும் விலை போகாமல், சந்தையிலே கேட்பார் இல்லாமல் இருக்கும் நிலையைக் காண்கிறோம். புள்ளி விவரங்களைப் பார்த்தோமானால் இதை நன்றாக பார்க்க முடிகிறது.

இந்தியாவிலே தமிழகம் தொழில் துறையில் மிகவும் பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. இதனை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்கிறேன். இந்தியாவிலே பம்பாய், மகராஷ்டிரம் போன்ற மாநிலங்கள் தொழில் துறையில் மிகவும் வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றன. தொழில் வளம் அங்கேல்லாம் பெருகிக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் வளர்ந்து கொண்டு வருகிறது. தொழில் துறையில் நாம் பின்னுக்குச் சென்று கொண்டிருப்பதால் இங்கே வேலையில்லாத் திண்டாட்டம் வளர்ந்து கொண்டு வருகிறது. அது மட்டுமல்ல; அங்கெல்லாம் ஒரு ஆள் ஓட்டுகிற மோட்டாரைப் போட்டு எலெக்டிரிசிடியைக் கொண்டு தொழில்கள் நடத்தி பணம் சம்பதித்துக் கொண்டிருக்கிறார்கள். இதை அரசாங்கத்திற்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரசாங்கம் கொடுக்கிற புள்ளி விவரக் கணக்கைப் பார்த்தோமானால் இண்டஸ்டிரீசில் 1950-51-ல் 987 கோடி ரூபாய்க்கு உற்பத்தி ஆகிக் கொண்டிருந்தது. 1967-68-ல் 296 கோடி ரூபாய் அளவிற்கு உற்பத்தியாகியது. ஆனால் இன்றைக்கு 1971-72-ல் 296 கோடிக்கு மேல 50 கோடிக்கு அதிகமாக வந்தது, அவ்வளவு தான். 15 ஆண்டுகளில் தொழில் வளம் அதிகமாகப் பெருகிக் கொண்டு வந்தது. ஆனால் இப்போது வெகு குறைவாகப் போய்க் கொண்டிருக்கிறது. புள்ளிக் கணக்கை வைத்து இதைச் சொல்ல முடியும். தமிழகத்தை எடுத்துக் கொள்வோமானால் தொழில் துறையை நான்கு பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள்.

Central Undertakings, State Undertakings, Joint Sector and Private Sector. இந்த நான்கு பிரிவோடு 5-வதாக கோவாப்பரேடிவ் செக்டரையும் சேர்த்துக் கொள்ளலாம். இப்படி 5 வகையில் தொழில் பிரிவுகள் இருக்கின்றன. அன்றைக்கு மத்திய சர்க்கார் ஆரம்பித்த பல தொழில்களை இங்கே பார்க்க முடியும். காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தபோது மத்திய சர்க்கார் துறையில் பல தொழில்களை இங்கே ஆரம்பித்தார்கள். நெய்வேலி

லிக்னைட், டெலிபிரிண்டர் போன்ற பல தொழில்கள் இங்கே மத்திய சர்க்கார் துறையில் ஆரம்பிக்கப்பட்டது. இவைகள் எல்லாம் நல்ல முறையிலே நடந்து கொண்டிருக்கின்றன.

இன்றைக்கு நாங்கள் அரசாங்கத்திற்கு வந்த பிறகு மத்திய அரசாங்கத்தோடு போராடிப் பெற்ற லைசென்சுகளை, மத்திய அரசாங்கத்தின் நிர்வாகத்தில் இருந்து கொண்டு இங்கே ஆரம்பிக்கப்பட்ட தொழில்கள் என்று ஒன்றைக் காட்ட முடியாது. இந்த வகையிலே பார்த்தால் பெரிய ஏமாற்றம் தருகின்றது. குறிப்பாக சேலம் பிளாண்டைப் பற்றி 5 வருஷமாகச் சொல்லிக் கொண்டு வருகிறீர்கள். ஆனால் இதுவரையிலே அது ஆரம்பிப்பதற்காக ஒன்றும் செய்யப்படவில்லை. வருகிறது, வருகிறது என்று சொல்லிக் கொண்டிருந்தீர்கள். அது ஏன் இன்னும் வரவில்லை என்பதற்குக் காரணத்தைச் சொல்லவில்லை. மத்திய அரசாங்கத்தோடு போராடுகிற சக்தி குறைந்து விட்டதா. அன்றைக்கிருந்த அமைச்சர் வெங்கட்ராமன் அவர்கள் மத்திய அரசோடு வாதாடி இங்கே தொழில்களை ஆரம்பிப்பதற்கு பல லைசென்சுகளைப் பெற்று வந்தார்கள்.

மத்திய சர்க்கார் பொறுப்பில் பல பெரிய தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு பல முயற்சிகளை எடுத்துக் கொண்டார்கள். இன்றைக்கு நீங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு ஏன் ஒரு தொழில்கூட புதிதாக ஆரம்பிக்கப்படவில்லை என்று தெரியவில்லை. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் நெய்வேலியில் லிக்னைட் பிளாண்டில் செகண்ட் மைன், இரண்டாவது சுரங்கத்தை ஆரம்பிப்பதற்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கிற தாமதம் ஏன் என்று விளங்கவில்லை. ஏற்கெனவே ஒரு மைன் ஆரம்பித்து நடந்து கொண்டிருக்கிறது. அப்படியிருக்கும்போது இரண்டாவது மைன் ஆரம்பிப்பதற்கு ஏன் இவ்வளவு காலதாமதமாகிறது என்று தெரியவில்லை. இந்தக் கால தாமதம் மிகுந்த ஏமாற்றத்தைக் கொடுக்கிறது. சேலம் ஸ்டீல் பிளாண்டைப் பற்றி எவ்வளவோ சொன்னீர்கள். அதிலே 24 ஆயிரத்துச் சொச்சம் ஏக்கரா 1971-லே ஆர்ஜிதம் செய்யப் போவதாகச் சொல்லப்பட்டது. பின்னால் அது குறைக்கப்பட்டது. எந்தக் காரணத்தினால் குறைக்கப்பட்டது என்று தெரியவில்லை. 7 ஆயிரம் ஏக்கரா குறைக்கப்பட்டது. மத்திய அரசாங்கம் 30 லட்சம் ரூபாய் நில ஆர்ஜிதத்திற்காகக் கொடுத்திருந்தும் இன்னும் நிலம் ஆர்ஜிதம் செய்யப்படவில்லை. இதற்கு என்ன காரணம் என்பது விளக்கப்படவில்லை.

மத்திய அமைச்சர் நில ஆர்ஜிதம் செய்வதற்காகப் பணம் கொடுத்து, ஒரு வருஷத்திற்கு மேலாகியும், இன்னும் அந்த வேலை முடியவில்லை. உருக்காலை தொடங்குவதற்கான ஆரம்ப வேலைகள் எல்லாம் முடிந்து 5 ஆண்டுகளுக்கு மேலாகியும், இன்னும் வேலை தொடங்கவில்லை. வருகிறது, வருகிறது, விரைவிலே தொடங்கப்படும் என்றுதான் இன்னும் சொல்லிக் கொண்டிருக்கிறீர்

களைத் தவிர, எப்பொழுது வரும் என்று திட்டவட்டமாக இன்னும் சொல்ல முடியவில்லை. இன்றைக்கு நமக்குப் பின்னாலே அனுமதிக் கிடைக்கப் பெற்ற மற்ற மாநிலங்களில் எல்லாம் நம்மைவிட வேகமாக முன்னேறிவிட்டார்கள். இந்த விஷயத்தில் நாம் இன்னும் பின்தங்கியே இருக்கிறோம். இதுவரை மத்திய அரசோடு நெருங்கிய உறவினர்களாய் இருந்தீர்கள். இப்போது பிரிந்து விட்டீர்கள். உறவினராக இருக்கும்போதே முடியாதது, இனியா முடியப் போகிறது என்று எங்களுக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. எனவே, சேலம் உருக்காலைத் திட்டத்தை எவ்வளவு சீக்கிரமாக நிறைவேற்ற முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக நிறைவேற்ற வேண்டுமென்றுக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நிலச் சீர்திருத்தத்தைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக் கிறீர்கள். எனக்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர் திரு. சுரேந்திரன் அவர்கள் சொன்னது போல் பல தொழிலதிபர்கள், தங்கள் தொழிற்சாலைக்குத் தேவையானது போக நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை ஆர்ஜிதம் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த நிலங்களில் விவசாயமும் செய்யப்படாமல், தொழிலும் நடத்தப்படாமல் பல ஆண்டு காலமாக தரிசாகக் கிடக்கின்றன. இந்த தரிசு நிலங்களையெல்லாம் எடுத்துக்கொள்வது பற்றி அரசாங்கம் யோசனைச் செய்ய வேண்டும். ஜப்பான் நாட்டை எடுத்துக் கொண்டால் ஒவ்வொரு இஞ்ச் நிலத்தையும் அவர்கள் பயன்படுத்துகிறார்கள். தரிசு நிலம் என்பதை கிடையாது. அங்கே இருப்பதுபோல் நாமும் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக அரசாங்க இன்டஸ்டிரியல் எஸ்டேட் என்று பல எஸ்டேட்கள் தொடங்கப்பட்டன. இராணிப்பேட்டையில் இன்டஸ்டிரியல் எஸ்டேட் தொடங்குவதற்காக நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேலாகியும் அந்த நிலம் முழுவதும் பயன் படுத்தப்படாமல் இருக்கிறது. இன்டஸ்டிரியல் எஸ்டேட் என்று தொடங்கப் பட்டால், முழு அளவில் அது வேலையைத் துவங்கினால்தானே வேலை வாய்ப்புக் கிடைக்கும்; உற்பத்தியும் பெருகும். ஆனால் இன்றைக்கு எந்த இன்டஸடிரியல் எஸ்டேட்டும் சரியாக வேலை செய்கிறதா என்றால் இல்லை. இன்னும் பல இடங்களில் இன்டஸ்டிரியல் எஸ்டேட் தொடங்குவதற்கு என்று நிலம் ஒதுக்கம் செய்யப்பட்டு நீண்டகாலமாகியும் உற்பத்தி தொடங்கப்படவில்லை. கணக்குக் கமிட்டியிலே இதையெல்லாம் பார்க்கிறோம்.

இன்டஸ்டிரியல் எஸ்டேட் அமைத்து தொழிலதிபர்களுக்குக் கொடுத்திருக் கிறோம். அவர்கள் சரியாக எலெக்டிரிக் சார்ச் கட்டுவது கிடையாது. வாடகையும் கட்டுவது கிடையாது. ஆனால் ஏழை விவசாய மக்கள் வீட்டில் 4 நாட்கள், 4 மணி நேரம் எலெக்டிரிக் சார்ச் கட்டாவிட்டால் உடனே வெட்டி விடுகி றார்கள். பின்னால் கட்ட வேண்டிய பணத்தைக் கட்டிய பிறகு, ஃபைனும் கட்டிய

பிறகு வெட்டியதை ஒட்டுகிறார்கள். அதேமாதிரி தொழிலதிபர்களும் எலெக்டிரிக் சார்ச் ஒழுங்காகக் கட்டவில்லை என்றால் தண்டிக்கப்படக்கூடிய நிலைமை இருந்தால் அவர்கள் எலெக்டிரிக் சார்ச் கட்டாமல் இருப்பார்களா? வாடகை கட்டாமல் இருப்பார்களா? இதையெல்லாம் அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பல சிறு சிறு இண்டஸ்ட்ரீஸுக்குத் தேவையான அளவுக்கு "ரா மெட்டீரியல்ஸ்" கிடைப்பதில்லை. அதைப்போல 4 ஜீனி பாக்டரிக்கு ரா மெட்டீரியல்ஸ் கிடையாது. அரசாங்கம் நடத்தும் இன்டஸ்டிரிகளுக்கு ரா மெட்டீரியல்ஸ் இருக்கும். ஆனால் போதுமான "மெஷினரீஸ்" கிடையாது. பல இடங்களிலே மெஷின்ஸ் முதலிலே வந்துவிடுகிறது. மெஷின் வந்த பிறகு தான் கட்டடம் கட்டப்படுகிறது. கட்டடம் கட்டி வைத்திருந்தால் மெஷின் வருவது கிடையாது. இப்படி தொடங்கப்பட்டத் தொழிற்பேட்டைகளில் எல்லாம் ஒன்றுக்கொன்று முரண்பாடாகவே இருந்தால், வேலை வாய்ப்பு எப்படி ஏற்படும்? உற்பத்தி எப்படிப் பெருகும்? எல்லாமே கேள்விக்குறி தான்.

அடுத்தபடியாக, ஸ்டேட் அண்டர்டேக்கிங்ஸ் என்று சொல்கிறார்கள். இந்த ஸ்டேட் அண்டர்கேக்கிங்சில் எத்தகைய ஃபாக்டரிகள் இருக்கின்றன என்று துருவி துருவிப் பார்த்தால் இரண்டோ, மூன்றோ விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிலே தான் இருக்கின்றன. ஆலங்குளம் சிமின்ட் ஃபாக்டரி ஒன்று இருக்கிறது. இன்றைக்கு எப்போது பார்த்தாலும் அரசு சிமிண்டை வாங்குங்கள், அரசு சிமிண்டை வாங்குங்கள் என்று ரேடியோவில் முழுங்கிக் கொண்டே இருக்கிறது. அடுத்து அரக்கோணத்தில் இருக்கும் "கன்டினிவஸ் காஸ்டிங் ஸ்டீல்" ஃபாக்டரி. அதற்கு 134 கோடி டன் ஸ்டேன்லெஸ் ஸ்டீல் இறக்குமதி செய்கிறோம் என்று சொன்னார்கள். அதை இறக்குமதி செய்வதற்குப் பதிலாக இங்கேயே உற்பத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்தபடியாக இன்றைக்கு இருக்கின்ற ஜாயின்ட் செக்டாரைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல வேண்டும். இது எங்கே போய் முடியும் என்று தெரியாது. பணத்தையும் கொடுத்து, தேவையான வசதிகளையும் செய்து கொடுத்து நிர்வாகத்தை தனியார் கையில் கொடுத்தால் அவர்கள் வேண்டாம் என்றா சொல்வார்கள். முதலீடே இல்லாமல் முதலாளியாகிவிடுகிறார்கள். ஜாயின்ட் செக்டாரில் தூத்துக்குடியிலே உரத்தொழிற்சாலையை அமைத்து, எம். ஏ. சிதம்பரம் செட்டியார் கையில் நிர்வாகத்தை ஒப்படைத்திருக்கிறார்கள். அவர்கள் ஓரளவு முதல் போட்டிருந்தாலும், நிர்வாகப் பொறுப்பை அவர்கள் கையில் கொடுக்கக் கூடாது. அதை நம் கையிலேயே வைத்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் அவர்களைக் கட்டுப்படுத்த முடியும். நிர்வாகத்தைக் கவனிக்க

போர்டு ஆஃப் டைரக்டர்ஸ் போட்டிருப்பதாகவும், அதில் அரசாங்க அதிகாரிகளும் இடம் பெற்றிருப்பதாவும் சொல்கிறார்கள். ஓரிரு அதிகாரிகளை மட்டும் அதில் போட்டால் போதாது. "நான் அஃபிஷியல்" மெம்பர்கள்—பொதுமக்களோடு தொடர்பு உடையவர்களும் அதில் நியமனம் செய்யப்பட வேண்டும். அப்போதுதான் நியாயமான அதிகாரம் இருக்க முடியும். தனியார்களிடத்திலே முழு அதிகாரமும் இருந்தால், திறமையாக தொழில் நடத்தி, வரக்கூடிய லாபத்தையெல்லாம் அவர்களே எடுத்துக் கொள்வார்கள். ஆகவே, ஜாயின்ட் செக்டாரில் அதிகாரம் முழுவதும் அரசாங்கத்தினிடம் இருக்க வேண்டும்.

ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ், சதர்ன் ஸ்டரக்சுரல்ஸ் இவைகளிலெல்லாம் அடிக்கடி எவ்வளவு தகராறுகள் ஏற்படுகின்றன? அதன் காரணமாக மூடுவதும், திறப்பதுமாக இருக்கிறது. ஸ்டான்டர்டு மோட்டார்ஸ் நிறுவனமே இன்னும் சரியாக வேலை தொடங்கப்பட்டு, எல்லோருக்கும் வேலை கொடுக்கப்படவில்லை. இப்படி இருந்தால் தொழில் அமைதி எப்படி நிலவ முடியும்? இது இப்படி இருக்கும்போது மற்றொரு சிறு கார் தொழிற்சாலையை சேலத்திலே நிறுவப் போவதாகச் சொல்கிறார்கள். அது இப்போது தேவையா என்பதை நன்கு யோசித்துச் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, பஞ்சாலைத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. மூடப்பட்டப் பஞ்சாலைகளைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பல ஆண்டுகள் ஆகியும் இன்னும் திறக்கப்படவில்லை. மூடப்பட்ட ஆலைகள் திறக்கப்படவில்லையென்றால் 12 ஆலைகளையும் மாநில அரசாங்கமே ஏற்று நடத்தும் என்று சொன்னார்கள். அதற்கு மத்திய அரசாங்கத்தின் அனுமதிக் கேட்டிருப்பதாகவும் சொன்னார்கள். 2 ஆலைகளை மத்திய சர்க்கார் ஏற்று நடத்துவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதுவும் இன்றைக்கு ஒன்றைச் சொல்கிறார்கள்; நாளை வேறொன்றைச் சொல்கிறார்கள். மற்ற 10 ஆலைகளைப்பற்றிய நிலை என்ன என்பதைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. கேட்டால் மத்திய அரசாங்கத்தைக் கைகாட்டுகிறார்கள். 51 சதவிகிதம் மத்திய சர்க்கார் கொடுக்கிறார்கள். அதற்காக அவர்கள் தயவை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. முழு செலவையும் நாமே ஏற்றுக்கொள்வதாக இருந்தால் அவர்கள் தயவை எதிர்பார்க்க வேண்டியதில்லை. உடனடியாக திறந்து நடத்திவிடலாம்; எனவே, இதுபற்றி அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும்.

அடுத்தபடியாக கூட்டுறவுத் துறையை எடுத்துக் கொண்டால், இன்றைக்கு பல மில்கள் கூட்டுறவுத் துறையில் நடத்தப்படுகின்றன. கூட்டுறவுத் துறையில் நடத்தப்படுகின்ற ரைஸ் மில்ஸ் மாடர்ன் ரைஸ் மில்ஸ் எல்லாமே நஷ்டத்தில் ஓடிக் கொண்டிருப்பதாக கூட்டுறவுத் துறை அமைச்சரே சொல்லியிருக்

1972 மார்ச் 14] [திருமதி த. ந. அனந்தநாயகி]

கிறார்கள். ஏன் அப்படி நடக்கிறது என்பதை யோசிக்க வேண்டாமா? கூட்டுறவுத் துறையிலே மில்களை வைத்துக் கொண்டு, அதற்கு "கஸ்ட் ஹவுஸ்" என்றும், "ரெஸட் ஹவுஸ்" என்றும் கட்டி வைத்திருந்தால் ஏன் நஷ்டம் ஏற்படாது? எனவே அவைகளை எல்லாம் பரிசீலனை செய்து, லாபத்தில் இயங்கச் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக ஆங்காங்கே 'டானரி' தொழிற்சாலைகளைத் திறப்பதும் மூடுவதுமாக இருந்து கொண்டிருக்கிறது. நினைத்தால் திறப்பது, நினைத்தால் மூடுவது என்ற நிலை இருந்தால் வேலை வாய்ப்பு எப்படிக் கிடைக்கும்? தொழிலில் எப்படி அமைதி நிலவ முடியும்? இப்போது ரூரல் இண்டஸ்டிரீஸ் என்று ஒரு திட்டத்தைப் போட்டு, கிராமங்களிலே வேலை வாய்ப்பை ஏற்படுத்தப் போவதாகச் சொல்கிறார்கள். அதை எங்கே ஆரம்பிப்பது என்று யோசித்துச் செய்ய வேண்டும். இன்றைக்கு பல லெதர் யூனிட்டுகள் மூடப்பட்டிருக்கின்றன. தூத்துக்குடியில் பழம் பதனிடும் தொழிற்சாலை ஒன்று ஏற்படப் போவதாகச் சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள் இதேமாதிரி பல இடங்களில் தொழில்களை ஆரம்பிக்க திட்டம்போடுவதும், கைவிடுவதும், தொடங்கப்பட்ட டானரி யூனிட்டுகள் திடீர் திடீரென்று மூடப்படுவதும், திறக்கப்படுவதுமாக இருக்கின்றன. They are gathering wool; they are not doing anything else.

அடுத்து, இராமநாதபுரத்தில் டயர் தொழிற்சாலை தொடங்க திட்டமிட்டிருக்கிறார்கள். தொழிற்சாலை தொடங்குவதிலே தவறியில்லை. ஆனால் அதற்கு 4 லட்சம் காலன் தண்ணீர் தேவைப்படும் என்று சொல்கிறார்கள். இராமநாதபுரத்தில் 4 காலன் தண்ணீர் கிடைப்பதே கஷ்டம். அப்படியிருக்கும்போது 4 லட்சம் காலன் தண்ணீருக்கு என்ன செய்வார்கள் என்பதுதான் தெரியவில்லை. ஒருவேளை தொழிலமைச்சரின் ஊராக இருப்பதால், அங்கே டயர் தொழிற்சாலையைத் தொடங்க வேண்டுமென்று செய்திருக்கலாம். தொடக்கும்போது அதற்குவேண்டிய சூழ்நிலைகள் இருக்கின்றனவா என்பதையும் பார்க்க வேண்டும். கன்னியாகுமரியில் ரப்பர் கிடைக்கிறது. தண்ணீரும் தாராளமாகக் கிடைக்கிறது. ஆகவே, இந்த ரப்பர் தொழிற்சாலையை அங்கே வைத்தால் நன்றாய் இருக்கும். எங்கே, எந்தத் தொழிலை ஆரம்பித்தாலும், அந்தத் தொழில் நடைபெறுவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா என்பதை ஆராய்ந்து செய்தால் தான் நல்ல முறையில் செயல்பட முடியும்.

(Thiru S. Kandappan, in the Chair).

(The time bell was sounded).

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I want just five minutes.

MR. CHAIRMAN (THIRU S. KANDAPPAN) : Already it is late, I am sorry; hon. Members have to co-operate.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : It is very impossible in such Demands to finish so soon. My Leader is not speaking to-day.

MR. CHAIRMAN (THIRU S. KANDAPPAN) : You are the second speaker from your Party. You have already taken fifteen minutes.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Our Party Leader is not present to-day; if he is speaking you will give him a lot of time. So you give me some more time.

MR. CHAIRMAN (THIRU S. KANDAPPAN) : No, it is not possible. The hon. Member should finish in two minutes.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I leave it to you.

அடுத்தபடியாக சிறைச்சாலைத் துறையை எடுத்துக் கொண்டால் ஜுவினைல்களைப் பொறுத்த வரையில் அவர்கள் போலீஸ் இலாகாவின் பாதுகாப்பில் இருக்கிறார்கள். அது சரியல்ல. அவர்கள் குழந்தைகள் தெரியாத்தனமாகத் தான் குற்றம் செய்துவிட்டு அங்கே வருகிறார்கள். எனக்குப் பல தகவல்கள் வந்திருக்கின்றன. செங்கல்பட்டு போன்ற இடங்களில் போலீஸ்காரர்கள் அவர்களை இரக்கமில்லாமல் அடிக்கிறார்கள். இப்படிச் செய்வது மேலும் இந்த உலகத்தினிடத்திலேயே அந்தச் சிறுவர்களுக்கு வெறுப்பே உண்டாகும்படியாகத்தான் செய்யும். ஆகவே அவர்களைப் போலீஸ் இலாக்காவினரிடம் ஒப்படைப்பதற்குப் பதிலாக சோஷல் வெல்பார் டிபார்ட்மெண்டு அல்லது பெண்கள் நல இலாக்கா பாதுகாக்கக் கூடிய முறையில் அதை மாற்றி அமைக்க வேண்டும்.

அடுத்து, ஹாண்டுலூம்ஸ்—நீங்கள் எதிர்க் கட்சியில் இருந்தபோது அடிக்கடி —அதுவும், மாண்புமிகு அன்பழகன் அவர்கள்—கரை போட்ட வேஷ்டி, கரை போட்ட சேலை போன்ற சில ரகங்களை கைத்தறிக்கே ஒதுக்க வேண்டும் என்று பேசினார்கள். ஆனால் இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பில் இருக்கும்போது ஏன் அவர்கள் அப்படிச் செய்யக் கூடாது? சில ரகத் துணிகளையாவது நிச்சயமாக ஹாண்டுலூம்களுக்கே ஒதுக்க மத்திய அரசாங்கத்துடன் பேசி ஒரு

ஏற்பாட்டை நடைமுறைப்படுத்தினால்தான் கைத்தறி நெசவாளர்களுக்கு வழி பிறக்கும் என்று சொல்லி நேரம் இல்லாத காரணத்தினால் இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Hon. Mr. Chairman, with the little time at my disposal, I shall briefly express my views in support of the cut motion given on behalf of the Swathantra Party. We have moved a very clear cut motion, namely, 'to discuss about the present industrial stagnation in the State'.

I would like to pin-point my entire talk on one or two issues. I shall first refer to the industrial stagnation which is rampant. My charge against this Government is that we have practically come to a position where as I have already made a statement during the general discussion, our entire industrial progress has come to grinding halt. I have mentioned about this several times. Still, nothing seems to have been done to step up industrial growth in the State. I shall give an example from which we can find out whether there is sufficient industrial growth. There is a simple method. Let us just walk into the Engineering College or any Engineering Diploma Institution. We see a gloomy picture among the college students there, gloomy because they do not know whether there will be employment for them after passing out of the Institution. That is a simple, acid test. About five years ago, if we had walked into any of such institution, there was a buoyancy among the students. We can find out for ourselves by this simple method.

We have been constantly discussing about the Salem Steel Plant. It was said that it would come up immediately. The difficulty is when both sides talk about it, ultimately we end up making the whole issue a political issue and not an issue of facts and figures. The entire importance of the discussion is shifted to Salem Steel Plant. While that is important in itself, we have to think of other things also simultaneously. I will ask one question of the Hon. Minister for Industries whether during the last five or six years we have really opened any industry worth its name. We have not been able to open anything. Before 1967, during 1960-67, during Mr. R. Venkataraman's period—I have nothing against the present Minister—he is an intelligent man, he is doing his best—there was tremendous progress. After that

we have not broken any ground and the whole matter is in a stand still. Between 57 and 67, during that decade, there was tremendous industrial growth. Even then I was charging that it was not satisfactory. When compared to that now the position is much worse. Unless something is done we will be faced with a chaotic condition. For, this is directly linked up with productivity and employment. They are the major issues and they have to be tackled.

We have been furnished with figures and our Industries Minister also has intelligently broken the whole thing into small bits and given it as though in a tablet form for us to consume them better. In spite of his best salesmanship in giving out his ideas, I do not find anything substantial. A very important factor is this. I want all the political parties, irrespective of party affiliations to consider whether the industrial climate in our State has not been deteriorating of late. This is a very important matter and all members belonging to all political parties should bestow thought. There was severe industrial unrest in West Bengal and a number of industries started getting out of that State. I was hoping—though I am not sorry for what has happend—that some of them would move into Tamil Nadu. But I have some information that some of those industries which could have flowed here, have gone to Andhra and Mysore. I would like to know whether it is possible for the Government to take stock of the situation and improve the industrial climate in our State.

Another factor that is chasing away industries from our State is the high electricity tariff. I hope the Hon. Minister is concerned about it. There was also an answer by the Minister for Electricity with regard to tariff rates in different States and it showed that the tariff in Tamil Nadu was very high. It should be considered if anything could be done to reduce the rate so that the temptation to go to other States should be nipped in the bud.

I would like to know from the Hon. Minister what facts and figures he collected when he went to America and other countries. When he went abroad, I thought he would come here with some good material. I do not find anything worthwhile, except Hydro-sulphate and Soda plant. I do not know whether a market survey had been done for the products where we will be

able to sell our products and whether there is a glut in the market for hydro-sulphat. I am afraid that unless we approach the whole subject in a pragmatic manner, it will not be possible to solve the problem. Let the Hon. Minister come down from his cock-sure and set idea position. How is it Maharashtra is going forward? Our State was the second. We are losing ground very rapidly.

Another matter I want the Hon. Minister to consider is this, We do not have basically intra-structure of raw materials. It is very very important. It is true that the Industries Demand is to the tune of three crores and something more or something else, totalling 8 or 9 crores. But my point is how much of generation of industries we will be able to achieve because of the amount we invest in the various sectors, by creating a situation of investment climate. That is my point.

Sir, I would be very happy if more industries are strated in the public sector and I have nothing against it and let us do something about it, instead of thinking that whatever is written in books is taking place.

Then, as my hon. Friend, Thiru Subramaniam, has pointed out we must exploit the skilled workers that we have. Otherwise, we will be losing industries and we will have a drain like the brain-drain that we have been talking about. From our State the skilled workers are being drained to other States. As this is an important matter, I would request the Hon. Minister to consider how he is going to exploit the skilled workers.

Then I come to the Small-Scale Industries. I have to give my compliment to the Hon. Minister for Industries because the small-scale industries are doing a little better. From the record I have seen, they have come out of the red portion to the blue portion and they have been making a little profit. I would be happy, if they would step up the machinery and earn more profit. In the last three or four years they had been making an alarming loss and now I am glad that they are making a profit. In this connection, I would like to point out that apart from the small-scale units in the public sector, there is also a huge private sector units. According to the Review of the Industrial Growth in Tamil Nadu (Small Scale Industries) in 1969 there were

5,619 units and during 1971 it has dropped to 3,012. Why it has dropped? This must be looked into. Also, according to my information, most of these industries are not working to full capacity. That is because some spurious entrepreneours had started them with the financial help of the Government. They have spoken nice words to the Government and they got financial assistance from the Government. This is the case in most of the Departments. If they are started by the persons who have got ideas, they would normally not bother about praising the Government and saying hypocritical things. So we must give financial assistance only to the genuine persons who will be able to deliver the goods and who will not waste their time. Now there are 15,000 units and how many of them are working to full capacity? According to my information, many of them have been closed and there is no production in these units. We must have small-scale industries as they are in the Punjab.

Then, what has happened to the State Planning Commission? I was wondering whether they could give some idea or constructive suggestions about the industrial development of our State. Although the Hon. Chief Minister had flambuoyantly announced the appointment of the Planning Commission, nothing seems to have happened. They do not seem to have done anything. I am not making a charge against them. They might be having some secrets and let us know what the secrets are.

Then I come to the motor car industry. I disagree with the Madam who has just now spoken against the starting of another motor car industry. Even though we have a motor car industry at Vandalur, we can have another motor car project. After meeting our requirements, we can export motor cars to other States. We should start as many industries as possible provided they are worked properly.

Then I come to the sugar industry. It is in total chaos, especially in the co-operative sector. In this connection, I wish to draw the attention of the House to page 45 of the Review relating to the Handloom and Textile and Sugar Industries. The Ambur Co-operative Sugar Mills sustained a net loss of Rs. 10.69 lakhs; Madurantakam Sugar Mill Rs. 9.17 lakhs, Kallakurichi Sugar Mills Rs. 19.96 lakhs, Salem Sugar Mills about Rs. 15 lakhs, and

the National Sugar Mills about Rs. 26 lakhs. This is something very serious. We do not know why this has happened. The Hon. Minister has stated that there is increased recovery of sugar from sugarcane and that there is an increase from 8 per cent to 9½ per cent. But the losses are increasing. When there is a higher recovery, why should there be loss? So far as the sugar mills in the private sector are concerned, they are also in chaos though the price of sugar in the open market is high. There is something wrong in the sugar industry and it has to be properly diagnosed and no quackery treatment is possible and I request the Hon. Minister to look into the matter.

Then one point about the Arakonam Steel Plant. We have spent nearly Rs. 5½ crores on it. Are we sure that we are going to get enough raw material, scrap iron for that industry? This is the second or third time I am referring to it. What are the steps taken by this Government to get the raw material. Last year during the reply or during question-hour the Hon. Minister had stated that he was going to take steps to get it? Has he taken steps to get it? Otherwise, we will not be able to run the Plant.

Then I come to the handloom weavers. I do not think that there is any hon. Member who is not aware of the pathetic state of affairs of the handloom weavers. In my constituency, there are 5,000 handloom weavers. It is tragic to see their way of life. What are the concrete steps that the Government are going to take to rehabilitate these people? That is an important point which the Government must consider.

Then I want to refer to some of the points which the Members belonging to my Party wanted to bring to the attention of the Government. Thiru Venkataswamy wanted that the proposed cigarette factory in the Dharmmapuri district should be started in Hosur because he claims that there is a lot of tobacco grown there. I leave it to the Government to do the right thing in the matter.

Then I come to the silk industry. We should give lands and loans to the persons who want to produce Mulberry and the lands should be assigned to them.

There is one more point which my hon. Friend Mr. Guruswami wanted me to tell. In Chakkampatti and Suppilapuram in The Hon. Minister says, there is not enough land. I leave it at

Madurai district, we have received complaints that the weavers' position is pathetic and serious crisis is taking place. I hope and trust that something will be done to solve the problem immediately as an *ad hoc* measure. I hope the Hon. Minister will refer to this in his reply and this problem will receive his serious consideration.

I would again repeat that the state of affairs in Tamil Nadu is very serious. We have been faced with closure of several factories. Textile crisis is there. Simpson is almost closed. There is lay off at Ashok Leyland and there is also lay off at VIMCO. Standard Factory is not working to its full capacity. No new factory worth the name has been started in Tamil Nadu. Such is the pathetic situation. I am sorry that nothing is being done to improve matters. If still, the Hon. Minister is optimistic enough, in spite of my capacity to understand him, I am afraid I have to state that I am not sharing his optimism.

Thank you.

* **மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தொழில் துறை மானியத்திலே பல கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும் உறுப்பினர்களும் தமிழ்நாட்டிலே வேகமாகத் தொழில் வளம் காண வேண்டுமென்ற நல்ல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள்.

இந்த அரசாங்கத்தைப் பொறுத்த அளவிலே அதிலே வேறு கருத்துக் கொள்வதற்கு வேறு வாய்ப்பே கிடையாது. இதுவரை நாம் தொழில் வளம் கண்டிருந்தாலும் இன்னும் வேகமாகப் பல மடங்கு அதிகமாக வேகமாகச் செல்ல வேண்டுமென்ற கருத்தைத்தான் இந்த அரசு கொண்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய நல்ல கருத்துக்களை ஆராய்ந்து அரசு நல்ல முறையிலே செயல்படும் என்ற உறுதியை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்திய நாட்டிலேயே தமிழ்நாட்டைப் பொறுத்த வரையிலும் மிகச் சிறப்பாகத் தொழில் வளத்தைக் காணவேண்டுமென்று ஆசைப்படுவதிலே தவறில்லை யென்று கருதுகிறேன். தமிழ்நாட்டிலே தேவைப்படுகிற அளவுக்குத் தொழில் வளத்தை நாம் கண்டுவிட்டோம் என்று வாதாடுவதற்கு நான் ஆசைப்படவில்லை. ஆனால் அதே சமயத்திலே தமிழ்நாட்டிலே தொழில் முன்னேற்றமே இல்லை. இந்த மாநிலத்திலே ஒன்றுமே நடைபெற வில்லை என்று பேசுவதும் அவ்வளவு பொருத்தமாகாது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எதிர்க்கட்சி என்ற காரணத்தினாலே அப்படிப் பேசுவது வாடிக்கையாக இருக்கலாம். இன்றைக்கு ஏராளமான புள்ளி விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன.

1972 மார்ச் 14] [திரு. செ. மாதவன்]

சென்ற முறை அங்கத்தினர்கள் சொல்லிய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு நம்முடைய தொழில் துறை எந்த எந்த முறைகளில் ஈடுபடுகிறது என்பது எல்லாம் விவரமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தொழில் துறையிலே இந்த அரசாங்கம் அதிக அக்கறை காட்டுகிறது என்பதை ஏராளமான புள்ளி விவரங்களிலேயிருந்து நாம் காணலாம்.

அரசாங்கத்தின் சார்பிலேயிருந்து தொழில் துறைக்கு நாம் முதலீடு செய்கிறோம். அந்தப் புள்ளிவிவரங்களைக் கணக்கிட்டுப் பார்த்தாலே இந்த அரசின் கீழே எவ்வளவு அதிகமான வாய்ப்பு தொழில் துறைக்குக் கொடுக்கிறோம் என்பதைப் புரிந்து கொள்ளலாம். தொழில் துறைக்கு முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஒன்றரைக் கோடி ரூபாய் கொடுக்கப்பட்டது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே பதினைந்து கோடி ரூபாய் கொடுக்கப்பட்டது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 23 கோடி ரூபாய், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 64 கோடி ரூபாய் இதற்காக ஒதுக்கியிருக்கிறோம். 1969-70-ம் ஆண்டிலே 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது, 1970-71-ம் ஆண்டிலே 6 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது; 1971-72-ம் ஆண்டிலே 8 கோடி ரூபாயாக உயர்த்தி ஒதுக்கியிருக்கிறோம் என்றால் தொழில் துறையை இந்த அரசு புறக்கணித்துவிட்டது என்று ஒட்டு மொத்தமாகச் சொல்வது சரியல்ல வென்பதை இந்தப் புள்ளிவிவரங்கள் விளக்கும் என்று கருதுகிறேன்.

மாநிலத்தில் ஏராளமான தொழில்கள் வளர்ந்திருக்கின்றனவா என்பதைக் கண்டுகொள்ள மின்சாரத்தை எந்த அளவுக்குப் பயன்படுத்தி இருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்த்தால் புலப்படும். தமிழ்நாட்டிலே 1966-67-ம் ஆண்டிலே 1,773 மில்லியன் யூனிட்டுகளாக மின்சாரத்தை தொழில் வளர்ச்சிக் காகப் பயன்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் 1970-71-ம் ஆண்டிலே 2,730 மில்லியன் யூனிட்டுகள் அளவுக்கு மின்சாரம் பயன்படுத்தி இருக்கிறோம். இந்த எடுத்துக்காட்டுகள் எல்லாம் தமிழ்நாட்டிலே தொழில் வளம் எவ்வளவு விரைவாகச் செயல்படுகிறது என்பதை உணர்வதற்குப் பயன்படும் என்று கருதுகிறேன்.

இண்டஸ்ட்ரியல் புரடக்ஷன், உற்பத்தியைப் பொறுத்த அளவில், நாம் இன்னும் அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டுமென்று சொல்வார்களானால் ஆட்சேபணையில்லை. ஆனால் இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு ஒன்றுமே இல்லை, என்று சொல்வார்களானால் அதை நான் ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை. 1960-ம் ஆண்டிலே 100 புள்ளிகள் தொழில் வளர்ச்சி என்று எடுத்துக் கொண்டால் 1971-ஆம் ஆண்டிலே 189 புள்ளி என்ற அளவுக்கு வளர்ந்திருப் பதைப் பார்க்கிறோம். ஆகவே, புள்ளிவிவரங்கள் எல்லாம் இந்த ஆட்சி தொழில்

வளர்ச்சியிலே எவ்வளவு சிறப்பாகச் செயல்படுகிறது என்பதைக் காட்டுகிறது, இதை யெல்லாம் சொல்வதற்கு எதிர்க் கட்சியினர் அச்சப்படுகிறார்கள்.

இந்த அமைச்சரவை ஏற்பட்டதற்குப் பின்னாலே தொழில் வளர்ச்சி இல்லை, புதிய தொழில்கள் வரவில்லை என்ற குற்றச் சாட்டுச் சொல்லப்படுகிறது. தமிழ் நாட்டிலே இந்திய அரசாங்கம் நிறைய புதிய தொழில்களைத் தொடங்க வேண்டு மென்றுதான் இந்த அரசு விரும்புகிறது, அதுதான் இந்த அரசின் கொள்கை. கொடுத்தது போதும் என்று நாங்கள் ஒத்துக்கொள்ளத் தயாராக இல்லை. இதற்காகத்தான் தொழில்களுக்கான அனுமதியை மத்திய அரசாங்கம் வைத்துக் கொண்டு நம்முடைய மாநிலத்திற்கு வருகிற தொழில்களைத் தடுக்கக் கூடாது என்று வாதாடி வருகின்றோம். 1966-ம் ஆண்டிலே அனுமதி, முன்அனுமதி—லைசென்ஸிங் அன்ட் லெட்டர் ஆப் இன்டன்ட்—மொத்தம் கொடுத்தது 55. ஆனால் 1971-ம் ஆண்டிலே மொத்தம் கொடுத்தது 124. இதைப் பார்த்தபின் எப்படி தொழில் வளர்ச்சி இந்த ஆட்சியிலே குன்றியது என்றும், தொழில் துவங்க யாரும் முன்வர மாட்டார்கள் என்றும் கூறி வருகிறார்கள் என்பது புரியவில்லை. இதுவும் போதாது என்று இந்த அரசாங்கம் வலியுறுத்தி வருகிறது.

தொழில்களுக்கு முதலீடு செய்ய அரசாங்கம் உதவி செய்வதைப்பற்றி முன்பு குறிப்பிட்டேன். தனியார் துறையிலே முதலீடு செய்வதற்கு தேசிய மயமாக்கப்பட்ட பேங்குகள் மூலம், கமர்ஷியல் பாங்குகள் மூலமாகவும், இந்திய அரசாங்கத்தினுடைய நிறுவனமாக இருக்கிற ஐ.எப்.சி. யின் மூலமாகவும், ஐ.டி.பி.ஐ. மூலமாகவும் பணம் எவ்வளவு அதிகமாக தொழில் துறைக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை ஒப்பிட்டுப் பார்த்தால் நான்கைந்து ஆண்டுக் காலத்திலே எவ்வளவு அதிகமான தொழில் வளர்ச்சியைக் கண்டிருக்கிறோம் என்பதை உணரலாம். இதை யெல்லாம் எடுத்துக் காட்டி மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுக் காட்டினால் நாம் இன்னும் வளர வேண்டும் என்று மத்திய அரசிடத்திலே சொல்வதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும் என்று நினைக்கிறேன்.

1966-ம் ஆண்டிலே கமர்ஷியல் பாங்குகள் மூலமாக தமிழ்நாட்டிலே மூலப் பொருள்கள் வாங்குவதற்காகக் கொடுத்தது 11 கோடியே 40 லட்சம் ரூபாய். ஆனால் 1970-ம் ஆண்டிலே 24 கோடியே 64 லட்சம் ரூபாய் கமர்ஷியல் வங்கிகள் மூலமாக மட்டும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அதேபோன்று மத்திய அரசாங்கத்தின் நிறுவனமாக இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் பாங்க் ஆப் இண்டியா மூலமாகக் கொடுத்திருப்பதை மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது நாம் பின்னாலே போய்க் கொண்டிருக்கிறோம் என்று யாரும் சொல்லிவிட முடியாது. நாம் இன்னும் கொஞ்சம்

முந்திச் செல்ல வேண்டுமென்று சொன்னால் நாங்கள் ஒத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். இந்தியாவிலேயே தமிழ்நாடு இரண்டாவது இடத்தை வகிக்கிறது. இரண்டாவது இடத்தை வகிக்கிறது என்று பெருமை சொல்லத் தயாராக இல்லை. காரணம் முதல் இடத்திற்கும் இரண்டாவது இடத்திற்கும் நிரம்ப வித்தியாசம் இருக்கிறது. ஐ.டி.பி.ஐ. மூலமாகக் கொடுத்ததில் மகாராஷ்டிரா மாநிலம் முதல் இடத்தை வைக்கிறது, 2,698 லட்சம் கொடுக்கப்பட்டிருக்கிறது, நமக்கு 645½ லட்சம்தான் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இரண்டாவது இடம் என்று சொன்னாலும் கூட இன்னும் அதிகமாகப் பெற வேண்டுமென்று சொல்லவேண்டிய நிலையிலே நாம் இருக்கிறோம். எங்களுடைய ஆட்சியிலே ஒன்றுமே இல்லையென்று எண்ணுகிறவர்கள் புரிந்து கொள்ளலாம்.

1967-68-ம் ஆண்டிலே அதாவது எங்கள் ஆட்சியில் முதல் ஆண்டு 367 லட்சமாக இருந்தது இந்த ஆண்டு இரண்டு மடங்கு அதிகமாகி 645 லட்சம் ரூபாய் ஆகியிருக்கிறது என்றால் எப்படி தொழில் வளம் குறைவதற்கு இது ஆதாரமாகும் என்பதைப் பார்க்க வேண்டும். மத்திய அரசாங்கத்தின் நிறுவனமாக இருக்கும் ஐ.எப்.சி. மூலமாக தொழில்களுக்கு உதவி செய்யக்கூடிய நிலையிலே இந்தியாவிலே நம்முடைய தமிழ்நாடு இரண்டாவது இடமாக இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை இன்னும் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்பதுதான்.

1966-67-ம் ஆண்டில் இந்தத் தமிழ்நாட்டினுடைய தொழில் வளர்ச்சிக்காகப் பெறப்பட்ட தொகை மகாராஷ்டிரத்திற்குப் பெறப்பட்ட தொகையோடு ஒப்பிட்டுப் பார்க்கும் நேரத்தில் இரண்டாவது இடம். 1971-72-லேயும் நாம் இரண்டாவது இடத்திலே இருக்கிறோம். முதலில் மகாராஷ்டிரத்திற்கு 248 இலட்சம், நாம் பெற்றது 105 லட்சம். இப்படி நம்முடைய மாநிலத்திற்கு அதிகமாகப் பெற்று இரண்டாவது இடத்தை நாம் பெற்றிருந்தாலும் இன்னும் அதிகமாகப் பெற வேண்டுமென்ற கொள்கையைத்தான் நம்முடைய மாநில அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இப்படித் தொழில் வளர்ச்சிக்காக எடுத்துக் காட்டியிருக்கும் சில புள்ளிவிவரங்களின் அடிப்படையில் பார்க்கும் நேரத்தில் அதிகமாக தொழில் வளர்ச்சியை நம்முடைய மாநிலம் காண முடிந்திருக்கிறது என்பதை உணர்வார்கள் என்று நான் கருதுகிறேன்.

தமிழ்நாடு அரசு அளிக்கும் தொழில் வாய்ப்புகள் எந்த அளவில் இருக்க வேண்டும், முழுவதும் தனியார் துறைக்கா, முழுவதும் கூட்டுத் துறைக்கா அல்லது அரசுத் துறையா என்பதுபற்றி யெல்லாம் விவாதிக்கப்பட்டது. ஆனால் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் கூறுவதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. அதற்குக் காரணம் அவர்கள் தங்கள் கொள்கைகளைச் சொல்கிறார்கள். ஆனால் காங்கிரஸ கட்சியின் சார்பிலே கூறப்படுவதைக் காணும

போதுதான் நான் வருத்தப்படுகிறேன். அதற்குக் காரணம் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தொழில் கொள்கை வகுக்கப்பட்டு பல்வேறு தொழிற்சாலைகளில் அரசாங்கத்தின் பணம் முடக்கப்பட்டு எந்தவிதமான பொறுப்பும் அரசாங்கத் திற்கு இல்லாத ஒரு சூழ்நிலை இருந்தது. அது தவறு, குற்றம் என்று இவை களுக் கெல்லாம் நாம் போகவில்லை.

ஆகவே, நம்முடைய ஆட்சிக்காலத்தில் புதிய கொள்கை வகுக்கப்பட்டு, தனியார் துறையை எந்த அளவிற்குப் பயன்படுத்த வேண்டும், அவர்களது ஆற்றலை எப்படிப் பயன்படுத்துவது என்று பார்த்து, நாம் போடும் மூலதனம் மத்திய சர்க்கார் நிறுவனங்கள் மூலதனம் இரண்டும் சேர்ந்து எந்தச் சமயத் திலும், இங்கு சுட்டிக் காட்டியதைப்போல், சில ஆலைகள் மூடப்படும்பொழுது நாம் அதிக மெஜாரிட்டி என்ற முறையிலே அந்தத் தொழிலை எடுத்து நடத்தவும், நடைமுறையிலே ஆண்டுதோறும் என்னென்ன நடவடிக்கைகள் என்று பார்க்க —ஒரு டைரக்டர் போடுவதெல்லாம் அந்தக் காலம்—ஆனால் நம்முடைய ஆட்சி யிலே நாமும் மத்திய சர்க்காரும் சேர்ந்துவிட்டால் அந்தத் தொழிற்சாலையில் எந்தத் தவறும் நடக்காமல் பார்த்துக்கொள்ள, கண்காணித்துக்கொள்ளக்கூடிய முறையில் கூட்டுத் தொழில் கொள்கைகள் எந்த அளவில் வகுக்கப்பட்டு இருக் கிறது என்பதைப் பற்றி எண்ணிப் பார்க்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேசமயத்தில் தமிழக அரசின் சார்பில் தொழில் துறையில் நாம் மூலதனம் போட்டால் நமக்கு லாபம் வரும், அது பொதுமக்கள் லாபமாக வருகிறது. அந்தக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு நாம் எவ்வளவு முயற்சிகள் எடுத்திருக்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். இந்த இரண்டாண்டுகளுக் குள்ளாக நாம் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் 'லெட்டர் ஆஃப் இன்டென்ட்', முன் அனுமதி பெற்றது கிட்டத்தட்ட 15. இதற்காக நாம் 50 கோடி ரூபாய்க்கு மேல் முதலீடு செய்யத் திட்டமிட்டிருக்கிறோம். 50 கோடி ரூபாயில் 15 தொழிற்சாலைகள் அரசாங்கத்தின் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் சார்பிலே உருவாக்கப்பட்டதை இந்த இருபதாண்டுக் காலத்தில் பார்த்திருக்க முடியுமா? இல்லை என்று இங்கே சொல்லாவிட்டாலும் பின்னல் ஒத்துக்கொள் வார்கள் என்று நினைக்கிறேன்.

அதைப்போலவே நாம் மொத்தமாக இந்தத் தொழில் வளர்ச்சிக் கழகத்தில், 'டிட்கோ' வில் மாநில அரசு தொழில்கள் நடத்த முதலீடு செய்திருப்பதைப் பார்க்க வேண்டும். 1966-67 வரையில், தொடங்கப்பட்ட ஓரிரு ஆண்டுகளில் மொத்தம் தொழிற்சாலைகளுக்கான அரசு மூலதனம் 61 லட்சம் ரூபாய். ஆனால் 1967-லிருந்து இந்த 1971-72 வரையில், கிட்டத்தட்ட நான்கைந்தாண்டுக் காலத்தில் மூலதனம் 1,546 லட்சம் ரூபாய். இதிலிருந்து எப்படி பொதுத்

துறைக்கு ஊக்கம் தராது, தனியார் துறைக்கு ஊக்கம் தருகிறேம் என்று சொல்ல முடியும். அரசு மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டு லாபம் பொது மக்களுக்குக் கிடைக்க வேண்டும் அரசின் மூலம் என்ற எண்ணத்தின் அடிப் படையில் செயல்பட்டு வருகிறேம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

அதேபோல் சிறு தொழில்களுக்கு அதிகமாக ஊக்கத்தைத் தர வேண்டும், பொருளாதாரத்தில் அது மிகத் தேவை என்று எண்ணி பொருளாதார வசதி பலருக்கும் கிடைக்க வேண்டுமென்ற எண்ணத்தில் சிறு தொழில்களை ஊக்குவிக்க வேண்டுமென்பது கொள்கை. அதை நிறைவேற்றியிருக்கிறேமா என்பதை புள்ளிவிவரங்களைப் பார்த்தால் புரிந்துகொள்ளலாம் என்று நினைக் கிறேன். "தமிழ்நாடு இண்டஸ்டிரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன்", டி.ஐ.ஐ.சி., இந்த நிறுவனத்தில் அரசாங்கத்தின் பங்கு முதலீடு உள்ளது. சிறு தொழில்களை ஏற்படுத்த வேண்டுமென்ற புதிய கொள்கையை நாம் பொறுப் பேற்ற பிறகு எடுத்துக்கொண்டதன் விளைவாக, 1966-67-இல் 8 லட்சம் ரூபாய் சிறு தொழில்களுக்கு இந்த நிறுவனத்தின் மூலம் உதவி செய்யப்பட்டு, 1970-71-ஆம் ஆண்டு 118 லட்ச ரூபாய் சிறு தொழில்களுக்காக இந்த நிறுவனத்தின் மூலம் உதவி செய்யப்பட்டிருக்கிறது. அந்த அளவிற்கு சிறு தொழில்கள் பரவ வேண்டுமென்று அக்கறை காட்டி முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறேம். அது மட்டுமல்லாமல் இந்த நிறுவனம் சென்னையிலிருந்து செயல்படுவதோடு இல்லாமல் கிளை அலுவலகங்களை மாநிலத்தின் பல பகுதிகளில் வைத்து பலருக்கும் உதவுவதில் வெற்றி பெற்றிருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப் பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சிறு தொழில்கள் வளர்ச்சி பற்றி இந்த இரண்டாண்டுக் காலத்தோடு ஒப்பிட்டுப் பார்த்துப் படித்தார்கள். அது உண்மைதான். அதுவும் அதிகமாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென்பதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனல் இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு எந்த அளவிற்கு சிறு தொழில்கள் பெருகி இருக்கிறது என்பதைக் கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். 1966-ம் ஆண்டு வரையில் தமிழ்நாடு சிறு தொழில்கள், எஸ்.எஸ்.ஐ. யூனிட்ஸ் 11,500, ஆனல் இந்த நான்கு ஐந்தாண்டுக் காலத்தில் மட்டும் 13,690 தொடங்கப்பட்டுள்ளன. அந்தக் காலத்தில் எவ்வளவு, இந்தக் குறிப்பிட்ட நான்கைந்தாண்டுக் காலங் களில் எவ்வளவு உயர்ந்துள்ளது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இவை யெல்லாம் ஒழுங்காக, சீராக நடைபெற அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கை களை வரவேற்பார்கள் என்று எண்ணுகிறேன். ஆனல் ஒன்றைச் சொன்னர்கள். சிறுதொழில் வளர்ச்சிக்காக எந்த அளவிற்கு மூலப்பொருள்களைச் சேர்த்துக் கொடுக்கிறேமோ அந்த அளவிற்கு வெற்றி. இந்தத் தொழில் கூடங்களில் வேலை

நடக்கவில்லை, ஏமாற்றுகிறார்கள் என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. ஆனால் மூலப் பொருள்கள் கிடைக்காததால் சில சிக்கல்களுக்காளாகிறார்கள். மீடியம் இண்டஸ்ட்ரீஸ் 1966 வரையில் 30, 1967-68-இலிருந்து இந்த நான்கைந்தாண்டுக் காலத்தில் 82. எப்படி இந்த அரசு தொழில் வளர்ச்சியிலே கவனம் காட்டவில்லை என்று சொல்ல முடிகிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்த மன்றத்தில் அருமையான புத்தகங்களில் விவரமான கருத்துக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதை எடுத்துக் கொண்டுவர எல்லோரும் மறந்து விடுவார்கள் என்பதற்காக இங்கேயே வைக்கச் சொன்னோம். இதைக் கட்டாயம் படித்து தங்கள் தங்கள் தொகுதியிலே இதைப் பயன்படுத்திக் கொண்டு தொழில் வளர்ச்சி காண்பதில் அக்கறை காட்டுவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

புதிதாக சிறுதொழில் வாரியம் ஏற்படுத்தியிருக்கிறது. மிகச் சில நாட்களுக்குள்ளே அது ஆற்றியிருக்கும் பணிகளை இதில் பார்க்க முடியும். சில மாதங்களுக்குள்ளாக மொத்தமாக உதவி செய்த தொகை, பல்வேறு வகைகளிலும் சிறு தொழில்களுக்காக 91 லட்சம். இதை எண்ணிப் பார்க்கும்பொழுதே வியப்பைத்தரவில்லையா? மிக வேகமாக முன்னேறிக்கொண்டிருக்கிறோம். மூலப்பொருள்களை வழங்கும் பெரும்பொறுப்பை 'சிட்கோ' விடம் ஒப்படைத்திருக்கிறோம். அவைகளை புள்ளி விவரங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் எளிதில் புரியும். 1969-70-இல் அந்த ஆண்டிலே 95 லட்சம் ரூபாய் மூலப்பொருட்களை வழங்கியிருக்கிறார்கள். 1970 ஏப்ரல் முதல் 1971 மார்ச் வரையில் 166 லட்சம் ரூபாய்க்கும், 1971-72-இல் சில மாதங்களிலே 313 லட்சம் ரூபாய்க்கும் மூலப் பொருள்கள் வழங்கியுள்ளார்கள். மராட்டிய மாநிலத்தில் நடைபெற்ற சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தை ஆராய்ந்து நம் மாநிலத்தில் இப்புதிய நிறுவனத்தை கொண்டு வந்தோம். இந்த நிறுவனம் ஏராளமானச் சிறு தொழில் செய்பவர்களுக்கு மூலப்பொருள்களைச் சேகரித்துக் கொடுப்பதற்கு எடுத்துக் காட்டாக அமையும் என்று நான் கருதுகிறேன்.

அதேபோல், சக்தியற்றவர்கள், வலுவற்றவர்கள், சாதாரணமானவர்கள் ஒன்றாகச் சேர்ந்து கூட்டாக நடத்த வேண்டுமென்றால் அந்தக் கூட்டுறவுத் துறைக்கும் ஊக்கம் தருகிறோம். இதற்கென தனி வங்கி நம் மாநிலத்திலே சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. 1966-67-இல் ரூ. 17½ லட்சம், ஆனால் 1969-70-இல் ரூ. 41 லட்சம் இந்த வங்கி வழங்கியுள்ளது. இப்படி 17½ லட்சம் எங்கே, 41 லட்சம் எங்கே என்பதை எண்ணிப் பார்த்தால் கூட்டுறவுத் துறையிலே எந்த அளவிற்கு நம்மாலே அதிக உதவி செய்ய முடிந்திருக்கிறது என்பதை உணர முடியும்.

அடுத்து டான்சி, அரசாங்கமே நடத்துகின்ற 60 யூனிட்டுகள். அது எப்படி நடைபெற வேண்டும், அதிக லாபம் சம்பாதிக்க வேண்டும், இப்பொழுது

1972 மார்ச் 14] [திரு. செ. மாதவன்]

கொஞ்சம் லாபம் எடுத்திருந்தாலும் போதாது என்று வலியுறுத்தப்பட்டது. அது நியாயம்தான், அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். முயற்சிகள் எடுத்து அரசாங்கம் தொடர்ந்து நடத்தும். நஷ்டம் என்றால் ஏதோ அரசாங்கத்தின் கொள்கையினால் ஏற்பட்டுவிட்டது என்பது அல்ல என்பதைப் புள்ளிவிவரங்கள் காட்டும் என்று கருதுகிறேன். இந்த நிறுவனத்தில் உற்பத்தி 1965-66-ல் 389 லட்சம் ரூபாய், 1971-72-இல் 803 லட்சம் ரூபாய். விற்பனை 1965-66-இல் 342 லட்சம் ரூபாய், 1971-72-இல் 798 லட்சம் ரூபாய். இப்படி உற்பத்திப் பெருக்கையும், விற்பனையையும் காட்டியிருக்கிறோம்.

ஆனாலும் நஷ்டம் ஏற்படுகிறது, அதற்கு விவரத்தைச் சொல்ல வேண்டுமென்றார்கள். முன்னால் இந்த மன்றத்திலே விவரமாகச் சொல்லி இருக்கிறேன். உற்பத்திச் செலவு மட்டுமல்ல; மூலப்பொருள் விலையேற்றம் மட்டுமல்ல; அங்கு பணியாற்றுகின்றவர்களுக்கு ஏராளமான பணத்தை ஊதியத்தின் மூலமாகவும், பஞ்சப்படி மூலமாகவும் செலவழிக்கப்பட்டுள்ளது என்ற காரணத்தை நான் ஏற்கனவே இந்த மன்றத்தில் எடுத்து விளக்கிச் சொல்லியிருக்கிறேன். அந்த நிறுவனமானது மிகவும் நல்ல முறையில் வேகமாக தொழில் வளர்ச்சி ஏற்படக் கூடிய விதத்தில் பணியாற்றி வந்திருக்கிறது. தொழில் வளர்ச்சிக்கு நேரடியாகவும், நிறுவனத்தின் மூலமாகவும் எந்த அளவுக்கு உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன என்ற புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

எல்லா அங்கத்தினர்களும் கைத்தறித் தொழிலைப் பற்றியும், பொதுவாக டெக்ஸ்டைல் தொழில் பற்றியும் மிகுந்த கவலை தெரிவித்தார்கள். அந்தக் கவலையை நானும் பகிர்ந்து கொள்ளுகிறேன். நம் நாட்டில் பல லட்சம் மக்கள் நம்பி இருக்கும் இந்தத் தொழில் சிறப்பான முறையில் வளர்ச்சியடைந்திருக்கிறதா என்பதிலே கருத்து வேறுபாடு இருக்கலாம். பல ஆண்டுகளாகத் திட்டவட்டமாக முடிவு எடுக்காததால், நம்முடைய நாட்டில் பஞ்சு உற்பத்தி அதிகமாக இல்லை. உற்பத்தியாகிற நூலுக்கு வெளி மாநிலச் சந்தையைத்தான் நம்பி இருக்கும் நிலைமை இருக்கிறது. இந்தச் சூழ்நிலையை மாற்றியமைத்து பொருளாதாரக் கண்ணோட்டத்தோடு அரசியல் கலப்பு இல்லாது கைத்தறி வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டுமென்ற கருத்தை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

காங்கிரஸ் கட்சியின் சார்பில் மாறுபட்ட கொள்கைகளைச் சொன்னார்கள். எது உண்மையான கொள்கை என்று புலப்படவில்லை. திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் ‘உடனடியாக ஏராளமான விசைத்தறிகளைக் கொண்டு வர வேண்டும்; வெளியிலே என்ன விளைவு ஏற்பட்டாலும் பரவாயில்லை; அதுதான் நெசவாளர்களுக்கு வாழ்வைத் தரும்’ என்று சொன்னார்கள். ஆனால், அவர் ஏற்றுக் கொண்டிருக்கும் தலைவர்கள் வெளியே பேசும்போது ‘விசைத்தறியைக்

கொண்டு வந்து கைத்தறி நெசவாளர்களைப் பட்டினி போட்டுச் சாகடிக்கப் பார்க்கிறது இந்த அரசு' என்று கூறுகிறார்கள். முன்பு திரு. பொன்னப்ப நாடார் தெளிவாக எடுத்துத் தெரிவித்தது போல், விசைத்தறிகளை நெசவாளர்களுக்குப் பாதகம் இல்லாத அளவுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொண்டு வரவேண்டும். அதே சமயத்தில் அந்த நெசவாளர்களுக்கு அரசாங்கம் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். தனி நபர்களை உற்சாகப்படுத்தாமல் அதற்கு மாறாக நெசவாளர்களுக்கு நேரடியாக உதவி செய்ய கூட்டுறவுச் சங்கங்களை வளர்க்க வேண்டுமென்பதுதான் நம்முடைய ஆசை.

இந்த அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசு நெசவாளர்களுக்காகப் பாடுபட வேண்டுமென்று வாதாடிய அரசு, எதுவுமே செய்யவில்லை என்று யாராவது சொல்லுவார்களேயானால் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. நெசவுத் தொழிலுக்காக ஒதுக்கப்படுகின்ற பணத்தை குறிப்பாகப் பார்த்தால் இதை உணர்ந்து கொள்ள முடியும்.

இரண்டாவது திட்டத்திலே இதற்காக 6½ கோடி ரூபாய் ஒதுக்கினார்கள். மூன்றாவது திட்டத்திலே 7½ கோடி ரூபாய் ஒதுக்கினார்கள். இந்த ஆட்சி வந்த பிறகு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 10 கோடி 60 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நெசவாளர்கள் புறக்கணிக்கப்படவில்லை என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. இந்த ஆண்டு ஏன் குறைந்திருக்கிறது, இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்த வேண்டுமென்ற கருத்து கூறப்பட்டது. 1966-67-ம் ஆண்டு இதற்காக ஒதுக்கப்பட்டது 183 லட்சம் ரூபாய். 1971-72-ல் 252 லட்சம் ரூபாய் நெசவாளர் வாழ்வுக்காக, நெசவுத் தொழிலுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. மற்ற மாநிலங்களில் எப்படி இருக்கிறது என்பதை ஒப்பிட்டுப் பார்த்தால் இது எந்த அளவுக்கு அதிகம் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

1971-72-ல் நெசவாளர்களுக்காக மத்தியப் பிரதேசத்தில் ஒதுக்கப்பட்டிருப்பது 16½ லட்சம் ரூபாய்; மைசூரில் 12 லட்சம் ரூபாய்; குஜராத்தில் 5 லட்சம் ரூபாய்; ஆனால் தமிழ்நாட்டில் 252 லட்சம் ரூபாய். இதை எண்ணிப் பார்த்தால் நம்முடைய தமிழ் நாட்டில் இந்தத் துறைக்கு ஏராளமாக உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணத்தைக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கைத்தறிக்கு எவ்வளவு செலவழிக்க வேண்டுமென்று திட்டமிட்டு, கடந்த மூன்று ஆண்டு காலத்தில் எவ்வளவு செலவழிக்கப்பட்டது, இந்த ஆண்டு எவ்வளவு செலவழிக்கப்பட இருக்கிறது?

1972 மார்ச் 14]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதைத்தான் இப்போது விளக்கிச் சொன்னேன், நான்காவது திட்டத்திலே 10 கோடி 60 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இந்த ஆண்டு 234 லட்சம் ரூபாய் செலவழிக்க இருக்கிறோம் என்று மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுக் காட்டி மற்ற மாநிலங்களிலே எவ்வளவு குறைவாக ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டினேன்.

உற்பத்தி, விற்பனையை எடுத்துக்கொண்டாலும் கூட தமிழகத்தில் 1966-67-ல் கூட்டுறவுத் துறையில் 10½ கோடி ரூபாய் அளவுக்கு உற்பத்தி செய்து விற்றிருக்கிறோம், தனியார் துறையிலே 48 கோடி ரூபாய் அளவுக்கு உற்பத்தி செய்து விற்றிருக்கிறோம். 1971-72-லே கூட்டுறவுத் துறையிலே 16½ கோடி ரூபாய் அளவுக்கும், தனியார் துறையிலே 100 கோடி ரூபாய் அளவுக்கும் உற்பத்தி செய்யப்பட்டு விற்கப்பட்டிருக்கிறது. இதை ஒப்பிட்டுப் பார்த்தால் 10 கோடி ரூபாய் 16½ கோடியாகவும், 48 கோடி ரூபாய் 100 கோடியாகவும் உயர்ந்திருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும். ஆகவே, நிதிவசதி பூரணமாக இந்தத் துறைக்குச் செய்யவில்லை என்பதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

இங்கு எடுத்துக் காட்டியது போல் தமிழ்நாட்டில் நெசவுத் தொழிலில் உற்பத்தி செய்யப்படுகின்ற துணிகளுக்கு எந்தெந்த நாடுகளில் மார்க்கெட் இருந்ததோ அந்த நாடுகளில் எல்லாம் சுதந்திரத்திற்குப் பிறகு அவர்களுடைய உற்பத்தி பெருகி நம்மோடு போட்டியிடும் நிலைமை வந்திருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது.

கைத்தறி நெசவாளர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில் விலையைக் குறைத்து விற்பதற்காக கூட்டுறவுத் துறையில் நாம் ரிபேட் கொடுக்கிறோம். 1966-67-ல் 64 லட்சம் ரூபாய் கொடுத்தோம்; 1971-72-ல் 130 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறோம். அந்த அளவுக்கு இரண்டு மடங்குக்கு அதிகமாக நமது ஆட்சிக் காலத்தில் அதிகமாக உதவி செய்திருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் துறையிலுள்ள நெசவாளர்களுக்கு ஹாண்ட்லூம் பினான்ஸ் கார்ப்பரேஷன் மூலம் கொடுக்கப்பட்ட உதவியை ஒப்பிட்டுப் பார்த்தால் 1966-ல் கொடுத்தது ரூ. 78 லட்சம்; 1971-ம் ஆண்டு கொடுத்தது 1 கோடி 49 லட்சம் ரூபாய். நான்கு ஆண்டுக் காலத்தில் எந்த அளவுக்கு நம்மால் கைத்தறி துறைக்கு உதவி செய்ய முடிந்தது என்பதை எடுத்துக் காட்டத்தான் இவற்றைக் கூறினேன்.

இப்படி ஒவ்வொரு துறையிலும் நாம் எந்த அளவுக்கு முயற்சி எடுத்து வெற்றிகரமாக நடத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்து வருகிறோம் என்பதற்கு இவை எடுத்துக்காட்டுகளாகும். இத்தனையும் உண்மை என்றாலும் இந்திய

நாட்டில், தமிழகத்தில் வளர்ச்சியில் சுணக்கம் ஏற்பட்டிருக்கிறது, எதிர்பார்த்த அளவுக்கு வேகமான வளர்ச்சியைக் காண முடியவில்லை, இதற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்து பரிகாரம் காண வேண்டுமென்ற கருத்தை முழு மனதோடு ஒப்புக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

பொருளாதாரக் கொள்கையில் திட்டமான கொள்கைகளை வளர்க்க வேண்டும். அரசின் மாறுபட்ட கொள்கைகள் அரசியல் கட்சிகள் முரண்பட்ட பொருளாதாரக் கொள்கைகள் மூலம் நிலையற்ற பொருளாதாரக் கொள்கை நிச்சயமாக தொழில் வளர்ச்சிக்குக் குந்தகம் ஏற்படுத்தும். யாருக்கும் ஐயப் இருக்க வேண்டாம். Uncertainty in economic policy இருக்கக்கூடாது என்பதை நாம் அனைவரும் சேர்ந்து வலியுறுத்த வேண்டும்.

பொதுவாக மத்திய அரசின் தொழில் கொள்கை, மத்திய அரசாங்கத்தின் லைசென்ஸ் வழங்கும் கொள்கைகள்தான் காரணம். மத்திய அரசாங்கம் வெளி நாட்டுத் தொடர்பு கொண்டு வெளிநாட்டு தொழில் நுட்ப உதவியை, பொரு ளுதவியை, தொழில் வளர்ச்சிக்காக எந்த அளவு பெற முடிகிறதோ, மூலப் பொருளை எந்த அளவுக்கு தொழிற்சாலைக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்களோ அதைப் பொறுத்துத்தான் நாட்டின் தொழில் வளர்ச்சி வேகமாகச் செல்ல முடியும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இவ்வளவு வசதிகளையும் செய்து கொடுத்து விட்டு—இன்ஃப்ரா ஸட்ரக்சர்—தொழில் வளருவதற்கான சூழ்நிலையை உருவாக்கிவிட்டு, தொழில்கள் ஏராள மாகத் தொடங்கப்பட்டு லாபத்தோடு நடைபெற்று தொழிலாளர்களுக்கு, பல கோடி தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கும் நிலைமை வரவேண்டு மென்றால் அரசாங்கத்தினுடைய—மாநில அரசாங்கமானாலும் சரி, மத்திய அரசாங்கமானாலும் சரி—வரி விதிப்புக் கொள்கையை நிலையான கொள்கையாக, தொழில் வளர்ச்சிக்கு ஊக்கம் தரும் கொள்கையாக அமைத்துக்கொள்ள வேண்டுமென்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மூலப்பொருள் வளத்தை மட்டும் வைத்துப் பார்த்தால் தமிழ்நாட்டில்தான் அயர்ன் அண்டு ஸ்டீல் தொழில்கள் ஏராளமாக இருக்கிறது. ஜப்பான் நாட்டு நிபுணர்களே தமிழ்நாட்டுக்கு வந்து ஆராய்ந்து ஒரு அறிக்கையை இந்திய நாட்டுத் தூதுவரிடத்தில் ஜப்பான் நாட்டில் ஒப்படைத்தார். அந்த அறிக்கையை என்னிடத்தில் தந்தார்கள். நான் அதைப் படித்துப் பார்த்தேன். ஜப்பான் நாட்டின் தொழில் வளர்ச்சியைப் போல், வேறு எந்த நாட்டிலாவது அதிகமாக ஆரம்பிக்க வேண்டுமென்றால் இந்திய நாட்டில், குறிப்பாக தமிழ்நாட்டில்தான் அதற்கான சூழ்நிலை இருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். அதற்குக் காரணம் ஆற்றல் படைத்த தொழிலாளர்கள் 'ஸ்கில்டு லேபர்' ஏராளமாக இருக்கிறார்கள் என்றும், ஜப்பான் அரசு அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் யோசனை கூறியிருக்கிறார்கள். ஆற்றல் படைத்தவர்கள் ஏராளமாக இருந்தும்,

தொழிற்சாலைகள் ஏராளமாக இருந்தும் ஃபுல் கபாசிடி என்ற அளவுக்கு முழுமையாக நம்முடைய உற்பத்தியைப் பெருக்க முடிகிறதா என்றால் இல்லை. அதற்கான காரணம் என்ன என்பதைச் சிந்தித்துப் பார்ப்பது நியாயமாகும்.

உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். அயர்ன் அண்டு ஸ்டீல், நம்முடைய தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருள் 1968-69-க்கு 1,15,000 டன்; நமக்கு மத்திய அரசாங்கம் கொடுத்தது 3,136 டன். 1971-72-ல் தேவையானது 2,10,000 டன்; மத்திய அரசு கொடுத்தது 37,754 டன். அதேபோல் 'ஈசி கிரேடு' அலுமினியத்தின் தேவை 1969-70-ல் 3,483 டன்; மத்திய அரசு கொடுத்தது 1,072 டன். கமர்ஷியல் கிரேடு அலுமினியத்தின் தேவை 8,674 டன்; மத்திய அரசு கொடுத்தது 741 டன் (Zinc) தேவை 1969-70-ல் 4,899 டன்; அவர்கள் கொடுத்தது 480 டன். 1971-72-ல் அவர்கள் கொடுத்தது 195 டன்.

ஃபாரபின் வாக்ஸ் நமக்குத் தேவை ஐயாயிரம் டன். அவர்கள் கொடுத்திருப்பது 2,200 டன். மாச் வாக்ஸ் தேவை 3,000 டன். கொடுத்திருப்பது இரண்டாயிரத்திச் சொச்சம். மட்டன் டாலோ, தேவை 5,000 டன், கொடுத்திருப்பது 1,445 டன். மத்திய அரசு மூலப்பொருள்களை வழங்கும் கொள்கையில், அல்லது பெற்றுத் தரும் கொள்கையில் எந்தளவிற்கு தவறான கொள்கை பின்பற்றப்பட்டு வருகிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

நம் அரசு ஒரு யோசனை சொல்லியிருக்கிறது. ஒவ்வொரு மாநிலத்திலும் தொடங்குகின்ற அல்லது நடைபெறுகிற தொழிற்சாலைகளுக்கு தேவையான மூலப் பொருள்களைக் குறித்து மாநில அரசும் மத்திய அரசும் சேர்ந்து ஒரு அஸெஸ்மெண்ட் செய்து எவ்வளவு தேவை என்று கணக்கிட்டு அந்தத் தேவை முழுவதையும் மத்திய அரசு மாநில அரசிடம் ஒப்படைக்க வேண்டும். மாநில அரசு அந்தத் தொழிற்சாலைகளுக்குப் பகிர்ந்து தரவேண்டும். இந்தக் கொள்கையினை தமிழ்நாடு மத்திய அரசிடம் வற்புறுத்தி வருகிறது. அப்படிக் கொடுத்தால் நிச்சயமாகத் தெரிந்துவிடும், ஒவ்வொரு மாநிலத்தின் தேவையையும் பூர்த்தி செய்ய முடிகிறதா என்பது. சில முதலாளிகள் தைரியமாகச் சொல்கிறார்கள். நீங்கள் சட்டப்படித் தராவிட்டாலும் நாங்கள் வேறு முறையில் அதிக விலை கொடுத்து வாங்கும் வாய்ப்பு இருக்கிறது என்று. இப்படிச் சொல்லக் கூடிய சூழ்நிலையை மாற்றியமைக்க வேண்டும். இதில் மத்திய அரசின் பொறுப்பை அடிக்கடி வலியுறுத்தி வருகிறோம்.

DR. H. V. HANDE: Has our Minister discussed, with the Central Minister and found out how much is required for all the States? For I am afraid they do not have enough raw materials. How much of it is allotted, what per cent of the stock is available?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இருக்கக்கூடிய தொழில்களுக்கு, புதிதாகத் தொடங்கக்கூடிய தொழில்களுக்கு மூலப்பொருள்கள் இல்லாததன் காரணமாக எந்தளவிற்கு முடக்கம் ஏற்படுகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாகக் கூறினேன். தனிப்பட்ட முதலாளிகள் எங்கேயோ ஒரு இடத்திற்குச் சென்று, கல்கத்தாவிற்குச் சென்று அங்குள்ள ஜாயின்ட் ப்ளான்ட் கமிட்டியைச் சந்தித்து எங்களுக்கு இவ்வளவு வேண்டும் என்று கேட்டுப் பெறுவது என்ற முறை நீடிக்கப்படுமானால் இந்தக் கேள்விற்கு பதில் சொல்ல முடியாது. ஒவ்வொரு மாநிலத்திற்கும் எவ்வளவு எவ்வளவு தேவை என்று பார்த்து அதைக் கொடுப்பதற்கு மத்திய அரசு தயாராயிருக்கிறதா? இல்லை என்ற பதிலைத்தான் தரவேண்டியிருக்கிறது. ஆக, மத்திய அரசின் கொள்கை மாற்றியமைக்கப்படவேண்டும். இந்திய நாட்டில் உள்ள இரும்புத் தொழிற்சாலைகளுக்கான, அவற்றிற்குத் தேவையான இரும்புக் கனி ஏராளமாகக் கிடைக்கிறது. இரும்புக் கனியை ஏற்றுமதியும் செய்கிறோம். ஆனால் Steel products கிடைக்கவில்லை. ஆகவே மத்திய அரசின் கொள்கை மாற்றியமைக்கப்பட வேண்டும். உருக்குத் தொழிற்சாலைகளின் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். அவற்றிற்கு வேண்டிய இரும்புக் கனி நம்மிடம் இருக்கிறது. ஏராளமான தொழிற்சாலைகளைத் துவங்குவதற்கான வகையில் மூலப்பொருள்கள் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும். தொழிற்சாலைகளைப் பெருக்கிடும் வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டும் என்று நாம் அடிக்கடி மத்திய அரசை வலியுறுத்தி வருகிறோம்.

மத்திய அரசு இன்றைய தினம் சேலம் உருக்காலையை நமக்குத் தந்திருக்கிறார்கள். அதற்கு ரூ. 300 கோடிக்கு மேல் தேவை என்று கணக்கிட்டிருக்கிறார்கள். காலதாமதம் கூடாது என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. அதே சமயத்தில் மத்திய அரசு சார்பில் சில கருத்துக்கள் வெளியிடப்பட்டதுதான் இப்படிப்பட்ட பிரசாரத்திற்கும் வாதத்திற்கும் இடமளிக்கிறது. 24,000 ஏக்கருக்கு மேல் நிலம் எடுத்துக்கொடுத்து—அந்த மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் சட்டத்தைக்கூட பார்க்காமல் நாங்களாகவே முன்வந்து தருகிறோம், ஒப்படைக்கிறோம் நிலத்தை என்று ஒப்படைத்துவிட்ட பிறகுகூட நிலமே இல்லை, ஒரு சென்ட் நிலம் கூட இல்லை என்று சொல்லும் நிலை இருக்குமானால் அது தவறான கருத்தை தமிழகத்தில் பரப்பும். அதேசமயத்தில் சேலம் உருக்காலைத் திட்டம் லாபத்தில் நடைபெறுவதற்கு என்னென்ன முறைகளைக் கையாளவேண்டும் என்பதில் மத்திய அரசு கவனத்தோடு பரிசீலித்து நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காக மத்திய அரசுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்திய நாட்டிலே கடந்த பல ஆண்டுகளாக ஏராளமான பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய

வகையில் தொழில் திட்டங்கள் உருவாக்கப்படவில்லை. தமிழ்நாட்டிற்கும் தரப் படவில்லை என்ற குறையை, குற்றச்சாட்டு என்று கூடச் சொல்லலாம், சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் ஒரு சிறிய கார் ஆலை வேண்டுமென்று வலியுறுத்தி வருகிறோம். வேறு மாநிலங்களில் உற்பத்தி செய்யப்படும் கார்களைத்தான் நாம் வாங்க வேண்டிய நிலை இருக்கிறது. அதை மாற்றியமைத்து இங்கேயே கார் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு தொழிற்சாலை வேண்டுமென்று வலியுறுத்தி வருகிறோம்.

இங்கு ஏராளமான ஸ்பேர் பார்ட்ஸ், கார்களுக்கும் பஸ்களுக்கும் வேண்டிய ஸ்பேர் பார்ட்ஸ் உற்பத்தி செய்வதில் ஆற்றல் படைத்தவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, ஒரு சிறிய கார் ஆலை தமிழகத்திற்கு தரவேண்டுமென்று வலியுறுத்துகிறோம். இப்போது தனியார் ஒருவருக்கு கார் ஆலையைக் கொடுத்திருக்கிறார்கள். அப்படிக் கொடுத்துவிட்டு தேவையான தொழில் நுட்ப உதவியைத் தர மாட்டோம் அல்லது அப்படித் தருவதில் காலதாமதம் செய்வோம் என்ற நிலை இருந்தால், அதற்குத் தேவையான அன்னியச் செலாவணி ஒதுக்குவதில் காலதாமதம் செய்வோம் அல்லது குறைத்துத் தருவோம் என்ற நிலை இருந்தால் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கம் தராத ஒரு சூழ்நிலையைத்தான் அது உருவாக்கும்.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் நல்லமுறையில் தொழில் வளர்ச்சி காணவேண்டும் என்பதுதான் எங்களுடைய ஆசை. தூத்துக்குடியில், தமிழ்நாட்டின் தென்முனையில் அங்குள்ள உப்பின் அடிப்படையில், அங்குள்ள துறைமுகத்தின் அடிப்படையில் பெரிய Industrial காம்ப்ளெக்ஸ் உருவாகும் வாய்ப்பிருக்கிறது. அதற்கு வேண்டிய முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

கிழக்குக் கடற்கரையோரத்தில் கடல் வளத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு ஏராளமான தொழில்கள் வளரவேண்டும் என்று அதற்கான முயற்சிகளை எடுத்துவருகிறோம்.

14 லெட்டர்ஸ் ஆப் இன்டென்ட் பெற்றிருக்கிறோம் என்று சொன்னேன்.

மணலியில் பெட்ரோ கெமிக்கல் காம்ப்ளக்ஸ் வர வேண்டும். அதற்கு ரூ. 80 கோடி அளவிற்கு திட்டமிட்டு முயற்சியும் எடுத்து வருகிறோம். அது வெற்றி பெறும் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது. புதிதாக எந்த எந்தத் தொழில்கள் தொடங்க முடியும் என்ற ஆராய்ச்சியும் தமிழ்நாட்டு சார்பில் உருவாக்கப்பட்டு, 176 கோடி ரூபாய் அளவில், அதற்கான திட்டங்கள் உருவாக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். அதில் ஒன்று இந்த பெட்ரோ கெமிக்கல் காம்ப்ளக்ஸ். இது வருமானால் நிச்சயமாக தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

TRUTH ALONE TRIUMPHS

[திரு. செ. மாதவன்] [1972 மார்ச் 14

இரசாயனத் தொழில்களைப் பெருக்குவதற்கு தமிழ்நாட்டில் நல்ல வாய்ப் பிருக்கிறது. அவைகளைப் பற்றி எல்லாம் வலியுறுத்தி வருகிறோம். பெட்ரோ கெமிக்கல் காம்ப்ளக்ஸ் போன்றவைகளில் மத்திய அரசு விரைவில் முடிவு எடுத்து அறிவிக்குமானால் தொழில் வளத்தை இங்கு நம் மாநிலத்தில் நல்ல முறையில் பெருக்குவதற்கு உதவியாக இருக்கும். தமிழ்நாடு கடந்த நான் கைந்து ஆண்டுகளாக நல்லமுறையில் தொழில் வளர்ச்சி அடைந்து இன்னும் சில ஆண்டுகளில் பன்மடங்கு தொழில் வளர்ச்சி பெருகி, வேலையில்லாத் திண்டாட்டம் போக்கப்பட்டு தனி மனிதனின் வாழ்க்கைத்தரம் உயருவதற்கும் இந்த அரசு முழு முயற்சியையும் எடுக்கும் என்ற உறுதியைத் தந்து தொழில் வளர்ச்சி பெருக வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு இல்லாத காரணத் தினால் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் திரும்பப் பெற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து முடித்துக்கொள் கிறேன். வணக்கம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சிறைச்சாலைகள் பற்றி . . .

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழில் வளர்ச்சி பற்றி உறுப்பினர்கள் அதிக ஆவலோடு இருப்பார்கள் என்று விவரமாகச் சொன்னேன். சிறைச் சாலைகளில் அதிக வசதிகள் செய்து கொடுக்கவேண்டும், சிறையில் உள்ளவர் களுக்கு நல்லதொரு சூழ்நிலை ஏற்படுத்தித் தரவேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆனால், வெளியிலே இருப்பதுபோல் உள்ளேயும் நடக்கவேண்டும் என்பது ஏற்புடையதல்ல. இப்போது உறுப்பினர்கள், கட்சி வேறுபாடு இல்லாமல் அவர்கள் எல்லாச் சிறைச்சாலைகளுக்கும் சென்று வர அனுமதி அரசாங்கத்தின் சார்பில் பொதுவாக ஒரு உத்தரவு போடப்பட்டிருக் கிறது.

சரியான முறையில் உணவு வழங்க வேண்டுமென்று பரீட்சார்த்தமான திட்டம் ஒன்று சென்னையில் செயல்பட்டு வருகிறது. கோதுமை, சோளம், கேப்பை இவை கூடவே கூடாது என்று சொல்வது சரியல்ல. மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அதைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக் கிறார்கள். கொடுப்பதை நல்லமுறையில் தயார் செய்து கொடுக்க வேண்டு மென்ற திட்டத்தை சென்னை சிறைச்சாலையில் கொண்டு வந்திருக்கிறோம். இட்லி சுட்டுக் கொடுக்கிறோம். கோதுமை உப்புமா செய்து கொடுக்கிறோம். நாங்கள் சிறைச்சாலைகளில் இருந்தபோது ஒன்றும் இப்படிக் கொடுக்கவில்லை இரும்புப் பாத்திரங்களுக்குப் பதில்—இரும்புப் பாத்திரங்களில் தயார் செய்தால் நாற்றம் வருகிறது என்பதை சிறைக்குச் சென்றவர்கள் அறிந்திருப்பார்கள், நாங்களும் அனுபவித்தோம்—இப்போது அலுமினியப் பாத்திரம் கொடுத்து

தயாரிக்கிற முறையில் மாற்றியமைத்திருக்கிறோம். நல்ல உணவு கிடைக்க வாய்ப்பு உள்ளது. குல்லாய் வைக்க மாட்டேன் என்று சொன்னதற்காக சேலம் சிறைச்சாலையில் இருபது பேர்கள் கூடப்பட்டார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு குல்லாய் வேண்டாம்—மற்றவர்களுக்கு நீங்கள் போடாவிட்டால்—போடவேண்டாம் என்று உத்தரவு போட்டு இருக்கிறோம்.

நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்பு ஆயுள் தண்டனை பெற்றவர்களுக்கு அடிக்கடி பரோல் கொடுக்கலாம் என்று உத்தரவு போட்டு இருக்கிறோம். அவர்கள் பரோல் கேட்டால், ஒரு கைதி இரண்டாண்டு காலம் தொடர்ந்து சிறையில் நல்லவிதத்தில் நடந்திருந்தால், அமைச்சருக்குக் கூட அனுப்பாமல், அதிகாரிகளே விடுமுறை கொடுத்து, பரோல் கொடுத்து அனுப்பலாம் என்று சொல்லி உத்தரவிட்டிருக்கிறோம். 5 ஆண்டுகளுக்கு மேல் அவசியம் ஏற்பட்டால் இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை வெளியே சென்று வர அனுமதி வழங்கலாம் என்று இருக்கிறது. இவைகளையெல்லாம் செய்து விட்ட பின்னுலும், இந்த அரசாங்கம் ஒன்றுமே செய்யவில்லை என்று சொன்னால் அதை ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை.

நீதி நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் மற்ற மாநிலத்தை விட தமிழ்நாடு உயர்ந்த நிலையில் இருக்கிறது. நிச்சயமாக நீதி நிர்வாகம் சுதந்திரமாக இருக்க வேண்டுமென்பதில் ஆட்சேபணையில்லை. அரசையும், நீதித் துறையையும் இரண்டாகப் பிரித்து, அரசு கொள்கைகளை வகுத்து சட்டங்களை இயற்றி, அந்தக் கொள்கைகளில் எங்கேயாவது தவறு நடந்தால் அதை சுட்டிக்காட்டுவதற்கும், மக்களுக்கு நீதி வழங்குவதற்கும் சிறப்பான பாதுகாப்பாகத்தான் ஜனநாயக அமைப்பில் நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. அதிலே தமிழ்நாடு உயர்நிலை பெற்று இருக்கிறது என்பது பாராட்டுதற்குரிய ஒன்றாகும். நீதி நிர்வாகத்தில் அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது என்று சொல்லிக்கொண்டு, இந்த இரண்டு மானியக் கோரிக்கைகள் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I would like to know whether certified schools will be transferred from the Police Department to the Social Welfare Department?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கமிஷனர் ஆப் போலீஸ் நிர்வாகத்தில் செயல்படுகிறது. ஆனால் அந்தப் பள்ளியின் நிர்வாகம் போலீசிடத்தில் இல்லை. என்றாலும், குற்றவாளிகளாக எண்ணப்படுபவர்கள் அங்கே இருப்பதாலே

கமிஷனர் ஆப் போலீஸ் நிர்வாகத்தில் இருக்குமேயானால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறோம். அதை வேண்டுமானால் மாற்றுவதற்கு அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் ஆட்சேபணை இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: வரதராஜன் கமிட்டி ரிப்போர்ட் மூன்று மாதத்திற்குள் வெளியிட வேண்டுமென்பதற்காக ஒரு வெட்டுத் தீர்மானம் கூட கொடுத்திருக்கிறோம். அதுபற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. இன்னொரு விஷயத்தையும் கூற விரும்புகிறேன். மாணவர்கள், தொழிலாளிகள் ஆகியோர் போராட்டங்களில் ஈடுபட்டு சிறைக்குச் செல்லக்கூடிய நேரத்தில் அவர்களுக்கு தனியான ஒரு வகுப்பு—(குறுக்கீடு—ஏ, பி வகுப்பு கொடுக்கலாம்) நான் அப்படிக்கூடச் சொல்லவில்லை—அவர்களை தனிப்பகுதியாக வைப்பதற்கு அரசாங்கம் ஏதாவது ஆலோசனை செய்யுமா? அப்படி ஏதாவது உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சட்டத்தைப் பொறுத்தவரையில் பொலிடிகல் ப்ரிசினர்ஸ் என்று சொன்னாலும், கைதி என்று சொன்னாலும் வேறுபாடு கிடையாது. சிறைத்துறை அதிகாரிகள் எல்லோரையும் நன்றாக மதிப்பார்கள். அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள் அவர்களுடைய கொள்கைக்காக போராடி சிறைக்குச் சென்றால் அவர்களுக்கு நல்ல மதிப்பு கொடுப்பார்கள். அவர்களுக்கு நல்ல வசதிகள் செய்து தரவேண்டுமென்று கொள்கை அளவில் ஒப்புக்கொண்டிருக்கிறோம். எங்களுடைய பாக்கியம் இந்த ஆட்சி ஏற்பட்டதற்குப் பின்னாலே அப்படிப்பட்ட சந்தர்ப்பம் எதிர்க்கட்சிகளுக்கு கொடுக்க விரும்பவில்லை.

நீதிபதி வரதராசன் குழு மாநிலம் முழுவதும் சுற்றி அவர்கள் கருத்தறிந்து சொல்லவேண்டும். அவருடைய கருத்தையும் அறிந்து, அரசாங்கம் அந்தக் கருத்தையும் ஆராய்ந்து பின்னாலே, அது பற்றி முடிவு எடுக்கலாம். அவசரப்பட்டு முடிவு எடுத்தால் தவறு ஏற்பட்டு விடும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: ரப்பர் தொழிற்சாலை இராமநாதபுரம் மாவட்டத்தில் கூட்டுத்துறையில் தொடங்க இருப்பதாகச் சொன்னார்கள். அதை கூட்டுத்துறையில் நடத்த லைசென்சு பெற்று இருப்பவர் அவருக்குச் சொந்தமாக மலேசியாவில் உள்ள ரப்பர் தோட்டத்திலிருந்து ரப்பர் கொண்டு வந்து தொழில் நடத்தப்போவதாகச் சொன்னார்கள். நமது அரசுத்துறையில் ஏறத்தாழ 15,000 ஏக்கர் ரப்பர் உற்பத்தி கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிறது. அதோடு தனியார் துறையிலும் உற்பத்தி செய்கிறார்கள். இப்போது இங்கே உற்பத்தியாகும் ரப்பருக்கே மார்க்கெட் இல்லை என்று சொல்கிறார்கள். இந்த நிலைமையில்

வெளிநாட்டிலிருந்து ரப்பர் கொண்டு வந்து இங்கே தொழிற்சாலை ஆரம்பித்தால் இங்கேயுள்ள ரப்பர் உற்பத்தித் தொழில் பாதிக்கப்படும். ஆகவே, இதை மனதில் கொண்டு அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முன்னாலேயே விளக்கியிருக்கிறேன். அது சரியாகச் சொல்லவில்லை என்று என்னைப் பொறுத்தவரையில் கருதுகிறேன். வெளிநாட்டுச் செலாவணி கொண்டு வருகிற காரணத்தாலே, ரப்பர் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யவேண்டுமென்ற கொள்கையை இந்திய அரசு ஏற்குமானால், ரப்பர் இங்கே தட்டுப்பாடு ஏற்பட்டால் அதை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யலாம் என்ற எண்ணத்தில், மத்திய அரசு அதற்கு அனுமதி வழங்கியிருக்கிறது. இதை நாம் சொல்லவில்லை. மத்திய அரசாங்கம்தான் சொல்லியிருக்கிறது. அவர்களுடைய கொள்கைப்படி நம்முடைய நாட்டில் உற்பத்தியாகும் ரப்பருக்கு முதலிடம் கொடுத்து, வெளிநாட்டிலிருந்து ரப்பரை இறக்குமதி செய்வதற்கு அப்புறம்தான் அனுமதி அளிப்பார்கள். இதை மத்திய அரசு தான் பரிசீலிக்கவேண்டும். இதிலே, நம்முடைய அரசாங்கம் எந்தத் தவறும் செய்யவில்லை.

திரு. எம். சுரேந்திரன் : ஜாயின்ட் செக்டாரிலே நம் அரசாங்கம் பணம் போடுவதால் அதிலே வரும் லாபம் அரசாங்கத்திற்கு வரும் என்று சொன்னார்கள். லாப நோக்கத்தோடு அந்தப் பணம் போடுவதில்லை என்று சொன்னேன். லாபநோக்கத்தோடு போடவேண்டுமானால் பாங்கியில் போட்டால் வட்டி கிடைக்கும். கூடுதல் லாபம் வரும் என்ற கணக்கில் அந்தப் பிரச்னையைப் பார்க்கக்கூடாது. வேறுமாதிரியாகப் பார்க்க வேண்டுமென்பதை அமைச்சர் அவர்கள் உணர்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : லாபம் இல்லாது தொழில் நடத்த வேண்டுமென்ற கொள்கையை நான் ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை. லாபம் வர வேண்டும். அப்போதுதான் மக்களுக்கு நாம் அதைக்கொண்டு நல்லவற்றை செய்ய முடியும். தனியார்களுக்குக் கடன் கொடுப்பதால் அவர்களுக்குக் கிடைக்கும் லாபம் அரசுக்கு வருவதில்லை. இப்போது நாம் இப்படி பணம் போடுவதால், நமக்கு அதிலே அதிகாரம் இருக்கிறது. வருகிற லாபத்தில் பங்கும் இருக்கிறது. இந்த அரசின் இந்தக் கொள்கை மிகச் சிறந்த கொள்கை என்று நாங்கள் கருதுகிறோம்.

THIRU B. VENKATASWAMY : Sir, about the assignment of lands to the mulberry cultivators, the Hon. Minister has not stated anything in his reply.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் வட்டாரத்திலுள்ள மக்கள் கருதினால் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. இப் போது மல்பரி கல்டிவேஷன் என்று சொல்லி பயிரிடுகிறவர்களுக்கே சொந்தமாக் கிவிட்டால் அப்புறம் கண்டிரோல் இல்லாமல் போய் விடுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது மானியக்கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு நடைபெறும்.

நிதிக் கோரிக்கை எண் 20-க்கு திரு. கே. எஸ். கோதண்டராமையா, டாக்டர் எச். வி. ஹாண்டே, திருமதி த. ந. அனந்தநாயகி, திரு. என். மருதாசலம் ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப்பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 20—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,90,87,600 -க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 40-க்கு திரு. ஜே. ஜேம்ஸ் அவர்கள் கொடுத்திருந்த வெட்டுத்தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப்பெறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 40—தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 15,02,78,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 10-க்கு டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. ஜே. ஜேம்ஸ், திரு. கே. டி. கே. தங்கமணி ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர் மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப்பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 10—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,07,45,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 11-க்கு திரு. கே. டி. கே. தங்கமணி, டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. ஜே. ஜேம்ஸ் ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப்பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"கோரிக்கை எண் 11—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,60,82,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இன்று இந்த அளவில் முடிவுற்று பேரவை நாளைக் காலை 9 மணிக்கு மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒத்தி வைக்கப்பட்டது.

8. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders*

62. Notification issued with G.O. Ms. No. 2460, Rural Development and Local Administration, dated the 8th November 1971, in regard to inclusion of certain survey numbers of Kandiyankuppam revenue village within the Municipal limits of Vridhachalam. [Laid on the Table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

B. *Reports, Notifications and Other Papers.*

@ 64. Policy Note on Demands under Land Revenue (English and Tamil).

@ 65. Speech by Hon. Thiru P. U. SHANMUGAM, Minister for Food and Revenue on Demand No. 46—Capital Outlay on Schemes of Government Trading (Food) (English and Tamil).

@ 66. The Pamphlet on Slum Clearance in Tamil Nadu, 1971–72 (English).

@ 67. The Pamphlet on Housing in Tamil Nadu, 1971–72 (English).

@ 68. A Review on the Industrial Growth in Tamil Nadu—Handloom and Textile and Sugar Industries, 1971–72 (English).

@ 69. A Review on the Industrial Growth in Tamil Nadu—Mineral Development, 1971–72 (English).

@ 70. A Review on the Industrial Growth in Tamil Nadu—Small Scale Industries, 1971–72 (English).

@ 71. A Review on the Industrial Growth in Tamil Nadu—Major Industries, 1971–72 (English).

@ 72. A Review on the Industrial Growth in Tamil Nadu—Industrial Finance, 1971–72 (English).

£ 73. The Pamphlet on Housing in Tamil Nadu, 1971–72 (Tamil).

£ 74. The Pamphlet on Slum Clearance in Tamil Nadu, 1971–72 (Tamil).

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

@ Despatched to Members on 11th March 1972.

£ Despatched to Members on 12th March 1972.

STATEMENT I

Statement showing the number of Village officers suspended, removed and dismissed during the period from 1—1—70 to 31—10—71.

	Name of the District.	Village Headman. Dismissed.	Village Headman. Removed.	Village Headman. Suspended.	Karnam. Dismissed.	Karnam. Removed.	Karnam. Suspended.	Triune Officer. Dismissed.	Triune Officer. Removed.	Triune Officer. Suspended.
	(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
1	Chingleput ..	5	23	30	1	1	8	..	..	1
2	Thanjavur ..	22	..	63	7	..	43	4	..	7
3	Tiruchirappalli ..	20	..	31	7	..	22	..	..	..
4	Tirunelveli ..	5	6	21	1	2	9	1	..	..
5	The Nilgiris ..	..	..	2	..	..	..	..	..	..
6	Coimbatore ..	9	..	37	3	..	14	..	..	..
7	Madurai ..	7	..	24	5	..	17	1	..	1
8	Ramanathapuram	11	2	41	2	2	23	..	..	..
9	South Arcot ..	4	13	79	2	3	9	..	..	1
10	North Arcot ..	..	30	48	..	6	18	.	..	..
11	Dharmapuri ..	4	8	18	..	..	9	..	..	2
12	Salem	..	..	43	..	1	20	..	..	..
	Tatal .	87	82	437	28	15	192	6	..	12

On Total .. 859

விவர அறிக்கை I.

1—1—70 முதல் 31—10—71 வரை விலக்கப்பட்ட, நீக்கப்பட்ட, தற்காலிகமாக நீக்கப்பட்ட கிராம அலுவலரின் விவர அறிக்கை.

	மாவட்டத்தின் பெயர்.	கிராம தலைமை அலுவலர்.			கணக்கர்.			முப்பணி அலுவலர். (Triune Officer).		
		விலக்கல்.	நீக்கல்.	தற்காலிக நீக்கல்.	விலக்கல்.	நீக்கல்.	தற்காலிக நீக்கல்.	விலக்கல்.	நீக்க	தற்காலிக நீக்கம்.
	(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
1	செங்கல்பட்டு ..	5	23	30	1	1	8	..		1
2	தஞ்சாவூர் ..	22	..	63	7	..	43	4	..	7
3	திருச்சிராப்பள்ளி ..	20	..	31	7	..	22	..	..	..
4	திருநெல்வேலி ..	5	6	21	1	2	9	1	..	..
5	நீலகிரி ..	..	..	2	..	..	..	..	..	..
6	கோயம்புத்தூர் ..	9	..	37	3	..	14	..	..	..
7	மதுரை ..	7	..	24	5	..	17	1	..	1
8	இராமநாதபுரம் ..	11	2	41	2	2	23	..	..	..
9	தென் ஆற்காடு ..	4	13	79	2	3	9	..	..	1
10	வட ஆற்காடு ..	..	30	48	..	6	8	..	..	..
11	தர்மபுரி	4	8	18	..	..	9	..	..	2
12	சேலம்	..	..	43	..	1	20	..	..	..
	மொத்தம் ..	87	82	437	28	15	192	6	..	12

ஆக மொத்தம் : 859

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

STATEMENT II.

Statement showing the reasons for dismissal, removal and suspension of the village officers in the State from 1—1—70 to 31—10—71

Name of the District.	Misappropriation of Government money.			Slackness in work and collection.			Tampering of accounts and issue of false certificate.			Non-resident, disobedience, etc.		
	Village Headman.	Karnam.	Triune Officer.	Village Headman.	Karnam.	Triune Officer.	Village Headman.	Karnam.	Triune Officer.	Village Headman.	Karnam.	Triune Officer.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)
1 Chingleput ..	28	1	..	22	2	1	2	3	..	6	4	..
2 Thanjavur ..	21	..	7	62	4	4	..	1	..	2	45	..
3 Tiruchirappalli.	32	1	..	7	4	..	4	11	..	8	13	..
4 Tirunelveli ..	16	..	1	13	..	..	..	4	..	3	8	..
5 The Nilgiris ..	2	..	..	..	..	..	..	..	..	..	..	..
6 Coimbatore ..	9	..	..	18	..	..	..	2	..	19	15	..
7 Madurai ..	7	5	1	11	..	1	3	6	..	10	11	..
8 Ramanathapuram	21	1	..	22	4	..	4	12	..	7	10	..
9 South Arcot ..	22	2	..	70		..	1	4	1	3	8	..
10 North Arcot ..	23	3	..	37	..	..	1	2	..	17	19	..
11 Dharmapuri ..	16	..	..	3	1	1	2	2	..	9	6	1
12 Salem	19	1	..	19	14	..	1	1	..	4	5	..
Total ..	216	14	9	284	29	7	18	48	1	88	144	1

On Total .. 859

விவர அறிக்கை II.

1—1—70 முதல் 31—10—71 வரை கிராம அலுவலர் விலக்கப்பட்ட, நீக்கப்பட்ட, தற்காலிகமாக நீக்கப்பட்டதற்கான காரணங்கள் பற்றிய விவர அறிக்கை.

	மாவட்டத்தின் பெயர்.	அரசு பணத்தை கையாடல் செய்ததற்காக.			வேலையிலும் தண்டலிலும் சுறுசுறுப்பின்மை.			கணக்குகளில் மோசடியாக மாறுதல் செய்தலும், பொய் சான்றிதழ் அளித்தலும்.			கிராமத்தில் குடியில்லாததும் பணிவின்மை முதலியன.		
		கிராம தலைமை அலுவலர்.	கணக்கர்.	அலுவல் முப்பணி வலர்.	கிராம தலைமை அலுவலர்.	கணக்கர்.	அலுவல் முப்பணி வலர்.	கிராம தலைமை அலுவலர்.	கணக்கர்.	அலுவல் முப்பணி வலர்.	கிராம தலைமை அலுவலர்.	கணக்கர்.	அலுவல் முப்பணி வலர்.
	(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)
1	செங்கல்பட்டு ..	28	1	..	22	2	1	2	3	..	6	4	..
2	தஞ்சாவூர் ..	21	..	7	62	4	4	..	1	..	2	45	..
3	திருச்சிராப்பள்ளி ..	32	1	..	7	4	..	4	11	..	8	13	..
4	திருநெல்வேலி ..	16	..	1	13	..	..	..	4	..	3	8	..
5	நீலகிரி	2	..	..	..	..	..	..	..	..	..	..	..
6	கோயம்புத்தூர் ..	9	..	..	18	..	..	..	2	..	19	15	..
7	மதுரை	7	5	1	11	..	1	3	6	..	10	11	..
8	இராமநாதபுரம் ..	21	1	..	22	4	..	4	12	..	7	10	..
9	தென் ஆற்காடு ..	22	2	..	70	..	..	1	4	1	3	8	..
10	வட ஆற்காடு ..	23	3	..	37	..	..	1	2	..	17	19	..
1	தர்மபுரி ..	16	..	..	3	1	1	2	2	..	9	6	1
12	சேலம்	19	1	..	19	14	..	1	1	..	4	5	..
	மொத்தம் ..	216	14	9	284	29	7	18	48	1	88	144	1

ஆக மொத்தம் : 859

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு—2

[1972 மார்ச் 14

தொழில் வளம் பெருகினுல்தான் மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும் என்பது சான்ருேர் சாற்றிய உண்மையாகும். வேளாண்மைப் பெருக்கத்திற்குத் தடைகள் பல உள்ளன. விளைச்சலை விரிவுபடுத்த வேண்டுமாயின் இதுவரை சாகுபடி செய்யப்படாத நிலங்கள் வேண்டும். அவற்றிற்குப் பாசனமளிக்க நீர் வேண்டும். இன்றியமையாத பிற பயிரிடு பொருள்களும் வேண்டும். இவையெல்லாம் கிடைக்காத காரணத் தினுல், மாநில வருவாயைப் பெருக்கத் தொழில் வளம் ஒன்றே சரியான வழியாகும். இந்நிலை நம் மாநிலத்திற்கு மட்டும் உரியதல்ல. நாடு முழுவதற்கும் இந்நிலை பொருந்தும் என்ருல் அது மிகையாகாது.

தொழிற்சாலைகளுக்கான செலவு.

இந்த உண்மையை உணர்ந்து, இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சி யையே நமது தலையாய பணியாக சிரமேற்கொண்டு நாம் தொழில் வளம் பெருக கண்ணும் கருத்துமாகச் செயல்பட்டு வந்துள்ளோம். இந்த நான்கு ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் தொழில் வளர்ச்சிக்கான செலவு பெருகி வருவதே தொழில் வள முன்னேற்றத்திற்கு நாம் எத்தகைய சிறப்பிடம் அளித்து வருகிருேம், என்பதற்கு சீரியதொரு சான்ருகும். முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தொழில்களுக்காக ரூ. 1·53 கோடி முதலீடு செய்யப்பட்டிருக்க, இம் முதலீடு இரண்டாம் ஐந்தாண்டு திட்டக் காலத்தில் ரூ. 14·08 கோடியாகவும், மூன்ரும் ஐந்தாம் திட்டக் காலத்தில் ரூ. 23·71 கோடியாகவும், நான்காம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 64·00 கோடியாகவும் உயர்ந்துள்ளது. குறிப்பாக, நான்காம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் மூன்று ஆண்டுகளில் செலவு படிப்படியாக உயர்ந்து வருகிறது. 1969–70-ல் ஏற்பட்ட செலவு ரூ. 520 லட்சமாகும். 1970–71-ல் இது 683 லட்சமாக உயர்ந்துள்ளது. 1971–72ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் தொழில்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 823 லட்சமாகும். 1972–73ஆம் ஆண்டில் இச்செலவினம் ரூ. 880 லட்சமாயிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இத் தொகை தொழில் வளர்ச்சிக்காகும் செலவு முழுவதையும் குறிப்பிடுவதாகாது என்பதை நாம் கருதிப் பார்ப்போமேயானுல் இத்தொழில் வளர்ச்சியும் அதன் பெருக்கமும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும். தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (TITCO), சிறு தொழில் வளர்ச்சிக்கழகம் (SIDCO), தமிழ்நாடு சிறு தொழில் கழகம் (TANSI), போன்ற தன்னுட்சி உரிமை பெற்ற கழகங்களுக்கு ஏற்பட்டுள்ள செலவு அனைத்தும் வரவு-செலவுத் திட்டம் வாயிலாக வெளியிடப்படவில்லை. எனவே, தொழில் வளர்ச்சி குறித்து மாநில அரசுக்கும் அதோடு இணைந்துள்ள முகவர் நிறுவனங்களுக்கும் ஏற்பட்டுள்ள மொத்தச் செலவை நாம் எடுத்துக் கொள்வோமேயானுல், தொழில் துறையில் செலவு பன்மடங்கு பெருகியுள்ளது என்று ஐயமின்றிக் கூறலாம்.

1972 மார்ச் 14]

இணைப்பு—2

தொழில் வளர்ச்சியில் இவ்வாறு நாம் கருத்துடன் நாட்டத்தைச் செலுத்தியதனுல், தொழில் உற்பத்தி பெருகியது. இதனை பின் வரும் அட்டவணையிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

அட்டவணை.

தொழில் உற்பத்தி பற்றிய அட்டவணை

ஆண்டு.	தமிழ் நாடு.	இந்தியா.
1951	54·1	54·8
1956	76·1	78·4
1961	110·4	109·1
1962	117·2	119·7
1963	123·4	129·6
1964	134·2	140·8
1965	148·6	153·8
1966	148·1	152·4
1967	158·3	151·4
1968	163·3	161·1
1969	172·8	172·4
1970	182·5	180·2
1971	189·0	புள்ளி விவரம் கிடைக்க வில்லை.

தொழில் உற்பத்திக்கான அட்டவணை 1951ஆம் ஆண்டில் 54·1 ஆக இருந்தது. இது 1967ஆம் ஆண்டில் 158·3 ஆகவும் 1971ஆம் ஆண்டில் 189·0 ஆகவும் உயர்ந்துள்ளது. அனைத்து இந்திய அடிப்படையில் தொழில் உற்பத்தியைக் காண்கையில் நமது மாநிலத்தில் தொழில் உற்பத்தி முற்றிலும் மன நிறைவளிக்கும் வகையில் உள்ளதென மேற் கண்ட அட்டவணையிலிருந்து அறியலாம்.

தேசிய வருவாய்க்கு இத்துறையின் பங்கு.

தொழில் துறையிலிருந்து மாநில வருவாய்க்குக் கிடைத்த பங்கும் பெருகியுள்ளது. இதனைக் கீழ்க்காணும் அட்டவணையில் காணலாம்:—

அட்டவணை.

ஆண்டு.	மாநில வருவாய் (ரூபாய் இலட்சத்தில்).	தொழில் துறையால் கிடைத்த பங்கு. (ரூபாய் இலட்சத்தில்).	(3) பத்திக்கும் (2) பத்திக்கும் உள்ள சத வீதம்.
(1)	(2)	(3)	(4)
1950–51	774·92	98·05	12·65
1955–56	963·54	136·08	14·12
1960–61	1,129·56	181·02	16·02
1961–62	1,184·53	202·94	17·13
1962–63	1,212·77	209·76	17·30
1963–64	1,245·17	225·20	18·09
1964–65	1,275·57	249·54	19·56
1965–66	1,288·38	267·75	20·78
1966–67	1,347·72	275·18	20·42
1967–68	1,354·20	296·94	21·93
1968–69*	1,434·23	312·49	21·79
1970–71†	1,513·80	332·03	21·93
1970–71‡	1,598·81	350·78	21·94

*ஓரளவுக்குத் திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீடுகள்.
†தொடக்க மதிப்பீடுகள்.
‡விரைவு மதிப்பீடுகள்.

தொழில் துறையிலுல்மாநில வருவாய்க்குக் கிடைத்த பங்கு 1950–51-ல் ரூ. 98 கோடியாகும். இது 1967–68-ல் ரூ. 296 கோடியாகவும் 1970–71-ல் ரூ. 350 கோடியாகவும் உயர்ந்துள்ளது என்பது மேற்கண்ட விவர அட்டவணையிலிருந்து தெரிய வருகிறது.

பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளும் அவற்றின் வளர்ச்சியும்.

நமது மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில் மற்றுமொரு குறிப்பிடத் தக்க அம்சம் தொழிற்சாலைகளின் வளர்ச்சியாகும். இம்மாநிலத்தில் 1969-ம் ஆண்டில் 6,218 தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட்டிருந்தன. இது 1970-ல் 6,365 ஆகவும் 1971-ல் 6,412 ஆகவும் பெருகியுள்ளது. பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளில் 1969-ல் 3·93 லட்சம் பேர் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர். இந்த எண்ணிக்கையும் 1970-ல் 4·23 லட்சமாக உயர்ந்துள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

அரசின் வணிக நடவடிக்கைகள்.

இம்மாநிலத்தில் வணிக நடவடிக்கைகளின் பெருக்கத்திலிருந்தும் தொழில் வளர்ச்சியைக் காணலாம். நமது மாநிலத்தின் விமான தளங்கள், துறைமுகங்கள் வாயிலாக ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களின் அளவு வியத்தகு அளவுக்கு உயர்ந்துள்ளது. (விவரத்திற்கு 1, 2, 3, இணைப்புகளைக் காண்க.) முழு மதிப்பில் கணக்கிடுகையில், 1970-71-ல் தமிழ்நாடு துறைமுகங்கள் வாயிலாக இறக்குமதி செய்யப் பட்ட பொருள்களின் மதிப்பு ரூ. 19,020 லட்சமாகும். அதே ஆண்டில் தமிழ் நாட்டு துறைமுகங்கள் வாயிலாக ஏற்றுமதியான பொருள்களின் மதிப்பு ரூ. 14,069 லட்சமாகும். நமது மாநிலத்தில் துறைமுகங்கள் வாயிலாக நடந்த ஏற்றுமதி, இறக்குமதி, நாடு முழுவதுக்குமான மொத்த வாணிக நடவடிக்கைகளில் 10.9 சத வீதமாகும் என்பதை இங்கு கூறுவது சாலப் பொருத்தமாக இருக்கும்.

மின்சக்தியை பயன்படுத்துதல்.

இம்மாநிலத்தில் பயன்படுத்தப்படும் மின்சக்தியின் அளவு பெருகி வருவதிலிருந்தும் தொழில் வளர்ச்சி எதிரொலிக்கிறது. கடந்த காலத்தில் தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்பட்ட மின்சக்தியின் அளவும் தமிழ் நாட்டு மின் இணைப்பிலுள்ள (வாங்கும் மின்சக்தி அளவு உட்பட) மொத்த உற்பத்தி அளவும் கீழ்க்காணும் வரைப்படத்திலிருந்து அறியலாம். தொழில்துறையில் பயன்படுத்தப்பட்ட மின்சக்தியின் அளவு 1956-ம் ஆண்டில் 560 மில்லியன் யூனிட்டுகள் ஆகும். இது 1961-ல் 908 மில்லியன் யூனிட்டுகளாகவும் 1970–71-ல் 2,730 மில்லியன் யூனிட்டு களாகவும் உயர்ந்துள்ளது.

பெறப்பட்ட தொழில் உரிமங்கள்.

தமிழ் நாட்டில் கடந்த ஐந்து ஆண்டுகளில் பெறப்பட்ட தொழில் உரிமங்களின் எண்ணிக்கையும், கொடுத்துள்ள இசைவுக் கடிதங்களின் எண்ணிக்கையும் பின்வரும் அட்டவணையிலிருந்து தெரியவரும் :—

அட்டவணை.

ஆண்டு.	கொடுக்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை.	கொடுத்துள்ள இசைவுக் கடிதங்களின் எண்ணிக்கை.
1966	30	25
1967	17	15
1968	9	14
1969	12	22
1970	36	25
1971	53	71

இம் மாநிலத்தில் தொழில் முனைவர்கள் பெற்றுள்ள உரிமங்களின் எண்ணிக்கையும், இசைவுக்கடிதங்களின் எண்ணிக்கையும் சீராக உயர்ந் துள்ளது மேற்கண்ட விவர அட்டவணையிலிருந்து தெரியவரும்.

அந்நிய நாட்டுத் தொழில் நுட்ப உடனுழைப்புக்கு இசைவு.

அந்நிய நாட்டுத் தொழில்நுட்ப உடனுழைப்பு குறித்து இந்திய அரசின் இசைவும் ஏற்பும் பெற்ற செயற்குறிப்புகளின் எண்ணிக்கையும்கூட மன நிறைவு தரும் வகையில் பெருகியுள்ளது. 1971-ல் பல்வேறு மாநிலங்களுக்குக் கிடைத்துள்ளதும் இந்திய அரசினுல் ஏற்பளிக்கப்பட்டுள்ளதுமான அத்தகைய உடனுழைப்புகளின் எண்ணிக்கை பின்வரும் விவர அட்டவணையிலிருந்து தெரியவரும் :—

மாநிலம்.	இந்திய அரசினுல் ஏற்பளிக்கப்பட்டுள்ள நேர்வுகளின் எண்ணிக்கை.
1 ஆந்திரப் பிரதேசம் ..	11
2 அஸ்ஸாம்	2
3 பீஹார்	..
4 டில்லி	39
5 கோவா	..
6 குஜராத்	13
7 ஹிமாசலப் பிரதேசம் ..	..
8 ஹரியாணு	5
9 கேரளா	4
10 மத்தியபிரதேசம்	3
11 மைசூர்	8
12 மஹாராஷ்டிரம்	100
13 ஒரிஸ்ஸா	..
14 பஞ்சாப்	2
15 ராஜஸ்தான்	3
16 தமிழ்நாடு	17
17 உத்தரபிரதேசம்	8
18 மேற்கு வங்காளம் ..	30

திரட்டப்பட்ட மூலதன வெளியீடுகள்.

இம்மாநிலத்திலும் பிற மாநிலங்களிலும் திரட்டப்பட்ட மூலதன வெளியீடுகளின் அளவைப் பார்க்கையில் அதிலும் தொழில் வளர்ச்சியுற்றிருப்பதைக் காணலாம். இந்தியாவில் 1966–67 முதல் 1970–71 வரை பல்வேறு மாநிலங்களில் இசைவு அளிக்கப்பட்ட மூலதன வெளியீடுகளின் எண்ணிக்கையையும் அனுமதிக்கப்பட்ட மூலதன வெளியீடுகளின் மதிப்பையும் பின்வரும் விவர அட்டவணையில் காணலாம் :—

(ரூபாய் கோடியில்)

மாநிலங்கள்.	1970		1969		1968		1967		1966	
	எண்ணிக்கை.	தொகை.	எண்ணிக்கை.	தொகை.	எண்ணிக்கை.	தொகை.	எண்ணிக்கை.	தொகை.	எண்ணிக்கை.	தொகை.
ஆந்திரப் பிரதேசம்.	7	3·31	4	4·99	5	1·87	4	2·57	11	9·24
அஸ்ஸாம்	2	0·09	1	0·26	1	0·30	2	0·02	4	0·15
பீஹார்	1	1·00	2	0·78	1	0·12	1	0·10	6	32·07
டில்லி	10	3·50	20	8·07	20	3·74	28	23·35	37	76·77
கோவா	1	0·25	..	..	..	..	..	..	..	..
குஜராத்	25	4·63	18	5·65	27	12·52	26	4·70	44	14·45
ஹரியாணா	2	0·82	2	0·15	1	0·30	..	..	..	..
ஹிமாசல பிரதேசம்.	2	1·89	..	..	3	2·25	1	0·02	3	1·62
கேரளா	7	2·43	5	0·28	6	1·79	12	2·26	26	3·91
மத்திய பிரதேசம் ..	4	4·76	2	2·01	2	0·51	5	1·25	11	4·27
மைசூர்	7	1·15	11	2·62	7	1·57	21	4·68	26	13·67
மஹாராட்டிரம் ..	84	37·93	164	52·38	104	72·76	171	68·18	306	119·84
ஒரிஸ்ஸா	..	..	1	0·50	..	..	2	3·91	11	8·64
பஞ்சாப்	4	0·85	1	0·06	4	1·70	3	0·91	12	1·35
ராஜஸ்தான் ..	1	0·68	6	0·33	2	0·52	2	0·72	11	13·93
தமிழ்நாடு	19	4·25	25	17·88	23	41·51	57	28·49	66	50·19
உத்தரப்பிரதேசம் ..	8	7·24	9	4·56	11	2·12	9	8·95	21	3·78
மேற்கு வங்காளம் ..	42	23·76	59	25·52	60	29·62	118	81·06	251	94·48
ஏனையவை	..	..	1	7·50	..	..	7	3·45	13	18·02
மொத்தம் ..	226	98·54	331	133·54	277	143·20	469	234·62	859	466·38

திரட்டப்பட்ட மூலதனம் வெளியீடுகளின் எண்ணிக்கையையும் அவற்றின் மூலம் கிடைத்த மூலதனத்தின் மதிப்பீட்டையும் காண்கையில், நாடு முழுவதிலும் தமிழ் நாடு உயர்ந்த இடம் வகித்து வந்துள்ளதை மேற்கண்ட விவர அட்டவணையிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

நடுத்தர தொழில் வளர்ச்சி.

தொழில்நுட்ப வளர்ச்சி தலைமை இயக்குநர் அலுவலகத்திடம் பதிவு செய்துள்ள நடுத்தரத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கையும் ஏறு முகமாக உள்ளது. 1966-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் நாள், 30 நடுத்தர தொழிற்சாலைகள் மட்டுமே இந்த இயக்குநர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தன. இது 1971-ம் ஆண்டில் 82 ஆக உயர்ந் துள்ளது. அதாவது சுமார் ஐந்து ஆண்டுகளில், பதிவு செய்யப்பட்ட நடுத்தர தொழிற்சாலைகளின் எண்ணிக்கை இருமடங்காகியது.

கடன் வழங்கு நிறுவனங்களும் வணிகவங்கிகளும் அளித்துள்ள முன் பணங்கள்.

தமிழ் நாட்டில் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் மூலம் பொருள்கள் குறித்து அட்டவணையிடப்பட்ட வங்கிகளும் வணிக வங்கிகளும் அளித்துள்ள முன்பணங்களின் அளவிலும் தொழில் வளர்ச்சி எதிரொலிக்கிறது. இதற் காக 1966-ல் அளிக்கப்பட்ட தொகை ரூ. 1,140 லட்சமாகும். இது 1970-ல் ரூ. 2,461 லட்சமாக உயர்ந்துள்ளது. அதே நேரத்தில் தொழில்நிறு வனங்களின் நிலையான அல்லது அவ்வப்போது மாறுபடுகிற இருப்புக் களின் மதிப்பும் 1966-ல் ரூ. 2,233 லட்சமாக இருந்து 1970-ல் ரூ. 3,140 லட்சமாக உயர்ந்துள்ளது. தமிழ் நாட்டில் தொழிற்சாலைகளுக்கு 1966–67-ல் இந்திய தொழில் வளர்ச்சி வங்கி அளித்த நிதியுதவி ரூ. 137·50 லட்சமாகும். இது 1970–71-ல் ரூ. 645·5 லட்சமாக உயர்ந்துள்ளது. இந்தியத் தொழில் கடனுதவிக் கழகம் 1970–71-ல் கொடுத்துள்ள முன்பணங்களின் மதிப்பு ரூ. 166·80 லட்சமாகும். தமிழ் நாட்டிலுள்ள தொழிற்சாலைகளில் ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் செய்துள்ள முதலீடு மதிப்பு 1966–67-ல் ரூ. 112·23 லட்சமாக இருக்க, 1969–70-ல் இது ரூ. 130·68 லட்சமாக உயர்ந்துள்ளது.

சாதாரணமாக தொழில் துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியை மதிப் பிடுகையில், பொதுத் துறைத் திட்டங்களில் காணப்படும் வளர்ச்சியை மட்டுமே எடுத்துக்காட்டுவது வழக்கமாகும். ஆனால், மத்திய அரசுத்துறை, மாநில அரசுத்துறைகளில் வளர்ச்சி, கூட்டுத்துறை, தனியார்துறைகளில் வளர்ச்சி ஆகியவற்றைப் பற்றி ஆராயும்போது மட்டுமே மாநிலத்தின் தொழில் வளர்ச்சி பற்றிய முழுமையான மொத்த வடிவம் புலனாகும். எனவே, இந்த ஆய்வுரையில், எல்லாத் தொழில் துறைகளிலும் அடைந் துள்ள முன்னேற்றத்தை இங்கு விவரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மத்திய அரசுத்துறைத் திட்டங்கள் சிலவற்றின் வளர்ச்சிபற்றி முதற்கண் ஆராய்வோம்.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழகம்.

தமிழ் நாட்டில் உள்ள மத்திய அரசுத் துறைத் திட்டங்கள்.

இது 1956-ம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இதில் நான்கு பெரும் பிரிவுகள் உள்ளன. அவை சுரங்கப் பிரிவு, அனல் மின் உற்பத்தி பிரிவு, உர உற்பத்தித் தொழிற்சாலை, சுட்ட அச்சுக்கரித்தொழில் பிரிவு ஆகியவையாகும். இதன் மூலதன முதலீடு ரூ. 175 கோடியாகும்.

இன்றைய நிலவரப்படி ஏறக்குறைய 18,000 பேர்களுக்கு வேலையளிக்கிறது. நாட்டில் இதுவரை பயன்படுத்தாமல் இருந்த இயற்கை பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தும் ஒரே நிறுவனம் நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகமாகும். பழுப்பு நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட 600 மெகவாட் மின் உற்பத்தி நிலையம் நாட்டிலேயே மிகப் பெரிய அனல் மின் நிலையமாகும். மொத்த மின் உற்பத்தியில் இது ஏறக்குறைய 40 சத வீதத்தை உற்பத்தி செய்கிறது.

இரண்டாவது சுரங்கம் வெட்டுமாறும் பழுப்பு நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட மற்றுமொரு மின் உற்பத்தி நிலையத்தைத் தொடங்குமாறும் கேட்டு இந்திய அரசை மாநில அரசு வலியுறுத்தி வந்திருக்கிறது. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் கூடுதல் மின்சக்தி இம் மாநிலத்தில் பெருகிவரும் மின்சக்தித் தேவையை நிறைவு செய்யும். குறிப்பாக இம்மாநிலத்தில் அனல் மின் உற்பத்தி மூலம் கூடுதலாக மின் உற்பத்தி செய்வதற்கான வாய்ப்பு முற்றிலும் இல்லையாதலால் நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து வரும் நமது தொழில், வேளாண்மையின் தேவைகளை நிறைவு செய்ய அனல் மின் சக்தியை மட்டுமே நாம் நம்பியிருக்க வேண்டும்.

ரயில் பெட்டி இணைப்புத் தொழிற்சாலை.

இத்தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு 350 பெட்டிகள் தயாரிக்கும் நோக்குடன் ரூ. 7·35 கோடி செலவில் சுவிட்சர்லாந்து உடனுழைப்புடன் 1955-ம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இந்த உற்பத்தித் திறன் 1958-ம் ஆண்டிலேயே எய்தப்பட்டது. பின்னர், பெட்டிகளில் வசதிகளை அமைக்கும் தொழிற்சாலை ஒன்றும் இதனுடன் சேர்க்கப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை தனது அலுவல்களை பல்வேறு துறைகளில் படிப்படியாகப் பெருக்கி வந்துள்ளது. முதற்கண் இது ஒரே வகை பெட்டியை மட்டுமே தயாரித்து வந்தது ; ஆனால், தற்போது இந்திய, பிற ரயில்வே நிறுவனங்களின் தேவைகளுக்கேற்றவாறு 16 வெவ்வேறு வகையான பெட்டிகளைத் தயாரித்து வருகிறது. டெய்வான், தாய்லாந்து, பர்மா போன்ற வெளிநாடுகளுக்கும் ரயில் பெட்டிகளை இது ஏற்றுமதி செய்து வருகிறது. ஆண்டொன்றுக்கு 750 பெட்டிகள் தயாரிப்பதற்கேற்றவாறு இத்தொழிற்சாலையின் உற்பத்தித் திறனைப் பெருக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டம் இவ்வாண்டுக்குள் முடிவடையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. சுமார் 12,000 பணியாளர்கள் இத்தொழிற்சாலையில் பணிபுரிகின்றனர்.

கனரக வண்டிகள் தொழிற்சாலை, ஆவடி.

இத் தொழிற்சாலை 1961-ம் ஆண்டில் அமைக்கப்பட்டது. போரிடுவதற்குப் பயன்படும் கவசப் பாதுகாப்புடைய எல்லா வகை வண்டிகளையும், இராணுவத்தினருக்குத் தேவைப்படும் ஏனைய கனரக பொறியியல் வண்டிகளையும் சாதனங்களையும் இது உற்பத்தி செய்யும் திறனுள்ளதாகும்

இத் தொழிற்சாலைக்கான செலவு ரூ. 17·27 கோடியாகும். 1964–65-ம் ஆண்டில் ரூ. 36 லட்சம் மதிப்புடைய வண்டிகளை மட்டுமே இது உற்பத்தி செய்திருக்க, 1968–69-ம் ஆண்டில் ரூ. 16 கோடி மதிப்புடைய வண்டிகளை உற்பத்தி செய்யும் திறனை எட்டியது. இத்தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களினால் வெளிநாடுகளிலிருந்து பொருள்கள் இறக்குமதி செய்வது குறைந்தது. அதன் பலனாக 1969-ம் ஆண்டிலேயே சுமார் 9½ கோடி ரூபாய் மதிப்புக்கு அந்நியச் செலாவணி மிஞ்சியது. 1971-ம் ஆண்டில், இத்தொழிற்சாலையின் உற்பத்தி மதிப்பு மேலும் உயர்ந்துள்ளது.

இந்துஸ்தான் டெலிபிரிண்டர் நிறுவனம்.

இந்நிறுவனம் 1960-ம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இதன் மூலதன முதலீடு ரூ. 429 லட்சமாகும். சுமார் 1,067 பேர்களுக்கு இது வேலையளிக்கிறது. இது டெலிபிரிண்டர்களை முக்கியமாக உற்பத்தி செய்கிறது. 1966-ம் ஆண்டிற்குள் 1,300 டேப் டெலிபிரிண்டர்களை உற்பத்தி செய்யும் திறனை எய்துவதற்கேற்றவாறு இத்தொழிற்சாலை முதற்கண் அமைக்கப்பட்டது. இது 1961-ம் ஆண்டில் உற்பத்தியை தொடங்கியது. 1969–70-ல் 5,310 டெலிபிரிண்டர்களை உற்பத்தி செய்யும் திறனை எட்டியது. எனவே, ஐந்து ஆண்டுகளுக்குள்ளாகவே இத்தொழிற்சாலையின் உற்பத்தி உயர்ந்துள்ளது. 1970–71-ம் ஆண்டிற்குள் 8,500 டெலிபிரிண்டர்கள் வரை உற்பத்தி செய்வதற்கேற்றவாறு இதன் உற்பத்தித்திறனைப் பெருக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. குவைட், பூட்டான், இலங்கை, ஏமன், ஈரான் போன்ற வெளிநாடுகள் டெலிபிரிண்டர்களை ஏற்றுமதி செய்யுமாறு ஆணைகள் அனுப்பியுள்ளன.

இந்துஸ்தான் புகைப்படச் சுருள் தயாரிப்பு நிறுவனம், உதகமண்டலம்.

இத்தொழிற்சாலை 1960-ம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இதன் மூலதன முதலீடு சுமார் ரூ. 1,067 லட்சமாகும். தற்போது இது திரைப்படச் சுருள்கள், மருத்துவத்திற்கான எக்ஸ் கதிர் சுருள்கள், நிழற்படமெடுக்க தேவைப்படும் தாள், புகைப்படச் சுருள்கள், 35 மி. மீட்டர் நெகடிவ் படச்சுருள், திரைப்பட ஒலிக்கருவி ஆகியவற்றை உற்பத்தி செய்கிறது. இது சுமார் 1,900 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கிறது. 1–4–1970 முதல் 31–3–1971 வரை இதன் உற்பத்தி மதிப்பு ரூ. 341 லட்சமாகும். இதன் உற்பத்தித்திறனைப் பெருக்கும் நோக்கத்துடன் வண்ண புகைப்படச் சுருள்கள் தயாரிக்கும் பணியை மேற்கொள்வதென்று இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இது காரியத்திற்காக அந்நிய நாட்டு உடனுழைப்புப் பெற பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு வருகிறது.

பாரத கனரக மின் கருவிகள் நிறுவனம், திருச்சிராப்பள்ளி.

திருவரம்பூரில் உள்ள உயரழுத்தக் கொதிகலன் தொழிற்சாலை பாரத கனரக மின் கருவிகள் நிறுவனத்தின் நான்கு தொழிற் பிரிவுகளில் ஒன்றாகும். நாட்டிலேயே, அனல் மின் நிலையத்திற்குத் தேவைப்படும் உயர் கொள்ளளவு கொதிகலன்களையும், தொழிற்சாலைப் பயனுக்கான

கொதிகலன்களையும் உயரழுத்த வால்வுகளையும் தயாரிக்கும் ஒரே தொழிற்சாலை இதுவேயாகும். ஒரு கொதிகலன் பிரிவிற்குத் தேவைப்படும் வேலை நிறைவுபெற்ற 40,000 டன் எடையுள்ள கருவிகளை ஆண்டுதோறும் உற்பத்தி செய்யக்கூடிய திறனுடையது. இக்கருவிகள் 750 மெகவாட் மின் உற்பத்தித் திறனுக்கு ஈடானவையாகும். பெட்ரோலியம், உருக்கு, இரசாயனத் தொழிற்சாலைகளின் தேவைகளை நிறைவு செய்ய இத் தொழிற்சாலை பெரிய அளவிலான அழுத்தக் கருவிகளை தயாரிக்கும் பணியை அண்மையில் தொடங்கியுள்ளது.

பயிற்சி நிலையம், நகரியம் உட்பட இத்தொழிற்சாலையின் மொத்த மூலதன முதலீடு இன்றைய நிலவரப்படி ரூ. 25 கோடியாகும். இது சுமார் 7,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கிறது. இவ்வாண்டில் இதன் உற்பத்தி மதிப்பு ரூ. 28 கோடியாகும். இத்தொழிற்சாலை, ஜெர்மனி, போலந்து ஆகிய நாடுகளுக்கு வால்வுகளை ஏற்றுமதி செய்துள்ளது. மலேசியாவில் உள்ள போர்ட் டிக்சன் மின்சக்தி நிலையத்தில் கனரகக் கொதிகலன் தொழிற்சாலை ஒன்றை நிறுவி அதனைச் செயல்படுத்துவதற்காக ரூ. 12 கோடி மதிப்புடைய பொருள்களைத் தயாரித்து அனுப்புமாறு மலேசியா விடமிருந்து தேவைக் குறிப்புப் பட்டியல் ஒன்று அண்மையில் இத் தொழிற்சாலைக்குக் கிடைத்துள்ளது.

இத்தொழிற்சாலையை விரிவுபடுத்துவதற்கான திட்டம் ஒன்றுக்கு இந்திய அரசு அண்மையில் இசைவு அளித்துள்ளது.

இப்பெரும் தொழிற்சாலையை சுற்றித் துணைத் தொழிற் பிரிவுகள் வளர்ந்து வருவது இத்தொழிற்சாலையின் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இத்துணைத் தொழிற் பிரிவுகள் வளர்ந்து வர கனரகக் கொதிகலன் தொழிற்சாலையை முனைப்புடன் உதவி புரிந்து வந்துள்ளது. இத் துணைத் தொழிற்பேட்டையில் தற்போது 10 பிரிவுகள் இருக்கின்றன. மேலும், இத் துணைத்தொழில் திட்டத்தின்கீழ் 14 பிரிவுகளை அமைக்க உதவும் திட்டங்கள் வகுக்கப்பட்டு இருக்கின்றன. இந்தப் பிரிவுகள் அனைத்தும் கனரகக் கொதிகலன் தொழிற்சாலையின் தேவைகளை மட்டுமே ஈடு செய்யும். திருவரம்பூரில் உள்ள துணைத் தொழிற்பேட்டைக்கு தமிழ் நாடு தொழில் முதலீட்டுக்கழகம் வாயிலாக ரூ. 20 லட்சம் வரை நிதி யுதவியளிக்கவும் அரசு ஏற்பாடு செய்துள்ளது.

இந்திய எண்ணெய்க் கழகத்தின் கலவை ''லூப்'' எண்ணெய்த் தொழிற்சாலை.

இந்நிறுவனம் 1970 எப்ரல் திங்களில் அமைக்கப்பட்டது. இது மணலியில் ரூ. 1·2 கோடி செலவில் நிறுவப்பட்ட மோட்டார் இரசாயன எண்ணெய்க் கலவைத் (லூப்) தொழிற்சாலையாகும். இது 1·4 லட்சம் டன் லூப் கலவை எண்ணெயை உற்பத்தி செய்யும் திறனுடையதாகும். இது சுமார் 110 பேர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கிறது.

லூப் எண்ணெயையும் **(Lube Oil)** நிலக்கீல் கொண்டு தயாரிக்கப்பட்ட பொருள்களையும் வைத்திருப்பதற்கான பீப்பாய்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று நிறுவப்பட்டு வருகிறது. இவ்விரிவு திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவு சுமார் 50 லட்சம் ரூபாயாகும். இது விரைவில் முடிவடையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

1972 மார்ச் 14]

சேலம் உருக்கு ஆலை.

சேலம் உருக்கு ஆலை தமிழ்நாட்டில் உள்ள மத்திய அரசுத் துறைத் திட்டங்கள் யாவற்றினும் மிகப்பெரியதும் தமிழ் நாடு பெருமைபடக் கூடியதும் நீண்ட காலமாக நாம் எதிர்பார்த்து வந்ததுமான ஓர் ஆலையாகும். தலைமை அமைச்சர் 1970 செப்டம்பரில் இந்த ஆலைக்கான அடிக்கல் நாட்டினார். இத் திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவு ஏறக் குறைய ரூ. 285 கோடியாக இருக்கும். சிறப்பு உருக்குகளை இது உற்பத்தி செய்யும்.

உருக்கு ஆலையை அமைப்பதற்குத் தேவைப்படும் நிலத்தைக் கையகப் படுத்தி அதனை உடனடியாக இந்திய அரசிடம் ஒப்படைக்க நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்பட்டு வருகின்றன. மொத்தத்தில் 1964ஆம் ஆண்டு தொடக்கத்திலேயே 24,446 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்போவதாக அறிவிக்கப்பட்டது. பின்னர், உருக்கு ஆலைக்குத் தேவைப்படாதவையாக 7,610 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்துதலின்றும் அரசு விடுவித்தது. 16,845 ஏக்கர் பரப்பளவு கையகப்படுத்த தொடர்ந்து அறிவிக்கப்படும். 30-8-1970-லேயே 43·38 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டது. நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கைகளில் முதல் நிலையாக, 1,473 ஏக்கர் கொண்ட பகுதி கையகப்படுத்தப்பட்டு ஒப்படைக்க வேண்டுமென இந்திய அரசு 1971 மே மாதத்தில் குறிப்பிட்டுள்ளது. அதன்படி, 1971 ஜூலை மாதத்தில் இக்காரியத்துக்காக சிறப்புப் பணியாளர்களை அரசு நியமித்தது. நிலம் கையகப்படுத்தும் பணி விரைவில் முடிவடையுமென்று எதிர் பார்க்கப்படுகிறது. யாரிடமிருந்து நிலம் கையகப்படுத்தப்படுகிறதோ, அந்த நிலத்தின் சொந்தக்காரருக்கு இழப்பீட்டுத் தொகை கொடுப்பது குறித்து முன்பணமாக ரூ. 30 லட்சத்தையும் இந்திய அரசு 1971 நவம்பரில் வழங்கியுள்ளது.

எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலை, சென்னை,

இந்திய அரசின் கூட்டுத்துறைத் திட்டங்கள்.

தொழில்கள் விரைவாக வளர்ச்சி பெறுவதன் பலனாக பெட்ரோலியம் துணைப்பொருட்களுக்கான தேவை பெருகி வருகிறது. இத்தேவையினை நிறைவு செய்ய இந்திய அரசு நாடு முழுவதிலும் எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலைகளைத் தொடர்ச்சியாக அமைத்துள்ளது. அவற்றில் ஒன்று சென்னையில் நிறுவப்பட்டுள்ள எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலை யாகும். இது ஆண்டுதோறும் 2·5 மில்லியன் டன் தூய்மைபடுத்தப் படாத எண்ணெய்த் தூய்மைபடுத்தும் திறனுடையதாகும். இத் திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவு ரூ. 43 கோடிக்கு மேலாகும். இன்றியமையாப் பொருளாகிய கந்தகம் துணைப் பொருளாக இத் தொழிற் சாலையிலிருந்து கிடைக்கும். இத் தொழிற்சாலையில் பங்கு முதலீடு செய்துள்ளவை இந்தியானு அரசு (பங்கு மூலதனத்தில் 74 சத வீதம் 9·53 கோடி ரூபாய்), நேஷனல் ஈரானியன் எண்ணெய் நிறுவனம (13 சத வீதம் 1·67 கோடி ரூபாய்), அமோகோ இந்தியா நிறுவனம் (13 சத வீதம் 1·67 கோடி ரூபாய்) ஆகியவையாகும். இதன் உற்பத்தி 1969 ஜூலையில் தொடங்கியது. முதலாண்டு உற்பத்தியிலேயே இத் தொழிற்சாலை அதன் நிறுவப்பட்ட திறனின் ஏறக்குறைய 80 சத வீத உற்பத்தியை எட்டியது. சுமார் 450 பேர்களுக்கு இது வேலை வாய்ப் பளிக்கிறது.

பாரஃபின் (**Paraffin**) மெழுகு தயாரிப்பதற்கான திட்டம் ஒன்று இந்நிறுவனத்தின் பரிசீலனையில் உள்ளது. இப்பிரிவிற்கான செலவு சுமார் ரூ. 3·06 கோடியாகும். பாரஃபின் மெழுகுக்கு நாடு முழுவதிலும் அதிகத் தேவையுள்ளது. ஆனால் தற்போது அது பற்றாக்குறையாக உள்ளது. நாடு முழுவதற்கும் தேவையாகவுள்ள பாரஃபின் மெழுகை இந்நிறுவனம் வழங்கும்.

சென்னை உரத் தொழிற்சாலை.

உரங்களுக்கான தேவை பெருகி வருவதனாலும், நாட்டில் உரத்திற்கான தேவை அதிகமிருந்தும் குறைவான அளவே உரம் வழங்கப்படுவதன் காரணமாகவும் இந்திய அரசு, இந்நாட்டில் கூட்டுத்துறையிலான உரத் தயாரிப்பு நிறுவனங்கள் இரண்டினை அமைப்பதற்கு அனுமதி வழங்குவதென்று முடிவு செய்தது. அந்நிறுவனங்களில் ஒன்று சென்னை உரத் தொழிற்சாலையாகும். இந்திய அரசும், அமெரிக்க அனைத்து நாட்டு எண்ணெய் நிறுவனத்தின் கிளையாகிய அமோகோ இந்தியானா நிறுவனமும் கூட்டாகச் சேர்ந்து இதனை 1966ஆம் ஆண்டில் நிறுவியது. நிலையான வட்டியில்லாப் பங்கு மூலதனத்தின் 51 சத வீதம் இந்திய அரசுக்கும், 49 சத வீதம் அமெரிக்க நிறுவனத்திற்கும் உரியதாகும். இத்திட்டத்திற்கான செலவு ஏறக்குறைய 65 கோடி ரூபாயாகும். இன்றைய நிலவரப்படி தென் கிழக்கு ஆசியாவிலேயே மிகப் பெரிய உரத் தொழிற்சாலையாக இத்தொழிற்சாலை கருதப்படுகிறது. இது ஆண்டொன்றுக்கு 247,500 மெட்ரிக் டன் அமோனியாவும்; 292,000 மெட்ரிக் டன் யூரியாவும், 363,000 மெட்ரிக் டன் உரக் கலவையும் உற்பத்தி செய்யும் திறனுடையது. சுமார் 850 பேர்களுக்கு இது வேலை வாய்ப்பளிக்கிறது. 1971 செப்டம்பர்-அக்டோபர் திங்களில் இத் தொழிற்சாலை வணிக ரீதியில் உற்பத்தியை தொடங்கியது.

முந்திய பத்திகளிலெல்லாம் தமிழ்நாட்டில் உள்ள மத்திய அரசுத் துறைத் திட்டங்கள் சிலவற்றின் வளர்ச்சி பற்றி சுருக்கமாகக் கூறப் பட்டுள்ளது. மாநில அரசுத் துறையைச் சேர்ந்த பெரிய திட்டங்கள் ஒரு சிலவற்றின் அமைப்பு பற்றி இப்போது ஆராய்வோம்.

தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகம்.

1965ஆம் ஆண்டில், மாநில அரசு தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தை (**TID CO**) அமைத்தது. இதற்கு அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 10 கோடியாகும். சிறப்பாக மாநில அரசுத் திட்டங்கள் பற்றிக் கவனிக்கவும், கூட்டுத்துறைத் திட்டங்களை வளர்ச்சியுறச் செய்யவும் வேண்டி இது அமைக்கப்பட்டது. இக்கழகம் செயல்படுத்தியுள்ள இரு பெரிய மாநில அரசுத்துறைத் திட்டங்கள் ஆலங்குளத்தில் உள்ள தமிழ் நாடு சிமிட்டித் தொழிற்சாலையும், அரக்கோணத்திலுள்ள தொடர் வார்ப்படத் தொழிற்சாலையும் ஆகும்.

தமிழ் நாடு சிமிட்டித் தொழிற்சாலை.

சீமைச்சுண்ணாம்பு, களிமண் ஆகியவை அடங்கிய சாதாரண சிமிட்டியை உற்பத்தி செய்ய தமிழ் நாடு சிமிட்டி நிறுவனம் 1966ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இதன் நிறுவப்பட்ட உற்பத்தித் திறன் நாள்

ஒன்றுக்கு 1,200 டன் சிமிட்டியாகும். இத்தொழிற்சாலை 5-2-1970-ல் உற்பத்தியைத் தொடங்கியது. இரண்டாவது சூளையும் 15-12-1971ஆம் நாள் தொடங்கப்பட்டது. இத்தொழிற்சாலையில் உற்பத்தியாகும் சிமிட்டி தரமிக்கதெனக் கண்டறியப்பட்டதோடு இந்தியத்தர நிர்ணயத்தையும் பிரிட்டிஷ் தர நிர்ணயத்தையும் விடச் சிறந்ததாக இருக்கிறது. இத் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் சிமிட்டியின் மீது 16-12-1971 முதல் இந்தியத் தர நிர்ணயக் குறிகளைப் பயன்படுத்த இத் தொழிற்சாலைச்கு உரிமம் கிடைத்துள்ளது. இத்தொழிற்சாலையில் 1-4-1971 முதல் நாளது தேதிவரை உற்பத்தியான சிமிட்டியின் அளவு, விற்பனையான சிமிட்டியின் மதிப்பு பற்றிய விவரங்களைப் பின்வரும் விவர அட்டவணையில் காணலாம்:—

உற்பத்தி செய்யப்பட்ட சிமிட்டியின் அளவையும், விற்பனையான சிமிட்டியின் மதிப்பையும் குறிப்பிடும் விவர அறிக்கை.

	உற்பத்தி செய்யப்பட்ட சிமிட்டியின் அளவு (டன்களில்).	விற்கப்பட்ட சிமிட்டியின் மதிப்பு.
(1)	(2)	(3)
		ரூ
1971 ஏப்ரல்	22,615	21,726·50
1971 மே	19,455	24,997·65
1971 ஜூன்	31,000	24,572·20
1971 ஜூலை	26,620	26,517·65
1971 ஆகஸ்ட்	18,888	25,400·54
1971 செப்டெம்பர்	23,673	23,157·55
1971 அக்டோபர்	23,155	22,843·35
1971 நவம்பர்	26,971	28,017·80
1971 டிசம்பர்	29,000	27,446·00
1972 ஜனவரி	30,010	25,795·95

மேற்கண்ட அட்டவணையிலிருந்து கடந்த ஆண்டில் சிமிட்டியின் விற்பனை படிப்படியாக உயர்ந்திருப்பது தெரியவரும். 31—3—1971 இறுதியில் நம்மிடம் 57,840 மெட்ரிக் டன் பதமான செங்கற்கள் இருப்பு இருந்தது. விற்பனையை அதிகமாக்கவேண்டுமென்ற நமது விடாமுயற்சியின் காரணமாக, இந்த இருப்பு 1972 ஜனவரியில் முற்றிலும் குறைந்தது. தமிழ் நாடு, கேரள மாநிலம், மைசூர் மாநிலத்தில் தென் கன்னடா,

கோலார் தங்க வயல், பெங்களூர் மாவட்டங்களிலும் புதுச்சேரியிலும் மற்றும் கல்கத்தா அதன் சுற்றுப்புற பகுதிகளிலும் இத்தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் சிமிட்டி விற்பனையாகிறது. டில்லிக்கு தனியாக விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. சந்தையில் நிலைபெற்றுவிட்ட சிமிட்டி தயாரிப்பாளர்களுடன் போட்டியிடத் தக்க வகையில் நமது சிமிட்டியின் விற்பனையைப் பெருக்க வட்டார விற்பனை ஆய்வாளர்கள் அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளனர். அதன் பயனாக, தமிழ்நாட்டில், 1971 மார்ச்சில், 1,946 மெட்ரிக் டன்னாக இருந்த விற்பனை அளவு 1971 செப்டெம்பரில் 4,500 மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது. 1971 மே திங்களில் தான் இவர்கள் கேரளத்தில் விற்பனை தொடங்கியுள்ளனர். 1971 மே திங்களில் 67 மெட்ரிக் டன்னாக இருந்த விற்பனை அளவு 1971 அக்டோபரில் 1,027 மெட்ரிக் டன்னாக உயர்ந்தது. இந்தச் சிமிட்டிக்கு டில்லியில் கூட நல்ல விற்பனையுள்ளது. அதன் காரணமாக 1971 மார்ச்சில் 71 மெட்ரிக் டன்னாக இருந்த சிமிட்டியின் விற்பனை 1971 அக்டோபரில் 1,787 மெட்ரிக் டன்னாக உயர்ந்தது. அவர்களது மொத்த விற்பனையாளர்களின் எண்ணிக்கை 1971 மார்ச்சில் 234 ஆக இருந்து இன்று வரை 425 ஆக உயர்ந்துள்ளது. மொத்த விற்பனையாளர்களின் எண்ணிக்கையை 600-க் கேனும் உயர்த்துவதே நமது குறிக்கோள்.

இத் தொழிற்சாலையின் தற்போதைய உரிமம் பெற்ற மொத்த உற்பத்தித் திறனளவு ஆண்டு ஒன்றுக்கு 4 லட்சம் டன்னாகும். இதை ஆண்டு ஒன்றுக்கு 7 லட்சம் டன்னாக உயர்த்த அண்மையில் உரிமம் பெறப் பட்டுள்ளது. சிமிட்டித் தயாரிப்பை ஈரத் தயாரிப்பு முறையிலிருந்து உலர்த் தயாரிப்பு முறைக்கு மாற்றுவதற்கும் அவர்கள் உரிமம் பெற்றுள் ளனர். சிமிட்டித் தொழில் நுட்பத்தில் இரண்டாவது முறையே புதுமை யானதாகும். உலர் தயாரிப்பு முறையைப் புகுத்துவதன் மூலம் இத் தொழிற்சாலைக்குத் தேவையான தண்ணீரை மிச்சப்படுத்த முடியும். இதற்கு ரூ. 5 கோடி செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த தமிழ் நாடு சிமிட்டித் தொழிற்சாலை தற்போது நேரடியாகவும் மறைமுகமாகவும் 950 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது. நாளது தேதி வரையில் இத் தொழிற்சாலையில் நாம் ரூபாய் 6·77 கோடி முதலீடு செய்துள்ளோம். இத் தொழிற்சாலை இக்கட்டான ஒரு நிலையிலிருந்து மீண்டு, இவ்வாண்டு முதல் ஆதாயம் தரும் நிலையை அடையும் என்று இதன் ஆதாய-விரயக் கணக்கிலிருந்து தெரிகிறது. இது பெருமைப்படத் தக்க ஒன்றாகும். 1971–72-ல் ரூபாய் 49 லட்சம் மொத்த ஆதாயமும், ரூபாய் 2 லட்சம் நிகர ஆதாயமும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படு கிறது.

தொடர் வார்ப்படத் தொழிற்சாலை, அரக்கோணம்.

தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தினால் நிறைவேற்றப்பட்டு வருகின்ற மற்றும் ஒரு தொழிற்சாலை, வட ஆற்காடு மாவட்டத்தில், அரக்கோணத்திற்கு அருகில் உள்ள தொடர் வார்ப்படத் தொழிற்சாலை ஆகும். இத் தொழிற்சாலையின் உரிமம் பெற்ற உற்பத்தித் திறனளவு ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்சம் டன் உருக்குப் பாளங்களாகும். தொடக்கத் தில், இத் தொழிற்சாலை ஆண்டு ஒன்றுக்கு 50,000 டன் உருக்குப் பாளங்கள் உற்பத்தி செய்யும் திறனைக் கொண்டது. இத் தொழிற்சாலைக்

கான முக்கிய மூலப்பொருள் மெல்லிய உருக்குத் துண்டுகளாகும். இத்தொழிற்சாலை தொடர்பான கட்டிடப் பணிகள் யாவும் முடிக்கப்பட்டுவிட்டன. மின் சாதனங்கள் நிறுவும் பணியும் முடிந்துவிட்டது. உலை செயல்படத் தொடங்கியதுடன் அல்லாமல் அதன் செயல் முறை மன நிறைவளிக்கத் தக்க வகையிலும் அமைந்துள்ளது. தொடர் வார்ப்பு உருக்குப் பாளங்கள் தயாரிக்கும் இயந்திரம் விரைவில் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையில் இத்தொழிற்சாலையில் உருக்குப் பலகைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. நாளது வரையில் இத்தொழிற்சாலைக்கு ரூ. 540 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை ரஷ்யாவின் தொழில் நுட்ப உடனுழைப்புடன் நிறுவப்பட்டு வருகிறது என்பது நன்கு தெரிந்ததே.

விசைச் செங்கல் சூளை.

விசைச் செங்கல் சூளை, தமிழ்நாட்டின் மற்றொரு பெரிய அரசுத் துறைத் திட்டமாகும். இது பூவிருந்தவல்லிக்கு அண்மையில் திருமழிசையில் 1968-ல் அமைக்கப்பட்டுள்ளது. இச் செங்கல் சூளை தற்போது தொழில் வணிக இயக்குநர் அலுவலகத்தால் நடத்தப்படுகிறது. இச்சூளை யூகோஸ்லேவிய நாட்டின் உடனுழைப்புடன் அமைக்கப்பட்டது. இதன் மூலதன முதலீடு சுமார் ரூ. 71 லட்சமாகும். இச் சூளையின் ஆண்டுவாரியான உற்பத்தியும் விற்பனையும் பின்வருமாறு :—

தொடர் எண்.	ஆண்டு.	அளவு.	மதிப்பு.	விற்பனை.
		ரூ.	ரூ.	ரூ.
1	1968–69	62,91,000	6,88,085·70	7,73,830·65
2	1969–70	71,43,000	6,10,478·48	6,66,058·45
3	1970–71	91,74,000	8,49,765·30	8,57,267·04
4	1971–72 1971 செப்டெம்பர் வரை ஆறு திங்கள்).	59,42,740	5,86,405·33	5,67,884·15

இச் சூளையின் உற்பத்தியும் விற்பனையும் கணிசமான அளவுக்கு உயர்ந்திருப்பது மேற்சொன்னவற்றிலிருந்து தெரிகிறது. இச்சூளையின் உற்பத்திக் குறிக்கோள் அளவு நாளொன்றுக்கு 66,000 செங்கற்களாகும். இன்றுள்ளவாறு, இப்பிரிவு அதன் உற்பத்தித் திறனளவில் 60 சத வீதத்தை எட்டியுள்ளது. தரமான செங்கற்களின் அளவுடன் மெட்ரிக் அளவிலான செங்கற்களையும், துளையிடப்பட்ட செங்கற்களையும், இப்பிரிவு உற்பத்தி செய்கிறது. கல்பாக்கத்திலுள்ள அணுசக்தி நிலையத்திற்கு மேற்கூரை ஓடுகள் அதிக அளவில் வழங்குகிறது. இதே வகை ஓடுகளை ஆந்திரப் பிரதேசம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள அணுசக்தி குழுவின் திட்டத்திற்கு அனுப்புவதற்கான அதிக அளவிலான தேவைக் குறிப்பை இப்பிரிவு பெற்றிருக்கிறது. தமிழ் நாடு குடிசை மாற்று வாரியம், வீட்டு வசதி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

வாரியம் ஆகியவற்றின் தேவையின் பெரும் பகுதியையும் இப்பிரிவு நிறைவு செய்கிறது. 30—9—1971 அன்றுள்ளவாறு, இப்பிரிவு ரூ. 2·5 லட்சம் மதிப்புள்ள செங்கற்களை உற்பத்தி செய்து அனுப்புவதற்கான ஆணைகளைப் பெற்றுள்ளது. இப்பிரிவில் சுமார் 150 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர்.

விசைச் செங்கற் சூளை ஒன்றை அமைப்பதற்கான இதே போன்ற திட்டம் ஒன்று வீட்டு வசதி வாரியத்தினால் திட்டமிடப்பட்டுள்ளது. இது தற்போது தொழில்-வணிக இயக்குநரால் செயல்படுத்துவதற்காக மாற்றப் பட்டுள்ளது. இச்சூளை செக்கோஸ்லாவாகியா நாட்டின் உதவியுடன் அமைக் கப்படும். இயந்திரத்தின் ஒரு பகுதி முன்னரே வந்து விட்டது. இச் சூளையை அமைப்பதற்கு சுமார் ரூ. 79 இலட்சம் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நைலான் துணி நெட்டிழை நூல் உற்பத்தி செய்யும் ஆலை.

மதுரை மாவட்டத்தில் அமைக்கப்படவிருக்கும் நைலான் துணி நெட்டிழை நூல் உற்பத்தி செய்யும் ஆலை நமது மதிப்பை உயர்த்தும் மற்றொரு அரசுத் துறைத் திட்டமாகும். இப்பிரிவை அமைப்பதற்கான அனுமதிக் கடிதத்தை தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் 29—12—1971 நாளன்றுதான் பெற்றது. ஆண்டொன்றுக்கு 2,100 டன் நைலான் துணி நெட்டிழை நூலை இந்த ஆலை உற்பத்தி செய்யும். இந்த ஆலையின் மொத்தச் செலவு சுமார் ரூபாய் 10 கோடி என்று மதிப் பிடப்பட்டிருக்கிறது. இந்த ஆலையை பொதுத் துறையிலேயே அமைக்கக் கருதப்பட்டிருக்கிறது. இந்த ஆலையை அமைப்பதற்குரிய அனுமதிக் கடிதத்தை விரைவில் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகின்றன.

ஸதர்ன் பெட்ரோ-கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பொரேஷன் லிமிடெட் (S.P.I.C).

மாநில அரசினால் நடத்தப்படுகின்ற அரசுத் துறை தொழில்கள் பற்றி முந்திய பத்திகளில், கூறப்பட்டது. இப்பொழுது இந்த மாநில அரசினால் மேம்படுத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்ற கூட்டுத் துறைத் திட்டங்கள் பற்றி சுருக்கமாக ஆய்வோம். கூட்டுத்துறைக் கொள்கைக்கு இம்மாநிலத் தில் தான் நல்ல நம்பிக்கையும் நடைமுறையில் ஆதரவும் உள்ளது. தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திடமே கூட்டுத்துறைத் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இத்தகையதொரு கூட்டு முயற்சியே தூத்துக்குடியில் நிறுவப்பட்டுள்ள உரத்தொழிற்சாலையாகும். இந்த உரத்தொழிற்சாலைக்கு சுமார் ரூபாய் 71 கோடி செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்தொழிற்சாலை, 1,100 டன் அம்மோனியா, 1,600 டன் யூரியா, 600 டன் DAP / NPK 470 டன் கந்தக அமிலம், 165 டன் பாஸ்ஃபாரிக் அமிலம் ஆகியவற்றை உற்பத்தி செய்யும். இதன் பங்கு மூலதனம் ரூபாய் 19 கோடி, கடன்

LEGISLATIVE வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மூலதனம் ரூபாய் 47·40 கோடி. இந்தக் கம்பெனியின் பங்கு மூலதனத்தில் தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் ரூபாய் 5 கோடி முதலீடு செய்யும். தற்போதைய உற்பத்தி அட்டவணையின்படி இத்தொழிற்சாலை 1974-ல் செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டம், மாநில அரசு, நிதி அளிக்கும் நிறுவனங்கள் ஆகியவற்றின் விரைவான முழு ஒத்துழைப்புடன் விரைவாக நிறைவேற்றப்பட்டு வருகிறது.

உவர்க்காரத் தொழிற்சாலை.

ஆண்டு ஒன்றுக்கு 66,000 டன் உவர்க்காரமும், 66,000 டன் அமோனியம் குளோரைடும் தயாரிக்க 18—1—1971 அன்று தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திற்கு ஓர் அனுமதிக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக தூத்துக்குடி அல்கலி கெமிகல்ஸ் லிமிடெட் என்ற பெயரில் தனிக் கம்பெனி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் மேற்சொன்ன உரத் தொழிற்சாலையைச் செயற்படுத்துகின்ற ஸதர்ன் பெட்ரோ-கெமிகல்ஸ் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பொரேஷன் லிமிடெட்டின் உடனுழைப்புடன் தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தினுல் நிறைவேற்றப்படும். இவ்விதமான இணைப்பினுல் உரத் தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகின்ற அம்மோனியாவை உவர்க்காரம் அம்மோனியம் குளோரைடு தொழிற்சாலையில் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தொழிற்சாலையின் மதிப்பிட்டுச் செலவு ரூபாய் 10 கோடியாகும். இதில் நிலையான வட்டியில்லா மூலதனம் **(Equity Capital)** சுமார் ரூபாய் 3 கோடியாகும். உரத்தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் அம்மோனியா பின்னர் தான் கிடைக்குமாதலால் இத்தொழிற்சாலை 1975-ல் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மோட்டார்வண்டி டயர்கள், டியூபுகள் தயாரிப்புத் தொழிற்சாலை.

தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் நிறைவேற்றவேண்டிய மற்றுமொரு கூட்டுத்துறைத் திட்டம் டயர்கள், டியூபுகள் தயாரிப்புத் தொழிற்சாலையாகும். தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் 12—12—1970 அன்று இதற்கான அனுமதிக் கடிதத்தைப் பெற்றது. இத்திட்டத்தை விரைவாக நிறைவேற்ற தமிழ் நாடு இரப்பர் லிமிடெட் என்ற பெயரில் தனியான கம்பெனி ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலைக்கு ரூபாய் 5·5 கோடி செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில் நிலையான வட்டியில்லா மூலதனம் ரூபாய் 2 கோடியாகும். இத்தொழிற்சாலையை இராமநாதபுரம் மாவட்டம் காரையூர் கிராமத்தில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலைக்கு நாள் ஒன்றுக்கு 4 லட்சம் காலன் தண்ணீர் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அனைத்து நாடுகளின் தொழில் நுட்ப உடனுழைப்பைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. இந்திய அரசின் இசைவு எதிர்பார்க்கப்படுகிறது.

சிகரெட் தொழிற்சாலை.

ஆண்டு ஒன்றுக்கு 4,500 மில்லியன் சிகரெட்டுகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கு தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திற்கு இந்திய அரசு 22—4—1971 அன்று அனுமதிக் கடிதம் வழங்கியுள்ளது. இத்தொழிற்சாலையின் தோராயமான மதிப்பிட்டுச் செலவு ரூ. 8 கோடியாகும். இத்தொழிற்சாலையைத் தருமபுரி மாவட்டத்தில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மாநிலத்திலேயே இந்த மாவட்டத்தில்தான், சிகரெட் உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருளாகிய வெர்ஜீனியா புகையிலை பயிரிடுவதற்கான சிறந்த மண் வளம் உள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்துடன் உடனுழைப்பதற்காக நமது நாட்டிலுள்ள பெயர் பெற்ற சிகரெட் தயாரிப்பாளர்கள் சிலருடனும், பெரும் தொழிலதிபர்களுடனும் பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

குரோமைட் மாவுத் தொழிற்சாலை.

தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திற்கு 6—4—1971 அன்று 3,300 டன் குரோமைட் மாவு தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பதற்காக ஓர் அனுமதிக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது. இந்த மூலப் பொருள், தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது. இத் தொழிற்சாலையின் மதிப்பீட்டுச் செலவு ரூ. 90 லட்சமாகும். இத்திட்டத்தை விரைவாக நிறைவேற்றும் பொருட்டு கூட்டுத் துறையில் தமிழ் நாடு குரோமியம் அண்டு கெமிகல்ஸ் லிமிடெட் என்னும் பெயரில் தனி நிறுவனம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தோல் தொழில் பற்றிய அனுபவமுடைய தொழிலதிபர் ஒருவர் இத்திட்டத்தின் கூட்டுத் துறைப் பங்காளியாகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

பொட்டாசியம் குளோரேட் தொழிற்சாலை.

ஆண்டு ஒன்றுக்கு 1,825 டன் பொட்டாசியம் குளோரேட் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவ, 26—6—1971 நாளிட்ட அனுமதிக் கடிதம் ஒன்று தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திற்கு அண்மையில் வழங்கப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலையின் மதிப்பிட்டுச் செலவு ரூ. 70 லட்சமாகும். பொட்டாசியம் குளோரேட், தீப்பெட்டித் தொழிலுக்கான மூலப் பொருளாகும். எனவே, இத்தொழிற்சாலையை மதுரை மாவட்டம், மேலூரில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக பாண்டியன் எலெக்ட்ரோ-கெமிகல் லிமிடெட் என்னும் பெயரில் தனியான கம்பெனி ஒன்று பதிவு செய்யப்படுகிறது. இத்திட்டமும் கூட்டுறவுத் துறையிலேயே இருக்கும்.

போராக்ஸ்-போரிக் அமிலம்.

ஆண்டு ஒன்றுக்கு 15,000 டன் போராக்ஸ், 3,000 டன் போரிக் அமிலம் தயாரிப்பதற்கான தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்காக 5—10—1971 அன்று தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திற்கு ஓர் அனுமதிக் கடிதம் வழங்கப்பட்டது. இத்திட்டத்திற்கான மதிப்பீட்டுச்

செலவு சுமார் ரூ. 85 லட்சமாகும். இத்தொழிற்சாலையும் தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தினல் கூட்டுத் துறையில் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை கூட்டுத்துறையில் நிறைவேற்றுவதற்காக "போராக்ஸ் இந்தியா லிமிடெட்" என்னும் பெயரில் தனியான கம்பெனி ஒன்று பதிவு செய்யப்பட்டு வருகிறது.

கால்சியம் கார்பைடு தொழிற்சாலை.

ஆண்டு ஒன்றுக்கு 15,000 டன் கால்சியம் கார்பைடு தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கான அனுமதிக் கடிதம் 5—11-1971 அன்று தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலையின் மூலதனச் செலவு ரூ. 2·25 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலையை கூட்டுத்துறையில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஸ்டியரிங் கியர் தயாரிக்கும் தொழிற்சாலை.

தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், ஆண்டு ஒன்றுக்கு 50,000 ஸ்டியரிங் கியர்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்காக 20—12—1971 அன்று அனுமதிக் கடிதம் பெற்றுள்ளது. இத் திட்டத் திற்கான மூலதனச் செலவு ரூ. 90 இலட்சம் ஆகும். இத்திட்டத்தை நிறை வேற்றுவதற்காக தொழில் முனைவர் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்கான பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

சோடியம் ஹைடிரோ சல்பேட்.

ஆண்டு ஒன்றுக்கு 3,300 டன் சோடியம் ஹைடிரோ சல்பேட் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கான அனுமதிக் கடிதம் ஒன்று 23—4—1970 அன்று தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திற்கு கிடைத்துள்ளது. இத்தொழிற்சாலையை நிறுவுவதற்காக "தமிழ் நாடு கெமிக்கல் புராடக்ட்ஸ் லிமிடெட்" என்னும் பெயரில் தனியாக ஒரு கம்பெனி பதிவு செய்யப்பட்டுள்ளது. இத் தொழிற்சாலைக்கு ரூ. 250 லட்சம் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்தொழிற்சாலை கூட்டுத் துறையில் இராமநாதபுரம் மாவட்டம், காரைக்குடிக்கு அருகே கழனிவாசல் கிராமத்தில் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக ஜப்பானிய நிறுவனம் ஒன்றிடமிருந்து தொழில் நுட்ப உதவி பெறப்படும்.

நுட்ப அளவைக் கருவிகள் (Precisi n Measuring Instruments.)

தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திற்கு நுட்ப அளவைக் கருவிகள் தயாரிப்பதற்கான தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கு 21—1—1972 அன்று ஓர் அனுமதிக் கடிகம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான மூலதன மதிப்பீட்டுச் செலவு ரூ. 97·5 லட்சமாகும். கூட்டுத்துறையில் இத்தொழிற்சாலையை நிறுவுவதற்கு தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் பெரிய பொறியியல் வல்லுநர்களுடன் தொடர்பு கொள்கிறது.

அலுமினியம் ப்ளோரைடு (Aluminium Flouride).

தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திற்கு, ஆண்டு ஒன்றுக்கு 3,000 டன் அலுமினியம் ஃப்ளோரைடு தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்காக 3—2—1972 அன்று ஓர் அனுமதிக் கடிதம் வழங்கப் பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ரூ. 280 லட்சம் செலவாகும் என எதிர் பார்க்கப்படுகிறது. இத்தொழிற்சாலை கூட்டுத் துறையில் அமைக்கப்படும். இத்தொழிற்சாலையை கூட்டுத் துறையில் நிறுவ பொருத்தமான தொழில் முனைவர்களைத் தெரிந்தெடுப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வரு கின்றன.

சிகரெட் மேல் இழைத்தாள், பிற சிறப்புத்தாள் தொழிற்சாலை.

ஆண்டு ஒன்றுக்கு சுமார் 6,000 டன் சிகரெட் மேல் இழைத் தாள்களையும் பிற சிறப்புத் தாள்களையும் தயாரிப்பதற்கான தொழிற்சாலை ஒன்றை நிறுவ தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திற்கு 21-12-1971 அன்று ஓர் அனுமதிக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலைக் கான மதிப்பீட்டுச் செலவு சுமார் ரூ. 8 கோடியாகும். இத்தொழிற்சாலை கூட்டுத் துறையில் நிறுவப்படும். இத்திட்டத்தைக் கூட்டுத் துறையில் நிறைவேற்றுவதற்கும் பொருத்தமான உடலுழைப்பாளரைத் தேர்ந் தெடுப்பதற்குமான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இசைவுக் கடிதங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், கீழ்க்கண்ட தொழிற்சாலை களுக்கு அனுமதிக் கடிதம் கோரி இந்திய அரசுக்கு விண்ணப்பித்துள்ளது:—

(1) மென் இரும்புத் தொழிற்சாலை (Sponge Iron Project.)

(2) விளிம்பற்ற உருக்குக் குழாய்த் திட்டம் (Seamlex Steel Tubes Project.)

(3) மணலியில், பெட்ரோ-கெமிகல்ஸ் தொழிற்சாலை.

(4) இரு அச்சு அமைப்புள்ள பாலிஸ்டீரின் படச்சுருள் தயாரிப்புத் தொழிற்சாலை (Biaxially Polystrene Films Project.)

(5) பாலிஸ்டர் நெட்டிழை நூல் தொழிற்சாலை.

(6) பாலிஸ்டர் படச்சுருள் தொழிற்சாலை.

(7) ஒளி முறிவை ஏற்படுத்தும் பொருள்கள் தொழிற்சாலை.

(8) டீசல் விசை மரக்கலப் பொறித் தொழிற்சாலை.

(9) ஒருங்கிணைக்கப்பட்ட சுற்றுக்கள், குறைந்த வெப்ப நிலையிலும் மின்கடத்தாப் பொருள் தொழிற்சாலை.

(10) டெலிவிஷன் ரிசீவர் தயாரிக்கும் தொழிற்சாலை.

(11) பால் பேரிங்குகள்.

1972 மார்ச் 14]

இத்தொழிற்சாலைகள் அனைத்திற்கும் அனுமதிக் கடிதங்கள் பெறுவதற்கான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. அவை கிடைத்தவுடன் அவற்றில் பெரும்பாலான தொழிற்சாலைகளை கூட்டுத் துறையில் நிறுவுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

நாப்தா உற்பத்தித் தொழிற்சாலை, மணலி.

இந்தப் பல்வேறு தொழிற்சாலைகளில் அனைவராலும் எதிர்பார்க்கப்படுவது பெட்ரோ-கெமிக்கல் தொழிற்சாலையாகும். இதற்கு சுமார் ரூ. 90 கோடி முதலீடு செய்யவேண்டும். இத் தொழிற்சாலைக்கு அனுமதி வழங்கப்பட்டால் தமிழ்நாட்டின் தொழில்வள நிலையில் பெரியதொரு முன்னேற்றம் ஏற்படும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. தென் இந்தியா முழுவதும் உண்மையிலேயே பெட்ரோ-கெமிக்கல் புரட்சி ஏற்படும். ரூ. 90 கோடி செலவிலான நாப்தா உற்பத்தித் தொழிற்சாலை 20,000 டன் புட்டாடீன் (Butadine), 90,000 டன் காசோலின் (Gusolene), 154,000 டன் எத்திலின் (Ethylene), 60,000 டன் புரோபைலின் (Prophylene), 142,000 பாலித்தின், 40,000 டன் பாலி புரோப்பைலின் (Poly Prophylene) ஆகியவற்றை உற்பத்தி செய்யும். இந்த அடிப்படைப் மூலப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படும்பொழுது, பல்வேறு துணைப் பொருள்களை உற்பத்தி செய்ய வழி ஏற்படும். இதனால் இம் மாநிலத்தில் தொழில் முதலீடு பெருகும். இத்தொழிற்சாலைக்கு கூடிய விரைவில் அனுமதி வழங்குமாறு நாம் மீண்டும் மீண்டும் இந்திய அரசை வலியுறுத்தியுள்ளோம். ஆனால், இத் தொழிற்சாலைக்கு சுமார் 10 கோடி மதிப்புள்ள நாப்தாவும் பிற மூலப் பொருள்களும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியதிருக்குமாகையால், இத் தொழிற்சாலைக்கு அனுமதி வழங்க மத்திய அரசு தயங்குகிறது. இத் தொழிற்சாலையை நிறுவுவதற்கு முதலில் அன்னியச் செலாவணி செலவு ரூ. 10 கோடி ஆனாலும், இந்த பெட்ரோ கெமிக்கல் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை அண்டை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் வாயிலாக இறுதியில் அன்னியச் செலாவணி பெறலாம் என்பதை அரசு எடுத்துக்காட்டியுள்ளது. இதைத் தவிர வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதைத் தவிர்ப்பதன் மூலமும் அன்னியச் செலாவணிச் சேமிப்பு ஏற்படும். நாப்தா உற்பத்தித் தொழிற்சாலையை அமைப்பதன் மூலம் நேரடியாகவும் மறைமுகமாகவும் கிடைக்கக்கூடிய அன்னியச் செலாவணியைக் கணக்கிட்டால், இத்திட்டத்தின் வாயிலாக சுமார் ரூ. 16 கோடி அன்னியச் செலாவணி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, இத் தொழிற்சாலைக்கு விரைவில் அனுமதி வழங்குமாறு மத்திய அரசை இவ்வரசு வற்புறுத்திக்கொண்டிருக்கிறது. ஆனால், இதுவரை எந்தவிதப் பலனுமில்லை.

தனியார் துறை வளர்ச்சி.

முக்கியமான அரசுத் துறைகளின் திட்டங்கள் பற்றியும் அவற்றின் சாதனைகள் பற்றியும் இதுவரை விரிவாகப் பார்த்தோம். இப்பொழுது தமிழ்நாட்டில் உள்ள தனியார் துறைகளின் பெரும் சாதனைகளில் சிலவற்றைக் காண்போம். அரசின் சாதனைகள் பற்றிய ஓர் ஆய்வுரை சட்ட

மன்ற பேரவையின் முன் வைக்கப்படுகையில் தனியார் துறையின் சாதனை கள் அதில் எப்படி இடம் பெற முடியும் என்ற வினு எழலாம். நிலம் வழங்கல், பிற வசதிகள் செய்து கொடுத்தல் மற்றும் ஊக்கமளித்தல் மூலமாகத் தமிழ்நாட்டின் தொழில்களுக்கும் பெரும் முதலீடுகளைப் பெற்றுத் தருவதில் அரசு நேரடிப் பொறுப்பேற்றுள்ளமையால் இத்தகைய தனியார் துறைப் பிரிவுகள் சில இவ்வாண்டில் வளர்ச்சியடைந்திருப்பதில் மாநில அரசு பெருமை அடையலாம்.

கார்பன் பிளாக் தயாரிப்புத் தொழிற்சாலை.

இத்தகைய முயற்சிகளில் மிகப் பெரியது சமானில் நிறுவனம் "கார்பன் பிளாக்" (Carbon Black) தயாரிக்கும் தொழிற்சாலையை நிறுவியிருப்பதாகும். மோட்டார் டயர்கள், மற்றும் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய இரப்பர் பொருள்கள் ஆகியவற்றின் உற்பத்தியில் "கார்பன் பிளாக்" ஒரு முக்கிய மூலப் பொருளாகும். சாலைப் போக்குவரத்து மற்றும் மோட்டார் வண்டிகளின் எண்ணிக்கையில் உயர்வு ஆகியவை காரணமாக இப் பொருளுக்கு மிகுந்த தேவை இருக்கும். யூனைடெட் கார்பன், பிலிப்ஸ் ஆகிய இரண்டு தொழிற்சாலைகளே தற்போது இந்தியாவில் கார்பன் பிளாக் உற்பத்தி செய்கின்றன. அவற்றின் நிறுவிய திறன் 90 மில்லியன் பவுண்டுகள். ஆனால், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் கார்பனின் ஆண்டுத் தேவை 120 மில்லியன் பவுண்டாக இருக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. எனவே, நான்காவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 30 மில்லியன் பவுண்டு பற்றாக்குறை ஏற்படும். இந்தப் பற்றாக்குறை மணலியில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள தொழிற்சாலையினால் நிறைவு செய்யப்படும். இத் தொழிற்சாலைக்கு சுமார் ரூ. 275 லட்சம் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத் தொழிற்சாலை 1972 இறுதியில் உற்பத்தி செய்யத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாக்பால்—அம்பாடி தொழிற்சாலை.

தனியார் துறையின்கீழ் வருகின்ற மற்றுமொரு பெரிய பெட்ரோ-கெமிக்கல் தொழிற்சாலை திருவாளர்கள் நாக்பால் அம்பாடிஸ் தொழிற் சாலையாகும். இத் தொழிற்சாலை டிரான்ஸ்பார்மர் எண்ணெயும் சிறப்பு எண்ணெயும் தயாரிக்கும். இத் தொழிற்சாலைக்கு வேண்டிய மூலப் பொருள்களை சென்னை எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலையிலிருந்து பெற வேண்டியிருப்பதால் இது மணலி, சென்னை எண்ணெய் தூய்மைத் தொழிற்சாலைக்கு அடுத்ததாக அமைந்துள்ளது. இத் தொழிற்சாலைக்கான மதிப்பீட்டுச் செலவு ரூ. 5·5 கோடியாகும். இங்கு 15,000 டன் டிரான்ஸ் பார்மர் எண்ணெய், பயிர்களுக்குத் தெளிக்கும் எண்ணெய் வகைகள் (Agricultural spray oil), வெண்மைக் கனிப்பொருள் எண்ணெய் (White mineral oil), சிறப்பு எண்ணெய் வகைகள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் திட்டமுள்ளது. இத் தொழிற்சாலை 1973-ல் முழு உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நைலான் டயர்நூல் தயாரிப்புத் தொழிற்சாலை.

D. C. M. தொகுதியைச் சேர்ந்த நைலான் டயர் நூல் தயாரிப்புப் பிரிவு ஒன்றும் தனியார் துறையில் தோன்றியுள்ளது. இத் தொழிற்சாலை D. C. M. தொகுதியைச் சேர்ந்த ஸ்ரீராம் பைபெர்ஸ் லிமிடெட்டினால் அமைக்கப்படவிருக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு 4,500 டன் நைலான் டயர் நூல் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத் தொழிற்சாலைக்கான காப்ரோலக்டம் (Caprolactum) என்கிற முக்கிய மூலப்பொருள் குஜராத், கோயாலி எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலையிலிருந்து இறக்குமதி செய்யப்படும். வெகு விரைவிலேயே இந்த மூலப்பொருள் மணலி பெட்ரோ-கெமிக்கல் தொழிற்சாலைகளிலேயே கிடைக்கும்.

மேலே குறிப்பிடப்பட்ட தனியார் துறையைச் சேர்ந்த மூன்று தொழிற்சாலைகளுக்கும், மாநில அரசு, அவற்றிற்கு மணலியில் 350·97 ஏக்கர் நிலம் கையகப்படுத்திக் கொடுத்து அவற்றிற்குத் தேவையான மின்சக்தி, நீர் ஆகியவற்றை வழங்குவதிலும் உதவி புரிந்தது. எனவே, தனியார் துறையைச் சேர்ந்த இந்த மூன்று தொழிற்சாலைகளும், அரசு உதவியினால் பெரிதும் முன்னேற்ற மடைந்தன என்று கூறுவது சாலவும் பொருந்தும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு I.

1970–71 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டுத் துறைமுகங்களில் இறக்குமதி செய்யப்பட்ட அயல் நாட்டுப் பொருள்களின் மதிப்பு.

தொடர் எண்.	நாட்டின் பெயர்.	மதிப்பு.
(1)	(2)	(3)
		(ரூ. இலட்சத்தில்.)
1	அமெரிக்க ஐக்கிய நாடுகள்	65,06·47
2	பிரிட்டன்	19,63·86
3	ஈரான்	15,16·02
4	ஜெர்மனி (கூட்டாட்சிக் குடியரசு) ..	14,68·20
5	கனடா	14,03·96
6	ஜப்பான்	10,44·71
7	ரஷ்யா	7,61·26
8	இத்தாலி	3,89·78
9	ஜெர்மனி (ஜனநாயகக் குடியரசு) ..	3,08·23
10	போலந்து	2,90·37
11	நெதர்லாந்து	2,64·89
12	ஸ்விட்ஜர்லாந்து	2,53·82
13	செக்கோஸ்லாவகியா	2,44·22
14	பிரான்சு	2,42·40
15	ஐக்கிய அரபுக் குடியரசு	2,19·89
16	பல்கேரியா	2,00·35
17	ஆஸ்திரேலியா	1,74·84
18	பெல்ஜியம்	1,39·77
19	ருமேனியா	1,15·96
20	ஹங்கேரி	1,05·01
21	ஸ்வீடன்	96·90
22	தங்கனிகா	79·79
23	யூகோஸ்லாவியா	71·39
24	சிங்கப்பூர்	59·26
25	மலேசியா	40·81
26	இலங்கை	5·92
27	பர்மா	0·01
	ஏனைய நாடுகள்	1,02·16
	மொத்தம் ..	1,90,20·25

1972 மார்ச் 14]

இணைப்பு II.

1970–71ஆம் ஆண்டில் தமிழ்நாட்டுத் துறைமுகங்களிலிருந்து அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பு.

தொடர் எண்.	நாட்டின் பெயர்.	மதிப்பு.
(1)	(2)	(3)
		(ரூ. இலட்சத்தில்.)
1	பிரிட்டன்	24,45·87
2	இலங்கை	11,91·16
3	ஜப்பான்	18,96·46
4	ரஷ்யா	18,73·00
5	யூகோஸ்லாவியா	9,22·60
6	ஐக்கிய அமெரிக்க நாடுகள்	6,64·86
7	பிரான்சு	4,01·20
8	இத்தாலி	3,85·77
9	ஜெர்மனி (கூட்டாட்சிக் குடியரசு)	3,77·26
10	சிங்கப்பூர்	3,77·05
11	செக்கோஸ்லாவாகியா	3,25·96
12	ஜெர்மனி (ஜனநாயகக் குடியரசு)	3,18·67
13	மலேசியா	2,81·31
14	ஐக்கிய அரபுக் குடியரசு	2,78·08
15	பெல்ஜியம்	1,85·64
16	நெதர்லாந்து	1,82·97
17	ஆஸ்திரேலியா	1,04·75
18	நைஜீரியா	96·64
19	சியரா லியோன்	68·91
20	நியூஜிலாந்து	55·73
21	பிஜித் தீவுகள்	16·36
22	தெற்கு ஏமன் மக்கள் குடியரசு	5·39
	ஏனைய நாடுகள்	16,13·58
	மொத்தம் ..	1,40,69·02

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — வாய்மையே வெல்லும் — TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு III.

1966–67 முதல் 1970–71 வரை தமிழ் நாடு மாநிலத் துறைமுகத்திலிருந்தும்/துறைமுகத்திற்குள்ளும் (துறைமுக வாரியாக) நடந்த வெளி நாட்டு வாணிகத்தின் அளவு—மதிப்பு ரூபாயில்.

துறைமுகத்தின் பெயர்.	1966–67		1967–68		1968–69		1969–70		1970–71*	
	இறக்கு மதி.	ஏற்றுமதி.	இறக்கு மதி.	ஏற்றுமதி.	இறக்கு மதி.	ஏற்றுமதி.	இறக்கு மதி.	ஏற்றுமதி.	இறக்கு மதி.	ஏற்றுமதி.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
சென்னை	27,341	9,422	31,481	10,455	28,344	12,562	23,613	15,969	17,398	11,215
கடலூர்	322	170	191	60	356	79	271	49	..	106
நாகப்பட்டிணம்	4	111	180	105	845	114	188	108	213	77
தோப்புத்துறை	..	..	..	..	..	..	12	..	..	..
அதிராமபட்டிணம்	..	..	..	..	..	..	..	0·06	..	..
பாம்பன்	..	156	..	..	..	..	0·01	..	..	0·08
தனுஷ்கோடி	..	..	246	..	..	..	..	..	..	..
தூத்துக்குடி	1,064	1,636	1,644	1,563	1,230	1,747	1,178	2,139	934	1,150
பறங்கிமலை (விமான நிலையம்) ..	302	490	406	801	1,224	1,142	603	1,002	475	643
திருச்சிராப்பள்ளி (விமான நிலையம்).	..	24	..	5·78	..	0·20	..	0·28	..	2·80

* இப்புள்ளி விவரங்கள் 1970 ஏப்ரல் முதல் 1971 ஜனவரி வரையிலான ஏற்றுமதிக்குத் தொடர்புடையனவாகும்.

இப்புள்ளி விவரங்கள் 1970 ஏப்ரல் முதல் 1970 டிசம்பர் வரையிலான இறக்குமதிக்குத் தொடர்புடையனவாகும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு—3.

தொழில்-வாணிகத் துறை இயக்குநரகம்

தொழில்-வணிக இயக்குநரகத்தின் கட்டுப்பாட்டு அதிகாரத்தின் கீழுள்ள பணிகளில் பின்வருவன அடங்கும் :—

(i) சிறுதொழில்களை மேம்படுத்துதலும் அவற்றுக்கு உதவியளித்தலும் (சிறுதொழிலைப் பதிவு செய்தல், உள்நாட்டு மூலப்பொருட்களையும், இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களையும் கொள்முதல் செய்வதில் உதவி, நிதிஉதவி கிடைக்க செய்ய நேர்முகமாகவும் மறைமுகமாகவும் உதவிபுரிதல். தொழிற்பேட்டைகளிலும், மேம்பாடு செய்துள்ள பகுதிகளிலும் தொழில் பட்டறைகளை நிறுவ ஏற்பாடு செய்தல் துணைத் தொழில் வளர்ச்சி, ஏற்றுமதி உதவி முதலியனவும் இவற்றுள் அடங்கும்).

(ii) தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்.

(iii) கைவினைகள் (பயிற்சியும், விற்பனைப் பெரு நிலையங்கள் மூலம் விற்பனை செய்தலும் உட்பட).

(iv) கிராமத்தொழில் திட்டங்கள்.

(v) பட்டுப்பூச்சி வளர்ப்பு.

(vi) சிறுதொழில் துறையில், இரசாயனத் தொழில், மட்பாண்டத் தொழில், சிறியவகைப் பொறியியல் தொழில் ஆகியவற்றின் வளர்ச்சி.

(vii) சிறப்புப் பயிற்சி, உற்பத்திப் பிரிவுகளை நிர்வகித்தல்.

(viii) தொழில் நுட்பத் தகவல்களைப் பரப்புதல் (தொழில் நுட்ப நூலகங்கள், சோதனை உற்பத்தி மேம்பாடு, தரக்கட்டுப்பாடு வசதிகள்).

(ix) நிலவியல் ஆய்வுகள், சுரங்கம் வெட்டுதல், கனிவள ஆய்வு செய்தல் ஆகியவற்றின் வளர்ச்சியும் கட்டுப்பாடும்

(x) உற்பத்தித்திறன் மன்றங்கள், இந்தியத்தர நிறுவனம் சிறப்புத்தொழில் நிர்வாகத்துக்கான சிறுதொழில் பணிக்கழகம், வளர்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றுடன் தொடர்பு.

மதிப்பிட்டாய்வு—புள்ளிவிவரப் பிரிவு

தமிழ்நாட்டில், சிறு தொழில்கள் தொடர்பாகத் தொழில் மதிப்பீட்டாய்வுகளை மேற்கொள்ளவும், விரிவான புள்ளிவிவரங்களைப் பேணி வரவும், மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் மதிப்பீட்டாய்வு-புள்ளிவிவரப் பிரிவு நிறுவப்பட்டது.

இப் பிரிவு கீழ்க்கண்ட வேலைகளைக் கவனித்து வருகின்றது :--

1. தமிழ்நாட்டிலுள்ள சிறு தொழில் பிரிவுகளைப் பதிவு செய்தல்; அவற்றிற்குப் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கல்.

2. பதிவு செய்யப்பட்ட சிறுதொழில் பிரிவுகளிடமிருந்து ஆண்டு உற்பத்திப் புள்ளி விவரங்களைச் சேகரித்து, அவற்றைத் தொகுத்தல்.

3. சிறுதொழில் பதிவு மூலமாகச் சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மாநிலத்திலுள்ள சிறுதொழில் பிரிவுகளின் விவரப் பட்டியல் ஒன்று வெளியிடல்.

4. சென்னை, கிண்டியிலுள்ள சிறு தொழில் பணி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டாய்வு அறிக்கைகளை அச்சிட்டு வெளியிடல்.

5. மாநில அரசால் மேற்கொள்ளப்படுவதற்குத் தேவைப்படுகிற தனி மதிப்பீட்டாய்வு அல்லது சிறப்பு மதிப்பீட்டாய்வு.

6. டாக்டர் லோகநாதன் குழுவால் பரிவுரை செய்யப்பட்டவாறு சிறு தொழில்களின் உற்பத்தித் திறன் குறித்த மதிப்பீட்டாய்வு.

7. உள் நாட்டுத் தயாரிப்பாளர்கள் பற்றிய சிறு நூல் வெளியிடுவதற்குத் தகவல்கள் தயாரித்தல்.

8. புது டில்லியிலுள்ள தொழில் நுட்ப வளர்ச்சித் துறைத் தலைமை இயக்குநரிடமிருந்து சிறு தொழில் துறைக்கு மாற்றப்பட்ட தொழில் பிரிவுகளிடமிருந்து மாதாந்திர உற்பத்திப் புள்ளி விவரங்களைச் சேகரித்தல்.

9. இம் மாநிலத்திலுள்ள சிறு தொழில்கள் தொடர்பான புள்ளிவிவரத் தகவல்களை "கார்டெக்ஸ் முறையில்" (Kardex System) பேணிவருதல்.

இம் மாநிலத்திலுள்ள சிறு தொழில் பிரிவுகளைப் பதிவு செய்தல் 1960 நவம்பர் முதல் இப் பிரிவால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பொருள்கள் தயாரிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளவையும். ரூ. 7.5 லட்சத்திற்கு மேற்படாத மூலதன முதலீடும் (தொழிற்சாலையும், இயந்திரங்களும் மட்டும்) உடையனவாகிய தொழில் நிறுவனங்கள் சிறு தொழில்கள் என்னும் பொருள் விளக்கத்துக்குள் வருகின்றன. அவை சிறு தொழில்களாகப் பதிவு செய்யப்படத் தகுதியுடையவை.

1972 மார்ச் 14]

[பதிவுச்சான்றிதழ்கள், தொழில்களின் இயல்புக்கிணங்க "முறையானவை" என்றும் "தற்காலிகமானவை" என்றும் வகைப் படுத்தப்பட்டுள்ளன. அதாவது, முன்னரே இருந்துவரும் தொழில்களுக்கு முறையான சான்றிதழும், தற்போது திட்டமிடப்படும் தொழில்களுக்குத் தற்காலிகச் சான்றிதழ்களும் அளிக்கப்படுகின்றன.

1967-லிருந்து பதிவாகியுள்ள சிறுதொழில்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

ஆண்டு	சிறு தொழில்களின் எண்ணிக்கை
1967	1,382
1968	2,401
1969	5,619
1970	2,487
1971	3,012

1971, செப்டம்பர், 30-ஆம் நாளன்றுள்ளபடி 24,393 சிறுதொழில் பிரிவுகள் பதிவு செய்யப்பட்டு, பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப் பட்டுள்ளன.

பதிவு செய்யப்பட்டதன் மூலமாகச் சேகரிக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையில், சிறு தொழில் பிரிவுகள் பற்றிய விவர விளக்க நூல் இரண்டினை இந்தப் பிரிவு வெளியிட்டுள்ளது. முதல் நூல் 1962-ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. 1961-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் நாள்வரை பதிவு செய்யப்பட்டுள்ள தொழில் பிரிவுகள் பற்றிய விவரங்கள் இதில் உள்ளன. 1965-ல் 2-வது நூல் வெளியிடப்பட்டது. 1967-ம் வருடம் டிசம்பர் மாதம் 31-ம் நாள் வரை பதிவு செய்யப்பட்ட சிறுதொழில் பிரிவுகள் அனைத்தையும் கொண்ட பிற்சேர்க்கை ஒன்று இரண்டாவது வெளியீட்டிற்குத் தயாரிக்கப்பட்டு, 1969-ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. புதிய தொழில் துறைகளில் இறங்க விரும்பும் தொழில் உரிமையாளர்களுக்கும் தொழில் முனைவர்களுக்கும் இந்த விளக்க நூல்கள் பயனுள்ள தகவல்களை அளிக்கின்றன.

தொழில் நுட்பத் தகவல் பிரிவுகள்.

கிண்டி, மதுரை, பேட்டை, காட்பாடி, அம்பத்தூர் ஆகிய இடங்களிலுள்ள தொழிற்பேட்டைகளில் இடத்துக்கு ஒன்றாக ஐந்து தொழில் நுட்பத் தகவல் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

[1972 மார்ச் 14

கிண்டியிலுள்ள தொழில் நுட்பத் தகவல் பிரிவில் நூலகம், வெளியீடுகள், மொழிபெயர்ப்புப் பிரிவுகள் ஆகியவை அடங்கியுள்ளன. நூலகத்தில் பொறியியல், தொழில் நுட்பப் பிரிவுகள், தொழில் நிர்வாகம், தொழில் நிறுவனச் செலவினக் கணக்கியல் (Cost Accounting) முதலியவை குறித்து ஏராளமான நூல்கள் உள்ளன. இத்துறைகளில் அண்மையில் ஏற்பட்டுள்ள மேம்பாடுகள் குறித்து இன்றைய நாள் வரையிலான தகவல்களை இவை அளிக்கின்றன. இந் நூல்கள் கிண்டி தொழிற்பேட்டையிலுள்ள தொழில் உரிமையாளர்களுக்கும் துறை அதிகாரிகளுக்கும் படிப்பதற்கு அளிக்கப்படுகின்றன. ஆங்கிலத்திலும், தமிழிலும் உள்ள சிறுதொழில் வழிகாட்டி நூல் தற்போதுள்ளவையும், இனி ஏற்படக் கூடியவையுமான தொழில்களின் தகுதிப் பட்டியல் போன்ற பயனுள்ள வெளியீடுகள் பல வெளியிடப்பட்டுள்ளன. தொழில் நுட்பத் தகவல் பிரிவை விரிவுபடுத்தும் திட்டத்தின்கீழ் புதிய கட்டிடம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இக்கட்டிடத்தில் நூலகமும், செய்திப்படப்பிரிவும், நுண்படப் பிரிவும் பிறபிரிவுகளும் உள்ளன. தொழில் நுட்பத் திரைப்படங்களைத் திரையிடுவதற்கும், தொழில் நுட்பக் கருத்தரங்குகளை நடத்துவதற்கும் சிறந்த சாதனங்களைக் கொண்ட அரங்கு ஒன்று உள்ளது. தொழிற்பேட்டையில் உற்பத்தி செய்யப்பட்ட அனைத்துப் பொருள்களும் அடங்கிய நிலையான பொருட்காட்சி ஒன்றும் இக்கட்டிடத்தில் நிறுவப்பட்டுள்ளது.

பிற தொழில் நுட்பத் தகவல் பிரிவுகள், தம்முடன் இணைக்கப்பட்டுள்ள சிறு நூலகங்கள் மூலமாக அப்பகுதிகளைச் சுற்றியும் உள்ள தொழிலதிபர்களுக்கும், பொதுமக்களுக்கும் தொழில் நுட்ப அறிவூட்டும் பணி நிலையங்களாக செயல்பட்டு வருகின்றன.

மின் பரிசோதனை ஆய்வுக்கூடம்.

மின்சாரத் தொழிலுக்கு உற்பத்திப் பரிசோதனை வசதிகளை அளிப்பதற்கும், பகுதிப் பொருட்களுக்கும், பணி நிறைவுற்ற பொருள்களுக்கும் புதிய வடிவமைப்புகளை வகுப்பதற்கும் திருவள்ளூருக்கு அருகில் காக்களூரில் உள்ள மின்சாரத் தொழிலுக்கான தொழிற்பேட்டையில் மத்திய மின் பரிசோதனை ஆய்வுக்கூடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. ஆய்வுக்கூடக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. சிறப்புச் சோதனைக் கருவிகள் வாங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

1972 மார்ச் 14]

பொறியியல் சிறு தொழில்கள்

விலை உயர்ந்த இயந்திரங்களை வாங்கப் பெருந்தொகை முதலீடு செய்ய இயலாத சிறு தொழிலதிபர்களுக்குப் பணி வசதி செய்து கொடுக்கும் நோக்கத்துடன் பேட்டை (திருநெல்வேலி மாவட்டம்), திருச்சிராப்பள்ளி, கோயம்பத்தூர், மதுரை, அம்பத்தூர் ஆகிய இடங்களில் உள்ள தொழிற்பேட்டைகளில் பொதுக் குத்தகைப் பட்டறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மதுரையிலும், திருச்சிராப்பள்ளியிலுமுள்ள பொதுக் குத்தகைப் பட்டறைகள் 1—2—1971 அன்று வேளாண்-தொழில் கழகத்திற்கு மாற்றப்பட்டுள்ளன. அம்பத்தூரிலுள்ள பொதுக் குத்தகைப் பட்டறை மூடப்பட வேண்டுமென்றும், பேட்டையிலும் கோயம்பத்தூரிலும் எஞ்சியுள்ள இரு பொதுக் குத்தகைப் பட்டறைகளும் வேளாண்-தொழில் கழகத்திற்கு மாற்றப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராயவேண்டுமெனவும் அரசு ஆணையிட்டுள்ளது.

கிண்டியிலுள்ள தொழில் நுட்ப பயிற்சிப் பள்ளி மூன்றாவது திட்டக் காலத்தில் தொடங்கப்பட்டது. பொறியியல் பட்டதாரிகளுக்கும், தகுதிப் பட்டயம் பெற்றவர்களுக்கும் (Diploma-holders) தொழில் பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சி பெற்றவர்களுக்கும், அச்சு வடிவமைப்பு, அச்சு வார்த்தல், கருவிகள் செய்தல். உலையில் காய்ச்சி அடித்துப் பக்குவப் படுத்தல் (Forge and heat treatment), இயந்திரங்களை இயக்குதல் ஆகியவற்றில் சிறப்புப் பயிற்சி வசதிகளை இப்பயிற்சிப் பள்ளி அளித்து வருகிறது. இப்போது 52 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர். பட்டதாரிகளுக்குத் திங்கள் தோறும் 200 ரூபாய் பயிற்சி உதவித் தொகை அளிக்கப்படுகிறது. தகுதிப் பட்டயம் பெற்றவர்களுக்கும், தொழில் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெற்றவர்களுக்கும் முறையே ரூ. 125 வீதமும், ரூ. 75 வீதமும் பயிற்சி உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இப்பிரிவு தற்காலிகமாக கிண்டியில் மூன்று வெவ்வேறு இடங்களில் அமைந்துள்ளது. இப்பிரிவிற்கான கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மின் இணைப்புக் கொடுப்பதற்கும் உயர் அழுத்த மின்சாரம் வழங்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அறிவியல் தொழில் நுட்பத் துறையில் ஏற்படும் முன்னேற்றங்களையொட்டி இருக்கும் வகையில், மின் அணுக் கருவிகள், குளிர்ப்பதன இயந்திரம், ரப்பர் தொழில் நுட்பவியல் போன்ற புதிய பாட முறைகளில் பயிற்சி அளிப்பதற்காக

நான்காவது திட்டத்தில் ரூ. 22.35 லட்சம் செலவில் விரிவுத் திட்டம் ஒன்றிற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்திட்டம் பொறியியல் பணியாளர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதுடன் தொழிற்சாலைகளின் நவீனத் தேவைகளையும் நிறைவு செய்யும். தேவையான கருவிகளை வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பயிற்சி வகுப்புகள் விரைவில் தொடங்கப்படும்.

மூன்றாவது திட்டக் காலத்தில் திண்டுக்கல்லில் அமைக்கப்பட்ட கருவிகள் அச்சு மாதிரி அமைப்புப் பயிற்சி நிலையம், பற்பல பொறியியல் பிரிவுகளுக்கும், குறிப்பாக பூட்டு தயாரிப்பதற்கும் வேண்டிய கருவிகளையும் அச்சுக்களையும் வடிவமைத்து தயாரிப்பதில் நூலறிவிலும், செயலறிவிலும் சிறப்புப் பயிற்சி அளித்து வருகிறது. ஆண்டுத் தொடக்கத்தில் 42 பேர் இந்நிலையத்தில் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தனர். அவர்களில் 19 பேர் பயிற்சியை முடித்துள்ளனர். அடுத்த பிரிவினர் பயிற்சிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மின் மருத்துவப் பணிகளுக்கான மத்தியப் பணி-செப்பனிடு பிரிவு 1967ஆம் ஆண்டு கிண்டியில் ஏற்படுத்தப்பட்டது. இதன் துணைப் பிரிவு மதுரையில் ஏற்படுத்தப்பட்டது. மிக நுட்பத் திறன் வாய்ந்த கருவிகளைக் கொண்ட இப் பிரிவுகள் இம் மாநிலத்திலுள்ள பல்வேறு அரசு மருத்துவ மனைகள், தனியார் சிறு மருத்துவ மனைகளைச் சேர்ந்த கருவிகளைச் செப்பனிடும் பணியை மேற்கொள்ளுகின்றன. கிண்டியில் உள்ள மத்தியப் பிரிவில் பணி நல்குவதை குறைக்கவும், செப்பனிடு பணிகளை விரைவுபடுத்தவும், நான்காவது திட்டக் காலத்தில் தஞ்சாவூரில் பிரிவு ஒன்றை ஏற்படுத்துவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. தஞ்சாவூரில் உள்ள துணைப் பிரிவு 1971 மே திங்களில் பணியாற்றத் தொடங்கியுள்ளது. கிண்டி, தஞ்சாவூர் நிலையங்களின் கட்டிடப் பணி முடிவடைந்துள்ளது.

அரக்கோணத்திலுள்ள கருமார்-தச்சுப் பிரிவு, அரக்கோணத்திலும், சுற்றுப்புறங்களிலும் வேண்டிய பணி வசதிகளைச் செய்து தருவதுடன், கருவிகளைத் தயாரிக்கவும் வசதி அளிக்கிறது. வேளாண்மைக் கருவிகள், பள்ளிகளுக்கான மேசை நாற்காலிகள் தயாரிக்க முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

விண்ணமங்கலத்திலுள்ள கம்பளி பக்குவப்படுத்தும் நிலையம் 1—10—1971 முதல் தமிழ்நாடு சிறு தொழில் கழகத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

1972 மார்ச் 14]

திருநெல்வேலி மாவட்டத்தில் ஆதாரக் கிராமப்பணி நிலையங்கள் மூன்று செயல்பட்டு வருகின்றன. இவை, விசை இயந்திரங்கள் மூலம், உள்ளூர் கைவினைஞர்களுக்கு பொருத்துதல், கடைதல், பற்றவைத்தல் ஆகிய தொழில்களில் பயிற்சி அளிக்கின்றன. இவற்றில் இரண்டு நிலையங்கள் கீழ் அம்பாசமுத்திரத்திலும் மூன்றாவது தென்காசியிலும் உள்ளன. பயிற்சிக் காலம் 18 மாதங்கள். ஒவ்வொரு நிலையத்திலும் ஒவ்வொரு தொகுதியிலும் 12 பேர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 120 பேர்களுக்கு மேற்சொன்ன தொழில்களில் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. தென்காசியில் உள்ள நிலையத்தில் 7—9—1970-இலிருந்தும், அம்பாசமுத்திரத்திலுள்ள நிலையத்தில் 3—10—1970-இலிருந்தும் 5-வது தொகுதியில் 12 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர். அம்பாசமுத்திரத்தில் 16—7—1971-இலிருந்து 5-வது தொகுதியில் 11 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இரசாயனத் தொழில்கள்

கிண்டியில் இரசாயனச் சோதனை—பகுப்பாய்வுக்கூடமும் அத்துடன் இணைந்து இயந்திர உலோகவியல் ஆய்வுக்கூடமும் உள்ளன. இவை தனிப்பட்ட தொழிலதிபர்களுக்கும், அரசின் துறைகளுக்கும், பொதுத்துறை நிறுவனங்களுக்கும் சோதனை வசதிகளை அளிக்கின்றன. இந்த ஆய்வுக் கூடங்களில் எல்லா வகையான தொழில் மூலப் பொருள்களும், உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களும், இரசாயன, பௌதிக உலோகவியல் பரிசோதனைகள் மூலம் சோதனை செய்யப்படுகின்றன. இவ்விரண்டு ஆய்வுக் கூடங்களும் 1—4—1971-இலிருந்து 31—10—1971 முடிய, முறையே, மொத்தம் 798 மாதிரிகளையும், 339 மாதிரிகளையும் சோதனை செய்துள்ளன. தொழில்களுக்குத் தேவைப்படும் இரசாயனங்களைத் தயாரிப்பதற்காக, முன்னோடித் தொழிற்சாலை ஆய்வுகளை நடத்துவதற்காக இந்த ஆய்வுக் கூடத்தில் இரசாயனப் பொறியியல் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. பின்வரும் தயாரிப்புகள் குறித்த முன்னோடித் தொழிற்சாலை ஆய்வுகளை இந்தப் பிரிவு நடத்தியுள்ளது. களிக்கல்லிலிருந்து (Gypsum) பாரிஸ் உறை மாவு தயாரித்தல், மெருகூட்டுதலுக்கான கூட்டுப் பொருள்கள் தயாரித்தல், களிக்கல்லிலிருந்து கால்சியம் அன்ஹைட்ரைடு தயாரித்தல், உப்பளக் கழிவுகளிலிருந்து பொட்டாசியம் குளோரைடு தயாரித்தல், முதலியன. இரசாயனச் சோதனை-

பகுப்பாய்வுக் கூடத்தில் உள்ள 'அயான்கள்' பிரிவு, நறுமண ரசாயனங்கள், நறுமணக் கலவைகள், நறுமணப் பொருட்கள் ஆகியவற்றைத் தயாரிக்கின்றன.

இரசாயன சோதனை-பகுப்பாய்வுக் கூடத்தைப் போன்ற வட்டார ஆய்வுக்கூடம் ஒன்று மதுரையில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இந்த ஆய்வுக்கூடம் தென் மாவட்டங்களைச் சேர்ந்த தொழிலதிபர்களின் தேவைகளை நிறைவு செய்யும். இந்த ஆய்வுக் கூடம் 1972 தொடக்கத்தில் செயல்பட தொடங்கும்.

சவ்வரிசி ஆராய்ச்சி ஆய்வுக்கூடம் சேலத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த ஆய்வுக்கூடத்தில் சவ்வரிசி, மாவு ஆகியவற்றைச் சோதனை செய்யும் வசதிகள் உள்ளன.

(1) மக்னீசியம் கார்பனேட், (2) பொட்டாசியம் குளோரைட், (3) பாரிஸ் உறை மாவு ஆகியவற்றைத் தயாரிப்பதற்காக, இரசாயனப் பிரிவுகள் மூன்று தூத்துக்குடியில் நிறுவப் பட்டுள்ளன. உப்பளத் தொழிற்சாலைகளில் துணை உற்பத்திப் பொருள்களாக கிடைக்கின்ற கடல் உப்பளக் கழிவுகளை முக்கிய மாகப் பயன்படுத்தி மேற்சொன்ன மூன்று பொருள்களும் உற்பத்தி செய்யப்படும். இம் மூன்று பிரிவுகளில், மக்னீசியம் கார்பனேட் பிரிவு ஏற்கெனவே உற்பத்தியைத் தொடங்கி விட்டது. இப்பிரிவு, இதுவரை சுமார் ரூ. 50,000 மதிப்புள்ள 20 டன் மக்னீசியம் கார்பனேட்டை உற்பத்தி செய்துள்ளது. அடுத்த இரண்டு பிரிவு களும் உற்பத்தி செய்வதற்குரிய இறுதிக்கட்டத்தில் உள்ளன. அவற்றில் ஒரு பிரிவு விரைவில் உற்பத்தியைத் தொடங்க விருக்கிறது. தூத்துக்குடியில், மீனள ஆராய்ச்சி நிலையத்தை நிறுவுவதற்கும், அத்துடன் மேற்சொன்ன இரசாயனப் பிரிவுகள் மூன்றையும் இணைப்பதற்கும், 1971-72-இல் அரசு ஒரு திட்டத்திற்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

வாலாஜாபேட்டையில் 'சோடியம் டைகுரோமேட்' உற்பத்தி செய்யும் பிரிவு ஒன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. தொழிற் சாலையில் சோதனை உற்பத்தி நடந்தேறி வருகின்றது. வடலூரிலுள்ள விரியக்கரியம் (Active Carbon) தயாரிப் பதற்கான பிரிவு இன்னும் தொடங்கி வைக்கப்படவில்லை. ஏனெனில் இதற்கான சிறப்புவகைத் துருப்பிடிக்காத உருக்கு உலைக்கூட இயந்திரம் இன்னும் தயாரிக்கப்படவில்லை. இதற்குத் தேவைப்படும் சிறப்பு வகைத் துருப்பிடிக்காத உருக்கு

1972 மார்ச் 14]

இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இந்த உலைக்கூட இயந்திரத்தைத் தயாரித்துப் பொருத்தித் தருமாறு பம்பாயைச் சேர்ந்த திருவாளர்கள் கான்ஸன்ஸ் லிமிடெட் நிறுவனத்தினர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

கிளிஞ்சலிலிருந்து ரசாயனச் சுண்ணும்பு தயாரிப்பதற்கான பிரிவு ஒன்று மரக்காணத்தில் அமைக்கப்பட்டு வருகிறது. தொழிற் சாலைக்கான கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. தொடக்கப் பணி அடிப்படையில் தேவைப்படும் இயந்திரங்களும் தளவாடங் களும் வாங்கப்படும்.

காடிச்சத்து (yeast) தயாரிப்பதற்கான பிரிவு ஒன்று கிண்டியில் அமைக்கப்பட்டு வருகிறது. கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு இயந்திரங்களும் சாதனங்களும் வாங்கப் பட்டுள்ளன. இவற்றை இயக்குதலும் செய்முறையும் மிகவும் சிக்கல் வாய்ந்தவை. எனவே இந்த இயந்திரங்கள் முதலிய வற்றை நிறுவி உற்பத்தியைத் தொடங்கிவைக்கும் பொறுப்பு, இத்துறையில் அனுபவம் வாய்ந்த ஒரு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படும்.

மட்பாண்டத் தொழில்.

உற்பத்திப் பிரிவுகளில் ஓராண்டு செயல் முறைப் பயிற்சி உட்பட நான்காண்டுக் காலப்படிப்புடன் மட்பாண்ட வகை தயாரிப்பதில் மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க மட்பாண்டப் பயிற்சிப்பள்ளி ஒன்று விருத்தாசலத்தில் 1964-இலிருந்து செயல்பட்டு வருகிறது. திங்கள் ஒன்றுக்கு ரூ. 50 என்ற பயிற்சி உதவித் தொகையுடன் பயிற்சியளிப்பதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட 15 மாணவர்களைத் தவிர, பயிற்சி உதவித் தொகை அளிக்கப்படாமல் மேலும் 10 மாணவர்கள் இப்பள்ளியில் சேர்க்கப்படுகின்றனர். மட் பாண்டத் தொழிற்சாலைகள், இவர்களை நியமனம் செய்கிறது. இப் பள்ளியுடன் இணைந்த மட்பாண்ட ஆய்வுக் கூடங்கள் மூலப் பொருள்கள் பற்றியும், வேலை நிறைவு பெற்ற பொருள்கள் பற்றியும் சோதனைகளை நடத்துகின்றன. மட்பாண்டத் தொழில் பயிற்சிப் பள்ளியில் ' விட்ரியஸ் எனுமல்கள் ' குறித்த பயிற்சி வகுப்பு ஒன்றைத் தொடங்கும் திட்டமொன்றுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இப்பயிற்சி வகுப்பு 1972-இல் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

நடப்பு நிதியாண்டில் அரசு இருதிட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. குறைந்த அழுத்த மின்கடத்திகள், வெப்பம் தாங்கும் கற்கள் ஆகியவற்றுக்கான சோதனை வசதிகள் அளிப்பது ஒருதிட்டம்; பிறிதொரு திட்டம், மின்னணுவியல் தொழில்களுக்கான மட்பாண்டப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கு ஒரு வகைத் தூய இரும்பு (பெர்ரைட்டுகள்), மற்றும் பிற சிறப்பு வகைப் பொருட்களை வழங்குவதற்கான பணிநிலையம் ஒன்றைத் தொடங்குவதாகும்.

பெரம்பூரிலும், விருத்தாசலத்திலும் உள்ள வேலைப்பாடுகள் அமைந்த மட்பாண்டத் தொழில் பிரிவுகள் இரண்டு வேலைப்பாடுகள் அமைந்த—பயன்படுத்தத்தக்க மட்பாண்டங்களைத் தயாரிப்பதில் மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கிறது. பெரம்பூரிலுள்ள பிரிவில் 10 மாணவர்களும் விருத்தாச்சலத்திலுள்ள பிரிவில் 15 மாணவர்களும் பயிற்சி பெறுகின்றனர்.

வேலைப்பாடமைந்த மட்பாண்டப் பொருள்களை விற்பதற்காகத் தற்போது அண்ணாசாலையிலுள்ள துறை விற்பனை நிலையத்தில் காட்சிக்கூடம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

விருத்தாச்சலத்தில் செயல்பட்டு வருகின்ற மட்பாண்டத் தொழில்—பொது வசதிப் பணி நிலையம் மட்பாண்டத் தொழிற்சாலைகளுக்குச் செப்பனிடு பணி வசதிகளை அளித்து வருகிறது. இப்பணி நிலையம், விருத்தாசலத்தில் அமைந்துள்ள மட்பாண்டத் தொழிற்பேட்டையிலுள்ள பிரிவுகளுக்கும் வெளியே அமைக்கப்பட்டுள்ள பிரிவுகளுக்கும் வேண்டிய கட்டுகளையும் பளப்பளப்புச் சாதனங்களையும் வண்ணங்கள், அச்சுகள், சூளைக் களிமண் உறைகள் முதலியவற்றையும் தயார் செய்து அனுப்புகின்றது. இப்பிரிவுகளிலிருந்து அனுப்பப்படும் பொருள்கள் இந்த நிலையத்தினால் இயக்கப்படும் பொதுச் சூளைகளில் சுடப்படுவதற்கும் அது ஏற்பாடு செய்கிறது இந்நிலையம் 1968-69-இல் ரூ. 80,000 மதிப்புக்கு செப்பனிடு பணிகளைச் செய்தது. 1970-71-இல் ரூ. 1,90,000 ஆக உயர்ந்துள்ளது.

கண்ணாடித் தொழில்கள்.

கிண்டியில் அறிவியல் துறைக் கண்ணாடிப் பயிற்சி நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. அறிவியல் கண்ணாடிக் கருவிகள் தயாரிப்பதற்கு இந்நிலையம் பயிற்சியளித்து வருகிறது. இந்தப் பயிற்சிக் காலம் 2 ஆண்டுகள் ஆகும். ஒவ்வொரு பிரிவிலும்

20 மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. இப்பிரிவை விரிவுபடுத்துவதற்கான திட்டமொன்றுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இவ்வாறு விரிவுப்படுத்துவதன் மூலம், உருக்கி இணைத்த கண்ணாடிச் சாமான்கள், உலோக முத்திரை வைப்பதற்கான கண்ணாடி உருண்டை இணைப்புகள் போன்ற மேம்பட்ட நுட்பத்திறன் கொண்ட இனங்களை உற்பத்தி செய்யக் கருதப்பட்டுள்ளது. இதே போன்ற பிரிவு ஒன்றைக் கோயம்புத்தூரில் நிறுவுவதற்கான திட்டமொன்றுக்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

மதுரையிலுள்ள, வேலைப்பாடமைந்த கண்ணாடிச் சாமான்கள் பயிற்சி நிலையம், வேலைப்பாடமைந்த கண்ணாடிச் சாமான்களைத் தயாரிப்பதில் 2 ஆண்டுப் பயிற்சி வகுப்பில் 15 பேர்களுக்குப் பயிற்சி அளிக்கிறது.

கண்ணாடிப் பொம்மைகள் தயாரிப்பதற்கான நிலையம் ஒன்று சென்னையில் செயல்பட்டு வருகிறது. வண்ணக் கண்ணாடித் தண்டுகள், குழாய்களைப் பயன்படுத்திக் கண்ணாடிப் பொம்மைகள், கண்கவர் பொருள்கள் ஆகியவற்றைத் தயாரிப்பதில் 10 மாணவர்களுக்கு இது இரண்டாண்டு காலப் பயிற்சியளிக்கிறது.

வாணிக அடிப்படையில் அமைந்த சிறுதொழில்கள் காட்சிக்கூடம்.

வாணிக நோக்கிலான சிறு தொழில் காட்சிக்கூடம் ஒன்றை சென்னையில் நிறுவுவதற்கான திட்டமொன்றுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இதற்காகும் மொத்தச் செலவு ரூ. 10.28 லட்சம் ஆகும். (தொடரா இனச் செலவு ரூ. 6.00 லட்சம் தொடர் இனச் செலவு ரூ. 4.28 லட்சம்.) இதன் குறிக்கோள்கள் பின்வருவன:—

(1) தமிழ் நாட்டில் கிடைக்கக்கூடிய பல்வேறு தொழில் உற்பத்திப் பொருள்கள் பற்றிய தகவல்கள் அளித்தல்.

(2) துண்டுப் பிரசுரங்கள், சிறு வெளியீடுகளை வெளியிட்டு அதன்மூலம், இந்த உற்பத்திப் பொருள்கள் பற்றிய விவரங்களைப் பல்வேறு வாடிக்கையாளர்களும் அறியுமாறு வழங்குதல்.

(3) இம்மாநிலத்திலுள்ள பல்வேறு நிறுவனங்களும் உற்பத்தி செய்த பல்வேறு உற்பத்திப் பொருள்களையும் சேகரித்து, கவர்ச்சிகரமான முறையில் காட்சிக்கு வைத்தல்.

(4) ஏற்றுமதிச் சந்தையினை உயர்த்தும் பொருட்டு, குறித்த காலத்துக்கொருமுறை தகவல் விவரக் கையேடுகளையும் சிறு வெளியீடுகளையும் வெளியிட்டு, அவற்றை உலகின் பல்வேறு

பாகங்களிலுமுள்ள இந்தியத் தொழில் பிரதிநிதிகளுக்கும், இறக்குமதியாளர்களுக்கும் அனுப்பி வைத்தல்.

(5) பல்வேறு உற்பத்திப் பொருள்களுக்கான வாணிகத் தகவல் விசாரணைகளைக் கவனித்தல்.

(6) தனிப்பட்டவர்கள் நடத்தும் தொழில்களுக்கு நியாய மான வாடகை வீதத்தில், மேற்சொன்ன காட்சிக்கூடத்தில் காட்சி இடம் அளித்தல்.

இந்தக் காட்சிக்கூடம் 1972-73-இல் செயல்படத் தொடங்கும்

பிற நடவடிக்கைகள்

தொழில்கள் வளர்ச்சிக்கான தொழில்-நுட்பவியல் தகவல்களைப் பரப்பும் பொருட்டுத் தொழில் வாணிக இயக்குநர் அலுவலகம் மிக முக்கியமான பல கருத்தரங்குகளுக்கு ஏற்பாடு செய்தது. அவற்றிற் சில பின்வருவன :—

(1) சென்னையில் இரசாயனத் தொழில் பற்றிய கருத்தரங்கு.

(2) சென்னையில் மின்னணுவியல் பற்றிய பேரவை விவாத அரங்கு.

(3) நெய்வேலியில், நெய்வேலியில் கிடைக்கும் துணை உற்பத்திப் பொருள்கள் பற்றிய கருத்தரங்கு.

(4) சென்னையில், வேளாண்மைத் துறையில் பிளாஸ்டிக் பொருள்கள் பற்றிய கருத்தரங்கு.

(5) மதுரையில், மாவட்டச் சிறுதொழில்கள் கருத்தரங்கு.

(6) கோயம்புத்தூரில் மாவட்டச் சிறுதொழில்கள் பற்றிய கருத்தரங்கு.

(7) தருமபுரியில் தொழில் கருத்தரங்கு.

சிறுதொழில் பணி நிறுவனம், தேசிய சிறுதொழில் கழகம் ஆகியவற்றின் நெருங்கிய ஒத்துழைப்புடனும் கூட்டுழைப்புடனும், சிவகங்கை, ராஜபாளையம், கும்பகோணம், சேலம், ஆகியவிடங் களில் நடத்தப்பட்ட மும்முர இயக்கங்கள் குறித்து, முறையான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

சிறுதொழில்களுக்கு இயந்திரங்கள் வழங்குதல் கடந்த மூன் றாண்டுகளில் கணிசமான அளவு உயர்ந்துள்ளது. 1967 ஆம் ஆண்டு இறுதியில் 950 சிறு தொழில்கள் ரூ. 6.98 கோடி மதிப்புக்கு இயந்திரங்களைப் பெற்றிருந்தன. இப்போதைய புள்ளிவிவரப் படி, இதுவரை, 2,900 சிறுதொழில்கள் 6.15 கோடி மதிப்புக்கு இயந்திரங்களைப் பெற்றுள்ளன.

1972 மார்ச் 14]

இம் மாநிலத்தில் சிறு தொழிலை மேம்படுத்துவதற்கு ஊக்குவிக்கவும் கருத்துரைகள் அளிக்கவும் வேண்டி, தொழில் துறை அமைச்சர் தலைமையில் அரசுச் சார்புள்ள அதிகாரிகள், அரசுச் சார்பற்றவர்கள், தொழிலதிபர்கள் ஆகியோரைக் கொண்ட சிறு தொழில் வாரியம் ஒன்றை அரசு அமைத்துள்ளது. அரசுச் சார்பற்றவர்கள் ஆகியோரைக் கொண்ட மாவட்ட அளவிலான குழு ஒன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்டது. இக் குழு சிறு தொழிற்சாலைகள் அமைப்பது தொடர்பாக மாவட்டங்களில் பல்வேறு அதிகாரிகள் தமக்கு வந்துள்ள விண்ணப்பங்கள் குறித்து இசைவளிந்து அவற்றிற்கு உரிமங்கள் வழங்குவதில் ஏற்படும் தாமதத்தைக் கண்டுபிடித்து அதைக் களையும்.

சிறுதொழில் வளர்ச்சிக்கு உதவும்பொருட்டு தொழிற்சாலைச் சட்டம், நகராட்சிகள் சட்டம் போன்ற பல்வேறு சட்டங்களின் விதித்துறைகளைத் தளர்த்தும் கருத்துபற்றி சிறுதொழில் வாரியத்தின் உட்குழு ஒன்று ஆராய்ந்து, தனது அறிக்கையை அளித்தது. சிறு தொழில்களை விரைந்து நிறுவுவதற்கு வசதியளிக்கின்ற வகையில் உட்குழுவின் சில பரிவுரைகள் தொடர்பாக ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

தொழிற்பேட்டைகள்.

நீர், மின் சக்தி, போக்குவரத்து வசதி, சாலைகள முதலிய வசதிகளுடன் சிறு தொழிலதிபர்களுக்கு நன்கு திட்டமிட்ட இடவசதியை அளிப்பதன் மூலம், இம் மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்கு ஊக்களித்து விரைவுபடுத்துவதே தொழிற் பேட்டைகளை நிறுவுவதன் முக்கிய குறிக்கோள் ஆகும். தொழிற்பேட்டைகள், கீழ்க்கண்ட வகைகளாக உள்ளன :—

(1) பல்வேறு வகையான தொழிற்சாலைகள் உள்ள பலதொழில்களுக்கான தொழிற்பேட்டைகள்.

(2) தோல், மின்சாரம், மின்னணுவியல், மண்பாண்டத் தொழிற்சாலை போன்ற, சில சிறப்புத் தொழிற்சாலைகளின் தேவைகளை மட்டுமே நிறைவு செய்கின்ற அவ்வத் தொழிலுக்கான தொழிற்பேட்டை.

(3) பெருந் தொழில்களுக்கான துணைப் பிரிவுகளின் தேவையைப் பூர்த்தி செயயும் துணைத் தொழிற்பேட்டைகள்.

(4) கூட்டுறவு-தனியார் தொழிற்பேட்டைகள்.

பல தொழில்களுக்கான தொழிற்பேட்டைகள்.

பல்வேறு அளவுகளில் தொழிற் பிரிவுகளுக்கு வேண்டிய இடவசதியுடன் பல தொழில்களுக்கான 27 தொழிற்பேட்டைகளை அரசு நிறுவியது. இத் தொழிற்பேட்டைகளில் கட்டப்பட்ட, ஒதுக்கப்பட்ட தொழிற்பிரிவுகள் எண்ணிக்கை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

இரண்டாம் திட்டத் தொழிற்பேட்டைகள்.

தொழிற்பேட்டையின் பெயர்.	கட்டப்பட்ட தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கை.	ஒதுக்கப்பட்ட தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கை.	சதுர அடிக்கு திங்கள் ஒன்றுக்கு 1971 எப்ரல் 1-ம் நாள் முதல் 1972 மார்ச் 31-ம் நாள் வரை செயலிலுள்ள திருத்த வாடகை வீதம். (காசுகளில்.)
1 கிண்டி	129	129	16
2 மதுரை	40	40	12
3 விருதுநகர் ..	15	13	10
4 பேட்டை	12	12	11
5 ஈரோடு	11	11	11
6 காட்பாடி	16	16	9
7 தஞ்சாவூர் ..	6	6	9
8 திருச்சி	29	29	12
9 மார்த்தாண்டம் ..	5	5	8
மொத்தம் ..	263	261	

மூன்றாவது திட்டத் தொழிற்பேட்டைகள்.

1 அம்பத்தூர் ..	117	117	11
2 தேனி	7	7	5
3 திண்டுக்கல் ..	18	18	7
4 காரைக்குடி ..	12	11	5
5 கோவில்பட்டி ..	11	11	5
6 கிருஷ்ணகிரி ..	12	12	7
7 புதுக்கோட்டை ..	12	12	5
8 அரக்கோணம் ..	8	8	8
9 சிவகங்கை	6	6	5
10 நாகர்கோயில் ..	6	6	7
11 கும்பகோணம் ..	4	4	7
மொத்தம் ..	213	212	

1972 மார்ச் 14]

தொழிற்பேட்டைகளுக்கான ஆண்டுத் திட்டம் (1966–69).

தொழிற் பேட்டையின் பெயர்.	கட்டப்பட்ட பிரிவு களின் எண்ணிக்கை.	ஒதுக்கப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை.	திங்களொன்றுக்கு சதுர அடிக்கு வாடகை வீதம் 1–4–1971 முதல் 31-3-1972 வரை. (காசுகளில்).
1 மேட்டூர் ..	4	4	6
2 காஞ்சிபுரம். ..	4	4	5
3 கரூர் ..	4	4	5
4 நாகபட்டினம் ..	4	3	5
5 ஓசூர்* ..	..	..	..
6 கடலூர்* ..	..	..	..
7 நாமக்கல் ..	..	..	..
மொத்தம் ..	16	15	

* இவ்விரு தொழிற்பேட்டைகளில் ஒவ்வொன்றிலும் 6 பிரிவுகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

நான்காம் திட்டக் காலத்தில், 10 வருவாய்க் கோட்டங்களில் தொழிற்பேட்டைகள் பத்தினைத் தொடங்கக் கருதப்பட்டுள்ளது ஒவ்வொரு வருவாய்க் கோட்டத்திலும் ஒரு தொழிற்பேட்டை இருக்கவேண்டும் என்பது இதன் குறிக்கோளாகும். நான்காவது திட்டத்தின் முதலாம் ஆண்டான 1969-70-ல், நாமக்கல்லில் ரூ. 6.22 லட்சம் செலவில் 6 பிரிவுகள் கொண்ட தொழிற்பேட்டை ஒன்றைத் தொடங்குவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. முன்னரேயே நிறுவப்பட்டுள்ள தொழிற்பேட்டைகளை விரிவுபடுத்தும் திட்டம்

1971-72-இல் தொடர்ந்து செயல் படுத்தப்படுகிறது. குமார பாளையம், தருமபுரி, திருவண்ணுமலை ஆகிய வருவாய்க்கோட்டம் ஒவ்வொன்றிலும் ஒரு தொழிற்பேட்டையை நிறுவ நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது. ஏற்கெனவேயுள்ள தொழிற் பேட்டை களில், தொழிற்சாலைப் பிரிவுகளுக்குத் தேவையுள்ள இடங்களி லெல்லாம் கூடுதல் கொட்டகைகளைக் கட்டித் தரத் திட்டமிடப் பட்டுள்ளது. இம் மாநிலத்தில் உள்ள அவ்வத் தொழில்களுக் குரிய தொழிற்பேட்டைகள் உட்படப் புதியத் தொழிற் பேட்டைகள் அனைத்திலும் தவணைக் கொள்முதல் திட்டத்தைச் செயல்படுத்துவதைக் கொள்கை அளவில் அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

அவ்வத்தொழில்களுக்குரிய தொழிற்பேட்டைகள்.

சிறப்பு வசதிகள் வேண்டியுள்ள தோல் தொழில், மட்பாண்டத் தொழில், மின் தொழில், உணவு-பழ அடிப்படையில் அமைந்த தொழில், கருவிகள் தொழில், மருந்துகள்-மருந்துக் கலவைத் தொழில், மின் அணுத் தொழில் போன்ற மேம்பட்ட நுட்பத்திறம் வாய்ந்த சிறப்பு வகைத் தொழில்களை வளர்ப்பதற்காக, இத் தொழில்களுக்கென்றே சிறப்பான தொழிற்பேட்டைகளை நிறுவு வதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்தகைய தொழிற் பேட்டைகள் நிறுவப்பட்டால், அத்தொழிலைத் திட்டமிட்ட வகை யில் வளர்ப்பதும், தக்க தொழில் நுட்பப் பணியாளர், பணிவசதி கள், திறமைமிக்க தொழில் நுட்பவினைஞர் கிடைக்காத சிக்கல் களைத் தீர்ப்பதும் இயலக்கூடிய வகையில் அந்தந்தத் தொழில் களைத் தனித்தனியே ஒரே இடத்தில் தொகுதியாக அமைக்க முடியும். இத் தொழிற்பேட்டைகளால் உற்பத்தியும் விற்பனையும் பெருகுவதுடன் அனைத்து நாட்டுத் தரத்திற்கு ஏற்ப தரமுள்ள பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற உணர்வினையும் ஊட்டும். இதனுல் வெளி நாடுகளுக்கு இப்பொருள்களை ஏற்று மதி செய்யும் வாய்ப்பு கிட்டும். இந்த நோக்கங்களை எய்தவே இத்திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

மூன்ருவது திட்டக் காலத்தில், விருத்தாசலத்தில் மட்பாண்டத் தொழி லுக்காக ஒன்றும், மாதவரத்தில் தோல் தொழிலுக்காக ஒன்றும், ஆக, அவ்வத் தொழில்களுக்கான இரண்டு தொழிற்பேட்டைகள் அமைக்கப்

பட்டுள்ளன. ஒப்பளிப்பு வழங்கப்பட்ட, கட்டி முடிக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட தொழில் பிரிவுகளின் எண்ணிக்கை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

தொழிற்பேட்டையின் பெயர். (1)	ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை. (2)	கட்டப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை. (3)	ஒதுக்கப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை. (4)	சதுர அடிக்கு இங்கு ஒன்றுக்குச் செயலிலுள்ள வாடகை வீதம் (காசுகளில்.) (5)
விருத்தாசலம்	41	30	26	7
மாதவரம் ..	25	18	18	11
மொத்தம் ..	66	48	44	

1966–67, 1967–68 ஆண்டு திட்டக் கால அளவுகளில், மேற்கொண்டும் இத்தகைய 5 தொழிற்பேட்டைகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இப் பேட்டைகளில் கட்ட ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கை, இதுவரை கட்டி முடிக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை, ஒதுக்கப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

தொழிற்பேட்டையின் பெயர். (1)	ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை. (2)	கட்டப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை. (3)	ஒதுக்கப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை. (4)	இங்கு ஒன்றுக்கு சதுர அடிக்கு வாடகை வீதம். (காசுகளில்.) (5)
1 மின் தொழில், காக்களூர் ..	16	10	10	10
2 உணவு-பழ அடிப்படையில் அமைந்த தொழில்கள், வத்தலகுண்டு.	26	4	4	..
3 கருவிகள் தொழில், அடையாறு.	15	6	4	தவணைக் கொள்முதல் அடிப்படையில்.
4 மருந்துகள்-மருந்து கலவைப் பொருள் தொழில்கள், அம்பத்தூர்.	25	..	..	..
5 சென்னைக்கருகே மின் அணுத் தொழில்.	30	6	4	தவணைக் கொள்முதல் அடிப்படையில்.
மொத்தம் ..	112	26	22	

மின் அணுத் தொழில்பேட்டை, கருவித் தொழில் பேட்டை ஆகிய இரண்டையும் அடையாறிலுள்ள மத்திய பாலிடெக்னிக்கில் நிறுவ முடிவு செய்யப்பட்டுள்ளது. தொழிற்சாலைக் கொட்டகைகளைத் தொழில் முனைவோருக்குத் தவணைக் கொள்முதல் முறையில் ஒதுக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. 1972-73 இல், மின்னணுக் கருவிகள்—மின்கருவிகள் குறித்த இரண்டு தொழிற்பேட்டைகளைக் கோயம்புத்தூரிலும் மதுரையிலும் நிறுவுவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

ராஜஸ்தானைச் சேர்ந்த பிலானியிலுள்ள மத்திய மின்னணுவியல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனம் தங்கள் விரிவுப்பணி நிலையங்களில் ஒன்றைச் சென்னையில் அமைக்கவேண்டும் என்ற இவ்வரசின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்திய அரசு, தோல்-மிதியடித் தொழில் பணியாளர்களுக்கான தொடக்கவடிவ உற்பத்தி-பயிற்சி நிலையங்கள் ஐந்தினை நிறுவ முடிவு செய்துள்ளது. அவற்றில் ஒன்று தமிழ்நாட்டில் அமைக்கப்படும்; அதனை அமைப்பதற்காக, அம்பத்தூரில், பாதிவிலையில் சுமார் இருபது ஏக்கர்களை ஒதுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

துணைத் தொழிற்பேட்டைகள்.

இம் மாநிலத்தில் முக்கியமான இடங்களில் பெருந் தொழில்கள் பல அமைந்த பின்னர், அவற்றிற்கு வேண்டிய தேவைகளை நிறைவு செய்ய அப் பகுதிகளில் துணைத் தொழிற்பேட்டைகளை நிறுவ வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அத்தகைய தொழிற்பேட்டைகளை நிறுவுவதன் வாய்ப்புகளை அரசு பரிசீலனை செய்த பின்னர் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள திருவெறும்பூரில் ஒரு தொழிற்பேட்டையும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள வடலூரில் மற்றொன்றுமாக இரண்டு துணைத் தொழிற்பேட்டைகளை நிறுவ ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

திருச்சி கனரக அழுத்தக் கொதிகலன் தொழிற்சாலைக்கான பல்வேறு கூட்டு உறுப்புகள், உதிரிப் பகுதிகள் ஆகியவற்றைச் சிறு தொழில் துறையில் தயாரிப்பதற்காகத் திருவெறும்பூரில் துணைத் தொழிற்பேட்டை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. கட்டிடம் கட்டும் பணி முடிவடைந்துவிட்டது. தகுதியுடைய தொழில் முனைவர்களுக்கு இப் பிரிவுகள் ஏற்கெனவே ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளன. தமிழ் நாடு அரசு, திருச்சி உயர் அழுத்தக் கொதிகலன் தொழிற்சாலை ஆகியவற்றின் கூட்டு முயற்சியினால் 1970

1972 மார்ச் 14]

அக்டோபரில் அமைக்கப்பட்ட "தொழில் முனைவோர்க்கான வாய்ப்புகள்" குறித்த கண் காட்சியின் வாயிலாக, நல்ல, போதிய பலன் கிடைத்துள்ளமையால் மேற்கொண்டும் இருபது பிரிவுகளை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. வடலூரில் மட்பாண்டங்களுக்கான துணைத் தொழிற்பேட்டை ஒன்று, மட்பாண்ட துப்புரவுச் சாதனங்கள் தயாரிக்கும் திருவாளர்கள் சேஷசாயி தொழில்கள் அதிகச் சூடு தாங்கும் தயாரிப்பு நிறுவனம் (Neyveli Ceramics and Refractories Limited) ஆகிய இரண்டு பெருந் தொழில்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காக 1967-68-ல் நிறுவப்பட்டது. இதேபோன்று இந்துஸ்தான் நிழற்பட பிலிம் நிறுவனத்தின் தேவைகளை நிறைவு செய்வதற்காக உதக மண்டலத்தில் துணைத் தொழிற்பேட்டை நிறுவும் செயற் குறிப்புக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. ஹிந்துஸ்தான் நிழற்பட ஃபிலிம்ஸ் நிறுவனம் தங்களது நிறுவனத்தின் தேவைகளுக்காகவென்றே துணைத் தொழில் பேட்டைகளை நிறுவத் தயங்குவதால் இத்திட்டத்தைச் செயல் படுத்த முடியவில்லை. உதகமண்டலத்தில் துணைத் தொழிற்பேட்டைக்குப் பதிலாகப் பல தொழில்களுக்கான—தொழிற்பேட்டை ஒன்றை நிறுவ முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றன. இந்தத் தொழிற்பேட்டைகளில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட, கட்டி முடிக்கப்பட்ட, ஒதுக்கிக் கொடுக்கப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

தொழிற் பேட்டையின் பெயர்.	ஒப்பளிப்பு வழங்கப் பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை.	கட்டி முடிந்த பிரிவு களின் எண் ணிக்கை.	ஒதுக்கப்பட்ட பிரிவு களின் எண் ணிக்கை.	இங்கு ஒன்றுக்கு சதுர அடிக்கு வாடகை வீதம் (காசுகளில்)
(1)	(2)	(3)	(4)	(5)
வடலூர் துணைத் தொழிற் பேட்டை.	6	4	3	5
உதகமண்டலத் துணைத் தொழிற்பேட்டை.	6	..	..	..
திருவெறும்பூர் துணைத் தொழிற்பேட்டை.	30	10	10	8
மொத்தம் ..	42	14	13	

தனியார், கூட்டுறவுத் தொழிற்பேட்டைகள்.

அடியிற்கண்ட தனியார், கூட்டுறவுத் தொழிற்பேட்டைகளை நிறுவுவதற்கு, 1971-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதி வரை. ரூ. 108.79 லட்சம் அளவுக்கு அரசு கடன் உதவி அளித்துள்ளது. ஒவ்வொரு தொழிற்பேட்டைக்கும் கொடுக்கப்பட்ட சடன், அப் பேட்டைகளிலுள்ள பிரிவுகள் ஆகிய விவரங்கள் கீழே சொடுக்கப் பட்டுள்ளன:—

தொழிற்பேட்டையின் பெயர்.	அளித்த கடன் உதவி (ரூபாய் லட்சத்தில்).	பிரிவுகளின் எண்ணிக்கை. ஒப்பளிப்பு வழங்கப்பட்டவை.	கட்டப்பட்டவை.	ஒதுக்கப்பட்டவை.
(1)	(2)	(3)	(4)	(5)
1 கே. ஆர். சுந்தரம் தனியார் தொழிற்பேட்டை, திருவொற்றியூர்.	13·46	22	20	20
2 கோயம்புத்தூர் தனியார் தொழிற்பேட்டை, கோயம் புத்தூர்.	32·00	...	42	42
3 தூத்துக்குடி கூட்டுறவுத் தொழிற்பேட்டை, தூத் துக்குடி.	12·61	40	20	20
4 சக்தி கூட்டுறவுத் தொழிற் பேட்டை, பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை.	16·00	20	20	20
5 சிவகாசி கூட்டுறவுத் தொழிற்பேட்டை, சிவகாசி.	8·00	20	20	20
6 வியாசர்பாடி கூட்டுறவுத் தொழிற்பேட்டை, வியாசர் பாடி.	24·50	100	53	43
7 சேலம் கூட்டுறவுத் தொழிற்பேட்டை, சேலம்.	2·22	35	12	12
மொத்தம் ..	108·79	345	187	187

1972 மார்ச் 14]

மாநில அரசின் உத்திரவாதத்தின் மேல் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நேரடியாக திட்டச் செலவில் 60 சதவீதம்வரை இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் கடனுதவி அளிக்க முன்வந்துள்ளது. சில நிபந்தனைகளின்கீழ், தொழிற்பேட்டைகள் அமைப்பதற்காக, தனியார் துறையில் பங்கு முதலீட்டு நிறுவனங்கள் அமைக்கப்பட்டன. 1968-69-ல் சேலம் கூட்டுறவுத் தொழிற் பேட்டைக்கு ரூ. 6.66 லட்சமும், வியாசர்பாடி கூட்டுறவுத் தொழிற் பேட்டைக்கு ரூ. 8.69 லட்சமும் ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் கடனுதவி அளித்துள்ளது.

செப்பனிட்ட நிலங்கள்.

இம் மாநிலத்தின் தொழிற் பகுதிகளைச் சுற்றியுள்ள இடங்களில் பெற்ற மனைகளை குறைந்த செலவில் கையகப்படுத்தி, சாலைகள், மின்வசதி, நீர் வசதி, கழிவு நீர் அகற்று வசதி, பொருள்களை அனுப்பிவைக்க இருப்புப்பாதை வசதி முதலியவற்றுடன் அவற்றை மேம்படுத்தி, பெரிய நடுத்தர, சிறு தொழிலதிபர்களுக்கு வழங்க வகைசெய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். அவர்கள் எளிதில் அங்கு தொழிற்சாலைகளை அமைத்து உற்பத்தி தொடங்கப் பெரிதும் இதனால் வசதி ஏற்படும்.

நான்காம் ஐந்தாண்டு திட்ட நிதி ஒதுக்கம் ரூ. 400 லட்சத்தில் 1969-70 முதல் 1970-71 வரையில் ரூ. 47.33 லட்சம் செலவு செய்யப் பட்டது. இத்திட்டம் நிறைவேற்றப்படுவதில் ஏற்பட்ட முன்னேற்றம் கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது :—

12-1-1972

செப்பனிட்ட நிலங்கள் அமைந்துள்ள இடம்.	கையகப்படுத்த எண்ணியுள்ள நிலப்பரப்பு. (எக்கரில்.)	கையகப்படுத்த பட்ட நிலப் பரப்பு. (எக்கரில்.)	அன்றுள்ள படி விற்கப் பட்ட அல்லது ஒதுக்கப்பட்ட மனைகள்.
1 அம்பத்தூர்	983·06	950·79	533·40
2 மேட்டூர்	209·08	209·08	17·310
3 மதுரை	536·87	525·49	26·203
4 திருச்சி	478·38	478·38	40·760
5 இராணிப்பேட்டை	723·29	711·52	..
6 திருவள்ளூர்	283·00	..	..
7 கிண்டி	157·43	157·43	53·629
மொத்தம் ..	3,371·11	3,032·69	671·303

மேற்சொன்ன திட்டங்களைத் தவிர, இம் மாநிலத்தில் சேலம், அரக்கோணம், தாம்பரத்திற்கும், செங்கற்பட்டிற்கும் இடையில் ஜி.எஸ்.டி. சாலையின் இருமங்கு, தூத்துக்குடி, மணலி, காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் செப்பனிட்ட நிலங்கள் கொண்ட பேட்டைகளை நான்காம் திட்டக் காலத்தில் அமைக்கக் கருதியுள்ளது.

மனை விலை, மூன்று தவணைகளில் வசூலிக்கப்பட்டு வந்தன. மனையைப் பெறும் நேரத்தில், முதல் தவணையாக அதாவது 50 சதவீதமும், மனையைப் பெற்றுக் கொண்ட பின்னர் இரண்டாண்டுகளுக்குள்ளாக 25 சதவீதமும், இரண்டாம் தவணை செலுத்திய தேதியிலிருந்து ஓராண்டிற்குள்ளாக 25 சதவீதமும் வசூலிக்கப் பட்டன.

செப்பனிட்ட நிலங்களின் விலையைச் செலுத்துவதற்கான நிபந்தனைகளைத் தளர்த்தும் நோக்கத்துடனும், தொழில் அதிபர்களை அதிகமாக ஈர்க்கும் கருத்துடனும், 1969 நவம்பரில் அரசு கீழ்க்கண்ட ஆணைகளை வெளியிட்டது :—

(1) அம்பத்தூரில் உள்ள செப்பனிட்ட நிலங்களைப் பொறுத்த மட்டில், ஏக்கர் ஒன்றுக்கான விலை 30,000 ரூபாயிலிருந்து 20,000 ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது.

(2) கிண்டியில் உள்ள செப்பனிட்ட நிலங்களைப் பொறுத்த வரையில், அந்த நிலத்திற்கான விலையை ஆறு தவணைகளில் செலுத்தலாம்.

(3) தலைநகருக்கு தொலை தூரத்தில் இருக்கின்ற மதுரை, திருச்சி, மேட்டூர் ஆகிய பகுதிகளில் உள்ள செப்பனிட்ட நிலங்களை பொறுத்தவரையில், விலையை ஆறு தவணைகளில் வசூலிக்கலாம் என்று அரசு இசைவளித்தது. தலை நகருக்குத் தொலை தூரத்தில் உள்ள மனைகளைப் பொறுத்த வரையில், 95 ஆண்டு கால நீண்ட கால அளவுக் குத்தகை அடிப்படையில் தொழில் அதிபர்களுக்கு நிலங்கள் ஒதுக்கப்படலாமென்கிற வகையில் புதிய தூண்டுகோல் இப்போது அளிக்கப்படுகிறது. செப்பனிட்ட நிலங்களின் செலவில் 6 சதவிதம்தான் ஆண்டுக் குத்தகைத் தொகையாகிறது. எனினும், குத்தகைதாரர் குத்தகைகால அளவின் முதல் பத்தாண்டுகளுக்குள்ளாக, அந்த மனையை ஒரேயடியாக வாங்கிக் கொள்வது அவருடைய விருப்பத்தைப் பொறுத்ததாகும்.

1972 மார்ச் 14]

கைவினைப் பணிகள்.

இம் மாநிலத்தின் தொன்மை வாய்ந்த கைவினைகளுக்குப் புத்துயிரூட்டி, அவை தழைத்தோங்க வகை செய்வதே அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள இத் திட்டத்தின் முதன்மையான நோக்கமாகும். கைவினைப் பணி வளர்ச்சிக்காக நான்காம் ஐந்தாண்டு திட்டகாலத்தில் ரூ. 60,00,000 நிதி தற்காலிகமாக ஒதுக்கப்பட்டது. 1971-72-ஆம் ஆண்டில் இத்திட்டப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 4.17 லட்சமாகும். ஏற்கெனவே தொடங்கப்பட்ட பிரிவுகளில் பெரும்பாலானவை திட்டத்தின் கீழ் வராத வேலைத் திட்டங்களாகக் கருதப்படுகின்றன.

மாமல்லபுரத்தில் சிற்பப் பயிற்சி நிலையம், சுவாமிமலை, சேலம் ஆகிய இடங்களில் வேலைப்பாடுகள் அமைந்த உலோகப் பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், நாகர்கோயிலில் ரதத் தயாரிப்புப் பயிற்சி நிலையம், நாச்சியார்கோயில், காஞ்சீபுரம் ஆகிய இடங்களில் உள்ள வெண்கலப் பாத்திரத் தயாரிப்புப் பயிற்சி நிலையம், திருநெல்வேலி மாவட்டம், கோபாலசமுத்திரம், ஆயிக்குடி ஆகிய இடங்களில் உள்ள சணல் இரட்டுகள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், புதுக்கோட்டையிலும், இராமேஸ்வரத்திலும் உள்ள பனை ஓலைப் பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், கோலக்குடியில் உள்ள கம்பளி இரட்டுகள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், நெடுவயலில் உள்ள கற்றுழைநார்ப் பொருட்கள் தயாரிப்பு பயிற்சி நிலையம், சேரன்மாதேவியில் உள்ள மெருகு எண்ணெய் பூசப்பட்ட மரச் சாமான்கள் குறித்த பயிற்சி நிலையம் ஆகியவற்றைத் தற்போது அரசு நடத்தி வருகின்றது. 1971-72-ல் இப்பயிற்சி நிலையங்கள் பலவற்றில் 171 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர். பயிற்சிக்கால அளவு அந்தந்த கைவினைப்பணிகளைப் பொறுத்து ஓர் ஆண்டு முதல் நான்கு ஆண்டுகள் வரை பரந்துள்ளது. 1970-71-ம் ஆண்டில் கைவினைப் பொருள்கள் உற்பத்தியின் மதிப்பும் விற்பனைத் தொகையும் முறையே ரூ. 3,65,471-ம், ரூ. 3,25,676-ம் ஆகும். 1971-72-ஆம் ஆண்டில் 1971, செப்டம்பர் முடிய உற்பத்தியின் மதிப்பும் விற்பனைத் தொகையும் முறையே ரூ. 2,05,738.08. ரூ. 1,24,002.94 ஆகவும் இருந்தன.

மேற்சொன்ன பயிற்சி நிலையங்களைத் தவிர, கலைகள்-கைவினைப் பணிகள் கல்லூரி ஒன்றைச் சென்னையிலும், கலைகள்-கைவினைப் பணிகள் பள்ளி ஒன்றைக் கும்பகோணத்திலும் தொழிற் துறை

நடத்தி வருகின்றது. இந்த இரண்டு நிலையங்களில் இரண்டாண்டு ஒருங்கிணைக்கப்பட்ட படிப்பும், அதன்பின் மூன்றாண்டு தகுதிப் பட்டயப் படிப்பும் நடத்தப்படுகிறது. வண்ணம் தீட்டுதல், சிற்ப வேலை, வணிக ஓவியம் ஆகியவை இப்பாடமுறைகளில் அடங்கும். இந்திய அரசினால் தகுதி வாய்ந்த மட்டங்களில் உள்ள பணிகளுக்காக தெரிந்தெடுக்கப்படும் காரியங்களுக்காக, அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்விக் கழகம் அளிக்கும் கலைக் கான தேசியப் பட்டயத்திற்கிணையாக சென்னை, கலை-கைவினைப் பணிகள் கல்லூரியினால் கொடுக்கப்படும் தகுதிப்பட்டயங்கள் தற் போது அங்கீகரிக்கப்பட்டுள்ளன. சென்னையிலுள்ள கலைகள்-கைவினைப்பணிகள் கல்லூரியில் 1968 ஜூலை முதல் தொழில் வடிவ அமைப்புக்கலையில் பட்டமேற்படிப்புப் பாடமுறை ஒன்று தொடங் கப்பட்டு உள்ளது.

இத்துறை மூன்று உற்பத்தி நிலையங்களை நடத்தி வருகிறது. அவையாவன :—(1) சுவாமிமலையில் வெண்கலத்தில் கடவுளர் சிலை களைத் தயாரிக்கும் நிலையம்; (2) பஞ்ச உலோகம் தயாரிக்கும் நிலையம் வாகைகுளத்தில் உள்ளது; (3) கிருஷ்ணகிரியில் கருங்கற் களைப் பளபளப்பாக்குவதற்கான உற்பத்தி நிலையம் உள்ளது.

கைவினைப் பணியாளர்கள், தமிழ்நாட்டில் தயாரிக்கப்படுகின்ற கைவினைப் பொருட்கள் ஆகியவை குறித்த புள்ளிவிவரங்களைச் சேகரிக்கவும், விவரமான ஆய்வு ஒன்றை மேற்கொள்ளவும், கைவினைப் பொருட்களின் மேம்பாட்டிற்கான திட்டம் ஒன்றை வகுக்கவும், ஆய்வு-தரக் கட்டுப்பாடு, கைவினைப் பொருட்களின் பதிவு ஆகியவற்றைக் கொண்டு வருவதற்கான திட்டம் ஒன்றுக்கு 1971-72-ல் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத் திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

கைவினைப் பயிற்சிக்கு முறையாக மக்களைக் கவரும் நோக்கத் துடன், கைவினைப் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறுவோருக்கு வழங்கப்பட்டுவரும் பயிற்சி உதவிப் பணம் உயர்த்தப்பட்டுள்ளது. இது 5-8-1971 முதற் கொண்டு செயலில் உள்ளது.

தமிழ்நாடு கைவினைப் பணி பொருட்களின் தரம், உற்பத்தி, விற்பனை ஆகியவைப்பற்றி ஆலோசனை கூறுவதற்காக அமைக்கப் பட்ட மாநிலக் கைவினைப் பொருள்கள் வாரியம், பயனுள்ள கருத் துரைகளைக் கூறியுள்ளது. அவை தற்போது பின்பற்றப்பட்டு

வருகின்றன. அந்தப் பரிந்துரைகளைத் தொடர்ந்து, மீனம் பாக்கம் விமான நிலையத்தில் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்ட கடைகளில் கைவினைப் பணிப் பொருட்கள் விற்கப்படுகின்றன. மீனம்பாக்கம் விமான நிலைய நுழைவு வாயிலின் முன்பு கல்லில் செதுக்கப்பட்ட இரண்டு துவார பாலகர்களையும், இரண்டு தீப லட்சுமிகளையும் நிறுவுவதற்கும் இந்திய அரசு முடிவு செய்துள்ளது. மாமல்லபுரத்தில் உள்ள சிற்பப்பயிற்சி நிலையத் தினால் இந்த கற்சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

கோபாலசமுத்திரம், ஆயிக்குடி (திருநெல்வேலி மாவட்டம்) ஆகியவற்றில் உள்ள துறைப் பிரிவுகளில் தயாரிக்கப்படும் சணல் இரட்டுகளையும், இராமநாதபுரம், பழவேற்காடு (செங்கற்பட்டு மாவட்டம்), மணப்பாடு (திருநெல்வேலி மாவட்டம்) ஆகிய இடங் களில் தயாராகும் பனை ஓலைப் பொருட்களையும் இந்தத் துறை முறையாக ஏற்றுமதி செய்து வருகின்றது. ஏற்றுமதிக்கென உற்பத்தி செய்வதைக் குறிக்கோளாகக் கொண்டு துறைப் பிரிவு களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

படித்த இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தும் நோக்கத்துடன், கைவினைப் பொருட்களை ஏற்றுமதி செய்கையில் புதிய தொழில் முனைவோருக்கு உதவுவதற்காகவும், கைவினைப் பொருட்களின் ஏற்றுமதியை அதிகரிப்பதன் மூலம் இன்னும் அதிக செலவாணியை ஈட்டுவதற்காகவும் திட்டமொன்றை, புதுடில்லி, இந்திய வெளிநாட்டு வாணிக நிறுவனத்தின் உதவியுடன் அனைத் திந்தியக் கைவினைப் பொருட்கள் வாரியம் கொண்டுவந்துள்ளது.

இந்திய வெளிநாட்டு வணிக நிறுவனம் நடத்தும் பயிற்சிக்கு, இம்மாநிலத்திலிருந்து 7 பேர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு, அனைத் திந்தியக் கைவினைப் பொருட்கள் வாரியத்துக்குப் பரிவுரை செய்யப்பட்டுள்ளது. பாதிவிலையில் கைவினைஞர்களுக்கு மேம் படுத்தப்பட்ட, புதிய கருவிகளையும், சாதனங்களையும் வழங்கு வதற்கான திட்டம் ஒன்று ஆய்வில் உள்ளது.

சென்னை, மாமல்லபுரம், நெய்வேலி, தஞ்சாவூர், திருச்சி, திண்டுக் கல், திருநெல்வேலி, கோவை, சேலம் ஆகிய இடங்களில் துறைப் பிரிவுகளும், கூட்டுறவுத் தொழில் பிரிவுகளும், தனியார் கைவினை ஞர்களும், கைவினைப் பணியாளர்களும் தயாரிக்கின்ற கைவினைப் பணிப் பொருள்களை விற்பனை செய்வதற்கு வசதியாயிருக்கும்

பொருட்டு, மொத்தம் ஒன்பது கைவினைப் பணிப் பொருள் விற்பனை நிலையங்களை துறை நடத்தி வருகிறது. 1970-71-ல் இந்த விற்பனை நிலையங்களின் மொத்த விற்பனைத் தொகை ரூ. 35.63 லட்சமாகும். கிடைத்த லாபம் ரூ. 47,169 ஆகும்.

மேற் சொன்ன துறை விற்பனை நிலையங்களைத்தவிர தமிழ்நாடு கைப்பணிகள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், மதுரை, தூத்துக்குடி, புது டில்லி, வேலூர், கடலூர், கரூர், ஈரோடு, உதகமண்டலம் ஆகிய இடங்களில் விற்பனை நிலையங்களை நடத்தி வருகின்றது. இந்த விற்பனை நிலையங்களில் மொத்த விற்பனைத் தொகை 1970-71-ல் ரூ. 17.81 லட்சம் ஆகும்.

வெளிநாட்டவர்களிடமிருந்து கைவினைப் பொருட்களுக்கு ஏற்பட்ட அதிக தேவையைச் சமாளிக்கும் நோக்கத்துடன் 1970, ஜூலையில் கைவினைப் பொருட்களுக்கான மத்தியக் கிடங்கு ஒன்றிற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. 1-6-1971-ல் இந்நிலையம் செயல்பட தொடங்கியது.

கைவினைப் பொருட்களின் விற்பனையை மேம்படுத்தும் நோக்கத்துடன், ஒவ்வொரு ஆண்டும் நவம்பர், டிசம்பர் திங்களில் அனைத்திந்தியக் கைவினைப் பொருட்கள் வாரம் கொண்டாடப் பட்டு வருகிறது. இந்த வாரத்தில் ஏற்பளிக்கப்பட்டுள்ள நிறு வனங்களுக்கு விற்கப்பட்ட கைவினைப் பொருட்களுக்கு 5 சத விகிதம் தள்ளுபடி அனுமதிக்கப்படுகிறது.

கைவினைப் பொருட்கள் பிரிவுகளின் பட்டியல் ஒன்று இணைப்பு III -ல் கொடுக்கப்பட்டுள்ளது.

கிராமப் பணி நிலையங்கள்.

மாமண்டூரில் (செங்கல்பட்டு மாவட்டம்) கையினால் தயாரிக்கப் படும் காகிதத் தொழிற்சாலையும், ஓமலூரில் (சேலம் மாவட்டம்) ஒரு மட்பாண்டப் பணி நிலையமும் ஆக இரண்டு பணி நிலையங்கள் செயற்பட்டு வருகின்றன. மாமண்டூரிலுள்ள கையினால் தயாரிக் கப்படும் காகிதத் தொழிற்சாலை 1-9-1962 அன்று தொடங்கப் பட்டது. இது சென்னை-1 எழுதுபொருள்-அச்சுத் துறை இயக்குநருக்கு தட்டையான கோப்பு அட்டைகளை வழங்கிவரு கின்றது. ஓமலூர் மட்பாண்டப் பணி நிலையம் அப்பகுதி

1972 மார்ச் 14]

ஓரளவு படித்த 20 இளைஞர்களைக் கொண்ட ஒவ்வொரு தொகுதிக்குப் பயிற்சியளிப்பதற்காக ஒப்புதலளிக்கப்பட்டது. அந்த மட்பாண்டப் பணி நிலையத்தில் வேலை வாய்ப்பும் அளிக்கப்படும். இப்பிரிவு ஓமலூர் திட்டப்பகுதியில் அமைந்துள்ளது.

மட்பாண்டப் பொருட்களுக்காக உள்ள அதிகத் தேவையை முன்னிட்டு, பணிநிலையத்தில் கூடுதல் வசதிகளைச் செய்து தருவதற்காக, நடப்பாண்டில் திட்டமொன்றுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் மூலம், பீங்கான் ஜாடி, மின்கடத்திகள், ஓட்டலுக்குத் தேவையான வெட்டுக் கருவிகள், கோப்பைகள் போன்ற பொருட்களைத் தயாரிப்பதற்கான திறமையுடைய ஆதாயம் தரத்தக்க ஒரு பிரிவாக அது மேம்படுத்தப்படும்.

பட்டுத் தொழில்.

பட்டுத் தொழில் வேளாண்மை அடிப்படையிலான ஒரு தொழிலாகும். உழவர்கள் இத் தொழிலை ஒரு துணைத் தொழிலாகவே புரிந்து வருகின்றனர். பட்டுப் புழுக்களுக்குத் தேவையான முசுக்கட்டைச் செடிகளைப் பயிரிடுதல், பட்டுப் புழு முட்டை உற்பத்தி. பட்டுப் புழு வளர்ப்பு, பட்டுப் புழுக் கூடு உற்பத்தி, முடிவாக பட்டுப் புழு கூட்டினின்று கச்சா பட்டைப் பிரித்தெடுத்தல் போன்றவை இத்தொழிலில் அடங்கும்.

இத் தொழில் வளர்ச்சியின் புதிய பகுதிகளாக பிரிவினையாகாத சென்னை மாநிலத்தில், தருமபுரி மாவட்டத்திலும், கோயம்புத்தூர் மாவட்டம், தாளவாடி பிர்க்காவிலும் இத் தொழில் கொண்டுவரப்பட்டது. மாநிலங்கள் சீரமைக்கப்பட்டு, அதன் விளைவாக மைசூர் மாநிலத்துடன் கொள்ளேகால் வட்டம் சேர்க்கப்பட்டபின், தமிழ்நாட்டின் முசுக்கட்டைச் சாகுபடிப் பரப்பளவு 1,500 ஏக்கராக இருந்தது. தற்போது முசுக்கட்டைச் செடி பயிரிடும் பரப்பளவு 6,862 ஏக்கராகும். இத் தொழிலில் சுமார் 10,000 குடும்பங்கள் ஈடுபட்டுள்ளன.

கிராமப் பகுதிகளில் வேலைவாய்ப்பை அளிக்கும் இத் தொழிலை விரிவுபடுத்தும் நோக்கத்துடன், முசுக்கட்டைச் செடி நடுவதற்காக பதியன்களை இலவசமாகப் பட்டுப்புழு வளர்ப்பவர்களுக்கு வழங்குதல், கிணறுகள் வெட்டுவதற்காகக் கடன் வழங்குதல்,

உதவித் தொகை வழங்குதல், பட்டுப் புழு வளர்ப்புக் கொட்டகைகள் கட்டுதல், விசையேற்றங்கள் வழங்குதல், பாதி விலையில் பட்டுப்புழு வளர்ப்பதற்கான கருவிகளை வழங்குதல் போன்ற பல திட்டங்களை இயக்குநர் அலுவலகம் மேற்கொண்டுள்ளது. கூடுதலாக முசுக்கட்டைச் செடிகளை வளர்த்தல், பட்டுப் புழுக்களை வளர்த்தல் போன்றவை குறித்து புதிய தொழில் முனைவோருக்குக் கற்றுக் கொடுப்பதற்காக இம்மாநிலத்தில் பத்து கட்டுல விளக்கப் பட்டுப்பண்ணைகள் உள்ளன. பெருமளவில் பயனடைவதற்காக பட்டுப்புழு வளர்ப்பவர்களுக்கு சிறு புழுக்களை வழங்குவதற்காக ஐந்து பட்டுப் புழுப் பண்ணைகளும் உள்ளன. ஓசூரில் ஒன்றும், தாளவாடியில் ஒன்றுமாக இரண்டு கட்புல விளக்கப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை, அப் பகுதிகளிலுள்ள பட்டுப் புழு வளர்ப்பவர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக அமைக்கப் பட்டுள்ளன. தொழில் துறையால் அமைக்கப்பட்ட ஐந்து பட்டுப் புழுக் கூடு சந்தைகள் உற்பத்தி செய்யப்பட்ட பட்டுப் புழுக் கூடுகளை வாங்குகின்றன. ஓசூர், அரசு பட்டுப் பிரிவில் இக்கூடுகளினின்று நூல் பிரித்தெடுக்கப்பட்டு, பட்டாக மாற்றப்படுகிறது. பட்டு உற்பத்தியை அதிகப்படுத்துவதற்காக மூன்று பெரிய அளவு பட்டுப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம், வளர்ச்சியடையாமலுள்ள கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்பை ஏற்படுத்த இயன்றது. இதுவரை, இப் பண்ணைகளில் முசுக்கட்டைச் செடிகள் 900 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளன. பட்டுப் புழு வளர்ப்பவர்களுக்கு அரசு நிலங்களை குத்தகைக்கு விடுவதற்கான திட்டத்தினுல் கணிசமான அளவிற்கு அதிகமான பகுதியில் முசுக்கட்டைச் செடிகள் வளர்க்கப்படுகின்றன. நான்காவது ஐந்தாண்டு திட்டக் காலத்தின் முடிவில் சுமார் 10,000 ஏக்கர் அளவுக்கு முசுக்கட்டைச் செடிகளைப் பயிரிடுவது என்ற இலக்கை அடைய திட்டமிடப்பட்டுள்ளது.

1970, மார்ச் திங்களிலிருந்து, ஆராய்ச்சி வளர்ச்சி நிலையத்திற்கான திட்டம் செயல்படத் தொடங்கியது. இந்நிலையத்தில், சில புதிய, பலன்தரும் இனங்கள் ஏற்கெனவே உருவாக்கப் பட்டுள்ளன. இந்நிலையத்தில் இப்பணி நடந்தேறி வருகிறது. இந்த ஆராய்ச்சியின் பலன்கள் யாவும் பட்டுப் புழு வளர்ப்பவர்களைப் போய்ச் சேருகின்றன.

பட்டு வளர்ப்புத் திட்டங்களைப் பற்றிய பட்டியல் ஒன்று, ஆய்வுரையின் IV ஆம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

1972 மார்ச் 14]

கயிற்றுத் தொழில்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின்போது ஒப்பளிக்கப்பட்டு ஈத்தாமொழியில் நிறுவப்பட்ட அரசு கயிற்றுத் தொழில் பள்ளி 15-11-1961-ம் நாள் முதற்கொண்டு செயல்படத் தொடங்கியது. இப் பள்ளியில் ஒவ்வொரு ஆண்டும் 40 மாணவர்களுக்கு மேம்பட்ட முறைகளைக் கையாண்டு பாய்கள், பாய்முடைவுகள் போன்ற கயிற்றுப் பொருள்கள் தயாரிப்பதில் பயிற்சியளிக்கப்படுகிறது. இப் பயிற்சிக் காலம் இரண்டு ஆண்டுகளாகும். பயிற்சி பெறுபவர்களுக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 30 பயிற்சி உதவிப்பணமாக அளிக்கப்படுகிறது.

இதுவரை இக்கயிற்று தொழில் பள்ளி ஒன்பது தொகுதிப் பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி தந்துள்ளது. இப்பள்ளியில் பயிற்சிப் பெற்ற நபர்களின் மொத்த எண்ணிக்கை 149 ஆகும்.

இப்பள்ளியில் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் நோக்கத்துடன், கயிற்றுத் தொழில் பயிற்சிப் பள்ளியுடன் இணைந்து செயல்படும் விதத்தில் உற்பத்திப் பிரிவு ஒன்றுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இது நிறைவேற்றப்பட்டு வருகிறது. இம்மாநிலத்தில் பாய்களையும் தரைவிரிப்புகளையும் தயாரிப்பதற்கான சாத்தியக் கூறுகளை விளக்குவதன் பொருட்டு, திருநெல்வேலி மாவட்டம் தென்காசியில், முன்னோடி தொழிற்சாலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை 13-6-1968 முதற்கொண்டு உற்பத்தியை தொடங்கியது. இத்தொழிற்சாலை மருத்துவமனைகளில் உள்ள தரைவிரிப்புகளில் நிரப்புவதற்காகவும், ரப்பர் சேர்ந்த கயிற்றுப் பிரிவுகளுக்காகவும் கலப்புக் கயிற்று நார்களை உற்பத்தி செய்து வருகிறது. இதுவரையில் நாரை உரிப்பதற்காக நீரில் நனைக்கப்பட்ட மட்டைகளை இப்பிரிவு பயன்படுத்தி வந்தது. இப்போது பச்சை மட்டைகளையே நாரெடுக்க அப்பிரிவு பயன்படுத்தி வருகிறது. இந்த நாருக்கு நல்ல தேவையுள்ளது. 1970-71-ல் இப்பிரிவு 90 டன் நாரினை உற்பத்தி செய்தது, 85 டன் நாரினை விற்பனை செய்தது.

தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்.

1971-ம் வருடம் மார்ச் திங்கள் 31-ம் தேதி அன்றுள்ளபடி, 337 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன.

தற்போது செயல்பட்டு வரும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை நிலைப்படுத்தவும், மேம்படுத்தவும் எடுத்துள்ள நடவடிக்கைகளின் விளைவாக, ஆண்டுக்கு ஆண்டு சங்கங்களின் மொத்த உற்பத்தியும்,

மொத்த விற்பனையும் ஒரே சீராக உயர்ந்து வந்துள்ளது. மேலும் பல சங்கங்கள் ஆதாயத்தில் செயல்பட்டு வருகின்றன. உற்பத்தி, விற்பனை முதலியவை குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன :—

ஆண்டு.	சங்கங்களின் எண்ணிக்கை.	உற்பத்தி.	விற்பனை.	ஆதாயத்தில் இயங்கி வரும் சங்கங்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)	(5)
		(ரூபாய் லட்சத்தில்)		
1967–68	395	350·00	401·00	60
1968–69	367	358·00	414·00	96
1969–70	338	411·37	480·00	113
1970–71	337	578·51	564·33	125

(266 இயங்கி வருகின்றன
52 செயல் படாமலுள்ளன
19 புதிய சங்கங்கள்.)

தொழில் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் தமிழ் நாடு மாநில தொழிற் கூட்டுறவு வங்கி என்ற பெயரில் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவுவதற்காக 'நிதியுதவும் தலைமை வங்கி' ஒன்று உள்ளது. வேளாண்மைத் தேவைகளுக்கு மட்டுமே நிதியுதவுவதற்காக என்று உள்ள பிற கூட்டுறவு வங்கிகளிடமிருந்து இந்தத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களுக்குத் தேவையான நிதியைப் பெறமுடியாததால், இத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முக்கியமாக நிதியுதவி செய்வதற்காகவே 1961-ல் இந்த வங்கி அமைக்கப்பட்டது. வங்கியின் பங்கு மூலதனம் ரூ. 46.17 லட்சத்தில் ரூ. 25.30 லட்சம் அரசால் வழங்கப்பட்டுள்ளது. 30-6-1970 அன்றுள்ளபடி ரூ. 1,21,28,899 அளவுக்கு இந்த வங்கி 176 தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி அளித்துள்ளது. 1966-ம் ஆண்டிலிருந்து, இந்த வங்கியை, தலைமை வங்கியாக ஏற்றுக்கொள்வது குறித்து, இந்திய ரிசர்வ் வங்கி இன்னும் முடிவெடுக்காமல் உள்ளது.

இந்தச் சங்கங்களுள், நீலகிரியிலுள்ள எட்டு தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள், 1970-71-ல் ஒரேமாதிரியாக சிறந்த முறையில் செயல்பட்டு, அவையனைத்தும் நிகர இலாபத்தில் செயல் பட்டதால், இவை குறிப்பிடத் தக்கவையாகும். இவற்றில் ஆறு தொழிற்சாலைகள், முந்திய ஆண்டுகளில் ஏற்பட்ட விரயங்கள்

1972 மார்ச் 14]

முழுவதையும் ஈடுசெய்துள்ளன. எல்லாத் தொழிற்சாலைகளும் ஒன்று சேர்ந்து ரூ. 22.55 லட்சம் அளவிற்கு மேம்பாட்டுத் தள்ளுபடி—தேய்மான சேமநிதியை ஏற்படுத்தியுள்ளதால், எல்லாச் செயல்முறைகளையும் விட இச்செயல்முறை பாராட்டத் தக்கதாகும். 1970-71-ம் ஆண்டில் தேயிலை மொத்த விற்பனை ரூ. 176 லட்சமாகும்.

இந்தத் தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் மூலம், தொழிற்சாலைகளின் உறுப்பினர்களான சிறிய அளவில் தேயிலை பயிரிடும் 3,422 பேர் பெரிதும் பயனுற்றனர். இந்தக் கூட்டுறவுத் தொழிற்சாலைகள் அமைக்கப்படுவதற்கு முன்னர், சிறிய அளவில் தேயிலை பயிரிடுபவர்கள் தேயிலைத் துளிர்களை விற்பதனால், தேயிலைத் துளிர் வாங்கும் தனியார் தொழிற்சாலைகளிடமிருந்து பெற்ற விலையைக் காட்டிலும் தற்போது இரண்டு மடங்கு விலையைப் பெற முடிகிறது. மேலும், சில ஆண்டுகளுக்கு முன் கிடைத்த தேயிலை யின் அளவுடன் ஒப்பிடுகையில், அவர்களுடைய தோட்டங்களி லிருந்து தற்போது ஏக்கர் ஒன்றுக்கு இரண்டு மடங்கு விளைச்சல் கிடைத்துள்ளது. உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள், பயிர் நோய்த் தடுப்பு மருந்துகள், மருந்து தெளிக்கும் கருவிகள் போன்றவற்றை வழங்குவதன் மூலம் இந்தத் தொழிற்சாலைகள் வளர்ச்சிப் பணிகளை நல்கியதன் விளைவாக இவர்கள் தங்கள் தோட்டங்களிலிருந்து அதிக விளைச்சல் பெற இயன்றது.

சாத்தூர், சிவகாசி, கோயில்பட்டி ஆகிய இடங்களில் சிறு அளவில் தீக்குச்சி உற்பத்தி செய்வோர் பணி தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் (SINDCO) என்ற மற்றொரு தொகுதிச் சங்கங்கள் மக்களுக்கு பெருமளவில் பணிபுரிந்து வருகின்றன. 384 உறுப்பினர் களையுடைய 'சிண்ட்கோ' தொழிற்சாலைகள் நான்கு சுமார் 9,000 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கின்றன. 1970-71-ல் இந்தச் சங்கங் களின் மொத்த வணிகத் தொகை ரூ. 152 லட்சம் என்ற பாராட்டத் தக்க அளவை எட்டியது. சிறிய அளவில் தீக்குச்சி உற்பத்தி செய்வோருக்கான 5-வது சங்கம் அண்மையில் பதிவு செய்யப் பட்டுள்ளது. இது அண்மையில் செயல்படத் தொடங்கும்.

செயற்கை ரத்தினக் கற்கள் தயாரிப்பாளர்களுக்காக திருச்சி யிலுள்ள இரண்டு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இங்கு குறிப் பிடப்பட வேண்டியவையாகும். இத்திட்டம், தொழிலாளர் களுக்கு, அதிக வேலைவாய்ப்பளிக்கும் மும்முரத்திட்ட மாகும். இவ்விரு சங்கங்களும் ரத்தினக் கல் தயாரிக்கும்

1,068 உறுப்பினர்களைக் கொண்டவை. இவ்விரு சங்கங்களின் மொத்த உற்பத்தி, விற்பனை 1970-71-ம் ஆண்டில் முறையே ரூ. 6.05 லட்சம், ரூ. 8.70 லட்சமாகும். இந்த இரு சங்கங்களும் அவற்றின் உறுப்பினர்களுக்கு வழங்கிய ஊதியம் ரூ. 3.89 லட்சமாகும். 1970-71-ல் இந்தச் சங்கங்கள் ரூ. 27,282 ஆதாயத்தை ஈட்டியுள்ளன.

தேயிலைத் தொழிற்சாலை வளர்ச்சி அடைவதற்கும், இன்னும் 8 தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளைத் தொடங்கும் வதற்கும், ஏற்கெனவே உள்ள தொழிற்சாலைகளை விரிவுபடுத்துவதற்குமான ஒருங்கிணைந்த திட்டமொன்று, தேயிலை வாரியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இவற்றில், நீலகிரியில் கூடலூர், பிக்கட்டி ஆகிய இடங்களில் இரண்டு புதிய தேயிலைத் தொழிற்சாலைகளை அமைக்க தேயிலை வாரியம் ஏற்பளித்துள்ளது. பிக்கட்டியில் அமைக்கவிருக்கிற தொழிற்சாலையின் இடத்தை மேலூருக்கு மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது. இடம் தெரிந்தெடுப்பது போன்ற தொடக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒருங்கிணைந்த திட்டத்தின் எஞ்சிய பகுதிக்கு தேயிலை வாரியம் விரைவில் ஒப்பளிக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதுள்ள சில தேயிலைத் தொழிற்சாலைகளை விரிவுபடுத்துவதோடல்லாமல், இன்னும் 8 புதிய தேயிலை தொழிற்சாலைகளை அமைப்பது என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. சிறு அளவில் தேயிலை பயிரிடுவோரின் தோட்டங்கள் மேம்படுத்த நிதியுதவி, தொழில் நுட்ப உதவி ஆகியவற்றை வழங்குவதும் அவசியமாகும்.

1971-72-ல் செயல்படுத்தக் கருதியுள்ள ஒரு திட்டத்தின்கீழ் ஒன்பது தொழில் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளின் உறுப்பினர்களான சிறு அளவு தேயிலை பயிரிடுவோருக்குச் சொந்தமான 1,000 ஏக்கர் நிலத்தில் ஐந்தாண்டுகளில் தேயிலை பயிரிடப்படும். இத்திட்டத்திற்காகும் செலவு ரூ. 40 லட்சமாகும். ஆண்டு ஒன்றுக்கு 6½ சதவீத வட்டி வீதத்தில் உறுப்பினர்களுக்கு, தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் மூலமாக இத்தொகை கடனுகை வழங்கப்படும். கடனின் முதல் தவணை வழங்கப்படுவதிலிருந்து 7-வது ஆண்டு தொடங்கி 8 ஆண்டு சம தவணைகளில் இக்கடன் திருப்பிச் செலுத்தத் தக்கதாகும். 8 ஆண்டுகளுக்குப் பணியாளர்களுக்காகும் செலவு ரூ. 4.095 லட்சமாகும். இதில் மூன்றாண்டுகளின் பாதிச் செலவை உதவித் தொகையாக தேயிலை வாரியம் ஏற்கும். இத்தொகை ஆண்டொன்றுக்கு ரூ. 25,585

1972 மார்ச் 14]

ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த 1,000 ஏக்கரில் தேயிலை பயிரிடுவது மூலம், தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் தேயிலைத் துளிர்களின் அளவு நாளடைவில் அதிகரிக்கும். தேயிலை வாரியத்தின் ஏற்பளிப்பை இத்திட்டம் எதிர்பார்க்கிறது.

தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதற்காக பல செயற் குறிப்புகள் ஏற்கெனவே வந்துள்ளன. இவை தொழில் இயக்குநர் அலுவலகத்தின் ஆய்விலுள்ளன. இயலக்கூடிய நேர்வுகளில், சங்கங்களைப் பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சாத்தியமான நேர்வுகளிலெல்லாம், புதிய சங்கங்களைப் பதிவு செய்வதற்கான செயற்குறிப்புகளை இன்னும் பெறுவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

1971, ஏப்ரல் முதல் தேதியிலிருந்து 1971, நவம்பர் 30-ஆம் நாள் வரை 13 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

1971-72-ல் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ள கீழ்வரும் புதிய சங்கங்களை எண்டு குறிப்பிடலாம். அவையாவும் தொழிற் கூட்டுறவுத் துறையிலுள்ள புதிய முயற்சிகளாகும் :—

1. விமானப் பொறியாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம், சென்னை.

தமிழ்நாட்டில் உணவுப் பயிர்களின் நோய்த் தடுப்பு மருந்துகளை விமானம் மூலம் தெளிக்கும் பணியை மேற்கொள்வது இச் சங்கத்தின் நோக்கமாகும். சுற்றுப் பயணிகளையும், விரைவில் அழுகக்கூடிய பொருள்களையும் விமானத்தில் ஏற்றிச் செல்வதற்கு இச்சங்கம் வகை செய்யும். இச் செயலுக்காக சங்கம், ஹெலிகாப்டர் ஒன்றை வாங்குவதற்காக நடவடிக்கை எடுத்துள்ளது. ஹெலிகாப்டர் வாங்குகிற வரையில், வாடகைக்கமர்த்தப்பட்ட ஹெலிகாப்டர் மூலம் இப்பணி தொடங்கப்பட்டுள்ளது.

2. சிவகாசி அச்சுப்பணி தொழிற் கூட்டுறவுச் சங்கம்.

இது, இவ்வாண்டில் நிறைவேற்றப்படுவதற்காகப் புதிதாக ஒப் பளிப்பு வழங்கப்பட்டுள்ள திட்டமாகும். அச்சுத் தொழிலுக்குத் தேவையான பொருள்களையும், துணைச் சாதனங்களையும் பெருமள வில் வாங்கி, அவற்றை சிவகாசியிலும், அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் சங்கத்தின் உறுப்பினர்களாயுள்ள சிறு அளவில் அச்சுத் தொழில் செய்பவர்களுக்கு வழங்குதல் போன்ற பணி

வசதிகளுக்கு வகைசெய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்க மாகும். இத்திட்டத்திற்காகும் மொத்தச் செலவு சுமார் ரூ. 27 லட்சமாகும். இச்சங்கம் பதிவு செய்யப்பட்டுள்ளது. சங்கத்தில் விரைவில் பணியைத் தொடங்குவதற்கான தொடக்க நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3. சென்னை, கடல் உணவுத் தொழிற் கூட்டுறவுச் சங்கத்தை அமைத்தல்.

மீன்பிடி தொழிலில் தொழில் முனைவோரைப் பதிவு செய்தல், ஆழ்கடல் மீன்பிடி தொழிலுக்கான இயந்திரப் படகுகள் முதலியவற்றை வாங்குவதற்கும், பிடித்த மீனை விற்பதற்கும் அவர்களுக்கு உதவி செய்தல் போன்றவை இத்திட்டத்தின் முக்கியமான நோக்கங்களாகும். இத்திட்டத்தின் மொத்தச் செலவு சுமார் ரூ. 10 லட்சமாகும். அரசு இத்திட்டத்திற்கு ஏற்பளித் துள்ளது. இச்சங்கம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1970–71-ல் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் பணி நிலை கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

1. 31—3—1971 வரையில் உள்ள சங்கங்களின் மொத்த எண்ணிக்கை	337
2. மூன்று ஆண்டுகளுக்கும் மேலாகப் பணி புரிந்து வரும் சங்கங்களின் எண்ணிக்கை ..	314
3. (அ) இந்த ஆண்டில் ஆதாயத்தில் இயங்கிவரும் சங்கங்களின் எண்ணிக்கை (இனம் 2-லிருந்து)	117
(இ) விரயத்தில் இயங்கிவரும் சங்கங்களின் எண்ணிக்கை (இனம் 2-லிருந்து)—	
(i) கைவினைப் பொருள்கள் சங்கங்கள்— அரிசனங்கள், பெண்கள், கயிற்றுத் தொழிலாளர்கள் முதலியோரின் பயனுக் கான சங்கங்கள்	115
(ii) மற்றவை	82
4. (அ) 3 (அ) பத்தியில் உள்ள சங்கங்களினால் 1970–71 ஆம் ஆண்டில் பெறப்பட்ட ஆதாயம்	17·35 லட்சம்
(இ) 3 (இ) பத்தியில் உள்ள சங்கங்களினால் 1970–71-ல் அடைந்த விரயம்	5·45 லட்சம்.
(உ) இனம் 2-ல் உள்ள சங்கங்களுக்கு 31-3-71 அன்று அடைந்த மொத்த விரயம்	24·37 லட்சம்.

1972 மார்ச் 14]

5. மூன்று ஆண்டுகளுக்கும் மேல் பணிபுரியும் சங்கங்களின் மொத்த ஆதாயம் ..	10·95 லட்சம்.
6. (அ) (1) இனத்தில், 1970–71-ல் ஆதாயத்தோடு பணிபுரிந்துவந்த சங்கங்களின் எண்ணிக்கை ..	125
(இ) (1) ஆம் இனத்தில், 31–3–1971-ல் ஆதாயத்தோடு பணிபுரிந்துவரும் சங்கங்களின் எண்ணிக்கை	76
(உ) (1) ஆம் இனத்தில், 1970–71-ல் விரயத்தில் பணி புரிந்துவரும் சங்கங்கள் ..	212
(எ) (1) ஆம் இனத்தில் 31—3—1971-ல் விரயத்தில் பணி புரிந்துவரும் சங்கங்கள் ..	261
7. (அ) 2 ஆம் இனத்தின்கீழ் வேலை வாய்ப்பளிக்கப் பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ..	23,023
(இ) (1) இனத்தின்கீழ் வேலை வாய்ப்பளிக்கப் பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ..	24,247

இம் மாநிலத்தில் உள்ள தொழில்-கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட வாரியான பட்டியல், தொழில் கூட்டுறவுகள் குறித்த திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்த விவரங்கள் ஆகியவை இந்த ஆய்வுரையின் V & VI-வது இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

பொருட்காட்சிப் பிரிவு.

தொழில்–வாணிகத்துறை 1971–72-ல் கீழ்க்காணும் பொருட்காட்சிகளில் பங்கு கொண்டது.—

(1971, நவம்பர் வரை)

பொருட்காட்சி	கால அளவு	
	முதல்	வரை.
(1)	(2)	(3)
1. 1971 ஆம் ஆண்டு அனைத்திந்திய தொழில்–வேளாண்மைப் பொருட் காட்சி, தேனாம்பேட்டை, சென்னை.	டிசம்பர் 1970	14—2—71
2. மதுரையில் நடந்த இந்திய சிறு தொழில் சங்கக் கூட்டமைப்பின் கருத்தரங்கு.	6—12—70	7—12—70
3. பார்க் பேர் பொருட்காட்சி, சென்னை.	9—1—71	21—2—71
4. 121–வது மலர், பழங்கள், காய்கறி கள் பொருட்காட்சி, சென்னை–6.	9—1—71	24—1—71
5. குடியரசு தினம்	26—1—71	
6. 1971 ஆம் ஆண்டு சித்திரை பொருட் காட்சி, மதுரை.	28—4—71	20—6—71

	பொருட்காட்சி	கால அளவு	
		முதல்	வரை
	(1)	(2)	(3)
7.	தென்னிந்திய தொழில் வளர்ச்சி கலைப் பொருட்காட்சி, எம். யூ. சி. திடல், சென்னை.	3—6—71	10—8—71
8.	16–வது தேசீய கணகாட்சியும் சுகாதார விழாவும், திருநெல்வேலி.	25—6—71	1—8—71
9.	குற்றுலம் 6–வது பருவக்காலப் பொருட்காட்சி, திருநெல்வேலி.	16—7—71	15—8—71
10.	31–வது அனைத்திந்திய சுதேசி கைத்தறி, தொழில் பொருட்காட்சி, சேலம்.	1—8—71	12—9—71
11.	மலர்க் கண்காட்சி, உதகமண்டலம்.	22—5—71	
12.	உதகமண்டலம், இளவேனிற்கால மலர்க் கண்காட்சி.	26—9—71	
13.	இந்திய சிறுதொழில் சங்க கூட்டமைப்பு.		
14.	காந்தி பிறந்த நாள் விழாவின்போது அலங்காரத்தேர்.	2—10—71	

இந்தப் பொருட்காட்சிகள் அனைத்திலும் துறையின் கைப்பணிப் பொருட்களை விற்பதற்கு ஏற்பாடு செய்ததோடல்லாமல், துறையின் செயல்கள், சாதனைகள் ஆகியவை குறித்துப் பிரச்சாரம் செய்வதிலும் துறைப்பணியாளர்கள் ஈடுபட்டனர்.

சென்னையில், 1971 டிசம்பரிலும், 1972, ஜனவரியிலும் நடக்கவிருக்கிற உள்ளூர்ப் பொருட்காட்சிகளைத்தவிர, 1972, மார்ச் திங்களில் டில்லியிலும் பம்பாயிலும் கைப்பணிப் பொருட்கள் கண்காட்சி ஒன்றை நடத்தவும் துறை ஏற்பாடு செய்து வருகிறது.

கிராமத் தொழில் திட்டங்கள்.

கிராமப்புறப் பகுதிகளிலும், சிறு நகரங்களிலும் கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள் வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், இந்தியா முழுதும் தெரிந்தெடுக்கப்பட்ட 40 கிராமப்புறப் பகுதிகளில் சிறு தொழில் மும்முர வளர்ச்சிக்கு முன்னோடித் திட்டங்களை 1962ஆம் ஆண்டில் இந்திய அரசு ஒப்பளித்தது. அவற்றுள் 3 கிராமத் தொழில் திட்டங்கள் தமிழ் நாட்டுக்கு ஒதுக்கப்பட்டன.

1972 மார்ச் 14]

முன்னோடித் திட்டங்களுக்காக இடங்களைத் தெரிந்தெடுப்பது குறித்து திட்ட ஆணைக் குழு குறிப்பிடும் கூறுகளின் அடிப்படையில், தொழில் மிகவும் பின்தங்கியவையும், நிலம் கிடைப்பது அரிதாக இருப்பவையும். வேலையின்மையும் போதிய வேலை வாய்ப்பற்ற நிலையும் எளிதில் கண்டறியக் கூடியவையுமான கீழ்க்காணும் மூன்று திட்டங்களை தமிழ்நாடு அரசு தெரிந்தெடுத்தது :—

(1) செங்கற்பட்டு மாவட்டத்தில் ஸ்ரீபெரும்புதூர், திருவள்ளூர் வட்டங்கள், பொன்னேரிபேட்டை துணை வட்டம்.

(2) சேலம் மாவட்டத்தில் ஓமலூர் வட்டம் (தற்பொழுது ஓமலூர் வட்டம், ஓமலூர், மேட்டூர் வட்டங்கள் என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது).

(3) திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குனேரி வட்டம்.

வேளாண்மை, பாசனம், சாலை வசதிகள் முதலியவற்றை எல்லா வகைகளிலும் மேம்படுத்துவதன் வாயிலாக, கூட்டுறவு வேளாண்மைத் தொழில் பொருளாதாரத்திற்கு வகைசெய்வதே முதன்மையான நோக்கமாக இருப்பதால் வாழ்க்கை நிலையையும், உற்பத்தி நிலையையும் உயர்த்துவதற்காகவும், கிராமச் சமூகத்தினரில் நில மற்றோருக்கும் பொருளாதார நிலை குன்றியவருக்கும் வேலை வாய்ப்புகளை இன்னும் அதிக அளவில் நல்குவதற்கும் தொழில்கள் வளர்ச்சிக்கு முழு அளவில் முயற்சிகளை மேற்கொள்ளல் வேண்டும். எனவே, கிராமப் பகுதிகளில் மேம்படுத்தக் கூடிய தொழில்கள் பற்றியும் அவற்றிற்குத் துணையாயுள்ள பிற நடவடிக்கைகள் பற்றியும் முக்கியமாக ஆழ்ந்த நாட்டம் செலுத்த வேண்டும். இத்திட்டப் பகுதிகளில் நியமிக்கப்பட்ட திட்ட அதிகாரிகளால் இந்த மூன்று திட்டப் பகுதிகள் பற்றிய ஆய்வு வேலை ஒன்று நடத்தப்பட்டது.

இதுவரை அனுமதித்துச் செயல்படுத்தப்பட்ட இவ்வேலைத் திட்டங்களில் கீழ்க்கண்டவை அடங்கும். பயிற்சித் திட்டங்கள், பொது வசதிப் பணி நிலையங்கள், மூன்று பொதுநோக்குப் பொறியியல் பட்டறைகள், பளபளப்பு ஓடுகள், தொழில் பிரிவு, காலணி தொழில் பிரிவு, மரவேலைப் பிரிவு, காகித உறைகள்,

காகிதப் பைகள் தயாரிப்புப் பிரிவு' சாக்குக் கட்டிகள் உற்பத்திப் பிரிவு, பாலிதீன் தட்டைக் குழாய்கள் உற்பத்திப் பிரிவு, பிற மேம்பாட்டுத் திட்டங்கள் ஆகியவையே அவை

கிராமத் தொழில் திட்டம் "மத்திய அரசு ஆதரவு பெறும் திட்ட"மாகத் தொடர்ந்து இயங்கி வருகிறது. 1970-71-ஆம் ஆண்டில் மத்திய அரசு கிராமப்புறத் தொழில் திட்டத்திற்காக, தமிழ்நாட்டிற்கு 6.39 லட்சமே வழங்கியுள்ளது. இதில் 4.84 லட்சம் நிதியாகவும் 1.55 லட்சம் கடனாகவும் வழங்கியுள்ளது. கிராமப்புறத் தொழில் திட்டப் பகுதிகளில் இத்திட்டங்களுக்காக ரூ. 25.21 லட்சம் செலவிடப்பட்டது. 1971-72ஆம் நடப்பு ஆண்டிற்காக, தற்போதுள்ள துறைத் திட்டங்களைச் செயல் படுத்தவும், மூன்று கிராமப்புறத் தொழில் திட்டப் பகுதிகளில் தனியார் துறையினருக்குக் கடன்களை ஒப்பளிக்கவும் தமிழ்நாட்டுக் கிராமப்புறத் தொழில் திட்டங்களுக்காக ரூ, 28.44 லட்சம் தேவைப்படும் என்று மதிப்பிடப்படுகிறது. 1971-72-ஆம் நடப்பு ஆண்டிற்காக மத்திய அரசின் உதவி ரூ. 7.74 லட்சம் (மானியம் ரூ. 5.19 லட்சம். கடன் ரூ. 2.55 லட்சம்) என்ற அளவில் இருக்குமென்று இந்திய அரசு தெரிவித்துள்ளது. திட்டத்தின் தற்போதைய நிலையையொட்டி, அடுத்த 1971-73ஆம் ஆண்டுக்கான நிதித் தேவைகள் ரூ. 30.13 லட்சமாக இருக்குமென்று மதிப்பிடப் படுகிறது. 1971-72ஆம் நடப்பு ஆண்டுக்கான இந்திய அரசின் மத்திய உதவி, தேவைப்படும் தொகைக்கும் மிகக் குறைவாக இருப்பதால், மாநில நிதியிலிருந்து மாநில வரவு-செலவுத் திட்டத்தில் கூடுதலான நிதிக்காக, தொழில் வணிகத்துறை இயக்குநரால் மாநில அரசுக்குச் செயற்குறிப்புகள் பணிந்தனுப்பப் பட்டுள்ளன.

மூன்று கிராமத் தொழில் திட்டம் சார்ந்த பகுதிகளில் தொடங்கப்பட்ட எல்லாப் பயிற்சித் திட்டங்களும், வரையறுத்த பயிற்சிக் கால அளவுகள் முடிவுற்ற பிறகு மூடப்பட்டன. ஆனால் உள்ளூர்க் கைவினைஞர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக செம்பரம்பாக்கம், திருப்பாச்சூர், வள்ளியூர் ஆகிய ஊர்களில் உள்ள மூன்று பொது நோக்கப் பொறியியல் பணிக்கூரிகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

1972 மார்ச் 14]

மூன்று கிராமத் தொழில் திட்டப் பகுதிகளிலும் 16 பொது வசதி நிலையங்கள் இருந்தன. கிராமப்புறத் தொழில் திட்டப் பகுதியில் உள்ள பொதுவசதி நிலையங்களைத் தனியார் தொழில் முனைவர்களுக்குத் தவணைக் கொள்முதல் முறையில் கொடுக்கலா மென்று அரசு ஆணையிட்டுள்ளது. 5 பொது வசதி நிலையங்கள், தனியார் தொழில் முனைவர்களுக்குத் தவணைக் கொள்முதல் முறையில் வழங்கப்பட்டுள்ளன.

1	பொது வசதி நிலையம்	சுங்குவார் சத்திரம்	கிராமப்புறத் தொழில் திட்டம்	ஸ்ரீபெரும்புதூர்
2	,,	ஜலகண்டபுரம்	,,	ஓமலூர்
3	,,	மேச்சேரி	,,	ஓமலூர்
4	,,	திசையென்விளை	,,	நாங்குனேரி
5	,,	ஈத்தமொழி	,,	நாங்குனேரி

மீதமுள்ள 11 பொதுவசதி நிலையங்களில், ஸ்ரீபெரும்புதூர் திட்டத்தில் ஒன்றும், ஓமலூர்த் திட்டத்தில் இரண்டும், நாங்குனேரித் திட்டத்தில் எட்டும் உள்ளன.

ஸ்ரீபெரும்புதூர் கிராமப்புறத் தொழில் திட்டத்தில் துறை உற்பத்திப் பிரிவுகள் நான்கு (இரண்டு பொதுவசதிப் பொறியியல் பணிக்களரிகள் செம்பரம்பாக்கத்திலும், திருப்பாச்சூரிலும், மேப்பேடுவில் காலணித் தொழில் பிரிவு ஒன்றும், ஊத்துக்கோட்டையில் காகித உறைகள், காகிதப் பைகள் தயாரிப்புத் தொழில் பிரிவு ஒன்றும்) உள்ளன.

ஓமலூர் திட்டத்தில் ஓமலூரில் பாலிதீன் தட்டைக் குழாய்கள் உற்பத்திப் பிரிவு ஒன்றும், பளபளப்பு ஓடுகள் பிரிவு ஒன்றும், மரவேலைப் பிரிவு ஒன்றும் செயல்பட்டு வருகின்றன. ஓமலூரில் தொடங்கப்பட்ட பளபளப்பு ஓடுகள் பிரிவு வழங்கல் ஆணைகள் இல்லாத காரணத்தால் தற்போது செயல்படவில்லை. ஓமலூரிலுள்ள பளபளப்பு ஓடுகள் தயாரிப்புப் பிரிவு ஒப்பந்தப் புள்ளிகள் அறிவிப்புக்குப் பின்னர், தவணைக் கொள்முதல் முறையில் தனியாருக்குக் கொடுக்கப்படலாமென்று அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டம் ஆய்விலுள்ளது. நாங்குனேரித் திட்டத்தின்கீழ்

[1972 மார்ச் 14

வள்ளியூரில் பொதுநோக்குப் பொறியியல் பணிக்களரி ஒன்றும், வடக்கு விஜயநாராயணம் என்ற ஊரில் சாக்குக்கட்டி உற்பத்திப் பிரிவு ஒன்றும் செயல்பட்டு வருகின்றன.

பட்டுப்பூச்சி வளர்ப்புத் தொழில் மேம்பாட்டுக்காக, நாங்குனேரித் திட்டத்தில் பனகுடியில் பட்டுத்தொழில் வளர்ப்புப் பண்ணை ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்தப் பண்ணையின் செயல்முறை குறித்து அண்மையில் மறு ஆய்வு செய்யப்பட்டது. பருவ காலங்களில் காற்றின் திசையில் மாறுதல் ஏற்பட்டதன் விளைவாக பண்ணை நிலங்கள் முழுவதிலும் மணல் நிறைந்து விட்டதாலும், பட்டுப்பூச்சி வளர்ப்புக் காரியங்களுக்கு அந்த பண்ணைத் தோட்டம் பொருத்தமற்றதாக இருப்பதாலும், இந்தப் பண்ணையை மூடிவிடுமாறு அரசுக்குச் செயற்குறிப்புகள் அனுப்பப்பட்டுள்ளன.

தொழில்களுக்கு அரசு உதவியளித்தல் சட்டத்தின்கீழ், குறைந்த வட்டிக்கு ஆண்டுக்கு 3 சதவிகிதம் கடன் வழங்குவது மூலம் தனியார் தொழில் முனைவர்களுக்கு கிராமப்புறத் தொழில் திட்டப்பகுதிகளில் தொழிற்சாலைகள் அமைக்க ஊக்கமளிக்கப் படுகிறது. தொழில்களுக்கு அரசு உதவியளித்தல் சட்டத்தின் கீழ் தனியார் தொழில் முனைவர்களுக்கு ஆண்டு வாரியாக வழங்கப் பட்ட கடன்கள் பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

ஆண்டு	ஒப்பளிக்கப் பட்ட கடன் தொகை. (ரூபாய் லட்சத்தில்.)
1964–65	4·04
1965–66	6·03
1966–67	5·39
1967–68	2·29
1968–69	2·00
1969–70	5·56
1970–71	4·45

1972 மார்ச் 14]

மூன்று கிராமத் தொழில் திட்டப் பகுதிகளில் செயல்பட்டு வரும் தொழில் பிரிவுகள் பற்றிய விவரங்கள் இந்த ஆய்வுரையின் VIII-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

1969 ஆம் ஆண்டு முடிவில் இந்திய மாநில வங்கி "தாராளக் கடன் வசதி திட்டம்" என்ற ஒரு புதிய திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. அதன் மூலம் கிராமத் தொழில் திட்டப் பகுதிகளில் உள்ள தனியார் தொழிலதிபர்களுக்கு தொழிற்பிரிவு ஒன்றுக்கு 5,000 ரூபாய் வரை கொடுக்கிறது. இத் திட்டத்தின்கீழ் உள்ள கிராமத் தொழில் அதிபர்களுக்கு இத் திட்டம் பெருமளவிற்கு உதவியுள்ளது. மூன்று கிராமத் தொழில் திட்டப் பகுதிகளிலும், 1969-70 ஆம் ஆண்டில், அதாவது, 1970 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களிலிருந்து 1970 ஆம் ஆண்டு மார்ச் வரை 158 தொழிற் பிரிவுகளுக்குக் கடன் வழங்கியுள்ளது. அதன் மொத்தத் தொகை ரூபாய் 4,57,000. 1970-71-ல் 196 தொழிற் பிரிவுகளுக்கு மொத்தத்தில் ரூ. 2.84 லட்சம் கடனை வழங்கப்பட்டது. இத்திட்டம், 1971-72 ஆம் நடப்பு நிதியாண்டில் மேலும் பல தொழிற்சாலைகளுக்குப் பயனளிக்குமென்று எதிர்பார்க்கப் படுகிறது.

மூன்று கிராமத் தொழில் திட்டப் பகுதிகளில் கிராமக் கலை, கைவினைகள், மற்றும் தொழில்கள் குறித்த நிதியிலிருந்து கிராமத் தொழிற்பேட்டைகள் ஐந்தினை நிறுவ அரசு அனுமதி அளித்துள்ளது. ஐந்து கிராமத் தொழிற்பேட்டைகளில், தனியார் தொழில் முனைவர்களின் நன்மைக்காக இரண்டு கிராமத் தொழிற் பேட்டைகள் ஸ்ரீபெரும்புதூர் திட்டப் பகுதியில் பூவிருந்தவல்லி, கீழ்நல்லத்தூர் ஆகிய இடங்களில் நிறுவப்படவிருக்கிறது. ஓமலூர் திட்டப் பகுதியில் நிறுவப்பட இருக்கின்ற இரண்டு தொழிற் பேட்டைகளில் ஜலகண்டபுரத்தில் விசைத் தறிக்காக ஒன்றும், தாராமங்கலத்தில் கைத்தறிக்காக ஒன்றும் நிறுவப் படும். நாங்குனேரி திட்டப் பகுதியில் உள்ள வள்ளியூரில் ஒரு கிராமத் தொழிற்பேட்டை நிறுவ அனுமதிக்கப்பட்டுள்ளது. கிராமத் தொழிற்சாலைக்குப் பல்வேறு வகைக் கொட்டகைகளைக் கட்டுவதற்கு அது பயன்படும். கிராமத் தொழிற் பேட்டைகளை நிறுவுவதற்கு ஏற்ற மனைகள் ஜலகண்டபுரத்திலும், தாரா மங்கலத்திலும், பூவிருந்தவல்லியிலும் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன.

1972 மார்ச் 14]

தாராமங்கலம் கிராமப்புறத் தொழிற்பேட்டைக்கான கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. ஓமலூர், ஸ்ரீபெரும்புதூர் திட்டப் பகுதிகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ள கிராமத் தொழிற் பேட்டைகளை தொழில்-வர்த்தகத் துறையின் உதவியுடன் சம்பந்தப் பட்ட ஊராட்சி ஒன்றியங்கள் நிறைவேற்றி வருகின்றன. நாங்குனேரி கிராமத் தொழில் திட்டத்தில் வள்ளியூரில் நிறுவ ஒப்பளிப்பு வழங்கப்பட்ட கிராமத் தொழில்பேட்டையைச் செயல்படுத்தும் பொறுப்பை தமிழ் நாடு கதர்-கிராமத் தொழில் வாரியம் ஏற்றுள்ளது.

கிராமப்புறத் தொழிற் திட்டங்களை, அவை தற்போது நிறுவப்பட்டுள்ள மாவட்டங்களின் முழுப்பகுதிக்கும் விரிவு படுத்தப்பட வேண்டும் என்று இந்திய அரசு முடிவு செய்துள்ளது. தற்போதுள்ள 3 கிராமப்புறத் தொழிற்பேட்டைகளின் பகுதியை மாவட்டங்களின் முழுப்பகுதிக்கும் விரிவுபடுத்த வேண்டும் என்று தமிழ் நாடு அரசை இந்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது. தற்போதுள்ள தொழிற்பேட்டைகளின் பகுதி மாவட்டங்களின் முழுப்பகுதிக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்பதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையிலுள்ளன.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்கத்திலிருந்து செயல்படுத்தப்படுவதற்காக, இந்திய அரசு, தமிழ்நாட்டிற்கு புதிய கிராமப்புறத் தொழிற்பேட்டைகள் இரண்டை ஒதுக்கி யுள்ளது. தொழிற் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்கள் என்று திட்டக்குழுவால் அறிவிக்கப்பட்டுள்ள 8 பின்தங்கிய மாவட்டங்களி லிருந்து இவை தெரிந்தெடுக்கப்பட வேண்டுமென்றும் இந்திய அரசு கருத்து வழங்கியுள்ளது. இவ்விரு புதிய கிராமத் தொழிற் பேட்டைகளை அமைப்பதற்கான மாவட்டங்களைத் தெரிந் தெடுக்கும் செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

1972 மார்ச் 14]

தமிழ் நாடு சிறு தொழில் கழகம்.

தொழில் துறையில் பல சிறு தொழில் பிரிவுகள் முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் தொடங்கப்பட்டன. இவை யனைத்தும் இம்மாநிலத்தின் சிறு தொழில்கள் வளர்ச்சிக்குத் தேவையான அடித்தளத்தை அமைத்தற் பொருட்டு முக்கியப் பணி நிலையங்களாக நிறுவப்பட்டன. முதற்கண், இத் தொழிற் பிரிவுகள் யாவும், தொழிற் பெருக்கத்தின் வளர்ச்சி, தொழில் வினைஞர்களுக்கான பயிற்சி, நவீன தொழில் நுட்ப உத்திகளைக் கையாளுதல் போன்ற பல்வேறு வாணிகத் தன்மையல்லாத காரியங்களுக்காகவே நிறுவப்பட்டன. இப்பிரிவுகளில் பாதி, முழுமை பெற்ற பொருட்களை உற்பத்தி செய்வதில்லை. வெளியி லிருந்து வரும் வேலைகளையே அவை முழுதும் நம்பியுள்ளன. இந்தப் பிரிவுகளின் மூலதன அமைப்புக்கும் அவை வாணிக அளவில் தனித்தியங்கும் தன்மைக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. ஏனெனில், இவையனைத்தும் பணி நிலையங்களாகச் செயல் படவேண்டுமென்றே சிறப்பாகத் திட்டமிடப்பட்டு உருவாக்கப் பட்டுள்ளன.

சுமார் 65 துறை நிலையங்களை மேற்கொண்டு செயல்படுத்து வதற்காக, தமிழ்நாடு சிறு தொழில் கழகம் அரசால் அமைக்கப் பட்டது. இந்நிறுவனம் 1965 டிசம்பர் முதல் செயல்படத் தொடங்கிற்று. அதிகாரமளிக்கப்பட்ட மூலதனமாக இந்த நிறுவனத்திற்கு ரூ. 10 கோடி உள்ளது. அதன் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 4 கோடி ஆகும்.

இக்கழகத்திற்கு மாற்றப்பட்ட உடைமைகளின் (assets) நிகர மதிப்பான ரூ. 989 லட்சத்தில், ரூ. 400 லட்சம் பங்கு மூலதன மாகக் கருதப்பட்டது ; எஞ்சிய ரூ. 589 லட்சம் நிறுவனத்தால் வட்டியுடன் திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய கடனாகக் கருதப் பட்டது. இந்த நிறுவனம் செயற்படுவதன் காரணமாக ஏற்படும் நிகர பலன்களைக் கணக்கிட்டு அறிந்துகொள்ளும் முன்னர், இதன் கணக்குகளில் ஆண்டு வட்டிப் பொறுப்புக்கென சுமார் ரூ. 38 லட்சம் சாட்டப்பட்டு வருகிறது.

மூலதன அமைப்பு

இந்த நிறுவனத்திற்கு மாற்றப்பட்ட உடைமைகளின் நிகர மதிப்பில் கணிசமான பகுதி, வட்டியுடன் கூடிய கடனாகக் கருதப் படுவதால், இந்நிறுவனம் நிலையான வட்டியில்லாப் பங்குகள்—கடன் விகிதாச்சார நிலையால் பாதிக்கப்படுகிறது. பெரும் வட்டிச் சுமையைக் குறைக்கும்படியான இந்த நிறுவனத்தின் வேண்டுகோளின் பேரில், அரசு, 5 ஆண்டுகளுக்கு வட்டி செலுத்த வேண்டியதில்லை என்று அறிவித்துள்ளது. இச்சலுகை 1971-72ஆம் ஆண்டு முதற்கொண்டு கிடைக்கிறது.

பொதுவான செயல்முறை

இக்கழகம் ஏற்படுத்தப்பட்டதிலிருந்த இப்பிரிவுகள் செயல் படும் விதம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

	1965–66 (1-12-65 முதல் 31-3-66 வரை).	1966–67	1967–68	1968–69	1969–70	1970–71	1971–72 (31-12-71 வரை 9 மாதங்களுக்கு).
	(ரூபாய் இலட்சத்தில்.)						
a. உற்பத்தி—	1,50·00	4,79·00	4,93·00	5,62·00	6,62·00	7,57·00	5,54·74
b. விற்பனை—	1,62.00	4,17·00	4,19·00	4,83·00	6,61·00	7,46·00	4,94·94
c. ஆதாயம் (+)—	13·68	12·88	..	..	..	3·30	9·06
d. விரயம் (—)—	..	..	30·34	22·41	18·60	..	..

1970-71-ல் செயல்முறை

தொடர்ந்தாற்போல் செவ்வனே செயல்படாத மூன்றாண்டுக் காலத்திற்குப் பின்னர், இந்நிறுவனம் 31-3-71-ல் ஆதாயத்தில் செயல் படும் நிலையை அடைந்தது. 1970-71-ல் இந்நிறுவனம் ரூ. 3.30 லட்சம் நிகர லாபம் பெற்றது. கணக்குகளில் ரூ. 38.41 லட்சம் வட்டித் தொகையும் ரூ. 3.30 லட்சம் தேய்மானத் தொகையும் கணக்கு காட்டப்பட்ட பின்னரே இந்த ஆதாயம் கிடைத்தது என்பது குறிப்பிடத்தக்கது.

1972 மார்ச் 14]

(i) மத்திய பொறியியல் மற்றும் தோல் தொழிற்சாலைக்கான மத்திய ஊதிய வாரியங்களின் பரிவுரைகள் செயல்படுத்தப்பட்டதால் கணிசமான அளவுக்கு ஊதிய உயர்வு (ரூ. 12 லட்சம் அளவில்) ஏற்பட்டும், (ii) மாநில இரண்டாம் சம்பள ஆணைக்குழுவின் பரிவுரைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதால் பணியாளர்களுக்குச் சம்பள விதங்கள் (ரூ. 4.00 லட்சம் அளவில்) அதிகரித்தும், (iii) ரூ. 19.00 இலட்சம் வரையில் வட்டி மற்றும் நிர்வாகச் செலவுகள் உயர்ந்தும்கூட, ஆதாயத்தில் இந்த நிறுவனம் செயல் பட்டது என்றால், முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில், இது ஒரு குறிப்பிடத்தக்க சாதனை எனலாம்.

1969-70-ல் உற்பத்தி, மதிப்பில் ரூ. 1 கோடியுடன் புதிய உயரளவுகளை எட்டியது. 1970-71-லும் இவ்வளர்ச்சி இந்த நிறுவனத்தால் முழுமையாகப் பேணப்பட்டு வந்தது. 1969-70-ல் ரூ. 662 லட்சத்திலிருந்து, 1970-71-ல் ரூ. 757 லட்சமாக, உற்பத்தி மதிப்பு மேற்கொண்டு ரூ. 95 லட்சமளவிற்கு உயர்ந்தது. இந்த முன்னேற்றத்துடன், 1969-70-ல் விற்பனையும் ரூ. 661 லட்சத்திலிருந்து 1970-71-ல் ரூ. 746 லட்சமாக உயர்ந்தது. 1970-71-ம் ஆண்டில் இந்நிறுவனத்தின் உற்பத்தி, விற்பனை ஆகியவற்றின் உயர்வு, எப்போதும் இல்லாத அளவுக்கு உயர்ந்தது.

உற்பத்தியை பல்வகைப்படுத்தல், சில பிரிவுகளை இணைத்தல், சேலத்திலுள்ள 'டான்சி' படிகக்கல் பொடி செய்யும் பிரிவு நிறுவனத்தின் ஆதாயமில்லாத சில பிரிவுகளை மூடிவிடுதல் போன்ற தொழிற் பிரிவுகளின் நுட்பக்கூறு வாய்ந்த நிர்வாகத்திற்காக எடுக்கப்பட்ட பல நடவடிக்கைகளின் விளைவாக இந்த நிறுவனம் 1970-71-ல் வெற்றிகரமாகச் செயல்பட்டு வந்தது.

பகிரங்க ஒப்பந்தப் புள்ளிகளில் பங்குகொண்டது, மற்றும் தீவிர விற்பனை முயற்சிகள் மேற்கொண்டதன் விளைவாக, இந்த நிறுவனம் 1970-71-ல் விற்பனையைப் பெருக்கியது மட்டுமல்லாமல் 1971-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாள் முடிய ரூ. 162 இலட்சம் பெறுமான விற்பனை ஆணைகளைப் பெற்றும் உள்ளது. பொது மக்கள் கண்ணோட்டத்தில் இந்த நிறுவனத்தின் மதிப்பை உயர்த்தக்கூடிய விற்பனை நிலையம் ஒன்று 1970-ம் ஆண்டு சூலைத் திங்கள் கோயம்புத்தூரில் சுறுசுறுப்பான விற்பனையுள்ள பகுதியில் திறக்கப்பட்டது. வேலைநிறைவு பெற்ற பொருட்கள் விற்பனை 1970-71-ல் 24 சதவீதமாகும். முந்தைய ஆண்டில் இது 27 சதவீதமாகும். நிறுவனத்திற்கு இது எந்தவொரு ஆண்டைக் காட்டிலும் மிகவும் குறைவான சாதனையாகும்.

[1972 மார்ச் 14

தொழிற் கருவிக்கூடம்

தொழிற்கருவிக் கூடப்பிரிவு அதன் உற்பத்தி அளவை 1969-70-ம் ஆண்டில் ரூ. 66.62 லட்சத்தில் இருந்து 1970-71-ம் ஆண்டில் ரூ. 91.50 லட்சமாக உயர்த்திக் கொண்டது. இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்திற்காக சென்டார் ராக்கெட்டு (centaur rockets) களுக்குத் தேவைப்படும் அதிநுட்பமான கருவிகளையும் பாதுகாப்புத்துறைக்காக விஜயந்தா டாங்குகளுக்கான இணைப்புப் பகுதிகளையும் தயாரித்ததைத் தவிர தொழிற்கருவிக்கூடம், விசாகப்பட்டினத்தில் பாரத் ஹெவி பிளேட்ஸ் அண்டு வெஸல்ஸ் லிமிடெட், சித்தரஞ்சனில் உள்ள சித்தரஞ்சன் லோகோ ஒர்க்ஸ் போன்ற பெரும் தொழில் நிறுவனங்களிடமிருந்தும் பெரிய தனியார் தொழில் நிறுவனங்களிடமிருந்தும் பல பணிகளை மேற்கொண்டு நிறைவேற்றியது. கிண்டியிலுள்ள அழுத்த அச்சுவார்ப்புப் பிரிவு சென்னையிலுள்ள இந்தியா மீட்டர்ஸ், சென்னையிலுள்ள ஊகாஸ், டி.வி.எஸ்., சென்னை-41 பெருங்குடியிலுள்ள பேசிட் ஆசியா—இண்டர்நேஷனல் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ், போன்ற வாடிக்கையாளர்களின் தேவைகளை நிறைவு செய்கின்றன.

கட்டுமான பணிக்களரிகள்

உற்பத்தியாளர்களிடமிருந்து கிடைத்த மூலப்பொருட்கள் மிகவும் குறைவாக இருந்ததால் கட்டுமான தொகுப்புப் பிரிவுகளின் உற்பத்தியோ முந்தைய ஆண்டைக் காட்டிலும் 1970-71-ல் சற்றுக் குறைவாக இருந்தது. இத்தொகுதியின் உற்பத்தி 1970-71-ல் ரூ. 167 லட்சமாக இருந்தது. ஆனால், இது முந்தைய ஆண்டில் ரூ. 175 லட்சமாக இருந்தது. இந்துஸ்தான் கப்பற்கட்டும் தளம் விசாகப்பட்டினம், கேரள மின்வாரியம், ஆகியவற்றிடமிருந்து பெருமளவுக்கு வழங்கல் ஆணைகளை இப்பிரிவுகள் தொடர்ந்து பெற்று வருகின்றன. மின் அனுப்புக் கம்பங்களைத் தயாரித்து வழங்குவதற்காக ரூ. 38 லட்சம் பெறுமான ஏற்றுமதி ஆணைகளை இந்தப் பிரிவுகள் பெற்றுள்ளன. அனைத்து நாடுகள் தரத்திற்கேற்ப அத்தகைய கம்பங்களைத் தயாரித்து வழங்கும்படி இரண்டாவது முறையாக ஏற்றுமதி ஆணையை இவை பெற்றுள்ளன முதல் ஏற்றுமதி ஆணையின் மதிப்பு ரூ. 62 லட்சமாகும். 31-3-71-ல் இதன் வசமிருந்த ஏற்றுமதி ஆணைகளின் மதிப்பு ரூ. 1.5 கோடி ஆகும்.

1972 மார்ச் 14]

மரச்சாமான்கள் தொழில் பிரிவுகள்

1970-71-ல் மரவேலைப் பிரிவுகள் தொகுதியின் உற்பத்தி மதிப்பு ரூ. 80.52 லட்சமாகி ஒரு சாதனை ஏற்படுத்தப்பட்டது. ஆனால் இது முந்தைய ஆண்டில் 67.25 இலட்சமாக இருந்தது. பாராட்டுக்குரிய தரமுயர்ந்த மரச்சாமான்களை இப்பிரிவுகள் தயாரிக்கின்றன. நாகரிகமான மேசை, நாற்காலிகள் சாமான்களுக்குள்ள கிராக்கியை ஈடுகட்ட கிண்டியிலுள்ள மரவேலைப் பிரிவு விரிவுப்படுத்தப் படுவதற்காக ஒப்புதல் அளிக்கப்பட்டு, இப்பிரிவு 1971 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் அதிக உற்பத்தியளவை அடைந்தது.

தோல்பொருள் பிரிவுகள்.

தோல்பொருள் பிரிவுகள் தொகுதியில் 1970-71-ல் அடையப் பெற்ற உற்பத்தியின் மதிப்பு ரூ. 73.44 லட்சமாகும். முந்தைய ஆண்டில் இது ரூ. 78.38 லட்சமாக இருந்தது. சந்தையில் பதப் படுத்தாத மேல்தோலும் உரிவைகளும் அதிகம் கிடைக்காததால் 1970-71-ல் தோல் தொழிலில் மந்த நிலை ஏற்பட்டதாலும், விண்ணமங்கலத்திலுள்ள 'டான்சி' தோல் பதனிடும் தொழிற்சாலையில் இறுதி வேலைப்பாடுகள் செய்யும் திறன் இல்லாத காரணத்தாலும். தோல்பொருள்கள் தயாரிப்புத் தொழிலில் உற்பத்தித் சிறிது குறைந்தது. 'டான்சி' தோல் பதனிடும் தொழிற்சாலையின் இறுதி வேலைப்பாடுகள் திறனை மேம்படுத்துவதற்காக மேற்பரப்பு மெருகிடும் இயந்திரமொன்று, மேற்கு ஜெர்மனியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு, 1970-71 ஆம் ஆண்டு கடைசியில் விண்ணமங்கலத்தில் நிறுவப்பட்டு, உற்பத்தியும் தொடங்கியது. இந்த இயந்திரம் நிறுவப்பட்டதால், இப்பிரிவில் இறுதி வேலைப் பாடுகள் செய்யப்பட்ட தோலின் உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரித்து ஒரு சாதனையை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வார்ப்படப் பிரிவுகள்.

வார்ப்படச் சாதனப் பிரிவுகளைப் பொறுத்த வரையில், இந்நிறுவனம் பொதுச் சுகாதாரத் துறையின் பெரும் தேவைகளை நிறைவு செய்யும் பொறுப்பை வெற்றிகரமாக நிறைவேற்றி யுள்ளது. உற்பத்தி முறைகளைச் செம்மையாக்குவதுடன் உற்பத்தி ஊக்கத் திட்டமும் இப்பிரிவுகளில் புகுத்தப்பட்டது. 1970-71-ல்

அடைந்த சிறப்பான உற்பத்தி அதிகரிப்பே, இந்நிறுவனம், இந்த முயற்சிகளினால் அடைந்த வெற்றியைப் பிரதிபலிக்கிறது. 1969-70-ல் அடைந்த உற்பத்தியின் மதிப்பு ரூ. 32.28 லட்சமாகும். இது இப்பிரிவுகளின் உற்பத்தியில் அப்போதைய மகத்தான சாதனையாகும். ஆனால், 1970-71-ல் இதன் உற்பத்தி ரூ. 62.23 லட்சமாக உயர்ந்தது. அதாவது உற்பத்தி உயர்வு 93 சதவீதமாகும்.

பொறியியல் பணிக்களரிகள்.

பொதுநோக்குப் பொறியியல் பணிக்களரிகளில், உற்பத்தியளவு 1969-70-ல் ரூ. 1,00.46 லட்சத்திலிருந்து 1970-71-ல் ரூ. 1,38.32 லட்சமாக உயர்ந்துள்ளது. தொடர்ந்து இருந்து வரும் போட்டிக்கிடையில் அடைந்த உயர்வு இது. மூலப்பொருட்கள் பற்றாக் குறையே இப்பணிக்களரிகள் மேலும் உற்பத்தியைப் பெருக்க முடியாமல் முட்டுக்கட்டையாக இருந்தது.

1969-70-ல 31 பிரிவுகளில் கிடைத்ததைக் காட்டிலும், 1970-71-ல் 37 பிரிவுகளில் ஆதாயம் கிட்டியது.

புதிய திட்டங்கள்

(i) மதுரை :

தரமான, தரம் குறைந்த, மற்றும் சிறப்பு மேசை, நாற்காலி போன்ற மரச் சாமான்களுக்கான கிராக்கியை ஈடுகட்ட, மதுரை கப்பலூரிலுள்ள தொழிற்பேட்டையில், 'டான்சி' நிறுவனத்தால் புதிய பிரிவொன்று ஏற்படுத்தப்படுகிறது. இதற்கான மனை ஒதுக்கப்பட்டுள்ளது. இயந்திர விற்பனையாளர்களிடம் விற்பனைக்கான ஆணைகளும் வழங்கப்பட்டுள்ளன. ஒரு சில திங்கள் காலத்தில் இப்பிரிவு உற்பத்தியைத் தொடங்கும்.

(ii) 'மோபெட்' தயாரிப்புத் திட்டம் :

கிண்டியிலுள்ள சில பிரிவுகளில் கிடைக்கும் அதிகப்படியான உற்பத்தியைப் பயன்படுத்திக்கொள்ளவும், இப்பிரிவுகளுக்கான நிலையான எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்ளவும், 'டான்சி'

1972 மார்ச் 14]

நிறுவனம் மோபெட்டுகளின் மாதிரி உற்பத்தியை மேற்கொண்டுள்ளது. மோபெடுகள் 9 கொண்ட ஒரு தொகுதி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மோபெட்டுகள் தரமுள்ளதாக்கப்படுவதற்கும் பெருமளவு உற்பத்தி செய்யப்படுவதற்கும் முன்னோடியாக, தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. முடிவுகள் மனநிறைவளிக்கக் கூடியனவாக உள்ளன. வணிக முறையில் மோபெட்டுகள் தயாரிப்பதற்கான விவரங்களும், திட்டங்களும் தயாரிக்கப்பட்டு வருகின்றன. விரைவில் இறுதி முடிவு எடுக்கப்படும்.

(ii) பிளாஸ்டிக் அச்சுகள் தயாரிப்புக்கான திட்டம்:

'சிபெட் (Cept)' ஆலோசனை மற்றும் உதவியுடன் நாட்டில் பெருமளவுக்குத் தேவைப்படும் பிளாஸ்டிக் அச்சுகள் தயாரிப்புக்கான புதிய தொழிற்சாலையொன்றை அமைப்பதற்கான திட்டமொன்றை 'டான்சி' உருவாக்கி வருகிறது.

பி.வி.சி. (P. V. C.) குழாய்கள் :

பி.வி.சி. குழாய்கள் தயாரிப்புக்கான தொழிற்சாலை அமைக்கும் திட்டமொன்று அரசின் பரிசீலனையிலுள்ளது.

சம்பளம், ஊதியம் திருத்தியமைக்கப்படுதல்.

இந்நிறுவனம் அதன் தொழிலாளர் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. தமிழ் நாடு அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இரண்டாவது சம்பளக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் திருத்தியமைக்கப்பட்ட சம்பளங்களின் விகிதங்களுக்கு நிகரான வீதங்களில் இந்நிறுவனத்தின் அதிகாரிகள், பணியாளர்கள் ஆகியோரின் சம்பளங்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. மத்திய பொறியியல்—தோல் தொழிற்சாலைக்கான மத்திய ஊதிய வாரியங்களின் பரிந்துரைகளைச் செயல்படுத்துவது தொடர்பாக, இந்நிறுவனம் அதன் பிரிவுகளின் தொழிலாளர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தியது. மேலும், தனிப்பட்ட ஒவ்வொரு பிரிவின் தொழிலாளர்களுடனும் ஒப்பந்தம் செய்து கொண்டது. மத்திய ஊதிய வாரியங்களின் பரிந்துரைகள் பொறியியல்—தோல் தொழிற்சாலைகளுக்கு மட்டுமே பொருந்தக் கூடியவையாகவும், பொறியியல் தொழிற்சாலைகளைப் பொறுத்த வரையில், 50 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளிகள்

[1972 மார்ச் 14

பணி புரியும் தொழிற்சாலைகளுக்கு மட்டுமே பொருந்தக் கூடியன வாகவும் இருந்தபோதிலும், நல்லெண்ண நடவடிக்கையாக, இந் நிறுவனம், ஊதியம் திருத்தியமைக்கப்படும் சலுகையை எல்லாப் பணியாளர்களுக்கும் நீட்டித்துள்ளது. அதாவது, இச்சலுகை 50 பேருக்கு குறைவாகப் பணிபுரியும் பொறியியல் பிரிவுத் தொழிலாளர்களுக்கும் தச்சு வேலைப் பிரிவு போன்ற பொறியியல் அல்லாத பிரிவுகளின் தொழிலாளர்களுக்கும் அளிக்கப்படுகிறது. ஊதியம் திருத்தியமைக்கப்படுவது குறித்து தொழிலாளர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டதன் மேல் தொழிலாளர்களுக்காக இந் நிறுவனம் அதன் ஊதிய அமைப்பு ஒன்றை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிறுவனம் 1970-71-ல் 6,800 பேருக்கு வேலைவாய்ப்பு அளித்தது.

வெவ்வேறு பிரிவுகளில் 1970-71-ல் அடைந்த உற்பத்தி மதிப்பைக் காட்டும் அறிக்கை, 1971-72-ல் எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி, 1972-73-க்கான திட்ட இலக்கு ஆகியவை இந்த ஆய்வுரையின் இணைப்பு X-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

1970-71-ல் திட்டப் பணிகளைச் செயல்படுத்த அரசிடமிருந்து கடனுதவி ரூ. 25 லட்சம் பெறப்பட்டது. இதே காரியத்துக்காக, 1971-72-க்காக ரூ. 25 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1972-73 ஆம் ஆண்டுக்காக ரூ. 25 லட்சம் ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1972 மார்ச் 14]

தமிழ் நாடு சிறுதொழில் மேம்பாட்டு நிறுவனம்

தமிழ் நாடு சிறுதொழில்மேம்பாட்டு நிறுவனத்தின் முக்கிய நோக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

தமிழ் நாடு சிறுதொழில் பிரிவுகளுக்குத் தேவையான இன்றியமையாத மூலப்பொருட்களை திறம்படக் கொள்முதல் செய்து நியாயமான அளவில் பங்கிடு செய்தல் ;

(2) சிறு தொழில்களுக்குத் தேவையான இயந்திரங்களை தவணைக் கொள்முதல் அடிப்படையில் வழங்கல்.

(3) பணிக்கொட்டகைகளைக் கட்டி, அவைகளைத் தவணைக் கொள்முதல் அடிப்படையில் தொழிற்சாலைகளுக்குக் கிடைக்கச் செய்தல்.

(4) சிறு தொழிற்சாலைகளை அமைக்க விரும்பும் தொழில் முனைவர்களுக்கு தொழில்நுட்ப ஆலோசனை அளித்தல் மற்றும் புதிய திட்டங்களுக்கான தொழில்நுட்பச் சாத்தியக் கூறு அறிக்கைகளைத் தயாரித்தல்.

(5) சிறு தொழில்களுக்கான இறக்குமதி உரிமங்களை ஒருங் கிணைத்தல் மற்றும் அவற்றைக்கொண்டு பெருமளவில் இறக்குமதி செய்தல்.

(6) சிறு தொழில்களுக்கான விற்பனை வசதிகள் செய்தல் மற்றும்.

(7) ஏற்றுமதியைப் பெருக்குதல்.

இந்நிறுவனம் 1970ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23-ல் பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனமாக அமைக்கப்பட்டு, பின்னர் 1971-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 20-ம் நாள் பொறுப்பு வரையறுக்கப்பட்ட பொது நிறுவனமாக மாற்றியமைக்கப் பட்டது. இந்நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 2 கோடியாகும். இத்தொகை முழுதும் தமிழ் நாடு அரசால் வழங்கப்பட்டது.

மூலப் பொருட்கள்

இந்நிறுவனம் 1970-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 14-ம் நாள் முதற்கொண்டு அதன் முறையான பணிகளைத் தொடங்கியது. அப்பொழுது இந்நிறுவனம் தொழில்-வணிக இயக்குநரகத்தி லிருந்து மூன்று மூலப்பொருள் கிடங்குகளை மேற்கொண்டது.

[1972 மார்ச் 14

14-10-70 முதற்கொண்டு 31-3-71 வரையிலான 5½ திங்கள் கால அளவில் இந்நிறுவனத்தால் கொள்முதல் செய்யப்பட்டு பங்கீடு செய்யப்பட்ட இரும்பு, உருக்குப் பொருட்களின் மதிப்பு ரூ. 106.53 லட்சமாகும். இந்த கிடங்குகளின் எந்தவொரு நிகரான கால அளவின் கடந்த கால விற்பனை மதிப்பைக் காட்டிலும் இது மிகவும் அதிகமானதாகும். இந்நிறுவனம், தகடுகள் விற்பனை (தொழில்—வணிக இயக்குநகரகத்தால் கவனிக்கப்படுவது) மட்டுமன்றி தட்டுகள் மற்றும் கட்டுமானப் பொருட்கள் ஆகியவற்றிலும் விற்பனை செய்து வருகிறது. 1-4-71 முதற்கொண்டு 31-1-72 வரையிலான கால அளவில் செய்த விற்பனையின் மதிப்பு ரூ. 288 லட்சமாகும்.

இரும்பு, உருக்கு உற்பத்தி முன்னேற்றத் திட்டங்களுக்காக இந்நிறுவனம் இயன்ற நடவடிக்கைகளையெல்லாம் எடுத்துள்ளது. தட்டையாக இல்லாத உருக்குப் பொருட்களுக்கு 28,500 டன், மற்றும் தட்டையான உருக்குப் பொருட்களுக்கு 15,500 டன் அளவிற்கு தயாரிப்பாளர்களின் பணி ஆணைகளை இந்நிறுவனம் பெற்றுள்ளது.

பொறுப்பேற்று நடத்தும் அதிகாரிகள் மூலமாக முன்னுரிமை விண்ணப்பங்கள் முறையாகப் பெறப்படுகின்றன. எனினும், உருக்கு முன்னுரிமைக் குழுவால் குறிப்பிடப்பட்டுள்ள முன்னுரிமைகள், விண்ணப்பித்துக் கொண்ட அளவைக் காட்டிலும் மிகக்குறைவானதாகும். இந்நிறுவனம் இம்மாநிலத்திற்காக மூலப்பொருள் ஒதுக்கீட்டை அதிகமாகப் பெற, அதனாலியன்றவரை தொடர்ந்து முயற்சி செய்து கொண்டிருக்கிறது.

மேற்கண்டவாறு, தயாரிப்பாளர்களிடமிருந்து கிடைக்கப் பெறும் பொருட்களுக்குக் கூடுதலாக தயாரிப்பாளர்களின் உள்ளூர் சேமிப்புக் கூடங்களிலிருந்தும் ஒதுக்கீடுகளைப் பெற்று வந்துள்ளது. இந்நிறுவனத்தால் 1-4-1971 முதல் 1971 அக்டோபர் முடிய கிடைக்கப்பெற்ற அளவு 4,400 டன் ஆகும்.

கட்டுமானத்துக்குப் பயன்படும் இரும்பு, உருக்குப் பொருட்கள் உண்மையிலேயே தேவையுள்ள தொழிலதிபர்களுக்குக் கிடைக்கச் செய்வதை உறுதிப்படுத்தும் பொருட்டு இந்நிறுவனம், பட்டாலக் கணக்கர்களிடமிருந்து கடந்த காலக் கொள்முதல் குறித்த சான்றிதழ்களை அனுப்பியுள்ள சிறு தொழிற்சாலைகளுக்கு இரும்பு, உருக்கு பகிர்ந்தளிக்க வழி வகுத்துள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1972 மார்ச் 14]

இறக்குமதி செய்யப்பட்ட துருப்பிடிக்காத உருக்கு

1970-71-ம் ஆண்டில் கனிவள, உலோக வணிகக் கழகத்தின் மூலமாக 130 மெட்ரிக் டன் அளவுக்கு இறக்குமதி செய்யப்பட்ட துருப்பிடிக்காத உருக்குத் தகடுகளை இந்த நிறுவனம் பெற்றது. அதில் 124 மெட்ரிக் டன் அளவுக்கு மருத்துவமனைச் சாதனங்கள் முதலியவற்றைத் தயாரிப்போருக்கு வழங்கப்பட்டது.

இறைச்சிக் கொழுப்பு.

அரசு வணிகக் கழகத்தின் ஒத்துழைப்புடன், இந்நிறுவனம், சோப்புத் தொழிலுக்குத் தேவைப்படும் இறைச்சிக் கொழுப்புப் பங்கீட்டை 1971-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதற்கொண்டு மேற்கொண்டுள்ளது. தொழில்-வணிக இயக்குநரிடத்திடமிருந்து ஒதுக்கீடுகளையொட்டி இறைச்சிக் கொழுப்பு, வாடிக்கையாளர்களுக்குப் பங்கிட்டு வழங்கப்படுகிறது. 1971-ம் ஆண்டு நவம்பர் திங்கள் முடிய 355 டன் மொத்த அளவு கொண்ட 3 ஒப்படைகள் (மதிப்பு ரூ. 9.58 லட்சம்) இந்நிறுவனத்தால் பங்கீடு செய்யப் பட்டது. மேலும், 898 டன் மொத்த அளவு கொண்ட இரண்டு ஒப்படைகள் (மதிப்பு ரூ. 26.90 லட்சம்) பங்கீடு செய்ய எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

பிற மூலப்பொருட்கள்.

இம் மாநிலத்திலுள்ள பிற தொழில் துறைக்குத் தேவையான இன்றியமையாத பிற மூலப்பொருட்களைக் கொள்முதல் செய்யவும், பங்கீடு செய்யவும், இந்நிறுவனத்தால் முயற்சிகள் செய்யப்படுகின்றன. இந்நிறுவனத்தின் முறையீட்டின் பேரில், கூடுதலாக 500 டன் தீக்குச்சி மெழுகு, 850 டன் பாரஃபின் மெழுகு ஆகியவற்றை, இந்நிறுவனம் பங்கீடு செய்வது இயலும் வகையில், அதற்கு வழங்குமாறு அஸ்ஸாம் எண்ணெய் நிறுவனத்துக்கு ஆணையிடும்படி மாநில அரசு மத்திய அரசுக்கு எழுதித் தெரிவித்துள்ளது. மாநில ஒதுக்கீட்டை, தீக்குச்சி மெழுகு பொறுத்தவரையில் 2,000 டன்னிலிருந்து 3,500 டன்னாகவும், பாரஃபின் மெழுகு பொறுத்தவரையில் 1,000 டன்னிலிருந்து 4,000 டன்னாகவும், உயர்த்த வேண்டுமென்றும் மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இம்மாநிலத்திலுள்ள தீக்குச்சித் தயாரிப்பாளர்களுக்குத் தேவையான நீலவண்ண தீப்பெட்டித் தாளைப் பெறுவதற்காக, இம் மாநிலத்திலும், வெளி மாநிலங்களிலும் உள்ள தயாரிப்பாளர் களுடன் இந்நிறுவனம் பேச்சு வார்த்தைகள் நடத்தி வருகின்றது.

இந்நிறுவனத்தின் வேண்டுகோளின் பேரில், சிறு தொழில் பிரிவுகளுக்கு பங்கிடுவது இந்நிறுவனத்திற்கு இயலும் வகையில், அதற்கு திங்களொன்றுக்கு 500 மெட்ரிக் (காஸ்டிக் சோடா) சோடா காரம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்று மாநில அரசு கார உப்பு தயாரிப்பாளர்களைக் கேட்டுள்ளது. இது குறித்து இந்நிறுவனம் தொடர்ந்து கவனித்து வருகிறது.

இந்நிறுவனத்தின் மூலமாகப் பங்கீடு செய்யப்படுவதற்காக சோடா சாம்பல் (சோடா ஆஷ்) ஒதுக்கித் தருமாறு பிற மாநிலங் களிலுள்ள மூன்று தயாரிப்பாளர்களை இந்த நிறுவனம் எழுதி கேட்டுள்ளது.

கொப்பரை, நறுமணத் தைலம், ரொட்டிப் பொருள்கள், மற்றும் வடிசாலைக்கான செடிகள், காரீயகம், என்ட்ரின், புரோலிபுரோ பிலியன், செம்பு, துத்தநாகம், நிக்கல் போன்ற பிற ஒருசில மூலப் பொருட்களின் பங்கீட்டை மேற்கொள்வதற்காக இந்திய (மாநில) வணிகக் கழகத்துடனும், கனிப்பொருள்—வணிகக் கழகத்துடனும் இந்திய சிறுதொழில் கழகத்தின் ஆதரவில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தவணைக் கொள்முதல் முறையில் இயந்திரங்கள் வழங்குதல்.

தவணைக்கொள்முதல் முறையில் இயந்திரங்கள் வழங்குதல், இந்நிறுவனத்திற்காகப் பணிக் கொட்டகைகள் கட்டுதல் ஆகிய இந்நிறுவனத்தின் திட்டங்களுக்கு நிதி வாயில்கள் பெறுவதற்காக இந்திய ரிசர்வ் வங்கியின் அனுமதியுடன், இந்நிறுவனம் 1971 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் ரூ. 50 லட்சத்திற்கான 12 ஆண்டு பொதுக் கடனைத் திரட்ட ஏற்பாடு செய்தது. இந் நிறுவனம் மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக, இக் கடனுக்கு அளவுக்குமதிகமாகவே தொகை வழங்கப்பட்டது. இந்நிறுவனத்திற்கு ரூ. 55 லட்சம் அளவிற்கு (அனுமதிக்கத்தக்க உயர்ந்த அளவு) நிதிகள் கிடைத்தன.

இயந்திரங்களைத் தவணைக் கொள்முதல் திட்டத்தின்கீழ் வழங்குவது 1971-ம் ஆண்டு மார்ச் திங்களில் தொடங்கப்பட்டது. சிட்கோ (SIDCO) வாரியத்தால் ஏற்பளிக்கப்பட்ட திட்டத்தின்படி

ரூ. 500-க்குக் குறையாமலும் ரூ. 1 லட்சத்திற்கு மேற்படாமலும் விலையுள்ள உள்நாட்டு இயந்திரங்கள் வாங்க நிதியுதவி அளிக்கப் படுகிறது. ஒருவருக்கு வழங்கப்படும் உயர்ந்த அளவு நிதியுதவித் தொகை ரூ. 3 லட்சமாக வரையறுக்கப்பட்டுள்ளது. உதவித் தொகை ரூ. 25,000-க்குக் குறைவாக இருந்தால் 5 சத விதம் தொகை வசூலிக்கப்படுகிறது. உதவித்தொகை ரூ. 25,000-க்கு மேற்பட்டிருந் தால் 10 சத விதம் வசூலிக்கப்படுகிறது. இந்நிறுவனம் 3 சத விதம் பணிக்கட்டணம் விதிக்கின்றது. 8 சதவீத வட்டி (நிறுவனத்தால் வாங்கப்படும் கடன் மீதான வட்டியைக் காட்டிலும் இரண்டு சத விதம் அதிகம்) விதிக்கப்படுகிறது. கடன் தீர்த்தல் நிறுத்தி வைப்புக் கால அளவாகிய ஓர் ஆண்டு உட்பட, கடனைச் செலுத்து வதற்கான உயர்ந்த கால அளவு 7 ஆண்டுகளென்று இவ்வாரியத் தால் முடிவு செய்யப்பட்டுள்ளது. 1971 நவம்பர் முடிய இந்நிறு வனத்திற்கு ரூ. 218 லட்சம் மதிப்புள்ள 381 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. 72 தொழில் முனைவர்களுக்கு ரூ. 27.23 லட்சம் மதிப்பு அளவுக்கு ஏற்கனவே ஒப்பளிப்புகள் வழங்கப் பட்டுள்ளன. சரிபார்த்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் 51 விண்ணப்பங்கள் மறுக்கப்பட்டுள்ளன. தேவையான விவரங்கள் கோரி 19 விண்ணப்பங்கள் திருப்பியனுப்பப்பட்டன. இந்நிறுவனத்தின் தவணைக் கொள்முதல் திட்டத்திற்காக அரசும் இக் கழகத்துக்கு ரூ. 20 இலட்சம் ஒதுக்கியுள்ளது. படித்த வேலை யற்றவர்களுக்கு உதவியளிக்க இது பயன்படுத்தப்படும். இத் தொகை படித்து வேலையற்றிருப்பவர்களுக்கு உதவியளிப்பதற்காக இந்த அரசு பெற்ற மத்திய உதவியின் ஒரு பகுதியே ஆகும். இத்தொகை 1972-ம் ஆண்டு மார்ச் திங்களுக்கு முன்னர் பயன் படுத்தப்படவேண்டும்.

தவணைக் கொள்முதல் திட்டத்திற்காக, பின்தங்கிய பகுதிகளி லிருந்து தொழில் முனைவர்களை ஈர்க்க தீவிரத் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இயந்திரங்களைத் தவணைக் கொள்முதல் முறையில் வாங்குவது குறித்த மாநில, மத்திய திட்டங்களை ஒருங்கிணைப்பதற்காக தேசீய சிறுதொழில் கழகத்துடன் பேச்சு வார்த்தைகள் நடந்து வருகின்றன.

பணிக்கொட்டகைகளைக் கட்டுதல்

இந்நிறுவனத்திடம் இரண்டு திட்டங்களுள்ளன. (1) இதனுடைய சொந்த நிலத்தில் பணிக்கொட்டகைளைக் கட்டி அவற்றைத் தவணைக் கொள்முதல் முறையில் தொழில் முனைவர்களுக்கு ஒதுக்குதல். (2) தங்களது சொந்த நிலத்தில் பணிக் கொட்டகைகளைக் கட்டிக் கொள்ள தொழில் முனைவர்களுக்கு உதவி.

பணிக்கொட்டகைகளை இந்நிறுவனத்தின் சொந்த நிலத்தில் கட்டும் முதல் திட்டத்தின்கீழ், இந்நிறுவனம் அம்பத்தூரிலுள்ள சீர் செய்த மனைகள் பேட்டைப்பகுதியில் 35 ஏக்கர் அரசு நிலத்தை மேற்கொண்டுள்ளது. இப்பகுதியில் பணிக்கொட்டகைகள் கட்டுவதற்காக, 1971 ஆம் ஆண்டு நவம்பர் வரையிலும் இந் நிறுவனம் 30 விண்ணப்பங்கள் பெற்றுள்ளது.

முதற்கட்டமாக, 16 பணிக்கொட்டகைகள் (ரூ. 6.56 லட்சம் மதிப்புள்ளது) கட்ட இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது. அந்தந்த விண்ணப்பதாரர்களின் தேவைகளுக்கேற்ப இக்கட்டிடங்கள் கட்டப்படும். ஆனால், இந்த நிறுவனம் மேற்கொண்டுள்ள பொதுத் தர அளவுகளையொட்டி அவை இருக்கும்.

தங்கள் சொந்த நிலத்தில் பணிக்கொட்டகைகள் கட்டிக் கொள்ள தொழில் முனைவர்களுக்கு உதவியளிக்கும் திட்டத்தின் கீழ், இந்நிறுவனம் இதுவரை 43 விண்ணப்பங்களைப் பெற்றுள்ளது. 1971, நவம்பர் முடிய 4 நேர்வுகளில் உதவிக்கு ரூ. 1.93 லட்சம் மதிப்புக்கு ஒப்பளிப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

வணிக வங்கிகளின் ஒத்துழைப்புடன் மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் துணைத் தொழிற்பேட்டைகளை நிறுவும் வாய்ப்புக் கூறுகள் பற்றி இந்நிறுவனம் ஆய்வு செய்து வருகிறது. ஆய்விலுள்ள துணைத் தொழிற்பேட்டைகள் கீழே தரப் பட்டுள்ளன :—

(1) சாகுபுரத்திலும், அதைச் சுற்றிலும், மற்றும் தூத்துக் குடியிலும் பி.வி.சி. (P.V.C.) அடிப்படைத் தொழில்கள்.

(2) அம்பத்தூரில் மோட்டார், மின் பகுதிகள் பிரிவுகள்.

(3) கோயம்புத்தூரிலும் கோயம்புத்தூரைச் சுற்றிலும் பஞ்சாலை இயந்திரங்களின் உதிரிப்பகுதிகள் மற்றும் இணைப்புப் பகுதிகள்.

1972 மார்ச் 14]

ஏற்றுமதிகள்

தொழில்-வணிக இயக்குநரகத்தில் அமைக்கப்பட்ட ஏற்றுமதி வளர்ச்சிக்குழு, 1—6—1971 முதற்கொண்டு இந்நிறுவனத்திற்கு மாற்றப்பட்டது. இந்நிறுவனத்திற்காக மேம்பாட்டு அதிகாரி ஒருவர் 27—9—1971 முதற்கொண்டு நியமிக்கப்பட்டிருக்கிறார்.

கீழ்க்கண்ட பொறியியல் சாதனங்களின் ஏற்றுமதிக்கான சாத்தியக் கூறுகள் பற்றி இந்நிறுவனம் ஆய்வு செய்து வருகிறது :—

(1) மின்சார மோட்டார்கள்.

(2) விசையில் ஓடும் பம்புகள்.

(3) டீசல் எஞ்சின்கள்.

ஜப்பான் கைத்தறி இறக்குமதியாளர் ஒருவரிடமிருந்து ரூ. 12,000 மதிப்புள்ள மாதிரி சாதனங்கள் வழங்கல் குறித்த ஆணைகள் பெறப்பட்டு கோ-ஆப்டெக்ஸ் சங்கத்திற்கு அனுப்பப் பட்டுள்ளன. இச்சங்கம் அப்பொருட்களை விரைவில் அனுப்பும்.

தொழில்நுட்ப சாத்தியக்கூறு குறித்த அறிக்கைகள்.

இம் மாநிலத்தில் சிறு தொழில்களாக அமைக்கப்படவிருக்கும் சிறந்த திட்டங்கள் பற்றித் தொழில் நுட்ப சாத்தியக் கூறு அறிக்கைகளைத் தயாரிக்கப் பெறுவதற்கான செயற்குறிப்பு ஒன்று இந்நிறுவனத்திடம் உள்ளது. இத்திட்டங்களைக் கண்டறியவும், இத்திட்டங்களுக்கான சாத்தியக்கூறு அறிக்கைகளைத் தயாரித்துக் கொடுக்கும்படியும் ஆலோசகர்கள் சிலருடன் பேச்சு வார்த்தைகள் தொடங்கப்பட்டுள்ளன. பி.வி.சி. அடிப்படையில் அமைந்த தொழில்களின் தொழில் நுட்ப சாத்தியக் கூறு குறித்த அறிக்கைகளைத் தயாரிக்க, நிபுணர் குழுவொன்றை இந்நிறுவனம் அமைத்துள்ளது. சிறு தொழில்கள் பணிக் கழகத்தின் ஆலோசனையுடன் பஞ்சாலைக்கான உதிரிப் பாகங்கள், இணைப்புக் கான பாகங்கள் ஆகியவை தயாரிக்கும் துணைத் தொழில்களுக் கான தொழில்நுட்ப சாத்தியக் கூறு குறித்த அறிக்கைகளின் மீது முடிவு எடுக்கின்றது.

விற்பனை உறுதி.

அரசுத் துறைகளுக்குத் தேவைப்படும் சில பொருட்களை வாங்குவதில் சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் உதவியை பயன்படுத்திக் கொள்ள அரசு கொள்கையளவில் ஒப்புக் கொண்டுள்ளது. இதன்மூலம் மாநிலத்திலுள்ள சிறு அளவு

தொழில்கள், தம்முடைய உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய உதவ முடியும். மக்கள் நல்வாழ்வுத் துறையின் கொள்முதல்களை இந்நிறுவனத்தின் வாயிலாகவே செய்வது குறித்து ஆய்வு செய்யப் படுகிறது.

சிறு தொழில்களுக்கு அரசு நிதி உதவி.

தொழில்கள்-வாணிகத் துறை இயக்குநரகத்தின் மூலம் தொழில்களுக்குத் தற்போது அளித்து வரும் நிதியுதவியைத் தொழில்களுக்கு அரசு உதவியளித்தல் சட்டத்தின்கீழ் இந்நிறுவனத்திடம் ஒப்படைக்க அண்மையில் அரசு முடிவு செய்துள்ளது. இது மாநிலத்தில் பதிவு செய்யப்பெற்ற சிறு தொழில்களுக்கு நிதியுதவி அளிப்பது தொடர்பாக 1-4-1972-லிருந்து செயலுக்கு வரும். மாவட்டங்களிலிருந்து பெறப்படும் விண்ணப்பங்களைப் பரிசீலிப்பதற்காக மாவட்டக் குழுக்களை அமைக்கவும் அரசு முடிவு செய்துள்ளது. அதனால் மாவட்டங்களிலுள்ள தொழில் முனைவர்களுக்கு விரைவில் உதவி அளிக்க முடியும்.

முறையான நிறுவன அமைப்பற்ற துறைத் தொழில்கள் பற்றிய மதிப்பீட்டு ஆய்வு.

தமிழ்நாட்டிலுள்ள முறையான நிறுவன அமைப்பற்ற துறையில் (unorganised sector) உள்ள தொழில்கள் பற்றிய மதிப்பீட்டு ஆய்வு ஒன்றை மத்திய அரசின் உதவியுடன் இந்நிறுவனம் மேற்கொண்டுள்ளது. இவ்வாய்வின் கீழ் ஏறத்தாழ 28,000 தொழிற் பிரிவுகள் வருகின்றன. இப்பணி 1-7-71-ல் துவக்கப் பட்டது ; அது ஓர் ஆண்டிற்குள் முடிவடையும் என எதிர்ப் பார்க்கப்படுகிறது. 1971, நவம்பர் திங்கள்முடிய 8,118 பிரிவுகளைப் பற்றிய ஆய்வு நடந்துள்ளது.

முதலாண்டில் கிடைத்த பலன்கள்.

31-3-71 நாளுடன் முடிந்த முதல் 5½ மாதங்களில், இந்நிறுவனத்தின் மொத்த வாணிகத் தொகை ரூ. 106.00 லட்சமாகும். இந்நிறுவனத்திற்குக் கிடைத்த நிகர ஆதாயம் ரூ. 2.55 லட்சமாகும். வருமானவரிக்காக ரூ. 1.40 லட்சம் அளவிற்கு ஒதுக்கப் பட்ட பின்னர், நிறுவனத்தின் செலுத்தப்பெற்ற பங்கு மூலதனமான ரூ. 50 லட்சத்திற்கு 2 சதவீதம் ஆதாய பங்குத் தொகையை இந்நிறுவனம் அறிவித்துள்ளது.

1972 மார்ச் 14]

இணைப்பு I.

திட்ட வேலைகளுக்குச் செய்த செலவைக் காட்டும் விவர அறிக்கை.

வளர்ச்சித் திட்டத்தின் தலைப்பு.	நான்காவது திட்டத்தின் கீழ் முதலீடு.	1970–71-ம் ஆண்டுச் செலவு.	1971–72-ஆம் ஆண்டில் செலவு (எதிர்பார்த்தது).
(1)	(2)	(3)	(4)
		(ரூபாய் லட்சத்தில்.)	
மாநிலத் திட்டங்கள்—			
I. தொழில்களுக்கு நிதி வழங்கல்.	275·00	36·67	45·00
II. கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும்—			
(1) சிறு தொழில்கள் ..	555·19	18·23	33·62
(2) தொழிற் பேட்டைகள் ..	474·00	30·52	32·57
(3) சீர் செய்த மனைகள் ..	400·00	22·51	25·09
(4) கைப்பணிகள்	54·99	1·63	5·43
(5) பட்டுப் பூச்சி வளர்ப்பு ..	76·11	8·46	9·28
(6) கயிற்றுத் தொழில் ..	..	..	..
(7) கிராமப் பணி நிலையங்கள், ஆதாரக் கிராமப் பணி நிலையங்கள்.	2·25	0·82	1·29
மொத்தம் I, II ..	1,837·54	118·84	152·28
மத்திய அரசு ஆதரவு பெறும் திட்டங்கள்—			
(8) கிராமத் தொழில் திட்டங்கள்.	290·00	25·21	28·44

குறிப்புகள்.—(1) தொழில் கூட்டுறவுத் திட்டங்கள் பற்றிய செலவுப் புள்ளிவிவரங்கள் XVI-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன

(2) "சிறிய அளவுத் தொழில்கள்" என்ற தலைப்பின்கீழ் உள்ள புள்ளி விவரங்களில் 'டான்சி' 'சிட்கோ' ஆகியவற்றுக்கு வழங்கப்பட்ட கடன்கள் அடங்கா.

இணைப்பு II.

தொழில் துறையின் சிறு தொழில் பிரிவுகளின் விவரங்கள்—மாவட்ட வாரியாக.

தொடர் எண். (1)	சிறு தொழில்கள் (2)	திட்டச் செலவு. (3) (ரூபாய் லட்சத்தில்.)
	கன்னியாகுமரி மாவட்டம்	
1	தொழில் பண்ணை, மார்த்தாண்டம்	2·92
2	தொழில் பண்ணை, நாகர்கோயில்	7·31
3	"டான்சி" மரம் அறுக்கும் ஆலை, நாகர்கோயில்	2·33
	திருநெல்வேலி மாவட்டம்.	
1	"டான்சி" தச்சுப் பட்டறை, பத்தமடை	0·77
2	தச்சுப் பட்டறை, கருமான் பட்டறை, பேட்டை	8·10
3	தொழில் பண்ணை, பேட்டை	6·16
4	வார்ப்பட பட்டறை, பேட்டை	8·20
5	பொதுக் குத்தகைப் பட்டறை, பேட்டை	5·62
6	தொழிற் பேட்டை, கோவில் பட்டி	6·69
7	தொழில் நுட்பத் தகவல் பிரிவு, பேட்டை	0·49
8	"டான்சி" பொறியியல் பட்டறை, தூத்துக்குடி	8·85
9	அடிப்படைக் கிராமப் பணி நிலையங்கள்	3·08
10	மக்னீசியம் கார்பனேட் உற்பத்திப் பிரிவு, தூத்துக்குடி ..	2·76
11	கடல் தாவரங்களிலிருந்து பொட்டாசியம் குளோரைடு உற்பத்திப் பிரிவு, தூத்துக்குடி ..	7·60
12	பாரிஸ் உறை மாவு உற்பத்திப் பிரிவு, தூத்துக்குடி ..	1·97
13	கடல் வாழ் உயிரினங்கள் ஆராய்ச்சி நிலையம் ..	4·80
	இராமநாதபுரம் மாவட்டம்.	
1	"டான்சி" பொறியியல் பட்டறை, ராஜபாளையம்	4·50
2	தொழிற் பேட்டை, விருதுநகர்	28·49
3	"டான்சி" கருவி பொறியியல் பட்டறை, விருதுநகர் ..	5·78
4	தொழிற் பேட்டை, காரைக்குடி	9·69
5	தொழிற் பேட்டை, சிவகங்கை	8·08

1972 மார்ச் 14]

தொடர் எண். (1)	சிறு தொழில்கள். (2)	திட்டச் செலவு. (3) (ரூபாய் இலட்சத்தில்.)
	மதுரை மாவட்டம்.	
1	மூலப்பொருள்கள் கிடங்கு, மதுரை (இப்பிரிவு 'சிட்கோ' வின் கீழ் உள்ளது).	2·16
2	பொறியியல் பணிகள், மதுரை	4·56
3	" டான்சி " கட்டுமானப் பணிகள் பட்டறை, பழனி (Fabrication Unit). ..	3·55
4	" டான்சி " பொறியியல் பூட்டுத் தயாரிப்புப் பிரிவு, திண்டுக்கல்.	14·59
5	தொழில் பண்ணை, மதுரை	24·45
6	தொழிற் பேட்டை, தேனி	5·38
7	தொழிற் பேட்டை, திண்டுக்கல்	15·91
8	தொழில் நுட்பத் தகவல் பிரிவு, மதுரை	0·49
9	" டான்சி " கருவி–பொறியியல் பணிகள் பட்டறை, மதுரை.	11·54
10	சீர் செய்த மனைகள், மதுரை	76·00
11	மின் மருத்துவக் கருவிகள் பணி—செப்பனிடுவதற்கான துணை நிலையம், மதுரை (மதுரை மாவட்ட வரிசையில் 19-வது எண்ணில் உள்ளது).	
12	உணவு-பழ அடிப்படையில் அமைந்த தனித் தொழில் பேட்டை, வத்தலகுண்டு.	15·43
13	வட்டார சோதனை ஆய்வுக் கூடம், மதுரை	15·00
	திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	
1	" டான்சி " வேளாண்மை பண்ணைக் கருவிகள் பிரிவு, திருச்சிராப்பள்ளி.	4·07
2	தொழிற் பேட்டை, திருச்சிராப்பள்ளி	11·86
3	டான்சி கருவி–பொறியியல் பணிகள் பட்டறை, திருச்சிராப் பள்ளி	5·78
4	தொழிற் பேட்டை, புதுக்கோட்டை	9·69
5	" டான்சி " பொறியியல் பட்டறை, கரூர்	5·49
6	சீர் செய்த மனைகள், திருச்சிராப்பள்ளி	16·68
7	துணைத் தொழிற் பேட்டை, திருச்சிராப்பள்ளி	39·65
8	தொழிற் பேட்டை, கரூர்	6·15

தொடர் எண். (1)	சிறு தொழில்கள். (2)	திட்டச் செலவு. (3) (ரூபாய் இலட்சத்தில்.)
	தஞ்சாவூர் மாவட்டம்.	
1	" டான்சி " பொறியியல்-மிதி வண்டி இணைப்புப் பிரிவு, தஞ்சாவூர்	7·50
2	தொழிற் பேட்டை, தஞ்சாவூர்	6·61
3	" டான்சி " எஃகு பித்தளைச் சாமான்கள் தயாரிப்புப் பணி நிலையம், கும்பகோணம்.	7·83
4	" டான்சி " தச்சு-கருமார் பட்டறை, மன்னார்குடி	4·80
5	" டான்சி " வார்ப்படச் சாலை கருவி அறைப் பட்டறை, தஞ்சாவூர்.	8·95
6	" டானசி " பொறியியல் பட்டறை, மாயூரம்	5·12
7	தொழிற்பேட்டை, கும்பகோணம்	8·59
8	தொழிற் பேட்டை, நாகப்பட்டினம்	3·26
9	மின் மருத்துவ சாதனங்களுக்கான துணை நிலையம், தஞ்சாவூர்.	4·00
	தென் ஆற்காடு மாவட்டம்.	
1	" டான்சி " தச்சு-கருமார் வேலைப் பட்டறை, கடலூர்	4·80
2	" டான்சி " மட்பாண்டத் தயாரிப்பு நிலையம், விருத்தாசலம்	34·83
3	" டான்சி " மெருகிட்ட குழாய்த் தயாரிப்புச் சாலை, விருத்தாசலம்.	8·09
4	மட்பாண்டத் தொழில் வேலைப்பாடமைந்த மட்பாண்டப் பயிற்சிப்பள்ளி, விருத்தாசலம்.	8·21
5	தொழிற் பேட்டை, விருத்தாசலம்	32·78
6	" டான்சி " பொறியியல் பட்டறை, விழுப்புரம்	5·49
7	நின்று எரியும் கரி தயாரிப்புப் பிரிவு, வடலூர்	3·86
8	துணைத் தொழிற் பேட்டை, வடலூர்	3·84
9	தொழிற் பேட்டை, கடலூர்	6·01
10	இரசாயன சுண்ணும்புப் பிரிவு, மரக்காணம்	1·50
11	மட்பாண்டத் தொழில் பணி நிலையம், விருத்தாசலம்	12·39
	செங்கற்பட்டு மாவட்டம்.	
1	" டான்சி " தோல் பணிப் பிரிவு, பல்லாவரம்	1·59
2	தொழிற்பேட்டை, சீர் செய்த மனைகள், அம்பத்தூர்	4,18·00
3	" டான்சி " கட்டுமானப் பொருள்கள் பட்டறை, அம்பத்தூர்	29·25

1972 மார்ச் 14]

தொடர் எண்	சிறு தொழில்கள்.	திட்டச் செலவு.
(1)	(2)	(3) (ரூபாய் இலட்சத்தில்.)
	செங்கற்பட்டு மாவட்டம்—தொடர்ச்சி.	
4	"டான்சி" கருவி அறைப் பட்டறை, அம்பத்தூர்	11·30
5	தோல் பொருள் தயாரிப்புத் தொழிற் பேட்டை, மாதவரம் (விரிவுத் திட்டம் உட்பட).	22·14
6	சீர் செய்த மனைகள், திருவள்ளூர்	2,01·50
7	தொழிற் பேட்டை, காஞ்சீபுரம்	6·15
8	மின்சாரக் கருவிகள் தனித் தொழிற்பேட்டை, திருவள்ளூர்	23·17
9	மருந்து, மருந்து கலவைத் தொழிற் பேட்டை	15·18
10	பொது மின் சோதனை ஆய்வுக்கூடம், காக்கலூர்	11·14
11	தொழில் நுட்பத் தகவல் பிரிவு, அம்பத்தூர்	3·50
	வட ஆற்காடு மாவட்டம்.	
1	"டான்சி" கட்டுமானப் பட்டறை, வேலூர்	7·30
2	"டான்சி" தோல் பதனிடும் பிரிவு, விண்ணமங்கலம் ..	14·83
3	"டான்சி" வார்படச் சாலை, காட்பாடி	2·45
4	தொழிற் பேட்டை, காட்பாடி	16·28
5	தொழிற் பேட்டை, அரக்கோணம்	13·69
6	"டான்சி" பொறியியல் பட்டறை, திருவண்ணாமலை ..	5·90
7	தச்சு-கருமான் வேலைப் பிரிவு, அரக்கோணம்	[illegible]·48
8	சீர்செய்த மனைகள், இராணிப்பேட்டை	35·43
9	சோடியம் டை-குரோமேட் உற்பத்திப் பிரிவு, வாலாஜா பேட்டை	7·55
10	தொழில் நுட்பத் தகவல் பிரிவு, காட்பாடி (செங்கல்பட்டு மாவட்ட வரிசையில் 11-வது எண்ணில் உள்ளது.)	
	சேலம் மாவட்டம்.	
1	"டான்சி" கட்டுமான மின் முலாம் பூசும் பிரிவு, மேட்டூர் அணை.	9·73
2	"டான்சி" பொறியியல் தச்சுப் பணிகள் பிரிவு, சேலம் ..	12·53
3	தொழிற் பேட்டை, சேலம்	8·59
4	"டான்சி" பொறியியல் பட்டறை, நாமக்கல்	5·49
5	தொழிற் பேட்டை, மேட்டூர்	6·15
6	சீர் செய்த மனைகள், மேட்டூர்	31·00
7	தொழிற் பேட்டை, நாமக்கல்	6·22

தொடர் எண். (1)	சிறு தொழில்கள். (2)	திட்டச் செலவு. (3) (ரூபாய் இலட்சத்தில்.)
	தர்மபுரி மாவட்டம்.	
1	"டான்சி" தச்சுப் பட்டறை, கிருஷ்ணகிரி	0·77
2	"டான்சி" பொறியியல் பட்டறை, கிருஷ்ணகிரி	3·73
3	தொழிற் பேட்டை, ஓசூர்	6·01
4	தொழிற் பேட்டை, கிருஷ்ணகிரி	9·89
	கோயம்புத்தூர் மாவட்டம்.	
1	"டான்சி" மரவேலைப் பிரிவு, பொள்ளாச்சி	5·73
2	"டான்சி" கருவி அறைப் பட்டறை, ஈரோடு	5·36
3	தொழிற் பேட்டை, ஈரோடு	11·25
4	கருவி அறை உலையில் வைத்து சூடுறுத்தி அடித்து உருவாக்கும் தொழிற் பட்டறை, கோயம்புத்தூர்.	17·07
5	மூலப் பொருள்கள் கிடங்கு, கோயம்புத்தூர் (சிட்கோவின் கீழ் உள்ள பிரிவு).	2·16
6	பொதுக் குத்தகைப் பட்டறை, கோயம்புத்தூர்	7·52
7	"டான்சி" பொறியியல் பட்டறை, திருப்பூர்	5·49
	நீலகிரி மாவட்டம்.	
	துணைத்தொழிற் பேட்டை, உதகமண்டலம்	8·73
	சென்னை மாவட்டம்.	
1	"டான்சி" காலணிப் பிரிவு, பெரம்பூர்	6·69
2	"டான்சி" திருவல்லிக்கேணி காலணிப் பிரிவு, பெரம்பூர்.	1·17
3	"டான்சி" எனுமல் பூசப்பட்ட கம்பிகள் பிரிவு, கிண்டி ..	17·71
4	"டான்சி" மரவேலைப் பிரிவு, கிண்டி	7·42
5	"டான்சி" கருவி அறைப் பட்டறை, கிண்டி	25·64
6	"டான்சி" இயந்திரப் பட்டறை, கிண்டி	2·68
7	"டான்சி" உலையில் வைத்து சூடுறுத்தி அடித்து உருவாக்கும் தொழிற் பட்டறை, கிண்டி.	11·61
8	பணிக் கழகம், கிண்டி (சிட்கோவின் கீழ் உள்ள பிரிவு).	4·48
9	"டான்சி" அறிவியல் சம்பந்தப்பட்ட கண்ணாடி தொழிற்சாலை, கிண்டி.	10·66

1972 மார்ச் 14]

தொடர் எண்.	சிறு தொழில்கள்.	திட்டச் செலவு.
(1)	(2)	(3)
		(ரூபாய் இலட்சத்தில்.)
	சென்னை மாவட்டம்—தொடர்ச்சி.	
10	"டான்சி" அமுக்க வகையில் சூடுறுத்தி, அச்சு வார்ப்படப் பிரிவு, கிண்டி.	9·69
11	"டான்சி" வார்ப்படச் சாலை, கிண்டி	16·92
12	தொழில் நுட்பத் தகவல் பிரிவு, கிண்டி	3·51
13	தொழிற் பேட்டை, கிண்டி	1,33·66
14	அச்சுக்கருவி வடிவு அமைப்புப் பிரிவு, கிண்டி	7·39
15	தொழில் நுட்பப் பயிற்சி நிலையம், கிண்டி	20·50
16	சீர்படுத்திய மனைகள், கிண்டி	53·48
17	"டான்சி" மின்சாரப் பொருள்கள் பிரிவு, கிண்டி ..	7·89
18	யந்திர-உலோக ஆய்வுக்கூடம்	20·73
19	மின் மருத்துவக் கருவிகள் பணிமனை—செப்பனிடும் மத்தியப் பிரிவு, கிண்டி.	7·56
20	மின் அணுத் தொழில்களுக்கான தொழிற் பேட்டை, அடையாறு.	40·26
21	கருவிகள் தயாரிப்புக்கான தொழிற் பேட்டை, அடையாறு.	16·18
22	காடிப் பொருள் உற்பத்திப் பிரிவு, கிண்டி	4·46
23	எலுமிச்சைப் புல் எண்ணெயிலிருந்து மின் துகள்கள் தயாரிப்புப் பிரிவு, கிண்டி.	0·27
24	"டான்சி" அச்சகம் கிண்டி	0·69
25	"டான்சி" தகடு அழுத்தும் பிரிவு, கிண்டி	8·43
26	அறிவியல் சம்பந்தப்பட்ட கண்ணாடிப் பொருள் தயாரிப்பு மத்தியப் பயிற்சிப் பிரிவு, கிண்டி.	4·60
27	இரசாயனச் சோதனை—பகுப்பாய்வுக்கூடம் இரசாயனப் பொறியியல் பிரிவு ஏற்படுத்துதல்.	4·06
28	சிறு அளவு தொழில் மற்றும் வாணிகக் காட்சி சாலை.	10·28
29	தொழில் நுட்பப் பயிற்சி நிலையத்தை விரிவுபடுத்துதல், கிண்டி.	11·00

குறிப்பு.—டான்சி பிரிவுகள் சென்னையிலுள்ள தமிழ் நாடு சிறு தொழில்கள் கழகக் கட்டுப்பாட்டில் உள்ளன.

[1972 மார்ச் 14

இணைப்பு III.

கைப்பணி நிலையங்களின் பட்டியல்.

தொடர் எண். (1)	திட்டத்தின்/பிரிவின் பெயர். (2)	திட்டச் செலவு. (3) (ரூபாய் இலட்சத்தில்.)
	சென்னை மாவட்டம்.	
1	கலை-கைப்பணிக் கல்லூரி, சென்னை	4·73
2	வடிவமைப்பு செய்முறை விளக்க நிலையம், எழும்பூர் ..	4·00
3	பளப்பளப்பான களிமண் பொம்மைகள் தயாரிப்பு நிலையம், பெரம்பூர்.	1·36
4	விற்பனைப் பெரு நிலையம், சென்னை	0·25
5	கண்ணாடி விளையாட்டுச் சாமான்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், சென்னை.	0·10
6	கைப்பணிப் பொருள்கள் நிலையம்	1·40
7	அறிவியல் சம்பந்தப்பட்ட கண்ணாடிப் பொருள் தயாரிப்பு மத்தியப் பயிற்சிப் பிரிவு, கிண்டி.	10·28
	செங்கற்பட்டு மாவட்டம்.	
1	சிற்பப் பயிற்சி நிலையம், மாமல்லபுரம்	0·63
2	சித்திர வேலைப்பாடுகள் கொண்ட வெண்கலப் பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், காஞ்சிபுரம்.	0·69
3	விற்பனைப் பெரு நிலையம், மாமல்லபுரம்	1·56
4	கைத்தொழில் காகிதப் பிரிவு, மாமண்டூர்	0·61
	தென் ஆற்காடு மாவட்டம்.	
	விற்பனை பெரு நிலையம், நெய்வேலி	0·98
	தஞ்சாவூர் மாவட்டம்	
1	சித்திர வேலைப்பாடுகள் கொண்ட உலோகப் பொருட்கள் தயாரிப்பு நிலையம், சுவாமிமலை.	0·37
2	வெண்கல உலோகப் பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி பணி நிலையம், நாச்சியார்கோவில்.	0·49
3	வெண்கல விக்கிரகங்கள் தயாரிப்பு நிலையம், சுவாமிமலை	0·30
4	விற்பனை கொள்முதல் கிடங்கு, தஞ்சாவூர்	1·84
5	கலை-கைப்பணிப் பள்ளி, கும்பகோணம்	6·26

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS

1972 மார்ச் 14]

தொடர் எண்.	திட்டத்தின்/பிரிவின் பெயர்.	திட்டச் செலவு.
(1)	(2)	(3)
		(ரூபாய் இலட்சத்தில்.)
	திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	
1	கம்பளங்கள், விரிப்புகள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், கோலக்குடி.	0·41
2	விற்பனை கொள்முதல் கிடங்கு, திருச்சிராப்பள்ளி ..	1·01
3	பனை ஓலை முதலிய பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம் புதுக்கோட்டை.	0·56
	மதுரை மாவட்டம்.	
1	வேலைப்பாடமைந்த பித்தளைப் பொருள் தயாரிப்புப் பிரிவு நிலையம் மதுரை.	0·87
2	விற்பனை பெரு நிலையம், திண்டுக்கல்	0·08
3	வேலைப்பாடமைந்த கண்ணாடிப் பொருள்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், மதுரை.	3·52
	திருநெல்வேலி மாவட்டம்.	
1	வெண்கலப் பொருட்கள் தயாரிப்பு நிலையம், வாகைக் குளம்.	1·85
2	சணல் நாரைக்கொண்டு விரிப்புகள், இரட்டுகள் நெய்வதற்கான பயிற்சி நிலையம், கோபாலசமுத்திரம்.	1·40
3	கற்றுழைநார் பொருள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், நெடுவயல்.	1·26
4	அரக்குப் பூசிய பொம்மை தயாரிப்பு பயிற்சி நிலையம், சேரன்மாதேவி.	0·28
5	விற்பனை கொள்முதல் கிடங்கு, திருநெல்வேலி ..	1·84
6	சணல் நாரைக்கொண்டு விரிப்புகள், இரட்டுகள் நெய்வதற்கான பயிற்சி நிலையம், ஆயக்குடி.	0·84
7	முரட்டு நார்ப் பிரிவு, தென்காசி	2·38
	கன்னியாகுமரி மாவட்டம்.	
1	கயிற்றுத் தொழிற் பயிற்சிப் பள்ளி, எதமொழி ..	2·40
2	கோயில் தேர்கள் (ரதங்கள்) செய்வதற்கான பயிற்சி நிலையம், நாகர்கோயில்.	0·48

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

தொடர் எண். (1)	திட்டத்தின்/பிரிவின் பெயர். (2)	திட்டச் செலவு. (3) (ரூபாய் இலட்சத்தில்.)
	சேலம் மாவட்டம்.	
1	சித்திர வேலைப்பாடுகள் கொண்ட உலோகப் பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், சேலம்.	0·56
2	விற்பனை கொள்முதல் கிடங்கு, சேலம்..	1·01
3	மட்பாண்டம் செய்வதற்காக மத்திய கிராமப் பணிகள் நிலையம்,	1·27
	தருமபுரி மாவட்டம்.	
1	கருங்கல் மெருகிடு நிலையம், கிருஷ்ணகிரி	0·56
2	தருமபுரி மாவட்டத்தில் கம்பளிகள் தயாரிப்பதற்காகப் பயிற்சி—தயாரிப்பு நிலையம்.	0·72
	கோயம்புத்தூர் மாவட்டம்.	
1	விற்பனை கொள்முதல் கிடங்கு, கோயம்புத்தூர் ..	1·01
2	அறிவியல் சம்பந்தப்பட்ட கண்ணாடி உபகரணங்கள் தயாரிப்பு—பயிற்சி நிலையம், கோயம்புத்தூர்.	1·57
	இராமநாதபுரம் மாவட்டம்.	
	பனை ஓலை உற்பத்திப் பொருள் பயிற்சி நிலையம், இராமேஸ்வரம்.	0·35

இணைப்பு IV.

பட்டுப் புழு வளர்ப்புத் திட்டத்தின் பட்டியல்.

தொடர் எண். (1)	திட்டத்தின்/பிரிவின் பெயர். (2)	திட்டச் செலவு. (3) (ரூபாய் இலட்சத்தில்.)
	திருநெல்வேலி மாவட்டம்.	
1	செய்முறை விளக்கப் பட்டுப் புழு வளர்ப்புப் பண்ணை, தென்காசி.	1·47
2	அரசு பட்டுப் புழு வளர்ப்புப் பண்ணை, செங்கோட்டை ..	2·15
	தருமபுரி மாவட்டம்.	
3	சௌக்கி பட்டுப் புழு வளர்ப்புப் பண்ணை, ஒசூர்	0·82
4	முசுக்கட்டை ஒட்டுச் செடி வளர்ப்புப் பண்ணை, ஒசூர் ..	1·75
5	பட்டு நூல் எடுக்கும் அரசு நிலையம், ஒசூர்	3·06

இணைப்பு IV—தொடர்ச்சி.

தொடர் எண். (1)	திட்டத்தின்/பிரிவின் பெயர். (2)	திட்டச் செலவு. (3) (ரூபாய் இலட்சத்தில்.)
	தருமபுரி மாவட்டம்—தொடர்ச்சி.	
6	பட்டுப் புழு கலப்பின் அரசுக் களஞ்சியம், பேரிகை ..	2·15
7	பட்டுப் புழு வளர்ப்போருக்கு ஒசூர், பாப்பாரப்பட்டி ஆகிய இடங்களில் பட்டுப்புழு விற்பனை வசதி.	1·40
8	தேங்கனிக்கோட்டையில் அடிப்படை பட்டுப் புழு வளர்ப்புப் பண்ணையும், களஞ்சியமும்.	0·58
9	அரசு பட்டு வளர்ப்புப் பண்ணை, ஒசூர்	4·74
10	பட்டுப் பரிசோதனை ஆய்வுக்கூடம், ஒசூர்	0·15
11	பட்டு நூல் முறுக்கும் பிரிவு, ஒசூர்	1·50
12	பெரிய அளவிலான பட்டுப் பண்ணை, கோலட்டி	2·47
	சேலம் மாவட்டம்.	
13	அரசு பட்டு வளர்ப்புப் பண்ணை, ஏர்க்காடு	0·80
14	செய்முறை விளக்கப் பட்டுப் புழு வளர்ப்புப் பண்ணை, கொல்லிமலை.	1·41
	கோயம்புத்தூர் மாவட்டம்.	
15	சௌக்கி பட்டுப் புழு வளர்ப்புப் பிரிவு, தாளவாடி ..	0·27
16	முசுக்கட்டை ஒட்டு வளர்ப்புப் பெரும்பண்ணை, தாளவாடி.	0·55
17	பெரிய அளவிலான பட்டுப் புழு வளர்ப்புப் பண்ணை, மதஹள்ளி.	1·77
18	செய்முறை விளக்கப் பட்டுப் புழு வளர்ப்புப் பண்ணை, ஹாசனூர்.	0·20
19	பொது பட்டுப் புழு வளர்ப்பு நிலையம், ஹாசனூர் ..	0·20
20	சௌக்கி பட்டுப் புழு வளர்ப்புப் பிரிவு, ஜெர்மலம் ..	0·47
21	பட்டுப் புழு வளர்ப்புப் பண்ணையும், களஞ்சியமும், தாளவாடி.	0·48
	நீலகிரி மாவட்டம்.	
22	அரசு கெட்டி நரம்பு தயாரிக்கும் பிரிவு, குன்னூர் ..	4·00
23	செய்முறை விளக்கப் பட்டுப் புழு வளர்ப்புப் பண்ணை, மசினகுடி.	2·43
24	பெரிய அளவிலான பட்டு வளர்ப்புப் பண்ணை, மசினகுடி.	0·40
25	செய்முறை விளக்கப் பட்டுப் புழு வளர்ப்புப் பண்ணை, எருமடு.	0·20
26	ஆராய்ச்சி வளர்ச்சி நிலையம், குன்னூர்	0·79

இணைப்பு V.

தமிழ் நாட்டிலுள்ள தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட வாரியாகக் காட்டும் புள்ளி விவர அறிக்கை 1971-ம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31-ம் நாளில் உள்ளவாறு.

தொழில் வகை.	சென்னை.	செங்கல்பட்டு.	வட ஆர்க்காடு.	தென் ஆர்க்காடு.	தஞ்சாவூர்.	திருச்சிராப்பள்ளி.	மதுரை.	இராமநாதபுரம்.	சிவகங்கை.	திருநெல்வேலி.	கன்னியாகுமரி.	தர்மபுரி.	சேலம்.	கோயம்புத்தூர்.	நீலகிரி.	மொத்தம்.
1 உலோகம்	..	1	1	2	2	2	4	2	3	3	..	..	3	1	..	24
2 வெண்கலம்	..	..	1	..	1	..	..	..	..	2	1	..	..	..	..	5
3 தச்சுப் பட்டறை கருமார்.	..	4	4	3	3	6	2	5	2	3	1	..	5	5	..	43
4 தீப்பெட்டி	..	1	1	..	1	..	1	5	2	4	..	..	..	..	..	15
5 செங்கல்	..	2	..	1	1	2	2	1	..	2	..	..	..	..	..	11
6 பொறியியல்	..	2	..	..	2	1	1	..	..	..	..	..	..	1	..	7
7 தோல் தொழில் ..	1	..	1	..	1	1	1	..	..	1	..	..	1	1	1	9
8 கூட்டுறவு தொழிற் பேட்டைகள்.	1	..	..	..	..	..	..	1	..	1	..	..	1	1	..	5
9 சிறப்புவகைச் சங்கங்கள்.	7	3	2	..	..	4	1	2	1	..	..	..	1	3	..	24
10 கயிற்றுத் தொழில் ..	1	..	1	1	..	..	..	2	..	..	7	1	6	3	..	22
11 பாய் முடைதல்	..	4	2	3	7	5	4	1	..	12	3	2	6	5	..	54
12 பெண்கள் உடை தைத்தல்.	18	6	1	2	1	2	1	1	1	2	5	..	1	3	3	47
13 ஆண்கள் உடை தைத்தல்.	..	..	..	1	..	..	..	1	..	..	..	..	..	..	1	3
14 பிரம்பு, மூங்கில் கூடை	..	..	1	1	1	3	1	..	..	6	2	..	2	6	1	24
15 பனை ஓலை	..	1	..	..	1	..	..	4	..	1	1	..	..	..	..	8
16 விரிப்பு, இரட்டுகள் ..	..	..	..	1	..	1	..	..	..	1	..	..	..	1	..	4
17 விளையாட்டுப் பொம்மைகள்	1	..	..	1	1	..	..	..	..	1	1	..	..	..	..	5
18 சிற்பம் செதுக்குதல் ..	..	..	1	..	..	1	..	..	..	..	1	..	1	..	..	4
19 கயிறு	..	..	..	..	1	..	1	..	..	..	..	..	..	..	..	2
20 பீடி	1	..	..	..	1	..	..	..	..	..	..	..	..	1	..	3
21 பட்டுப் புழு வளர்ப்பு ..	..	..	..	..	..	..	..	..	..	..	..	..	..	1	..	1
22 தேயிலை	..	..	..	..	..	..	..	..	..	..	..	..	..	..	11	11
23 பல்வகை கைப் பணிகள்	..	..	..	..	4	..	1	1	..	..	..	..	..	..	..	6
மொத்தம் ..	30	24	16	16	28	28	20	26	9	39	22	3	27	32	17	337

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு VI.

ஐந்தாண்டு வேலைத் திட்டங்களின் கீழ் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் முன்னேற்றம்.

தொடரிலக்கமும், திட்டத்தின் பெயரும்.	நான்காவது திட்ட நிதி ஒதுக்கம்.	1970-71 கணக்குகள்.	1971-72 எதிர்பார்த்தது.	நான்காவது திட்டத்தின் எய்தின சாதனை. 1970-71	1971-72
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
		(ரூபாய் லட்சத்தில்.)			
1 கூட்டுறவு தொழிற்பேட்டைகள்	34·00	..	..	..	..
2 சிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்	78·38	16·37	14·64	6	10
3 கைப்பணி தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்	12·06	1·01	1·26	3	3
4 கயிற்றுத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்	8·81	0·52	0·14	3	1
5 பட்டுப் புழு வளர்ப்புத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்	..	..	..	..	..
மொத்தம் ..	133·25	17·90	16·04	12	14

தமிழ்நாடு 1956-ம் ஆண்டு சிறு தொழில்களுக்கும், குடிசைத் தொழில்களுக்கும், கடன்களும், உதவித் தொகைகளும், வழங்குவது குறித்த விதிகளைச் சேர்ந்த 19-வது விதியின்கீழ், தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் சேமநிதிக்கு வழங்கப்பட்ட உதவித் தொகைகளின் விவரங்கள் :—

ஆண்டு.	தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை.	அளிக்கப்பட்ட உதவித் தொகை.	
(1)	(2)	(3)	
		ரூ.	காசு
1957–58	43	65,000	00
1958–59	178	1,91,770	00
1959–60	198	1,79,925	00
1960–61	80	1,18,059	00
1961–62	71	1,25,000	00
1962–63	111	1,49,980	00
1963–64	83	1,21,047	00
1964–65	79	1,20,980	00
1965–66	92	1,22,941	00
1966–67	70	1,20,980	00
1967–68	3	10,000	00
1968–69	1	3,000	00
1969–70	4	16,000	00
1970–71	4	12,000	00
1971–72 (31—10—1971 வரை)	1	1,000	00

இணைப்பு VIII.

தமிழ்நாட்டில் கிராமத் தொழிற் திட்டத்தின் கீழுள்ள தொழிற் பிரிவுகளின் பட்டியல்.

தொடரிலக்கமும் திட்டத்தின் பெயரும்.	திட்டச் செலவு (தொடர் செலவும் தொடரா இனச் செலவும்).
(1)	(2)
	(ரூபாய்).
செங்கற்பட்டு மாவட்டத்தில் ஸ்ரீபெரும்புதூர் திட்டம்.	
1 பொது நோக்குப் பொறியியல் பட்டறை, செம்பரம் பாக்கம்.	6,01,600
2 பொது நோக்குப் பொறியியல் பட்டறை, திருப் பாச்சூர்.	6,05,500

இணைப்பு VIII—தொடர்ச்சி.

தொடரிலக்கமும் திட்டத்தின் பெயரும். (1)	திட்டச் செலவு (தொடர் செலவும் தொடரா இனச் செலவும்). (2) (ரூபாய்.)
செங்கற்பட்டு மாவட்டத்தில் ஸ்ரீபெரும்புதூர் திட்டம்—தொடர்ச்சி.	
3 அஞ்சலுறை, காகிதப் பைகள் தயாரிக்கும் பிரிவு, ஊத்துக்கோட்டை.	1,44,320
4 காலணி தயாரிப்புப் பிரிவு, மேப்பேடு	1,44,000
5 பொது வசதிகள் நிலையம், ஈக்காடு	59,700
சேலம் மாவட்டத்தில் ஓமலூர் திட்டம்.	
1 பளபளப்பான தரை ஓடுகள் தயாரிப்புப் பிரிவு, ஓமலூர்.	2,00,000
2 மரவேலைப் பிரிவு, ஓமலூர்	1,16,000
3 பாலிதீன் குழாய் தயாரிக்கும் பிரிவு, ஓமலூர்	2,87,000
4 பொது வசதிகள் நிலையம், தாராமங்கலம் ..	40,000
5 பொது வசதிகள் நிலையம், தீவட்டிப்பட்டி ..	40,000
திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குனேரி திட்டம்.	
1 பொது நோக்குப் பொறியியல் பட்டறை, வள்ளியூர்.	3,15,700
2 கரும்பலகைச் சாக்குகள் தயாரிக்கும் பிரிவு, வடக்கு விஜயநாராயணம்.	39,100
3 பொது வசதிகள் நிலையம், தளபதிசமுத்திரம்.	30,800
4 ஷை மீனவன்குளம் ..	30,800
5 ஷை மூலைக்கரைப்பட்டி ..	30,800
6 ஷை பருத்திப்பாடு	37,200
7 ஷை களக்காடு	37,200
8 ஷை கோயிலம்மாள்புரம் ..	37,200
9 ஷை தேவநல்லூர்	37,200
10 ஷை கண்ணநல்லூர்	37,200

இணைப்பு IX.

தமிழ் நாடு சிறு தொழில் கூட்டுறவுக் கழகத்தின் கீழ் உள்ள பிரிவுகளின் உற்பத்தி அளவின் மதிப்பைக் காட்டும் விவர அறிக்கை.

தொடர் எண்ணும், பிரிவின் பெயரும்.	1970-71-ல் உற்பத்தி.	செப்டம்பர் 1971 வரையில் உற்பத்தி.	எய்தக் கருதியுள்ள எஞ்சிய உற்பத்தி.	1971-72-ல் எதிர்பார்க்கப்படும். மொத்த உற்பத்தி.	1972-73-ல் குறிக்கோள் அளவு.	குறிப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
			(ரூபாய் லட்சத்தில்.)			
1 டான்சி அறிவியல் சம்பந்தப்பட்ட கண்ணாடிக் கருவிகள் தயாரிக்கும் தொழிற்சாலை, இண்டி.	5·14	1·88	6·12	8·00	10·00	..
2 டான்சி மண்டபம் பீங்கான் தொழிற்சாலை, விருத்தாசலம்.	15·33	7·84	8·16	16·00	16·00	..
3 டான்சி மெருகிட்ட குழாய்த் தொழிற்சாலை, விருத்தாசலம்.	9·07	4·08	7·92	12·00	12·00	..
4 டான்சி வார்ப்படசாலை, இண்டி	16·64	6·35	9·65	16·00	21·00	..
5 டான்சி வார்ப்பட சாலை, காட்பாடி	11·86	4·05	7·95	12·00	15·00	..
6 டான்சி வார்ப்பட சாலை, தஞ்சாவூர்	22·07	10·55	14·05	25·00	21·00	..
7 டான்சி வார்ப்பட சாலை, பேட்டை	11·65	4·50	10·50	15·00	15·00	..
8 டான்சி கட்டுமானம்-மின்முலாம் பூசும் பிரிவு, மேட்டூர் அணை.	86·70	34·99	60·01	95·00	100·00	..
9 டான்சி கட்டுமானப் பணி, அம்பத்தூர்	80·75	42·11	57·89	100·00	100·00	..
10 டான்சி தோல் பொருள்கள் தயாரிப்புப் பிரிவு, பெரம்பூர்.	9·17	4·88	7·12	12·00	12·00	..
11 டான்சி தோல் பொருட்கள் தயாரிப்புப் பிரிவு, திருவல்லிக்கேணி, பெரம்பூர்.	0·55	0·53	0·47	1·00	3·00	..
12 டான்சி தோல் பொருட்கள் தயாரிப்புப் பிரிவு, பல்லாவரம்.	2·53	0·52	3·48	4·00	4·00	..
13 டான்சி தோல் பதனிடும் தொழிற்சாலை, விண்ணமங்கலம்.	59·66	26·30	38·70	65·00	80·00	..

14	டான்சி கம்பளி பக்குவப்படுத்தும் தொழிற்சாலை, விண்ணமங்கலம்.	..	..	3·00	3·00	6·00	..
15	டான்சி கட்டுமானப் பணி, இராஜபாளையம்	10·90	5·00	5·00	10·00	10·00	..
16	டான்சி கட்டுமானப் பணி, வேலூர்	22·66	8·67	18·33	22·00	22·00	..
17	டான்சி கட்டுமானப் பணி, பழனி	13·69	5·00	7·00	12·00	12·00	..
18	டான்சி பொறியியல் பட்டறை, கரூர்	8·14	3·33	3·67	7·00	7·00	..
19	டான்சி பொறியியல் பட்டறை, திருப்பூர்	10·99	3·84	8·16	12·00	12·00	..
20	டான்சி பொறியியல் பட்டறை, நாமக்கல்	20·37	5·38	6·62	12·00	15·00	..
21	டான்சி பொறியியல் பட்டறை, தூத்துக்குடி	7·44	3·63	4·37	8·00	8·00	..
22	டான்சி பொறியியல் பட்டறை, மாயூரம்	8·28	3·10	3·90	7·00	7·00	..
23	டான்சி பொறியியல் பட்டறை, விழுப்புரம்	12·41	4·93	8·07	13·00	13·00	..
24	டான்சி பொறியியல் பட்டறை, திருவண்ணாமலை	10·40	3·22	5·78	9·00	12·00	..
25	டான்சி பொறியியல் பட்டறை, கிருஷ்ணகிரி	6·88	2·51	4·49	7·00	7·00	..
26	டான்சி பொறியியல் பட்டறை, மதுரை	9·07	3·96	8·04	12·00	12·00	..
27	டான்சி உருக்கு பித்தளைச் சாமான்கள் தயாரிக்கும் பிரிவு, கும்பகோணம்.	12·10	5·10	6·90	12·00	12·00	..
28	டான்சி பொறியியல் மிதிவண்டிப் பகுதிகளை இணைக்கும் பிரிவு, தஞ்சாவூர்.	6·68	2·11	5·89	8·00	8·00	..
29	டான்சி கருவிப் பட்டறை, கிண்டி	6·45	2·50	3·50	6·00	8·00	..
30	டான்சி கருவிப் பட்டறை, அம்பத்தூர்	2·80	1·66	2·34	4·00	8·00	..
31	டான்சி கருவி-பொறியியல் பட்டறை, திருச்சி	9·50	4·38	5·62	10·00	10·00	..
32	டான்சி கருவி-பொறியியல் பட்டறை, மதுரை	8·15	4·11	5·89	10·00	10·00	..
33	டான்சி கருவி-பொறியியல் பட்டறை, விருதுநகர்	7·36	2·58	4·42	7·00	9·00	..
34	டான்சி கருவி-அச்சுவார்ப்புப் பட்டறை, கோயம்புத்தூர்.	13·97	5·80	9·20	15·00	15·00	..
35	டான்சி மரவேலைப் பிரிவு, கிண்டி	17·29	7·65	10·35	18·00	18·00	..
36	டான்சி மர வேலைப் பிரிவு, பத்தமடை	3·80	2·12	2·88	5·00	5·00	..
37	டான்சி மரவேலைப் பிரிவு, கிருஷ்ணகிரி	4·98	2·13	3·87	6·00	6·00	..
38	டான்சி தச்சு-கொல்லுப் பட்டறை, கடலூர்	11·04	3·59	6·41	10·00	11·00	..

தொடர் எண்ணும், பிரிவின் பெயரும். (1)	1970–71-ல் உற்பத்தி. (2)	செப்டம்பர் 1971 வரையில் உற்பத்தி. (3)	எய்தக் கருதியுள்ள எஞ்சிய உற்பத்தி. (4)	1971–72-ல் எதிர்பார்க்கப்படும். மொத்த உற்பத்தி. (5)	1972–73-ல் குறிக்கோள் அளவு. (6)	குறிப்பு. (7)
		(ரூபாய் லட்சத்தில்.)				
39 டான்சி தச்சு-கொல்லுப் பட்டறை, மன்னார்குடி ..	8·90	3·33	6·67	10·00	10·00	..
40 டான்சி தச்சு-கொல்லுப் பட்டறை, பேட்டை ..	10·39	3·46	6·54	10·00	13·00	..
41 டான்சி மரவேலை-மரம் அறுக்கும் பிரிவு, பொள்ளாச்சி.	12·52	7·50	8·50	16·00	16·00	..
42 டான்சி மரம் அறுக்கும் பிரிவு, நாகர்கோயில் ..	11·60	6·08	2·92	9·00	3·00	..
43 டான்சி பொறியியல் தச்சுவேலைப் பிரிவு, சேலம் ..	16·80	5·96	0·04	15·00	18·00	..
44 டான்சி தகடு அழுத்தப் பட்டறை, கிண்டி	4·53	2·68	4·32	7·00	7·00	..
45 டான்சி ஃபோர்ஜிங்ஸ், கிண்டி	5·60	2·56	4·04	6·60	6·60	..
46 டான்சி அச்சு வார்ப்புப் பிரிவு, கிண்டி	22·48	10·70	13·30	24·00	25·00	..
47 டான்சி-எனமல் பூசப்பட்ட கம்பிகள் தயாரிக்கும் நிலையம், கிண்டி.	18·72	5·92	6·68	12·60	27·60	..
48 டான்சி மின்சார வேலைப்பிரிவு, கிண்டி	3·31	2·09	3·91	6·00	6·00	..
49 டான்சி அச்சகம், கிண்டி	2·27	1·04	1·76	2·80	2·80	..
50 டான்சி விவசாயக் கருவிகள் தயாரிப்புப் பிரிவு, திருச்சிராப்பள்ளி.	18·80	8·89	11·11	20·00	20·20	..
51 டான்சி பொறியியல்-பூட்டு தயாரிக்கும் பிரிவு, திண்டுக்கல்.	9·58	5·30	6·70	12·00	12·00	..
52 டான்சி இயந்திரக் கருவிகள் பிரிவு, ஈரோடு ..	9·10	5·65	9·35	15·00	18·00	..
53 டான்சி இயந்திரப் பணிக்களரி, கிண்டி	6·09	5·20	5·80	11·00	9·00	..
54 டான்சி பொறியியல் பட்டறை, நாகர்கோயில் ..	2·45	..	..	..	..	பிரிவு மூடப் பட்டது.
55 டான்சி பொறியியல் பட்டறை, காஞ்சீபுரம்	3·77	..	..	..	..	ஷை
56 டான்சி பொறியியல் பட்டறை, ஓமலூர்	6·82	..	..	..	..	ஷை
57 டான்சி பொறியியல் பட்டறை, சென்னை	5·67	..	..	..	..	ஷை
58 டான்சி தோல் பொருட்கள் தயாரிப்புப் பிரிவு, மாதவரம்.	1·53	..	..	..	..	ஷை
59 டான்சி படிகக் கல் பொடி செய்யும் தொழிற்சாலை, சேலம்.	0·08	..	..	..	..	ஷை
மொத்தம் ..	757·48	321·64	481·36	803·00	866·00	

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு 4.

தமிழ்நாட்டில் கனிவள மேம்பாடு.

1957 ஆம் ஆண்டிற்கு முன்னர் இந்திய நிலவியல் ஆய்வுத் துறை மட்டுமே இம் மாநிலத்தில் கனிவளம் குறித்த ஆய்வுகளை நடத்தி வந்தது. இந்திய நிலவியல் ஆய்வுத் துறையின் முயற்சிகளுக்குத் துணை நிற்கும் கருத்துடன், 1957 ஆம் ஆண்டில் மாநில நிலவியல் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. இப்பிரிவு தற்பொழுது தொழில் வாணிகத் துறை இயக்குநர் அலுவலகத்தின் ஒரு பிரிவாக உள்ளது. நிலவியற் பிரிவை வலுப்படுத்துவும் கனிவள ஆய்வுகளை மும்முரமாக மேற் கொள்வதற்கான புதிய கருவிகளை வாங்கவும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 25 லட்சம் முதலீடு செய்யப்பட்டது. நிலவியல் துறை கனிவள ஆய்வுகளை மேற்கொள்ளுவதுடன் நில்லாது, கனிவளச் சலுகை கள் தரவேண்டுமெனக் கோரி, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக வருகின்ற விண்ணப்பங்கள் குறித்து நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு அவ் விண்ணப்பங்கள் தொடர்பாகத் தனது பரிவுரைகளையும் அளிக்கிறது.

மாநிலக் கனிவள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செயற்படுத்தப்பட்டு வருகின்ற முக்கியத் திட்டங்கள் சில அடுத்துவரும் பத்திகளில் சுருக்க மாகக் கூறப்படுகின்றன.

தமிழ்நாடு கனிவள மேம்பாட்டுத் திட்டம்.

ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டப் பிரிவிலிருந்து இதற்குத் தொழில் நுட்ப உதவி கிடைத்துள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ், வட ஆர்க்காடு, தென்னார்க்காடு, தருமபுரி, சேலம் ஆகிய மாவட்டங்களில் பலவிடங்களில் 17,000 சதுர கி.மீ. பரப்பில் விரிவாகவும், மும்முரமாகவும் கனிப் பொருள் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத் திட்டத்தின் கால அளவு மூன்றாண்டுகள்; அதாவது 1968-ல் தொடங்கி 1971-ல் முடிவுற்றது. இத் திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ. 120 லட்சம்; இத் தொகையில் ஏறத்தாழ ரூ. 80 லட்சம், கருவிகள், தொழில் நுட்ப வல்லுநர் உதவி ஆகிய வடிவில் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட அதிகாரிகளிடமிருந்து கிடைக்கிறது. மாநில அரசுக்குத் தோராயமாக ரூ. 40 லட்சம் செலவாகியுள்ளது. இத் திட்டத்திற்கு ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம் அளித்து வந்த உதவி 31—12—1971 ஆம் நாளுடன் முடிவடைந்தது. இரண்டாம் நிலையில் அளிக்கும் உதவி பற்றி ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம் பரிசீலித்து வருகிறது.

இத் திட்டத்தில், வெளிநாட்டு வல்லுநர்களின் மேற்பார்வையின்கீழ் நிலவியல் ஆய்வு முனைப்பாக மேற்கொள்ளப்படுகின்றது. இந்த ஆய்வு களின்போது விமானத்திற் பறந்தவாறு பௌதிக ஆய்வுகள், நில இரசாயன ஆய்வுகள்—நிழற்பட நிலவியல் ஆய்வுகள்—ஆகியவற்றை மேற் கொள்ளுதல் போன்ற புதிய திறமை வாய்ந்த முறைகள் பயன்படுத்தப் படுகின்றன. இத் திட்டத்தில், அரசுப் பணியாளர்களுக்குத் திட்டத்திலும் வெளிநாட்டிலும் பயிற்சி அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது. சிறந்த கருவிகளுடன் கூடிய ஆய்வுக்கூடங்களை நிறுவுதல், கனிவள ஆய்வு களுக்குத் தொழில் நுட்பத் திறம் மேம்பட்ட கருவிகளைப் பெறுதல் ஆகியவற்றுக்கும் இதன்கண் வகை செய்யப்பட்டுள்ளது. நில பௌதிகப்

பிரிவு ஒன்று, சிறந்த கல்லாய்வு இயல் ஆய்வுக்கூடம் ஒன்று, அணுக் கதிர்களை கிரகிக்கக்கூடிய, வண்ணப்பட்டை நிழற்படக் கருவியுடன்கூடிய (Spectro photometer) நிலவியல் சார்ந்த இரசாயன ஆய்வுக்கூடம், கனிப்பொருள்களைப் பக்குவப்படுத்துவது குறித்த ஆய்வுக்கூடம் ஒன்று ஆகியன ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் உதவியுடன் நிறுவப் பட்டுள்ளன. தொழில் நுட்ப வல்லுநர் உதவி, கருவிகள், ஆராய்ச்சி, மாணவர்களுக்கான உதவித்தொகை (Fellowships) முதலியவற்றுக்காக, இத் திட்டத்திற்கு, ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம் அளித்த மொத்த உதவி ரூ. 10.2 லட்சம் (அமெரிக்க) டாலர் ஆகும்.

விமானத்திற் பறந்தவாறு மேற்கொள்ளப்பட்ட நிலவியல் சார்ந்த பௌதிக ஆய்வுகளின்மூலம் வெளிப்பட்ட முக்கிய முரண்பாடுகள் அனைத்தும் நிலத்தில் நடத்தப்பட்ட சோதனைகள்மூலம் பரிசோதித் தறியப்பட்டன. இச் சோதனைகள் மூலம், இதற்கு முன்னர் அறியப்படாம லிருந்த பல புதிய இரும்புத் தாது படிவங்கள் இருப்பது தெரிய வந்தது. விரிவான ஆய்வுகள் பல மேற்கொள்ளப்பட்டன. (வட ஆர்க் காடு மாவட்டம்) சேவத்தூருக்கருகிலும், (தருமபுரி மாவட்டம்) ஜோகிப் பட்டிக்கருகிலும் இன்னும் பிற பகுதிகளிலும் கார்பனேட் படிவங்களின் இருப்பிடம் குறித்துத் துளையிட்டுச் சோதனை ஆய்வுகள் நடத்தப்பட்டன. திருவண்ணாமலைக்கருகில் உள்ள கவுதிமலை ஒதுக்கக் காடுகளில் இரும்புக் கனிப் படிவங்கள் குறித்த விரிவான நிலவியல் வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு, மேற்பரப்பு மண்மாதிரிச் சோதனைகளும் மேற்கொள்ளப் பட்டன. இந்தப்படிவங்கள் உள்ள இடங்களில் பூமிக்கடியில் உள்ள படி வங்களின் தன்மையையும் இருப்பு அளவையும் பற்றி உறுதி செய்து கொள்ளும் பொருட்டு இவ்விடங்களில் துளையிடும் பணி தொடங்கப் பட்டுள்ளது.

இந்த ஆண்டில் திட்டப்பகுதியில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட சில கனிவள இருப்புகள் கீழ்க்காணும் அளவில் உள்ளனவென்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது :—

(1) திருவண்ணாமலையில் அயக்காந்த (மேக்னடைட்) இரும்புப் படிவங்கள்.

1,400 லட்சம் டன் இரும்புப் படிவம் உள்ளதெனவும், அப்படிவத்தில் 35 முதல் 44 சத விகிதம் இரும்பு உள்ளதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. கவுதிமலைப் பகுதியில் இரும்புப் படிவங்களின் அளவைச் சரியாக மதிப் பிட்டறியும் பொருட்டும், அதன் தரத்தையறியும் பொருட்டும், அங்கு துளையிடும் பணி 1971 மார்ச்சில் தொடங்கியது. இதுவரை நான்கு துளைகள் இடப்பட்டுள்ளன. துளையிடப்பட்ட சுரங்கங்களிலிருந்து அப்பகுதியில் இரும்புப் படிவம் 10 மீட்டர் முதல் 30 மீட்டர் கனத்துக்கு இருப்பதாகத் தெரியவந்துள்ளது. தொடக்கச் சோதனையிலிருந்து அங்குள்ள இரும்புத் தாதுவை, 65 சத விகிதம் இரும்பு அடங்கிய உயர்தர அடர் இரும்பினை அளிக்கும் வண்ணம், காந்த ஈர்ப்புச் செய் முறை மூலம் எளிதில் அடர்த்தன்மை பெறச்செய்ய இயலும் எனத் தெரியவந்துள்ளது.

(2) சேவத்தூரில் நீர் அபிரகம் (Vermiculite).
வட ஆர்க்காடு மாவட்டம்.

சுமார் 350,000 டன் நீர் அபிரகக் கனிப்பொருள் கிடைக்குமென்று கண்டறியப்பட்டுள்ளது. (இது இப்போது துறையால் சுரங்கமாக மேம்படுத்தப்படுகிறது).

(3) அபடைட் (Apatite).

மேற்சொன்ன பகுதியில் 190,000 டன் அபடைட் கனி கிடைக்கு மென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

(4) பைரோகுளோர் (வெப்பத்தினுல் உருவாகும் பாசிகக் கனிவகை).

இது நியோபியம், தெம்மம் (Tantalum), யுரேனியம் ஆகிய உலோகங் களடங்கிய ஒரு கனிப்பொருளாகும். சேவத்தூரில் இந்தக் கனிப்பொருள் சுமார் 800 டன் கிடைக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. துளைபோடுதல், உலோகவியல் ஆய்வுகள் உட்பட பைரோகுளோர் கனிப்பொருளுக்கான மும்முர ஆய்வு ஒன்றை அணுசக்தி ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது.

ஆழத்தில் படிந்துள்ள மேக்னசைட் கனிகளைக் கண்டறியவும், சேலத் துக்கருகில் சீமைச் சுண்ணும்புக் குன்றுகளில் அக் கனிப்பொருள் எவ்வளவு நிறைந்துள்ளதென்று தீர்மானிக்கவும், துளையிடும் பணி 1971, மார்ச் திங்களில் தொடங்கப்பட்டது. திட்டமிட்டுள்ள 6 துளைகளில் இது வரை நான்கு துளைகள் இடப்பட்டுள்ளன.

திட்டப்பகுதியில் முறையான நிலவியல் சார்ந்த இரசாயன மாதிரி ஆய்வு செய்யப்பட்டுள்ளது. நூற்றுக்கணக்கான மாதிரிகள் சேகரிக்கப் பட்டு, பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

தென் ஆர்க்காடு மாவட்டம், மாமந்தூர் பகுதியில் ஆழமான இடங்களில் இக் கனிப்பொருள் காணப்படுகின்றதா என்பதை முடிவு செய்யும் பொருட்டு, ஐ. பி. (Induced Polarisation) சாதனங்களைக் கொண்டு நிலவியல் சார்ந்த பௌதிக முறையில் கனிகளை வெட்டியெடுக்கும் பணி அண்மையில் தொடங்கப்பட்டு, இப்பணி நடந்தேறி வருகிறது.

ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கனிவளங்கள் பல கண்டு பிடிக்கப்பட்டதனுலும், தமிழ்நாட்டின் பிற பாகங்களில் தூரியம் (Graphite), சிலிமனைட் (Sillimanite), உரிவெள்ளி (Molybdenum) போன்ற கனிகள் இருப்பதனுலும் கனிவள வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இரண்டு ஆண்டுகளில் நிறைவேற்றப்படுவதற்குரிய இரண்டாம் நிலைப் பணியை மேற்கொள்ளுமாறு ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்திற்கு அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது. சேலம், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை மாவட்டங்களின் தற்போதைய திட்டப் பகுதியாக அமைந்துள்ள பாகங்களுக்குத் தென் மேற்குப் பகுதியில் 14,000 சதுர கிலோமீட்டர் பகுதியை புதிய பகுதியாக புதிய முறைகளில் ஆய்வு செய்வது அவசியமாக உள்ளது. இவ்வேண்டுகோள் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட நிறுவனத்தின் ஆய்வில் உள்ளது.

இரும்புக் கனிகளை செறிவுள்ளதாக்குவதற்கான தொழிற்சாலை ஒன்றை (Concentration plant) திருவண்ணாமலையில் அமைப்பது இயலுமா என்பதைக் கண்டறியும் நோக்கத்துடன், திருவண்ணாமலைக்கு அருகில் இரும்புக் கனிப் பொருள்கள் குறித்துப் பெருமளவு மாதிரிகளைச் சோதனை செய்வது உட்பட வாய்ப்புறுதி ஆய்வுகளை மேற்கொள்ளுமாறும் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட நிறுவனத்தை அரசு வேண்டியுள்ளது. இவ் வேண்டுகோளும் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட நிறுவனத்தின் ஆய்விலுள்ளது.

ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட நிறுவனத்தின் உதவி பெறும் கனிவள மேம்பாட்டுத் திட்டத்தின் விளைவாக, நிலவியல் சார்ந்த இரசாயன ஆய்வுகள், நிலவியல் சார்ந்த பௌதிக ஆய்வுகள், பகுப்பாய்வுகள், கனிப் பொருட்களைப் பக்குவப்படுத்தல் ஆகியவற்றிற்கான எல்லா வசதிகளையும் கொண்டுள்ள ஆய்வுக் கூடங்கள் தமிழ்நாடு நிலவியல் ஆராய்ச்சிப் பிரிவில் உள்ளன. நுட்ப திறம் மேம்பட்ட இந்த நவீனக் கருவிகளை இயக்குவதில் பணியாளர்களுக்குப் பயிற்சியளிக்கவும் அதனால் இயன்றது. இவ்வாறாக அந்தச் சாதனங்களைக் கையாளுவதில் அவர்கள் பயனுள்ள அனுபவம் பெறுகிறார்கள். அதன் விளைவாக வெளிநாட்டுத் தொழில் வல்லுநர்கள் நாட்டைவிட்டுச் சென்றுவிட்ட பிறகும் கூட, புதிய முறையில் இச்சாதனங்களை அவர்களால் இயக்க முடியும்.

முன்னோடிச் சோதனைகளுக்கான கனிப்பொருள்கள் பதப்படுத்தும் ஆய்வுக்கூடம்.

1970. மே திங்களில் கனிப் பொருள்கள் பதப்படுத்தும் ஆய்வுக்கூடம் ஒன்றை ரூ. 20 லட்சம் செலவில் அமைப்பதற்கான ஒரு திட்டத்திற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியது. இந்த ஆய்வுக்கூடம் நாள் ஒன்றுக்கு 20 முதல் 25 டன் வரையிலான கனிப்பொருட்களின் பெருமளவு மாதிரிகளை ஆய்வு செய்யும், 'டான்லி' நிறுவனத்தின் ஒரு பிரிவாகிய சேலத்தி லுள்ள படிகக்கல் பொடியாக்கும் தொழிற்சாலையை மேற்கொள்வதும் இச்செயற் குறிப்பில் அடங்கும். இத்தொழிற்சாலையின் எல்லா இருப்பு களும் கனிப் பொருள்கள் பதப்படுத்தும் இந்த உத்தேச ஆய்வுக்கூடத்திற்கு மாற்றப்படும். கூடுதலாக புதிய சாதனங்கள் வழங்கப்படும் இந்த ஆய்வுக் கூடம் இம் மாநிலத்தின் கனிவள ஆராய்ச்சிப் பணிகளுக்குத் துணையாக இருப்பதுடன் இம் மாநிலத்தில் கனிப்பொருட்கள் சார்ந்த தொழில் களுக்கு நேரடியாகப் பயனளிக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆய்வுக்கூடத்தில் உரிய வசதிகள் செய்து கொடுக்கும் பணி **1973-ம்** ஆண்டிற்குள் முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

நீர் அபிரகப்பட்டைத் தொழிற்சாலைத் திட்டம் (Vermiculite Exfoliation Plant).

வெப்ப மூட்டப்படும்போது 12 முதல் 20 மடங்கு பருக்கக்கூடிய அல்லது விரியக்கூடிய மைக்கா வகையைச் சேர்ந்ததுதான் இந்த நீர் அபிரகப் படிவம் **(Vermiculite)** ஆகும். அனல் தடுப்பில் இக்கனிப் பொருள் உரையிட்டு மூடும் பொருளாகவும், மண்ணைப் பாங்காக்கும் சாதனமாகவும் பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது. பருத்துப் பெருகும் தன்மைக்குப் பின்னர் இக்கனிப் பொருளைப் பட்டையாக்கிய பின்னரே இதன் பயன் அதிகமாகிறது. அப்போது இக் கனிப்பொருள் ஏற்றுமதி செய்யப்பட்டால்தான் அது இம் மாநிலத்திற்குப் பயனளிக்கும்.

நாளொன்றுக்கு ஒரு டன் அளவுக்கு நீர் அபிரகப்பட்டை தயாரிக்கக்கூடிய முன்னோடித் தொழிற்சாலையொன்று அமைக்கப்பட்டது. வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூருக்கு அருகில் நீர் அபிரகப் படிவம் பெருமளவில் உள்ளதாகக் கூறப்படுகிறது. உற்பத்தி தொடர்பான முதனிலைப் முன்னோடிச் சோதனைகள் 1972 ஆம் ஆண்டு எப்ரல் திங்களில் மேற்கொள்ளப் படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தூரிய குடுவைகள் தொழிற்சாலை (Graphite Crucible Plant).

சிவகங்கையில் தூரியப் படிவம் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. தூரியக் குடுவைகள் தயாரிப்புக்கு தகுதி வாய்ந்த 2·5 இலட்சம் டன் தூரியப் படிவம் அப்பகுதியில் பரந்திருப்பதாகக் கண்டறியப்படுகிறது. சிவ கங்கையில் தூரியக் குடுவைகள் தயாரிப்பதென தொழில் வாணிகத் துறை கருதியுள்ளது. இத் திட்டத்திற்கு சுமார் ரூ. 25 இலட்சம் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் விரிவான ஒரு திட்ட அறிக்கையை இயக்குநர் தயாரிக்க வேண்டியுள்ளது.

கனிப்பொருள் படிவங்களுக்காக மாநில நிலவியல் பிரிவின் பிற ஆய்வுகள்.

ஆய்வு ஆண்டில், நிலவியல் பிரிவு, சிவகங்கையில் தூரியப்படிவம், திருமழிசையில் களிமண் படிவம், சத்தியமங்கலத்திற்கு அருகில் பச்சை வெங்கச் செங்கல் (Green Quartzite) காணப்படுவது குறித்து முந்திய ஆண்டில் தொடங்கிய ஆய்வுப்பணிகளைத் தொடர்ந்தது. இதனுடன் திசையின்விளைக்கு அருகில் களிமண் படிவங்கள் குறித்து விரிவான ஆய்வுகளும், பழனிமலைக் குன்றுகள் பகுதியிலும் அதையொட்டியுள்ள மதுரை மாவட்டப் பகுதிகளிலும் கனிவள ஆய்வும் மேற்கொள்ளப்பட்டன. அரியலூருக்கு அருகில் கிளிஞ்சல் சுண்ணாம்பு (Marine limestone), பல்லடம் வட்டத்தில் படிகக்கல், களிமம் குறித்தும் கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கடல் மணலும் ஆய்வுகள் செய்யப்பட்டு, ஆய்வுப் பணிகள் நிறைவேறி வருகின்றன. கனிவளங்கள் குறித்து இம் மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் சிறு சிறு ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. 1971 ஆம் ஆண்டில் மாநில நிலவியல் பிரிவால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் குறித்த பட்டியலொன்று இணைப்பு பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது.

அரசு இயந்திர செங்கல் தொழிற்சாலையின் பயனுக்காக திருமழிசை யில் கிடைக்கும் களிமண் குறித்த விரிவான ஆய்வுப் பணி முடிவுற்றது. செங்கல் மற்றும் ஓடு தயாரிப்புக்கான களிமண் இப்பகுதியில் 13 இலட்சம் டன் அளவுக்குப் படிந்திருப்பதாக மதிப் பிடப்பட்டுள்ளது. சோதனைத் துளைகளிலிருந்தும் குழிகளிலிருந்தும் சுமார் 500 மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, செக்கோஸ்லோவாகியா நாட்டு ஒத்துழைப்புடன் நிறுவப்பட்டு வருகிற செங்கல் தொழிற்சாலைக் கென ஆய்வுகள் செய்யப்படுவதற்காக செக்கோஸ்லோவாகியாவுக்கு அனுப்பப்பட்டன.

சத்தியமங்கலம், மற்றும் அத்தாணிக்கு அருகே ஃபஸ்ஸைட் குவார்ட்ஸைட் (Fuschite Quartzite) படிவங்களும் பூசாரிப்பாளையத்திற்கு அருகே மாக்னஸைட் படிவங்களும் கண்டிருப்பது பற்றி பெரிய அளவு கிராம வரைபடங்களில் குறிக்கப்பட்டன. ஃபஸ்ஸைட் குவார்ட்ஸைட் கனிகளின் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, கிருஷ்ணகிரியிலுள்ள மெருகேற்றும் அரசுப் பிரிவில் அவற்றிற்கு மெருகேற்றப்பட்டது.

பச்சை வெங்கச் செங்கல் (Green Quartzite) வெட்டி எடுப்பதற்கான சிறந்த இடங்கள் சில இப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டன.

கள்ளக்குறிச்சி, செந்துறை, கையிருலாபாத் பகுதிகளில் துளையிடுதல், பள்ளம் வெட்டிச் சோதனையிடுதல் மூலம் கிளிஞ்சல் சுண்ணாம்புக்கற்களை விரிவாக ஆய்வு செய்யும் பணி தொடங்கப்பட்டது. மொத்தம் 185 மீட்டர் ஆழத்திற்கு 12 துளைகள் அமைக்கும் பணி முடிக்கப்பட்டது. சுண்ணாம்புக் கற்கள் படிந்துள்ள பரப்பளவை வரையறுக்கும் பொருட்டு கனி வள ஆராய்ச்சிக்காக இப்பகுதியில் 22 பள்ளங்கள் வெட்டப்பட்டுள்ளன.

சுண்ணாம்புக்கல் கிடைப்பதற்கான வாய்ப்புகள் பெரிய அளவிலான திட்டங்களின்போது கண்டறியப்பட்டன.

வீபுரம் முதல் திருச்செந்தூர் வரை கடற்கரைப் பகுதிகளில் 'இல்மினைட்' செம்பொன் கற்கள், கனிச்செறிவுமிக்க ஏனைய மணல் ஆகியவற்றை ஆய்வு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது. இல்மினைட், செம்பொன் கிடைக்கும் பகுதிகள் பல கண்டுபிடிக்கப்பட்டு கிராம வரைப்படங்களில் குறிப்பிடப்பட்டன. நம்பியாற்று முகப்பிற்கும் ஓவாரி கிராமத்திற்கும் இடையே உள்ள பகுதியில் செம்பொன் கிடைக்கும் இடங்கள் சில கண்டுபிடிக்கப்பட்டன; அவ்விடங்களில் நிலத்தில் துளையிட்டு ஆராய்ச்சி செய்யப்பட்டது. கல்லாய்வு சார்ந்த ஆய்வுக்காகவும் (Petrographic Study) இரசாயனப் பகுப்பாய்வு செய்வதற்காகவும் நிலத்தில் மொத்தம் 1,065 துளைகள் போடப்பட்டு 2,717 மாதிரிகள் சேகரிக்கப்பட்டன.

திசையன்விளையைச் சுற்றி களிமண் கிடைப்பது பற்றிய ஆய்வுப் பணியும் விரிவான நிலவியல் வரைபடம் வரைதல் பணியும் முடிவுற்றன. களிமண் கிடைக்கும் முக்கிய இடங்கள் கிராம வரைபடங்களில் எல்லை குறிப்பிடப்பட்டுள்ளன.

தொழில் தொடர்புள்ள காரியங்களுக்கு இக்களிமண் உகந்ததா என்பது பற்றி முடிவு செய்யும் பொருட்டு இதனை இரசாயனப் பகுப்பாய்வு செய்யவும், பௌதீக, உலை சோதனைகள் நடத்தவும் வேண்டி மொத்தம் வரிப்பள்ளமிட்டு கிடைக்கும் மாதிரிகள் 250-ம் பெருமளவில் மாதிரிகள் 52-ம் சேகரிக்கப்பட்டன.

பள்ளம் வெட்டுதல், கிராமத் திட்டங்களில் பெரிய அளவிலான வரைபடங்களைத் தயாரித்தல் மூலம் வெங்கச் செங்கல் (quartz), களிமம் (feldspar) ஆகியவை குறித்து விரிவாக ஆய்வு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது. வெங்கச் செங்கல், களிமம் அடங்கிய பெக்மடைட் (Pegmatite) தனியாகக் கிடைக்கக்கூடிய இடங்கள்பற்றி வரைபடம் தயாரிக்க மேற்கண்ட ஆய்வுப்பணி மேற்கொள்ளப்பட்டது. பெக்மடைட் அமைந்துள்ள கட்டுகளின் குறுக்கே பல பள்ளங்கள் வெட்டப்பட்டு பகுப்பாய்வு செய்வதற்காக மாதிரிகள் சேகரிக்கப்பட்டன.

மதுரை மாவட்டத்தில் பழனி மலையின் உயரமான பகுதிகளிலும் அதனை அடுத்துள்ள பகுதிகளிலும் கனிப்பொருள் கிடைப்பது பற்றிய ஆய்வுப் பணியும், முறையாக வரைபடம் தயாரிக்கும் பணியும் நடத்தப் பட்டன. கனிப்பொருள் கிடைக்குமிடங்களைக் கண்டுபிடிப்பதற்காக 465 கிலோ மீட்டர் பகுதியில் முறையாக ஆய்வு செய்யப்பட்டது. சிறு அளவில் கிடைக்கக்கூடிய சுண்ணாம்புக் கற்கள், கருங்கல், அயக்காந்தம் (magnetite), வெங்கச் செங்கல், நாளங்களைத் தவிர ஆதாயம் தரக்கூடிய கனிப்பொருள் எதுவும் இப்பகுதியில் காணப்படவில்லை. மேற்கண்ட ஆய்வுப் பணி தவிர, மாநிலப் புவியியல் பிரிவு 1972-73ஆம் ஆண்டில் பின்வரும் ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளக் கருதியுள்ளது :—

1. கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோயில் அருகே வெள்ளைக் களிமண் (Refractory) கிடைப்பது பற்றி விரிவான ஆய்வு.

2. திருச்செந்தூருக்கு வடக்கே இராமநாதபுரம் கடற்கரை வரையில் கடற்கரை மணல் பற்றி ஆய்வு.

3. கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டத்தில் "ஸிர்கான்" (Zircon), அபடைட் கிடைப்பது பற்றி விரிவான ஆய்வு.

4. திருச்சி மாவட்டத்தில் பவழப் படிவக்கீற்றுகளில் உயர்ந்த ரகச் சுண்ணாம்புக்கல் கிடைப்பது பற்றி விரிவான வரைபடம் தயாரித்தல், ஆய்வு செய்தல்.

5. மதுரை மாவட்டம், சிறு மலைக்குன்றுகளில் கனிவள ஆய்வு.

6. திருச்சி மாவட்டம், பச்சைமலைக் குன்றுகளில் கனிவள ஆய்வு.

7. நீலகிரியில் (அபிரக ஆய்வுத் தொகுதி) அபிரகம் கிடைப்பது பற்றி ஆய்வு.

8. திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டத்தில் கனி பொருள் கிடைப்பது பற்றிய ஆய்வு.

9. கோயம்புத்தூர் மாவட்டம், சத்தியமங்கலம் அருகே மாக்னசைட் கிடைப்பது பற்றி விரிவான ஆய்வு.

10. கோயம்புத்தூர் மாவட்டம், கோபிச்செட்டிபாளையம் வட்டம், குட்டியாலத்தூர் ஒதுக்கக் காட்டுப் பகுதிகளில் கனிப்பொருள் கிடைப்பது பற்றிய ஆய்வு.

எண்ணெய்—இயற்கை வாயு.

இம்மாநிலத்தில் எண்ணெய் கிடைக்குமிடங்களைக் கண்டறிந்து அதனை பயனுக்குக் கொண்டுவரும் பணிக்கு இந்திய அரசின் எண்ணெய்-இயற்கை வாயு ஆணைக்குழு பொறுப்பு வகிக்கிறது. தென் ஆர்க்காடு, தஞ்சாவூர் மாவட்டங்களில் பின்வரும் பகுதிகளில் துளையிடும் பணியினை இந்த ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது :—

1. காரைக்கால்.
2. நாகப்பட்டினம்.
3. திருத்துறைப்பூண்டி.
4. சிதம்பரம்.
5. சாலியமங்கலம்.
6. பந்தநல்லூர்.

7. பட்டுக்கோட்டை.
8. திருப்பூண்டி.
9. கந்தர்வக்கோட்டை.
10. தஞ்சாவூர்.
11. கும்பகோணம்.
12. மன்னார்குடி.
13. நாக்குடி.
14. பாண்டிக்கண்மாய்.

வாணிபத்தைப் பொறுத்தவரையில் இந்த எண்ணெய் அல்லது வாயு எதுவும் பயன் தரத்தக்கதல்ல என்று இந்த ஆய்வுகளிலிருந்து தெரிய வந்துள்ளது. பின்னர் காட்டுமன்னார்கோயில் பகுதியில் துளையிடும் பணியை இந்த ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது. மேற்கொண்டும் இந்த ஆய்வுகள் பற்றிய முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

கனிவளங்களை வெட்டி எடுப்பதற்கான சலுகைகள்.

மாநிலத்தின் தொழில் மேம்பாட்டில் கனி வளங்கள் முக்கிய அங்கம் வகிக்கின்றன. கனிவளங்களைத் தக்கவாறு பயன்படுத்துதல், கவனமாகக் கையாளுதல், ஆகியவற்றின் சுரங்க ஆய்வு உரிமங்கள் சுரங்கக் குத்தகைகள் ஆகியவற்றை வழங்குவதற்கான அரசின் கொள்கைக்கு அடிப்படையாக அமைந்துள்ளது. கனிவளங்களைப் பயன்படுத்துவதற்கான திட்டவட்டமான தொழில் திட்டங்கள் கைவசம் வைத்திருப்பவர்களுக்கே இந்த உரிமங்கள் குத்தகைகள் ஆகியவற்றை வழங்குவதில் அரசு முன்னுரிமை அளிக்கிறது. கிடைக்கும் கனிகளை நல்ல முறையில் பயன்படுத்தும் நோக்கத்துடன், சுண்ணாம்புக் கல், களிக்கல் (Gypsum) இரும்புத் தாது, தூரியம் ஆகியவற்றை வெட்டி எடுப்பதற்கான சலுகைகளை இந்தக் கனி வளங்களைப் பயன்படுத்துவதற்கான, தெளிவான திட்டங்கள் வைத்திருக்கிற விண்ணப்பதாரர்களுக்கே வழங்குவது என்றும் அதுவும் அவர்களது தொழிற்சாலைகளுக்குத் தேவையான அளவுக்கு மட்டும்தான் வழங்குவது என்றும் அரசு முடிவு செய்துள்ளது. இதைப் போன்ற கட்டுப்பாடுகள், சேலம் மாவட்டத்தில் கிடைக்கும் களிமம் இரும்புக்குறும ஈருயிரகை (Feldspar Chromite), மாக்னஸைட் போன்ற கனிப்பொருள்களுக்கும் விதிக்கப்பட்டுள்ளன. கடந்த சில ஆண்டுகளில், சுரங்கக் குத்தகைகளின் எண்ணிக்கை, சுரங்கக் குத்தகைக்கு விடப்பட்டுள்ள பகுதிகள் ஆகியவை ஒரு சீராகப் பெருகிவருகின்றன. 1966–ல் சுரங்கக் குத்தகைகளின் எண்ணிக்கை 246 ஆகவும் சுரங்கக் குத்தகைக்கு விடப்பட்டுள்ள பகுதிகளின் பரப்பு 27,928·94 ஏக்கர்களாகவும் இருக்க, 1971–ல் சுரங்கக் குத்தகையின் எண்ணிக்கை 378 ஆகவும் குத்தகைக்கு விடப்பட்டுள்ள பரப்பு 40,302·90 ஏக்கராகவும் உயர்ந்துள்ளது. சுரங்கக் குத்தகைகள் சுரங்க ஆய்வு உரிமங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கையையும் அவற்றின்கீழ் வரும் பகுதிகளின் பரப்பையும் காட்டும் விவர அறிக்கை ஒன்று முறையே இணைப்பு II, இணைப்பு III–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

இணைப்பு I.

1971ஆம் ஆண்டில் செய்யப்பட்ட ஆய்வுகளின் பட்டியல்.

1. இராமநாதபுரம் மாவட்டம், சிவகங்கைப் பகுதியில் தூரியம் கிடைக்கும் இடங்கள் பற்றிய விரிவான ஆய்வு.

(முந்திய ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு தொடர்வது.)

2. திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளைக்கு அருகில் களிமண் கிடைக்கும் இடங்கள் பற்றிய விரிவான ஆய்வு.

3. திருச்சி மாவட்டம், அரியலூர் அருகே சுண்ணாம்புக்கல் கிடைக்கும் இடங்கள் பற்றிய விரிவான ஆய்வு.

4. கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களில் லீபுரம் முதல் வைப்பாறு முகத்துவாரம் வரையில் இல்மெனைட் (Ilmenite), மோனுசைட் (Monozite) மணல் தாதுப் பொருள்கள் கிடைக்கும் இடங்கள் பற்றிய ஆய்வு.

5. கோயம்புத்தூர் மாவட்டம் பேகம்பட்டிக்கு அருகில் படிகக்கல், களிமம் ஆகியவை கிடைக்கும் இடங்கள் பற்றிய விரிவான ஆய்வு.

6. மதுரை மாவட்டம், திண்டுக்கல் வட்டம், அழகுப்பட்டிக்கு அருகில் உரிவெள்ளி (Molybdenite) கிடைக்கும் இடங்கள் பற்றிய விரிவான ஆய்வு.

7. செங்கற்பட்டு மாவட்டம், திருமழிசையில் அங்கு அமைக்கக் கருதப் பட்டுள்ள இயந்திரச் செங்கற்சூளைக்கான களிமண் கிடைக்கும் இடங்கள் பற்றிய ஆய்வு (முந்திய ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு தொடரப்படுகிறது).

8. கோயம்புத்தூர் மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், சத்திய மங்கலத்தைச் சுற்றிலும் பச்சை வெங்கச் செங்கல் (Green guchsite quartzite) கிடைப்பது பற்றிய ஆய்வு.

9. கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலுக்கு அருகில் உள்ள இராஜக்கமங்கலத்திற்கு அருகில் களிமண் கிடைக்கும் இடங்கள் பற்றிய ஆய்வு.

10. இராமநாதபுரம் மாவட்டம், சிவகங்கைக்கு அருகில் கிராஃபைட் கிடைப்பது பற்றிய ஆய்வு.

11. வட ஆர்க்காடு மாவட்டம், திருவண்ணாமலைக்கு அருகில் (தமிழ் நாடு கனிவள மேம்பாட்டுத் திட்டத்தின் உடனமைப்புடன்) கவுதிமலைப் பகுதி யில் இரும்புத் தாது இருக்கிறதா என்று துளையிட்டுப் பார்த்தல்.

சிறு ஆய்வுகள் :

1. கோயம்புத்தூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், கம்பிளிப்பட்டியில் இரும்புத் தாதுக்கான கனிவள ஆய்வு.

2. திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், மேட்டூருக்கு அருகே மைக்கா கிடைப்பது பற்றிய ஆய்வு.

3. சேலம், மதுரை மாவட்டங்களில் மைக்கா அடங்கிய பெக்மாட்டைட்ஸ் (Mica bearing pagmatitites) கிடைப்பது பற்றிய ஆய்வு.

4. கோயம்புத்தூர் மாவட்டம், பல்லடம் வட்டம், கள்ளிப்பாளையத்தில் படிகக்கல் கிடைப்பது பற்றிய ஆய்வு.

5. தூத்துக்குடித் துறைமுகத் திட்டத்திற்காக கருங்கற்கள் சுரங்கத்தை தெரிந்தெடுத்தல்.

6. திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறைக்கு அருகில் விலையுயர்ந்த கற்கள் பற்றிய ஆய்வு.

7. கோயம்புத்தூர் மாவட்டம், அவிநாசி வட்டம், கட்டஞ்சிமலையில் வைரக் கற்கள் இருப்பதாகக் கூறப்படுவது பற்றிய ஆய்வு.

8. செங்கற்பட்டு மாவட்டம், திருப்போரூருக்கு அருகில் தங்கம் இருப்பதாகக் கூறப்படுவது பற்றிய ஆய்வு.

9. தருமபுரி மாவட்டம், வாதாமலைப் பேரையூரில் படிகக்கல் கிடைப்பதாகக் கூறப்படுவது பற்றிய ஆய்வு.

10. வட ஆர்க்காடு மாவட்டம், செய்யாறு வட்டத்தில் தங்கம் கிடைப்பதாகக் கூறப்படுவது பற்றிய ஆய்வு.

11. தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணிக்கு அருகே களிமண் பற்றிய ஆய்வு.

12. தஞ்சாவூர் மாவட்டம், மன்னம்பந்தலுக்கு அருகில் களிமண் பற்றிய ஆய்வு.

13. தென் ஆர்க்காடு மாவட்டம், செஞ்சி வட்டம், தாழங்குன்றத்திற்கு அருகே இரும்புத் தாது கிடைப்பது பற்றிய ஆய்வு.

14. தென் ஆர்க்காடு மாவட்டம், செஞ்சி வட்டம், பாக்கம்மலையில் கனிவள ஆய்வு.

நிலநீர் ஆய்வு :

1. கோயம்புத்தூர் மாவட்டம், ஜெர்மாலத்தில் உள்ள சௌக்கி பட்டுப் பூச்சி பண்ணையில் நில நீர் ஆய்வு.

2. இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், பாலங்குறிச்சி கிராமத்திற்கு அருகில் வற்றுத நீர் பற்றிய ஆய்வு.

3. கோயம்புத்தூர் அருகே சர்க்கரை ஆலை அமைக்க கருதப்பட்டுள்ள இடங்களில் நில நீர்வளம் பற்றிய ஆய்வு.

4. பனியன் தயாரிப்பாளர்களுக்கு, ஒரு தொழில் கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்காக, கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூருக்கு அருகே நிலநீர் வளம் பற்றிய ஆய்வு.

பொறியியல் நிலவியல் ஆய்வு.

1. நீலகிரி மாவட்டம், குந்தா-நீர், மின்சக்தித் திட்டத்தின் III-வது மின்சக்தி நிலையத்தின் கடைமடைக் கால்வாயின் நிலையான பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றிய ஆய்வு.

இணைப்பு II.

கடந்த ஐந்தாண்டுகளில் வழங்கப்பட்ட சுரங்கக் குத்தகைகளின் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை.

தொடர் எண்ணும் மாவட்டத்தின் பெயரும். (1)	1967. (2)	பரப்பளவு. (3)		1968. (4)	பரப்பளவு. (5)		1969 (6)	பரப்பளவு. (7)		1970. (8)	பரப்பளவு. (9)		1971. (10)	பரப்பளவு. (11)	
		ஏ.	செ.		ஏ.	செ.		ஏ.	செ.		ஏ.	செ.		ஏ.	செ.
1 செங்கற்பட்டு ..	2	604	00	..	..		..	..	..	1	2	92	..	..	..
2 தென் ஆர்க்காடு	2	24	82	2	26	32	2	9	63	1	16	30	..	..	
3 வட ஆர்க்காடு ..	2	195	29	..	..		1	89	00	1	17	25	4	172	47
4 சேலம் ..	6	401	35	3	199	28	2	60	51	3	272	11	2	3	31
5 தருமபுரி ..	..	..		..	..		1	24	40	..	..		1	327	61
6 கோயம்புத்தூர்	10	207	19	6	138	08	2	69	88	4	81	56	7	543	65
7 நீலகிரி ..	1	19	45	1	4	52	1	35	42	1	5	00	..	..	
8 தஞ்சாவூர் ..	..	..		..	..		..	..		..	..		..	..	
9 திருச்சிராப்பள்ளி	7	178	41½	3	64	09	6	234	93½	8	303	49	5	323	03
10 மதுரை ..	..	..		1	960	00	..	..		..	..		..	..	
11 இராமநாதபுரம்	2	1,330	12	2	70	96	..	..		2	406	02	7	1,640	13
12 திருநெல்வேலி	3	1,556	07	2	114	81	6	210	24	6	535	44	2	331	00
13 கன்னியாகுமரி	..	..		1	58	90	..	..		..	..		..	..	
14 சென்னை ..	..	..		..	..		..	..		..	..		..	..	
மொத்தம் ..	35	4,526	70¼	21	1,636	96	21	734	01½	27	1,640	09	38	3,336	20

இணைப்பு III

கடந்த ஐந்து ஆண்டுகளில் (1967—71) வழங்கப்பட்ட கனிவள நாடுநருக்கான உரிமங்களின் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை.

தொடர் எண்ணும் மாவட்டத்தின் பெயரும்.	1967.	பரப்பளவு. ஏ. செ.	1968.	பரப்பளவு. ஏ. செ.	1969.	பரப்பளவு. ஏ. செ.	1970.	பரப்பளவு. ஏ. செ.	1971.	பரப்பளவு. ஏ. செ.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)
1 செங்கற்பட்டு ..	..	..	..	..	..	..	1	309 47	2	214 79
2 தென் ஆர்க்காடு	1	3 93	..	..	..	..	..	..	..	..
3 வட ஆர்க்காடு ..	1	30 45	3	897 36	1	20 00	3	364 57	1	42 80
4 சேலம் ..	2	231 73	1	75 40	..	..	1	75 40	1	413 19
5 தருமபுரி ..	..	..	..	..	..	..	..	..	..	..
6 கோயம்புத்தூர்	1	30 00	..	..	..	..	2	17 79	1	5 73
7 நீலகிரி ..	1	19 61	1	20 00	1	53 36	..	..	..	..
8 தஞ்சாவூர் ..	..	..	..	..	..	..	..	..	..	..
9 திருச்சிராப்பள்ளி	2	6 29	1	13 99	1	9 78	1	23 68	1	6 89
10 மதுரை ..	..	..	..	..	..	..	..	..	1	1 83
11 இராமநாதபுரம்	..	..	..	..	..	..	..	..	..	..
12 திருநெல்வேலி	6	281 22	4	902 58	..	..	..	..	1	80 00
13 கன்னியாகுமரி	..	..	..	..	..	..	..	..	..	..
14 சென்னை ..	..	..	..	..	..	..	..	..	..	..
மொத்தம் ..	14	603 23	10	1,909 33	3	83 14	8	790 91	8	765 23

இணைப்பு—5

தமிழ் நாட்டில் 1971-ம் ஆண்டில் கைத்தறித் தொழில் வளர்ச்சி குறித்த ஆய்வுரை.

தமிழ்நாட்டில் கைத்தறித் தொழில் மிகத் தொன்மையான மாபெரும் குடிசைத் தொழிலாகும். இங்கு சுமார் 5·50 லட்சம் கைத்தறிகள் உள்ளன. (இது இந்தியாவில் உள்ள கைத்தறிகளின் எண்ணிக்கையில் 25 சத வீதத்திற்கு சற்றுக் கூடுதலாகும்.) ஏறத்தாழ 20 லட்சம் மக்கள் இத் தொழிலை நம்பியுள்ளனர். ஆண்டொன்றிற்கு ரூ. 48 கோடி மதிப்புள்ள சுமார் 39 கோடி கெஜம் கைத்தறித் துணிகள் உற்பத்தி செய்வதற்கான வாய்ப்புள்ள இத் தொழில் மாநிலத்தின் பொருளாதாரத்தில் முக்கிய இடம் வகிக்கிறது.

2. மனித உழைப்பின் உதவியுடன் பரவலான முறையில் அமைந்துள்ள ஒரு தொழிலாக இருப்பதால், மூலப்பொருட்கள், நிதி தொடர்பான சிக்கல்களை அது எப்போதும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. மேலும், பஞ்சாலைத் தொழிலின் முனைப்பான போட்டியையும் அது சமாளிக்க வேண்டியுள்ளது. இத் தொழிலின் மேம்பாட்டிலும் அதில் ஈடுபட்டுள்ள மக்களின் நலனிலும் தமிழ்நாடு அரசு தொடர்ந்து அக்கறை செலுத்தி வருகின்றது. மூலப்பொருள்கள் நிதி விற்பனை வசதிகள் ஆகியவற்றை நலந்தகு வகையில் பெற்றுத் தருவதற்கான தகுந்த நிறுவன முகவர்களாகச் செயலாற்றும் கூட்டுறவுகள் மூலம் அரசு உதவி பெரும்பாலும் அளிக்கப்படுகின்றது. இத் தொழிலின் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்கள் அரசால் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஆண்டுத் திட்டங்களின்கீழ் அரசுக்கு ஏற்பட்டுள்ள செலவு விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

	செலவு (ரூ. லட்சத்தில்.)
1967–68-ம் ஆண்டுத் திட்டம்	118·00
1968–69-ம் ஆண்டுத் திட்டம்	130·69
1969–70 நான்காவது ஆண்டுத் திட்டம்	145·06
1970–71 நான்காவது ஆண்டுத் திட்டம்	197·06
1971–72-ம் ஆண்டுத் திட்டம் (மதிப்பிடப்பட்டது) ..	253·12
1972–73-ம் ஆண்டுத் திட்டம் (திட்டமிடப்பட்டது) ..	234·61

இத் தொழிலின் மேம்பாட்டிற்காக, IV-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 10·60 கோடி ஒதுக்க அரசு திட்டமிட்டுள்ளது. மூன்ருவது திட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பற்பல கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள், நான்காவது ஆண்டுத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கம், 1966–67 முதல் 1968–69 வரையிலான ஆண்டுத் திட்டங்களின்கீழ் ஆன செலவு, 1969–70, 1970–71 ஆம் ஆண்டுகளில் நான்காவது திட்டத்தின்கீழ் ஆன செலவு, 1971–72-ஆம் ஆண்டு மதிப்பீட்டுச் செலவு, 1972–73 ஆம் ஆண்டுக்கான திட்டம் ஆகியவை குறித்த தனித்தனியான விவரங்கள் I-A-ம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

3. நடப்பாண்டில் கைத்தறித் தொழிலுக்கு வழங்கப்பட்டு, திட்ட நிதி ஒதுக்கத்தில் சேர்க்கப்படாத நிதியுதவி.

1971–72-க்கென (31—12—1971 வரை) கீழ்க்கண்டவாறு மேற் கொண்டு நிதி ஒதுக்கம் (திட்டத்தில் சேராதது) செய்யப்பட்டுள்ளது :—

(1)	(2) (ரூ. லட்சத்தில்.)
(1) கூட்டுறவுத் துறை மூலம் உதவி.	
(a) கைத்தறித் துணியும், நூலும் வாங்குவதற்காக இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து தமிழ் நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்ட நடைமுறை மூலதனக் கடன் ..	325·00
(b) கூட்டுறவு மத்திய வங்கிகள் மூலமாக இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடை முறை மூலதனக் கடன் வழங்குதல்	332 25
(c) மத்திய வங்கியின் சொந்த நிதி வாயில்களி லிருந்து நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங் களுக்கு நடைமுறை மூலதனக் கடன் வழங்குதல்.	87·27
(d) மாநில, மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்கு நடை முறை மூல தனக் கடன் வழங்குதல்	435·00
மொத்தம் ..	1,179·52

1972 மார்ச் 14]

(1)	(2)
	(ரூ. லட்சத்தில்.)
(2) கூட்டுறவுத் துறையின்கீழ் வராமல் கைத்தறி தொழிலுக்கு உதவி.	
(a) கூட்டுறவுத் துறையின்கீழ் வராமல் கைத்தறித் தொழிலின் மேம்பாட்டுக்காக இவ்வாண்டில் கைத் தறி நிதிக் கழகத்தினால் வழங்கப்பட்ட கடன்கள்.	149·35
(b) கூட்டுறவு நூற்பு ஆலைகள் உற்பத்தி செய்த நூலின் விற்பனையின் மீதான விற்பனை வரியில் 50 சத வீதத்தை வைத்துக்கொள்ள மேற்படி ஆலைகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்ட ரூ. 27·50 லட்சம் வட்டியில்லாக் கடன்	27·50
(c) பங்குதாரர்களுக்குப் பங்குத் தொகை கொடுப்பதற்காகக் கைத்தறி நிதிக் கழகத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்ட கடன்கள்	2·49
(d) தமிழ் நாடு ஜரிகை பிரிவில் செய்துள்ள முதலீடு. ..	2·00
மொத்தம் ..	1,360·86

4. இம் மாநிலத்தில் நிறைவேற்றப்படும் பல்வேறு கைத்தறி வளர்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் குறித்த சுருக்கம் வருமாறு :—

I. கூட்டுறவுத் துறையின்கீழ் கைத்தறிகளைக் கொண்டுவருதல்.—இம் மாநிலத்தில் 31–3–1971 அன்றைய நிலவரப்படி 764 நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. இவற்றில் 1·60 லட்சம் தறிகள் இருந்தன. இவை, இம் மாநிலத்தில் உள்ள கைத்தறிகளின் மொத்த எண்ணிக்கையில் 29 சத வீதம் என்று கணக்கிடப்பட்டது.

கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட கைத்தறி நெசவாளர்கள் ஒவ்வொருவருக்கும் உறுப்பினர் ஒருவருக்கு ரூ. 75 என்ற பேரளவுக்கு உட்பட்டு பங்கு மதிப்பில் 75 சதவீதம் கடன் வழங்கப்படுகிறது. ஏற்கெனவே உறுப்பினர்களாக உள்ளவர்களுக்கும் தங்களுடைய பங்கு மூலதனத்தை அதிகரிக்கவும் அதே உயர் வரம்புக்குட்

பட்டு கடன்கள் வழங்கப்படுகின்றன. புதிய உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்வதில் இத் திட்டத்தின் சாதனை குறித்த விவரங்கள் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன :—

ஆண்டு.	புதிய தறிகளைச் சேர்த்தல்.	புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் உட்பட உறுப்பினர்களுக்கு பங்கு மூலதனக் கடன்கள்.
(1)	(2)	(3)
		(ரூ. லட்சத்தில்.)
1967–68	3,522	2·16
1968–69	3,871	2·99
1969–70	2,500	2·00
1970–71	5,000	5·80
1971–72	5,000 (மதிப்பிடப்பட்டது.)	3·75
1972–73 (திட்டமிடப்பட்டது)	5,000	6·00

பொருளாதார முறையில் தனித்து இயங்க முடியாதவையும், நிதி வசதியற்றவையுமான சங்கங்களை மூடிவிடும் நோக்கத்துடன் நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களைச் சீரமைக்கும் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் விளைவாக 1967 ஜூன் திங்களில் 1,069 ஆக இருந்த அவற்றின் எண்ணிக்கை 1971 மார்ச்சில் 764 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. எனினும், அடுத்துள்ள தனித்தியங்கக் கூடிய சங்கங்களில் இவ்வாறு மூடப்பட்ட சங்கங்களின் நெசவாளர்களைச் சேர்த்துக் கொள்வதும், தற்போதுள்ள சங்கங்களில் புதிய நெசவாளர்களைச் சேர்த்துக் கொள்வதும் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன. இயலுமிடங்களிலெல்லாம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்குவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டின் பல பாகங்களிலும் 1971-72-ம் ஆண்டுக்கால அளவில் 11 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை தொடங்க

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

இதுவரை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைத் தொகுக்கவும் தனித்து இயங்கமுடியாத சங்கங்களைத் தனித்து இயங்கும் சங்கங்களாக மாற்றவும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதுவரை மேற்கொண்ட முயற்சிகள் காரணமாக 1971-72-ல் 7 சங்கங்கள் புத்துயிர் பெற்றுள்ளன.

II. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் நடைமுறை மூலதனம்.—நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நியாயமான வட்டி வீதத்தின் போதிய அளவுக்கு நடைமுறை மூலதனம் வழங்க வகை செய்வதே கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்கு மிக முக்கிய முதல் தேவையாகும். மாநிலக் கூட்டுறவு வங்கிகள், மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிகள் மூலமாக இந்திய ரிசர்வ் வங்கி வட்டி வீதத்தைக் காட்டிலும் 1·5 சத வீதம் குறைவான வட்டி வீதத்தில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இந்திய ரிசர்வ் வங்கி நிதி உதவி வழங்குகின்றது. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சலுகை வட்டி வீதத்தில் கடன் வழங்க இயலும்வகையில் கடன் வழங்கும் கூட்டுறவு வங்கிகளுக்கு அதற்குரிய ஆதாயமாக வட்டி வகையில் 3 சத வீதம் உதவித் தொகை அளிக்கப்படுகின்றது.

மாநில கைத்தறி நெசவாளர் சங்கம் உட்பட நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் நடைமுறை மூலதனத்திற்கு அரசு உத்தரவாதமுண்டு. 1970-71-ம் ஆண்டில் இது தொடர்பாக ரூ. 500 லட்சம் அளவிற்கு இந்திய ரிசர்வ் வங்கிக்கு அரசு உத்தரவாதமளித்துள்ளது. 1971-72 ஆம் ஆண்டில் இது தொடர்பாக ரூ. 625 லட்சம் அளவிற்கு இந்திய ரிசர்வ் வங்கிக்கு அரசு உத்தரவாதமளித்துள்ளது. 1972-73-ம் ஆண்டுக்காக இந்திய ரிசர்வ் வங்கிக்கு ரூ. 777 லட்சம் வரை அரசு உத்தரவாதமளிக்க பரிவுரை செய்யப்பட்டுள்ளது. மத்திய வங்கிகள் தங்களுடைய சொந்த நிதி வாயில்களிலிருந்து அளிக்கும் கடன்களுக்காகவும் உதவித் தொகை அளிக்கப்படுகின்றது. இந்திய ரிசர்வ் வங்கி அளிக்கும் தொகையைக் கொண்டு தமிழ் நாடு கூட்டுறவு வங்கி தமிழ் நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சலுகை வட்டி வீதத்தில் கடன் வழங்கும்பொழுது அதற்குரிய ஆதாயமாக வட்டி வகையில் ஒரு சத வீத உதவித் தொகை அதற்குத் தாப்படுகிறது.

மாநிலக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கும் நெசவாளர் தொடக்க கூட்டுறவுச் சங்கத்திற்கும் வழங்கப்பட்ட கடன்களும், வட்டி குறித்து வழங்கப்பட்ட உதவித் தொகையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

கீழ்க்கண்ட அளவில் கடன்கள் வழங்கப்பட்டன :—

ஆண்டு.	மாநிலக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.	நெசவாளர் தொடக்க கூட்டுறவுச் சங்கங்கள்.	மொத்தம்.	வழங்கப்பட்ட நடைமுறை மூலதன கடன்கள் மீதான வட்டி குறித்த மொத்த உதவித் தொகை.
	(2)	(3)	(4)	(5)
		(ரூ. லட்சத்தில்.)		
1967-68 ..	100·00	286·05	386·05	10·62
1968-69 ..	100·00	281·70	381·70	9·00
1969-70 ..	100·00	284·20	384·20	11·00
1970-71 ..	150·00	350·00	500·00	11·52
1971-72 ..	275·00	350·29	625·29	13·00
1972-73 (திட்டமிடப்பட்டது).	350·00	427·00	777 00	13·00

நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு நடைமுறை மூலதனக் கடன்கள் வழங்குவதில் கூட்டுறவு மத்திய வங்கிகளுக்கு ஏற்பட்ட விரயங்களை ஈடு செய்வதற்கு உத்திரவாதம் அளிக்கும் திட்டம்.—விரயத்தை ஈடு செய்யும் திட்டத்தின்கீழ், இந்திய ரிசர்வ் வங்கிக் கடன்களிலிருந்தும் வங்கிகளின் சொந்த வாயில்களிலிருந்தும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட நடைமுறை மூலதனக் கடன்களைத் திரும்ப வசூலிக்க இயலாததால் ஏழக்கூடிய விரயங்களை முறையே 50 சத வீதம் 40 சத வீதம் அளவிற்கு ஏற்க இந்திய அரசும், மாநில அரசும் ஒப்புக் கொண்டுள்ளன. எஞ்சியுள்ள 10 சத வீதத்தைக் கூட்டுறவு கடன் வழங்கும் வங்கிகளே ஏற்க வேண்டும். கூட்டுறவு மத்திய வங்கிகளால் கைத்தறித் தொழிலுக்கு வழங்கப்படும் மொத்தக் கடன்களில் 5 சத வீதம் என்ற மேல்வரம்பு வரையில்தான் மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்க வேண்டுமென்று மேலும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

1966-67 முதல் இதுவரையில் இத் திட்டத்தின்கீழ் ஒன்பது கூட்டுறவு மத்திய வங்கிகளுக்கு ரூ. 2·66 லட்சம் அளிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் 1972–73–ம் ஆண்டிற்கு ரூ. 2·00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

III. நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூல தனத்தில் மாநில அரசு பங்கு கொளல்.—நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைமுறை மூலதன நிதி வழங்கும் இந்திய ரிசர்வ் வங்கி சில விதி முறைகளை வரையறுத்துள்ளது. அவற்றில் ஒரு விதி முறையின் கீழ் சங்கங்கள் தாங்கள் வாங்கும் கடனுக்காக 10 சத வீத ஈடு காட்ட வேண்டும். அவ்வாறு ஈடுகாட்ட இயலாத சங்கங்களுக்கு உதவுவதற்காக, அவற்றின் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்வதன் மூலம் அவற்றின் நிதிவாயில்களை அரசு வலுப்படுத்தியுள்ளது. இவ்வாறு 1967-68 ஆம் ஆண்டில் ரூ. 4 லட்சம் அளவுக்கு 101 நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களிலும் 1968-69 ஆம் ஆண்டில் ரூ. 5 லட்சம் அளவுக்கு 103 நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களிலும் அரசு பங்கு மூலதன முதலீடு செய்தது. 1969-70 இல், 145 சங்கங்களில் ரூ. 9 லட்சத்தை அரசு பங்குத் தொகையாகச் செலுத்தியுள்ளது. 1970–71 இல் ரூ. 8 இலட்சம் அளவிற்கு 120 சங்கங்களில் அரசு பங்கு மூலதன முதலீடு செய்துள்ளது. 1971-72 ஆம் ஆண்டுக்கு இவ் வகையில் ரூ. 10 லட்சம் முதலீடு செய்ய வேண்டியிருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 1972-73 ஆம் ஆண்டுக்கு ரூ. 10 லட்சம் ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

IV. தொழில் நுட்ப மேம்பாடுகளுக்குரிய திட்டம்.—நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தியையும், உற்பத்தி முறைகளையும், மேம்படுத்த வேண்டும். அப்போதுதான் அவை கவர்ச்சிகரமான துணிகளை உற்பத்தி செய்து, ஆலைகளின் போட்டிக்கு ஈடு கொடுக்க முடியும். எனவே, சீரான கைத்தறிகள், நெசவுக் கருவிகள் இவற்றின் விலையில் 75 சத வீதம் உதவித் தொகையாக அரசு அளிக்கிறது; எஞ்சிய 25 சத வீதம் கடனாக வழங்கப்படுகிறது.

பெரிய, சிறிய சாயச் சாலைகளை நிறுவும் திட்டங்களுக்கும் அரசு நிதி உதவி அளிக்கின்றது. இத் திட்டத்தின்கீழ் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

ஆண்டு.	செலவு.	பிரிவு.	எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் லட்சத்தில்.)		
1967–68	2·22	மேம்பாடு செய்யப் பட்ட கருவிகள்.	6,719
1968–69	2·65	மேம்பாடு செய்யப் பட்ட கருவிகள்.	8,354
		சிறு சாயச் சாலைகள்.	5

[1972 மார்ச் 14

ஆண்டு.	செலவு.	பிரிவு.	எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் லட்சத்தில்.)		
1969-70	2·65	மேம்பாடு செய்யப் பட்ட கருவிகள்.	8,355
		சிறிய சாயச் சாலை கள்.	5
1970-71	6·62	மேம்பாடு செய்யப் பட்ட கருவிகள்.	3,927
1971-72	2·00 (மதிப்பிடப் பட்டது.)	மேம்பாடு செய்யப் பட்ட கருவிகள்.	2,504
		சிறிய சாயச் சாலை கள்.	5
1972-73 (திட்டமிடப் பட்டது.)	2·00	மேம்பாடு செய்யப் பட்ட கருவிகள்.	50,535
		சிறிய சாயச் சாலை கள்.	5

V. உற்பத்தியும், விற்பனையும்.—கூட்டுறவுத் துறையில் கைத்தறித் துணிகளின் உற்பத்தியும், விற்பனையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

ஆண்டு.	உற்பத்தி (பத்து லட்சம் (கெஜத்தில்).	விற்பனை (ரூபாய் கோடியில்).
(1)	(2)	(3)
1966-67	80·00	10·50
1967-68	83·94	10·74
1968-69	77·72	11·01
1969-70	67·74	10·85
1970-71	67·27	15·00
1971-72	79·50	16·50

தமிழ் நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் மட்டும் தனது விற்பனைப் பிரிவுகளின் மூலம் விற்ற கைத்தறித் துணிகளின் மதிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

		(ரூபாய் கோடியில்.)
1.	1966-67-ல் விற்பனை	4·10
2.	1967-68-ல் விற்பனை	4·14
3.	1968-69-ல் விற்பனை	4·23
4.	1969-70-ல் விற்பனை	4·69
5.	1970-71-ல் விற்பனை	6·17
6.	1971-72-ல் விற்பனை (எதிர்பார்க்கப்படுவது) ..	8·00
7.	1972-73-ல் விற்பனை (திட்டமிடப்பட்டது)	12·00

முதல் ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் கூட்டுறவுத் துறையில் சுமார் ரூ. 8 கோடி மதிப்புள்ள 740 லட்சம் கெஜம் கைத்தறித் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டன. கைத்தறித் தொழிலுக்குப் பெருமளவு நிதி உதவி வழங்கப்பட்டதன் விளைவாகப் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதால், 1963-64-ல் 11·5 கோடி கெஜம் அளவிற்கு கைத்தறித் துணிகள் உற்பத்தி பெருகியது. ஆனால் பஞ்சாலைத் தொழிலில் பொதுவாக மந்த நிலை ஏற்பட்டதாலும், நைலான், டெரிலின் முதலிய செயற்கை நூல் துணிகளை மக்கள் பெரிதும் விரும்பி வாங்கியதாலும் கைத்தறித் துணியின் உற்பத்தி அது முதல் குறைந்து வந்துள்ளது. மேலும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, இந்திய ரிசர்வ் வங்கி கடன் வழங்கும் முறையைத் தறிக்கு இவ்வளவு கடன் என்ற அடிப்படையிலிருந்து உற்பத்தி அடிப்படைக்கு மாற்றியுள்ளது. திருத்த அடிப்படையின் நிபந்தனைகள் பல்வேறு சங்கங்கள் செயலாற்றுவதையும் அவற்றின் உற்பத்தியையும் பாதித்துள்ளது. நடைமுறை மூலதனக் கடன் வழங்குவதற்கான நிபந்தனைகளைத் தளர்த்துமாறு இந்திய ரிசர்வ் வங்கியை மாநில அரசு வற்புறுத்தி வந்துள்ளது. இந்திய ரிசர்வ் வங்கியும் சில நிபந்தனைகளை தளர்த்த அனுமதி வழங்கியுள்ளது. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வணிக முறைகளை மேற்கொள்ளுவதுடன் பொதுவான வங்கிக் கோட்பாடுகளை ஒட்டி நடக்கவும் வேண்டும். குறைவான வாணிபத்துக்கு அதிகப் பங்கு மூலதனம் தேவைப்படுவதே அவர்களுடைய பெருந் துன்பமாகும். அவர்களுடைய வணிகத்தை விரைவுபடுத்துவதற்கும், அதிகரிப்பதற்கும், உற்பத்தியைச் சீரமைப்பது மிகவும் அவசியமாகும். அக்ரீலிக் நூல், டெரிலின் நூல் போன்ற இரசாயன நூல் துணிகளைப் பயன்படுத்தி கைத்தறித் துணி உற்பத்தி செய்ய சோதனை மாதிரிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த நோக்கில் நெசவாளர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக வகுக்கப்பட்டுள்ள திட்டம், பிறிதொரு இடத்தில் விளக்கப்பட்டுள்ளது.

சங்கங்கள், தங்களிடம் உள்ள இருப்புகளை விற்பனை செய்வதற்கு அரசு சிறப்பு உதவி அளித்து வந்துள்ளது. நெசவாளர் தொடக்கச் சங்கங்களிடம் இருப்புகள் தேங்கிக் கிடக்கும்பொழுது அவற்றை முனைந்து வாங்கு

வதற்காக மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு நிதி உதவி அளிக்கப்படுகின்றது. அப்பொழுதுதான் சங்கங்களின் உறுப்பினர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்புக் கிடைக்க இயலும். 1969-70-ம் ஆண்டு தமிழ் நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஏற்கனவே அளிக்கப்பட்ட ரூ. 25 லட்சம் கடனுடன் கூட, இந்த நோக்கத்திற்காக ரூ. 50 லட்சம் கடன் அளிக்கப்பட்டது. 1970-71-ம் ஆண்டிலும் தமிழ் நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 50 லட்சம் தற்காலிகக் கடன் வழங்கப்பட்டது.

கைத்தறித் துணிகளின் விற்பனையைப் பெருக்குவதற்காக, 1968-69-ம் ஆண்டில் ஒரு திட்டத்திற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியது. அத் திட்டத்தின் கீழ் தமிழ் நாடு கைத்தறி நெசவாளர்கள், கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனைப் பிரிவுகளிலிருந்து கைத்தறித் துணி வாங்குவதற்காக அரசு பணியாளர்களுக்கு முன் பணங்கள் வழங்கப்படும். இத் திட்டத்தின்கீழ், அரசுப் பணியாளர் ஒருவர் ஒரு திங்களுக்கான அடிப்படைச் சம்பளத் தொகைக்கு நிகராக தமக்கு வழங்கப்படும் முன் பணத்தைக் கொண்டு தமக்குத் தேவையான கைத்தறித் துணிகளை வாங்கிக்கொள்ளலாம். முன் பணம் மொத்தத் தொகையாகப் பெற்றுக்கொள்ளப்பட்டு மாநிலச் சங்கத்திடம் அளிக்கப்படுகின்றது. இத் தொகை சம்பந்தப்பட்ட அரசுப் பணியாளரின் சம்பளத்திலிருந்து 6 அல்லது 8 திங்கள் தவணைகளில் அலுவலகத் தலைவரால் வசூலிக்கப்படுகின்றது. இத் திட்டம் 1969-70-ம் ஆண்டிலிருந்து நிலைப்படுத்தப்பட்டு, உள்ளாட்சி மன்ற ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களுக்கும் நீட்டிக்கப்பட்டது. தமிழ் நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் 1969-ம் ஆண்டு தீபாவளி காலத்தில் தனது விற்பனையை ரூ. 48 லட்சம் அளவுக்கு அதிகரிக்கவும், 1970-ல் ரூ. 71·36 லட்சம் அளவிற்கு அதிகரிக்கவும் இத் திட்டம் உதவி செய்துள்ளது. 1971-ல் தமிழ் நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் மேற்கொண்ட சிறப்பான முயற்சிகள் காரணமாக, தீபாவளி காலத்தில் அதன் கடன் விற்பனை ரூ. 1.27 கோடி என்ற உச்ச நிலையை எட்டியுள்ளது.

VI. தள்ளுபடித் தொகை உதவி.—கைத்தறித் துணி வாங்குவோருக்கு ஊக்கமளிக்கும் வகையில், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களது விற்பனைகளுக்குத் தள்ளுபடி அனுமதிக்கும் வகையில் சில்லறை விற்பனைகளின் ஒவ்வொரு ரூபாய்க்கும் 5 காசும், மொத்த விற்பனைகளின் ஒவ்வொரு ரூபாய்க்கும் 3 காசும் உதவித் தொகையை அரசு அளித்து வந்துள்ளது. அனைத்திந்தியக் கைத்தறி வாரம் போன்ற விழாக்களின் போதும், தீபாவளி, பொங்கல் போன்ற முக்கியப் பண்டிகைகளின்போதும் 15 நாள் கால அளவுக்குப் பருத்திக் கைத்தறித் துணிகள், கலப்புக் கைத்தறித் துணிகள் சில்லறை விற்பனையின் மேல் ரூபாய் ஒன்றுக்கு 10 காசு வீதம் கூடுதல் தள்ளுபடி வழங்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களிடம் தேங்கிவிட்ட இருப்புகளை விற்பனை செய்வதற்காக (பருத்தி, பட்டு, செயற்கைப் பட்டு அல்லது வேறு ஏதேனும் செயற்கை நூலைக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட) எல்லா வகையான கைத்தறித் துணிகளுக்கும், 1970-71-ம் ஆண்டில் மொத்தம் 68 நாட்களுக்கு அவற்றின் மொத்த, சில்லறை விற்பனைகளின்

மீது 10 காசு வீதம் உயரிய தள்ளுபடி அளிக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியது. ஆனால், அனைத்திந்தியக் கைத்தறி வாரியம், பருத்தித் துணிகளின் சில்லறை விற்பனைகள் மீதான தள்ளுபடித் தொகை உதவியை ஓர் ஆண்டில் 15 நாட்களுக்குத்தான் வழங்கலாம் என்று அனுமதித்துள்ளது. 1971-72-ம் ஆண்டில் அரசு இச் சலுகையை 85 நாட்களுக்குத் நீட்டித் துள்ளது. தள்ளுபடி வழங்குவதற்கான திட்டத்தின்கீழ் ஏற்பட்ட செலவு குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

ஆண்டு.	செலவு (ரூபாய் லட்சத்தில்.)
1968-69	84·65
1969-70	90·00
1970-71	110·00
1971-72 (மதிப்பிடப்பட்டது)	130·00
1972-73 (திட்டமிடப்பட்டது)	110·00

VII. விற்பனையும், பிரச்சாரமும்.—விற்பனைக் கிடங்குகளையும், விற்பனை நிலையங்களை நிறுவவும், நாள்காட்டிகளை அச்சிடுதல், காகிதப் பைகள், செய்தித் தாள்களில் விளம்பரம் வெளியிடுதல், பொருட்காட்சிகளில் பங்குகொள்ளுதல், முதலிய பல்வேறு விளம்பர நடவடிக்கை களுக்காகவும், தமிழ் நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக் காகவும், நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அரசு நிதி உதவி வழங்குகின்றது. உற்பத்திப் பொருள்களின் வகைகள், மலிவு கைத்தறித் துணியின் தன்மை முதலியவற்றை விளக்குவதற்காக கிராமப் பகுதிகளிலும் பெருநகர்ப் பகுதிகளிலும் காண்பிப்பதற்காக விளம்பரப் படம் தயாரிக்கவும் திட்டமிடப்பட்டது. இத் திட்டத்தின்கீழ் ஆன செலவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

ஆண்டு.	செலவு. (ரூபாய் லட்சத்தில்.)
1967-68	7·45
1968-69	6·50
1969-70	6·95
1970-71	5·39
1971-72 (மதிப்பிடப்பட்டது)	2·00
1972-73 (திட்டமிடப்பட்டது)	7·00

VIII. நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்.—தறி இல்லாத நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக இவ்வகைச் சங்கங்கள் தொடங்கப்படுகின்றன. உறுப்பினர்களின் பங்கு மூலதனத்திற்கும் தறிகளையும், ஏனைய துணைக் கருவிகளையும் வாங்குவதற்கும் உதவி அளிப்ப தோடு, பணிக்கூடங்கள் கட்டுவதற்கு 10 ஆண்டுகளுக்குள் திருப்பித் தரத் தக்க நீண்ட காலக் கடன்கள் இச் சங்கங்களுக்கு வழங்கப்படுகின்றன.

TRUTH ALONE TRIUMPHS

பணியாளர்களை அமர்த்தல், வாடகை செலுத்தல் ஆகியவற்றிற்காக முதல் மூன்று ஆண்டுகளுக்கு உதவித் தொகை இச் சங்கங்களுக்கு வழங்கப்படுகின்றன. இச் சங்கங்களின் உறுப்பினர்கள், சங்கப் பணிக் கூடங்களில் பணியாற்றி ஊதியம் பெறுகின்றனர். மேலும் சங்கங்களுக்கு ஆதாயம் கிடைக்கும்போது, தங்கள் உற்பத்தியின் மீது அவர்கள் பூரிப்பூதியம் பெறுகின்றனர். இம் மாநிலத்தில் 22 நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவற்றின் ஆண்டு உற்பத்தி மதிப்பு ரூ. 68·00 லட்சமாகும். இவற்றிலே சில சங்கங்கள் கண்கவர் படுக்கை விரிப்புகளையும், வண்ணத் துவாலைகளையும், வீடுகளுக்கு அழகூட்டும் துணிகளையும் தயாரிக்கின்றன; இவை உடனடியாக விற்பனையாகின்றன.

இத் திட்டத்தின் கீழ் செய்த செலவு விவரத்தைக் கீழே காணலாம் :—

ஆண்டு.	செலவு (ரூபாய் லட்சத்தில்).
1967-68	0·11
1968-69	..
1969-70	0·20
1970-71	1·80
1971-72 (மதிப்பிடப்பட்டது)	1·30
1972-73 (திட்டமிடப்பட்டது)	1·15

IX. **பட்டுத் தொழில்.**—தமிழ்நாட்டிலுள்ள 20,000 பட்டுத் தறிகளில் 1971-72 இல் காஞ்சிபுரத்தில் புதிதாகத் தொடங்கப்பட்ட பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்றுடன் 12 பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத் தின்கீழ் 3,500 தறிகள் கூட்டுறவுத் துறையில் இயங்கி வருகின்றன. பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் நடைமுறை மூலதனத்திற்குப் பெருந் தொகை வேண்டியுள்ளது. எனவே, இந்திய ரிசர்வ் வங்கி, 1968-69-ல் இருந்து இச் சங்கங்களுக்குக் கடனுதவி வழங்கியுள்ளது. பட்டு நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம் சராசரி ஆண்டுதோறும் உற்பத்தி செய்யும் சரக்கின் மதிப்பு ரூ. 110·57 லட்சமாகும். இவை விற்பனை செய்யும் சரக்கின் மதிப்பு ரூ. 131·88 லட்சமாகும். இத் திட்டத்தின்கீழ் ஏற்பட்ட செலவு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

ஆண்டு.	நிதிச் செலவு. (ரூபாய் லட்சத்தில்).
1967-68	4·19
1968-69	0·54
1969-70	0·70
1970-71	0·86
1971-72 (மதிப்பிடப்பட்டது)	0·63
1972-73 (திட்டமிடப்பட்டது)	0·42

1972 மார்ச் 14]

1968-69-ல் இருந்து நடைமுறை மூலதனக் கடன் வழங்குவதை இந்திய ரிசர்வ் வங்கி எடுத்துக்கொண்டு விட்டதால், செலவு குறைந்துள்ளது

X. பயிற்சி.—கைத்தறித் துணிகளின் ரகங்கள், வண்ணங்களை மேம்படுத்தும் நோக்கத்தோடு, நெசவாளர் சங்கங்களின் உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டமொன்று நிறைவேற்றப்பட்டு வருகிறது இத் திட்டத்தின்கீழ் அருகிலுள்ள நெசவாளர்களுக்கு இம் மாநிலத்திலுள்ள நான்கு நிலையங்கள் பல்வேறு நவீன நெசவு முறைகளில் பயிற்சி அளிக்கப்பட்டது. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் சாயத் தொழிலாளர்களுக்கு மேம்பாட்டு முறைகளில் சாயத் தொழிலுக்கான பயிற்சியும், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களுக்கு, கணக்கெழுதி வைத்து வருதல், அலுவலக நிர்வாக முறை, கைத்தறி தொழிலியல் ஆகியவற்றில் பயிற்சியும் அளிக்கப்பட்டது.

இத் திட்டத்தின்கீழ் ஏற்பட்ட மேம்பாடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

ஆண்டு.	செலவு. (ரூபாய் லட்சத்தில்).	திட்ட சாதனை.	
1967-68 ..	1·57	பயிற்சியளிக்கப்பட்ட நெசவாளர்	397
		பயிற்சியளிக்கப்பட்ட சாயத் தொழிலாளர் ..	15
		பயிற்சியளிக்கப்பட்ட பணியாளர்	229
1968-69 ..	1·45	பயிற்சியளிக்கப்பட்ட நெசவாளர் ..	377
		பயிற்சியளிக்கப்பட்ட சாயத் தொழிலாளர் ..	17
		பயிற்சியளிக்கப்பட்ட பணியாளர்	162
1969-70 ..	1·27	பயிற்சியளிக்கப்பட்ட நெசவாளர்	353
		பயிற்சியளிக்கப்பட்ட சாயத் தொழிலாளர் ..	14
		பயிற்சியளிக்கப்பட்ட பணியாளர் ..	103
1970-71 ..	4·45	பயிற்சியளிக்கப்பட்ட நெசவாளர்	2,160
		பயிற்சியளிக்கப்பட்ட சாயத் தொழிலாளர் ..	20
		பயிற்சியளிக்கப்பட்ட பணியாளர்	200
1971-72 (மதிப்பிட்டது).	5·82	பயிற்சியளிக்கப்பட்ட நெசவாளர்	1,800
		பயிற்சியளிக்கப்பட்ட சாயத் தொழிலாளர் ..	13
		பயிற்சியளிக்கப்பட்ட பணியாளர்	200
1972-73 (திட்டமிட்டது)	5·83	பயிற்சியளிக்கப்பட்ட நெசவாளர்	1,800
		பயிற்சியளிக்கப்பட்ட சாயத் தொழிலாளர் ..	20
		பயிற்சியளிக்கப்பட்ட பணியாளர் ..	200

நெசவாளர் பயிற்சிக்கான திட்டம் பல வழிகளில் குறைபாடுகள் உள்ளதாக காணப்பட்டது. செயல்படும் நிலையங்களின் எண்ணிக்கையோ குறைவு. நெசவாளர்களோ, தொலைதூர இடங்களிலிருந்து வரவேண்டியிருந்தது. இதனால் அவர்களுக்கு வசதிக் குறைவு ஏற்பட்டது. பல்வேறு பொருட்களின் உற்பத்தியில் பயிற்சி அளிக்கப்பட்டதும் ஒரு குறையாகும். மேலும் பயிற்சி பெற்ற நெசவாளர்கள் இந் நிலையங்களில் தாம் கற்ற முறைகளைக் கடைப்பிடிக்கின்றனரா என்பதைக் கவனிக்க, மேற்கொண்டு நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. எனவே இத் திட்டத்தை அரசு தக்கவாறு திருத்தி 15—2—1970 முதற்கொண்டு செயலுக்குக் கொண்டு வர முனைந்துள்ளது. சீரமைக்கப்பட்ட இத் திட்டத்தின்கீழ், இப் பயிற்சி நீலகிரி, சென்னை நீங்கலாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பயிற்சி நிலையமாக 12 நிலையங்களில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அந்தந்த மாவட்டத்திலுள்ள நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கம் இத் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பை ஏற்கும். தகுதிவாய்ந்த கைத்தறித் தொழில் நுட்ப ஆசிரியர்கள் பணி, அரசுச் செலவில் இச் சங்கத்திற்குக் கொடுக்கப்படும். ஒவ்வொரு நிலையத்திலும் 30 நெசவாளர்களுக்கு ஒவ்வொரு பாட முறையிலும் பயிற்சி அளிக்க ஆறு பாட முறைகள் இருக்கும். அந்தந்த திட்டத்தை நடத்தும், சங்க உறுப்பினர்களிலிருந்தும் அந்த கிராமத்தில் அல்லது நகரில் பிற சங்கங்கள் எவையேனும் இருப்பின் அவற்றிலிருந்தும், நெசவாளர்கள் இப் பயிற்சிக்காகத் தெரிந்தெடுக்கப்படுவர்.

விரைவில் விற்பனையாகக் கூடியவையும், ஆலைகள் போட்டியிடாதவையும், படுக்கை விரிப்புகள், தரை விரிப்புகள், மேல் துண்டுகள், சட்டைத் துணி, உயர்தர சேலைகள் போன்றவையுமான இரண்டு மூன்று வகைகளை உற்பத்தி செய்வது குறித்துப் பயிற்சியளிக்கப்படும். பயிற்சிக்குப் பின்னர் புதிய ரகங்களைச் சங்கங்களின் சார்பாகத் தயாரிக்குமாறு நெசவாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுவர். அவர்களுக்குப் புதிய கருவிகள் குறைந்த விலையில் கொடுக்கப்படும். பயிற்சித் திட்டத்தின் கால அளவு 60 நாட்கள் ஆகும். பயிற்சி பெறுபவருக்குத் திங்களொன்றுக்கு ரூ. 100 உதவிப் பணமாக வழங்கப்படும். ஆண்டுதோறும் 1,800 நெசவாளர்கள் பயிற்சி பெறுவர். ஒரு மாவட்டத்தில் செயல்படும் நிலையம் குறிப்பிட்டதொரு இடத்தில் நியாயமான எண்ணிக்கையுள்ள நெசவாளர்களுக்குப் பயிற்சி அளித்த பின்னர், அந்த மாவட்டத்திற்குள்ளேயே ஒவ்வொரு இடமாகச் செயல்படும். இப் பயிற்சி மும்முரமான பயிற்சி மட்டுமின்றி, பரவலான பயிற்சியுமாகும். இப் பயிற்சியின் காரணமாக எளிதில் விற்பனையாகக் கூடிய கைத்தறிச் சரக்குகளை உற்பத்தி செய்வதன் மூலம் கைத்தறித் தொழில் வளம் பெறுவதற்கு இப் பயிற்சி உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது.

1970–71-ல் இத் திட்டத்தின் கீழ் ரூ. 4·45 லட்சம் செலவிடப்பட்டது.

1971–72-ல் ரூ. 5·82 லட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

1972–73-ல் ரூ. 5·83 லட்சம் செலவிடக் கருதப்பட்டுள்ளது.

XI. நிர்வாகப் பணியாளருக்காக ஆகும் செலவிற்கான உதவித் தொகை.—இத் திட்டத்தின்கீழ், நிதி வசதி குறைந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிர்வாகப் பணியாளர் செலவு குறித்து நிதி உதவி

அளிக்கப்படுகிறது. இந்த நிதி உதவி படிப்படியாகக் குறையும் வகையில் நான்கு ஆண்டுகளில் அளிக்கப்படுகிறது. முதலாவது ஆண்டில் ஒரு சங்கத்திற்கு அதிக அளவாக ரூ. 1,000 உதவியளிக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் செலவு விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

ஆண்டு.	செலவு. (ரூபாய் லட்சத்தில்.)	பயன்பெற்ற சங்கங்களின் எண்ணிக்கை.
1967–68	0·49	72
1968–69	0·39	54
1969–70	0·50	56
1970–71	0·89	102
1971–72 (திட்டமிட்டது)	1·00	100
1972–73 (செலவிடக் கருதப்பட்டது) ..	0·50	50

XII. நெசவாளர் தலைமைச் சங்கத்தின் பங்கு மூலதனத்தில் அரசு முதலீடு செய்தல்.—கைத்தறித் துணிகளை அதிக அளவில் வாங்கி விற்பனை செய்வதற்கு சங்கத்தின் சொந்த மூலதன வசதிகளை அதிகப் படுத்துவதற்காக, அரசு, தமிழ் நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் இதுவரையில் ரூ. 42·50 லட்சம் பங்கு மூலதன முதலீடு செய்துள்ளது. நிதியாண்டு 1971–72 முடிவுக்கு முன்னர் மேற்கொண்டும் ரூ. 20 லட்சம் பங்கு மூலதனம் முதலீடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

5. நெசவாளர் நலத் திட்டம்.

கைத்தறித் தொழில் வளர்ச்சிக்கான பல்வேறு வேலைத் திட்டங்களைச் செயல்படுத்துகையில் நெசவாளர் நலத் திட்டங்களை மேற்கொள்வதன் மூலம் அவர்களின் சமூக-பொருளாதார நிலைகளை மேம்படுத்துவதில் அரசு சிறப்பான நாட்டம் செலுத்தி வருகிறது. இத் திட்டங்கள் சுருக்க மாகக் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

(a) நெசவாளர்களுக்கு வீட்டு வசதி.—நெசவாளர்களுக்குத் தொழில் கூடம் இணைந்த வசதியான வீடுகளைக் கட்டிக் கொடுப்பதன் மூலம் அவர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக இத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. ஒரு வீட்டிற்கு அதிக அளவாக ரூ. 3,600 செலவிட ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது. இதில் ரூ. 2,000 கடனாகவும், ரூ. 1,250 உதவித் தொகையாகவும் வழங்கப்படுகிறது. எஞ்சிய 350 ரூபாய் அல்லது வீட்டிற்குச் செலவிட ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொகையில் 10 சத வீதம்—இவ்விரண்டில் எது அதிகமான தொகையோ அத் தொகையை உறுப்பினர்கள் கொடுக்கவேண்டும். இக் கடன் 25 சமமான ஆண்டுத் தவணைகளில் $4\frac{1}{2}$ சத வீத வட்டியுடன்

திருப்பிச் செலுத்தப்படத்தக்கதாகும். வீட்டு வசதி புதுக் குடியேற்றங்களில் சாலைகள் அமைத்தல், குடிநீர் வசதி செய்து கொடுத்தல், தெரு விளக்கு வசதி செய்து கொடுத்தல் போன்ற பொதுவான வாழ்க்கை வசதிகளைச் செய்து கொடுப்பதற்காகவும் சங்கங்களுக்குக் கடன்கள் வழங்கப்படுகின்றன.

இத் திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ. 127·65 லட்சம் செலவிட்டு, 2,688 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 1962-ல் இருந்து புதிதாக வீட்டு வசதித் திட்டம் எதற்கும் ஒப்பளிப்பு வழங்கப்படவில்லை. திங்களொன்றுக்கு ரூ. 100-க்கு மேல் ஊதியம் பெறுகின்ற நெசவாளர்கள் மாதத் தவணையாக ரூ. 25 செலுத்துவது கடினமாக இருப்பதால் சிக்கலை நன்கு ஆராய்ந்த பின்னரே இத்திட்டம், நடப்பு ஆண்டில் செயல்படுத்த எடுத்துக்கொள்ளப்படும். நான்காவது திட்டக் காலத்தில் 500 வீடுகள் கட்டிக்கொடுப்பதற்காக ரூ. 27 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து கடன் பெற்று வீடு கட்டிக் கொண்டுள்ள உறுப்பினர்கள், தங்களது குறைந்த ஊதியத்திலிருந்து வீடுகளுக்கான தவணை நிலுவைகளையும் அவர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் மீதான தண்ட வட்டியையும் செலுத்த இயலவில்லை என்ற காரணத்தால் அரசுக்கு முறையீடுகள் செய்துகொள்ளப்பட்டன. அதன் மேல், திங்களொன்றுக்கு ரூ. 5 முதல் ரூ. 10 வரையில் வசூல் செய்வதன் மூலம் முறையான திங்கள் தவணைகளுடன், தவணை நிலுவைகள் சுலபத் தவணைகளில் வசூலிக்கப்படலாமென்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இவ்வரசு ஆணைத் தேதியன்று வரை உறுப்பினர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கட்ட வேண்டியதாய்ச் சேர்ந்துள்ளதும், சங்கங்கள் தங்கள் முறையில் அரசுக்குச் செலுத்த வேண்டியதுமான தண்ட வட்டித் தொகையை செலுத்த வேண்டியதில்லையென ஆணையிட்டுள்ளது.

(b) உதவித் தொகை சிக்கன நிதி (வருங்காலச் சேமிப்பு நிதி) **திட்டம்.**—இத் திட்டத்தின்கீழ் சேமித்து வைக்கும் பழக்கத்தை கைக்கொள்ளும் வகையில் நெசவாளர்களுக்கு ஊக்கமளிக்கப்படுகின்றது. அது மட்டுமல்லாமல், வீடு கட்டுதல் போன்ற பயனுள்ள செயல்களுக்கும், திருமணம் முதலியவை போன்ற அவசியமான சமூக நிகழ்ச்சிகளுக்கும், முன்பணம் பெறுவதற்கும் உதவியளிக்கப்படுகின்றது. இத்திட்டத்தின்கீழ் நெசவாளர் ஒருவர், தாம் ஈட்டும் ஒவ்வொரு ரூபாய்க்கும் 6 காசு வீதம் கொடுக்கிறார்கள். அரசு 4 காசும் சம்பந்தப்பட்ட சங்கம் 2 காசும் கொடுப்பதால் இந்த நிதிக்கு நெசவாளர் வழங்கும் தொகைக்கு இணையாக மேலும் 6 காசு சேருகின்றது. இத் திட்டம் 1962–63-ம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், அதிக சங்கங்களும் உறுப்பினர்களும் பயனடையும் வகையில் இத் திட்டம் படிப்படியாக விரிவு படுத்தப்பட்டு வருகிறது. இந்த உதவித் தொகை—சிக்கன நிதியானது சம்பந்தப்பட்ட மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிகளில் சிக்கன நிதித் திட்டத்தில் சேர்ந்துள்ள ஒவ்வொருவருடைய பெயரிலும் 6 சத வீத வட்டிக்கு முதலீடு செய்யப்படுகிறது. 31—12—1971 முடிவில் பல்வேறு கூட்டுறவு மத்திய பாங்குகளிலும், உதவித் தொகை சிக்கன நிதியானது மொத்தம் 47 லட்சம் ரூபாய்க்கு மேல் சேர்ந்துள்ளது. மேலும், பெருமளவு எண்ணிக்கையில் உறுப்பினர்களும் சங்கங்களும் பயன் பெறும் வகையில் இதனை விரிவுபடுத்தும் பொருட்டு இத்திட்டத்தை ஒழுங்குபடுத்தும் விதிகளை எளிதாக்கும் கருத்து பரிசீலனையில் உள்ளது.

1972 மார்ச் 14]

இத் திட்டத்தின்கீழ் நன்கொடையாக அரசு அளித்த உதவித் தொகை கீழே கொடுக்கப்படுகிறது :—

ஆண்டு.	அரசு கொடுக்கும் உதவித் தொகை. (ரூ. லட்சத்தில்.)
1967–68	1·80
1968–69	1·89
1969–70	2·00
1970–71	2·05
1971–72 (திட்டமிட்டது)	2·75
1972–73 (செலவிடக் கருதப்பட்டுள்ளது)	2·75

6. **ஏனைய திட்டங்கள்.**—பின்வரும் திட்டங்கள் கூட்டுறவுத் துறையின் கீழ் வராத நெசவாளர்களின் நலனையும் பொதுவாக கைத்தறி தொழிலின் நலனையும் நோக்கமாகக் கொண்டவையாகும் :—

(a) **புள்ளிவிவரம் திரட்டுதல்.**—இது, இம் மாநிலத்தில் கூட்டுறவுத் துறையிலும் கூட்டுறவுத் துறைக்கு வெளியிலும் கைத்தறித் துணிகளின் உற்பத்தி, இருப்பு, விற்பனை ஆகியவை குறித்த புள்ளிவிவரங்களைத் திரட்டுவதற்கான திட்ட வேலையாகும். மாவட்டங்களில் முக்கிய கைத்தறி உற்பத்தி உள்ளூர் நிலையங்களில் அவ்வப்போது அங்குமிங்குமாகப் புள்ளி விவரம் திரட்டும் (Random Sampling) முறையை மேற்கொண்டு இத் திட்டம் புள்ளிவிவரத் துறை இயக்குநரால் செயல்படுத்தப் படுகிறது. இத் திட்டத்திற்கு 1967–68-ல் ரூ. 1·16 லட்சமும், 1968–69-ல் ரூ. 1·23 லட்சமும், 1969–70-ல் ரூ. 1·26 லட்சமும், 1970–71-ல் ரூ. 1·26 லட்சமும் செலவாயிற்று. 1971–72-க்கு ரூ. 1 லட்சம் தொகை செலவாகுமென எதிர்பார்க்கப்பட்டது. 1972–73-ம் ஆண்டில் ரூ. 1 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(b) **பரிசு வழங்கும் திட்டம்.**—கைத்தறித் துணிகளில் புதிய கவர்ச்சி கரமான துணி வகைகளைத் தயாரிப்பதற்கு கூட்டுறவு அமைப்பில் சேர்ந் துள்ள நெசவாளர்களுக்கும், கூட்டுறவு அமைப்பில், சேராத நெசவாளர் களுக்கும் மற்றும் தறி முதலாளிகள், நெசவுத் தொழிற்சாலை முதலாளிகள், துணி வடிவமைப்பாளர்கள் ஆகியவர்களுக்கும் நேரடியான ஊக்கமளிப்பதன் மூலம், கைத்தறித் துணிகளை மக்கள் பெரிதும் விரும்பச் செய்யும் நோக்கத்துடன் இம் மாநிலத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட இடங்களில் போட்டி நடத்தி ஒவ்வொரு வகையிலும் சிறந்த ரகத் துணிக்கு பரிசளிக்கும் திட்டம் அரசினால் ஆண்டுதோறும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்தகைய பரிசுகள் வழங்கப்படுவதற்காக மொத்தம் 10,000 ரூபாய் அரசாங்கத்தால் செலவிடப்படுகிறது. பரிசுகள் வழங்கப்படுவதற்கான சிறந்த துணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அரசுப் பணியாளர் அரசுப் பணி சார்பற்றவர்கள் ஆகியவர்களைக் கொண்ட ஓர் ஆலோசனை, குழுவின் உதவியுடன் தெரிந்தெடுக்கின்றனர்.

(c) **தமிழ் நாடு கைத்தறி நிதி உதவும் கழகம்.**—கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் வராத நெசவாளர்களுக்கு உதவும் வகையில் பொது நிறுவனம் ஆகவும், வங்கி அலுவல் புரியாத நிறுவனமாகவும் இக்கழகம் 1964 ஆம் ஆண்டில் அரசால் நிறுவப்பட்டது. இக்கழகம் தொடர்ந்து வளர்ச்சி பெற்று வந்துள்ளது. கழகத்தின் தொகை செலுத்தப்பட்ட பங்கு மூலதனமாகிய ரூ. 62·85 லட்சத்திலிருந்து (31—12—1971 நாள் நிலவரம்) குறிப்பாகக் கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் வராத கைத்தறி விசைத்தறி இவை தொடர்பான தொழில்கள் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இக்கழகம் நிதி உதவி அளிக்கிறது. 1969–70-ம் ஆண்டில் தமிழ் நாடு அரசு இக்கழகத்தில் ரூ. 7·40 லட்சம் அளவிலும், 1970–71-ல் ரூ. 5 லட்சம் அளவிலும் கூடுதல் பங்குகள் மூலதன முதலீடு செய்தது. இதன் விளைவாக இக்கழகத்தில் அரசின் மொத்த மூலதன முதலீடு ரூ. 25 லட்சமாக உயர்ந்துள்ளது. தமிழ் நாடு கைத்தறி நிதி உதவும் கழகத்திற்கு இந்திய ஸ்டேட் வங்கி அரசு உத்தரவாதத்தின் மேல் ரூ. 90 லட்சம் அளவிற்குத் தொடர்ந்தாற் போல் ரொக்கக் கடன் வசதி வழங்கியுள்ளது. 1971ஆம் ஆண்டில் ரூ. 149·35 லட்சம் அளவிற்கு இக்கழகம் கடன் வழங்கியுள்ளது. 1971 வரை வழங்கப்பட்ட மொத்தக் கடன் தொகை ரூ. 770 லட்சம் ஆகும்.

7. **திட்ட வேலைகளுக்கான நிர்வாகச் செலவு.**—கைத்தறித் திட்ட வேலைகளைச் செயல்படுத்தும் பொருட்டு நியமிக்கப்பட்டுள்ள துறைப் பணியாளர்களுக்கு ஆகும் செலவை ஈடு செய்யக் கடன் உதவியளிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். 1969–70ஆம் ஆண்டில் ரூ. 3·60 லட்சம் செலவாகியது. 1970–71ஆம் ஆண்டில் ரூ. 5·58 லட்சம் செலவாயிற்று. 1971–72-இல் ரூ. 5·50 லட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டது. 1972–73-இல் ரூ. 5·05 லட்சம் செலவிடக் கருதப்பட்டுள்ளது.

8. **கைத்தறித் தொழிலுக்கு மூலப் பொருள் வழங்குதல்—(a) பருத்தி நூலைத் தயாரித்தலும், வழங்கலும்.**—(1) இம் மாநிலத்தில் 41·9 லட்சம் கதிர்கள், 9,124 தறிகள் நிறுவப்பட்ட திறனுடன் 207 பஞ்சாலைகள் (183 நூற்பு, 24 நூற்பு-நெசவு) உள்ளன. இம் மாநிலத்திலுள்ள கைத்தறித் தொழிற்சாலைகளின் மொத்த உற்பத்தித் திறன் திங்களொன்றுக்கு ஏறத்தாழ 20,000 பேல்களாகும். விசைத் தறிகள் உள்ளாடை தயாரிப்பு நிறுவனங்கள், பிற துணைத் தொழிற்சாலைகளுக்குத் திங்களொன்றுக்கு 9,000 பேல்கள் தேவைப்படுகின்றன. எல்லா ஆலைகளின் மொத்த உற்பத்தியைக் கருதிப் பார்க்குமிடத்து, பருத்தி நூலுற்பத்தியைப் பொறுத்தவரையில் தமிழ் நாடு எப்பொழுதும் உபரி நிலையிலேயே உள்ளது. இம் மாநிலத்திற்குள் பருத்தி நூல் பற்றுக்குறை நிலவ வாய்ப்பில்லை என்பது இதனால் தெரியவருகிறது.

(2) ஆனால் பருத்தி நூலின் விலை, சந்தையின் நிலவரம், பருத்தியின் விலை ஆகியவற்றைப் பொறுத்துள்ளது. சிறப்பாக தமிழ்நாட்டில், பருத்தியின் உற்பத்தி தேவைக்குக் குறைவாகவே உள்ளதென்பது குறிப்பிட வேண்டியதொன்றாகும். எனவே, பருத்தி விலை அதிகமாகியதால் பருத்தி நூலின் விலையும் அதிகமாக வேண்டியதாகிறது. பருத்தி விலை உயர்வு பருத்தி நூல் விலை உயரக் காரணமாயிருந்தது. இதனால் கைத்தறித் தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டது.

1972 மார்ச் 14]

(3) கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் இடர்ப்பாடுகளைப் போக்கும் நோக்கத்துடன இந்திய அரசு அண்மையில் பருத்தி நூல் தொகுப்பு தனித் திட்டம் ஒன்றை, இறக்குமதி செய்யப்படும் அயல்நாட்டு பருத்தியை எதிர்பார்த்திருக்கும் பரவல் முறைப் பிரிவிலுள்ள கைத்தறி தொழிற்சாலைகளுக்கு (கைத்தறி, விசைத்தறி, உள்ளாடை தொழிற்சாலை களுக்கு) 10, 20, 30, 40-ம் நம்பர் பருத்தி நூல்களைப் பகிர்ந்தளிப்பதற்காக ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டம் 1971 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் முதல் செயலில் உள்ளது. 1971 ஆம் ஆண்டு பிப்ரவரி 29 ஆம் நாள் வரை செயலில் இருக்குமாறு இது நீட்டிக்கப்பட்டுள்ளது. பம்பாய் நூற்பாலை ஆணையாளரால் பருத்தி நூல் விலைகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

(b) **செயற்கைப்பட்டு.**—தமிழ்நாட்டில் செயற்கைப் பட்டு நூல் கொண்டு நெசவு நெய்யும் கைத்தறிகள் சுமார் 2·29 லட்சம் உள்ளன. இதுவரை, சேலத்தில் உள்ள அரசுச் சார்பற்ற மண்டலக்குழு செயற்கைப் பட்டுநூல்களை ஒதுக்கித் தந்தது. பலதரப்பட்ட புகார்கள் வந்ததன் விளைவாக, கைத்தறிகள் பஞ்சாலைகள் இயக்குநர் தமிழ் நாடு மண்டலக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

(c) **இறக்குமதி செய்யப்படும் நார்ப்பட்டு நூல்.**—நார்ப்பட்டு நூலை உண்மையில பயனபடுத்துவோரும், அத்தொழிலில் ஈடுபட்டுள்ள இறக்கு மதியாளர்களும் நார்ப்பட்டு நூலை இறக்குமதி செய்வது இந்திய அரசினால் அனுமதிககப்படவில்லை. ஆனால் செயற்கைப் பட்டு நூலை இறக்குமதி செய்யும் பொறுப்பை இந்திய அரசு, அரசு வர்த்தகக் கழகத்திடம் ஒப்படைத்துள்ளது. ஆனால், 1970-71 ஆம் ஆண்டுகளில் இறக்குமதி செய்யப்பட்ட நார்ப்பட்டு நூல் ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை.

(d) **மூலப்பட்டு.**—தமிழ்நாட்டில் மொத்தம் 20,000 பட்டுநெசவு கைத்தறிகள் உள்ளனவென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இவற்றுக்குத் தேவையான மூலப்பட்டு பெரும்பாலும் மைசூர் மாநிலத்திலிருந்தே விலைக்கு வாங்கப்படுகிறது. மூலப்பட்டு விலை உயர்வு பட்டு நூல் உற்பத்திச் செலவையும் விற்பனை விலைகளையும் உயர்த்தியுள்ளது. மூலப்பட்டு விலை உயர்வைத் தடுக்கும் பொருட்டு பம்பாயிலுள்ள மத்தியப் பட்டு வாரியம் கீழ்க்கண்டவற்றுக்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது; (i) இறக்குமதிகளை ஒருமுகப்படுத்துதல்; (ii) மூலப்பட்டு சேமிப்பு நிலையம் ஒன்றை ஏற்படுத்துதல்; (iii) மூலப்பட்டு நெசவு நெய்யப் புதிய விசைத்தறிகளை நிறுவுவதையோ, அல்லது கைத்தறிகளை விசைத் தறிகளாக மாற்றுவதையோ தடைசெய்தல்.

1971-இல், மத்தியப்பட்டுவாரியம், இறக்குமதி செய்த மூலப்பட்டு ஒதுக்கீடு எதுவும் செய்யவில்லை.

(e) **சரிகைப்பட்டு.**—தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர்கள், பிறவற்றுடன, முழுப் பட்டுச் சேலைகள், வேட்டிகள், மேலங்கிகள் ஆகியவற்றை, கண்ணைக் கவரும் வடிவமைப்புகளில், சிறந்த வகை நூலில்—பொன் சரிகையுடன் சேர்த்து நெய்து உற்பத்தி செய்கின்றனர். அவர்கள் பொன் சரிகையுடன் சேர்த்து, பல்வேறு வடிவமைப்புகளில்

சிறந்த வகைப் பட்டுத் துணிகளையும் உற்பத்தி செய்கின்றனர். இந்தத் துணிவகைகளுக்கு, குறிப்பாக விழாக்காலங்களில் பெரும் தேவை உள்ளது. சரிகையுடன் கூடிய பட்டு நெசவுத் தொழிலில் ஏறத்தாழ 20,000 விசைத் தறிகள் ஈடுபட்டுள்ளன. இவற்றில் திங்களொன்றுக்கு 10,000 மார்க்குகள் (Marcs) பொன் சரிகை, பட்டு நெசவில் கலந்து நெய்யப்படுகிறது. தமிழ்நாட்டுச் சரிகை நெசவுத் தொழில், தனது பொன் சரிகைத் தேவைக்கு சூரத்தையே பெரிதும் சார்ந்துள்ளது. சூரத்தில் குடிசைத் தொழில் வாயிலாகப் பொன் சரிகை உற்பத்தி செய்யப்படுகிறது. சூரத்திலுள்ள சரிகை வாணிகர்கள், சரிகையின் சந்தை விலையை தங்களுக்கு இலாபம் தருகின்ற வகையில் தங்களுடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றனர். சரிகைக்காகச் சூரத்தைச் சார்ந்திருக்க வேண்டிய நிலையைத் தவிர்க்கும்பொருட்டு, காஞ்சிபுரத்தில் சரிகை உற்பத்தி செய்யும் பிரிவு ஒன்றைத் தொடங்கும் செயற்குறிப்பு ஒன்று அரசுக்குப் பணிந்தனுப்பப் பட்டது. அரசு இச் செயற்குறிப்பை ஏற்றுக்கொண்டுள்ளது. காஞ்சீபுரத்தில், சரிகை உற்பத்தி செய்யும் பிரிவு ஒன்றை வரையறுக்கப்பட்ட பொதுநிறுவனமாகவும், தமிழ் நாடு அரசின் நிறுவனமாகவும் தொடங்குவதற்காக அரசு ஆணையிட்டுள்ளது. இந்த நிறுவனம் 6—12—1971 அன்று பதிவு செய்யப்பட்டது. சரிகைத் தொழிற்சாலைக் கட்டிடம் கட்டுவதற்காக 4·05 ஏக்கர் நிலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பிரிவு 1972 ஜூலையில் உற்பத்தி தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்துக்கு ரூ. 25 லட்சம் செலவாகுமென மதிப்பிடப் பட்டிருக்கிறது.

(f) சாயங்களும், இரசாயனப் பொருள்களும்.—சிலவகை வாட் சாயங்களை (Vat dyes) இறக்குமதி செய்வதன் மீது இந்திய அரசு தடை விதித்ததன் விளைவாக கைத்தறித் தொழிலுக்குத் தேவையான முக்கியமான சில சாயங்களின் விலைகள் மிகவும் உயர்ந்துவிட்டிருந்தது. கைத்தறி உற்பத்தியாளர்கள் தங்கள் தேவைகளை வெளிச் சந்தையில் நியாயமான விலையில் பெற முடியாதிருந்தது. சில முக்கிய இரசாயனங்களின் விலைகளும் உயர்ந்துவிட்டிருந்தது. தேவை நிலைமையையும் சாயங்கள், இரசாயனங்களை உற்பத்தி செய்யும் பெரும் தொழிற்சாலைத் தொகுதிகளின் வழங்கல் நிலைமையையும் மதிப்பிடும் பொருட்டும், கைத்தறித் தொழிலுக்கு தேவையான சாயங்களையும், இரசாயனங்களையும் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கான வாய்ப்புகள் பற்றி ஆராயும் பொருட்டும் தமிழ் நாடு அரசு திருவாளர்கள் இப்கான் நிறுவனத்தை சந்தை மதிப்பிட்டாய்வு ஒன்றை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டது. இப்கான் நிறுவனத்தின் ஆலோசனையின் பேரில், தமிழ் நாடு அரசு, கீழ்க்கண்ட வகைச் சாயங்கள், இரசாயனங்களை உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலைகளை நிறுவ முடிவு செய்துள்ளது :—

(i) ஆண்டுக்கு 200 டன் வாட் சாயம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை.

(ii) தொடக்கத்தில் ஆண்டுக்கு 50 டன் உற்பத்தி செய்யும் திறனுடன் நாப்தால் A.S.G. (Napthal A.S.G.) உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ; இத் தொழிற்சாலை பின்னர் நாப்தால் தொகுதியைச் சேர்ந்த பிற பெருஞ்சாயங்களை உற்பத்தி செய்யுமாறு விரிவுபடுத்தப்படும்.

1972 மார்ச் 14]

(iii) நாப்தா வெடியுப்பு தொழிற்சாலையிலிருந்து கிடைக்கக்கூடிய மூலப்பொருள்களைப் பயன்படுத்துவதற்காக இடைநிலைப் பொருள்களைத் தயாரிப்பதற்கான ஒரு தொழிற்சாலை.

(iv) கரைந்து போகக்கூடிய சாயங்கள் 50 டன்கள் உற்பத்தி செய்வதற்கான ஒரு தொழிற்சாலை.

(v) சோடா ஹைடிரோ சல்பைட் உற்பத்திக்கான ஒரு தொழிற்சாலை. மேற்சொன்ன தொழிற்சாலைகள் நிறுவுவதன் மூலம் கைத்தறி உற்பத்தியாளர்களுக்கு வாட் சாயங்கள், நாப்தால் சாயங்கள், சோடா ஹைட்ரோ சல்பைட்டுகள் ஆகியவை நியாய விலைகளில் ஒழுங்காகக் கிடைப்பது உறுதியாகும்.

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் (உற்பத்தி விலை, காப்புறுதிக் கட்டணம், சரக்குக் கட்டணம் ஆகிய அடங்கிய அடக்க விலை) சுமார் ரூ. 18 லட்சம் மதிப்புக்கு சாயங்களை இறக்குமதி செய்தது ; அவை, இம் மாநிலத்தில், அவற்றைப் பயன்படுத்துவோர் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. கைத்தறிகள் பஞ்சாலைகள் இயக்குநரின் பெயரில், ரூ. 17 லட்சம் அடக்கவிலை மதிப்புக்கு (இதில் உற்பத்தி விலை, காப்புறுதிக் கட்டணம், சரக்குக் கட்டணம் ஆகியவை அடங்கும்) இன்னொரு இறக்குமதி உரிமம் வழங்கப்பட்டுள்ளது. இந்த உரிமத்தைக் கொண்டு அனுமதிக்கப்பட்ட சாயங்களும், இராசயனங்களும் இறக்குமதி செய்யப்படும். இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட சாயங்களும் இராசயனங்களும், 6-6-1966-க்கும் 31-3-68-க்கும் இடையே, ஏற்றுமதியாளருக்கு ஏற்றுமதி செய்வதற்காக கைத்தறித் துணிகளை வழங்கிய உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும்.

(g) II. சோடா ஹைடிரோசல்பைட்டு.

சோடா ஹைடிரோசல்பைட்டு வெளிச் சந்தையில் எளிதாக கிடைக்கின்ற படியால், இத்துறையால் சோடா ஹைடிரோசல்பைட்டு ஒதுக்கம் எதுவும் செய்யப்படவில்லை.

(h) III. உலோக இழை.

உலோக இழை பளப்பளப்பான இழை என்றும் அழைக்கப்படுகிறது. தற்போது இது தடை செய்யப்பட்ட ஒன்றாகும். இதனை பயன்படுத்துவோருக்கான உரிமம் எதுவும் இதனை இறக்குமதி செய்வதற்கு வழங்கப்படவில்லை. ஆனால், பறிமுதல் செய்யப்பட்ட பொருள்கள் மத்திய அரசின் ஆயத்தீர்வைத் துறையாலும், சுங்க வரித்துறையாலும் ஏலம் விடப்படுகின்றன. கைத்தறிகள் பஞ்சாலைகள் துறை இயக்குநர் வழங்கிய இன்றியமையாமைச் சான்றிதழ்களின் அடிப்படையில் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும் கைத்தறி சங்கங்களும் ஏலம் எடுக்க அனுமதிக்கப்படுகின்றன.

(i) IV. சோடியம் நைட்டிரைட்டு.

தற்போதைய கொள்கைக்கிணங்க பயன்படுத்துவோருக்கான உரிமம் எதுவும் தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்படமாட்டாது. ஆனால், இந்த இரசாயனத்தின் இறக்குமதி அரசு வாணிபக கழகத்தின் மூலமாக வழிப்

படுத்தப்படுகின்றது. அரசு வாணிகக் கழகத்தால் இறக்குமதி செய்யப்பட்ட இருப்புகளிலிருந்து பொறுப்பேற்பு அதிகாரியான கைத்தறிகள் பஞ்சாலைகள் இயக்குநரின் பரிவுரைகளின்பேரில் விடுவிப்பு ஆணைகள் உரிமம் வழங்கும் அதிகாரியான இறக்குமதிகள் ஏற்றுமதிகள் இணைத்தலைமைக் கட்டுப்பாட்டு அதிகாரியால் வழங்கப்படும்.

9. ஏற்றுமதிகள்.—1965-ம் ஆண்டு முதற்கொண்டு சென்னைத் துறை முகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட கைத்தறித் துணிகளின் அளவு பற்றிய விவரங்களைக் கீழே உள்ள அறிக்கையில் காணலாம் :—

ஆண்டு.	வண்ணம் மாறும் துணியின் ஏற்றுமதி மதிப்பு.	பிற துணிகள்.	மொத்தம்.
	(ரூபாய் கோடியில்.)		
1965	6.16	1.39	7.55
1966	0.03	3.63	3.66
1967	0.06	3.19	3.25
1968	0.05	2.53	2.58
1969	..	3.69	3.69
1970	0.01	1.21	1.22
1971	0.06	2.74	2.80

வண்ணம்மாறும், துணியின் ஏற்றுமதி 1965 ஆம் ஆண்டு பிற்பாதியில் குறைந்தது. 1969 ஆம் ஆண்டு இதன் ஏற்றுமதி மிகக் குறைவாகும். இந்திய அரசு ஊக்கம் அளித்ததால் வண்ணம் மாறும் துணியின் ஏற்றுமதி 1970 ஆம் ஆண்டிலிருந்து பெருகியுள்ளது.

10. பொது.—தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் அனைத்துமாகச் சேர்ந்து ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 12 கோடி அளவிற்கு உற்பத்தி செய்து விற்பனை செய்யும் பணியை மேற்கொள்வதன் மூலம் தங்களிடம் உறுப்பினர்களாக உள்ள நெசவாளர்களுக்குச் சிறந்த உதவியை அளிக்கின்றன. அரசினால் நிறைவேற்றப்பட்ட பல்வேறு திட்டங்கள், மூன்றாம் திட்டத்தில் அளிக்கப்பட்ட நிதி உதவி, 1966-67 முதல் 1970-71 வரை செய்யப்பட்ட செலவு, 1971-72, 1972-73 ஆம் ஆண்டுகளுக்காகச் செய்யப்பட்ட நிதி ஒதுக்கம் ஆகியவை குறித்த விவரங்கள் இந்த ஆய்வுரையின் I-A-வது இணைப்பில் தரப்பட்டுள்ளன. தமிழ் நாட்டில் கூட்டுறவுத்துறையின்கீழ் கைத்தறித் தொழில் அடைந்துள்ள முன்னேற்றத்திற்கு தொடர்பான புள்ளிவிவரங்கள் II-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. கூட்டுறவு நூற்பு ஆலைகள் 1971 ஆம் ஆண்டில் ஆற்றிய பணி குறித்த விவரங்களை III-வது இணைப்பில் காணலாம். நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பல்வேறு திட்டங்களின்கீழ் அரசு அளித்துள்ள கணிசமான நிதி உதவி அச்சங்கங்களின் வளர்ச்சிக்கு உதவியது.

1972 மார்ச் 14]

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஆலோசனை நல்குவதன் மூலமும் அவற்றை மேற்பார்வையிடுவதன் மூலமும் அச்சங்கங்களுக்கு வலுவூட்டும் நோக்கத்துடன் மாவட்ட நிலையில் நிர்வாக அமைப்பைச் சீரமைப்பது அவசியமென அரசு கருதியது. 1969 அக்டோபர் திங்கள் முதற்கொண்டு செயலுக்கு வந்துள்ள இந்த அமைப்பு நெசவாளர் தொடக்கச் சங்கங்களைப் பொருளாதார முறையில் தனித்து இயங்கக்கூடிய பிரிவுகளாக விரைவில் சீரமைப்பதற்கும், விரைவில் விற்பனை ஆகக்கூடிய கைத்தறித் துணிகளின் உற்பத்திக்கு ஊக்கமளிக்கவும், சங்கங்கள் செயல்படும் முறை, நெசவாளர் நலன் ஆகியவற்றில் பொதுவான முன்னேற்றம் காணவும் உதவுகின்றது.

கூட்டுறவு நூற்பு ஆலைகள்.

தமிழ்நாட்டில் கூட்டுறவு நூற்பு ஆலைகள் 12 உள்ளன. இவற்றில் நிறுவப்பட்ட மொத்தக் கதிர்களின் எண்ணிக்கை 1.95 லட்சம் ஆகும். கைத்தறி நெசவாளர்களுக்கு நியாயமான விலையில் நல்ல தரமான நூல்களை வழங்குதல், சந்தையில் நூல் விலையை நிலைப்படுத்துதல் ஆகிய இரட்டைக் குறிக்கோள்களுடன் இந்தக் கூட்டுறவு நூற்பாலைகள் நிறுவப் பட்டுள்ளன. இந்த ஆலைகள் 20 ஆம் எண் நூலிலிருந்து 100 ஆம் எண் நூல்வரை பல்வேறு எண்களில் நூல்களை உற்பத்தி செய்கின்றன. நூல்களை வாங்குவோர் தமது விருப்பத்தை அடிக்கடி மாற்றிக் கொள் வதைக் கருத்தில் கொண்டு, இந்த கூட்டுறவு நூற்பாலைகள் பிற தனியார் துறைப் பஞ்சாலைகளைப் போன்று, வெவ்வேறுபட்ட வழிகளில் உற்பத்தி செய்யும் பணியைத் தாமாகவே மேற்கொண்டுள்ளன. அதாவது அவை இரட்டிப்பு நூல், சிக்கெடுத்த நூல், கூம்பு நூல், மற்றும் சிட்ட நூல் ஆகியவற்றை உற்பத்தி செய்கின்றன. இந்த ஆலைகளிற் சில, தமது பிரிவு களில், சோதனை ஏற்பாடாக நெட்டிழை நூல்களையும் உற்பத்தி செய் துள்ளன.

2. 1971 ஆம் ஆண்டில், இந்த 12 கூட்டுறவு நூற்பு ஆலைகள் அனைத் திலும் உற்பத்தி விற்பனை அளவைக்காட்டும் விவர அறிக்கை ஒன்று இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. கடந்த மூன்றாண்டுகளில் இந்த ஆலை களின் உற்பத்தி விற்பனை குறித்த புள்ளிவிவரம் கீழே கொடுக்கப் படுகிறது :—

	1969.	1970.	1971.
உற்பத்தி (லட்சம் கிலோ கிராமில்).	105·70	118·10	114·35
மொத்த விற்பனை (ரூ. லட்சத்தில்).	899·36	1,146·24	1,285·49

இந்த பன்னிரண்டு கூட்டுறவுத் தொழில் நிறுவனங்களிலும் தமிழ் நாடு அரசுக்கு முக்கிய பங்குள்ளது. 1971 ஆம் ஆண்டு முடிய இந்த ஆலைகளின் பங்குத் தொகையில் தமிழ்நாடு அரசு மொத்தம் ரூ. 199·46 லட்சம் முதலீடு செய்துள்ளது. இந்த ஆலைகள் தங்களது தற்காலிக நிதி நெருக்கடிகளினின்றும் விடுபடச் செய்யும்பொருட்டு, அரசு இவற் றிற்கு ரூ. 110·96 லட்சம் தொகை நேரடிக் கடன்களும் வழங்கியுள்ளது. மேலும், இந்த ஆலைகள் நிதி உதவி அளிக்கும் நிறுவனங்களிடமிருந்து பெற்ற மொத்த மூலதனக் கடன் நடைமுறை மூலதனக் கடன் ஆகியவை

தொடர்பாக இவை அனைத்திற்கும் மொத்தம் ரூ. 697·56 லட்சம் தொகைக்கு உத்தரவாத உறுதியையும் அரசு வழங்கியுள்ளது. இந்த ஆலைகள் பின்னர் தொகை செலுத்தும் அடிப்படையில் பஞ்சாலை இயந்திரங்கள் வாங்க இயலும் வண்ணம் இவ்வரசு உத்தரவாத உறுதியை அளித்துள்ளது. 31–12–1971 ஆம் நாள் வரை பின்னர் தொகை செலுத்தும் அடிப்படையில் இயந்திரங்கள் வாங்குவதற்கு அளித்த உத்தரவாத உதவி ரூ. 21·07 லட்சம் நிலுவையாகவுள்ளது.

3. ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலையும், திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பாலையும் எற்கெனவே நிறுவப்பட்ட தமது கதிர்களை ஒவ்வொன்றும் 25,000 கதிர்களாக உயர்த்தியுள்ளது. இந்திய அரசு அண்மையில் வெளியிட்ட உரிமம் வழங்குவது தொடர்பாக வெளியிட்ட கொள்கையை ஒட்டி, எஞ்சிய கூட்டுறவு நூற்பாலைகள் தத்தம் கதிர்களின் எண்ணிக்கையை ஒவ்வொன்றும் 25,000 கதிர்களாக உயர்த்த அனுமதியைப் பெற்றுள்ளன. தஞ்சாவூர் கூட்டுறவு நூற்பாலையும், சேலம் கூட்டுறவு நூற்பாலையும் தத்தம் கதிர்களின் எண்ணிக்கையைக் கணிசமான அளவில் 25,000-ஆக உயர்த்தக் கருதியுள்ளன. ஆனால் ஆதாயம் தராத பிரிவுகள் ஆதாயம் அளிக்கும் வகையில் செயல்படும் வண்ணம், மற்ற ஆலைகள் தற்போதைக்கு, தத்தம் கதிர்களின் எண்ணிக்கையை மிகக் குறைந்த அளவில் மட்டுமே, அதாவது 2,000 முதல் 6,000 வரை விரிவுபடுத்துவதென்று கருதியுள்ளன.

4. கூட்டுறவு நூற்பு ஆலைகளின் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்வதற்காக, 1972–73-க்கான பகுதி II திட்டத்தின்கீழ் ரூ. 25 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. அரசிடமிருந்து நிதியுதவி தேவைப்படும் நிலையில் உள்ள ஆலைகளுக்கு இத் தொகை பகிர்ந்தளிக்கப்பட்டு அவற்றின் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்யப்படும்.

5. ஆய்வுரை ஆண்டில், கூட்டுறவு நூற்பு ஆலைகள், தமது உற்பத்தியைத் தங்குதடையின்றித் தொடர்ந்து செய்ய இயலும் வகையில், இறக்குமதி செய்யப்பட்ட பருத்தி வகைகளிலிருந்து கீழ்க்கண்ட ஒதுக்கங்கள் பெறப்பட்டன :—

	பொதிகள்.
எகிப்தியப் பருத்தி	2,845
சூடான் பருத்தி	3,818
அமெரிக்கப் பருத்தி	2,883
உலகின் பிற நாடுகள் (ஐ.அ.கு., சூடான் நீங்கலாக) ..	1,427
	10,973

1972 மார்ச் 14]

விசைத் தறிகள்.—விசைத் தறி விசாரணைக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இந்திய அரசு தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்துவதற்காக 12,500 விசைத்தறிகளை ஒதுக்கியுள்ளது. கூட்டுறவுச் சங்கங்களின் நெசவாளர்கள், தனியான நெசவாளர் ஆகியோரிடையே படிப்படியாக விசைத் தறிகளைப் பயனுக்குக் கொண்டு வர தமிழ் நாடு அரசும் முடிவு செய்துள்ளது. 1970-71-ல் 30 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 500 விசைத்தறிகளும், தனிப்பட்ட நெசவாளர்களுக்கு 500 விசைத்தறிகளும் ஒதுக்கப்பட்டன. மோட்டார்கள், துணைக் கருவிகள் ஆகியவை வாங்குவதற்காகவும், பணிக்கூடம் அமைப்பதற்கும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 10·30 லட்சம் கடனுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அரசின் உத்தரவாதத்தின் பேரில் பின்னர் தொகை கொடுக்கும் அடிப்படையில் விசைத்தறிகள் வழங்குவதற்கான மைய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இரண்டாவது கட்டமாக, 1971-72-ல் தனிப்பட்ட நெசவாளர்களுக்கு இதுவரை 3,800 விசைத்தறிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. 1971-72-ம் ஆண்டில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 1,000 விசைத் தறிகள் ஒதுக்கத் திட்டமிடப்பட்டது. அவற்றில் இதுவரை 514 விசைத் தறிகள் 38 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. 1971-72-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 23 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வடிவமைப்புச் சட்டங்களை (Sized beams) முறையாக வழங்குவதற்காக, சேலம் கூட்டுறவு நூற்பாலைகளுக்கு அருகில் வடிவமைப்புச் சட்டம் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகளுக்கு இறுதி வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. இத் தொழிற்சாலை 1972 ஜூன் திங்களுக்குள் பணி புரியத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பணிக்கூடம் கட்டுவதற்காகும் செலவைச் சரிக்கட்ட இத்தொழிற்சாலைக்கு 1970-71-ல் ரூ. 2 லட்சம் கடன் வழங்கப் பட்டது.

குஜராத் மாநிலத்தில் மராத்திவாடா வளர்ச்சிக் கழகத்தினால் ஆரம்பிக்கப்பட்டது போல் குடியிருப்பிடம்—பணியிட அமைப்பில் விசைத்தறிகளுக்காகவென்றே தொழிற்பேட்டைகள் அமைப்பதற்கான செயற் குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன.

பர்மா, இலங்கை ஆகிய இடங்களில் இருந்து தாயகம் திரும்புவோருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காக இராமநாதபுரம், கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் 250 விசைத்தறிகளைக் கொண்ட மூன்று விசைத்தறிப் பிரிவுகளை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது இத்திட்டம், மேற்கொண்டும் நடவடிக்கை எடுப்பதற்காக அகதிகள் புதுவாழ்வு இயக்குநருக்கு அனுப்பப்பட்டுள்ளது. நமது மாநிலத்தில் உள்ள முன்னாள் இராணுவத்தினருக்காக தனியாக 1,000 விசைத்தறிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

1972-73-ல் விசைத்தறித் திட்டத்திற்காக ரூ. 41·04 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

தமிழ் நாடு பஞ்சாலைக் கழகம், லிமிடெட், 1971.

1967-68 ஆம் ஆண்டில் பஞ்சாலைகளுக்கு நெருக்கடி ஏற்பட்டபோது மூடப்பட்ட பஞ்சாலைகள் குறித்து தொழில்கள் (வளர்ச்சி-முறைப்படுத்துதல்), சட்டத்தின் விதித்துறைகளின்கீழ் இந்திய அரசு ஆய்வு செய்தது. ஒப்பேறக்கூடிய இத்தகைய பஞ்சாலைகளை ஏற்று நடத்த இந்திய அரசு தேசிய பஞ்சாலைக் கழகத்தை அமைத்தது. அதே போல் மாநில அளவில் மாநிலப் பஞ்சாலைக் கழகங்கள் அமைக்கப்பட்டன. எனவே, ரூ. 5 கோடி அனுமதிபெற்ற மூலதனத்துடன் தமிழ் நாடு பஞ்சாலைக் கழகம் அமைக்கப் பட்டு மாநில அரசுக்கு முற்றிலும் சொந்தமான ஒரு தனியார் நிறுவன மாக 24–4–1969ஆம் நாள் பதிவு செய்யப்பட்டது. இம் மாநிலத்தில் நலிவுற்ற பஞ்சாலைகளை ஏற்று நடத்துவதோடு இக்கழகம் பஞ்சாலைத் தொழில் குறித்து அரசுக்கு ஓர் ஆலோசகராகவும் பணியாற்றுகிறது. ஐந்து பஞ்சாலைகளுக்கு அதிகார உரிமைபெற்ற கட்டுப்பாட்டு நிறுவனமாக இக்கழகம் நியமிக்கப்பட்டுள்ளது. இந்த ஐந்து ஆலைகளும், 1,37,272 நூற்புக்கதிர்கள், 100 தறிகள் நிறுவிய திறன் கொண்டதாகும்.

	மேற்கொண்ட நாள்.	உற்பத்தியை தொடங்கிய நாள்.
1 ஓம் பராசக்தி ஆலை	15-9-1969	14-11-1969
2 கிருஷ்ணவேணி ஆலை	17-12-1969	4-2-1970
3 கம்போடியா ஆலை	14-12-1969	4-2-1970
4 ஸ்ரீ ரங்கவிலாஸ் ஆலை	15-1-1970	14-4-1970
5 கோயம்புத்தூர் முருகன் ஆலை ..	26-6-1971	8-7-1971

இந்த ஆலைகளின் பணியின் தரம் குறித்த விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆலையை ஏற்று நடத்துவதற்குத் தேவைப்படும் நடைமுறை மூல தனம், ஆலையைச் சீரமைப்பதற்காகும் செலவு ஆகியவற்றை 51 : 49 என்ற வீதத்தில் தேசிய பஞ்சாலைக் கழகமும் தமிழ் நாடு பஞ்சாலைக் கழகமும் கூட்டாக ஏற்றுக்கொள்கின்றன. இக்கழகத்திற்கு பங்கு மூல தனத் தொகையாகவும், கடனாகவும் அரசு இதுவரை ரூ. 93·33 லட்சம் முதலீடு செய்துள்ளது. இத் தொகையில் பெரும்பகுதி, மேற்கொள்ளப்பட்ட ஆலைகளுக்குத் தேவைப்படும் நடைமுறை மூலதனத்தை சரிக்கட்ட பஞ்சாலைக் கழகத்தினால் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த ஐந்து பஞ்சாலைகள்

குறித்து தமிழ் நாடு பஞ்சாலைக் கழகமும் தேசிய பஞ்சாலைக் கழகமும் கொடுத்துள்ள தொகை பற்றிய விவரங்கள் பின்வருமாறு :—

ஆலையின் பெயர்.		தமிழ் நாடு பஞ்சாலைக் கழகம்.	தேசிய பஞ்சாலைக் கழகம்.
		(ரூபாய் இலட்சத்தில்.)	
1	ஓம் பராசக்தி ஆலை	4·70	3·45
2	கம்போடியா ஆலை	25·04	11·83
3	கிருஷ்ணவேணி ஆலை	7·88	3·06
4	ஸ்ரீ ரங்கவிலாஸ் ஜின்னிங்-ஸ்பின்னிங் ஆலை.	30·82	8·16
5	கோயம்புத்தூர் முருகன் ஆலை ..	22·00	3·36
		90·44	29·86

ஆலைகளை மேற்கொண்ட பின்னர், எவ்விதப் பிரச்சினையுமின்றி திறமையாக இவ்வாலைகள் செயல்படுவதற்காக இவ்வாலைகளில் உள்ள யந்திரங்களை நவீனப்படுத்துவது, தொழிலாளரது வேலைத்திறனைச் சீரமைப்பது குறித்து இக்கழகம் தனது நாட்டத்தைச் செலுத்தியுள்ளது. இக்கழகம் நவீன திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளது. இத்திட்டத்திற்காகும் உடனடிச் செலவு ரூ. 147·86 லட்சமும் அடுத்த ஆண்டில் ரூ. 130.72 லட்சமும் ஆகும். யந்திரங்களை நவீனமயமாக்குவது குறித்து ஆலைகள் தமது சொந்த நிதியிலிருந்தும் கழகம் கொடுத்த நிதியிலிருந்தும் இதுவரை ரூ. 42·54 லட்சத்தை செலவு செய்துள்ளது. மேற்கண்ட ஆலைகளைக் கழகம் மேற்கொண்டதன் பலனாக 3,500 பேர்களுக்கு மேலாக வேலையளிக்கப்பட்டதோடு சுமார் ரூ. 5.82 கோடி மதிப்புடைய நூல் விற்பனை செய்யப்பட்டது.

பருத்தியைக் கொள்முதல் செய்யவும், இருப்பு வைக்கவும் அதை விற்கவும் பொருட்டு இக்கழகம் "A வகுப்பு" பருத்தி உரிமத்தைப் பெற்றுள்ளது. தொழில் வளர்ச்சி முறைப்படுத்தல் சட்டத்தின்கீழ் ஒரு சில ஆலைகளை எடுத்துக்கொள்வதென்றும், அந்த ஆலைகளை நிர்வகிப்பதற்காக இந்தக் கழகத்திடம் ஒப்படைப்பதென்றும் திட்டமிடப்பட்டுள்ளது.

சர்க்கரைத் தொழில்.

முன்னரே செயல்பட்டு வந்த கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் மற்றும் நிறுவப்பட்டு வந்த புதிய சர்க்கரை ஆலைகள் ஆகியவற்றின் எண்ணிக்கை பெருகிவருவது குறித்தும், பொதுவாகச் சர்க்கரைத் தொழிலிலுள்ள குறிப்பிட்ட பிரச்சினைகள் குறித்தும் சிறப்பாகக் கவனம் செலுத்தும் பொருட்டு, சர்க்கரை இயக்குநர் அலுவலகம் ஒன்றைத் தனியாக அமைக்க, 1969ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில், இந்த அரசு தீர்மானித்தது.

இன்றைய நிலவரப்படி, இம் மாநிலத்தில் 20 சர்க்கரை ஆலைகள் உள்ளன. அவற்றில் 10 ஆலைகள் கூட்டுறவுத் துறையில் உள்ளன. அவற்றில் 7 ஆலைகள் செயல்பட்டு வருகின்றன. எஞ்சிய 3 ஆலைகள் நிறுவப்பட்டு வருகின்றன. இந்த் 10 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், நாளொன்றுக்கு, 13,450 மெட்ரிக் டன் கரும்பைச் சாறு பிழியும் திறன் கொண்டவையாகும். இவற்றில், நாளொன்றுக்கு 8,700 மெட்ரிக் டன் கரும்பைச் சாறு பிழியும் மொத்தத் திறன் கொண்ட 7 ஆலைகள் உற்பத்தி செய்து வருகின்றன. அண்மையில் உற்பத்தி தொடங்கவிருக்கிற ஆலை, பாலக்கோடிலுள்ள தருமபுரி மாவட்டக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையாகும். வேலூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, திருப்பத்தூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, கோயம்புத்தூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை ஆகிய இந்த மூன்று ஆலைகளும், சம்பந்தப்பட்ட பகுதிகளிலுள்ள கரும்பு பயிரிடுவோரிடமிருந்து பங்கு மூலதனங்களைச் சேகரித்து வருகின்றன. அவை 1975ஆம் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த சர்க்கரை ஆலைகளின் நிறுவப்பட்ட திறன், உரிமம் வழங்கப்பட்ட திறன் ஆகியவை குறித்த விவரங்கள் இணைப்பு VI-ல் கொடுக்கப்பட்டுள்ளன. நிறுவப்பட்டு வரும் இந்த மூன்று கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் பங்கு மூலதனங்களைத் திரட்டுவதில் அடைந்த முன்னேற்றம் குறித்து இணைப்பு VI-ல் காட்டப்பட்டுள்ளது.

நாளொன்றுக்கு 1,250 மெட்ரிக் டன் சாறு பிழியும் திறனுள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முறையின்படி உதவி பெறுவதற்குத் தகுதியுள்ளவையாகும் ; அதாவது :—

	(ரூபாய் லட்சத்தில்.)	
1 உறுப்பினர்களால் செலுத்தப்படவேண்டிய பங்கு மூலதனம்.	45·00	ஆலைகள், தங்களது உறுப்பினர்களிடமிருந்து சமமாக மொத்தம் ரூ. 65 லட்சத்திற்குப் பங்கு மூலதனம் திரட்ட வேண்டுமென்பதே, ஆலைகளுக்காக வழங்கப்பட்ட இசைவுக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள 1-வது நிபந்தனை ஆகும்.
2. மாநில அரசால் செலுத்தப்பட வேண்டிய பங்கு மூலதனம் வளர்ச்சியடையாத பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள ஆலைகளின் (மாநிலத்திட்ட உச்சவரம்புக்குள் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பெறும் 100 சத வீத கடன் உதவியோடு).	45·00	நேர்வில், அரசு மற்றும் ஏனைய உறுப்பினர்களின் பங்கு மூலதன விகிதாசாரமானது 2 : 1 என்று வரையறுக்கப்பட்டுள்ளது. இது, மாநில திட்ட உச்சவரம்பிற்குள், ஒவ்வொரு நேர்விலும், ரூ. 45 லட்சம் என்பதற்குப் பதிலாக, ரூ. 60 லட்சம் என்ற பேரளவுக்கு உட்பட்டதாகும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

		(ரூபாய் லட்சத்தில்.)
3.	மத்திய நிதி உதவி நிறுவனங்களிடமிருந்து பெறும் வட்டார மூலதனக் கடன்.	140·00
4.	ஏனைய நிதி உதவி நிறுவனங்களிடமிருந்து பெறும் கடன்.	10·20
	மொத்தம் ..	240·20

பல்வேறு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் செயல் திறனின் குறிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

(a) ஆம்பூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை லிமிடெட், வட புதுப்பேட்டை, வட ஆர்க்காடு மாவட்டம்.

நாளொன்றுக்கு 800 டன் கரும்புச் சாறு பிழியும் திறனுள்ள இந்த ஆலை இந்திய அரசிடம் உரிமம் பெற்றது. 1955ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் பதிவு செய்யப்பட்டது. இது தனது உற்பத்தியை 1960-61ஆம் ஆண்டில் தொடங்கியது. 1965ஆம் ஆண்டில், இந்த ஆலை, தனது சாறு பிழியும் திறனை நாளொன்றுக்கு 800 டன்னிலிருந்து 1,250 டன் திறனுக்கு விரிவுபடுத்த இந்திய அரசிடமிருந்து உரிமம் ஒன்றைப் பெற்றது. 1968ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில், நாளொன்றுக்கு கரும்புச் சாறு பிழியும் திறனை 1,250 டன்னிலிருந்து 2,200 டன்னுகப் பெருக்குவதற்கு இந்திய அரசு உரிமம் ஒன்றை வழங்கியது. இந்த ஆலை தனது திறனை 1970-71-ல் விரிவாக்கி அதனைச் செயல்படுத்தியது.

1970-71-ல், இந்த ஆலை 2,24,886·280 மெட்ரிக் டன் கரும்பைச் சாறு பிழிந்து, 21,748·900 மெட்ரிக் டன் சர்க்கரையை உற்பத்தி செய்தது. இதற்கு முந்திய பருவ காலத்தில் 8·58 சத வீதம் சர்க்கரை பெறப்பட்டிருக்க, இப்பருவத்தில் பெறப்பட்ட சராசரி சர்க்கரை 9.65 சத வீதமாகும். சாறு பிழியும் மொத்த நாட்களின் எண்ணிக்கை 181 ஆகும். இக்காலத்தில் பிழியப்பட்ட கரும்பு, நாளொன்றுக்கு மணி ஒன்றுக்குப் பிழியப்பட்ட டன் சராசரி ஆகியவை, முந்திய ஆண்டுகளைவிட அதிகமாகும்.

(b) மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை லிமிடெட், படாலம், செங்கற்பட்டு மாவட்டம்.

நாளொன்றுக்கு 800—1,000 டன் கரும்புச் சாறு பிழியும் திறனுடன் செயல்படுவதற்காக இந்த ஆலை, இந்திய அரசிடமிருந்து 1955ஆம் ஆண்டில் உரிமம் ஒன்றைப் பெற்றுள்ளது. 1961ஆம் ஆண்டில் சாறு பிழியத் தொடங்கியது. ஆனல், 1967ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் வரை தனது முழுத் திறனை அடைய இயலவில்லை. நாளொன்றுக்குத் தனது சாறு பிழியும் திறனை, இரண்டு நிலைகளில், 1,600 டன்னுக்கு விரிவுப்படுத்த, இந்த ஆலை கருதியது. முதல் நிலை 800 டன்னிலிருந்து

1,250 டன் வரை, இரண்டாவது நிலை 1,250 டன்னிலிருந்து 1,500 டன் வரை இயந்திரங்களை கொள்முதல் செய்வதிலேற்பட்ட தாமதத்தினால் விரிவு படுத்தப்படும் பணியை முடிக்க இயலவில்லை. 1,200 டன் சாறு பிழியும் திறனை நிலைப்படுத்துவதற்கு இந்த ஆலை திட்டமிட்டுள்ளது. விரிவுப்படுத் தும் பணிக்கான செலவு ரூபாய் ஒரு கோடிக்கு அதிகரிக்காது என்பதால், கணிசமான அளவுக்கு விரிவுப்படுத்தும் பணிக்காக இந்திய அரசால் வழங்கப்பட்ட இசைவுக் கடிதம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

1970–71ல், 1,74,234·842 மெட்ரிக் டன் கரும்பைப் பிழிந்து, 15,031·900 மெட்ரிக் டன் சர்க்கரையை இந்த ஆலை உற்பத்தி செய்தது. முந்திய காலங்களில் பெறப்பட்ட சராசரி சர்க்கரை 7·5 சத வீதமாகும். இப்போது பெறப்பட்ட சராசரி சர்க்கரை 8·61 சத வீதமாகும். சாறு பிழிந்த மொத்த நாட்கள் 240 ஆகும்.

(c) அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை லிமிடெட், கிருஷ்ணாபுரம், கோயம்புத்தூர் மாவட்டம்.

நாளொன்றுக்கு 900 டன் சாறு பிழியும் திறனுடன் செயல்பட இந்திய அரசிடமிருந்து உரிமம் ஒன்றைப் பெற்ற இந்த ஆலை 1955ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் பதிவு செய்யப்பட்டது. 1960–61-ல் இந்த ஆலை உற்பத்தியைத் தொடங்கியது. 1966ஆம் ஆண்டில், இந்த ஆலை, தனது சாறு பிழியும் திறனை 900 டன்னிலிருந்து 1,250 டன்னாக உயர்த்து வதற்கு இந்திய அரசிடமிருந்து உரிமம் ஒன்றைப் பெற்றது. உற்பத்தி யாளர்கள் இயந்திரங்களை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதால், ஆலையின் திறனை விரிவுபடுத்த இந்த ஆலையால் இயலவில்லை. தனது விரிவுப் பணியை முடிக்க 31—10—1972ஆம் நாள் வரை காலத்தை நீட்டிக்க வேண்டுமென்று, இந்த ஆலை கோரியுள்ளது. இந்த விரிவுத் திட்டம் 1972ஆம் ஆண்டு இறுதியில் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படு கிறது. இந்த ஆலை இரு கால அளவில் அதற்கு வேண்டிய கரும்பைப் பெறுகின்றது. அக்டோபர் திங்களிலிருந்து ஜனவரித் திங்கள் வரையி லுள்ள ஒரு பருவ காலத்தையும், ஜூன் திங்கள் முதல் செப்டம்பர் திங்கள் வரையிலான மற்றொரு பருவ காலத்தையும், ஆகிய இரு பருவ காலங்களை அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை பெற்றுள்ளது. இந்த ஆலை, 1970–71-ல் முக்கிய பருவத்தில் 37,170 மெட்ரிக் டன் கரும் பையும், 1970–71-ல் சிறப்புப் பருவத்தில் 97,377 மெட்ரிக் டன் கரும்பையும் சாறு பிழிந்தது. 10 சத வீத உற்பத்தி கிடைத்தது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

(d) சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை லிமிடெட், மோகனூர், சேலம் மாவட்டம்.

நாளொன்றுக்கு 1,000 டன் கரும்புச் சாறு பிழியும் திறனோடு செயல்பட 1960ஆம் ஆண்டில், இந்த ஆலை அமைக்கப்பட்டது. இந்த ஆலை 1964–ல் நிறுவப்பட்டு சாறு பிழியும் முழுத் திறனை 1964–65ஆம் ஆண்டில் அடைந்தது. 1965ஆம் ஆண்டில், நாளொன்றுக்குத் தனது திறனை 1,000 டன்னிலிருந்து 1,750 டன்னாக உயர்த்துவதற்கு உரிமம்

ஒன்றை இந்த ஆலை பெற்றது. இயந்திரங்களை அனுப்புவதற்கு ஆணைகளை இந்த ஆலை அனுப்பியது. உற்பத்தியாளர்கள் இயந்திரங்களை அனுப்புவதில் தாமதம் ஏற்பட்டதனால், இந்த ஆலை தனது விரிவுப் பணியை முடிக்க இயலவில்லை. 30—6—1972ஆம் நாள் வரை காலத்தை நீட்டித் தருமாறு இந்த ஆலை கோரியுள்ளது. 1970–71ஆம் ஆண்டுப் பருவத்தில், 1,91,522·37 மெட்ரிக் டன் கரும்பைச் சாறு பிழிந்து, 17,931·34 மெட்ரிக் டன் சர்க்கரையை உற்பத்தி செய்தது. பெறப்பட்ட சர்க்கரையின் சராசரி அளவு 9·50 சத வீதமாகும். முந்திய பருவத்தில் பெறப்பட்ட சர்க்கரை அளவு 8 சத வீதமாகும்.

(e) கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை லிமிடெட், மூங்கில்துறைபட்டு, தென் ஆர்க்காடு மாவட்டம்.

நாளொன்றுக்கு 1,000 டன் கரும்புச் சாறு பிழியும் திறனுள்ள பிரிவு ஒன்றை அமைப்பதற்கு, 1962ஆம் ஆண்டில் இந்திய அரசிடமிருந்து உரிமம் ஒன்றை இந்த ஆலை பெற்றது. இந்த ஆலை, 1967ஆம் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்கியது. நாளொன்றுக்குச் சாறு பிழியும் திறனை 1,000 டன்னிலிருந்து 1,250 டன்னாக உயர்த்துவதற்காக இந்த ஆலை, இந்திய அரசிடமிருந்து உரிமம் ஒன்றைப் பெற்றது. விரிவுப் பணி முடிவுறும் நிலையிலுள்ளது.

1970–71ஆம் பருவத்தில், 1,67,332·964 மெட்ரிக் டன் கரும்பைச் சாறு பிழிந்து, 15,437·300 மெட்ரிக் டன் சர்க்கரையை உற்பத்தி செய்தது. பெறப்பட்ட சர்க்கரையின் சராசரி அளவு 9·25 சத வீதமாகும். முந்திய பருவத்தில் பெறப்பட்ட சர்க்கரையின் சராசரி அளவு 8 சத வீதமாகும். சாறு பிழியப்பட்ட நாட்களின் மொத்த எண்ணிக்கை 180 ஆகும்.

(f) தேசியக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை லிமிடெட், அலங்காநல்லூர், மதுரை மாவட்டம்.

நாளொன்றுக்கு 1,000 டன் கரும்புச் சாறு பிழியும் திறனுடன் செயல்பட இந்த ஆலை, இந்திய அரசிடமிருந்து உரிமம் ஒன்றைப் பெற்றது. 1967 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் வரை, இந்த ஆலையை நிறுவும் பணி நடைபெற்று வந்தது. 9—2—1967 ஆம் நாள் சோதனை அடிப்படையில் இந்த ஆலை சாறு பிழிந்தது. கரும்பு பற்றுக்குறையால், சாறு பிழிவதை 13—2—1967 ஆம் நாள் நிறுத்தியது. 1967–68–ல் தான் தனது முறையான சாறு பிழியும் பணியை இந்த ஆலை தொடங்கியது. இத் திட்டத்தை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட தாமதத்தாலும் கரும்பு பற்றுக்குறையாலும் இந்த ஆலைக்கு ஆரம்பக் காலத்தில் இடையூறுகள் ஏற்பட்டன.

1970–71–ல், 1,16,626·281 மெட்ரிக் டன் கரும்பைச் சாறு பிழிந்து, 11,540·400 மெட்ரிக் டன் சர்க்கரையை உற்பத்தி செய்தது. 131 நாட்கள் சாறு பிழியப்பட்டது. பெறப்பட்ட சர்க்கரை அளவு 9·9 சத வீதமாகும். முந்திய பருவத்தில் பெறப்பட்ட சர்க்கரை அளவு 7·32 சத வீதமாகும். முந்திய பருவத்தோடு ஒப்பிடும்போது இந்தப் பருவத்தில் சாறு பிழியப்பட்ட கரும்பின் அளவு மிகக் குறைவாக இருந்தபோதிலும், 1970–71 பருவத்தில் கரும்பு பிழிவதில் சிறந்த சாதனை ஏற்பட்டது.

(g) தருமபுரி மாவட்டக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை லிமிடெட், பாலக்கோடு, தருமபுரி மாவட்டம்.

நாளொன்றுக்கு 1,250 மெட்ரிக் டன் சாறு பிழியும் திறனுடன் செயல்படுவதற்கு இந்திய அரசிடமிருந்து தொழில் உரிமம் ஒன்றை, இந்த ஆலை 1966ஆம் ஆண்டில் பெற்றது. இந்த ஆலை 20—2—1972 ஆம் நாள், முதன் முதலாகச் சாறு பிழியத் தொடங்கியது.

1970–71, 1969–70ஆம் ஆண்டுகளில், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் கிடைக்கப்பெற்ற சர்க்கரையின் சத வீதம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது :—

தொடர் எண்.	கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் பெயர்.	திரும்பப் பெறப்பட்ட சர்க்கரையின் சத வீதம்.	
		1970–71 பருவக் காலம்.	1969–70 பருவக் காலம்.
1	ஆம்பூர்	9·65	8·58
2	மதுராந்தகம்	8·61	7·50
3	அமராவதி	10·00	8·57
4	சேலம்	9·50	8·00
5	கள்ளக்குறிச்சி	9·25	8·00
6	நாஷனல்	9·90	7·32
	மொத்தம் ..	56·91	47·97
	சராசரி உற்பத்தி ..	9·49	7·99

இம் மாநிலத்தில் கரும்பினின்று சர்க்கரை கிடைக்குமளவு 1970–71 பருவத்தில் (1—10—1970 -லிருந்து 30—9—1971 வரை) குறிப்பிடத்தக்க உயர்வு இருந்துள்ளதைப் பார்க்கலாம்.

கடந்த மூன்று ஆண்டுகளில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் மூலம் கிடைத்த ஆதாயம், ஏற்பட்ட விரயம் ஆகியவற்றைக் காட்டும் விவர அறிக்கை ஒன்றை இணைப்பு VII-ல் காணலாம். பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், சில தொழிற்சாலைகள் விரயத்தில் இயங்கி வருவதற்கான முக்கிய காரணம், போதிய அளவு கரும்பு கிடைக்காமை, கரும்பினின்று குறைந்த அளவு சர்க்கரை கிடைத்தல், கரும்பு ஆலையாடுவதற்கான நீண்ட காலம் ஆகியவையாகும். 1970-71-ல் சராசரி கரும்பு கிடைக்குமளவு 9·49 சத வீதத்துக்கு உயர்ந்துள்ளது. இதே நிலை பேணி வரப்படுமானால் எல்லா கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளும் ஆதாயத்தில் இயங்கிவரும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1972 மார்ச் 14]

கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் பங்கு மூலதன அமைப்பில் மாநிலம் பங்கெடுத்துக்கொள்வதற்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 150 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இத் தொகையில் ரூ. 140 லட்சம் புதிய ஆலைகளில் பங்கெடுத்துக்கொள்வதற்காக பங்கு மூலதனமாக ஒதுக்கப்பட்டது. ரூ. 10 லட்சம் ஏற்கனவே இயங்கி வரும் ஆலைகளின் பங்கு மூலதன அமைப்பை வலுப்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டது. திட்ட நிதி ஒதுக்கத்தில் ரூ. 62·07 லட்சம் கீழே குறிப்பிட்டுள்ள வற்றிற்காக ஏற்கனவே பயன்படுத்தப்பட்டுள்ளன :—

	(ரூபாய் லட்சத்தில்.)
1969-70.	
தேசியக் கூட்டுறவு சர்க்கரை ஆலை	1
1970-71.	
அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட்	5
வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட்	15
திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட்	15
கோயம்புத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட் ..	10
1971-72.	
தருமபுரி மாவட்டக் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட் ..	10
தேசியக் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட்	6·07
	62·07

ஆலைகளின் பங்கு மூலதனத்தில் அரசின் பங்கிற்காக இந்த ஆண்டு ரூ. 40 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. தருமபுரி மாவட்டக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கும், தேசியக் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கும் முறையே ரூ. 10 லட்சம், ரூ. 6·07 லட்சம் பங்கு மூலதனம் உதவித் தொகையாக வழங்க ஏற்கனவே ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், திருப்பத்தூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், கோயம்புத்தூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், ஆகப் புதிதாக அமைக்கப்படவிருக்கிற மூன்று புதிய கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்காக எஞ்சியுள்ள ரூ. 23·93 லட்சம், முதல் இரண்டு ஆலைகளுக்கு ஒவ்வொன்றுக்கும் ரூ. 8 லட்சம் என்ற வீதத்திலும் கோயம்புத்தூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை லிமிடெட் என்ற நிறுவனத்துக்கு ரூ. 7·93 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கரும்பு பயிரிடும் உறுப்பினர்களிடமிருந்து பங்கு மூலதன வசூலிக்கும் பணியை மேற்கொண்டுள்ள மூன்று புதிய கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளும் **31—12—1971** அன்றுள்ளபடி முறையே ரூ. **14·56** லட்சம், ரூ. **10·69** லட்சம், ரூ. **3·03** லட்சம் வசூலித்துள்ளன. இதன் விவரங்கள் இணைப்பு **VI**–ல் காட்டப்பட்டுள்ளன. இம் மாநிலத்திலுள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், தனியார் தொழிற்சாலைகள், ஆகியவற்றை விரிவுபடுத்தும் திட்டத்தை நிறைவேற்றுவது குறித்த விவர அறிக்கை ஒன்று, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு எண் **VIII-A, VIII-B**–ல் கொடுக்கப் பட்டுள்ளது.

மேலே கூறியுள்ளவாறு, தமிழ்நாட்டில் கரும்பில் கரும்புச் சாறு போதுமான அளவு இல்லை. **1969-70** ஆம் ஆண்டின் சர்க்கரை உற்பத்தி பருவத்தில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் கிடைக்கும் சர்க்கரையின் சத வீதம் **7·5**–லிருந்து **8·58**–க்கு உயர்ந்துள்ளது. சராசரி **8.01** சத வீதமாகக் கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் **1970-71** ஆம் ஆண்டின் சர்க்கரை உற்பத்திப் பருவத்தில், கணிசமான அளவு சர்க்கரை அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு சர்க்கரை உற்பத்தி சத வீதம் **8·61** சத வீதத்திலிருந்து **9·9** சத வீதத்துக்கு உயர்ந்துள்ளது. சராசரி **9·49** சத வீதம் ஆகும். எனினும், சர்க்கரை உற்பத்தியைப் பெருக்கு வதற்காக தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

துணைப் பொருட்களைப் பயன்படுத்துதல்.

1970-71–ல் உற்பத்தி செய்யப்பட்ட கருப்பஞ்சாற்று கசண்டின் விவரங்கள் இணைப்பு **IX**–ல் கொடுக்கப்பட்டுள்ளன. **1971-72** ஆம் ஆண்டு பருவத்தில் மதிப்பிட்டுள்ள உற்பத்தி **1·5** லட்சம் மெட்ரிக் டன் ஆகும். கருப்பஞ் சாற்றுக் கசண்டு முக்கியமாக வடிசாலைகளால் பயன்படுத்தப்படுகிறது. தற்போது இவற்றை பயன்படுத்தும் நிறுவனங்கள் இரண்டு மட்டுமே உள்ளன. அவையாவன :—

திருச்சி, வடிசாலைகள்-இராசாயன லிமிடெட், இ.ஐ.டி. பாரி லிமிடெட், இந்தத் துணைப் பொருளைப் பயன்படுத்திக்கொள்ளுவதற்கு இன்னும் பல வடிசாலைகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. அவற்றில், சக்தி சர்க்கரை வடிசாலை, அருணா சர்க்கரை வடிசாலை ஆகிய இரண்டும் **1972**, மே திங்களில் உற்பத்தி செய்யத் தொடங்குமென்று எதிர்பார்க்கப் படுகிறது.

சர்க்கரை உற்பத்தியினின்று கிடைக்கும் கழிவுப் பொருள் (Bagasse).

இம் மாநிலத்தில் சாதாரணமாக சுமார் 9 லட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு இந்தக் கழிவுப் பொருள் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் 8·5 லட்சம் மெட்ரிக் டன், கொதிகலன்களுக்கு எரிபொருளாகத் திரும்பவும் எடுத்துக்கொள்ளப்படுகிறது. விலை மலிவாகவுள்ள மாற்று எரிபொருள் கிடைத்தாலன்றி, மற்றப்படி, இக் கழிவுப் பொருள் காகித உற்பத்திக்கு வழங்குவது இயலாது. சர்க்கரை ஆலைகளில் கிடைக்கும் உபரி

1972 மார்ச் 14]

கழிவுப் பொருட்களின் அடிப்படையில் காகிதத் தொழிற்சாலை ஒன்று அமைப்பது ஆதாயம் தரக்கூடியதா என்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

25—5—1971-லிருந்து சர்க்கரை கட்டுப்பாடு நீக்கப்பட்டது. அரசு நியமனதாரர்கள் மூலம் பொதுமக்களுக்கு அரசு சர்க்கரை பகிர்ந்தளிப்பதற்காக, தமிழ்நாட்டிலுள்ள எல்லாச் சர்க்கரைத் தொழிற்சாலைகளிலிருந்தும் திங்கள் ஒன்றுக்கு வெளியாகும் சர்க்கரையில் 10 சத வீதம் மரபின் முறை அடிப்படையில் 1971, டிசம்பர் திங்களிலிருந்து அரசிடம் ஒப்படைக்கப்பட்டது. 1—1—1972-லிருந்து தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் சர்க்கரையில் 60 சத வீதம் அரசிடம் ஒப்படைக்கப்பட்டது. அரசுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 150 என்ற விலையில் ஒப்படைக்கப் பட்டது. பொதுமக்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்கான விலை வீதம் கிலோ ஒன்றுக்கு ரூ. 2 ஆகும். எஞ்சியுள்ள 40 சத வீதம் வெளிச் சந்தையில் விற்கப்படுகிறது. ஒப்படைக்கப்பட்ட ஒதுக்கீட்டிலிருந்து இந்திய அரசு தமிழ்நாடு, கேரளா, ஆந்திரப் பிரதேசத்திற்கு ஒதுக்கீடு செய்கிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு I-A.

வேலைத் திட்டங்களின் முன்னேற்றம்.

தொடர் எண்ணும், திட்டத்தின் பெயரும்.	மூன்றாவது திட்டச் செலவு.	நான்காவது திட்ட நிதி ஒதுக்கம்.	கணக்குகள்.					1971–72 மதிப்பீடு.	1972–73 நிதி ஒதுக்கம்.
			1966–67	1967–68	1968–69	1969–70	1970–71		
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
				(ரூபாய் லட்சத்தில்.)					
1 பங்கு மூலதன உதவி (நெசவாளர்களைக் கூட்டுறவு அமைப்பில் சேர்த்துக் கொள்வது).	38·23	30·00	4·16	2·16	2·90	2·00	5·80	3·75	6·00
2 தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதனத்தில் மாநில அரசின் பங்கு.	..	25·00	..	4·00	5·00	9·00	8·00	5·00	10·00
3 தொழில் மூலதனக் கடனுக்கு வட்டி வகையில் வழங்கப்படும் உதவித் தொகை.	33·69	65·00	10·50	10·62	9·00	11·00	11·52	13·00	13·00
4 ஆராய்ச்சியும் தொழில் நுட்பமும்.	67·16	68·00	6·03	2·22	2·65	2·65	6·62	10·00	2·00
5 தள்ளுபடி	314·52	325·00	64·00	64·00	84·65	90·00	110·00	110·00	110·00
6 விற்பனையும் விளம்பரமும் ..	30·37	61·75	7·11	7·45	6·50	6·95	5·39	2·00	7·00
7 கூட்டுறவு நூற்பு ஆலைகள் ..	119·81	135·00	70·00	10·20	10·00	5·34	15·34	0·25	25·00
8 நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்.	11·93	9·75	0·04	0·11	..	0·20	1·80	1·30	1·15
9 வீட்டு வசதி	56·13	27·00	1·22	0·80	..	..	..	..	..
10 உதவித் தொகை—சிக்கன உதவி.	5·16	15·00	1·80	1·80	1·89	2·00	2·05	2·75	2·75
11 பட்டு—செயற்கைப்பட்டுத் தொழில்.	8·52	13·25	9·13	4·19	0·54	0·70	0·86	0·63	0·42

12 பயிற்சி	3·97	11·25	1·41	1·57	1·45	1·27	4·45	5·32	5·83
13 நிர்வாகப் பணியாளர்களுக்கான உதவித் தொகை.	3·10	5·00	0·50	0·49	0·39	0·50	0·89	1·00	0·50
14 தலைமைச் சங்கத்திற்கு பங்கு மூலதனம்.	12·00	12·00	..	2·70	0·80	1·00	..	20·00	..
15 நிர்வாகச் செலவுகள் ..	23·50	26·00	5·46	3·96	3·60	3·60	5·58	5·	·05
16 நெசவாளர்களின் கடன் சுமையைத் தீர்ப்பதற்கான கடன் உதவி.	5·11	..	0·96	..	..	..	..	..	..
17 கைத்தறி நிதி உதவிக் கழகம்.	12·60	5·00	..	..	..	7·40	5·00	45·00	..
18 புள்ளி விவரங்களைத் திரட்டுதல்.	4·39	5·00	1·03	1·16	1·23	1·26	1·26	1·00	1·00
19 அரசு நெசவுப் பயிற்சி நிலையத்தின் ஆராய்ச்சிப் பிரிவு.	0·06	..	..	..	..	..	..	..	..
20 நடைமுதல் மூலதனக் கடன்கள் வழங்கிய வகையில் ஏற்பட்ட இழப்பிற்காக உதவித் தொகை.	0·05	5·00	0·10	1·20	..	0·19	0·30	2·00	3·00
21 விசைத் தறிகள்	..	216·60	..	..	..	..	11·33	23·00	41·04
22 உதவித் தொகையுடன் கூடிய சிக்கன நிதிக் கணக்குக்கான பணியாளர்களை அமர்த்திக் கொள்வது குறித்து உதவித் தொகை.	..	..	..	..	..	..	0·12	0·12	0·12
23 மேற்பார்வைப் பணியாளர்கள் குறித்த செலவில் 7/8 பாகம்	..	..	..	..	..	..	0·75	1·00	0·75
மொத்தம் ..	750·30	1,060·00	183·45	118·00	130·60	145·06	197·06	253·12	234·61

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1972 மார்ச் 14

இணைப்பு II.

தமிழ்நாட்டில் கைத்தறித் தொழில் குறித்த புள்ளி விவரங்கள்.

தொடர் எண்ணும். இனங்களும்.	முதலாம் திட்டத்தின் முடிவில் (1956 மார்ச்) உள்ள நிலை.	1966 ஜூன் 30–ம் நாள் முடிவில் உள்ள நிலை.	1970 ஜூன் 30–ம் நாள் முடிவில் உள்ள நிலை.
(1)	(2)	(3)	(4)
கூட்டுறவுத் துறையில்.			
1 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை—			
(a) பருத்தி	842	1,049	763
(b) பட்டு	5	20	14
(c) செயற்கைப் பட்டு ..	1	6	3
2 தறிகளின் எண்ணிக்கை (லட்சத்தில்).	1·57	2·28	1·64
		(ரூபாய் லட்சத்தில்.)	
3 பங்கு மூலதனம்	79·12	1,72·21	2,08·25
4 சேம நிதி	79·77	1,77·18	2,50·87
5 ஏனைய இருப்பு நிதிகள் ..	30·22	82·47	49·10
6 ஆண்டொன்றுக்கு வழங்கப் படும் ஊதியம்.	1,37·88	3,84·17	4,28·03
7 வசூலிக்கப்பட்ட சிக்கன நிதி.	8·29	32·60	60·60
8 நடைமுதல் மூலதனம் ..	2,77·86	7,96·68	7,68·02
9 உதவித் தொகை—			
சிக்கன நிதித் திட்டம்—			
(a) பங்கு கொள்ளும் சங்கங்களின் எண்ணிக்கை.	..	153	100
(b) உறுப்பினர்களின் எண்ணிக்கை.	..	9,400	5,549
(c) நிதியிலுள்ள மொத்தத் தொகை (ரூ. லட்சத்தில்).	..	18·80	42·00

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1972 மார்ச் 14]

இணைப்பு II—தொடர்ச்சி.

தொடர் எண்ணும், இனங்களும்.	முதலாம் திட்டத்தின் முடிவில் (1956 மார்ச்) உள்ள நிலை.	1966 ஜூன் 30–ம் நாள் முடிவில் உள்ள நிலை.	1970 ஜூன் 30–ம் நாள் முடிவில் உள்ள நிலை.
(1)	(2)	(3)	(4)
9 (d) [9 (c)] மொத்த நிதியில் அரசு வழங்கிய பங்கு (ரூபாய் லட்சத்தில்).	..	6·15	13·72
10 உற்பத்தி (ஆரம்ப நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்)—			
(a) அளவு (கெஜம் பத்து லட்சத்தில்).	74·34	102·00	68·78
(b) மதிப்பு (ரூபாய் கோடியில்).	8·00	13·02	12·82
11 விற்பனைகள் (ரூபாய் கோடியில்).	5·91	13·03	13·74
12 பெரிய சாயப் பட்டறைகள் ..	..	4	5
13 சிறிய சாயப் பட்டறைகள் ..	..	143	151
14 நெசவாளர் வீட்டு வசதித் திட்டம்—			
(a) காலனிகளின் எண்ணிக்கை.	2	36	36
(b) வீடுகளின் எண்ணிக்கை.	65	2,683	2,683
(c) நிதி முதலீடு (ரூபாய் லட்சத்தில்)	1·08	1,27·65	1,27·65
15 நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்—சங்கங்களின் எண்ணிக்கை.	..	27	..
16 மாநிலக் கைத்தறிச் சங்கம்—			
(a) உறுப்பினர்கள் ..	999	1,083	1,218
(b) பங்கு மூலதனம் (ரூபாய் லட்சத்தில்).	6·14	36·25	44·18

இணைப்பு II—தொடர்ச்சி.

தொடர் எண்ணும், இனங்களும்.	முதலாம் திட்டத்தின் முடிவில் (1956 மார்ச்) உள்ள நிலை.	1966 ஜூன் 30–ம் நாள் முடிவில் உள்ள நிலை.	1970 ஜூன் 30–ம் நாள் முடிவில் உள்ள நிலை.
(1)	(2)	(3)	(4)
16 (c) துணி கொள்முதல் (ரூபாய் லட்சத்தில்).	1,36·21	3,77·40	4,57·34
(d) துணி விற்பனை (ரூபாய் லட்சத்தில்).	1,40·16	3,83·22	5,04·94
(e) நூல் கொள்முதல் (பேல்களின் எண்ணிக்கை).	10,329	25,225	28,781
(f) நூல் விற்பனை (பேல்களின் எண்ணிக்கை).	10,671	27,504	27,351
(g) சாயப் பொருள்கள் விற்பனை (ரூபாய் லட்சத்தில்).	..	33·68	22·46
(h) கச்சாப் பட்டு விற்பனை (ரூபாய் லட்சத்தில்).	..	1·13	..
(i) சரிகை விற்பனை (ரூபாய் லட்சத்தில்).	..	0·11	..
(j) செயற்கைப் பட்டு விற்பனை (ரூபாய் லட்சத்தில்).	..	5·12	1·41
(k) விற்பனைப் பிரிவு களின் எண்ணிக்கை—			
மாநிலத்தில்	258	236	251
மாநிலத்திற்கு வெளியே.	23	110	77
(l) சேம நிதி (ரூபாய் லட்சத்தில்).	5·15	11·76	12·17
(m) நடைமுதல் மூல தனம் (ரூபாய் லட்சத்தில்).	92.91	1,61·83	5,63·50
(n) சங்கத்தின் மூல தனத்தில் அரசின் பங்கு (ரூபாய் லட்சத்தில்).	..	18	18

1972 மார்ச் 14]

இணைப்பு II—தொடர்ச்சி.

தொடர் எண்ணும், இனங்களும். (1)	முதலாம் திட்டத்தின் முடிவில் (1956 மார்ச்) உள்ள நிலை. (2)	1966 ஜூன் 30-ம் நாள் முடிவில் உள்ள நிலை. (3)	1970 ஜூன் 30-ம் நாள் முடிவில் உள்ள நிலை. (4)
16 (o) சங்கத்தின் ஏற்றுமதி.	..	32,329	
17 கூட்டுறவு நூற்பு ஆலைகள்—			
(a) மொத்த நூற்புக் கதிர்கள்.	..	1,64,360	1,93.336 (31—12—1971).
(b) ஆண்டு உற்பத்தித் திறன் (பேல்கள்).	..	66,000	105·15 (கி. லட்சத்தில்.)
(c) ஆலைகளுக்கான (மொத்த மூலதனச் செலவு (ரூபாய் கோடியில்).	..	9	9
18 தமிழ்நாடு கைத்தறி நிதிக் கழகம் கூட்டுறவு அமைப்பில் சேராத நெசவாளர்களுக்கு வழங்கிய கடன்கள் (ரூபாய் லட்சத்தில்).	..	217	149·35 (1971—ல்.)

இணைப்பு

வேலைத் திட்டங்களின்

வரிசை எண்ணும் திட்டத்தின் பெயரும்.	இனமும் பிரிவும்.	மூன்றாவது திட்ட சாதனை.	நான்காவது திட்டக் குறிக்கோள் அளவு
(1)	(2)	(3)	(4)
1 நெசவாளர்களைக் கூட்டுறவு அமைப்பில் சேர்த்துக் கொள்ளுதல்.	கூட்டுறவு அமைப்பில் சேர்த்துக் கொள்ள வேண்டியுள்ள தறிகள்.	61,446	50,060
2 ஆராய்ச்சியும், தொழில் நுட்பமும்.	நவீன கருவிகள்	2,19,392	1,50,000
	சிறிய சாயப் பட்டறைகள் ..	112	150
	பெரிய சாயப் பட்டறைகள் ..	1	5
	பாவு அமைத்து கஞ்சி போடும் இயந்திரம்.	..	1
	சரிகை இழை தயாரிப்புப் பிரிவு ..	..	1
	மறைப்புப் படுதா அச்சிடும் (ஸ்கிரின் பிரிண்டிங்) இயந்திரம்.	..	1
	எவர்செட் சுருக்கு நீக்கும் இயந்திரம்.	..	1
	முறுக்கேற்றும் இயந்திரம் ..	..	1
3 விற்பனையும் விளம்பரமும்	பிற மாநிலங்களில் விற்பனை நிலையங்கள்.	7	10
	பட்டு கிடங்குகளும் விற்பனை நிலையங்களும்.	3	60
	ஆயத்த உடைத் தயாரிப்பு தொழிற்சாலை.	1	1
	கிடங்குகள்	1	2
	ஏற்றுமதி செய்யத்தக்க துணி வகைகள் உற்பத்திக்கான திட்டம்.	..	1
4 நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்.		..	1,000 லூம்ஸ்.
5 வீட்டு வசதி	வீடுகள்	1,181	..
	கிராமப் பகுதிகளில் வீட்டு மனைகள்.	..	1,000
	நகரப் பகுதிகளிலும் நகரம் போன்ற பகுதிகளிலும் வீடுகள்.	..	500
6 பட்டு—செயற்கைபட்டு ..	பட்டுத்தறிகள்	1,102	2,500
7 பயிற்சி	செயற்கைப் பட்டுத்தறிகள் துணி, மாதிரி தயாரிப்புத் தொழிற்சாலை நெசவாளர்கள்.	821	2,000
	கணக்கு முதலியன பார்க்கும் கூட்டுறவுச் சங்கப்பணியாளர்கள்.	495	1,000
	சாயக்காரர்கள்	49	100
8 நிர்வாகப் பணியாளர்க்கான உதவித் தொகை.	கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை.	351	500
9 நெசவாளர்களின் கடன் சுமையைத் தீர்ப்பதற்கான கடன் உதவி.	நெசவாளர்கள்	3,118	7,500
10 விசைத் தறிகள்	தறிகளின் எண்ணிக்கை ..	..	..

—I '(B)'

முன்னேற்றம்.

ஆண்டுத் திட்டச் சாதனை. 1966–67	1967–68	1968–69	1969–70	1970–71	1971–72 குறிக்கோள் அளவு.	1972–73 திட்டமிடப் பட்டுள்ளது.
(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)
4,912	3,522	3,871	2,607	5,000	5,000	5,000
22,402	6,719	8,354	8,355	5,542	8,570	50,535
2	..	2	5	..	3	5
1	..	..	..	..	..	..
..	..	..	..	..	..	..
..	..	..	..	..	..	..
..	..	..	..	..	..	..
..	..	..	..	..	..	..
2	..	..	..	..	..	1
..	..	..	..	..	..	..
..	..	..	..	..	..	..
..	..	..	..	..	..	..
..	..	..	..	..	..	..
..	..	..	..	1 கூட்டுறவு சங்கம் 100 லூம்கள் 166 லூம்கள் விரிவு படுத்த	3 கூட்டுறவு சங்கங்கள் 300 லூம்கள்	200 லூம்கள்
..	..	..	..	..	..	..
..	..	..	..	..	..	..
..	..	..	..	..	..	..
300	300	288	260	300	300	200
380	400	377	353	2,100	2,160	1,800
155	229	162	103	171	200	200
20	20	17	14	17	20	20
64	50	54	56	102	100	50
723	..	..	..	..	..	..
..	..	..	..	500	2,000	1,000

இணைப்பு III

வரிசை எண்ணும், கூட்டுறவு நூற்பாலையின் பெயரும்.	உரிமத் திறனளவு (நூற்புக் கதிர்கள்).	அமைப்புத் திறனளவு (நூற்புக் கதிர்கள்.)	1971ஆம் ஆண்டில் சராசரியாக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு முறையிலும் இயங்கிய நூற்புக் கதிர்களின் எண்ணிக்கை.	1971ஆம் ஆண்டில் வேலை செய்த மொத்த நாட்கள்.	1971ஆம் ஆண்டில் உற்பத்தி செய்த மொத்த நூல் அளவு (கிலோவில் லட்சத்தில்).	இவ்வாண்டில் விற்பனை செய்த மொத்த நூல்.		குறிப்புகள்.
						அளவு. (கிலோவில்).	மதிப்பு. (ரூ. லட்சத்தில்).	
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
1 தென் இந்திய கூட்டுறவு நூற்பாலைகள்—								
"எ" பிரிவு	17,600	17,600	16,274	344	11·33	11·26	127·52	..
"பி" பிரிவு	12,096	12,096	11,748	344	3·65	3·65	63·98	..
2 திருவல்லிப்புத்தூர் கூட்டுறவு நூற்பாலைகள்.	25,083	24,192	18,654	354	8·84	8·40	1,10·71	..
3 திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பாலைகள்.	25,200	24,400	17,562	347	9·05	8·50	100·03	..
4 சேலம் கூட்டுறவு நூற்பாலைகள்.	14,080	14,080	13,504	355	5·15	5·00	78·35	..
5 மதுரை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலைகள்.	12,420	12,440	11,517	354	13·51	12·19	1,11·60	..
6 கோயம்புத்தூர் மாவட்டக் கூட்டுறவு நூற்பாலைகள்.	12,420	12,420	11,809	346	14·06	13·80	1,45·25	..
7 திருச்சிராப்பள்ளி மாவட்டக் கூட்டுறவு நூற்பாலைகள்.	12,000	12,000	11,395	350	13·49	13·03	1,35·82	..

8 கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு நூற்பாலைகள்.	12,000	12,000	11,472	353	16·16	12·50	1,22·52	..
9 காஞ்சீபுரம் கூட்டுறவு நூற்பாலைகள்.	13,680	13,680	15,504	359	4·84	4·48	62·30	..
10 தென் ஆற்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை.	12,096	12,096	10,997	354	4·32	4·21	13·01	..
11 வட ஆற்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை.	13,824	13,824	13,402	356	5·73	5·61	83·55	..
12 தஞ்சாவூர் மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை.	25,000	13,824	12,066	356	4·22	4·02	14·76	..
மொத்தம் ..	2,07,594	1,94,632	1,75,904		114·35	105·65	12,85·49	..

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு

1951-ம் ஆண்டு தொழிற்சாலைகள் (வளர்ச்சி—முறைப்படுத்துதல்) சட்டத்தின்கீழ், அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரமன்றமான தமிழ் நாடு பஞ்சாலைக் கழகத்தால் எடுத்துக்கொள்ளப்பட்ட ஐந்து பஞ்சாலைகளின் நடைமுறைப் பயன் (1971-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை).

ஆலைகளின் பெயர்.	நிறுவப்பட்ட திறன்.	1971-ல் நாளொன்றுக்குப் பணி புரிந்த கதிர்களின் சராசரி எண்ணிக்கை.	1971-ல் பணி புரிந்த மொத்த நாட்களின் எண்ணிக்கை.	1971-ல் உற்பத்தி செய்யப்பட்ட நூலின் மொத்த அளவு.	1971-ல் விற்கப்பட்ட நூலின் மொத்த அளவு.	1971-ல் விற்கப்பட்ட மதிப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1 ஓம் பராசக்தி ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்.	15,048	13,064	814	5,04,286	4,88,562·00	65,19,128
2 கிருஷ்ணவேணி லிமிடெட், கோயம்புத்தூர்.	14,658	12,833	319	4,52,543	4,31,622·00	59,33,948
3 கம்போடியா ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்.	39,292	38,566	294	20,24,037	19,60,844·00	2,54,19,234
4 திரு. ரங்க விலாஸ் (பஞ்சடித்தல், நூல் நூற்றல், நெசவு நெய்தல்) ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்.	39,856	34,864	324	15,18,120	14,04,180·00	1,75,45,090
5 கோயம்புத்தூர் முருகன் ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்.	28,420	19,139	127*	2,77,992	1,82,760·44	28,75,879
கதிர்கள்	100	..	..	..	..	..
	1,37,272	1,18,466	47,76,978	47,76,978	44,67,968·44	5,82,93,279
தறிகள்	100	..	..	..	..	..

* 26—6—1971-ல்தான் ஆலை மேற்கொள்ளப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு V

கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள்.

தொடர் எண்ணும், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் பெயரும்.	பதிவு செய்த நாள்.	செயல்புரிய தொடங்கிய நாள்.	உரிமம் வழங்கப் பட்ட உற்பத்தித் திறன்.	நிறுவனத் திறன்.
(1)	(2)	(3)	(4)	(5)
			(நாளொன்றுக்கு டன்னில்).	(நாளொன்றுக்கு டன்னில்).
1 ஆம்பூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை	9—11—1955	11—11—1955	2,200	2,200
2 மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை	4—12—1955	4—12—1955	1,000	1,000
3 அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை	9—12—1955	13—12—1955	1,250	1,000
4 சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை	24— 7—1960	29— 9—1960	1,750	1,000
5 கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை	19— 5—1961	10—11—1961	1,250	1,250
6 தேசிய கூட்டுறவுச் சர்க்கரை ஆலை	12— 6—1961	12—12—1961	1,000	1,000
7 தருமபுரி மாவட்டக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை	29— 9—1966 (20—2—1972-ல் சோதனை உற்பத்தி தொடங்கியது).	15—12—1966	1,250	1,250
8 வேலூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை	29— 4—1970	14— 5—1970	1,250	..
9 திருப்பத்தூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை	29— 4—1970	15— 5—1970	1,250	..
10 கோயம்புத்தூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை	28— 1—1971	28— 1—1971	1,250	..
			13,450	8,700

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு VI

பங்கு மூலதனம் வசூலிப்பில், மூன்று கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் அமைப்புக் கட்டத்தில் ஏற்பட்ட முன்னேற்றம்.

ஆலைகளின் பெயர்.	பதிவு செய்த நாள்.	செயல் புரியத் தொடங்கிய நாள்.	கரும்பு பயிரிடுவோரிடமிருந்து வசூலிக்கப் பட்ட பங்கு மூலதனம்.	அரசு உதவித் தொகை.		மொத்தம்.	நிலத்தைக் கையகப் படுத்துவது குறித்த நிலைமை.	குறிப்புகள்.
				1970–71-ல் திட்டமிடப் பட்டுள்ளது.	1971–72-ல் திட்டமிடப் பட்டுள்ளது.			
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
			(ரூபாய் இலட்சத்தில்.)					
வேலூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள்.	29—4—1970	14—5—1970	14·56	15·00	8·00	37·56	அமுந்தி கிராமத்தில் (குடியாத்தம் வட்டம்) 110·97 ஏக்கர் நிலம் தெரிந்தெடுக்கப் பட்டது.	ஆலைகளின் பங்குகளை வாங்குவதற்கென கரும்பு பயிரிடுவோருக்கு வேலூர் கூட்டுறவு மத்திய வங்கி ஒப்பளித்துள்ள ரூ. 2·20 லட்சம் நடுத்தர கால கடன் வழங்கப்படாமலுள்ளது.
திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள்.	29—4—1970	15—5—1970	10·69	15·00	8·00	33·69	கோதண்டபட்டியில் (வாணியம்பாடி வட்டம்) 107·37 ஏக்கர் நிலம் தெரிந்தெடுக்கப் பட்டுள்ளது.	ஆலைகளின் பங்குகள் வாங்குவதற்காக கரும்பு பயிரிடுவோருக்கு வேலூர் கூட்டுறவு மத்திய வங்கி ஒப்பளித்த ரூபாய் 2·93 லட்சம் நடுத்தரக் கால கடன் வழங்கப்படாமலுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கோயம்புத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள்.	28— 1—1971	26— 1—1971	3·03	10·00	7·93	20·96	காரமடை பிலிச்சி என்ற கிராமத்தில் நிலம் ஒன்று தெரிந்தெடுக்கப் பட்டது.	ஆலைகளின் பங்குகள் வாங்குவதற்காக கரும்பு பயிரிடுவோருக்கு கோயம்புத்தூர் கூட்டுறவு மத்திய வங்கி ஒப்பளித்த ரூ. 0·29 லட்சம் நடுத்தரக் கால கடன் வழங்கபடாமலுள்ளது.

128-2-40

இணைப்பு—VII.

கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் பற்றிய 1968–69ம் ஆண்டுக்கான நிதி பற்றிய சில குறிப்புகள்

(தணிக்கை செய்யப்பட்டது)

விவரங்கள்.	ஆம்பூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை.	மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை.	கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை.	சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை.	அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை.	தேசியக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
			(ரூபாய் இலட்சத்தில்.)			
தேய்மானம்-வளர்ச்சித் தள்ளுபடி குறித்த சேமநிதி நீங்கலாக ஆதாயம்.	(+) 6·15	(+) 19·40	(+) 28·83	(+) 39·10	(+) 27·93	(+) 1·61
தேய்மானம்	14·40	9·66	23·46	14·07	4·09	22·07
சேர்ந்த வளர்ச்சித் தள்ளுபடி சேமநிதி	3·92	0·80	0·03	..	..	..
தேய்மான—வளர்ச்சித் தள்ளுபடி சேமநிதி ஆகிய குறித்து தொகையைக் கழித்துக் கொண்டபின்னர், நிகர லாபம் (+), நிகர விரயம் (—).	(—) 12·17	(+) 8·94	(+) 5·34	(+) 25·03	(+) 23·84	(—) 20·46
சேர்ந்த மொத்த வளர்ச்சி தள்ளுபடி சேமநிதி நீங்கலாக சேர்ந்து வரும் ஆதாயம் (+) சேர்ந்து வரும் விரயம் (—).	(+) 111·66	(+) 67·02	(+) 42·64	(+) 108·96	(+) 28·89	(—) 17·76
......வரையில் சேர்ந்த வளர்ச்சித் தள்ளுபடி குறித்த மொத்த சேமநிதி.	34·48	1·11	48·32	21·01	0·81	18·90
......வரையில் சேர்ந்த மொத்த தேய்மான சேமநிதி ..	89·35	80·61	25·34	77·70	73·24	36·86
......வரையில் சேர்ந்த மொத்த வளர்ச்சித் தள்ளுபடிச் சேமநிதிக்குத் தொகை ஒதுக்கிய பிறகு, சேர்ந்துவந்த நிகர லாபம் (+)/சேர்ந்து வந்த நிகர விரயம் (—).	(—) 12·17	(—) 14·70	(—) 31·02	(+) 10·25	(—) 45·16	(—) 73·52

(+) லாபத்தைக் குறிக்கிறது. (—) விரயத்தைக் குறிக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் பற்றிய 1969–70-ம் ஆண்டுக்கான நிதி பற்றிய சில குறிப்புகள்.

(ரூபாய் இலட்சத்தில்.)

தேய்மான, வளர்ச்சித் தள்ளுபடி சேமநிதி நீங்கலாக ஆதாயம் ..	(+) 8·13	(+) 0·65	(—) 0·48	(—) 3·54	(+) 14·92	(—) 8·91
தேய்மானம்	18·82	9·58	19·32	11·72	6·40	17·00
சேர்ந்த வளர்ச்சித் தள்ளுபடி சேமநிதி	..	0·24	0·16	..		
தேய்மான, மேம்பாட்டுத் தள்ளுபடி சேமநிதிக்கு தொகை ஒதுக்கிய பிறகு நிகர ஆதாயம் (+)/நிகர விரயம் (—).	(—) 10·69	(—) 9·17	(—) 19·96	(—) 15·26	(+) 8·52	(—) 25·91
சேர்ந்த மொத்த வளர்ச்சித் தள்ளுபடி சேமநிதி நீங்கலாக சேர்ந்து வந்த ஆதாயம் (+)/சேர்ந்து வந்த விரயம் (—).	(+) 117·83	(+) 67·34	(—) 41·74	(+) 108·79	(+) 41·98	(—) 30·48
—......, வரையில், சேர்ந்த மொத்த வளர்ச்சித் தள்ளுபடி சேமநிதி.	34·48	1·36	25·50	21·01	0·81	18·90
—......வரையில் சேர்ந்த மொத்த தேய்மான சேமநிதி ..	106·21	89·91	67·22	89·00	77·81	50·05
—......வரையில், மொத்த வளர்ச்சித் தள்ளுபடி சேமநிதிக்கு தொகை ஒதுக்கிய பிறகு சேர்ந்து வந்த மொத்த ஆதாயம் (+)/சேர்ந்து வந்த மொத்த விரயம் (—).	(—) 22·86	(—) 23·93	(—) 50·98	(—) 1·22	(—) 36·64	(—) 99·43

(+) ஆதாயத்தைக் குறிக்கிறது. (—) விரயத்தைக் குறிக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு VII—தொடர்ச்சி.

கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் பற்றிய 1970–71-ம் ஆண்டுக்கான நிதி பற்றிச் சில குறிப்புகள் (தற்காலிகமானது).

விவரங்கள். (1)	ஆம்பூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை. (2)	மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை. (3)	கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை. (4)	சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை. (5)	அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை. (6)	தேசிய கூட்டுறவுச் சர்க்கரை ஆலை. (7)
			(ரூபாய் இலட்சத்தில்.)			
தேய்மான, வளர்ச்சித் தள்ளுபடி சேமநிதி நீங்கலாக நிகர ஆதாயம்.	(+) 32·50	(+) 8·11	(+) 4·26	(+) 12·54	(+) 20·39	(+) 10·22
தேய்மான நிதி	29·89	9·75	17·39	10·68	6·18	15·71
சேர்ந்த வளர்ச்சித் தள்ளுபடி சேமநிதி	16·92	0·11	..	..	..	..
தேய்மான, வளர்ச்சித் தள்ளுபடி சேமநிதிக்கு தொகை வழங்கிய பிறகு நிகர ஆதாயம் (+) நிகர விரயம் (—).	(—) 14·31	(—) 1·75	(—) 13·13	(+) 1·86	(+) 14·21	(—) 5·49
சேர்ந்த மொத்த வளர்ச்சித் தள்ளுபடி சேமநிதி நீங்கலாக சேர்ந்து வந்த ஆதாயம், சேர்ந்து வந்த விரயம் (—).	(+) 150·32	(+) 75·33	(+) 46·00	(+) 121·10	(+) 62·10	(—) 20·26
........வரையில், சேர்ந்த மொத்த வளர்ச்சித் தள்ளுபடி சேமநிதி.	51·40	1·46	25·50	21·01	0·81	18·90
........வரையில் சேர்ந்த மொத்த தேய்மான சேமநிதி ..	136·10	99·55	84·61	99·44	83·99	65·76
........வரையில் சேர்ந்த மொத்த வளர்ச்சித் தள்ளுபடி சேமநிதிக்கு தொகை ஒதுக்கிய பிறகு, சேர்ந்து வந்த ஆதாயம் (+), சேர்ந்து வந்த விரயம் (—).	(—) 37·18	(—) 25·68	(—) 64·11	(+) 0·65	(—) 22·70*	(—) 104·92

(+) ஆதாயத்தைக் குறிக்கிறது. (—) விரயத்தைக் குறிக்கிறது. * இதுவரை 1971–72 பருவத்தில் இது நீக்கப்பட்டுள்ளது.

இணைப்பு VIII—A.

தமிழ் நாட்டுக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் உற்பத்தியைக் காட்டும் அறிக்கை.

வரிசை எண்ணும், கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் பெயரும்.	உரிமம் வழங்கப்பட்ட உற்பத்தித் திறனளவு (நாளொன்றுக்கு டன்களில்).	நிறுவன உற்பத்தித் திறன் அளவு (நாளொன்றுக்கு டன்களில்).	குறிப்புகள்.
(1)	(2)	(3)	(4)
1 மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை (வரையறுக்கப்பட்டது).	1,500	800—1,000	உற்பத்திப் பெருக்கத் திட்டத்தை இரண்டு நிலைகளில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. முதல் கட்டத்தில் 800 முதல் 1,250 டன்களும் இரண்டாவது கட்டத்தில் 1,250 டன்னிலிருந்து 1,500 டன்களும் ஆகும். 1970-71-ம் ஆண்டு சர்க்கரை பருவத்தின்போது தேவையான எந்திரங்கள் கிடைக்காத காரணத்தால் முதல் கட்டத்தில் உற்பத்திப் பெருக்கத்தை முடிக்க இயலவில்லை. கரும்பு ஆலையாடும் அளவை 1,200 டன்னுக்கு ஈடுகட்ட ஆலை திட்டமிட்டுள்ளது.
2 ஆம்பூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை ..	2,200	2,200	அரசு இந்த ஆலைக்கு 1965-ம் ஆண்டு ஜூன் திங்கள் உரிமம் வழங்கியுள்ளது. இந்த ஆலை முதற்கட்டத்தில் 800 டன்னிலிருந்து 1,250 டன் வரையிலும் இரண்டாவது கட்டத்தில் 1,250 டன் முதல் 2,200 டன் வரையிலும் உற்பத்தித் திட்டத்தைச் செயல்படுத்தத் தீர்மானித்தது. இதற்கான உரிமம் 1968-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் பெறப்பட்டது. ஆலையின் இரண்டாவது கட்ட உற்பத்திப் பெருக்கப் பணியையும், 1970-71-ஆம் ஆண்டு பருவத்திலிருந்து 2,200 டன் வரை கரும்பு ஆலையாடும் பணியையும் ஆலை முடித்துள்ளது.
3 சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை ..	1,750	1,000	இந்த ஆலையின் உற்பத்தித் திறனை 1,000 டன்னிலிருந்து 1,750 டன்னாகப் பெருக்குவதற்கு இந்திய அரசு 1965-ம் ஆண்டு டிசம்பர் திங்களில் உரிமம் ஒன்றை வழங்கியுள்ளது. இயந்திர சாதனங்கள் வழங்கு ஆணைகள் அளித்து, இயந்திர சாதனங்கள் தயாரிப்பவர்கள் இயந்திரங்கள் வழங்குவதில் செய்த காலதாமதத்தின் விளைவாக, இந்த ஆலை அதனுடைய உற்பத்திப் பெருக்கப் பணியை முடிக்க இயலவில்லை. ஆகவே, அதிக கால அளவு கோரி இந்த ஆலை விண்ணப்பித்துக்கொள்ள 31—12—1971 வரை அதற்குக் கால அளவு கூடுதலாக அளிக்கப்பட்டது. தருவிப்பு ஆணையளிக்கப்பட்ட இயந்திரங்கள் வந்து சேராத காரணத்தால், இந்த ஆலை மேலும் 30—6—1972 வரை கால அளவை நீட்டிக்க வேண்டுமென்று விண்ணப்பித்துள்ளது.

இணைப்பு—VIII-A—தொடர்ச்சி

4 அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை	1,259	1,000	1966-ல் உற்பத்தித் திறனை 1,000 டன்களிலிருந்து 1,250 டன்களாகப் பெருக்குவதற்கு இந்திய அரசு உரிமம் வழங்கியது. இப்பொருள் கடிதப் போக்குவரத்தில் இருந்தது. உற்பத்திப் பெருக்கத்தை நிறைவுறச் செய்ய 31—10—1972 வரை காலவரம்பை நீட்டிக்குமாறு இந்திய அரசுக்கு மீண்டும் கடிதம் எழுதப்பட்டுள்ளது.
5 கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை	1,250	1,250	1966-67-ல் உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்காக இந்திய அரசு உரிமம் ஒன்றை வழங்கியது. 1968-ம் ஆண்டு ஜனவரித் திங்களில் கால வரம்பை நீட்டித்ததுடன் உற்பத்திப் பெருக்கத்திற்கான பலன் தரக்கூடிய நடவடிக்கைகள் 1968-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் முடிவடைய வேண்டும் எனவும் குறிப்பிட்டது. உற்பத்தியைப் பெருக்குவதற்கான நடவடிக்கைகள் ஏறக்குறைய முடிவடைந்துள்ளன.
6 தேசீயக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை ..	1,000	1,000	உற்பத்திப் பெருக்கம் தற்போது கருதப்படவில்லை.
7 தருமபுரி மாவட்டக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை.	1,250	1,250	இந்த ஆலையில் நிர்மாணப் பணிகள் முடிவடைந்து 20—2—1972-ல் சோதனை முறையில் கரும்பு ஆலையாடும் பணி தொடங்கியது.
8 வேலூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை ..	1,250	1,250	இந்த ஆலை உருவாகும் நிலையில் உள்ளது. அது பங்கு மூலதனத்தைச் சேகரிப்பதில் ஈடுபட்டுள்ளது.
9 திருப்பத்தூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை.	1,250	1,250	இந்த ஆலை உருவாகும் நிலையில் உள்ளது. அது பங்கு மூலதனத்தைச் சேகரிப்பதில் ஈடுபட்டுள்ளது.
10 கோயம்புத்தூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை.	1,250	1,250	இந்த ஆலை உருவாகும் நிலையில் உள்ளது. அது பங்கு மூலதனத்தைச் சேகரிப்பதில் ஈடுபட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு VIII—B.

தொடர் எண்ணும், சர்க்கரை ஆலையின் பெயரும்.	உரிமம் வழங்கப்பட்ட உற்பத்தித் திறன் (நாள் ஒன்றுக்கு டன்கள்).	நிறுவிய உற்பத்தித் திறன் (நாள் ஒன்றுக்கு டன்கள்).	குறிப்புகள்.
(1)	(2)	(3)	(4)
1 சக்தி சுகர்ஸ் லிமிடெட்	2,000	2,000	4,000 டன்கள் வரை உற்பத்தியைப் பெருக்குவது பரிசீலனையிலிருக்கிறது.
2 சௌத் இண்டியா ஸ்டீல் அண்ட் சுகர்ஸ் லிமிடெட்.	2,500	1,500	விரிவாக்கப்பணி 1972–73–க்குள் முடிவடையும்.
3 திரு ஆரூரான் சுகர்ஸ் லிமிடெட் ..	2,000	1,200	உற்பத்தியைப் பெருக்குவது ஆய்வில் உள்ளது.
4 மதுரை சுகர்ஸ் லிமிடெட்	400	240	
5 கோத்தாரி சுகர்ஸ் லிமிடெட் ..	1,500	1,500	
6 டெக்கான் சுகர்ஸ் லிமிடெட்	1,500	1,500	
7 ஈ.ஐ.டி. பாரி லிமிடெட்	2,750	2,200	உற்பத்திப் பெருக்கப் பணி 1971–72–ல் முடிவடையும்.
8 காவேரி சுகர்ஸ் லிமிடெட்	1,500	1,000	உற்பத்திப் பெருக்கப் பணிகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.
9 அருணா சுகர்ஸ் லிமிடெட்	2,000	2,000	4,000 டன்கள் வரை மேலும் உற்பத்தியைப் பெருக்குவது பரிசீலனையில் உள்ளது.
10 பாலார் சுகர்ஸ் லிமிடெட்	400	400	செயல்படவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

TAMIL NADU LEGISLATURE LIBRARY MADRAS 14 AUG 197

இணைப்பு IX.

கருப்பஞ்சாற்றுக் கசண்டு

தொடர் எண்ணும், சர்க்கரை ஆலையின் பெயரும்.	1970-71-ல் உற்பத்தி செய்யப்பட்ட கருப்பஞ்சாற்றுக் கசண்டின் அளவு.	1971-72-ல் திருத்தப்பட்ட மதிப்பீட்டு உற்பத்தி.
(1)	(2)	(3)
		ரூ.
1 மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட்	7,430·637	5,600
2 ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட்	10,670·290	11,000
3 கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை லிமிடெட் ..	5,750·580	6,500
4 சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட்	9,231·700	9,000
5 அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட்	5,941·504	7,000
6 தேசீயக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை லிமிடெட்	5,127·136	5,400
7 தருமபுரி மாவட்டக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை	..	4,000
8 ஈ.ஐ.டி. பாரி லிமிடெட்	22,807·167	19,000
9 காவேரி சுகர்ஸ் அண்ட் கெமிகல் லிமிடெட்	9,636·505	8,000
10 டெக்கான் சுகர்ஸ் அண்ட் கம்பெனி லிமிடெட்	14,341·297	10,850
11 சௌத் இண்டியா ஸ்டீல் அண்ட் சுகர்ஸ் லிமிடெட்	7,252·608	8,000
12 அருணா சுகர்ஸ் லிமிடெட்	11,747·150	15,000
13 சக்தி சுகர்ஸ் லிமிடெட்	19,744·840	25,000
14 மதுரை சுகர்ஸ் லிமிடெட்	2,650·612	2,500
15 கோத்தாரி சுகர்ஸ் அண்ட் கெமிகல் லிமிடெட்	8,683·305	8,000
16 திரு ஆரூரான் சுகர்ஸ் லிமிடெட்	9,167·613	8,000
மொத்தம் ..	1,50,182·944	1,52,850